அகஸ்தியர்

வைத்தியகாவியம் - 1500



தாமரை நூலகம், சென்னை - 26.

அகஸ்தியர்
வைத்திய காவியம்-1500

பதிப்பாசிரியர்
எஸ்.பி.இராமச்சந்திரன்

தொலைபேசி எண் : 23620249

தாமரை நூலகம்

7, N.G.O. காலனி,
வடபழனி, சென்னை — 26
website: www.intamm.com/nool/thamarai
e-mail: thamarai@intamm.com

தாமரை வெளியீடு எண்: 75
முதல் பதிப்பு : ஜுலை 1992
இரண்டாம் பதிப்பு : ஆகஸ்டு 2001
மூன்றாம் பதிப்பு : அக்டோபர் 2014
நானகாம்பதிப்பு ஃபிப்ரவரி 2021

நூல் பற்றி:

உரிமை பெற்றத

நூலின் பெயர் : அகஸ்தியர் வைத்திய காவியம் 1500
பதிப்பாசிரியர் : ஆர்.சி மோகன்
வெளியிட்டோர் : தாமரை நூலகம்
சென்னை-26
பதிப்பு ஆண்டு : ஃபிப்ரவரி 2021
உரிமை : பதிப்பகத்துக்கு
நூல் வடிவம் : 21 க்கு 14 செ.மீ
அச்சுத்தாள் : 16கி மேப் லித்தோ
மொத்த பக்கங்கள் : 320
விலை : ரூ- 160/
அச்சிட்டோர் : கிரியேட்டிவ் ஆப்செட்
சென்னை-34

பதிப்புரை

சிலருக்கு பெயரளவில் தெரிந்தும், பலருக்கு பெயர் கூடத் தெரியாதபடியும் மருத்துவ உலகிலிருந்தே மறைந்துபோய்க் கொண்டிருந்த நூல் இந்த அகத்தியர் வைத்திய காவியம் 1500 என்று சொல்லலாம்.

இதற்கு ஒரு காரணம் அகத்தியரையும் போகரையும் கற்று வைத்திய முறைகளில் தேர்ச்சி பெற்றவர்க 'ர பிற்காலத்தில் தாங்கள் பிரசித்தி பெற்றவுடன் தங்களுடைய பெயர்களாலேயே நூல்களை எழுதியும் அவற்றைப் பிரபலப்படுத்துவதற்காக தங்களுடைய முறைதான் சிறந்தது என்றும் அகத்தியர் காலத்தில் கிடைத்த மூலிகைகள், மருந்துச் சரக்குகள் எல்லாமே தற்போது கிடைப்பது இல்லை என்றும் பலவிதமாகக் கூறி முன்னோடிகளான அகத்தியர், போகர் முதலானவர்களை மறைத்து விட்டதும் ஆகும் என்று கூறலாம்.

இவர்கள் தங்கள் காலத்தில் பிரபலமாக விளங்கினார்களே தவிர அதற்குமேல் அவர்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை. அப்படி அவர்களால் ஏதாவது செய்ய முடிந்திருந்தால் சித்த வைத்தியம் தொடர்ந்து மக்களிடையே பரவலான ஆதரவைப் பெற்று வந்திருக்கும்.

நடுவில் முறையான மருத்துவப் பயிற்சி இல்லாதவர்களும் வைத்தியம் செய்யத் தொடங்கியதும் சித்த மருத்துவம் சீர் குலைந்ததற்கு ஓர் காரணமாக இருக்கலாம். மருந்து தயாரிக்கும் முறைகளை அனுபவசாலிகள் தங்களுக்குப் பின் வந்தவர்களுக்கு முறையாகச் சொல்லிக் கொடுக்காமலும், பயிற்சி அளிக்காமலும் விட்டுவிட்டதும், சித்தர்கள் தங்கள் நூல்களில் அதிகமாக பரிபாஷைச் சொற்களை உபயோகப்படுத்தியதும் இதற்குக் காரணங்கள் எனலாம்.

மகா வல்லமை வாய்ந்த சித்த மருத்துவம் தான் பிறந்த தமிழ் நாட்டிலேயே ஆதரிப்பார் இல்லாமல் நலிந்து விட்டது. சித்த மருத்துவ நூல்களை தப்பும் தவறுமாக அச்சிட்டு வெளியிட்டுக் கொண்டிருந்தவர்களும் ஓய்ந்து விட்டார்கள். எங்கேயோ, இங்கொருவர் அங்கொருவர் தங்கள் பரம்பரைப் பெருமைகளைப் பேசிக் கொண்டு தங்களிடம் இருந்த சில அபூர்வமான மருந்துகளால் ஒருவாறு காலத்தை ஓட்டிக் கொண்டிருந்தார்கள் என்ற நிலையில் தி.மு.க. அரசில் கல்வி அமைச்சராக இருந்த

பேராசிரியர் அன்பழகன் அவர்கள் பெரு முயற்சியால் சித்த மருத்துவ நூல்கள் சில பதிப்பிக்கப்பட்டன. மக்களிடையிலும் ஒரு விழிப்புணர்ச்சி ஏற்பட்டது.

அதே சமயம் சித்த மருத்துவர்கள் சிலர் செய்த அபூர்வமான சில சிகிச்சைகள் வெளி உலகின் கவனத்தினை ஈர்க்கத் துவங்கியது. இருதயத்தில் துளை விழுந்த ஒரு மூன்று வயதுக் குழந்தை பிரபலமான மேல்நாட்டு மருத்துவர்களாலும் குணப்படுத்த இயலாது என்று கைவிடப்பட்ட நிலையில் ஒரு சித்த மருத்துவரால் குணப்படுத்தப்பட்டது. பிறகு பரிசோதனைகள் செய்து பார்த்தபோது அதன் இருதயத்தில் இருந்த துளை எங்கே போயிற்று என்றே தெரியவில்லை என்பது எனக்குத் தெரிந்த நிகழ்ச்சி.

சித்த மருத்துவத் துறையில் நிகழ்த்தப்படும் அரிய சாதனைகள் உடனடியாக அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட வேண்டும். பிரிட்டனில் இருக்கும் இராயல் விஞ்ஞானக் கழகம் மாதிரியான ஒரு அமைப்பு சித்த மருத்துவத் துறையில் ஆராய்ச்சிகளை ஊக்குவிக்க வேண்டும். சித்த மருத்துவர்களை கௌரவிக்க வேண்டும். இவை எல்லாம் நமது நாட்டில் உடனடியான தேவைகள். இந்தத் தேவைகளை தமிழக அரசுதான் நிறைவேற்ற முன்வர வேண்டும்.

இப்படி ஓர் அருமையான நூல் இன்று உங்கள் கையில் இருக்கின்றது என்றால் அதற்குக் காரணம். அம்பத்தூரில் இரயில்வே ஆபிஸராக இருந்த லேட் சிதம்பர ஐயரின் திருமகளும், ஆவடி காமராஜர் நகரில் வசிப்பவருமான டாக்டர் பார்வதி N. சர்மா அவர்கள் கொடுத்து உதவிய பழைய மூலப் பிரதியே ஆகும். இந்த நூலைப் பார்த்த உடனேயே உண்டான மகிழ்ச்சியில் அதனை உடனே அச்சேற்றி புத்தகமாக தமிழக மக்களுக்குக் கிடைக்கச் செய்ய வேண்டும் என்ற ஆர்வத் துடிப்பினை உண்டாக்கி விட்டது. ஆயினும் பழைய நூலில் இருந்த ஜெராக்ஸ் எடுத்து தொடர் நடையில் இருந்த செய்யுள்களை வரி வரியாகப் பிரித்து, அவ்வாறு பிரிக்கும் போது காணாமல் போன, விட்டுப் போன எழுத்துக்களைச் சேர்த்தும், அச்சுப் பிழைகளைத் திருத்தியும் ஒரு நூலாகச் சமைக்கும் போது ஏற்பட்ட சிரமங்களை எல்லாம் சொல்லவே முடியாது.

அகத்தியர் வைத்தியத்தில் பெரிய மருந்துகளையே மட்டும் சொல்ல வில்லை. எம்மிடம் கிடைத்துள்ள கன்ம சூத்திரம் 150-என்ற நூலில் கடுக்காய் லேகியம், நெல்லிக்காய் லேகியம், தானிக்காய் லேகியம், சுக்கு லேகியம், மிளகு லேகியம், சீரக

லேகியம், கடுகு லேகியம் என்றெல்லாம் மிகச் சாதாரணமான பொருள்களைக் கொண்டு தயாரிக்கும் அற்புதமான மருந்துகளைப் பற்றிக் கூறி இருக்கிறார். (அது தனி நூலாக வெளி வருகிறது)

அகத்தியரின் வைத்திய முறைகளை மட்டும் ஆராய்வதற்கு பல சிறந்த நிபுணர்களைக் கொண்ட குழு அமைக்க வேண்டும்.

இவை எல்லாம் இங்கு என்னைப் போன்ற சில தனிப்பட்ட மனிதர்களின் ஆசைகளாக இருந்தாலும் கூட தமிழகம் தலை நிமிர்ந்து நிற்க வேண்டுமானால் உலகத்திற்கே பல அறிவியல் அற்புதங்களை அளிக்கும் வல்லமை தமிழகத்திற்கு இருக்கிறது என்பது நிரூபிக்கப்பட வேண்டுமானால் அரசாங்கத்திலிருந்து பல மட்டங்களில் பலவிதமான நிறுவனங்கள் தோற்றுவிக்கப்பட வேண்டும்.

அற்புதமான சித்த மருத்துவ முறைகளை தங்களிடம் மறைத்து வைத்துக் கொண்டிருப்பவர்கள் நாட்டின் நலன் கருதி, நமது நாடு உலகெல்லாம் புகழத் தக்க பெருமையையும் சிறப்பையும் அடைய வேண்டும் என்ற எண்ணத்தை முதலாவதாகக் கொண்டு ஏதாவது ஒரு பொது அமைப்பில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு தங்களுடைய மருத்துவ முறைகள் தங்களோடு அழிந்து விடாமல் நாடு தழுவிய சிறப்பினை அடைய வேண்டும் என்பதற்காக பொதுச் சொத்தாக்க முன்வர வேண்டும். சித்தர்களின் புகழ் உலகெல்லாம் பரவ வேண்டும் என்று நினைக்கிறோம்.

நம்முடைய கனவுகள் நிச்சயமாகப் பலிக்கும். பலித்தே ஆக வேண்டும் அது காலத்தின் கட்டளை.

எஸ்.பி.ராமச்சந்திரன்
பதிப்பாசிரியர்

பொருளடக்கம்

அகத்திய மாமுனிவர்

உ
கடவுள் துணை

அகத்திய மாமுனிவர்

திருவாய் மலர்ந்தருளிய

வைத்திய காவியம்-1500

காப்பு

பாகுடன் கணேசன் பாதம் பணிந்து முக்குணங்களாக
வாகடத் தொகுதியெல்லாம் வகுத்த சூத்திரமதாக்கி
ஆகம விதியின் நூலாய் ஆய்ந்திடும் நோய்கட்கு எல்லாம்
போக நல்மருந்து சொல்வோம் புலத்தியா பொருந்தக் கேளே. 1

பொருந்தும் ஓர் உந்திக் கீழே புகன்றுஎழும் சுழியைப்பற்றி
எழுந்தவோர் நாடிதானும் எழுபத் தீராயிரந்தான்
தெரிந்ததோர் இவற்றில் பத்து திசைநாடி இவற்றில் மூன்றால்
பரிந்ததோர் வாதபித்தம் படர் ஐயம் அறிந்து பாரே 2

அறிந்துமே நாடிதன்னை அடைவுடன் கருதவேண்டி
எரிந்ததோ ரிடைதான்வாதம் இயல்புடன் நரம்பில் நிற்கும்
தெரிந்துகொள் சுழிதானையஞ் சேர்விடம் எங்கே என்னில்
பிரிந்துகொள் மலமாம் வாதம் பேர்பெறு நீராம்பித்தம் 3

பித்தத்தின் கீழேஐயம் புரண்டுமே விந்தில் சேரும்
குற்றமே சேரு மையங் குதிதனைக் கூர்ந்து காணும்
பித்தத்தைப் பிரித்து நன்றாய்ப் பேசுவோம் பேதம்போக்கி
பத்தத்தைக் குறியாய் எண்ணிப் பரிவுடன் அறிந்துபாரே 4

பாரப்பா இடைதான் கேளு பரிவுடன் இடதுகாலில்
காரப்பா பக்க மாறிக் கபாலத்தில் சாடிப் பின்னும்
சாரப்பா வலக்கரத்தில் சார்ந்திடும் பின்கலைதான்
பேரப்பா இடக்கரத்தில் பொருந்திப் போம் சுழினைக் கேளே. 5

கேளப்பா புருவமத்தி சுழினையாம் கீழேமூன்றில்
நாளப்பா நவதாதாகி நடந்திடும் நாடிபாரு
தேளப்பா நாடி பத்தும் தெசவாய்வு உட னே சேரும்
சூளப்பா தசதானங்கள் சொல்லுறேன் சொல்லுறேனே 6

(வேறு) தாதுமூலப்

சொல்லுறேன் காமியந்தான் குதிக்கால்சந்து
சொற்பெரிய உந்தியைத்தான் பற்றிநிற்கும்
சொல்லுறேன் புருவமத்தி காதுமூக்கு
துகைபத்தில் தான்நின்று துடர்ந்து மாறும்
சொல்லுறேன் உயிர்த்தெழுந்த நாடிமாறில்
சோதிக்கில் தசதானம் தோன்றாதையா
சொல்லுறேன் சாகான்காண் பிணிதான் தீரும்
துஞ்சுகிற விபரத்தைச் சூட்டுறேனே 7

பட்சக்குறி

துஞ்சியெழும் வாத பித்தம் உயிர்தானப்பா
சூட்சமாய்த் துன்றியது சுழன்று தேய்ந்து
மிஞ்சியே மத்திமத்தில் குருதித்தம்மில்
மேவியே மார்புள்ளே வாங்குமாகில்
அஞ்சியே பட்சமொன்றில் அடங்குஞ்சீவன்
அரகரா அவத்தையிது அறிந்து இந்த
பஞ்சியே சூத்திரமாம் வாதபித்தம்
பக்குவத்தை நன்றாகப் பார்க்கநன்றே 8

திரிநாடி நிதானக்குறி (வேறு)

அறிவது வாதந்தானும் மாத்திரை அரைதான் ஓடில்
செறிவது பித்தமப்பா சேர்சமன் ஒன்றாய்ப்பின்னும்
பிறிவது வையந்தானும் பிரண்டது கால்தான் ஓடில்
அறிவது சமமதாகும் மயக்கமும் இல்லைகாணே. 9

வாத மீறினால்

காணப்பா வாதமீறில் கால்கைகள் பெருத்துநோவும்
பூணப்பா குடல் புரட்டும் மலசலம் பொருமிக் கட்டும்
ஊணப்பா குளிருங் காய்ச்சல் உடம்பெல்லாம் குத்து வாய்வு
வீணப்பா குதமிறுக்கும் வியர்வையும் வேர்க்கும் தானே. 10

பித்த மீறினால்

தானென்ற பித்த மீறில் சடமெல்லாம் காந்தல் காணும்
ஊனென்ற வாந்தி வாய்நீர் ஊறியே ஒழுகுஞ்சலம்
வானென்ற மாட்டிலேகு மண்டையில் குத்துண்டாகும்
தேனென்ற விக்கல் மூர்ச்சை செவியடைப்பு உண்டாம் பாரே. 11

சேத்தும மீறினால்

பாரப்பா வையமீறில் பாசத்தின் அனல்தான் மீறும்
நேரப்பா விளக்குந்தேகம் நெஞ்சுடன் விலாவும்நோகும்
தாரப்பா சுரமும் காயும் சாதமும் வெறுக்கும் நாளில்
ஓரப்பா இரத்தம் கக்கும் உடல்வற்றும் சுரம்பேராமே. 12

நாடி மூன்றுமறிய

ஆமப்பா வாதந்தானும் அனநடை கோழி ஆமை
தாமப்பா பித்தந்தானும் தவளையைப் போலேபாயும்
சாமப்பா வையந்தானும் சர்ப்பம் போலோடும் ஓடும்
நாமப்பா கண்டு சொன்னோம் நரம்பொன்றில் நாடிமூன்றே. 13

வாத பித்த சேத்தும நிறம்

மூன்றுபேர் நிறமும் சொல்வேன் முதல்வாதம் கறுப்பு செம்மை
மான்றிய பசுமை பச்சை மஞ்சளா யிருக்கும் பித்தம்
தோன்றிய வெண்மையப்பா சோர்விலா வையமாகும்
ஊன்றிய நிறங்கள் சொன்னேன் உத்தமர் அறிவர் தானே. 14

பஞ்சபூதக் கூறறிய

தானென்ற பஞ்சபூதம் சரீரத்தில் கேளுகேளு
பேனென்ற தசைகளெல்லாம் பிருதிவி உற்றுப்பாரு
மானென்ற பித்தம் தண்ணீர் மைந்தனே அப்புவாகும்
தேனென்ற வெறுப்புதானும் தேயுவின் அறிவுகூறே 15

வாத பித்த சேத்துமம் இருப்பிடம்

அறிந்திடும் எல்லாம் ஒன்றாய் ஆவிக்கும் அதிர்வானந்தான்
செறிந்திடும் பித்தம் தானும் சேர்ந்திடு நாவிலே தான்
முறிந்திடு வன்னிதானும் மூடிடும் கண்ணிலேதான்
பறிந்திடும் வாய்வு தானும் பரிசிக்கும் எங்கும்பாரே 16

பாரப்பா காதிலே தான் பரிசிக்கும் ஒன்றாய்மைந்தா
பேரப்பா வாதவாய்வு அப்பனே பித்தம்வன்னி
ஆரப்பா சேத்மவாயு அப்பனே வாதபித்தம்
நேரப்பா வையமப்பு நிறைந்தவை இதுமூன்றாமே 17

இதற்கு ஆதாரம்

ஆமப்பா மூன்று பேர்க்கும் ஆதாரம் வாயுவாகும்
ஏமப்பா வாயு சேரில் எண்பிலம் உடைத்தாய நிற்கும்
வேமப்பா வன்னிகூடில் வெந்துநீறாகும் ஆகுஞ்
சேமப்பா சிக்கிநின்ற நோயெல்லாம் நெளிக்குந்தானே 18

ஒன்றோடொன்று தொந்திப்பு

தானென்ற வன்னி வாய்வு தாண்டி மேற்கொண்டு தானால்
காளென்ற சுரத்தா லோடிக்கனதாப மிகுதியாகும்
தானென்ற வாயுவோடு அப்புவும் சாருமாகில்
தானென்ற சீதருட்சை சார்ந்திடும் தப்பில்லாதே 19

தோஷம் அசாத்தியமறிய

தப்பிலாத் தோஷந்தானும் சார்ந்திடும் வாறுகேளாய்
கப்பிலா வன்ளி வாதங் கருத்தோஷம் சாத்தியமாகும்
செப்பிலாப் பித்தத்தோடு சேர நல் வெண்மையாகி
செப்பிலா வையத்தூடு செலப்பெறும் வாய்வுமாமே 20

ஓசை

வாப்வுதான் அடங்கிற்றானால் மைந்தனே தோஷம் போகும்
வாய்வு தானப்பிற்றானால் மண்ணொடு நீருமொன்றும்
வாய்வுதான் சலந்தான் ரண்டால் மைந்தனே வன்னிமாளும்
வாய்வுதான் அண்டஞ்சேரில் மண்டல ஓசையாமே 21

விழி நாசி நாவு நிதானக்குறி

ஆமப்பா ஓசை ஏழும் மலரொளி விழியைந்தாகும்
தாமப்பா நாசிமூன்றும் நாவினில் இரண்டதாகும்
ஓமப்பா இந்த உண்மை உணர்ந்தவர் யோகியாகும்
வேமப்பா நாசி தன்னில் விழுங்குறி விளம்பக் கேளே 22

இடைகலை சரநிதானம்

கேளப்பா தினந்தான் மூன்று கெடியிடைகலை தான்பாயில்
மாளப்பா பருவமூன்றில் மறலியூர் புகுவான் பண்பாய்
நீளப்பா தினமிரண்டு பின்கலைதானே பாயில்
மூளப்பா தேகந்தானும் மூவாண்டி மரணமாமே 23

பின்கலை உபயம்

மரணமாம் திங்கள் ஒன்றில் மைந்தனே கண்டுகொள்வாய்
மரணமாம் மூக்குவிட்டு வாய்வழி வாய்வுபாயில்
மரணமாம் தினந்தான் மூன்றில் வளம்பெற வழிந்துபாரு
மரணமாம் மலங்கள் மூன்றும் வற்றிசை பட்சமொன்றே 24

வாய்நீர் மும்மலக்குறி

ஒன்றாக வாயில்நீர் ஊற்றிரவி மேலுமிய ..
நன்றாகத் தானும்இரவி மறைந்து இருந்தாக்கால்

பொன்றாக மூன்று திங்கள் பொறுத்தவுடன் பொன்றிடுவார்
ஒன்றாக நிழலலையில் வீழ்வர் காண்பட்ச மிரண்டே 25

நிழற்குறி தோஷக்குறி நிதானம்

காணப்பா தோஷங்கள் பிறக்கும்போது
காணுநீ குறி சொல்வோம் கருதிப்பாரு
தோணப்பா உண்ணாக்கு இதழ் வறண்டு
சுகமான காதுஇவை கருக்குமாகில்
வீணப்பா தினமூன்றில் மரணமாகு
மேலான வன்னிக்குத் தோஷமென்பார்
ஊணப்பா வற்றிநின்ற பித்தத் தோர்க்கு
உடம்பு பருத்து ஊதினால் உரையைக் கேளே 26

தூல நிதானம் இளைத்த தேகம் சீவகளை

கேளப்பா மதிஆறில்சாவு உண்டாகும்
கேடிலை பத்தால் இளைத்த தேகமானால்
நாளப்பா திங்களொன்றில் சாவார்
நலமான சீவக நூல்நாட்டக் கேளு
வேளப்பா நாளேறி நடந்துதானால்
மேன்மையுடன் சீவகளை விடுபடாது
தாளப்பா கீழ் நோக்கி நடந்துதானால்
தவறுவருஞ் சீவகளை நாடிதானே 27

அசாத்தியநாடி மரணக்குறி

தானென்ற நாடிகீழே தாண்டியே வாங்குமாகில்
தானென்ற உயிர்தான் மாளும் சாதகம் இன்னங்கேளு
தானென்ற மூன்றுநாடி தன்வசங் குறைந்து பின்னும்
தானென்ற திடங்கொண்டாலும் சாவது திண்ணமாமே 28

ஆமப்பா வாதபித்தத் தாண்மையை யறிந்துகொண்டு
நாமப்பா மருந்து செய்ய நலமுறும் தோஷந்தீரும்
வேமப்பா பித்தம் போனால் வெம்பிடும் உயிர்தான் காணும்
பூமப்பா வாதநிற்கில் பொன்றிடான் மருந்துநல்கே 29

ல்கிய மருந்துநாடி நரம்பெலாங் குதித்துப் பொங்கில்
இல்கிய மேலின் மேலே யெறிந்து தானோடுமாகில்
ல்கிய மரணமில்லை மறைந்தது கீழே சாடில்
உல்கிய உயிருக்கீனம் உற்று நீயறிந்து கொள்ளே 30

அறிந்திடா உந்திக்கீழே அமளியாய்க் குதிக்குமாகில்
எறிந்திடா உயிரை உண்ணும் மெய்யுமாந் தோஷமப்பா

செறிந்திடாது உந்திதானும் சேரிடம் வாய்வுக்கப்பா
மறிந்திடாத் தசநாடிக்கு மகத்தான பீடம்பாரே 31

வாய் நீர்க்குறி

பாரப்பா நோயுள் ளோர்கள் பக்குவம் பார்த்து நீயும்
வாரப்பா உமிழ்ந்திட்டாக்கால் மைந்தனே தூரப்போகில்
கூரப்பா தாக்கிற்றானாற் சாவில்லை சாகான் கேளு
சாரப்பா கிட்டவீழில் சாவது சடுதிதானே 32

மந்தம்

பாரப்பா மந்தமுண்டாம் பரிசனம் உரைக்கக்கேளு
காரப்பா மிகுந்து மேலே கபளிக்கும் அன்னத்தாலே
வாரப்பா இறைச்சியாலும் மாப்பண்டத்தாலுந் தானும்
சேரப்பா மேதிப்பாலாற் சேர்ந்திடும் மேகந்தானே 33

தானென்ற அன்னத்தாலே தலைப்பட உடம்பிதப்பா
தானென்ற அன்னமப்பா தனிப்பழி கொள்ளும் மீறில்
தானென்ற அன்னமெல்லாம் சகலவித் தாகும்பாரு
தானென்ற விதத்துக்கெல்லாம் தத்துவம் உரைக்கக்கேளே 34

பகை

கேளப்பா மிவட்டை பித்தம் கெடியான வாதம் வாய்வு
வாளப்பா வையஞ்சீதம் வளர்ந்திடும் அன்னத்தாலே
பாளப்பா அன்னந்தானும் பகையுடன் பழியும் கொள்ளும்
வேளப்பா அன்னத்தாலே மேகங்கள் பிறப்பைக்கேளே 35

மேகவுற்பத்தி

மேகங்கள் பிறந்து நின்ற விதங்களை விளம்பக்கேளு
ஆகங்கள் இகழ்ந்தபோது அப்பனே தினமும் சென்று
போகங்கள் செய்யும் போதும் புகழ்மந்தம் கூட்டும்போதும்
பாகங்கள் பசியனுடும் பருகுஞ் சையோகந்தானே 36

சையோகஞ் செய்யும்போதும் தனிநின்ற சுழியேயோடு
மையவோ அமுர்தந்தன்னை அடக்கியே அனல்தான் கொள்ளும்
மெய்யடா விந்துகாணில் விழ்விழப் புண்ணுந்தானு
மையடா மேகத்தாலே வளர்ந்தது கிரந்திபாரே 37

கிரந்தி

கிரந்தியால் விரணம் உண்டாங் கெடியதின் கீழே மேக
முரந்திய இரண்டினாலே உலைவாய்வுச் சூலைகாணும்
பரந்திய மூன்றினாலே பலபல மேகங் காணும்
துரந்திய லிங்கத்தாலே தொல்லைநோய் எய்துங்காணே 38

தொல்லையாம் சுரத்தினாலும் சூழ்கின்ற வாயுவாலும்
மல்லையே செய்யுமாகில் அன்னத்தைக் காட்டிடாதே
வல்லையே வன்னிராசன் வழியது செவ்வையானால்
தொல்லை ஏதில்லையப்பா சூழ்நோயும் வாய்வுத்தானே 39

வாய்வு ருத்திர ரோகம்

வாயுவே மிகுந்துதானால் மைந்தனே மேல்மூச்சேறும்
வாயுவே மிகுந்துதானால் மலர்ந்திடும் விரணமெல்லாம்
வாயுவே மிகுந்துதானால் மலசலமிரண்டுங் கட்டும்
வாயுவினாலேயப்பா வளருத்திர ரோகமாமே 40

ஆமப்பா ருத்திர ரோகத்தாண்மையை உரைக்கக்கேளு
வேமப்பா வெம்பிப்பாய்ந்து மிக நெஞ்சில் குத்துண்டாகிப்
போமப்பா பித்தந்தன்னை தப்பியே போகொட்டாமல்
பாமப்பா பேசும்போது பதையாமல் சாவார்தாமே 41

சுகசன்னி (வேறு)

பதையாமல் சாகின்ற சுகசன்னி மார்க்கம்
பாய்கின்ற விதங்கேளு பண்பாய் நீயும்
நிதையாத எண்ணெயுடன் தீர்த்தமாடி
நிரம்பவே தயிர்கூட்டி பொசித்த பின்னும்
குதையாத மந்தமுடன் புணர்ச்சி கூடிக்
கூடியே வாய்வுதான் காலத்தேறி
அசையாத நோயுக்கும் போக்குஞ் செய்யும்
அப்பனே சத்தியொடு சன்னியாமே 42

வேறு

சன்னிதான் தோன்றும்போது சடமெலாம் வேர்வைகாணும்
சன்னிதான் சுகத்தால்மைந்தா கண்கள்தான் சிவப்பேயாகும்
வன்னிதான் காற்றாலையால் மகத்தான தோஷமாகும்
மன்னிதான் சுகத்திலன்னம் அழிந்திடும் காயந்தானே 43

மூல ரோகம்

காயத்தில் மூலரோகம் கண்டிடும் விதங்கள் கேளாய்
ராயொத்த பசியில்லாமல் பட்சிக்கில் அடக்கில் வாய்வு
மாயத்தால் இருத்திக்கொண்டு மலமதை அடக்கும்போது
ஒயத்த குண்டலிக்குள் உட்புகும் வாய்வு காணே 44

அபானன் மூலவகை விபரம்

காணப்பா வாயுவாலும் கனத்த அபானன் தன்னைப்
பூணப்பா மலத்தைக் கட்டிப் புகையெழக் கருக்கினாலும்

தோணப்பா முனையைப் போலச் சுருக்கி முன்மலந்தான் வீழில்
ஆணப்பா அபானன் தன்னை அழுந்தவே இறுக்கும் பாரே 45

மூல வியாதி செய்யுங் குணம்

இறுக்கிய மூலம் ஒன்று எழுமண்டல மூலம் ஒன்று
வறுக்கியே புண்ணாய்ச்சீழ் தான் வடிகின்ற மூலம் ஒன்று
உறுக்கிய வாயுவாலே உதிரந்தான் கட்டி நின்று
தறுக்கியே கிறிச்சினங்கள் தானந்த மூலமாமே 46

மூலந்தான் எழுந்தபோது மூலத்தில் கனல்தான் மாளும்
மூலமே யெழுந்தபோது முளைவந்து நாசமாகும்
மூலமே யெழுந்தபோது முழங்கவே இரைச்சலாகும்
மூலமே யெழுந்தபோது முசிவில்லா கழிச்சலாமே 47

பித்தமேகம் வேறு

கழிச்சலென்ற கிராணியிலே விதமாறப்பா
கண்ட பித்தம் அனல்வாதம் வாய்வுதானும்
அழிச்ச லென்றவையமுடன் மூன்றுகூடி
அப்பனே மனம் பேதிக்கும் பிலந்தான் போக்கும். 48

தெழிச்சி லென்றவாய்வு தான்மேகபேதி
திறமான மூலத்தின் தோஷ பேதி
பழிச்சலென்ற சங்காரண பேதி ஒன்றாம்
பாரப்பா வாயுவென்றும் ஆறுமாச்சே 49

வாத மேகம்

ஆச்சப்பா மேகம்கேளு அப்பனே பயித்தியரோகம்
நீச்சப்பா மேகந்தன்னை நிசஞ்சொன்னேன் காணுகாணு
காச்சப்பா மஞ்சள்போலக் கவீணழந்தன்னைக் கண்டால்
வீச்சப்பா பித்தமேகம் விளிம்பினார் விரும்பிக்காணே 50

சேத்தும மேகம்

விரும்பிய சீலைதாதும் வெளுத்திடில் வாதமேகம்
மரும்பிய உஷ்ணந்தானும் மயிலதன்நிறமேயானால்
திரும்பிய வையத்தாலே சேர்ந்திடு மேகமாகும்
சுரும்பிய மூன்றாலப்பா தோன்றிடும் குணங்கள்கேளே. 51

பித்தவாய்வு மேகத்திற் சேர்ந்தால்

கேளப்பா பித்தவாய்வு கெடியுடன் சேருமாகில்
தாளப்பா ஞானமான தமரிலே யேரித்துவேகும்

வீளப்பா நீரைக்கட்டும் விழும்பொசிந் துளியுமாறும்
பாளப்பா சிலநேரங்கள் பளிச்சென இறங்குந்தானே. 52

வெள்ளை மிகுதியானால் இலட்சணம்

தானென்ற வாய்வுஒதுங்கினால் தண்டிலே நோவுதானாம்
வானென்ற மந்தத்தாலே வாயுவில் புகுந்தேசாடும்
கானென்ற எரிச்சல் காணும் கல்லடைப்பாகும் பின்னை
மானென்ற வாதுவாய்வு மருவிடில் வெள்ளைகாணே. 53

வாய்வு ஒதுங்கினால்

வெள்ளைதான் மெத்த வீழில் மேனியும் பொருமிக்காணும்
கள்ளமே சரீரமெல்லாம் கறுப்புடன் நரம்புமோடும்
தள்ளவே தாதுநட்டந் தேகமு மிகுதியுண்டாம்
உள்ளது சொன்னோநாமு முற்றுணர்ந்து அறிந்துகொள்ளே. 54

சேத்துமவாய்வு நீரிழிவு

அறிந்திட வாய்வுவோடே வையம்வந்து எய்துமாகில்
பிரிந்துநீர் பொசித்திடாது பிரவெள்ளை விழுந்திடாது
எரிந்திடு பத்திபோல இளைப்புடன் இருமல் உண்டாம்
மரிந்திடும் தகைச்சல் காணும் வலியெழு மேகமாமே. 55

இருபத்தொரு மேகத்திற்கு விபரம்

வலித்திடும் வாதந்தானும் வளரைய பித்தந்தானும்
ஒலித்திடு மகத்தா மேகம் ஒழிகிடுஞ் சலந்தான் மாறிச்
சலத்திடும் தாகமீறும் சாப்பிட்டால் உடனே காந்தும்
தலித்திடும் மூன்றினோடு மழுங்கிவாய் இனிக்கும்பாரே. 56

இனித்திடும் வாதமேகத் தியல்பு நல்லெண்ணை போலும்
பனித்திடுங் கள்ளுப்போலும் பதிநீர் போல்நீர் தானோடும்
கனத்திடு மேனியெல்லாம் கனத்திடும் வெளுத்துப் போகும்
தனித்திடு மேகந் தானும் சாற்றிய வையந்தானே. 57

மகோதரம் பெரும்பாடு

ஐயமும் பித்தந்தானும் அனைந்திடும் காலந்தன்னில்
கொய்யும் இரத்தந்தானும் கொப்பளித் தோடுந்தண்டில்
மையுறு கண்ணினார்க்கு மகோதரம் பெரும்பாடாகும்
தொய்யுறு மேகமுண்டாம் தொடர்ச்சியை முறையாய்க்கேளே. 58

முறைகேளும் ஒன்பது அப்பா முயற்சியால் வந்தமேகம்
துறைகேளு கற்பத்தாலும் சூழ்கின்று மேகமொன்று

நறை மூத்த கூந்தல் நல்லாய் நாயகன் மேகத்தாலும்
மறை போற்றும் கெர்ப்பத்தாலும் வளர்ந்திடும் மேகந்தானே. 59

வளர்ந்திடும் கெர்பத்தாலும் மருவிய மேகமைந்து
முளிர்ந்திடும் பதனியாகும் உள்ளத்தின் மேகந்தானும்
வளர்ந்திடும் வெள்ளை காட்டும் ஆகாத சுரமேகந்தான்
தளர்ந்திடும் மதியு மீறித் தளர் எலும்பு உருக்கியாமே. 60

தனல்போலக் காயும்மேகம் தண்ணீர்தான் பகையாம்மேக
முணக்கவே மழுக்குமேறி முறுகுமா மேகந்தானும்
பிணக்கவே பசிதான் கெட்டபேரெழு மேகந்தானும்
வணக்காத சையோகத்தை வர்ச்சிக்கு மேகமாமே. 61

ஆமப்பா உஷ்ணத்துண்டாம் ஆகியே மேகம் பின்னும்
ஓமப்பா பாஷாணத்தால் உற்றிடுஞ் சிலமேகங்கள்
நாமப்பா சொன்னோம் இந்த நாடியாம் சூத்திரந்தன்னில்
ஓமப்பா வதுதானேமுமைந்து மூன்றொன்பதாமே. 62

ஆகிய மேகந்தானும் அப்பனே இருபத்தொன்று
மேகிய குன்மந்தானும் எழுந்த தோர்விதங்கள் சொல்வோம்
பாகிய பித்தத்தோடும் வாதமும் பரிந்துசேரில்
வாகிய வன்ன நீரம் வாந்தியும் ஆகும்பாரே. 63

பாரப்பா வாயுவாதம் பரிவுடன் அபானன் தங்கில்
ஓரப்பா நாபிதன்னில் உருண்டுதான்மிகவே நோகும்
கோரப்பா நெஞ்சில் குத்தும் குடலையு முறுக்கிக்கொண்டு
வாரப்பா வலிக்கும் மெத்த வாதமாய் வழங்கும்வாய்வே. 64

வழங்கிய அப்புவோடு வாதமும் ஒன்றேயானால்
தழங்கிய அன்னசாரம் சங்கிக்க வொட்டாதப்பா
புழங்கிய நீர்தானப்பா பிடியன்ன மேறிகுத்து
முழங்கிய முறுக்கு மேறி உயிரையும் வதைக்குங்காணே. 65

சூலை குன்மம்

வதையுறு வாயுவோடு மேகமு மருவுமாகில்
பதையுறு மலசலங்கள் பரிவுடன் கட்டிக்கொள்ளும்
மதையுறு மிடதுபக்கம் மைந்தனே வலதுபக்கம்
பிதையுற முறுக்கிக் குத்தும் பெருஞ்சூலை குன்மமாமே. 66

குன்ம மோரிது தானாலிற் கூறிலெண் விதமாம்பாரு
வன்மமா நோய்கட் கெல்லா மகாநோய் தான் பொல்லாதாகும்
கன்மமாம் சடத்துக்கெல்லாம் காணுங்கான் இந்தரோகம்
நன்மையா மாந்தருக்கு நடந்தாலு நாடிடாதே. 67

பித்த சூலை

நாட்டிய பித்தசூலை நடத்திய உரையைக்கேளு
ஊட்டமாய் அன்னம் உண்ணார் ருசிதப்பி வாந்தியாகும்
ஆட்டிய கைகால் காது வகையுந் தன் மேலும் நோகும்
நீட்டிய அங்கங்கேதான் நின்று எரிந்து ஊருங்காணே. 68

காணப்பா வாத சூலை காட்டிடுங் குறியைக்கேளு
கோணப்பா கைகால் சந்து குழைச்செல்லாங் கடுத்துநோகும்
காணப்பா சுரமுங்கண்டு கனத்துடன் கரப்புமாகும்
காணப்பா தேகமெத்தக் கனத்திடு மிளையாதென்றே. 69

மார்பிற் சூலை

இளைத்திடு மார்பிற் சூலைக்கு எய்திய குணங்கள் சொல்வோம்
குளைத்திடுங் கைகால் நெஞ்சு குத்துடன் வறண்டு இருமும்
தளைத்திடு மார்பிற் சென்று தாக்கி மேலேறி வெட்டும்
அளைத்திடும் சீய்தான் கக்கும் ஆகாதவைய மாமே. 70

ஆகாத வாத பித்தம் அளைந்திடும் சூலைகேளு
வாகான கால்கைகள் வளமுடன் கறடுகட்டும்
தாகான மேனியெல்லாம் தடிப்புடன் வெடிப்புண்ணாகும்
போகாத சாத்தியமாகிப் புணர்ச்சியாய்க் கொல்லுந்தானே; 71

தானென்ற சூலையோடு சமவாத சூலைகேளு
ஊனென்ற சடந்தான் நோகும் ருசிதப்புங் கபாலப் புண்ணாம்
கானென்ற காலிலாணி எலும்பெலாம் கறுத்துக்கெட்டு
கோனென்ற கழிச்சல் தாகங் குளிர்சுரஞ் சூலையாமே 72

ஆறாகுஞ் சூலையப்பா அதிலொன்றில் மூன்று சூலை
வேறாகும் பதினெட்டாகும் வெவ்வேறு சூலையில்லை
கூறாகு முன்னலப்பா குணங்கள்தான் கோடியாகும்
பாறாகு மிவர்கள் பேரைப் பிரித்துரை செய்வோம்பாரே. 73

கெர்ப்ப வாய்வு கிருமி வடியும்

பாரப்பா கெர்ப்பகாலம் பரிவுடன் வாய்வு தேய்வு
சேரப்பா உந்தியோடு சென்றிடும் கருத்தான் மாளும்
வாரப்பா புழுத்தான் உண்ணில் மலடெனச் சொல்வாரப்பா
ஆரப்பா விதனைப் போக்கில் ஆண்பிள்ளை செனிக்குந்தானே. 74

செனிக்கின்ற குழவிதானுந் திடனுறப் பிறக்கும்போது
கனிக்கின்ற சீனிபோலக் கலந்துள்ளே கட்டினிற்கும்
பனிக்கின்ற விடுப்புகை கால்பரவியே நொந்து குத்தும்
தனிக்கின்ற பசிதான் போகுந்தடித்திடும் உதரம்பாரே. 75

பாரிய வாழ்வு தானும் பரிவுடன் குழிதான் சேரில்
தாரியே கழிச்சலாகிச் சதாநித்தம் உறுமிச்சாடும்
வாரிய தேகமெல்லாம் வலியெழும் இடைதான் நோகும்
ஆரியுள் எனக்குச் சொன்னார் ஆய்ந்தவர் சித்தர்தானே. 76

கெர்ப்ப சூலை

தானென்ற கெர்ப்பத்தோடு தரித்திடு கோரைக் கட்டில்
வானென்ற விந்துப் போலே வாயுவும் உருளும் பாரு
ஊனென்ற பசிதான் போகும் முளைத்துதான் இரைச்சல் உண்டாம்
மானென்ற கழிச்சல் மீளும் வரும் சூத வாயுவாமே. 77

சூதான கெர்ப்ப காலஞ் சுத்திதான் மிகுந்து கொள்ளில்
வாதான மேகமீறி வழங்கியே வெறுப்பிக்குங் காண்
போதான உடம்பதெல்லாம் புண்போல் மிகவுநோவும்
தீதான மயக்கமாகி நிர்ச்சீவன் ஆகுவானே. 78

கெர்ப்ப சூலை

ஆகின்ற வாறு சூலை கெர்ப்பத்தில் வாழ்ந்த நோய்காண்
பாகின்ற சுவைதான் சூழில் பதித்திடும் கருவுமப்பா
வாகின்ற திதுதான் போக்கில் மலடிதான் பெறுவர் பிள்ளை
ஆகின்ற நோய்கட் கெல்லாம் அறைந்திடும் முறைப்பாடாமே. 79

கெர்ப்ப சன்னி

முறையான கெர்ப்பந் தன்னில் முயன்றதோர் சன்னி கேளு
உறையான சேனீர்க்குள்ளே உறைந்திடில் வாய்வுமீறில்
இரையான திரேகம் வேர்க்கும் மேலெலாம் மயக்கமாகும்
துறையான மலந்தான் கட்டும் சோபிக்கும் துணிந்துபாரே. 80

பாரப்பா மாதர்க்கெல்லாம் பச்சுடம் பாகுங்காலம்
தாரப்பா வனுபவிப்பன் தனிகாடி தன்னை உண்பான்
ஆரப்பா மாங்காய் தின்பாள் அப்பனே மாவுந் தின்பாள்
கூரப்பா ஜன்னி யெய்துங் கொண்டிடுஞ் ஜன்னி கேளே. 81

கொண்டிடும் மலடிக்கப்பா கூடிடும் எட்டுச் சன்னி
வண்டிதான் எதிர்காலத்தில் மரந்தின்பள் மோர் தான் உண்பள்
தண்டியே அணைவாள் பின்னுந் தனிச் சூதக்காயுந் தின்பள்
ஒண்டிய பெண்களுக்கு ஒரெட்டுச் சன்னியாமே. 82

ஓரெட்டுச் சன்னியப்பா உற்றது பெண்களுக்கு
லாரெட்டுப் புருஷனுக்கு மகத்தான சுகஜன்னிதான்
றேரெட்டுப் பார்க்கும்போது நெகிழ்ந்துவெவ் வேறாகும்
பாரெட்டு மெச்சனவேதான் பகர்ந்திடுங் கண்ணோய்கேளே. 83

கண்ணுள் வியாதி வரும் குணம்

கேளப்பா பொடிச் சுட் டாலுங் கிளரவே வெயில் காய்ந்தாலும்
வாளப்பா மின்னார் தம்மை மருவியே நித்தநித்தம்
காளப்பா முழுக்கில்லாதால் கண்ணினாற் கனல்தான் பார்த்தால்
தாளப்பா பாஷாணத்தால் தானெழுங் கண்ணோய்பாரே. 84

கண்ணினோய் தானுண்டாகுங் காரணமின்னம் சொல்வோம்
பண்ணான மேகத்தாலும் பகர்வெட்டை வாயுவாலும்
தண்ணான அப்புவாலும் தனிமலக் கட்டினாலும்
புண்ணான விரணத்தாலும் போடுநற் காரத்தாலும். 85

காரமாஞ் சாரத்தாலுங் கடுரவி துன்பத்தாலும்
நீரமாஞ் சரக்கு சுட்ட நிலையுறு புகையினாலும்
வீரமாம் பாஷாணத்தால் விளம்பிடும் ரோகத்தாலும்
சீரமாம் இவற்றால் கண்ணில் செனித்திடும் வியாதிதானே. 86

வியாதியாம் மூவாறுக்கும் விளங்கிய குட்டங் கேளு
சுவாதியாம் மேகத்தாலும் சூழ்கின்ற கிரந்தியாலும்
பயாதியாம் ஆறதாகும் பல வண்டினாலே யெட்டாம்
மயாதியாம் புழுவால் நாலுமைய மாம்பத்தெட்டாமே. 87

ஆமப்பா நோய்கட் கெல்லாம் அரசுதான் மூன்றுநாடி
காமப்பால் வளர்ந்தெந்நாளுங் கருவியைக் கலர்ந்துசேர்ந்து
வேமப்பா வெந்துநீறி விடவெல்லாம் அமிழ்ந்து பின்னும்
சாமப்பா பிறக்குமந்த தாதுவின் விளக்கங்காணே. 88

காணப்பா நாடிசொன்னேன் கலந்திடுங் கருவுஞ் சொன்னேன்
தோணப்பா நோயுஞ் சொன்னேன் சூட்சமும் வகுத்துச் சொன்னேன்
பூணப்பா அவத்தை செய்யும் பூட்டையும் விரித்துச் சொன்னேன்
வீணப்பா சொல்லவில்லை விதிமுறை வணங்கிப்பாரே. 89

கேட்டு நாடிபத்தில் கெடியெழு நாடிதள்ளி
நாட்டிடு நாடிமூன்றில் நயம்பிடு மிடையேலாத
மாட்டிபின் கலைதான் பித்த மையமுஞ் சுழிதானாகும்
வாட்டிடு மலமே வாதமருவிடும் பித்தநீரே. 90

பித்தத்து வைய விந்து பிரித்தனர் பூதங்கேளு
உற்றுடன் வாதம் வாய்வு ஓங்கிய பித்தந்தேய்வு
சுற்றற்றவையே தண்ணீர் சோர்விலா வாணன் வாதம்
பற்றற்ற பிராணன் பித்தம் பகையுறு சமானனையே. 91

ஐயமே யிவர்கண் மூன்றால் அழிக்கவும் ஆக்கலாகும்
நையுமே யொன்றில் மூன்று நடுந்திடு நல்லாநாகில்
மையுறு கழுவுக்கெல்லாம் வாசல் காப்பவரே யாகிச்
செய்யுறுந் தொழிலுக் கெல்லாஞ் சித்துடன் சந்துமாமே. 92

ஆமப்பா யெழுபத்திரோயிர நாடிபத்தாஞ் சொன்னேன்
சோமப்பா உந்திகீழே சுழிதனைப் பற்றி நிற்கும்
காமப்பால் விளைத்தெந்தாளுங் கருவியை வளர்த்துப் பின்னும்
சாமப்பா பிறக்கு மந்தத் தாதுவின் வழக்கந்தானே. 93

சுத்தி வகை ரசச்சுத்தி

வளர்ந்திடுந் தாதுதன்னை வகையதில் துகையைச் சொன்னேன்
வளர்ந்திடும் வியாதிக்கெல்லாம் மணியொடு மருந்தைச்செப்ப
வளர்ந்திடும் சரக்கை யெல்லாம் வகைவகை சுத்திகேளு
வளர்ந்திடு நோய்கட்கெல்லாம் மருந்தினால் ஒழியுங்காணே. 94

வேறு

காணப்பா சூதமொரு பலந்தான் மூன்று
கல்வத்தில் மத்தித்தே மஞ்சள் தூளால்
தோணப்பா மத்தித்து வொட்டையின் தூளு
சுகமான வெற்றிலையின் சாறும் விட்டு
ஊணப்பா தனித்தனியே கடிகை மூன்று
உறத்தேய்த்துத்திரும்ப அதை ஊறப்போட்டு
பூணப்பா தாழைநீர் மாலக்காய் நீரும்
புகழான செம்பரத்தம் பூவின் சாறே. 95

சாறாகும் வெற்றிலைச் சார் பழுபாகற் கிழங்குந்
தனித்தனியே ஐங்கோலச் சாறுங் கூட்டி,
வாறாமற் சித்தில்லைப்பால் கரிப்பான்சாறும்
வாயுவுறுஞ் சாரணையின் சாற்றஞ்சாறும்
கூறாகுங் கொன்றையிட பட்டைச் சாறுங்
கொத்தோடே மும்மூன்றுங் கடிகை மாத்தி,
வாறாக இப்படியே மத்தித் தாக்கால்
வாலை ரசமாகுமடா மைந்தா பாரே. 96

இரசம் இருபத்தைந்திற்கும் சுத்தி வகை

பாரப்பா இருபத்து ஐந்து சுத்தி
பாடுகிறேன் திரிகடுகு திரிபலையுமிக்க
சீரப்பா மரமஞ்சள் கற்கண்டு சர்க்கரையுஞ்
சீரான சம்பழமும் முந்திரிகையுடனே,
பேரப்பா கும்மட்டி பொன்முசுட்டை நாரி
புளியாரைக் கொடிவேலி மணித்தக்காளி,
நீரப்பா கற்றாழை வாய்விளங்கம் கெந்த
நேர்ந்த கருஞ் சீரகமுங் கோஷ்டந்தானே. 97

கோஷ்டமொடு நாயுருவி இருபத்தைந்தும்
கூரான நீர்கொண்டு கியாழங் கொண்டு,
மாட்டமுடன் மத்தித்து கடி கை மூன்று
அப்பனே வெவ்வேறே செய்தாயானால்
ஊட்டலாங் குளிகைக்கும் விஷத்துக் கெல்லாம்
உத்தமனே வேதையா நோயும் தீரும்
பாட்டெல்லாம் சூதத்தால் அல்லோ சித்தர்
பாடினார் நூல்தோறும் பாடினாரே. 98

கெந்த சுத்தி

பாடினதோர் கெந்திக்குச் சுத்தியென்ன
பசுவின் நெய்யி லிட்டுருக்கிப் பாலிற் சாய்க்க
ஆடினதோர் சுத்தியவிழ் தத்துக்காகும்
அப்படியே ஏழுதரம் உருக்கிச் சாய்ப்பாய்,
நாடினதோர் மனோசிலையின் சுத்தி சொல்வோம்
நறுக்குவாய் பணம் போலே நன்றாய் நீதான்,
மூடினதோர் கிளிகட்டி ஆட்டு நீரில்
முதிரவே தோலாந்திரம் எரிந்துவாங்கே. 99

மனோசிலை சுத்தி தாளக சுத்தி

எரித்திடுவாய் உழுந்து வெந்த தண்ணீர்விட்டு
எடுத்திடுவாய் மனோசிலைதான் சுத்தியாச்சு
மறித்திடிவோ இல்லையப்பா துறைக்கெல்லாமாகும்
மகத்தான தாளகத்தின் சுத்தி கேளு
பறித்திடுவாய் பணம் போலே தாளகத்தை வெட்டி
அருட்சிலை தனைமடித்துக் கிளிதான் கட்டி,
அரித்திடுவாய் தோலாந்தரங் கோமயத்தினாலும்
அப்பனே காடியதில் அவித்திடாயே. 100

சாதிலிங்க சுத்தி

அவித்திடுவாய் சுன்னநீர் பூசினிக்காய் நீரில்
ஆவின்பால் அரசம்பட்டைக் கியாழத்தாலும்
அவித்திடுவாய் மூன்று தினம் ஊறப்போட்டு
அரகரா எடுத்திடவே சுத்தியாகும்
அவித்திட்டுச் சாதிலிங்கஞ் சுத்திகேளு
அப்பனே குப்பிவைப்பை நொறுக்கித்தட்டி
அவித்திடுவாய் பழச்சாற்றில் முலைப்பால் தன்னில்
அடைவாக இருசாமம் ஊறப்போடே. 101

நாககத்தி

ஊறவே லிங்கமது சுத்தியாகும்
ஊட்டுவாய் துறைக்கெல்லாம் உறைத்துப்போகும்
சீருகின்ற நாகசுத்தி தன்னைக்கேளு
செப்புரிய வெண்மையாம் பாலுமாகு
மீறவே மோராகுங் காடி நீராம்,
வேணமட்டும் கோமய மாம்பழ சாறாகும்
வீறான எருக்கம்பால் இவைகள் தன்னில்
வெந்துருக்கிச் சாய்த்திடவே சுத்தியாமே. 102

வெள்வங்கசுத்தி வெள்ளைபாஷாணசுத்தி

சுத்தியென்ற நாகமப்பா மணிகட் காகுஞ்
சூதத்துக் காகுமது நீற்றுக்காகுஞ்
சித்தியென்ற செந்தூரம் மருந்துக்காகுஞ்
சித்தரெல்லாஞ் சுத்தி தனைத் திறந்தாரில்லை,
பத்தியுட னிருவங்க மிப்படி தான் உருக்கிப்
பாங்காகச் சாய்த்திடவே சுத்தியாகும்
வெற்றியுறும் வெள்ளைக்குச் சுத்திச் சொல்வேன்
வெட்டடா பணம் போலே பொடியாய்த் தானே. 103

எலி பாஷாணம்

தானென்ற பொடியதனை கிளிபோற் கட்டி
தனிச்சுன்ன நீர்க்குள்ளே தோலாந்தரமாட்டு
தேனென்ற ஆவின்பால் சாணிப் பாலாந்
திறவாமல் மூடியதை எரித்துவாங்கு,
வானென்ற பாஷாண நல்ல சுத்தியாகு
மாட்டுவாய் துறைக்கெல்லாஞ் சுத்தியாகும்
தீனென்ற எலி விஷத்தின் சுத்திகேளு
சிறுகீரை ஆவின்பால் சாணிச்சாறே. 104

நாபி சுத்தி

சாறுகளில் தோலாந்திர மாகவாட்டித்
தயவாக எடுத்திடவே சுத்தியாகும்
வேறாகு நாபியுட சுத்தி சொல்வேன்
வெண்பருத்திச் சாற்றிலிரு சாமம் போட்டு
மீறாமற் கோமயத்தில் இப்படியே செய்து
மீண்டுமதை யேரண்ட இலையில் சுத்தி,
மாறாமல் இலைவாட்டி எடுத்துக் கொண்டு
மைந்தனே துறைக்கெல்லாம் மாட்டுமாட்டே. 105

மாட்டுவாய் சீந்தியிட கியாழத்திட்டு
மருவியதைத் தோலாந்திர மெரித்து வாங்கி
ஊட்டுவாய் கோமயத்தாற் கழுவச் சுத்தி
உற்றெருக்கம் பாலிலே ஊறப் போட்டுக்
கோட்டுவாய் கோப்பாலில் கழுவச் சுத்தி
குற்றமது நாபிசுத்தி கூர்ந்து கேளு,
ஆட்டுகின்ற அரப்பொடியின் சுத்தி தன்னை
அறைகிறேன் நன்றாக அறைகிறேனே. 106

அரப்பொடிச் சுத்தி

அறைகிறேன் அயக்கிண்ணி ஒன்று வாங்கி
அப்பனே எள்ளெண்ணெய் அதற்குள் விட்டுக்
குறையாமல் ஒரு சாமம் வறுத்து நன்றாய்க்
குமுறவே சாறு விட்டுக் கழுவச் சுத்தி
முறையாகக் கருவேலின் பட்டைச் சாற்றில்
முசியாமல் இருசாமம் வேகவைத்து,
நிறையாகக் காடியிலே கழுவிப் போட்டு
நீட்டுவாய்ச் சுத்தி நிலைத்த போக்கே. 107

அப்பிரக சுத்தி

போக்காக அப்பிரகச் சுத்திதனைப்
பூட்டுகிறேன் அப்பிரகம் படிதானொன்று
வாக்காகக் கோமயந்தான் படிதான் மூன்று
வகை கண்டு சமனாக விரவி வைத்து
வீக்குவாய் இரண்டுபடி நீர்தான் வற்ற
வெந்த பின்பு சுணையுள்ள நெல்லிற் சேர்த்துத்
தாக்கியே கிளிகட்டிப் புளித்த காடி
தனில்விட்டுக் கசக்கிடவே கரையும் பாரே. 108

தாம்பிர சுத்தி

கரைத்து அந்தக்காடி எல்லாம் தெளிய வைத்துக்
கலங்காமல் இறுத்து அப்பால் உலர வைத்து
நிரைத்த தொரு செந்தூரப் பற்பம் பண்ணு
நிலைத்தெந்த நோயேனு நீறாய்ப் போகும்
தரைத்து வொளிர் தாம்பிரத்தின் சுத்தி கேளு
சல்லிபோல் தாம்பிரத்தை நறுக்கி வாங்கி
நிறைத்திடுவாய் புளித்த மோர் காணச் சாற்றில்
நீயேழுதரங் காய்ச்சித் துவைத்திடாயே. 109

காந்தர் சுத்தி

துவைத்திடுவாய் ஏழுவிசை எருக்கம்பாலில்
சொல்லுகிறேன் நல்லெண்ணெய் கோமயத்தில்
சுவைத்தியாம் தாம்பிரத்தைச் சூட்டு சூட்டு
சூட்சமாம் தாம்பிர சுத்தி யாச்சு,
நிவர்த்தியாம் லோகங்கள் பொன்னுமாகும்
நேர்மையாந் துறைக்கொல்லா மாடுமாடும்
துவைத்திடவே காந்த சுத்தி சூட்ட நீ கேள்
துகிப்பற்றுங் காந்தத்தைத் துண்டாய் வெட்டே. 110

நிமிளை சுத்தி

வெட்டியதோர் காந்தத்தில் சவ்வீரச் சாறு
வெகுநாளைக் காடியுடன் புளித்த மோரில்,
கொட்டிடுவாய் மூன்று தினம் வற்றவற்றக்
கூட்டடா துறைக்கெல்லாம் லோகத்தோடும்
மட்டில்லை காயசித்தி லோகசித்தியாகும்
அப்பனே நிமிளைசுத்தி அறையக் கேளு,
வட்டியுறு நால்வகையும் நொறுக்கிக் கொண்டு
வாழையுட கிழங்குநீர் வாங்கு வாங்கே. 111

துத்த சுத்தி

வாங்கியே நிமிளையிட்டு வரித்துமைந்தா
வைத்திடவே சுத்தியாம் மயக்கமில்லை
பாங்கியாந் துத்தத்தின் சுத்தி சூட்டப்
பணம் போலே நொறுக்கியதைக் கிளியாக் கட்டி,
ஆங்கியாய் அமுரியிலே ஏழு சாமம்
ஆவினிட நீர்தனிலே ரெண்டு சாமம்
தேங்கியதைத் தோலாந்தா மெரித்து வாங்கு
சித்தியாஞ் சுத்தியாம் லோகத் தூட்டே 112

குக்குல் சுத்தி

ஊட்டவுந்தான் குக்குல்தனைச் சுத்தி செய்து
உத்தமனே இடித்ததனைக் கிளிதான் கட்டி
மூட்டுவாய் திரிபலையுந் தேவதாரம்
முதிர்ந்து நின்ற பேய்ப் புடலங்கியாழஞ்செய்து
ஆட்டுவாய் தோலாந்தா நாலு சாமம்
அதன் பிறகு ருத்திர பத்திரியுங்கூடக்
காட்டுவாய் நிம்பத்தோல் கியாழம் வாங்கிக்
காய்ச்சவே அதனிட களங்கம் போமே 113

கவ்வுமடா வெள்ளி தன்னை மாட்டியுண்ணுங்
களங்கமில்லாப் பொன்னதனை நிமிளையுண்ணும்
கவ்வுமடா லோகங்கள் தகடுதட்டிக்
காட்டுவாய் தகடுக்குச் சரக்கு நேராய்
கவ்வவே கம்பீரச் சாறு விட்டுக்
களங்கமற வாட்டியே தகட்டிற் பூசிக்
கவ்வவே சட்டிக்குள் தகட்டை வைத்துக்
கவிழ்த்துமே சட்டிகொண்டு மூடுமூடே. 118

காந்த செந்தூரம்

மூடியே சந்துவாய் சீலை செய்து
முதிரவதைக் கெசபுடமாய் போடுபோடு
நீடியதோர் லோகங்கள் வேறு வேறாய்
நீட்டியே புடம் போட வன்னமேறும்
ஆடிநின்ற காந்தத்தைச் செந்தூரிக்க
அறைகிறேன் சுத்தி செய்த காந்தத்தை வாங்கி
நாடியொரு சட்டிக்குள்ளே காந்தமிட்டு
நயமாகமேற் சட்டிக் கவிழ்த்து மூடே. 119

கவிழ்த்தியபின் குழிவெட்டி மூன்று பத்துக்
கனத்தளருக் குழிக்குள்ளே அடுக்கியந்த
கவிழ்த்து வைத்த சட்டிதனை எருமேல் வைத்து
கட்டடா முப்பதெரு மேலேமூடிக்
கவிழ்த்துவதைத் தட்டி நீ எரித்து வாங்கு
கனலாறிக் காந்தத்தை வாங்கு மைந்தா,
கவிழ்த்தியதோர் பச்சரிசி கழுவி நீரோடு
கருவாழைக் கிழங்கினின்று சாறு வாங்கே. 120

வாங்கப்பா ஆவாரஞ்சார் இளநீர்ச்சாறு
வகை நாலுஞ் சமனாக வளர்த்து நீயும்
வாங்கடா தினமிரண்டு ஆட்டுச் சாற்றால்
வடுப்போலப் பிடித்ததனை ஆறவைத்து
வாங்கடா சட்டிக்குள் அடைய வைத்து
மறுசட்டி யாலதனை மறைத்து மூடி
வாங்கடா சீலை செய்து கெச புடந்தான் போடு
வாகாக ஆறியபின் எடுத்திடாயே. 121

எடுத்ததொரு வில்லைதனைக் குமுறவேநீர்
இறக்கியதை ஆட்டியே கெஜபுடம் போடு
எடுத்திடுவாய் ஆறினபின் காரையோம்பட்டை
இலவங்கப் பட்டையுடன் நெல்லிமுள்ளி

எடுத்திடித்து இவை சமனாய்க் கியாழம் வைத்து
இயல்பாக ஆடியதைச் சட்டிக் குள்ளிட்டு
விடுத்திடவே முன்போலச் சீலைசெய்து
விதமாக முன்போலப் புடத்தைப் போடே. 122

புடம்போடு இப்படித்தான் நாலுவாட்டி
பேரான பழச்சாற்றால் மூன்று வாட்டி
புடம்போடு பருத்தியிலைச் சாற்றினாலும்
பிசகாமல் ஆல்விழுதின் சாற்றினாலும்
புடம்போடு மூன்று தினம் அப்பாற்கேளு
பிறகுநீ நெல்லிமுள்ளிச் சாற்றாலாட்டி
புடம்போடு ஓர்தினந்தான் சிவந்து போகும்
பேரான காந்தசித்தி திறந்தானென்றே. 123

லோக செந்தூரம்

நன்றாக லோகசெந்தூரஞ் சொல்வோம்
நட்பாக லோகம்ஓர் பலந்தான்மூன்று,
குன்றாத சூதமொரு பலந்தான் வாங்கு
கொடுங்கெந்தி இரண்டுபலந் தூக்குதூக்கு
ஒன்றாகச் சூதமுடன் கெத்திரண்டு
உறவாட்டுக் கல்வத்தில் கடிகைரண்டு
துண்டாக விளங்கியது மயனமாகுந்
தூளான லோகத்தை இதனில் சேரே. 124

சேர்த்தங்கே குமரிச்சார் விட்டு நீயுஞ்
சிதறாமல் இருசாமம் ஆட்டி வாங்கி
சேர்த்தங்கே உண்டை பண்ணி ஆமணக்கிலையில்
திடமாக அமைத்தந்த இலையால்மூட்டி
சேர்த்ததனை ரவியில் வைப்பாய் கடிகையீராறு
சென்றபின் தீச்சுட்டாற்போலே சூடாம்
சேர்த்து நெல்லிற் புதைத்திடுவாய் தினந்தான் மூன்று
திரும்பவதை தூளாட்டிச் சிறக்க வாங்கே. 125

வாங்கினதோர் செந்தூரம் தங்கம் போலாம்
மாரணத்திற் செந்தூரம் ஆகிறப்பா
பாங்காகக் காந்தங்கள் லோகம் வெள்ளி
பரிவான தாம்பிரங்கள் கஞ்சந்தங்கம்,
தாங்கி நின்ற மாரணத்திற் செந்தூரஞ் சித்தி
தாரணியில் வாய்திறந்து சாற்ற வேண்டாம்
தேங்காத மாரணத்தில் சித்தியாகுஞ்
செய்யா ா துறைக்கெல்லாந் தெளிந்துதானே. 126

அப்பிரேக செந்தூரம்

தெளிவாக அப்பிரேக செந்தூரஞ் சொல்வேன்
சேர்வாங்கு அப்பிரேகஞ் சுத்தி செய்து
வளியாகுஞ் செம்பொன் நெரிஞ்சிச் சாற்றிலாட்டி
மைந்தனே சட்டிக்குள் அடைபோலப்பி
நெளியாமல் அப்பிரேகமதன் மேலே வைத்து
நேராக அடையதன் மேலும் வைத்து
அளியாகச் சட்டி கொண்டு கவிழ்த்து மூடி
அப்பனே கெஜபுடந்தான் போடு போடே. 127

போட்டதொரு அப்பிரேகம் திரும்பவாங்கி
புகழாகக் கல்லுரலில் தூளாய் நீதான்
ஆட்டியே வாங்கியதை மாந்தோலாட்டி
அடைவாக அச்சாற்றால் அடைதான் தட்டி
நாட்டுவாய் மாம்பட்டை தேத்தாங்கொட்டை
நயமாகப் பொடியாக்கி ஓட்டிலிட்டு
மூட்டியடைதனை ஓட்டில் வைத்து மூடி
முன்போலே சீலைசெய்து மூடுமூடே. 128

மூடியே புடந்தீர்த்து தூளாயாட்டி
முன் போலே மூன்று தரம் கெசபுடந்தான் போடு
நீடியே நெல்லிமுள்ளிச் சாற்றால்ஆட்டி
நீரோடு வாழையிட கிழங்கு நீரும்
மூடியே கலந்தாட்டி அடைதான் செய்து
வுறப்போடு முன்போலே புடத்தில் நீயும்
நாடியே இப்படித்தான் கெசபுடமே போடு
நலமாக எடுத்தவன் அவ்வாட்டு வாட்டே. 129

எடுத்திடுவாய் தூளதனைக் குமரிச் சாற்றால்
இதமாக ஆட்டியதை அடைதான் செய்து
தொடுத்திடுவாய் மூன்று பத்து புடந்தான் முன்போல்
சுகமாக அப்பிரேகம் அருணன் போலாம்
விடுத்திடுவாய் வியாதிகளை உண்ணவென்றால்
வெஃபஞ்சிற் பொறிபட்டாப் போலே போகும்
தடுத்திடவே அயத்துறை திரையுந் தள்ளுஞ்
சதுரான சகத்தீரத்தெண் வியாதிபோமே. 130

மண்டூர செந்தூரம்

வியாதிபோம் மண்டூர செந்தூரங் கொண்டால்
மைந்தனே வைக்குகிற வரிசை கேளு

நயாதிபோய்ச் சகத்திரமாம் வருஷஞ்சென்ற
நத்தங்கள் தனிற்கிடக்குங் கரிய கிட்டம்
மயாதி போய்க் கொண்டு வந்து தூளாயாட்டி
அப்பனே தான்றிமரக் கரியினாலே
நியாதிபோம் உலையிலிட்டுச் சிவக்க ஊதி
நீ ஆவின் கோமயத்தில் ஊறப்போடே. 131

ஊறிய பின் எடுத்ததனில் ஊரல் வாங்கு
உலர்த்தியதை தூளாக்கிக் குகையிலூட்டு
மாறியதோர் மண்டூரச் சிவப்புமாச்சு
மறுத்துமதைச் செந்தூரமாகக் கேளு,
வீறுடனே மூன்று நாள் நாகவல்லிச் சாற்றில்
விபரமுடன் சூட்டிடுவாய் வற்ற வற்ற
வாறாக நொச்சிச் சாறு வெள்ளாட்டுப்பால் நீர்
மைந்தனே மூன்று தரம் கொதிக்கவையே. 132

வைப்பஃதுவும் எப்படித்தான் என்றுநீயும்
வயணங்கேள் வெவ்வேறு தினந்தான் மூன்று
வைத்ததனை வற்றுவித்துப் பின்பு வாங்கி
வரிசை பெற ஒரு சாமம் குமரிச் சாற்றில்
வைத்தாட்டி மடக்கிவிட்டு மேலுங்கீழும்
வைப்பதுதான் ஆலிலையால் மறைத்துச் சுத்தி
வைத்திடுவாய் சீலை மண்தான் ரண்டு செய்து
வராகபுடம் அறுபதுதான் போடு போடே. 133

போட்டிடுவாய் மண்டூரம் செந்தூரமாச்சு
போக்கிலே வியாதிகளைப் பிடுங்கித் தின்னும்
மாட்டிடுமே மகோதரங் காமாலை பாண்டு
வருஞ்சோகை பெரு வயிறு வலி மயக்கம்
மாட்டிய தோரீளை முதல் மேகந்தானும்
ஆக்கை வலி இராணி இவையெல்லாந்தீரும்
மூட்டிடுவாய் அனுபானம் உரைக்கக் கேளும்
உத்தமனே வியாதிகண்டு உறவு சேரே. 134

உருக்குச் செந்தூரம்

உறவுசேர் உருக்கிலே செந்தூரந்தன்னை
உறைக்கிறேன் உளிப்பத்து வாங்கி வந்து
உறவாக உலையிலிட்டு அருணன்போலே
ஊதியதை ஆவின் நீரில் வெள்ளாட்டு நீரில்
உறவாகச் சமன்கலந்து வைத்தாயனால்
உதிருமடா கருக்கதுவுந் தோய்க்க தோய்க்க

உறவாக உதிர்ந்த பொடி யெல்லாம் வாரி
உறவாட்டுக் கரிப்பான் நீருட்டிக் காணே. 135

காணப்பா ஆட்டியதை வில்லைதட்டி
காயவைத்துச் சட்டிக்குள் ஆலிலையைப் பரப்பி
பூணப்பா வில்லைதனை இலைமேலிட்டுப்
புகழாகப் பின்புமந்த இலையால்மூடி
ஊணப்பா வில்லைதனைக் காயவைத்து
உறவாகச் சீலைசெய்து உலர வைத்து
தோணப்பா கெசபுடத்தில் ஆட்டிவாங்கி
சொல்லுகிறேன் ஓரிலைத் தாமரையின் சாரே. 136

சாறுவிட்டு ஆட்டிநீ கெசபுடந்தான் போடு
தளிர்க் குமரிச் சாற்றினாற் கெசபுடமே செய்து
கூறுடனே எடுத்துப் பார் முருக்கம்பூப் போல்
கொள்கியது செந்தூரங் கொடியசித்தி
மாறுபடா நோய்க்கெல்லாந் திரிபலையும் வெல்லம்
வரிசையிடன் பொடிகூட்டி வைத்துக் கொண்டு
ஆறியதோர் செந்தூரம் பணந்தான் தூக்கி
அப்பனே தேனிலே குழப்பிக்கொள்ளே. 137

கொள்ளவே தூலவுடல் சூட்சமாகும்
குறைந்திருந்த குஷ்டவுடல் நெய்யில் கொள்ள
மெள்ளவே பருத்திறுகு மயம்போலப்பா
மீறிவரு நரைதிரைகள் வெருவியோடும்
விள்ளவே நாவேது பாவுமேது
மேலோர்கள் அயங்கிட்டம் ரண்டுங்கொண்டால்
அள்ளவே குறையாது கடலிலேற்றம்
அறிந்து நீ லோகத்தை யணைத்து ஆடே. 138

மிருத சஞ்சீவி

ஆடவே மிருதசஞ்சீவி சொல்வோம்
அப்பனே சூதம் ஒன்று கெந்தி ஒன்று
நீடவே கல்வத்திற் சாமம் ஒன்று
நீட்டிநீ ஆட்டையிலே மயனமாகும்
மூடவே கறுத்திருத்தி அப்பிரேகபற்பம்
உயரீந்த லோகபற்பம் தாம்பிர பற்பம்
நாடவே தாளகமும் நாபிவங்கம்
நலமான மனோசிலையுங் கங்குலிட்டம்பாரே. 139

பாரப்பா வத்தி திப்பிலியினோடே
பாங்கான அதி விடையஞ் சொர்னமாட்டம்

சீரப்பா விதுவெல்லாம் ரசகெந்தியுடனே
சேர்சமான யிஞ்சிச்சார் சிவதைச்சாறும்
வாரப்பா சிறுகீரை யிவைகள் தன்னில்
நாட்டியே மாட்டிடுவாய் தினந்தான் ஒன்று
பேரப்பா கஞ்சாவின் சாற்றினாலும்
பொருந்தவே தினமொன்று புரட்டி ஆட்டே. 140

ஆட்டடா பழச்சாற்றில் ஆரைச்சாற்றில்
அப்பனே ஆறவைத்துக் குப்பிக்தேறி
மூட்டடா சீலை செய்து தாளிக்குள்ளே
முதிரவே மணலிட்டுக் குப்பிவைத்து
நீட்டடா மேலுமந்த மணல் பரப்பி
நினைவாக இருசாமம் எரித்து வாங்கு
மீட்டடா ஆறியபின் தூளாயாட்டி
மேலான மாத்திரை தான் செய்யக்கேளே. 141

சூசிகாபரணம்

கேளப்பா இஞ்சிநீர் தன்னாலாட்டிக்
கிருபையுடன் குன்றியிடை குகைதான் கட்டி
சூளப்பா தோஷமுதற் சன்னிக்கெல்லாஞ்
சூட்டிடவே துஞ்சிநின்ற உயிர்கள் மீளும்
நாளப்பா சூசிகாபரணஞ் சொல்வோம்
நாடி உயர் பதிமூன்று சன்னிதீரும்
வாளப்பா சூதமொன்று காந்தமொன்று
வாகான தாமரம் அயம் லோகந்தானே. 142

லோகமுடன் அப்பிரேக மாறுநேராய்
நொறுக்கியதை நேர்சமனாய்க் கெந்திகூட்டி
லோகமுறு நொச்சிவேர் சித்தரமூலம்
நுணுக்கமுடன் சரியாகக்கியாழம் வைத்து
லோகமுறும் பொடியிட்டு தினந்தான் மூன்று
நோகவதை யாட்டிநீ வாங்கிப் பின்பு
லோகமுறு நாயுருவி கரிப்பான் மத்தை
நோயகலப் பேயத்தி காளிகாணே. 143

காணப்பா சித்திரப்பாலாடை கோட்டான்
கரந்தையொடு வெள்ளைக்காக்கணமும் மிக்க
பூணப்பா காயாத பழுபாகல் தாழை
புகழ்சீந்தில் சாரணையும் பேய்ச்சுரைகள் எல்லாம்
தோணப்பா பேய்த்துளசி இவைநீர் வாங்கித்
தோய்த்தந்த நீர்கவற ரவியில் வைப்பாய்

நாணப்பா தினமொன்று சாறதொன்று
நயமாக விரவியதை ரவியிற்போடே. 144

போட்டபின்பு பாவங்கள் இன்னங்கேளு
புகழ்கோழி முன்மஞ்ஞை பன்றி வெள்ளாடு
ஊட்டதனின் பித்துக்களில் ஏழுவாட்டி
ஊரவைத்து திப்பிலியின் கியாழத்தாலும்
மூட்ட அதை மூன்றுநாள் பாவனைதான் செய்து
முசியவரை யெமுசிலை வேர் கியாழத்தாலும்
மாட்டவதை பாவனைதான் செய்து மைந்தா
அதிற் சமனாய் நாபிதனைச் சமன் தான் சேரே. 145

சேர்ந்த தொரு சூரணத்தை முன்சொன்ன பித்தில்
திரும்பவும் நீ ஊறவைத் தெடுத்துக் கொண்டு
சேர்த்திடுவாயனுபான நோய்கள் சன்னி
சேவல்கண்டு முறையுடனே செய்து நீயும்
சேர்த்திடவே அறுசீலை பெருவயிறு குன்மம்
தீராத பாண்டுவுடன் வலிதான் குட்டம்
சேர்த்திட நஞ்சயமு,மிகுவாதந் தானுஞ்
செல்லாத வீக்கமுடன் வரட்சி போமே. 146

இரசபூபதி

வறட்சிபோம் வெட்டை போம் வலிக்குந்திரேகம்
மைந்தனே சஞ்சி மகத்தாஞ் சித்தி
இறைச்சியொடு நரம்பெல்லாம் அமிர்தம் ஊறும்
இரசமென்ற பூபதியை இயம்பக்கேளு
வறட்சிபோம் இரசபற்பம் தாம்பிர பற்பம்
வாங்காத நாபியவை நேர்தான் தூக்கி
குறைச்சிடாக் கிரந்திரண்டு திரிகடுகு பலையுங்
கூறாக இவையெல்லாம் நொறுக்கிடாயே. 147

நொறுக்கியபின் தழுதாழை கண்டங்காலி
நொச்சியடா பேய்த்தும்மட்டி இவைகளெல்லாம்
நறுக்கியதோர் கொடிவேலி தின்னாப்பாளை
நாட்டடா கியாழமிட வோங்கி மைந்தா
சிறுக்கடா இருபது நாள் ஆட்டி வாங்கி
சீரான உளுந்திடைக்குக் குளிகைகட்டி
கறுக்கான சன்னிக்கு ஈந்தாயானால்
தொட்டவுடன் பதின்மூன்றுந் துகள்நீராமே. 148

பஞ்சவர்த்திபிரதம்

நீறுமென்ற பஞ்சவத்தி இரதஞ் சொல்வேன்
நெருப்பான காலாக்கினி ருத்திரனைச் சொல்வேன்
ஏறுமென்ற நாபிகெந்தி வெண்காரம் சூதம்
இயல்பான மிளகுடனே இடையும் தாராய்
மாறுகின்ற மத்தாஞ்சாறது கொண்டாட்டு
வகையாகத் தினமொன்று வழித்துருட்டி
ஆதியே உலர்ந்தபின்பு தூளாயாட்டு
அப்பனே செப்பிலே அடைத்துவையே. 149

காலாக்கினி ருத்திரன்

அடைத்ததொரு பொடிகுன்றியிடை தான்தூக்கி
ஆகாத சன்னிக்கு அளித்தாயானால்
உடைத்திடுமே பனிரெண்டு சன்னி பின்பு
ஓர் சன்னி விரோத சன்னியொன்று கூட
துடைத்திடுமே தோஷங்கள் பலவுந்தீரும்
துரிதான காலாக்கினி ருத்திரன் கேளு
படைத்த சத்திசாரம் வெட்சாரந்தானும்
பாங்கான நவச்சாரம் இந்துப்பூவே. 150

இந்துவோடு பொட்டிலுப்பு வலையலுப்பும்
இயல்பான காச்சுப்பு கல்லுப்பாதி,
மைந்தனே சரிகூட்டி கல்வத்திட்டு
ஆட்டியதில் ஓரிடைதான் சூதம் விட்டு
தொந்தமுற வோர்தினந்தான் மத்தித்து வாங்கிச்
சூட்டவே மேல்மருந்தைத் துறையாய் நீயும்
சிந்துவே பெருங்காயங் கடுகரத்தைச்
சிலைபுங்கம் வித்துமிடை நேராயாட்டே. 151

ஆட்டியதோர் மருந்துக்குள் சூதம் விட்டு
அப்பனே மூடியதைத் தோலாந்தரமாக
ஊட்டுவாய் பழங்காடி பாண்டத்தில் விட்டு
உறவாகத் தினமொன்று அரைத்து வாங்கு
மாட்டுவாய் மத்தஞ்சார் நொச்சிசாறு
வாகான கரிப்பான்சார் மணத்தக்காளி
கூட்டுபொன் முசுட்டை கொடிவேலி யஞ்சி
குறுகவெள்ளைக் கணங்காட்டான் கரந்தைச் சாறே. 152

சாறுகளில் ஒவ்வொருநாள் ஆட்டிவாங்கு
தனித்து இனிப் பாவனைக்குத் தூளாயாட்டி
வீறுபுகழ் மிளகதற்கு நேராயாட்டி

விரவியதை மயிற்பித்து வராகப்பித்து
மீறிவளர் மீன்பித்து வெள்ளாட்டின் பித்து
வெவ்வேறே தினமொன்று விரவி வைநீ
ஊறியபின் இரண்டு குன்றி வெல்லந்தேனில்
ஊட்டடா தயிறுஞ்சோறு உண்ணச் சொல்லே. 153

உண்ணயிலே வெட்டைவந்து மேவிற்றானால்
உடன் தலையில் குளிர்ந்த சலமுறவா நீயும்
உண்ணயிலே சன்னிபோற் தோஷம் போகும்
உயிர்ப் பறியிட்ட குன்மங்கசிவு போகும்
உண்ணயிலே பெருவயிறு பாண்டும் ஓடும்
ஓகோகோ கிறிச்சினங்கள் ஆறும் ஓடும்
உண்ணயிலே சாரமுறுங் காரமூறும்
உத்தமனே ஏதுவகை உரைக்கிறேனே. 154

சன்னிவாதக் கியாழம்

உரைக்கிறேன் சன்னி வாதக் கியாழத்தை
உத்தமனே சூதம் ஒன்று கெந்தி ஒன்று
நிரைக்கிறதோர் அரிதாரம் நாபிமாட்சி
நேரான பொன்மாட்சி தாம்பிர பற்பந்தானும்
தரைக்குயர்ந்த அப்பிரேகஞ் சத்திய வாச்சாரஞ்
சங்குமுடிதாரம் எவச்சாரம் தானும்
பெரைக்குயருங் கடகசிங்கி பெருங்காயம் வசம்பு
பேய்ப்புடலும் பொன்முசுட்டை கடுக்காய் சுக்கே. 155

சுக்குடனே கஞ்சாவும் நிலப்பனையின் மூலந்
துஞ்சாத நிம்பத்தின் பிசினி நேராய்
பக்குவஞ்சேர் உத்தமாதாளிச் சாற்றால்
பழச்சாற்றால் தினம் இரண்டு வெவ்வேறாக
உக்கிரமாய் ஆட்டியே கடலைபோலே
உருட்டியே தசமூலக் கியாழந்தன்னில்
தக்கதோர் இஞ்சிச்சாறு இவற்றிலூட்டு
சாந்தம் வரும் வியாதியுட வகையைக் கேளே. 156

வடவானல் ரசம்

வியாதியெனும் பதின்மூன்று சன்னிதானும்
விக்கலுறும் வாந்தியொடு வெட்டை தானும்
வியாதியெனுங் கரப்பன் முதற் புண்கள் தீரும்
மேலான வடவானல் ரசத்தைக் கேளு

வியாதி போஞ் சூதமொன்று கெந்தி யொன்று
மேலான அப்பிரேகம் தாம்பிர பற்பம்
வியாதி போங் காந்தமாங் கெந்தத் தாரம்
வீறான நீலாஞ்சனமுந் தூக்கே. 157

தூக்கடா கடல்நுரையும் இவைதானாராய்த்
துடியான இந்துப்பு பொட்டிலுப்பு
தூக்கடா வெடியுப்பு காச்சுப்புத் தானுஞ்
சுகமான அட்டுலுப்பு ஐந்தும் நேராய்
தூக்கடா சதுரக்கள்ளிப் பாலாலோர் நாள்
துரிசாக ஆட்டியதைக் குகையிலிட்டு
தூக்கியே குழிக்குள்ளே குகையை வைத்துச்
சோர்வின்றி வாய்மூடி எருவடுக்கே. 158

அடுக்குவது குழிகீழும் மேலுமப்பா
அப்படியே கனல்புடமாய் ஓர்நாள் மட்டும்
எடுத்திடுவாய் மறுநாளில் தூளாயாட்டி
இருக்கட்டுங் குன்றியிடை இஞ்சிச்சாற்றில்
கொடுத்திடுவாய் மூன்று தினமேற் பொடியைக் கேளு
கூரான திப்பிலியின் பொடியைத் தூவி
படுத்தினுமே தனுவாத முகவாத சன்னி
பாங்கான நடுவாதம் பாருங்காணே. 159

பாருமப்பா தளர்வாதம் வற்றும்வாதம்
பரவி நின்ற துடிவாதம் விலங்குவாதம்
பாருமப்பா சுழல்வாதம் பிரளிவாதம்
படபடத்து மூர்ச்சிக்கும் படரானவாதம்
பாருமப்பா அனுபானங் கியாழங்கேளு
பாங்கான ஆமணக்கு சிற்றாமுட்டி
பாருமப்பா வேர்கொம்பு வாதமடக்கி வேரும்
பட்சிக்க இவையெல்லாம் பறக்குந்தானே. 160

சோற்சந்த வயிரவாசம்

தானென்ற சோற்சந்த வயிரவத்தைச் சொல்வோம்
சருவவகை எண்பது வாதந்தீரும்
தானென்ற சூதமொன்று லோகமொன்று
தாளகமுந் தானொன்று நிமிளையொன்று
தானென்ற கெந்தியொன்று நாபியொன்னு
தாம்பிர பற்பமொன்று சித்திரமூலம்
தானென்ற வெண்காரம் நொச்சிவேறுஞ்
சமன் சேர்த்துக் கல்வத்திற் பொடித்திடாயே. 161

அனுபானச் சூரணம்

பொடித்ததனை நொச்சியிலைச் சாற்றாலாட்டிப்
பொங்கமுடன் சிவதைச்சார் தன்னிலோர் நாள்
மடித்தாட்டிக் குன்றியிடை குளிகை கட்டி
மைந்தனே யிஞ்சிச்சார் பின்னுங்கேளு
படித்தரமாய்க் கியாழமப்பா திப்பிலியின் மூலம்
பாங்கான சூரணத்தைப் பகருவோம் நாம்
நடித்துடைய சீந்தி சர்க்கரை யரத்தை
நயமான நிம்பனிட பட்டை பாரே. 162

பாரப்பா ஆமணக்கு பருப்பு தானும்
பருஞ்சுக்கு நொச்சியிலை தேவதாரம்
நேரப்பா தூளாக்கியதற்கு நேராய்
நிறுத்திடுவாய் சுத்திசெய்த குக்கில் சேர்த்து
ஆரப்பா நெய்விட்டு ஆட்டிக் கொண்டு
அனுபான சாறுகளில் அறிந்து வூட்டு
பேரப்பா வாதத்தைப் பிடுங்கித் தின்னும்
புகழான வயிரவன்றன் போக்குந்தானே. 163

மிருதாங்கிஷ ரசம்

போக்குமிகு மிருதாங்கிஷ ரசத்தைச் சொல்வோம்
புகழான சொர்ன பற்பந் தாம்பிர பற்பம்
போக்குமிகுஞ் சூதமிவை சரியாய்ச் சேரு
பொன்தார மிவையிரண்டு கெந்திரெண்டு
போக்குமிகு மனோசிலையுங் கழஞ்சுரண்டு
பொடியாக்கிக் குகை மருத்தைப் புகலக்கேளு
போக்குமிகு வெண்காரம் பலகரையு நேராய்ப்
புகட்டிலதை வெள்ளாட்டுப் பாலிலாட்டே. 164

ஆட்டியதைக் குகைபிடித்துப் பொடியை விட்டு
அடைவாகக் குகை மருந்தால் அடைத்து மூடி
நாட்டியதைச் சட்டிக்குள் அமைத்து நீயும்
நன்றாக மேற்சட்டிக் கவிழ்த்துக்கட்டி,
நீட்டியே சீலை செய்து கெசபுடத்திற் போடு
நெருப்பாறி யெடுத்ததனை தூளாயாட்டி
மூட்டுவாய் மிளகப்பா மூவாறொன்று
முன்பொடியை நெய்யிலே குழப்பிடாயே. 165

குழப்பியதில் நாலு குன்றியிடை பொடிதான் சேர்த்து
கொடுத்திடவே மூன்று தினங் கூறக்கேளு

அளப்பிலே நோயறிந்து நடப்பிலூட்டு
அப்பனே சிலேத்துமங்கள் தொண்ணூற்றாறும்
களப்பெலிபோற் பறந்தோடும் அதிகசித்தி
காட்டுமுன்னே எட்டுவகை மாந்தம் நீங்கும்
தொழப்பெரிய சஞ்சீவி இதற்கொப்பில்லை
சொல்லுகிறேன் தாளேசுர ரசத்தைக்கேளே. 166

தாளேசுர ரசம்

கேளப்பா சூதமொன்று தாரமொன்று
கொடியான கெந்தியொன்று மனோசிலைதான் ரெட்டி
நீளப்பா தாம்பிரபற்பம் அதற்கு ரெட்டி
நிசமாகக் கல்வத்தில் நொச்சிச் சாறு
நாளப்பா ரண்டுதினம் இராப்பகலா யாட்டி
நற்குன்றி இடை உருட்டி வைத்துக்கொண்டு
சூளப்பா திரிபலையு மிளகு நேராய்ச்
சூரணித்துத் தேனிலொரு வுண்மையூட்டே. 167

மகாமேக ரசம்

ஊட்டவே யுளமாந்தை கழிச்சல் தீரும்
உயர்ந்து வரும் எலும்புருக்கி சுரமாந்தை நிற்கும்
மேட்டியுறு மகாமேக ரசத்தைச் சொல்வோம்
மேலான பலகறையின் பொடியு முன்னே
மாட்டியே சுத்தி செய்த மண்டூக நேராய்
மைந்தனே ஆவினெய்யில் மயனம் போலே
ஆட்டுவாய் சாமமொன்று வுலர்த்திப் பின்பு
தூளாக்கி வெற்றிலைச் சாறுமுற்றே. 168

ஊற்றியே பாவனை தான் ஏழுவாட்டி
உறவு செய்து தூளாக்கி குன்றி தூக்கி
ஊற்றிடுவாய் காற்கழஞ்சு பசுவினெய்யில்
உட்கலந்து செய்திடவும் சயநோய் தீரும்
ஊற்றியே வெண்ணெய் தேன் கியாழமாகும்
உத்தமனே உபாதிகள் அதிகமானால்
ஊற்றுவாய் சாமத்துக் கொருக்கால் நீயும்
ஒன்பத்துப் பத்தாறு அங்கொழிந்து போமே. 169

ஸ்ரீவாட ரசம்

ஒழிந்திடவே ஸ்ரீவாட ரசத்தைக் கேளு
உயிர் பறிக்கும் வாத குன்மம் ஒடுங்கியோட

அளிந்த விந்து மாடஷிகம் அப்பிரேகம்
அவாட்சாரங் கெந்தியுடன் தாம்பிரபற்பம்
பொழிந்திட நீ சமனாகத் தூக்கி மைந்தா
புகழ் சித்திரமூலச்சார் கொண்டு வோர்நாள்
தெளிந்துவிடாது ஆட்டி மஞ்சாடி போலத்
திரட்டி வைப்பாய் அனுபானஞ் செப்பக் கேளே. 170

செப்புறேன் வெற்றிலைச்சார் விட்டரைத்து
தின்றிடவே வாதகுன்மந் திருந்திரும்
செப்புறேன் அநுபானம் வாய்விளங்கத்
திரமான இந்துப்பு காயம் ஏலம்
செப்புறேன் சவச்சலுப்புச் சரியாய்த்
தூக்கிச் சேரமாதளைச் சாற்றில் சாம மாட்டிச்
செப்புறேன் கழஞ்சி இதிற்கூடக் கூட்டித்
தின்றிடவே வாதகுன்மந் தெறித்துப் போமே. 171

சோமரோம. ரசம்

போமப்பா பித்தகுன்மந் தனக்குக் கேளு
பேர் சோமரோம ரசப் போக்குத் தானும்
ஆமப்பா சூதமொன்று நாபியொன்றும்
அரிதாரஞ் சரிசேர்த்து ஆட்டி நீயும்
தேமப்பா தேக்கிலைப் பூக் காய் மூன்றுந்
தெரிந்திடித் திரண்டு நாள் திறமாயாட்டித்
தாமப்பா கொடுப்பைச் சார் தன்னிலோர் நாள்
தனித் தாட்டிக் குகையிலிட்டுச் சீலை செய்யே. 172

சீலைசெய்து குழிக்குள்ளே மூசை வைத்துத்
திறமாகக் குழிமேலே எருவை வைத்துச்
சீலை செய்து குகை தனக்கு ஆறவாரச்
செய்திடுவா இப்படியே ஐந்து வாட்டி
சீலையுறு புடம்போட்டுத் தூளாயாட்டிச்
சேர்த்திடுவாய் நேர்வாளப் பருப்பு நேர்தான்
சீலை வடிகட்டி அதிற் குன்றி தூக்கிச்
சேர்ந்தாவி னெய்தனிலே தின்னச் சொல்லே. 173

இராஜசேகர ரசம்

தின்னுவிடு மிராசசேகர ரசத்தைச்
செப்புகிறேன் சிலேற்பன குன்மம் போக
உன்னுகரு லோக பற்ப நாபிச் சூதம்
உற்றகெந்தி வெண்காரத் திரிகடுகு தானும்

தன்னுகிரி போலுயர்ந்த தாம்பிர பற்பந்
தனில் ஏலம் இலவங்கப் பத்திரிதானும்
பொன்னூமத்தை விரை சங்குபற்பந்தானும்
புகழ் வில்வப் பழச் சதையுஞ் சரியாய்க் கூட்டே. 174

கூட்டடா கஸ்தூரி மஞ்சள் தானுங்
கூசாமல் மூன்றுநாள் கரிப்பான் சாற்றில்
ஆட்டடா குன்றியிடை குளிகை கட்டி
அப்பனே தேனிலிடச் சயமைந்தும் போகும்
மூட்டடா ஈளைபோங் கிராணி போகும்
உடல் வற்றும் எலும்புருக்கி குன்மம்போகும்
வாட்டடா செறியாமை ஐயபித்தம்
மகத்தான குடல்வாதம் அண்ட வாய்வும்
காட்டடா வுதரத்தில் வியதிக்கெல்லாங்
காட்டகத்திற் றீப்போலக் கருகிப் போமே. 175

வித்தியாதர ரசம்

கருக்கியிடும் வித்தியாதர ரசத்தைத் தானும்
காட்டுகிறேன் குன்மபீலிகையும் வாங்க
அருக்கி வருஞ் சூதமொன்று கெந்தியொன்று
வப்பனே நிமிளையொன்று தாரமொன்று
பெருக்கிய நல்தாம்பிர பற்ப மனோ சீலையுஞ்
சமனாய்ப் பேரான திப்பிலியின் கியாழந்தன்னில்
சுருக்கியே யோர் தினந்தான் ஒட்டி வாங்கிச்
சுகமாகக் கியாழத்தில் பாவனை தான் செய்யே. 176

பெரும்பாட்டுக்கு

செய்ததொரு மருந்ததனைப் பணத்திலே பாதி
திரேட்டி நீ தேனிலே செலுத்திப் பின்பு
செய்திடவே ஐந்து வகை பீலிகையுந் தீருஞ்
சீரான வாய்வு கெர்ப்பசூலைக் கெல்லாம்
செய்திடுவாய் பனைவெல்லங் கியாழமிட்டு
திரிகடுகு சிறுதேக்கு சமன் தானாட்டி
செய்ய வராகனிடை கியாழத்தில் தூவிச்
செலுத்திடவும் பெரும்பாடு தீருங்காணே. 177

யோனிச் சூலை

காணப்பா பெரும்பாடு துண்டு துண்டாக வீழில்
கியாழத்தில் மேற்படியைக் கழறக் கேளு

தோணப்பா வேர்க்கொம்பு தேவதாரஞ்
சுகமான திப்பிலியும் புங்கம் பட்டை
பூணப்பா தூளாக்கி வராகன் தூக்கிப்
புகட்டவே குளிகையுடன் புகழ்ந்து நீயும்
ஊணப்பா வலிமையெடுக்கும் யோனிச்சூலை
உண்டானால் வேப்பம் விரை ஆமணக்குப் பருப்பே. 178

குன்மத்துக்கு

பருப்புடனே சரிகூட்டி நிம்பச் சாற்றில்
பதமாகக் குளிகையிட்டு யோனியிலே பூசப்
பெருப்ப முள்ளவலி திரு முதரவலியானால்
பேறுபட உள்ளுக்குக் கொடுத்து வா
விருப்ப முள்ள குன்மத்தின் குடோரி சொல்வோம்
வெண்காரங் கெந்தி ரச நாபி தாரம்
உருபொதிந்த திரிகடுகு திரிபலையுஞ் சமனாய்
உறம் போடுவைக்கு நேர்வாளந்தானே. 179

வாளமதைக் கரியாக்கி இஞ்சிச் சாற்றில்
மாட்டுவாய் தினமொன்று மயனம் போல
நீளவே ஆட்டுநீ குன்றி போல
நினைவாக உருட்டியே இஞ்சிச் சாற்றில்
மாளவே குன்மங்களென்று சொல்லில்
மைந்தனே கொடுத்திடவே வலிகள் தீறும்
சூளவே பாண்டுகுன்மம் பாண்டு நீங்கச்
சூட்டுகிறேன் குடோரிதனைச் சூட்டுறேனே. 180

சூட்டுறேன் வெண்காரம் நாபி கெந்தி
சுகமானகாந்த பற்பம் தாம்பிர பற்பம்
நாட்டு புகழ் சீரகம் முந்திரி கடுகு பலையும்
நற்கடுகு ரோகணியுஞ் சித்திர மூலம்
மாட்டுநீ யெவச்சாரஞ் சத்தியட்சாரம்
மாயாத பஞ்சவுப்பு வாய் விளங்கங்
கூட்டுநேர் சமபாகந் தூளாயாட்டிக்
குறையாமல் நேர்வாளம் பாதியாமே. 181

பாதியாம் வாளத்துக் கெட்டிவித்து
பாங்காகத் தூளாக்கி எல்லாம் ஒன்றாய்
நீதியாய் மாதளம்பூ பழச்சார் விட்டு
நீட்டியே ஐந்து தினம் ஆட்டிப் பின்பு
சேதியாம் ஏழுதினங் கரிப்பான் சாற்றில்
திறமாக ஆட்டி அதை உலர வைத்து

நீதியாய் இஞ்சி வெல்லம் வெந்நீர் நெய்யில்
நீட்டவே குன்மமுதல் நீராம்பாரே. 182

சுரமாலிகை

பாரப்பா சுரம் பாரு மாறல் போகும்
பாங்கான சன்னியொடு தோஷம் போகும்
ஆரப்பா நோயறிந்து அனுபானஞ் சேர்த்து
அளவறிந்து ஊட்டுவாய் அப்பாற் கேளு
நேரப்பா சுரமாலிகையைச் சொல்வோம்
நேரான தாம்பிரபற்பம் சூதம் கெந்தி
சேரப்பா மனோசிலையுந் தாளகம் வெண்காரம்
திரிகடுகுந் திரிபலையுஞ் சீரொன்றாமே. 183

ஒன்றான இதற்கு ரெட்டி நேர்வாளப் பருப்பு
உறவு சேர்த்துக் கல்வத்தில் கரிப்பானீரால்
ஒன்றாக இருசாமம் ஆட்டி வாங்கி
உத்தமனே குன்றியிடை குளிகை சேர்த்து
ஒன்றாக அனுபானம் இஞ்சிச்சாற்றில்
ஊட்டவே ஒழிகிற வியாதி கேளு
ஒன்றாகப் பீலிகையும் வெறுப்புப் பாவை
உதரத்தில் வலி தாகம் ஒழியுந்தானே. 184

சம்பிரதாயச் சூரணம்

ஒழியுமப்பா நெடுநாளை வியாதியினால்
உறச்செய்வாய் அவுஷதங்கள் மண்டலந்தான் நன்றாய்
பொழிய நின்ற சம்பிரதாயச் சூரணத்தைக் கேளு
பொங்கிவளர் அரப்பொடியும் இருபத்தைந்தும்
தெளியுநின்ற கெந்தி பதின்மூன்றதாகுஞ்
செயகாந்த மூன்று இரதமிரண்டுங் கூடி
அழியவதைக் குமரிச்சார் விட்டுச் சாமம்
ஆட்டியே ஒரு வில்லை ஆகத்தட்டே. 185

தட்டடா எருப்போல அகலமாகத்
தான்றிரும்பக் கல்வத்தி லிட்டு ஓட்டால் மூடிக்
கட்டடா ரவியிலிடு சாமமொன்று
கறுத்தங்கே பற்பமாய் இருக்கும் பாரு
மட்டடா வாய் விளங்கம் இருசீரகமும்
வாகான திரிகடுகு திரிபலையு நேராய்
கொட்டடா தூளாட்டிப் பற்பத்தோடே
கூட்டியே சூரணித்து எடுத்துக் கொள்ளே. 186

சகல குன்மக் குளிகை

எடுத்ததொரு சூரணத்தில் தீரும் நோய்கேள்
எங்குன்மங் கிராணியுடன் அக்கினி மாந்தம்
படுத்ததொரு நோயெல்லாம் பறந்தேயோடும்
பாடுகிறேன் சகலக் குன்மக் குளிகை தன்னைக்
கடுத்ததொரு அரப்பொடிதான் எண்பதாகுங்
கனகரச கெந்திசிலை கழஞ்சி ரண்டாய்
கொடுத்திடு வாய் குமரிநீர் தன்னாலப்பா
குறைவின்றி ஒரு சாமம் குழையஆட்டே. 187

குழையஅதை ஆட்டியே அடையாய்த் தட்டிக்
கொடு ரவியில் கலத்தோடே சாமமிரண்டு
விளையவே வைத்திருந்து திரும்ப வாங்கு
மேன்மை பொடிதான் இந்துப்பு இரண்டு பங்கு
இளையாத திரிகடுகு இரண்டு பங்கு
என்மகனே கடுக்காய்த்தூள் இரண்டு பங்கு
திரியாமல் இது வெல்லாங் கரிப்பான் சாற்றில்
தினமொன்று ஆட்டியே வாங்கு வாங்கே. 188

வாங்கப்பா ஆட்டையிலே கைப்படாமல்
வழித்ததனை விராகனெடை குளிகை சேர்த்து
பாங்கான இஞ்சிச் சார் தன்னில் தேனும்
பஞ்சமென்ற யோகசய கியாழத்தாலும்
நீங்காமல் ஊட்டவே குன்மம் எட்டும்
நேரான கிராணி பீலிகையாம் வாய்வும்
தாங்காத குட்டம் முதல் அக்கினி மந்தந்
தரியாமல் ஓடிப்போம் சத்தியந்தானே. 189

சத்தி குன்ம முதலான நோய்கட் கெல்லாம்
சாற்றுகிறேன் அனுபான கியாழமப்பா
சித்தரிட மூலமப்பா புளியம்பட்டை
சீரான மூக்கரை வேராயிற்பட்டை
பத்தியுடன் திரிகடுகு கடுக்கா யிந்து
பரிவாகக் கியாழ மிட்டு அப்பாற்கேளு
முத்தியருஞ் சுகந்த ரசந்தன்னைச் சொல்வோ
முறையோடே புலத்தியனே முழுதுங்கேளே. 190

சுகந்த ரசம்

கேளப்பா கெந்திரண்டு நாபி ஒன்று
கிருபையுடன் அப்பிரேக செந்தூரமொன்று

நாளப்பா இவையெல்லாம் பலமாய்த் தூக்கி
நயமான சூதமதிற் கழஞ்சி ஒன்று
சூளப்பா சீரகமும் கொடுவேலி வேருஞ்
சிகசீந்திற் சர்க்கரையும் வாய்விளங்கம்
நீளப்பா எவச்சாரம் நொச்சி வேரு
நினைவாக அரைப்பலந்தான் தூக்குதூக்கே. 191

தூக்கி நொச்சிச் சாறு மாதளையின் பழச்சாறுஞ்
துறையோட ஒவ்வொரு நாள் துஞ்சி ஆட்டி
ஆக்கமுடன் குன்றியிடை குளிகை கட்டி
அப்பனே பஞ்சமுக கியாழமதால்
தாக்குடைய இஞ்சிச் சார் தன்னிலாதல்
தயவாகத் திசைமூலக் கியாழத்தாலே
நீக்கிடவே பெருநோயு மகோதரமும் வல்லை
நீராமை கவுசியிலை எல்லாம் போமே. 192

பஞ்சமூலக்கியாழம் திசைமூலக்கியாழம்

போமென்ற பஞ்ச மூலக்கியாழங் கேளு
புகழான திப்பிலியின் மூலங்கூட
ஆமென்ற செவ்வியமும் சித்திரமூல
மடையான வேர்க்கொம்பு இவை ஐந்தாகும்
நாமென்ற திசைமூல கியாழஞ் சொல்வோம்
நயமான பெருமுன்னை பெருவாகை வில்வம்
வேமென்ற பாதிரியுங் கண்டங்காலி
மேலான நெரிஞ்சி வேர் சிறுவழுதலையின் வேரே. 193

ஸ்திரீ விக்கரம ரசம்

வேரான சிற்றாமல்லி பேராமல்லி
வேர்க்கொம்பு திசைமூலக் கியாழமாச்சு
பேரான கிரிச்சனங்கள் ஆறும்போகப்
பேசுகிறேன் ஸ்திரீ விக்கிரம ரசத்தை மைந்தா
நேராகச் சூதமொடு தாம்பிரங் கெந்தி
நீயாட்டு தினமொன்று நொச்சிச் சாற்றில்
சீராக வாங்கி யொரு வில்லையாக்கிச்
சிறுசட்டிக்குள்ளிட்டு மண்தான் செய்யே. 194

மண்செய்து தாளி தனில் படிதானெட்டு
மணலிட்டுச் சட்டிதனை அதன்மேல் வைத்துப்
பண்ணிட்ட சட்டியின் மேல் மணலும் இட்டுப்
பாகாகச் சாமமொன்று வெரித்து வாங்கி

உண்ணுதற்கு மாதளம் வேர்த்தூளாலாட்டி
உத்தமனே வராகனிடை தூக்கி நீயும்
வண்ணமுள்ள மாதளம் பூச்சாறு தன்னில்
மாட்டியே குன்றியிடை பற்பம் போடே. 195

பற்பத்தில் தீருகிற வியாதி கேளு
படரான கல்லடைப்பு நீரடைப்பு
வெப்பமுறும் சதையடைப்பு சோரைக் கூட்டு
வெண்கடுப்பு சீயடைத்தல் வீரணக் கட்டு
அற்பமுறும் நரம்படைப்பு மூத்திரங்குட்டம்
அடைவை யெல்லாந் தெறித்துப் புண்ணாறுமைந்தா
சொற்பமல்ல பண்டிதன் தான் பனிரெண்டு லட்சஞ்
சுருக்கியதைச் சூத்திரமாய்ச் சொன்னேன் பாரே. 196

சொல்லுகிறேன் சுரதோஷஞ் சன்னிவாதம்
துணுக்குடனே யுட்குத்து தனுவுக்கெல்லாம்
வெல்லுமே நீட்டையிலே பாணம் போல
விஷ்ணு பராக்கிரம ரசந்தானுமப்பா
நல்லரச நாபி கெந்தி வெண்காரம் இந்து
நலமான எவாச்சாரம் சத்தியட்சாரம்
கொல்லுமே நோயனைத்துஞ் சங்கட்சாரங்
கூடவே சமபாகங் கல்வத் தாட்டே. 197

ஆட்டுவது மத்தஞ் சார் சாமமொன்று
அப்பனே குகையிலிட்டு வாயை மூடிக்
கூட்டுவது குக்குடமாம் புடத்தைப் போடு
குறைதீரப் பாகுணைக்குப் பித்தைச் சொல்வோம்
மாட்டுவது மீன்பித்து பன்றிப் பித்து
மைந்தனே பன்றியென்றால் காட்டுப் பன்றி
நீட்டியதை மாவிடையாய்க் குளிகை செய்து
நீயூட்டு குளிர்ந்த சலம் இஞ்சிச் சாறே. 198

சாறாகுந் தண்ணீராம் இவற்றுக் கெல்லாந்
தாக்கவே வாதரஞ் சந்நிவாதம்
வீறாகும் வாதஞ் சீதாங்க தோஷம் மென்று
தின்னும் பிரலாபத் துணுக்குத் தானும்
மாறாத காண்டீபங் கெம்பீரம் பூத
மதியழிக்கும் பிரலாபஞ் சன்னி போகும்
ஆறாகுங் கிராணி முதல் நீரிழிவுக் கெல்லாம்
ஆனந்த வைரவத்தை அறையக் கேளே 199

ஆனந்த வைரவம்

அறைகிறேன் வெண்கார நாபி சூதம்
அப்பனே சாதிலிங்கம் திப்பிலி நன்மிளகு
நிறைவாகத் தூக்கிநீ யிஞ்சிச் சாறு
நேர்சமன் சம்பழச்சாறுங் கலந்து கொண்டு
குறையாமல் ஈரிரண்டு சாமமாட்டு
குன்றிபோல் உருட்டடா குளிகைதானும்
கறையான கிராணிக்கு முத்தக்காசு கனத்த
அதிவிடையம் பொன்முசுட்டை வேரே. 200

முசுட்டைவேர் வோர்க்கொம்பு சரியாய் வாங்கி
முறுகவதைக் கியாழமிட்டுக் குளிகையூட்டி
முசுட்டையுறு மேதிமோர் புட்டிலூட்ட
மோதிவரு நீர்மேக மோடுந்தூர
முசுட்டை வேர் பழச்சாற்றில் சுவாசகாச
முதிர்ந்து நின்ற வேர்க்கொம்பு கிராம்பு தானும்
முசுட்டை பெறுந் திப்பிலியுஞ் சரியாயாட்டி
முதிர்தயிரில் வராகனிடை கொடுத்திடாயே. 201

நீரிழிவுக்கு மேகாதிக் குளிகை

கொடுத்திடவே யதிசாரந் தீருமப்பா
கூரான அசீரணத்துக்கு உறவு கேளு
அடுத்து நீ வழுதலையின் நீரிலூட்டு
அக்கினி மாந்தத்துக்கு அறையக்கேளு
கடுத்துடைய திரிகடுகு பொடியினூட்டு
கனவாய்வு போகவென்றால் கியாழஞ்சொல்வோம்
படுத்திடுமே எவ்வகையும் நிவர்த்தியாகப்
பஞ்சமூலக் கியாழமடா பத்தி கேளே. 202

பத்தியுறு மேகாதிக் குளிகை சொல்ல
படரான நீரிழிவு அனைத்து மோடும்
புத்தியுறுஞ் சூதமப்பா கழஞ்சு பத்து
புகழான அப்பிரேகச் சிவப்பி ரெட்டி
சித்தியுறுங் கெந்தியப்பா வைத்ததற்குத்
திருமால் தன் தாரமது ஐம்பதாகும்
வெற்றியுயர் சலாசத்துக் கழஞ்சியைந்து
மேலான காரீயச் செந்தூரங் கேளே, 203

செந்தூரங் கழஞ்சிய மோர் முப்பதாகுஞ்
சேர்த்திடவேமேல் மருந்தைச் செப்பக் கேளு

பந்தூரப் பருத்தி விதைத் தேற்றான் வித்து
பாங்கான வெண்குன்றி வித்து தானும்
கந்தூர புளிய விதை தோடு நல்ல
கற்கடகச் சிங்கி யிவை சமன்ாய் நீயும்
மந்தூரக் கழஞ்சியைந்து நிறுத்து வாங்கி
அப்பனே மரமஞ்சள் தூக்கு தூக்கே. 204

மஞ்சளெனுங் கஸ்தூரி மஞ்சள் தானும்
மன்னர் பணி நிலப்பனை வேர் சித்திரமூலம்
மிஞ்சாமல் பப்பத்துக் கழஞ்சு தூக்கு
வெம்பு வெள்வேல்க் கருங்காலி கருவேலம் பிசினும்
துஞ்சவே கழஞ்சு பத்து தென்னம்பாளைத்
தூளங்கே மும்மூன்று கழஞ்சு தூக்கு
தஞ்சமுறுந் திரிகடுகு வென்பதாகுந்
தனித்திந்த இனங்களெல்லாம் நிறுத்திக்கொள்ளே. 205

கொள்ளடா ஆவாரையும் அருகிலந்தை
தோடயிலைச் சாரதனைப் பிழிந்து நீயும்
தள்ளடா மூன்று தினம் வெவ்வேறாகத்
தளராமல் நீராட்டி வாங்கி மைந்தா
எள்ளடா தேற்றான் விரைப் பிரமாணத்தில்
என் மகனே திரட்டியே எடுத்து வைத்து
உள்ளடா குளிகையொன்று தேனிலீய
மேகமென்ற திரிபதையும் வெல்லுங் காணே. 206

நீரிழிவுக்குக் கியாழம்

வெல்லுவதற்குக் கியாழவகை சொல்லக்கேளு
மேன்பொடிக் கியாழமிடு துடரி சுண்டை.
நல்ல சுண்டி நீர் பூலா சூரைகடலிறாஞ்சி
நலமான இப்ப வலாவரை பொன்முசுட்டை
வல்லவே வேணுவிலை முத்தக்காய் திரிபலையும்
வாவீறு புரித்தேற்றம் வகை நேரே தான்
புல்லவே தூளாக்கி பாண்டத்திட்டு
புதுச்சட்டிக் குள்ளொரு பிடிதான் போடே. 207

போட்டங்கே சலம் விட்டு ரவியிற் சீலை
புகழாகவேடுகட்டி மூன்று சாமம்
நீட்டங்கே திரும்புவதைக் குறுக்கிக் காய்ச்சி
நேராகக் காற்படிக்குள் சுழஞ்கதேன் தான்
ஊட்டங்கே காலத்தி லிரவிற் கொள்ளு
உத்தமனே பொன்முசுட்டை வேரினோடு

நாட்டங்கே திரிகடுகு முத்தக் காசு
நலமான மூங்கிலிலை திரிபலை நேராமே. 208

நேராகக் கழஞ்சிரண்டு தூக்கிக்கொண்டு
நீர்படிதான் ரண்டுவிட்டு வுழக்காய்க் காய்ச்சி
சீராகக் கொண்டிடவே கிரிகை கேளு
சீய்மேக மதுமேகங் காளமேகம்
வாராத தசமேகம் மத்திமேகம்
வறளவே கனல்மேகம் வாதமேகம்
பேராக வுருக்கு மாங்கிஷமேகம்
புகழாக ரண்டு பத்து மேகம் போமே. 209

சயம் சுவாசகாசத்துக்குக் கண்டங்காரி நெய்

போகாத சயகாசம் போக மைந்தா
புகழ்கண்டங் காரிநெய்யைப் புகலக் கேளு
வாகாகச் சமூலமெல்லா மிடித்துச் சாறு
வாங்கடா படியொன்று நெய்தானொன்று
பாகமுடன் கலந்திதன்மேற் பாகங்கேளு
பருநெல்லி சிறுதேக்கு சிற்றரத்தை
சேகரமாம் வெட்பாலை கீழ்க்காய் நெல்லி
சிறப்பான சிறுகாஞ்சோறி வேரே. 210

சுவாச காசத்திற்குத் திப்பிலிநெய்

வேரான நெருஞ்சிவேர் தாளிசப்பத்திரி
மீறாமல் வகையொன்று கழஞ்சு நாலு
சீராக ஆட்டியே நெய்யிலிட்டுச்
சிவக்க நீ காய்ச்சியதை வாங்கிக் கொண்டு
நேராகத் துட்டிடை நீ யருந்தச் சொல்லு
நிமிஷத்திற் காசவகை நிவிர்த்தியாகும்
தீராத சுவாச சயத்திற்குத்
திப்பிலிநெய் தன்னையினிச் செப்பக்கேளே. 211

கேளப்பா நிலவேம்பு நன்னாரி வேருங்
கிரிகையுறுங் குருவிஞ்சிராமிச்சம் வேர்
நாளப்பா சந்தனமும் பேராமல்லி
நலமான நெல்லிக்காய் கீழக்காய் நெல்லி
தாளாத சீரகமுங் கடுகுரோணி
தனியான வாலுளுவை யரிசி தானும்
வாளப்பா திப்பிலியு மிவையெல்லாந் தான்
வகையொன்று கழஞ்சுநிறை தூக்கி வாங்கே. 212

வாங்கியதை ஆட்டிவைத்து ஆவின்பால் தான்
மைந்தனே நாலுபடி வடிதான் கட்டி
பாங்காக நெய்படியும் இரண்டு விட்டுப்
பதமாகச் சிவந்த பின்பு வடித்து நீயும்
நீங்காத ஈளைவலி சுவாசகாசம்
நீர்க்காசஞ் சுரகாசம் பித்தக்காசம்
தாங்காம லொருபட்சங் கொள்ளும்போது
தலைகெட்ட நூல் போலே சாடிப்போமே. 213

மேக வியாதிக்கெல்லாம் ஏலாதிக்கிருதம்

சாடிவிழு நோய்க்கெல்லாம் ஏலாதிக்கிருதம்
சாற்றுகிறேன் சாதகமாய் கேளுகேளு
சாடிவிழு நெய்யின்றி எண்ணை தன்னில்
சம்பிரதாய மாகுமடா சார்ந்து செய்வாய்
சாடிவளர அத்திஆல் அரசுயித்தி
தனித்தனியே முதிர்மரத்தின் சிவந்தபட்டை
சாடியே இடித்ததனைப் பாண்டத்திலிட்டுத்
தயவாகத் தண்ணீர்தான் தூணியூற்றே. 214

ஊற்றியே எட்டொன்றாய்க் குறுக்கிநீயும்
உறவு சேரிரண்டுபடி தாழைநீர்தான்
ஊற்றுவாய் இரண்டுபடி வெள்ளறுகுநீர்தான்
உத்தமனே ரண்டுபடி நெய்யுமூற்று
ஊற்றிடவே யிரசாலின் முகிழெடுத்து
உயர்ந்துநின்ற பத்திமுகழ் மதுரங்கோட்டம்
ஊற்றுவாய் சந்தனமும் இலுப்பைப்பூவும்
உற்பனஞ்சேர் தாமரையின் வளையம் வாங்கே. 215

வளையமொடு செங்கழுநீர் மூலந்தானு
மகத்தான வெள்ளறுகு மூலந்தானும்
இளையவே பேரீந்து நாகப்பூவும்
இயலான செண்பகப்பூ இலவங்கப்பத்திரி
தளையவே கச்சோலம் நாணற்றாது
தனித்துவளர் நன்னாரி நெய்தல்மூலம்
விளையவே அமுக்குறா ஏலந்தானும்
மீறாமல் கழஞ்சொன்று பாலிலாட்டே. 216

ஆட்டியதில் கலந்து கொண்டு தினந்தான் நாலு
வளமாகக் காய்ச்சி நீ ஐந்தா நாளில்

ஊட்டியே வடித்திருத்து உண்டபோது
உயர்ந்ததோர் ஈளை யெலும்புருக்கி தீரும்
நாட்டியே பித்த வறட்காசம் போகும்
நலமளிக்கு முளமாந்தை நாடாதென்று
ஊட்டியே நெய்வார்த்த எண்ணை சேர்த்து
யுறக்காய்ச்சி முழுகிடவே ஊறுதிகேளே. 217

உளமாந்தைக்கு கண்டங்காரிநெய்

உறுதியென்ற நீரிழிவு உள்ளுணர்த்தி
உழலையுறுங் கிரந்திமுதற் பிளவை தீரும்
இறுதியுறுங் காலெரிவு மேலெரிவு தீரும்
இது தயிலநெய் கூடிற் கிருதமாகும்
பெறுதி யுறும் நல்லவர்க்கு மிந்த நூல்தான்
பேசுகிற னுளமாந்தை எட்டுந் தீரச்
சுருதிபுரி கண்டங்காரி நெய்மைந்தா
சொல்லுகிறேன் சமூலமும் வாங்குவாங்கே. 218

வாங்கியே நாலெட்டு பலந்தானப்பா
வாகான கூவிளமு மமுக்கறாவும்
பாங்கிடவும் பேய்ப்புடலு மாடாதோடை
பாங்கான சங்குசிறு வழுதலை யோடாறும்
தாங்கியே நிறுத்திநீ யிடித்துக்கொண்டு
தண்ணீர் தானெண்குருணை தன்னிலிட்டு
நீங்கிடா தெரியிட்டு வெட்டொன்றாக்கி
நெய்படி நாலதிலிட்டு நெறிப்பின் கேளே. 219

நெரிவெள்ளை பூசனிக்காய் தண்ணீர்தானும்
நெய்க்குநேர் பால்நேராய்க் கலந்துகொண்டு
தறித்தான்றிப் பத்தியு மிளகு செவ்வியஞ்
சமனாக மும்மூன்று கழஞ்சு தூக்கு
திறியேல மிலவங்கப்பத்திரி பட்டை திப்பிலியு
மிலாமிச்சஞ் சிறுநாகப்பூ மறமாஞ்சில்
கர்க்கடகச்சிங்கி யிவையெல்லாம்
வகையொன்றுக் கீரண்டு கழஞ்சு தூக்கே. 220

தூக்கியே யாவின்பாலி லாட்டி வாங்கிச்
சோர்வறவே கலக்கிநீ யடுப்பில்வைத்து
போக்கியே கணேசன் வைத்துத் தீபதூபம்
புட்பத்தால் அர்ச்சனை செய் நைவேத்தியஞ் செய்து
தாக்கியே சொர்ன புஷ்பஞ் சாத்தியங்கே
தணல்மூட்டிப் பதமாக வைத்துக் கொண்டு

தேக்கியே திப்பிலியும் பேரீச்சம் பழமும்
சேரடா மும்மூன்று கழஞ்சுதானே. 221

கியாழவகை

சேர்த்ததனைத் தினமூன்று கழஞ்சிநெய்தான்
தின்றிடவே யுளமாந்தை சுவாசகாசம்
பார்த்தவுடன் கொன்றுவிடுஞ் சுணங்குமாந்தை
பரிவான சையுறுசலத் தானுமிக்க
மாற்றமுறுஞ் சலேந்திரனுமா றிப்போகு
மைந்தனே ராத்திரிக்குக் கியாழஞ் சொல்வேன்
போர்த்தபுகழ் பொற்கடுக்காய் கண்டங்காலி
புகழ்நெல்லி சிறுதேக்கு மிளகுநேரே. 222

நேராகக் கழஞ்சிரண்டு சட்டிக்குள்ளிட்டு
நீர்படிதான் ரண்டுவிட்டு வுழக்காய்க்காச்சி
வாரமுட னுண்டிடவே சயநோயீடு
வறட்சியொடு பீனிசமு மாரணமுமாகும்
பேராக வின்ன மொரு கியாழங்கேளு
பெருந்திராய் சுழலாவரையின் மூலம்
சேராய்நீ சிறுதேக்கு சுக்குநல்ல
திப்பிலியும் சிறப்புடனே வகையொன்று கழஞ்சுமூன்றே 223

மூன்றாகாத் தூக்கியப்பா நொறுக்கி வாங்கி
மூதிரவே ரண்டு படிசலத்திலிட்டு
ஊன்றியே தீயெறித்து வுழக்காய்க் காச்சி
யுண்டிடவே தேன்விட்டு வுறவு செய்து
தான்றியே யின்னமொரு கியாழம் சொல்வோந்
தனிசுக்குப் பொன்முசுட்டை வேரினோடே
தூன்றியே சிறுதேக்கு தேவதாரந்
தூதுவளை பெருங்குரும்பை சீந்திகாணே. 224

காணப்பா வழுதலைவேர் கண்டங்காரி
கழஞ்சி ரண்டொவ்வொன்று கியாழமுன்போல்
தோணப்பா திப்பிலிமேற் பொடியதாகத்
தான்தூவியே சுகமாகக் கொள்ளச் சொல்லு
நீணப்பா பத்தியந்தா னெய்யும்பாலு
மோதுவரை யண்டமுமா மவரைப் பிஞ்சாம்
பூணப்பா பீர்க்கிலாம் புடோலுமாகும்.
புகழான முருங்கை முதல் முசலாம்பாரே. 225

முயலாகுங் கவுதாரி யுள்ளானாகு
முதுவரால் நெய்மீனாம் சுறாமீனாகும்

புயலான கொடுப்பை யுமுப்புமாகும்
புகழாது நீநோய்க் கெல்லாம் பூட்டு நன்றாய்
மயலாகும் வாகடங்கள் பார்க்கவேண்டா
மாந்தவகை விபரத்தை வகையாய்க் கேளு
அயல்காணு முயலொன்று பிடித்துவந்து
அப்பனே கால்தலையுங் குடலும் போக்கே. 226

மாந்தவலிக்கு உச்சிநெய்-மாந்தவலிவகை தொண்ணுற்றாருக்கும்

குடல்போக்கி நாலுபத்துப் பலந்தான் றூக்கிக்
குமுறவே யிடித்தொரு பாண்டத்திட்டு
அடலமுடன் இருகுறுணிச் சலமும்விட்டு
அப்பனே நாலொன்றாய்க் குறுக்கிநீயும்
விடலமுயர் தோடைச்சாறு குருணிவிட்டு
வெள்ளாவின் பாலுமிரு நாழிவிட்டு
நடலநறு நெய்யங்கே யிருநாழிவிட்டு
நாடிடவே மேல்மருந்தைச் சொல்லுறேனே. 227

சொல்லுகிறேன் திப்பிலியு மதனின்மூலஞ்
சுக்குடனே கடகசிங்கி சித்திரமூலம்
செல்லமாஞ் சிறுதேக்கு குரோசானியோமஞ்
செவ்வியமிரு சீரகமுங் கிராம்பு தானும்
வெல்லுமே சடாமாஞ்சில் கடுகுரோகணி
மிளகு கோட்ட மிந்துப்பு வாலுழுவையரிசி
அல்லுறவே முந்திரிகை யேல மிலவங்க
மதிவிடைய மரத்தை யத்தி திப்பிலியுந்தூக்கே. 228

தூக்கடா கழஞ்சிரண்டு பாகிலாட்டு
சொல்லுவேன் பெருவாலி பெருங்குமிழுமுன்னை
ஆக்கமுறு பாதிரியுங் கண்டங்காரி
யப்பனே சித்தாமல்லி பேராமல்லி
தேக்கடா கூவிளமு நெருஞ்சிதானுஞ்
சிறு வழுதலை யிவைகள் முதல்சமூலங்கூட
தாக்கடா தூதுவளை யமுக் கறாவேர்
சங்கம்வேர் திப்பிலியு மிளகும் பாரே. 229

பாரப்பா மரமஞ்சள் தேவதாரம்
பருவரத்தை வகைக்கங்கே பலந்தான் மூன்று
சேரப்பா தூளாக்கி தூணி நீரிற்
தீயிட்டு நாலொன்றாய்க் குறுக்கி வாங்க

ஆரப்பா யிவையெல்லா மொன்றாய்ச் சேர்த்து
அடுப்பேற்றிப் பூசைசெய்து வனலைமூட்டி
பேரப்பா மூன்று நாளூற வைத்துப்
புகழாக நாலாநாள் வடித்திடாயே. 230

கதலிக் கந்தக்கிருதம்

வடித்துவைத்த நெய்யிலே கழஞ்சி தூக்கி
மைந்தனே யரைக்கழஞ்சி தேனும்விட்டு
படித்தரமா யத்திப்பிலிதான மேற்பொடியுந்தூவிப்
பாங்காக வுடம்பறிந்து விருநேரமுண்ணு
நொடிக்கு முன்னோய் களறும் வச்சிரதேகம்
நுணுக்கமாந் தொண்ணூற்றாறு சயமுந்தீரும்
கடித்தவாய் துடைத்தாப் போல் பிணிவிண்ணேகும்
கதலி கந்தக் கிருதங்கள் கழல் கின்றேனே, 231

கதலிகந்தக் கிருதங்கேள் பெரும்பாட்டுக்கு
காசங்கள் சயரோக மெல்லாந்தீரும்
கதலிக் கந்தமூலம் பூவிரண்டு நேராய்
கனக்கவொரு துலா மிடித்துப் பதக்குநீரில்
கதலிக் கந்தம் நாலொன்றாய்க் குறுக்கக் காய்ச்சி
கலந்ததற்குள் பசுவினெய் படிதானொன்று
கதலிக்கந்த மாவின் பால்படிதா னொன்று
கரும்புநீர் நெல்லிக்காய் காணுந்தானே. 232

தானென்ற நிலப் பனைவேர் தண்ணீர்மிட்டான்
றன்னீர் தான் வகை நாலு படிதானாலு
கானென்று கலந்துவைத்து கடைமருந்தைக் கேளு
கழரேல மிலவங்கம் நேர்வாள கெந்த
மானென்ற சடாமாஞ்சி திரியால் விழுது
மைந்தனே யல்லியுடன் செங்கழுநீர்க் கிழங்கும்
தேனென்ற நெய்தலொடு கழஞ்சு மூன்று
திறமாக ஆட்டியதை நெய்யிற் சேரே. 233

நெய்யை யடுப்பேற்றியே யனல்மூட்டி
நேராக நாலுதினஞ் சிறுகொதிப்பாய் வைத்து
மெய்யாக வைந்தாநாள் சிவக்கக்காச்சி
வெண்மையுடன் மூன்று நாளூறவைத்து
எய்யாமலிரு நேரமிடை தான் கேளு
வென்மகனே இருகழஞ்சு வியல்பாய்த்தூக்கு
அய்யாகேள் கொண்டிட வே யொழியுங் கோர்வை
யறைகிறே னுள்ளபடி யறைகிறேனே. 234

பெரும்பாட்டுக்கு நிலைப்பனைநெய்

அறைகிறே னெலும்புருக்கி மேகவெட்டை
யடர்ந்தொழுகும் பெரும்பாடு மேகநீரிழி
நிறை நிற்கும் பெரும்பாட்டுக்குக் கின்னஞ் சொல்வேன்
நெய்யடா நிலப்பனை வேரொதியம்பட்டை
மறையாதக் கருங்காலிப் பட்டைதானும்
வாய்க்கடங் காக்கரு நாவற்பட்டை தானும்
குறையாமல் வகைநாலு பலமு நூறு
குறுகவிடித் திருதூணி நீரிலாட்டே. 235

ஊட்டியே யெட்டொன்றாய் காய்ச்சி வைத்து
வுறவாக விருநாழி பசுவி னெய்யை
நீட்டியே யிருநாழிப் பாலும் வாரு
நினைவாகப் புளியாரைச் சாறவ் வண்ணம்
நாட்டியேநீர்வள்ளிக் கிழங்குசாறு
நயமாக விருநாழி கூடவிட்டு
வீட்டுவாய் பொன்முசுட்டை சிறுகாஞ்சோறி
விளாம்பழ முந்திரிபலையுங் கொத்த மல்லியாமே. 236

கொத்தமல்லி மாங்கொட்டை பேரீச்சம்பழமுங்
கூரான முந்திரிகை பெருங்குமிழின் பழமும்
வித்தமல்லி யரத்தைசுக்கு வெறிமலர்த்தாது
மென்னிலவம்பிசின் கொத்தான் காட்டாத்திப்பூவும்
மத்தமல்லிப் கீழ்க்காயு மொதியம்பட்டை
மாதளம் பழத் தோலிலவம் பிஞ்சு தானும்
சுத்தமல்லி யதிமதுரம் விளாமரத்தின் பிசினுந்
துய்ய வெள்ளி லோத்திர முத்தக்காசே. 237

முத்தக்கா சஞ்சனச் சாத்திரபேதி
மூலமா மமுக்குறா நன்னாரிகல் நார்
மத்தக் காலாமிச்ச மத்தித் திப்பிலி
மைந்தனே சிறுநாகம் புளியவிரைத்தோடு
உத்தக் காயிலவங்கப்பட்டை பத்திரி
யோது பஞ்சமுக்கறா குங்கிலிய மேலம்
கத்தக்கா வகையொன்று கழஞ்சிரண்டு
சூட்டிநீ யாட்டுவா யாவின் பாலே. 238

பாலினா லாட்டியப்பா நெய்க்குளிட்டுப்
பதமாக வடித்திறுத்துப் பரணி சேர்த்து
சாலவே கழஞ்சிரண்டு காலத்திலூட்டு
சாய ரட்சை வேளைக்குக் கியாழஞ் சொல்வேன்

நீலவே பருத்தி விதை நிலப்பனையின் கிழங்கு
நீர்வள்ளி முசுமுசுக்கை வேருங்கூட
நாலப்பா பேரீச்சம் பழமுமொக்க
ரண்டுகாசிடை நாழி பாலிற்போடே. 239

அசுவகெந்திநெய்

போட்டப்பா வறக்காச்சி வடித்துக்கொண்டு
புரட்டக் கேள் நெய்தனிலே காலாழாக்கை
நீட்டப்பா சர்க்கரைதான் வராகனிரண்டு
நீயிட்டுக் கொடுத்திடவுந் தீருநோய்கேள்
பூட்டப்பா பெரும்பாடு வெலும்புருக்கிப்
பொருமலுடன் தாகமுடன் சோபகாசம்
பாட்டப்பா பிரமியமுஞ் சுவாசகாசம்
பாண்டுரத்த மேகமெல்லாம் பாருந்தானே. 240

பாருமே சயங்கடப்பா திருப்பதற்குப்
பாடுகிறேன சுவகெந்தாதி நெய்யை
வீறுடைய வமுக்குறா துலாந்தானொன்று
மேனிச் சாரத்தனையும் வேறாய்க் கொண்டு
மீறாமற் சாறுவகைக் காற்றாடாமல்
மிஞ்சாமல் பலம்பத்து நிறுத்துக் கொண்டு
வாறுடைய பெருங்குமிழும் பெருவாகைமுன்னை
மகத்தான கூவிளம் பாதிரியுங் கேளே. 241

பாதிரியுஞ் சித்தாமல்லி பேராமல்லி
பண்பான நெல்லியொடு கண்டங்காரி
நீதிசிறு வழுதலைவேர் பலந்தான் மூன்று
நிறுத்தங்கே யிவையெல்லா மிடித்துமைந்தா
ஆதி பெரும் பாண்டத்தி லிட்டுப்பின்பு
அளந்துவிடு யிருதுணி சலந்தானப்பா
போதிலே யெட்டொன்றாய்க் குறுக்கிவாங்கிப்
புகட்டடா ஆவின்நெய்யிற் படிதானொன்றே. 242

நெய்விட்டு மதரமொடு சூரியபத்திரி
நேரான தேட்கடையுந் திரிகடுகு
ஐயுற்ற திரிபலையுந் தேவதார
மரத்தை மஞ்சள் மரமஞ்சள் திப்பிலியின்மூலம்
பையுற்ற கொடிவேலி படமடக்கிப்
பருந்தகரம் வெட்பாலை கடுகுரோணி
நொய்யுற்ற வரேணுச முபட்டசந்தம்
நோக்கவே யின்னமொன்று நுணுக்கந்தானே. 243

தானென்ற எவச்சாரஞ் சத்தியட்சாரம்
சகாயமருள் ரசகாச லவணந்தானும்
தானென்ற வகையொன்று வராகனாலு
தனித்தனியே தூக்கிநீ யாட்டி மைந்தா
தானென்று கலக்கியே நாலுநாள்தான்
சயிக்கிணையாய்த் தீயிட்டு வைந்தாநாளில்
தானென்று வடித்தெடுத்து மேல்மருந்தை
சாற்றுகிறேன் தாம்பிரபற்பங் காணுந்தானே. 244

அட்டசந்த நெய்

காணப்பா தாம்பிரபற்பம் பலந்தானிரண்டு
கனத்தமணித் திப்பிலியும் பலந்தானெட்டு
தோணப்பா தூளாக்கி நெய்யிலிட்டு
துஞ்சாத தேன்படிதா னிரண்டுவிட்டு
பூணப்பா தானியபுடந் திங்களொன்று
புகட்டி வைத்துப் பின்னருந்த போம்நோய்கேளு
வீணப்பா சயரோகஞ் சுவாசகாசம்
வீறான பீலிகையு மரோசிபோமே. 245

அரோசி போஞ் சுரம்போகு குன்மம்போகு
மப்பனே யறுசூலை யிரத்தபித்தம்
அரோசிதரு மெலும்புருக்கி வெப்புப்பாலை
யனேகமாம் ரோகங்க டீருந்தீரும்
அரோசிய றுமட்டசந்த விபரங்கேளு
அகிற்கட்டை மலர்க்காயி லவங்கப்பட்டை
அரோசிபோங் கோஷ்டமுடன் கஸ்தூரிமஞ்சள்
அப்பனே குங்குமப்பூ கர்ப்பூரந்தானே. 246

நீர்வள்ளி நெய்

கர்ப்பூரஞ் சமுத்திர பச்சையோடு
காணப்பா வட்டசந்தங் கருதிப்பாரு
கர்ப்பூர நீர்வள்ளி நெய்யைக்கேளு
கருதியதின் கிழங்குச்சார் படிதானாலு
கர்ப்பூர வாவின்பால் படியுநாலு
கட்டதற்கு ளிருநாழி நெய்யைநீயும்
கர்ப்பூர நற்பாலை வேரினோடே
காணதுத்தி மாகாளிக் கிழங்கும்வாங்கே. 247

கிழங்கப்பா நன்னாரியிரு வேலிவேருங்
கேளடா முசுமுசுக்கை வேருங்கூட

களங்கமில்லா விலுப்பைப்பூ பூமிசர்க்கரையும்
கருமதுரஞ் சந்தனமும் பேரீச்சம்பழமும்
முழங்கவே பற்படாகம் ஆவாரப்பட்டை
முந்திரிகை சிந்தியுட னத்திப்பட்டை
விளங்கவே நாலினிட விழுதுங்கூட
வெள்ளீச்சங் கொழுந்துடனே விபரங்கேளே. 248

விபரங்கேள் வகையொன்று மிறாமற்பாலில்
மிக்கவே நாலுசாம மாட்டிவாங்கி
விபரமாய் நெய்யுடனே கலந்துவைத்து
மெதுவாகத் தீயெரிப்பாய் தினந்தான்மூன்று
விபரமாய் நாலாநாள் வடித்துகொண்டு
மேன்மை பொடி தேனுக்குச் சமனாய்ச்சேர்த்து
விபரமாய் சர்க்கரையும் பலந்தானாறு
மீறாமல் திப்பிலியும் பலந்தானொன்றே. 249

கிரிச்சினம் ஆறுக்கும் இளநீர்

ஒன்றாகப் பொடித்துநீ நெய்யிற் போட்டு
வுண்டுவ்ரக் கழஞ்சொன்று காலத்தாலே
நின்றாயும் பெரும்பாடு கட்டிச்சோரை
நிலையாத வெலும்புருக்கிச் சயமுமீளை
பொன்றாகக் காலெரிவு மூர்ச்சைதாகம்
பொன்றிவிடும் பஞ்சதனிற் புறப்பட்டாப்போல்
குன்றாத விளநீர்நெய் கிரிச்சினங்களாறுங்
கூட்டோடே திறந்திடவுங் கூறினேனே. 250

திறந்துவிடு மிளநீர்தான் படிதானாலு
செப்புகிறேன் பூசனிக்காய் தண்ணீர்நாலு
துறந்துவரும் வாழையுடக் கிழங்கின்சாறு
சொரிதண்ணீர் மிட்டான்றன் கிழங்கின்சாறு
மறந்திடா தொவ்வொன்றும் படிதான்னாலு
மைந்தனே யாவின்பால் படியும்நாலு
கறந்துவிடு கருப்பஞ்சாறு பொன்னாங்காணி
களங்கமது நீர்முள்ளிச் சாறும்வாங்கே. 251

வாங்கடா யிச்சாறுபடி தான்ரண்டு
வகையான சிந்தியுட கியாழங்கேளு
பாங்காக நாலுபடி நெருஞ்சிச்சாறு
பார்புகழு மோரிலைத் தாமரையின்சாறு
நீங்காம லெண்ணான்கு படியுமொன்றாய்
நீபெரிய பாண்டத்தில் விட்டுப்பின்பு

ஆங்கமுறு மானெய்யும் படியிரண்டு
வப்பனே சலாசத்து கல்நார்காணே. 252

கல்நாருங் கல்மதமுஞ் சிறுபூளைவேருங்
கருவத்தி திப்பிலியும் பொன்னாங்காணி
செந்நாயுருவிவேர் சூகைநீருஞ் சிறுமுள்ளியின்
விரையு மேலமெள்ளு
மன்னாகுந் தேத்தின்விதை பொன்மத்தன் வித்து
மைந்தனே வகையொன்று வராகன்மூன்று
மின்னார் தன்பாலிலே யாட்டிவாங்கி
விரவியே யடுப்பேற்றி வடித்துக்கொள்ளே. 253

வடிக்குமுன்னே ஆவின்பால் படிதானாலு
மாட்டியே நிறுத்ததனை நீர் வாங்கிவைத்து
குடித்திடவே சீனியதிற் படிதானொன்று
கொள்கியே தேன்படியு முக்கால் சேர்த்து
முடித்திருக்கு நோய்க்கெல்லாங் கழஞ்சுமூன்று
மொண்டுண்ணக் கிரிச்சனங்கள் சுக்கிலமேகம்
கடித்திருக்குங் காலெரிவு தாகமுஷ்ணங்
காட்டத்தில் வீழ்தீப்போற் கரிந்து போமே. 254

கூழ்ப்பாண்ட கிருதம்

போகாத சயமுதலாய் மேகமெல்லம்
போவதற்கு பூசனிக்காய் நெய்யைக் கேளு
வாகான பூசனிக்காய்ச் சாறுபடி யெட்டு
மைந்தனே நீர்வள்ளிக் கிழங்கின் சாறு
பாங்காகப்படி யெட்டு கருப்பன்சாறு
படியான ரண்டுபால் பசுவினெய் கேள்
ஆகமுடன் படியான ரண்டுசேர் வொன்றா
யளந்துவிடு பாண்டத்தி லறையக்கேளே. 255

அறைகிறேன் நிலவங்க மேலமிந்து
அப்பனே வியாழ வரிசியசமதாகும்
நிறைகிறேன் சர்திக்காய் சீரகமுங்கேளு
நேரான சதகுப்பை சூகைநீறு
மறையாத முந்திரிகை பேரீச்சம்பழமும்
மகத்தான கோட்டமதி மதுரந்தானும்
நிறைப்பாகத் தூக்கியே பாலிலாட்டி
நெய்யிலிடுபேய் வாழைப் பழந்தான்பத்தே. 256

பழம்போட்டு வடித்துபின்னே கண்டுகொண்டு
பாய்க்கவா யதிலுழக்குப் பஞ்சதாரை

களங்கமின்றி பராபரரை நினைந்து கொண்டு
கழஞ்சிரண்டு விருநேர முண்டபோது
உளமாந்தை சுரமாந்தை நெஞ்சினோவு
உத்தமனே மேகத்திற் கிரிச்சனங்களாறு
முளம்போட்டு மூத்திரப் பாளைரத்த
முற்றிநின்ற ரத்தகாச மெல்லாம் போமே. 257

வெள்ளுள்ளிக் கிருதம்

போவதற்குக் குடல்வாதம் சூலைவாதம்
பொன்றிவிழ வெள்ளுள்ளி நெய்யைக் கேளு
போனதற்குத் துலாமொன்று வெள்ளுள்ளிப் பருப்பு
புகழாக விடித்ததளை பாண்டத்திட்டு
போவதற்குள் பதினாலு மரக்கால் தண்ணீர்
புகட்டிநீ முக்குறுணி யாகவாங்கி
போவதற்கு வகைவிபரம் படிதான் மூட்டி
பூட்டுதற்கு வறைகிறேன் புகழ்ந்துகேளே. 258
கேளப்பா பெருங்குறும்பை வில்வம் பாதிரி
கையுறப் பெருங்குமிழு மிவைநேராக
ஏளப்பா பலமறைதா னொவ்வொன்று கூட்ட
மிடித்துமே நாற்குறுணி சலத்திலிட்டு
நீளப்பா ரண்டுபடி நெடுநாளைக்காடி
நீர்விட்டு நேர்மாதுளம் பழச்சார்தானும்
தாளப்பா ரண்டுபடி திறமாய் சேர்த்து
சாரப்பா திரிகடுகு திரிபலையுங்காணே. 259

காணப்பா வோம மிந்து விருசீரகமும்
கடையில் வாழ் செவ்வியமுந் தேவதாரம்
பூணவே புளிகடலை கரணைமூலம்
பொருந்துநீ வகைக்கங்கை கழஞ்சுநாலு
தோணவே வெள்ளாட்டுப் பாலிலாட்டி
துகையாக ரண்டுபடி நெய்யுஞ் சேர்த்து
ஊணவே வடித்திறுத்துக் கழஞ்சிரண்டு
உண்டிடவுங் குடல்வாத மாறும்போச்சே 260

வல்லாரை நெய்

போச்சென்ற தோயாத வாதங் காசம்
புனைந்தெழும்பும் வட்டைமுதற் றாடசோமம்
மூச்சென்ற உதரசூலை யஸ்திவைப்பும்
படருகின்ற பாண்டு பீலிகையும் போக
வாச்சென்ற வல்லாரை நெய்யைச் சொல்ல
மைந்தனே யருந்திடவோ ராசைகேளு

நீச்சென்ற வல்லாரைப் பசுவின் பாலும்
நேரான சீதேவி செங்கழு நீர்ச்சாறே. 261

சாறுபடி முன்னான்கு விளநீர் தண்ணீர்
தானிரண்டு படிநெய்யை யைங்கால் கூட்டி
மீறாமற் குன்றிவேர் செங்கழுநீர் மூல
மேலான மதுரங் கோரோசினை தான் கூட்டம்
கூறான வத்தியிலை பச்சை கற்பூரம்
குறைபாமற் கழஞ்சொன்று பாலிலாட்டி
ஆறாமற் கொதிப்பிட்டு மூன்றுநாள்தான்
அப்பனே நாலாநாள் வடித்துக் கொள்ளே. 262

கொள்ளவே காசிடைதான் விஷங்கடரும்
கூறான நாபிநஞ்சு கழுதைநஞ்சு
விள்ளவே பாலியெட்டி நஞ்சுதீரும்
மேல்வற்றுக் கால்வற்றுக் காந்தல்நீரும்
துள்ளுமே யஸ்திசுர மெலும்புருக்கு
குன்மமும் வயிற்றெரிவு வாயிலெச்சில்
அள்ளவே குறைந்தாற் போலுடனே தீரு
மனேகசுக முண்டாகு மப்பாபாரே 263

புளியாரை நெய்

பாரப்பா புளியாரை நெய்யைச் சொல்வேன்
படரான கிராணிவகை யாறும்போக
நேரப்பா புளியாரைக் குறுணிச்சாறு
நெய்தானு மிரண்டுபடி யாகனாழி
பேரப்பா திரிகடுகு இந்து பெருங்காயம்
பேரான யெவாச்சாரம் சாதிக்காயும்
காரப்பா வெட்பாலை திப்பிலியுமூலம்
கிராம்புமா துளம்பூவு மஞ்சள்காணே. 264

பலாதி நெய்

காணவே யிலவங்க மிவைகளெல்லாம்
கழஞ்சி யங்கே வகைக்காறு தூக்கியாட்டி
ஊணவே காய்ச்சி நீ கொடுக்கும்போது
வுத்தமனே யாறுவகைக் கிராணிதீரும்
மாணவே பலாதி நெய்யைச் செப்பக்கேளு
வடிப்பட்டை பலாசம்பால் நாலெட்டாகும்
தோணவே கலந்தூக்கி யிடித்துமைந்தா
சொல்லுகிறே னிருகுறுணி நீரிலூட்டே. 265

தயிர் நெய்

ஊட்டியே படியொன்றாய்க் குறுக்கிவாங்கி
 யுறவுரைப்பா யிலைத்தண்டு கழஞ்சுதானும்
ஆட்டவே படிநெய்யை யதனிற்சேர்த்து
 வனலிலிட்டுப் பதமாக வடித்து நீயும்
மூட்டவே கிராணிகுன்மம் கழிச்சல் விக்கல்
 முறையெல்லாங் குறைதீறு மோசமில்லை
நாட்டவே தயிர்நெய்யை மைந்தா கேளு
 நலமான தயிர்குறுணி நெய் நாழிதானே 266

தானென்ற பெருங்காய மோமத்தோடும்
 சாற்றுவாய் திப்பிலியுங் கடுக்காய்கூட
மானென்ற வட்டதிருப்பி கருஞ்சீரகமு
 மைந்தனே புங்கம்வேர் வகைக்கோர் பத்து
தேனென்ற லோக கொம்பு முப்பதாகும்
 சேரவே கழஞ்சுநீர் தூக்கியாட்டி
நானென்ற வெண்குறுணி நீரிலிட்டுக்
 காய்ச்சியே நாலொன்றாய் நெய்யிற் சேரே 267

நெய்யிற்சேர் திப்பிலியின் மூலந்தானும்
 நேரான காட்டு திப்பிலியுங்கூட
உய்யவிரு சீரகமு மத்தித் திப்பிலி
 முற்பனஞ் சேர் வில்வக்காய் வட்டத்திருப்பி
அய்யமில்லா மரமஞ்சள் வெட்பாலையரிசி
 யதிமதுர மரத்தையிவை வராகனாறுசேர்த்து
கையோடே வடித்திறுத்து வருந்தும்போது
 கிராணிகுன்ம மதிசாரஞ் சூலைபோமே 268

சுக்கு நெய்

சூலை போஞ் சுக்கு நெய்யைச் சூட்டக்கேளு
 சுக்குநீ யிரண்டுபத்து பலமுந்தூக்கி
சீலமுறு மாயிலுட பட்டைதன்னை
 சேரடா சுக்குக்குச் சமனாயப்பா
சால்நீ யிடித்ததனை முக்குறுணிநீரிற்
 றாக்கியே நாள் ஒன்றாய்க் குறுக்கிவாங்கி
பாலுரையுந் தயிர்தண்ணீர் படிதான்ரண்டு
 பண்பான நெய்யதற்குள் ரண்டரை தானூற்றே 269

ஊற்றிடுவாய் பெருங்காயந் திரிகடுகு
செவ்விய வோமத் திப்பிலியுங் கொடிவேலி வேரும்
ஊற்றிடவே திப்பிலியின் மூலந்தானு
மோங்கிவள நெவச்சார மொவ்வொன்றைக் கேள்
ஊற்றிடவே கழஞ்சிரண்டு சேர்த்துக்காய்ச்சி
யொருநேர முக்கழஞ் சுண்டபோது
ஊற்றிருந்த வதிசாரம் பாண்டுசோகை
யோடிப்போ மண்டலந்தா னுண்ணச் சொல்லே 270

பொன் முசுட்டை நெய்

உண்ணையிலே முறுக்குவலி வயிற்றுநோய்வு
உடல் நோய்வு காந்தலிவை யுடனே நிற்கும்
உண்ணவே பொன்முசுட்டை சித்திரமூல
மோங்கிநின்ற மாதளம்வேர்த் தொலிகடானும்
உண்ணவே மாதளந்தோ டதிவிடையங் கோஷ்ட
முற்பனஞ்சேர்த் திப்பிலியு மூலங்காணே 271

மூலமுடன் சுக்கு திப்பிலியு மஞ்ச
ளூறுதேவதார மரமஞ்சள் தானும்
ஆலமுறும் வாலுழுவை யிலந்தைபட்டை
யப்பனே வெட்பாலை வசம்பரத்தை
ஏலமுடன் சிற்றேலங் கடுகுரோணி
யிலவங்கப் பட்டையுடன் பத்திரியுமோமம்
பாலிதற்கு ரண்டுபடி நெய்யுநாழி
பாய்ச்சிநீ வடித்திருத்துப் பாணிசேரே 272

பஞ்ச கௌவியக் கிருதம்

சேர்த்தங்கே பாலருக்குக் கிராணிமாந்தஞ்
செப்பரிய கணைமிரளி காமலை சோகை
பார்த்தங்கே மனமுரைத்துக் கொடுக்கத் தீரும்
பஞ்சகௌ வியநெய்யைப் பகரக்கேளு
வார்த்தங்கே பால்தயிர்நெய் கோமயமுநீரு
மைந்தனே பிழிந்துகொண்டு மார்க்கங்கேளு
ஊர்த்தப்பா வைந்துவகை நீருங்கேளு
ஒருசத்துப் படியாக வளந்துகொள்ளே 273

அளந்ததர்க்குக் கர்க்கவகை சொல்லக்கேளு
அதிமதுரஞ் சிறுதேக்கு கோட்டமிந்து
விளந்தணியும் வாய்விளங்கங் கொத்தமல்லி
லிழாவரிசி வாலுழுவை வெட்பாலையரிசி

வளந்தளநல் வசம்புள்ளி தேவதார
மகத்தான சதகுப்பை யரத்தை கெந்தம்
உளங்குகருஞ் சீரகமும் பூலாப்பட்டை
யுற்ற பூலா விருட்சமரப் பொடி நன்னாரி 271

நன்னாரி பொன்முசுட்டை நெல்லிவேரும்
நலமான சாரணைவேர் கீழ்க்காய் நெல்லி
பொன்னாகு மிலப்பனையுந் துத்திவேரும்
புகழ்ந்திடு குரோசணியும் பெருங்குரும்பை
மின்னாரு மதிவிடை யஞ் சாதிக்காய் காந்த
மிக்க பத்திரி கடுகு வில்வவேர் சாம்பல்
முன்னாய திரிபலையுங் கழஞ்சாய் தூக்கி
முக்கியமாய் அரைத்தந்த நெய்யிற் சேரே 275

அரைத்திட்ட மருந்தோடே மூன்றுநாள்தா
னடுப்பேற்றிக் கொதிப்பிட்டு நாலாநாள் தான்
விரைந்துநீ வடித்தே தான் தினந்தானெட்டு
விபரமுட னெற்குழியில் வைத்துப் பின்பு
வரைந்து தினங்காலையில் கழஞ்சி கொள்ள
வற்றாத பெரும்பாடு குன்மந்திரும்
கரைந்திழியும் பீனிசமும் பித்தப் பாண்டுங்
காமாலை பெருவயிறுந் தீருங்காணே 276

பவுத்திரத்திற்கு குக்கல் நெய்

காணவே சொல்லிலிந்தப் பிரயோகத்தைக்
கறைந்தபடி யறைந்திட்டேன் களங்கமின்றி
தோணவே பிணியுள்ளோ ருண்டாராகில்
துயர்தீருஞ் சுகமாகுந் தேகந்தானும்
கோதைக்குக் குல்நெய்தான் பஞ்சகோலங்
கூறுகிறேன் திப்பிலிதிப் பிலியின் மூலம்
பூணவே செவ்வியமுஞ் சித்திரமூலம்
பொன்முசுட்டை சீந்திலுடன் சுண்டை வேரே 277

வேரான வில்வவே ராடாதோடை
வேர்க்கொம்பு பேய்ப்புடலுங் கண்டங்காரி
ஆயுமுறு நிம்பத்தோல் கருவேர்ப்பட்டை
ஆயிலியத்தோல் புங்கந்தோல் கொன்றைத்தோலும்
சீரான முத்தக்கா சாடு தினனாப் பாளை
செங்கடுக்காய் கொத்தமல்லி தேவதாரம்
வாரமுறும் வசம்புமுட் காவெள்ளையின் வேராம்
வகையொன்று கழஞ்சங்கே யறுபதாமே 278

ஆமப்பா வகைவகையே நிறுத்துவாங்கி
　　ஆட்டியே தூளாக்கித் தூணிநீரில்
வேமப்பா யெட்டொன்றாய்க் குறுக்கிவாங்கி
　　விடுநெய்யு மொருபடியா மேல்மருந்தை
நாமப்பா சொல்லுகிறேன் சீனக்காரம்
　　நாகப்பூ திரிகடுகு தேவதாரம்
ஓமப்பா திரிபலையுஞ் சவாக்கார மேலம்
　　உசித்த சத்தி சாரநறுங் கோட்டநந் தானே 279

கோட்டமொடு வசம்பு யிலவங்கப்பத்திரி
　　கொடிவேலி வேர்ப்பட்டை திப்பிலியின்மூலம்
வாட்டமுறுங் கரிப்பானுங் கடுகுரோணி
　　மைந்தனே சாரணையுந் தேவதாரம்
மூட்டவே யதிவிடையம் பொன்முசுட்டைவேரும்
　　உத்தமனே வெண்கடுகு கடுக்காய்மாஞ்சில்
ஆட்டமிடும் பெருங்குரும்பை யத்திதிப்பிலி
　　யழகான பெருங்காய மோமம்பாரே 280

ஓமமோடு இந்துப்பு வளையலுப்பு
　　வுறக்காய்ச்ச லவணமொடு பொட்டிலுப்பு
ஆமமொடு கல்லுப்பு பெருமரத்தின் பட்டை
　　பட்டான வுவர்வேரும் வராகனொன்று
சோமமுறுஞ் சுத்திசெய்த குக்கிலப்பா
　　தூக்கடா வைந்துபலந் தூளாயாட்டி
ஏமமுறு மருந்தெல்லா மொன்றாய்ச் சேர்த்து
　　என் மகனே யாவின்பா லாட்டிடாயே 281

குக்கில்நெய்

ஆட்டியந்த நெய்தனிலே கலந்து கொண்டு
　　ஐந்துநாள் கொதிப்பிட்டு வாறாநாளில்
மூட்டியே வடித்திருத்துப் பக்கமொன்று
　　முன்போலே நெற்குழியில் வைத்தெடுத்து
ஊட்டுவாய் வராகனெடை வாரமாறு
　　உண்டிடவே பவுத்திரமும் பிளவைசூலை
நாட்டியதோ ரட்டகுன்மம் விப்புருதி வருத்தம்
　　நாவிற்புண் முலைக்குத்து நாசமாமே 282

நாசமப்பா பலபுண்ணும் யோனிச்சூலை
　　நலங்கெடுக்கும் பலவிரணங் கண்டமாலை
நேசமாய்த் தனிக்குக்கில் நெய்யைச் சொல்ல
　　நீ கேளு புலத்தியனே நினைவுகொண்டு

வாசமுறும் வேப்பந்தோல் கண்டங்காரி
மைந்தனே பேய்ப்புடலு மாடாதோடை
நேசமெனுஞ் சிந்தில்சிறு வழுதலையின் வேரும்
நிறையாகப் பத்துப் பலந்தானாட்டே 283

ஆட்டியே யெண்குறுணி நீரிற்சேர்த்து
அக்கினியில் மாட்டியதைக் குறுணியாக்கி
ஊட்டுவாய் நெய்யங்கே யறுகாலப்பா
வுறச்சேரு பொன்முசுட்டை வாய்விளங்கம்
திட்டியதோர் செவ்வியமுந் தேவதாரம்
திப்பிலியு மெவாச்சாரஞ் சத்தியட்சாரம்
சூட்டுவா யேலமஞ்சள் வீழிவேர்த்தோல்
சுகமான வெட்பாலை மிளகுதானே 284

மிளகோமங் கொடிவேலி கடுகுரோணி
மூசமா மஞ்சிட்டி யதிவிடைய மாஞ்சில்
இளநாகக் கடுக்காயும் வசம்புநல்ல
வியல்பான சீரகமு மிடைதான் கேளு
வளமாகக் காசெடைதா னிரண்டு தூக்கி
மைந்தனே குக்கிலப்பா பலமுமொன்று
களவாகத் தனித்தண்ணீர் விட்டு ஆட்டி
காய்ச்சடா வாறாநாள் வடித்துக்கொள்ளே 285

வடித்த தொரு நெய்யிலே வராகன்றூக்கி
வாறாக வுண்டிடவே மைந்தா கேளு
குடிக்கு முன்னே நசியமிடு வுடம்பிற்பூசு
கொடுங்கள் ராச பவுத்திரங்கள் வீக்கம்போகும்
கடித்திரு விற்புருதி கண்டமாலைக்
கிராணி முதற் கழல்வாதம் பேய்முசுட்டை
துடித்துவிழும் பீனிசமுஞ் சூளையீளை
சுகமாகும் ஆறாப்புண் வாந்திபோமே 286

புடோல் நெய்

வாந்திபோம் புடோல்நெய்யை மைந்தாகேளு
வாங்கடா சமூலமுந்தான் பேய்புடோலை
காந்திதரும் வேப்பந்தோ லாயில்பட்டை
கருவேம்பு நாவல்நன் னாரிவேரும்
சாந்தியா மத்தியா லாசியித்தி
தயவான திப்பிலி முகிழிலந்தைப்பட்டைவேம்பு
ஆத்தியாங் கரிப்பாலை வாழைமூல
மதிமதுர முத்தக்கா சன்பாய்க் கேளே 287

அன்பான தாமரையின் றண்டுமூலம்
அருளான சிவதை வேரனைத்தும் வாங்கி
இன்பரச வகை யொன்று பலந்தான்பத்து
இடித்துநீ பதின்குறுணி நீரிலிட்டு
முன்போலே நாலொன்றாய்க் குறுக்கி வாங்கி
மூட்டுவாய் நெய்யதற்கு ஏறுகாலப்பா
வன்பாக வாவின்பால் குறுணிவிட்டு
மைந்தனே மருந்து வகைமாட்டக்கேளே 288

மாட்டியே யதிமதுர மூமத்தூரான்
வாகான இந்துடனே வெள்ளிலோத்திரம்
காட்டவே திப்பிலியுந் தேவதாரங்
கிராம்பு மரமஞ்சள் வெருகுதாது
மூட்டவே யதினுடைய வளையந்தானு
முகிழிலந்தை நன்னாரி நந்திவேரும்
வாட்டவே திரிபலையுஞ் செங்கழுநீர்க் கிழங்கு
மஞ்சிட்டம் பெருங்கிழங்கு வரிசைகேளே 289

வரிசை பெறும் வெந்தயம் வேப்பலகு கூட
வகைக்கங்கே மும்மூன்று வராகன்றூக்கி
வரிசைபெறு குக்கிலப்பா மூன்று பத்து
வராகனடா பாலிலே மயக்கமாக்கி
வரிசைபெறக் கலக்கியே நாலுநாள் தீ
மந்தாக்கினி யாகவே வடித்துவாங்கி
வரிசைபெறக் கழஞ்சியுண்ணக் கொடுத்துப் பூசு
மயங்காமல் நசியம் நீ வார்த்திடாயே 290

வார்த்திடவும் புண்தீரும் வீக்கந்தீரும்
மகத்தான சிலேற்பனமும் பிளவை தீரும்
சீற்றமுறும் பவுத்திரமும் பருவந்தீரும்
சில்லரையாம் வீக்கமொடு கிரந்திதீரும்
ஊற்றமுடன் மண்டலந் தானுண்ட பேர்க்கு
வொழியாத விரணங்க ளொழிந்து போகும்
காய்த் திருந்த காயா சுவாசம் போகக்
கழறுகிறேன் றிசைமூல நெய்யைத்தானே 291

திசை மூலநெய்

திசைமூலம் பெருவாகை முன்னைவில்வந்
திறமான பாதிரியுங் கண்டங்காரி
பிசகாத பெருங்குமிழும் வழுதலையும் நெரிஞ்சி
பேரான வேரப்பா பலந்தானாறு

வசமாகுஞ் சிற்றாமல்லி பேராமல்லி
வகையொன்று பலமாறு பத்துங்கூட்டி
தசமறவுந் தூளாக்கிப் பாண்டத்திட்டு
தண்ணீரதற் கறுகுறுணி தளரவாரே 292

தளரவிட்ட சலமங்கே யெட்டொன்றாக்கித்
தனி நெய்யு மிரண்டுபடி தானே சேர்த்து
தளரவிடு திரிகடுகு திரிபலை யிந்துப்பு
தனியேலங் கோஷ்டம் விழாவரிசி தானும்
தளரவிடா வாலுழுவை சவைச்சலுப்பு
தானோ மஞ்சமனாக வராகன் கூட்டி
வளரவரை மூன்றுநாள் சிறுகக் காய்ச்சித்
தப்பாமல் நாலா நாள் வடித்துக்கொள்ளே 293

செந்நாயுருவி நெய்

நாலாநாள் வடித்ததிலே கழஞ்சுதூக்கி
நாளொன்றுக் கிருநேரம் நக்கச் சொல்லு
காலனில்லை காசம்போம் நெஞ்சு நோவும்
கிராணிபோம் நெஞ்சினுள்ளே கட்டுப்போக்கும்
ஆலமுறு மானந்த வயிரவனைச் சேர்த்து
அப்படியே மண்டலந்தான ருந்தினாக்கால்
வாலை சீவகனாகும் வச்சிர தேகம்
வசிகரஞ் சேர்நாயுருவி நெய்யைக்கேளே 294

நாயுருவிச் சிவந்ததாய்ச் சமூலம்வாங்கி
நறுக்கடா துலாமொன்று நிறுத்துநீயும்
நேயமுடன் தூளாக்கி யெண்குறுணி நீரில்
நிலைக்கவே யவித்துப் பின்னெட்டொன்றாக்கி
ஆயமுடனாவி நெய்தான றுகால்விட்டு
அதற்குவகை கொடிவேலி வேரின்பட்டை
மாயமறுங் கருஞ்சூரைவேர் வெட்டி முன்னை
மைந்தனே முகூட்டைவேர் சிவதைவேரே 295

சலமாருக்தங் கியாழம்

சிவதை திரிகடு கிந்து திரிபலை நேர்வாளஞ்
சேங்கொட்டைதான்றியு மரப்பட்டை தானும்
சிவதையெனு மாயிலுடன் புங்கம்பட்டை
திறமான கொல்லிமல்லி கூடவேதான்
சிவதையெனுங் கஸ்தூரிமஞ்சள் தானுஞ்
சிறுபிரண்டைக் கிழங்குடனே காட்டுச்சேனை

சிவதையெனு மரக்கிழங்கு இவைளெல்லாஞ்
    சேர[illegible] ரவகை யொன்று கழஞ்சு மூன்றே. 296

மூன்றாகத் தூக்கியே பாலிலாட்டி
    முலரவிடு ஆவின்பால் படியும் நாலு
மூன்றொன்று நான்குநாள் கொதிக்கவைத்து
    முறையோடே யைந்தாநாள் வடித்துவாங்கி
மூன்றாகுங் கழஞ்சு நெய்யைக் காலத்திலுண்ண
    மூல முகிழ்மூல ரத்தமூல மாறும்
மூன்றாகுந் தாதுவிலே பிறந்தமூல
    மூளைசெறியு மாறுவகை மூலம்போமே. 297

மூலமென்ற வுள்மூல மிரத்தமூலம்
    முழுங்கியே சலம்விழுகு மூட்சைக்கெல்லாம்
சாலவே குடிநீரைச் சாற்றக்கேளு
    சன்ன இலவங்கமொடு இலாமிச்சம்வேர்
சீலமுடனைங் கழஞ்சு இடித்துநீயுஞ்
    சிலமங்கே படியொன்று ஆழாக்காக்கி
காலமே கொண்டுவரத் தினந்தானஞ்சு
    காணாது முளைகரையுங்களிம்பு கேளே. 298

மூலமுளை கரையக்களிம்பு

களிம்பேது முகிழ்மஞ்சள் கள்ளிப்பாலால்
    கரையவே மயனம் போலாட்டி வாங்கி
களிம்பதனைப் பூசிடவுங் கரைந்து போகுங்
    கள்ளியிலை யெருக்கிலையு மாவிலிங்கிலையும்
களிம்பறவு மிடித்ததனைப் புகைபிடிக்கக்
    கரையுமடா தின்னமொரு கியாழஞ்சொல்வோம்
களிம்பன்றி வேர்க்கொம்பு வெட்பாலைப்பட்டை
    கடுக்காய்தான் மூன்றிட்டுக் கியாழம்வையே. 299

கியாழம்

வைத்த தொரு கியாழ முண்ணில் மூலம்போகும்
    மைந்தனே யின்னமுண்டு வரிசை சொல்வோம்
வைத்திடுவாய் கியாழம்நீ மதுரங்கெந்தம்
    மகத்தான நிலவேம்பு சிறுகாஞ்சோரி முல்லை
வைத்தங்கே யெட்டோன் றாய்க்குறுக்கியூட்ட
    வறள்மூல முள்மூலம் வாதைதீரும்
வைத்திடுவாய் வெட்பாலை யரிசிபட்டை
    மைந்தனே கெருடபச்சை சமபாகந்தூக்கே. 300

மூலக்கிராணிக்குத் துறுவாதிக்கிருதம்

சமபாக மாகநீ யெடுத்துக்கொண்டு
சாந்துபோல் பச்சரிசிக் கழுநீர்தண்ணில்
சமபாக மாட்டியே தேனில் சேர்த்துத்
தானுண்ணத் திருமடா யின்னங்கேளு
சமபாகஞ் சந்தனமுஞ் செங்கழுநீர்க் கிழங்குந்
தனியிலவம் பிசினுமிடை சரியாய்ச்சேர்த்து
சமபாகமேடத் தினாட்டுப்பாலில்
தாக்கவே கிராணிவகைச்சளங்கள் போமே. 301

சளஞ்செய்யும் வசூரிப்புண் ஆறாப்புண்ணுஞ்
சரீரத்தி லுண்டான சார்புக்கெல்லாம்
உளங்குளிரத் துறுவாதிக் கிருதங்கேளு
முறையேது வெள்ளறுகு நெய்யென்பார்கள்
பளந்திண்ணிப் பாலையிட பட்டைதானும்
பாங்காக நாலெட்டுப் பலமுந்தூக்கி
விளந்தணிக்கும் வெள்ளறுகுச் சாறாறு நாழி
விட்டிடுவாய் நெய்யதற் குளஞ்சுழக்கு தானே 302

நெய்விட்டுப் பட்டையைநீ யிடித்துத்தானும்
நீர்விடுவா யெண்ணாழி நேர்ப்பாய்க் காய்ச்சி
ஐயனே ரண்டுபடி யாக்கிக்கொண்டு
அப்பனே நெய்யுடனே யாற்றியங்கே
மெய்யிட்ட ஆவின்பால் படியு மொன்று
மேன் மதுரம் பாலை முகிழிலந்தை யிலாமெச்சு
வையிட்ட நன்னாரி கொம்பரக்கு மருவுறையுங்
குங்கிலிய மலர்க்காய் காணே. 303

மலர்க்காயு முந்திரிகைச் சோமடவி
மைந்தனே வெள்ளறுகு கொட்டிமூலம்
மலர்க்காயு முத்தக்காய் சல்லிமூலம்
வரிசைபெறு முளரியிட வளையந்தானும்
மலர்க்காயும் வகைக்கங்கே கழஞ்சுமூன்று
வரைந்தாட்டிப் புகட்டிநீ மூன்றுநாள்தான்
மலர்க்காவி நாலாநாள் வடித்து வைத்து
மனோன்மணியைச் சதாசிவனை வணக்கஞ்செய்யே. 304

வயித்திய முறை

வணங்கடா கணபதியைச் சித்தர்முத்தர்
மகத்தான ரிஷிதேவர் ஞானத்தோரை

பிணங்காமலடி பணிந்து கருவம்விட்டுப்
போற்றி நீ வயித்தியஞ் செய்யு நிமித்தம்
இணங்காத பேருட ணிணங்க வேண்டாம்
இனமறிந்து வுண்மை சொல்லு யில்லாவிட்டால்
உணங்காத சமாதியிலே நின்று கொண்டு
வொப்பாத வதிதியென வொடுங்கியாடே. 305

ஒடுங்காத நெய்ப்பாகம் கழஞ்சுரண்டு
உண்டுவரச் சூரியப்புண் ணாப்புண்ணும்
ஒடுங்காத வீக்கங்கள் ரத்தபித்த
முள்கிரந்தி புறக்கிரந்தி ஒடுக்கள்சூலை
ஒடுங்காத தீச்சுடு புண்வீக்கந் தூக்கம்
ஓடிப்போம் நெய்கொண்ட வுடனேயப்பா
ஒடுங்காத பேய்ச் சொறிக்குச் சீந்தினெய்யை
யுரைக்கிறேன் சீதப்பித்தமென்றும் பேரே. 306

பேய்ச் சொறிக்குச் சீந்தில்நெய்

பேரான சீந்திலுடன் வேப்பம்பட்டை
பேய்ப்புடலும் வகைக்கங்கே பலம்பத்தாக
சீராக விடித்ததனைக் குறுணிநீரில்
செலுத்தித் தீயிட்டு நாலொன்றாக்கி
வாராக நெய்த்தாளிக் குள்ளேமைந்தா
வாரடா நெய்படிதான் மருந்து சொல்வோம்
பேரான பேய்ப்புடலு மிலாமிச்சம்வேரும்
புகழ்மஞ்சள் மரமஞ்சள் அகில் கெந்தங்கேளே. 307

கெந்தமொடு கச்சோலந் தேவதாரங்
கிளர்கோட்டஞ் செஞ்சந்தங் கிளரேலத்துடனே
அந்தந்த வகைக்கப்பா கழஞ்சுரண்டு
ஆட்டியங்கே கொதிப்பித்துத் தினந்தான் மூன்று
பந்தமுட னாலாநாள் வடித்து வாங்கிப்
பாங்காக விருகழஞ்சு வுண்ணச் சொல்லு
வந்தசொறி சிரங்குப்புண் சட்டைவாங்கு
மாறாக் கருங்குட்டம் வாங்கிப்போமே. 308

மூக்கிலும் வாயிலும் விழுகிற இரத்த வெள்ளுடைப்புக்கு

வாங்குமடா நசியத்தா லனேகந்துன்ப
மருந்தைத்தான் சொல்லுகிறேன் மயக்கம் நீக்கி
பாங்கான வேப்பந்தோல் கடுகுரோணி
பருங்கோட்டை முந்திரிகை பேரீச்சம்பழமும்

பாங்காக முருக்கம்பூ நெல்லிப்பூவும்
பருத்தி திப்பிலி யரத்தை யனைத்துமைந்தா
ஈங்காமல் நசியமிடத் தீருங்கண்டா
யிரத்த வெள்ளு டைப்புக்கு மியம்பக்கேளே. 309

கேளப்பா சிற்றாமல்லி கீழ்க்காய்நெல்லி
கிளர்கண்டங் கத்திரிவேர் வேப்பம்பட்டை
நாளப்பா கோட்டமுடன் கடுகுரோணி
நலமுந்திரி பேரீந்து அத்திதிப்பிலி
தாளப்பா முருக்கம்பூ நெல்லிமுள்ளி
தயவான சிறுதேக்கு இலாமிச்சம்வேர்
ஆளப்பா அதிவிடைய மிவையோரொன்றும்
அப்பனே மும்மூன்று விராகன் தூக்கே. 310

பறங்கிப்புண் குட்டரோகம் சூலை இதற்குச் சடைச்சிநெய்

தூக்கிநன்றா யாட்டியே நாழிநெய்யில்
சுவறவே கலக்கி நன்றாய் வடித்துக்கொண்டு
தாக்குவாய் காசெடைதா னுண்ணச் சொல்லில்
சாதகத்தைக் கேள்மகனே சாற்றுறோம் நாம்
வீக்குமே வெள்ளுடைப்பு மூக்கு வாயில்
விழுகிறதோ ரத்தமெல்லாம் வீழொட்டாது
பாக்கியங்கள் செய்தவர்க்கே யிந்நூல்தான்
பண்பாகச் சிக்குமடா பற்றிப்பாரே. 311

பாரப்பா பறங்கிப்புண் குட்டஞ் சாத்தியம்
பரிவான விசம்படா தாமரைகட்கெல்லாம்
சாரப்பா சடைச்சி நெய்யைச் சாற்றுறோநாம்
சடைச்சியுறு பட்டையங்கே துலாமுமொன்று
சேரப்பா யெண்குறுணி சலத்துக்குள்ளே
எரித்திட்டு எட்டொன்றாய்க் குறுக்கிப்பின்பு
வாரப்பா யிருநாழி யாவின் நெய்யை.
மைந்தனே படிஒன்று நிம்பநெய்யே 312

நிம்ப நெய்யுங்கச் சந்திராய் சாறும்
நாழி நீ விட்டு அதிமதுரம் பேய்புடோலு
மின்பமுறும் பொற்கொன்றை மூலந்தானு
மியலான பேய்மிரட்டி வெட்பாலையரிசி
அன்புபெறு மதிவிடையம் பற்படாகம்
அத்தி திப்பிலி விழாவரிசி வேப்பம்பட்டை
உம்பர்புகழ் கொடிவேலி கடுகு ரோணி
யுற்றதோர் நிலவேம்பு பெருங் குறும்பை வேரே. 313

வேருடனே வகையொன்று விராகன்மூன்று
மீறாம லாட்டியந்த நெய்யிற்போடு
வாரமுடன் வடித்தாறி வைத்துக்கொண்டு
மாட்டரச கெந்தி மனோசிலை யிம்மூன்றும்
சீருடனே மும்மூன்று கழஞ்சி தூக்கி
சிதறாமற் சாமமொன்று தூளாயாட்டி
நேருடனே நெய்யிலிட்டு ஆறவைத்து
நினைவாக ஆளறிந்துநீ செய்வாயே. 314

ஆள்பிலமு நோய்பிலமு மறிந்துகொண்டு
அப்பனே முக்கழஞ்சு யிரு கழஞ்சு தானும்
நாள்பெற நீயுள்ளுக்கு மேலும்பூசி
நலமாக மூன்றுநாள ரைப்பைப் பூசி
கோள்படவே குளித்து வரச்சொன்னா யானால்
குற்றமறும் பறங்கியிட குதங்களத்து
வாள்படு புண்போல ரிக்குங் கிரந்தி சூலை
வாங்காத சிறுசொறி செம்புண்கள் போமே. 315

பறங்கிப் புண் சூலைப்புண் முடங்கல் இதற்கு நிம்பம்

புண்போகு மிவை யெல்லாம் பறங்கி ரோகம்
புகழ்ந்து செய்யும் வாகடந்தான் பொய் தானில்லை
புண்போகுஞ் சூலைபோ முடங்கல் தீரும்
பேர்மிருக சஞ்சீவி நெய்யைச் சொல்வோம்
புண்போகு நெடுநாளை வேப்பம்பட்டை
புரைதீர ஐயைந்து பலந்தான் றூக்கி
புண்போக நறுக்கிநீ பஞ்சி போலே
போட்டிடித்துப் பாண்டத்தில் பொருந்தவையே. 316

பொருந்தவைத்து நீர்படியு மிருபத்தெட்டு
புரட்டிநீ யஞ்சுதினம் ரவியிலாட்டு
வருத்தியதைப் பிசைந்துமே வடிகட்டி மைந்தா
மாட்டடா நாலொன்றாய் வற்றக்காச்சி
விருந்தாகு நெய்படி தானிரண்டு விட்டு
வேப்பெண்ணை படிரண்டு வெற்றிலைச்சார்
மருந்தாகும் வேளைச்சார் மணத்தக்காளி
மைந்தனே நொச்சிச்சா றுத்தாமணிச் சாறே. 317

மணிச்சாறு முடக்கொத்தான் குப்பைமேனி
வகையாறு சாறுபடி மூன்றே முக்கால்
கணிப்பான சிறுகுறிஞ்வி சிவனார் வேம்பு
காட்டுமல்லி பெருமருந்துளசி நொச்சி

தணிப்பில்லாத் தூதுவளை யழிஞ்வி வேளை
தயவான நாரத்தை செங்கத்தாரி
பணிப்பான முடக்கொத்தா னுத்தமதாளி
பண்பான மேனி செருப்படி தானாமே. 318

ஆமப்பா யிவை மூலங்கழஞ்சு மூன்று
ஆனபாலி லாட்டிநீ பின்னங்கேளு
ஓமப்பா வெண்காரஞ் சீனக்கார
முற்றயிரு சீரகமு மோமந்தானும்
வேமப்பா சதகுப்பை குடசப்பாலை
வெள்ளுள்ளி யுடன்பூலா விருட்சந்தானும்
நாமப்பா குங்கிலியங் காசுக்கட்டி
நலமான சண்பகப்பூ நாட்டக்கேளே. 319

நாட்டடா கழஞ்சியொன்று வகையொன்றப்பா
நல்லபழச் சாற்றினா லாட்டிவாங்கி
ஊட்டடா களிப்பாக்கு பத்துச்சேர்த்து
வுறப்புரட்டு நெய்யிலே கலரச் சேர்த்து
மூட்டடா வடித்திறக்கி வைத்துக்கொண்டு
முன்போலச் சூதம்ரண்டு கெந்திகொண்டு
தீட்டடா குக்கிலஞ்சு கெவுரிகால்தான்
திறமான துரிசியரைக் கழஞ்சுகூட்டே. 320

கூட்டியே பழச்சாற்றா லாட்டி வாங்கிக்
கொடுநெய்யிற் புகட்டிமைந்தா வைத்துக்கொண்டு
ஊட்டுவாய் நாள்மூன்று சென்றபின்பு
வுண்டுவா முன்போல யுண்மைகேளு
வாட்டியதோர் மூன்றுவகை சூலைப்புண்கள்
மாறாத களர்வாதஞ் சூலைபோகும்
நாட்டில் வளர்பதினெட்டுப் பறங்கிதீரும்
நலமாகப் பத்தியமாய்க் கொள்ளச் சொல்லே. 321

புண்ணுக்குக் களிம்பு

சொல்லுகிறேன் புண்களுக்குக் களிம்புதன்னை
சூதமடா வராகன்ரண்டு லிங்கம்நாலு
வெல்லுகிறேன் கெந்தி நாலரையதாகும்
வீறாக இவை மூன்று சரக்குமாட்டி
கொல்கிறதோர் ஆவினிட வெண்ணைவாங்கி
குறையுமட்டுந் தினந்தோறு மாட்டிவாங்கி
செல்லுமடா திசைக்கெல்லா மிக்களிம்பு
தீராதபுண் எல்லாந் தீரும்பாரே. 322

திரிகடுகுபலாதிநெய்

தீருமடா குரைநோயுங் குட்டம்புண்ணுந்
திறமாக உடம்பெல்லாங் களிம்புபூசி
வாரமுட னந்திக்குளிகை கொள்ளு
மைந்தனே புண்ணாறுமட்டுஞ் செய்வாய்
நேரமுடன் வீரனத்தில் பூசிநீயும்
நெருப்பிலே கசிவெடுக்க வாட்டச்சொல்லு
பாரமுடன் திரிபலாதி நெய்யைமைந்தா
பாடுகிறேன் திரிகடுகு திரிபலையோ டாறே. 323

ஆறுடனே கொடிவேலி வேரின்பட்டை
ஆறிய சிவதை நிலவாமணக்கன் வேறு
வீறுடைய மரமஞ்சள் பொற்கொன்றைக்காயும்
வெற்றிபுரி அதிவிடையங் கடுகுரோணி
வாறுகேள் மஞ்சள் மரமஞ்சள் பின்னும்
வட்டத்திருப்பி மலைதாங்கி வகைக்கு மைந்தா
மீறாமல் விராகன் மூன்றரை யாத்தூக்கி
விரைந்தாட்டி நாழிநெய்யிற் கலக்கிக் காய்ச்சே. 324

தூதுவளை நெய்

காய்ச்சு முன்னே கள்ளிப்பால் உழக்குவிட்டுக்
கருத்தாக வடித்துநீ மடிக்கச்சொல்லு
வீச்சான குன்மமுதல் குட்டந் தீரும்
வெண்குட்டம் பாண்டு விஷக்கடியுந் தீரும்
வாச்சிருந்த சூலைபோம்உன் மத்தம்போகும்
மைந்தனே தூதுவளை நெய்யைச் சொல்வோம்
மாச்சலறு தூதுவளை வேப்பம்பட்டை
மகத்தான சீந்தியிலைக் கொடியுங் கூட்டே. 325

கூட்டடா போய்ச் சுண்டைப்பழமும் நீதான்
கொடுங் கண்டங்கத்திரியின் வேருந் தோலும்
நாட்டடா வகைக்கங்கே கழஞ்சு நாலு
நலமாக வாட்டியே நாழி நெய்யில்
ஊட்டடா வடித்திறுத்து வைத்துக்கொண்டு
ஒரு போதைக் கிருகழஞ்சு வுண்ணச்சொல்லு
பூட்டடா வியாதி யெல்லாம் நடுங்கிப்போகும்
புகலுவோங் கலியாண கிருதம்பாரே. 326

கலியாணக் கிருதம்

பாரப்பா மேகங்கள் இரண்டு பத்தும்
படும்அவத்தை விப்புருதி பாண்டுபாகம்
தீரப்பா கலியாணங் கிருதங் கொண்டு
செப்புகிறேன் மருந்துவகை திறமாய்க் கேளு
நேரப்பா நிலப்பனைவேர் தண்ணீர்மிட்டான்
நெருஞ்சியொடு கொடிவேலி நன்னாரிவேரும்
சேரப்பா வழுதலைவேர் சிற்றாமல்லி
தும்மட்டி சித்தாமட்டி சாரணை வேர்த்திராயே. 327

திராயொடு வமுக்குறா பாதிரிவேர் வில்வஞ்
செப்பரிய முத்தக்காசு தாமரையின் றண்டு
திராயிவைகள் வகைக்கங்கே பலத்தைக் கேளு
சேரடா மூன்றரைதான் தறித்திடித்து
துராய் தூணி நீரிலிட்டுக் குறுணியாக்கிச்
சொல்லுகிறே னிச்சாற்றைத் துடர்ச்சிவிட்டு
நிராய் கரும்பு வெள்ளரிக்காய் பொன்னாங்காணி
நெல்லிக்காய் பூசனிக்காய் முள்ளிலவந்தோலே. 328

இலவந்தோ விலுப்பையிலைச் சாறெல்லா
மென்மகனே வகையொன்று படியுமொன்று
நலமான ஆவின்பால் படிதானாலு
நறுநெய்யும் படிரண்டு கற்கங்கேளு
பிலமான தோடைவேர் சித்தாமல்லி
பேரான நன்னாரி அமுக்குறாவேர்
மலமாற்றுஞ் சாரணைவேர் நெய்தல் மூலம்
அலர்ந்த தாமரை வளைய முந்திரிகைப் பழமே. 329

முந்திரிகை பேரீந்து கடுகுரோணி
முதுவுறையும் வெட்டிவேர் மதுரங்கோட்டம்
மந்தமுறு மிலுப்பைப்பூ மலர்க்காய் கந்தம்
மாகாளிக் கிழங்குடனே தேவதாரம்
மந்தாரமஞ் சடாமாஞ்சில் வெட்பாலையரிசி
மஞ்சிட்டி யதிவிடைய மஞ்சள்தானும்
பந்தமுறுங் கார்கோல ரிருசீரகமும்
பண்பான செவ்வியமும் பரிந்துதூக்கே. 330

பரிந்தெடுத்து வகையொன்று கழஞ்சி யொன்று
பண்பாக வாட்டியே நெய்யிலிட்டு
எரிந்துநீ வடித்திறக்கி விராகனொன்று
இயலாக வுண்டிடவே யிடுக்கமில்லை

கரிந்ததொரு மேகங்கள் இரண்டுபத்துங்
காட்டுமுன்னே கரியுண்ட கனிபோலாகும்
விரிந்த பிரமேகங் களிரண்டு பத்தும்
விப்புருதி விஷபாகம் பாண்டு போமே. 331

கலியாணக் குழம்பு சகலவியாதிக்கும்

பாண்டு போங் கலியாண மயனஞ் சொல்லப்
பார்மகனே யிம்மாவி னின்மையாகும்
வேண்டியதோர் நெல்லிக்காய் தனிநீராக
விரநன்றாயிடித் திருத்துப் படியும் நாலு
தாண்டுபுகழ் வெள்ளைவெல்லம் பலத்தைக்கேளு
தயவாக காற்றுலாம் நிறுத்துச் சேர்த்துத்
தூண்டு காரெண்ணெ யுழக்கு சேர்த்து
சிறுகவதைக் குழம்பு போல் கண்டக் காய்ச்சே. 332

காச்சி வைத்த குழம்பதற்கு மருந்து சூட்டக்
காண்மகனே திரிபலையும் வெட்பாலையரிசி
வாச்சுபுகழ் திப்பிலியுங் கொடிவேலி வேராம்
மகத்தான வோமமொடு கடுகுரோணி
வீச்சுயர்ந்த கொத்தமல்லி காட்டுத்திப்பிலி
விழாவரிசி மிளகு சீரக மஞ்சிட்டி
பாச்சடா வகையொன்று பலந்தானொன்று
பண்டான திரிகோபம் பலந்தானெட்டே.. 333

எட்டுடனே முன்மருந்தை சேர்த்துக் கொண்டு
இடித்துநீ தூளாக்கி வடியுங்கட்டி
விட்டிடுவா யுழக்கெண்ணெய் பாகிலப்பா
விரவியது ரண்டுகொதிப் பிட்டபின்பு
கட்டுடனே சூரணத்தைத் தூவித்தூவிக்
காய்ச்சடா மயனம்போற் கிளறிவாங்கி
மட்டுடைய பழங்கலத் திட்டுவைத்து
மைந்தனே கழஞ்சுண்ண வாறுகேளே. 334

வாறுகேள் பிரமேகங் காமாலைபாண்டு
வளர்குட்ட மறுமூலங் கிறிச்சனமுங் குன்மம்
வீறாக விழுந்து முறிந் தெலும்பு மூறும்
விட்ட சந்து காலுறுப்பு மேவிப் போகும்
தேறாத அரிகுரலு மிடறு கொன்றை
தெளிந்து சுயம்பாடுவான் சித்திபுத்தி
கூறாக வுண்டாகும் வெகுபிலமு மெய்துங்
குறையின்றித் திரைபோகும் நரையும் போமே. 335

நாட்பட்ட சுரத்துக்கு முந்திரிகைநெய்

பேரப்பா நாட்பட்ட சுரத்துக்கெல்லாம்
புகழான முந்திரிகை நெய்யையுண்ணில்
ஆமப்பா முந்திரிகை வெட்பாலையரிசி
அத்திதிப்பிலி கெந்தம் அதிவிடையம் நெல்லி
வேமப்பா நிலவேம்பு விலாமிச்சம் வேரும்
வில்வவேர் வகைக்கங்கே கழஞ்சுதூக்கி
தாமப்பா தனிநீரா லாட்டி வாங்கித்
தாக்கடா ஆவினெய்யிற் படிதா னொன்றே. 336

படிவிட்ட நெய்க்குள்ளே தண்ணீர்நாழி
பாய்ச்சிநீ மந்தாக்கினி யில்வைத்துநீயும்
அடிவிட்ட நீர்வற்று பதத்தைநோக்கி
யப்பனே வடித்திறுத்துக் கழஞ்சு மூன்று
குடிகொண்ட சுரம்போகுங் காந்தல் போகுங்
சூரான வயிறெரிவு மிருமல்போகு
முடியற்ற கெண்டை போஞ் சொரியும்போகு
முதுசொல்லாந் திரிகோப விபரங்கேளே. 337

விபரங்கேள் சந்தனமுஞ் சிவதைதானும்
வெள்ளைக் குங்குலியமிவை திரிகோபமாச்சு
விபரமாய்த் தெரியாத மருந்தையெல்லாம்
மேன்மக்கள் சொலக்கேட்டு விளம்பிக் கொள்வாய்
விபரமறியாதவர்க ளாகாச கெருடன்
வீறான பழுபாகல் கொல்லன் கோவையென்பார்
விபரமாய்த் திப்பிலிநெய் யதனைக்கேளு
விடாதசுரம் போவதற்கு விள்ளுறேனே. 338

திப்பிலி நெய்

விள்ளுறேன் திப்பிலியுங் கடுகுரோணி
வெட்பாலை யரிசியுடன் கீழ்க்காய்நெல்லி
கள்ளமறும் வில்வவேர் வேப்பம்பட்டை
கடுதான்றிக் கெந்தமடா தோடை தானும்
தெள்ளுபுக ழிலாமிச்சமுந் திரிகைபழமுஞ்
சிறியதொரு சண்பகமு மதிவிடையந் தானும்
துள்ளுநீ வகைக்கங்கே காசு தூக்கிச்
சுகமாகத் தண்ணீரிலாட்டி வாங்கே. 339

வாங்கினதோர் மருந்துக்குத் தண்ணீர்நாழி
வாக்காக நறுநெய் தானாழி வார்த்து

பாங்காக மந்தாக்கினியை மூட்டிப்
　　பதமாக வடித்திறுத்துக் கழஞ்சி ரண்டு
தேங்காத தேன்குத்தி நெய்யுஞ் சேர்த்து
　　தின்றிடவே சுரம்போகும் விக்கல் போகும்
தாங்காத வுழலைபோம் அரோசிகம் போந்
　　தலை நோயும் பிரமேகந் தணியுந்தானே. 340

சன்னி சுரத்திற்குச் சீதேவி நெய்

தணிந்திடவே சன்னி முதல் சுரத்துக் கெல்லாஞ்
　　சாற்றுகிறேன் சீதேவி செங்கழுநீர் நெய்யை
துணிந்தெடுப்பாய் நீதேவி சாறுபடி நாலு
　　சொல்லுகிறேன் மஞ்சிட்டி தாமரையின் பத்திரி
கணிந்தேல மிலவங்கம் கடுகுரோணி
　　கனத்த கோட்டம் நன்னாரி மதுரங் கெந்தம்
மணிந்த சரக் கோரொன்று விராகன் தூக்கி
　　மைந்தனே யாட்டி யதை வடித்துக் கொள்ளே. 341

வடித்ததொரு நெய்யதனைக் கழஞ்சியுண்டு
　　மைந்தனே மேலுமந்த நெய்யைப் பூசில்
கடித்த சுரமெண்பத்து நாலுதீருங்
　　கண்குளிரும் புண்தீருங் கலருஞ்சித்தி
படித்தினியா மின்னமொரு நெய்யை சொல்வோம்
　　பண்பாகச் செங்கழுநீர் சாறெண்ணாழி
விடித்தேல மிலவங்க மதிமதுரங் கோட்ட
　　மிக்கசிட்டி சண்பகப்பூ கடுகுரோகணியே. 342

ரோகிணியுஞ் சந்தனமும் வெட்டிவேரும்
　　நுணுக்கமுறு நன்னாரி நீர்வள்ளிக் கிழங்கும்
நாகமுறு மிலாமிச்சஞ் செங்கழுநீர்க் கிழங்கும்
　　நரிமிரட்டி முத்தக்காசு வகைக்கோர் காசு
நேகமுடன் தூக்கியதை யாட்டி வாங்கி
　　ரேகிப்பாய் மூன்றுபடி நெய்யிற் குள்ளே
ராகமுறக் காய்ச்சி நீவடித்துக் கொள்ளு
　　நலமாகச் சுரங்கள் முதல் சன்னிபோமே. 343

காடா சுவாசத்துக்கு ஆடாதோடை நெய்

போமப்பா களங்க மெல்லாம் போவதற்குப்
　　பூட்டுகிறே னாடாதோடை நெய்யைத் தானே
வேமப்பா கண்டவுட னோய்க ளெல்லாம்
　　வெட்டியறுந் தோடைக் காற்படிதான் ரண்டு

நாமப்பா பசுவின் பால் படிதான் ரண்டு
நறுநெய் தான் படியிரண்டு அத்தி திப்பிலி
ஆரப்பா திப்பிலியுங் கொடுவேலி வேரும்
அடைவாக யிந்து சுக்கு யெவச்சாரங் காணே. 344

எவாச்சாரஞ் சத்தியிட சாரந்தானு
மிவையெல்லா மோரொன்று கழஞ்சி யொன்று
அவாச்சார மின்றி நீயுடனே யாட்டி
அப்பனே பத்த தனிலே வடித்து வாங்கி
முவச்சார முற்றிரண்டு தேச கால
மொவ்வொரு கழஞ்சியா யுண்ணச் சொல்லு
மெவச்சார மந்திக்குக் கழஞ்சுபாதி
என்மகனே யுண்மைதனை இயம்புறேனே. 345

இயம்பவே நெஞ்சுவலி குறுகுறுப்பு
யீளைவலி கிறுகிறுப்பு காயா சுவாசம்
இயம்பவே யெரிகுரலும் பித்தப் பாண்டு
யெழு மூல முள்மூல மகவை வெப்பு
இயம்பவே பழஞ்சுரமும் வெப்புப் பார்வை
யியல்பான வசிரண்டு மக்கினி மாந்தம்
இயம்பவே பறந்து விடும் விபரங்கேளு
இவைகளெல் லாம்நறுக்கி யியல்புகூட்டே. 346

நாட்பட்ட சுரத்துக்கு முலைப்பால் நெய்க் கிருதம்

கூட்டடா வேர்க்கொம்பு கியாழம்வைத்துக்
கொடுத்திடவே நோய்களெல்லாஞ் சித்தியாகும்
நீட்டடா முலைப்பால் நெய் சஞ்சீவியப்பா
நெறியாக முலைப்பால்தான் படியும்ரண்டு
நாட்டடா கொடுப்பைவேர் வெள்ளரியின் விரையும்
நல்லதொரு பூசனிக்காய் விரையுஞ்சேர
மூட்டடா நெல்லிமுள்ளி மதுரமப்பா
முறையாக விருகழஞ்சு வுலர வாட்டே. 347

ஆட்டியதோர் மருந்துக்குள் நெய்யும் நாழி
அடைவாக விட்டுநீ வடித்து மைந்தா
ஊட்டுவாய் கழஞ்சி ரண்டு மேலும் பூச
வுடல் வெக்கை சுரவெக்கை யுடம்பு லர்த்தல்
வாட்டிவரு மெலும்புருக்கி கணைகள் காச
வரட்சி யொடு பிரமேகம் வெட்டை யோடு
காட்டியே மறைத்தா போல் காணாதோடுங்
கருத்தாக யின்னமொரு நெய்யைக் கேளே. 348

ஆடாதோடைக் கிருதம்

கேட்டிடவே நாட்பட்ட சுரத்துக் கெல்லாம்
கிருதமடா தோடைவேர் கீழ்க்காய் நெல்லி
வேட்டிடவுங் காட்டுமல்லி வேளைகுப்பை
வேலிப்பருத்தி யொடு குப்பைமேனி
நாட்டில்வளர் வழுதலைவேர் நத்தைச்சூரி
நலமான மருட்கிழங்கு அப்பை மூலம்
ஊட்டுவாய் வசம்புள்ளிக் கஸ்தூரி மஞ்சள்
உற்பனஞ் சேர் நல்ல பாம்பு கண்டந்தானே. 349

கண்டமொடு விராகனங்கே மூன்று தூக்கி
கல்ராட்டி நாழிநெய்யிற் கலந்து கொண்டு
கண்டமெனும் நல்லெண்ணெய் ரண்டெண்ணெய்
கலந்திடுவாய் வகைரண்டு படிதானொன்று
கண்டிதமா யிவையெல்லாங் காயும்போது
கருங் குங்கிலியம் ரண்டுகாசு தூக்கி
கண்டிடமாய் நிம்பபழச்சார் ஊற்றக்கேளு
கனிந்த பழமஞ்சங்கே பிழிந்து ஆட்டே. 350

வெள்வேல் நெய்

ஊட்டியே வடித்தப்பா வைத்துக் கொண்டு
வுள்ளுக்குக் காசெடை தானுண்ணச் சொல்லு
நாட்டியே மேலுக்குந் துவாலை போடு
நாட்பட்ட சுரந்தணியு மின்ன மொன்று
வீட்டியே வேல் நெய்யைச் சாற்றக் கேளு
வெள்வேலம் வேருடனே களர்ச்சி வேரும்
நீட்டியதோர் பூளைவேர் நாயுருவி வேரும்
நேரான விஷ்ணு கிரந்தி வேரே. 351

சந்தனாதி நெய்

வேருடனே வசம்புள்ளி சமனாய்க்கேளு
மீறாமற் கழஞ்சி யைந்து ஆட்டிவாங்கி
ஆரவே நாழி நெய்யிற் கலந்து கொண்டு
அப்பனே கடித்திறுத்துக் கழஞ்சு கொள்ள
வீரமுள்ள பழஞ்சுரங்க ளனைத்துந் தீரும்
வெற்றியுள்ள நெய்யாச்சு தயிலங்கேளு
தாருறைந்து நவ்வொழுகுஞ் சந்தனாதி
தனிநெய்யைச் செப்புகிறேன் சார்ந்து கேளே. 352

சார்ந்துகேள் சந்தனமும் வெள்ளிலோத்திரந்
தனிமதுர முந்திரிகை முக்கழஞ்சு

சாந்துபோ லிவையெல்லாம் பாலிலாட்டி
தண்ணீர்தான் படியொன்றில் கலக்கிக்கொண்டு
சார்ந்து நின்று நெய்தானா ழியூற்றி
தயவாக வடித்திருத்து தலையிற் றேய்த்து
சாந்தமா யரப்பிட்டு முழுகச் சொல்லு
தாபசுரம் பூதசுரந் தணியும் பாரே. 353

சந்தனாதித் தயிலம்

பாரப்பா இன்மொரு சந்தனாதி
பகருகிறேன் அமுக்குறா வேர் பொடியும்நாழி
சேரப்பா சித்தாமுட்டிப் பொடியும் நாழி
சிறப்பான கொம்பரக்குப் பொடியும் நாழி
நேரப்பா யிம்மூன்றும் பதக்குநீரில்
நீயிட்டு நாலொன்றாய்க் குறுக்கிவாங்கி
ஆரப்பா நல்லெண்ணெய் நாழிவிட்டு
அப்பனே குழம்புமோர் நாழியூற்றே. 354

மோர்விட்டு நன்னாரி யரத்தை கோட்ட
முகிழ் மதுரஞ் சதகுப்பை கடுகுரோணி
வாரிட்ட கச்சோலந் தேவதாரம்
மஞ்சளொடு மரமஞ்சள் கஸ்தூரி மஞ்சள்
மாரிட்ட பெருங்குரும்பை யமுக்குறாவேர்
மஞ்சிட்டி கெந்தமொடு நாகப்பூவும்
நேரிட்ட வகையொன்று விராகனொன்று
நிறுத்திநீ யாட்டியதைக் கலக்கிக் காய்ச்சே. 355

ஆடாதோடை தயிலம் மதுக்காளித் தயிலம்

காச்சப்பா மூன்றுநாள் கொதிக்கச் செய்து
களரவே நாலாநாள் வடித்து மைந்தா
தேச்சப்பா வுடம்பெல்லாம் நசியம்பண்ணு
தீராத சுரந்தணியு முடம்புந் தேறும்
பாச்சப்பா தோடை வேரெண்ணை தன்னைப்
பாடுகிறேன் மதுக்காளித் தயிலமென்பார்
விச்சப்பா யதிமதுரம் வேப்பம் பட்டை
வியிலித்தோல் வேம்பினிட வித்துவாங்கே. 356

வாங்கடா திராய் வேரூமத்தம் வேரு
மகத்தான குன்றிவேர் மேனிவேரும்
பாங்காகு மிந்துப்பு மிவைக ளெல்லாம்
பரிவுடனே விராகனொன்று தூக்கிக்கொண்டு

ஆங்கடா தோடையிலைச் சாறுவிட்டு
ஆட்டிநீ யச்சாறு நாழிவிட்டு
தேங்காத நல்லெண்ணெய் நாழிவிட்டு
தீயிட்டுப் பதமாக வடித்துக் கொள்ளே. 357

சீத சுரத்திற்கு மோரெண்ணெய்

வடித்திருத்த தயிலத்தை மேலுமிட்டு
மைந்தனே யுள்ளுக்குக் கொள்ளச் சொல்லு
பிடித்ததொரு சன்னிபோஞ் சுரமும் போகும்
பேர்பெரிய மோரெண்ணெய் சீதம் போகும்
தடித்தமோர் நாலுபடி யெண்ணெய் நாழி
சார்பான சித்தாட்டி வேர்த் தோலுங்கூட
படித்தகோட்டம் வேர்க்கொம்பு பொன்மெழுகு தானும்
பாங்கான முசுட்டைவேர் மதுர மிந்தே. 358

இந்துப்பு மஞ்சளொடு தேவதார
மியலான நன்னாரி மாகாளி மூலம்
சிந்துபுகழ் பெருங்குறும்பை தக்கோலப் புட்டில்
சீந்தி வேரிலாமிச்சஞ் சிறுகீரை வேரும்
சந்தமுறுந் தகரமொடு கச்சோல மேலஞ்
சாதிககா யிலவங்கப் பத்திரி தானும்
பந்தமுறுஞ் சாரணைவேர் திப்பிலியின் மூலம்
பாங்காக வகைக்கங்கே காசு தூக்கே. 359

சீதேவித் தயிலம்

காசினிட தானிறுத்தங்கே மோரிலாட்டிக்
கலக்கிநீ காய்ச்சியே வடித்து மைந்தா
நேசமுடன் கழுத்துக் கீழ் தேய்த்துப் போடு
நிமிஷத்தில் குளிர்காய்ச்சல் பித்தரூட்சை
பாசமுறு மந்தசுரஞ் சீதரூட்சை
பலசுரமும் விஷசுரமும் பறக்குங் கண்டாய்
தேசமறுஞ் சீதேவித் தயிலங் கேளு
தீராத சுரமெல்லாந் தீருங்காணே. 360

காணப்பா சீதேவிச் சாறுநாழி
கலரவார் சீந்திச் சாறதுவும் நாழி
ஊணப்பா யெண்ணெ யுரிநெய் யவ்வண்ண
முத்த வதிமதுர மொடு தேவதாரம்

பூணப்பா நாகப்பூ கோட்டங் கெந்தம்
புகழ்பெறவே மஞ்சிட்டி சதகுப்பை தானும்
மூணப்பா வெட்டிவேர் குருக்கத்திப் பூவு
முயர்மாஞ்சில் அகிற்கட்டை கொம்பரக்கே. 361

அரக்குடனே விலாமிச்சம் தாமரையின் வளையம்
அதினரும்பு செஞ்சந்த மேலந்தானும்
இரக்கமுறு நன்னாரி கச்சோலக் கிழங்கு
ஏலமொடு லவங்கப் பட்டை பத்திரியும்
கரக்கமல நெய்தல்வேர் கடுகுரோகணி
கான சித்தாமட்டி வேர் பெருங்குப்பை
திரக்கவே யரத்தையுடன் திப்பிலிதானுஞ்
சேரவே வகைக் கொவ்வோர் காசுதூக்கே. 362

செங்கழு நீரெண்ணை

தூக்கியே பால்விட்டு ஆட்டி வாங்கி
சூட்டிபெரி மந்தாக்கினியை மூட்டி
தாக்கியே வடித்திறுத்து வுடம்பிற் போடு
சகலசுர மேலெரிப்பு தாகம் போகும்
தேக்கியே யின்னமொரு மார்க்கங்கேளு
சீதேவி செங்கழுநீர் சாறுநாழி
நீக்கமில்லா நெய்யுடனே யெண்ணைநாழி
நீசேரு மேல்மருந்தை நிரைக்கிறேனே. 363

நிரைப்பான வெட்டிவேர் கடுகுரோணி
நேர்கெந்தி யதிமதுர னிரைதானொன்றாய்
அரையப்பா மும்மூன்று கழஞ்சு தூக்கி
யப்பனே கலக்கியே வடித்து நீயும்
கரையவே யுள்ளுக்கு மேலுமூட்டு
கடுஞ்சார விஷசுரமும் காணாதோடும்
புரையுடைய நெடுஞ்சுரமும் வெட்டை போகும்
பூட்டுகிறே னின்னமொரு மோரெண்ணெய் கேளே. 364

மோரெண்ணெய்

இன்னமொரு மோரெண்ணைய் மோர்படிதானாலு
இயலான பழங்கர்டி படி தானொன்று
பின்னமில்லா நல்லெண்ணை படி தானொன்று
பேர்பெரிய சித்தாமட்டி வேர் பலந்தானாலு
சன்னமா யிடித்ததற்குள் நாலுபடி சலத்தை
தாக்கடா நாலொன்றாய் தனித்திறுத்து

சொன்னபடி ஒன்றாய்க் கலக்கி கற்பஞ்
சூட்டுகிறேன் வகையாகச் சூட்டுறேனே. 365

சூட்டுறேன் குறுந்தொட்டி வேர்த்தோலி
நன்னாரி சுருக்குடைய முகட்டைவேர் முத்தக்காசு
தீட்டியதோர் சீந்தில் சாரணை விலாமிச்சு
சிறுகீரை வேருடன் யமுக்கறாவேர்
மூட்டியதோர் கோட்டமொடு இந்து வதிமர
மோங்குபுகழ் வேர்க்கொம்பு செவ்வள்ளிக்கொடியும்
நாட்டியதோர் பொன்மெழுகு கச்சோலமேலம்
நல்லமஞ்ச ளிலவம்பத்திரியும் நாட்டே. 366

பத்திரியும் சாதிக்காய் சிற்றரத்தை கிராம்பு
பழந்தேவ தாரமொடு திப்பிலியின் மூலம்
முத்திரியுங் கடல்நுரையும் வகைக்கு மொருகழஞ்சு
முறையோடே மோர்விட்டு ஆட்டிவாங்கி
இத்தனையுந் தாளியிலே கலக்கியப்பா
யியல்பாக மூன்றுநாள் கொதியுமிட்டு
வத்தியது பதம் பார்த்து வடித்து வாங்கி
வளமாக கழுத்தின் கீழ் தேய்த்தாறப்போடே. 367

ஆறப்போட் டரைக்கடிகைக் கப்பால் நீயும்
அழகான தலைக்கு மந்த யெண்ணையிட்டு
தேறப்பா சீயக்கா யரப்புதேய்த்து
சிந்தையில்லா வெந்நீரில் முழுகச்சொல்லு
மாறப்பா வொன்றுமில்லை விஷசுரங்கள்மாறல்
மகாவாத சுரம்வெட்டை பித்தங்காந்தல்
நீரப்பா யத்திசுரங் குளிர்தாப சோபம்
நெஞ்சரிப்பு அளிசுரங்கள் பலசுரங்கள் போமே. 368

அரக்கு மோரெண்ணெய்

பலசுரங்கள் போவதற் கின்னமோ ரெண்ணெய்
பகருகிறோ மரக்கு மோரெண்ணெய் மைந்தா
சொல்லரிய குறுந்தொட்டிவேர் பலமோரஞ்சு
தூளாக்கி யஞ்சுபடி சலத்திலிட்டு
நில்லாம லொன்றாக்கி கொம்பரக்கு
நிறுத்துவிடு ரண்டரை பலத்தை யொருகிளியாய்க்
கலவரமில்லா சலமூன்று மரைப்படியாய்
காச்சடா வமுக்கறாவேர ஞ்சுபலமே. 369

அஞ்சுபலம் வேரிடித்து தூளாயாக்கி
யதற்குமொரு மூன்றுபடி சலமும்விட்டு

பஞ்சறவே யந்தக்கியாழ நீரும்
 பாரடா யரைப்படிதான் பழமோர்சேரு
வஞ்சமில்லா சாறுபடி எண்ணெய்நாழி
 மருந்துவகை வர்க்கத்தில் வரிசைசொல்ல
தஞ்சமுள்ளி யெட்டியிலா மிச்சஞ்சிந்தில்
 தனிமுசுட்டை குறுந்தொட் டி வேருங்கூட்டே 370

கூட்டடா நன்னாரி புழு க்கைவேரும்
 கூறறிய சாரணையுஞ் சிறுகீரை வேரும்
நாட்டடா கோட்ட மதியதி மதுர மிந்துசுக்கு
 நல்லமஞ்சள் கச்சோலமேல மிலவங்கம்
பூட்டடா சிற்றரத்தை திப்பிலியின் மூலம்
 புகழ்சாதிக்காய் தகரஞ் செவ்வள்ளிக் கொடியும்
மாட்டடா தேவதார மிலவங்கப்பத்திரி
 மகிழ்வாகக் கழஞ்சொன்றாய் மோரிலாட்டே. 371

ஆட்டியே கலக்கியோர் தாளிச்சேர்த்து
 அடுப்பேற்றி மூன்றுநாள் கொதிக்கவைத்து
தீட்டியே நாலாநாள் வற்றக்காச்சி
 சீராகும் பதங்கண்டு வடித்திறுத்து
போட்டியே யில்லாமல் நான்கு நாளுக்கொருநாள்
 பூசியே முழுகிவரப் போகு நோய்கள்
ஊட்டியாய் வந்தபலசுரங்கள் வெட்டைகூடு
 மோடுமே கடலினுரைத் தயிலங்கேளே. 372

கடல்நுரைத் தயிலம்

கேளப்பா கடல்நுரையுங் கோட்ட மஞ்சள்
 கெந்தமொடு பொன்மெழுகு விலாமிச்சவேர்
வாளப்பா சதகுப்பை முத்தக்காசு
 மஞ்சிட்டி யிலுப்பைப்பூ கடுகுரோணி
வேளப்பா பிசின்கம்பி பெருங்குரும்பை
 வெட்டிவே ரிந்துவுடன் வேர்க்கொம்புதானு
மாளப்பா ஒவ்வொன்று காசுதூக்கி
 மாண்பாக நீமோரிலாட்டு ஆட்டே. 373

சுரத்துக்கு வெருகெண்ணெய்

ஆட்டியே எண்ணை படியொன்று விட்டு
 ஆறுபடி தண்ணீர் விட்டடுப்பி லேற்றி
நிட்டியே வடித்திறுத்து வுடம்பிற் றேய்க்க
 நிலையான சுரந்தீருங் காந்தல் தீரும்

வாட்டியதோ ருடல் நோய்கள் பொறுத்து போகும்
வாயினில் நீரூறல் நாவறட்சி போகும்
நாட்டியே வெருகெண்ணை சுரத்துக் கெல்லாம்
நல்லபிர யோகமடா நாடிப்பாரே. 374

நாடினதோ ரெருக்கம்வேர் சித்தாமுட்டி
நல்லசிறு காஞ்சொறி யவுரிவேரும்
பீடுபுகழ் சீதேவி துளசி நொச்சி
பெருங்கரந்தை இவைவகைக்குப் பலந்தான் பத்து
நீடிதனைத் தூளாக்கிப் பாண்டத்திட்டு
நீரதர்க்கு ஆறு குறுணி நிரம்பவிட்டு
வாடியன லூட்டியே யெட்டொன்றாக்கி
வாங்கிநீ கோலரக்குக் கியாழங்கேளே. 375

கோலரக்கு பலமொன்று நானாழிநீரிற்
குவித்திட்டுப் படியாக வடித்துக்கொண்டு
காலரக் கெண்ணெய்படி யெண்ணெய் விட்டு
கலந்த மோரிரு குறுணி கலரவிட்டு
வேலரத்தை யிதிவிடைய முத்தக்காசு
வெட்பாலை யரிசிகோட்டம் வாய்விளங்கம்
வால்மஞ்சள் திரிகடுகுகொடி வேலியோமம்
மரமஞ்சள் கருவேம்பு கடுகுரோணி தானே. 376

கடுகுரோணி யகிலுங்கெந்தஞ் சிட்டி
கஸ்தூரி மஞ்சளொடு லவங்கப்பட்டை
அடுகு சதகுப்பை செவியம் நற்றக்கோலே
மப்பனே வெள்ளுள்ளி திப்பிலியின்மூலம்
தடுகு புகையூறல் சிறுதேக்கு தானுந்
தனித்தனியே காற்பலமுந் தானே தூக்கி
முடுகவே கொதியினா லாட்டி வாங்கி
முறையோட நாலுதினங் கொதிக்கச் செய்யே. 377

கொதிப்பிட்டு வைந்தாநாள் வடித்துமைந்தா
கூசாம லுள்ளுக்குக் கொள்ளச்சொல்லு
கதிகெட்ட மாறல்போ முறைக்காய்ச்சல் போங்
கடுங்காய்ச்ச லதிசார சுரமும் போகும்
விதிகெட்ட தேகவீக்க சுரமும் போகு
மிக்க வசிரண சுரமும் பூதசுரம் போகும்
பதிகெட்ட விஷசுரமும் பலசுரமு
மிவற்றாலே பறந்து போமே. 378

பறந்துபோம் சீதசுர மதிலோர் பாகம்
பாடுகிறேன் வெருகிலையுந் தண்டுமூலம்

சிறந்தவில்லை சாரணைவேர் பேராமட்டி
சித்தாமட்டிய முக்குறா விஷ்ணுமூலி
கறந்தபடி பலமொன்றா யிடித்து வாங்கிக்
காய்ச்சடா இருகுறுணி சலந்தான் விட்டு
மறந்திடா தெண்ணைப்படி யொன்றுவிட்டு
மவிற்கநாலி வெள்ளையிட பால்படிதான் ரண்டே. 379

பால்விட்டு ஆவின்மோர் படியும்ரண்டு
பாச்சியே மரமஞ்சள் மதுரஞ்சிட்டி
சாலிட்ட மிலாமிச்சம் நன்னாரி யரத்தை
சந்தனமுங் கூவிளத்தின் சதையுமிக்க
சேலிட்ட கோட்டமுடன் திரிகடுகுபலையும்
தேவதாரக் கட்டை சேரநீயும்
கோலிட்ட விராகனொன்று வகைக்கித்தூக்கி
குழையாட்டி வகைக்கு மைந்தா கொள்ளச் சொல்லே. 380

வெள்ளைக்காரன் வெருகெண்ணெய்

கொள்வதெல்லால் நசியம்விடு மேலும்பூச
குளிர்க்காய்ச்சல் சீதசுரம் குதித்துச் சாடும்
விள்வதொன்று வெருகெண்ணை வெள்ளைக்காரன்
விதித்தபடி சமூலந்தான் துலாமுந்தூக்கு
கள்வதன்றி சித்தாமட்டி பேராமட்டி
கடுஞ்சீவ வில்வவே ரமுக்குறாவேர்
கள்வதென்ன சமூலப்பா விஷ்ணுமூலி
சாரணைவேர் சீந்திலிட தண்டுகாணே. 381

தண்டுடனே பலமஞ்சு வகைதானொன்று
தறித்திடித்துத் தூணிநீர் தண்ணீற்போட்டு
மண்டிடவே குறுணியாய்க் குறுக்கி வாங்கி
மாட்டுநீ குறுணிவெண்ணை யதற்குள்விட்டு
பண்டுவைத்த பழந்தயிர்நீர் படியும் நாலு
பாச்சியதில் மேல்மருந்தை பகரக்கேளு
தின்றிடவே வெட்டிவேர் மதுரங்கெந்தந்
தேவதாரத் துடனே முத்தக்காசே. 382

காசுடனே குங்கிலியந் திராய்வேர் குக்கில்
கனத்த சித்தமட்டி வேர்திரிகடுகு மிவைகள்
வீசுசல மோரொன்று வகையு மொன்று
விரைந்தாட்டி மூன்றுநாள் வடித்துக் கொள்ளு
ஆசிடவே மேலுமிட வுள்ளுங்கொள்ள
வப்பனே நீ கொடுப்பா யத்திருட்டை

தேகுடைய சாதுரக்கந் திரியரூட்சை
தேககுரம் பூதகுரஞ் சேரப்போமே. 383

குன்மத்துக்குக் கொம்மட்டிக் குழம்பு

சேராத குன்மங்க ளனைத்தும் போகச்
செப்புகிறேன் கொம்மட்டிக் குழம்புதன்னை
ஆரவே கொம்மட்டிக் காய்ச்சாறு நாழி
யப்பனே சம்பீரச் சாறுநாழி
வாரமுடன் வெள்ளுள்ளி நொச்சி யிஞ்சி
வகைக்குநீ சாறுபடி நாழிவாங்கி
பார்புகழு மஞ்சுபடி யொன்றாய்க் காய்ச்சி
பாச்சுதற்குச் சூதமொடு லிங்கந்தானே. 384

லிங்மொடு பெருங்காய மிந்துப்போமம்
நேரான வெண்காரங் கடுகு மஞ்சள்
லிங்கமொடு வெந்தயமு மிளகு காந்தம்
நேர்வாளமோ றொன்று கழஞ்சுமூன்று
லிங்கமுறு ஆட்டிநீ யாகிற் சேர்த்து
நெருங்கவே விடாமலே கிண்டிக் கிண்டி
லிங்கமுறும் பழம்புளி போலிறங்கு மைந்தா
நினைவறிந்து வுடலறிந்து வுண்ணச் சொல்லே. 385

உண்ணுவது பனைவெல்லம் நல்ல வெல்லம்
மூட்டிடுவாய் தூது ளங்காய்ப் பிரமாணத்தில்
உண்ணயிலே குன்மம் போம் பெருவயிருபோகு
முத்தரத்தில் நீராமை மகோதரமும் போகும்
உண்ணயிலே பீலிகையும் வெப்பும் பார்வை
யுயர் கோவை வல்லியமுங் கவுசிதானும்
உண்ணயிலே வாய்வுவென்ற சென்மம் போகு
முறைக்கிறேன் கும்மட்டிக்காய்ச் சூரணத்தைக் கேளே. 386

பேய்க் கும்மட்டிக்காய்ச் சூரணம்

கேளப்பா பேய்க்குமட்டிக் காயில்பத்து
கெட்டியாய் விளைந்ததா யிடித்து மைந்தா
ஆளப்பா வரைத்ததனை மயனமாக்கி
யத்துடனே கொடிவேலி வேரின்பட்டை
நாளப்பா காய்ச்சிடுவாய் வளையலுப்பு
நலமான கல்லுப்பு சவைச்சலுப்பு
வேளப்பா சாரணைவேர் திரிகடுகு
வெற்றிபுரி செவ்வியமுங் கொல்லிமல்லிதானே. 387

தானென்ற பெருங்காயம் வாய்விளங்கஞ்
சத்தியரு ளோமமடா சத்திசாரம்
தேனென்ற யெவச்சாரம் புளித்தோல் சாம்பல்
சேரப்பா கழஞ்சொன்றாய்ச் செப்பக் கேளு
கானென்ற புளிகடலை மூலந்தானுங்
காட்டிலுள்ள கருணையுட கிழங்குகூட
மானென்ற கழஞ்சுநீ மூன்று வாங்கி
மைந்தனே யிவையெல்லா முலர்த்திடாயே. 388

உலர்த்தி யெல்லாந் தூளாக்கி வஸ்திரகாய
மூட்டியே கரகத்தி லிட்டுக்கொண்டு
சிலத்தையுறு மாளுடை பிலத்தைக்கண்டு
செய்வதற்குத் தேங்காய்ப்பால் படியும்வாங்கி
பலகச்சார் நாரத்தின் பழத்தின் சாறு
பாங்காக ஆனீரும் பண்பாய் மைந்தா
நலத்தவிவை படிமூன்று நீருக்குள்ளே
நலமாகச் சூரணத்தைப் புரட்டிவையே. 389

வைத்ததொரு மருந்தெல்லாம் வற்றவற்ற
மயனம்போல் திரட்டிநீ யுண்டைசெய்து
உய்த்தவே நீரெல்லா முண்டபின்பு
உறவுசெய்வாய் கரணையிட மூலமாட்டி
கைத்திறமாய் மூன்றுவிரல் கனத்தில் நீயுங்
கவசமந்த வுண்டைக்குக் கட்டி கேளு
மொய்த்திடவே யெட்டெருவில் புடத்தைப்போடு
மூதண்ட கெசபுடந்தான் மூட்டுமூட்டே. 39(

மூட்டிநீ யெடுத்ததனை தூளாயாட்டி
மூன்றுவிரற் கொண்டள்ளி யுண்ணச்சொல்லி
தாட்டியெனு மனுபானம் பால்மோராவும்
தனிவென்னீ ரிவைகளிலே சாப்பிட்டாக்கால்
நாட்டியதோர் ரெண்குன்ம மாறுசூலை
நலமான நஞ்சுவகை நோயுந்திரும்
வாட்டியதோர் சலகன்ம மகவைவைப்பு
மகோதர முநீராமை பெருவயிறும் போமே. 391

போமப்பா குடல்வாதம் வாதகுன்மம் போகப்
புகலுவேன் மூலிகைப் பிரயோகங்கள்
ஆமப்பா ரண்டுபடி கோசலத்தில்
அப்பனே கற்றாழை மடலும் பின்பு

நாமப்பா சத்தியிட சாரணையின் மூலம்
நன்மிளகு சாரணையும் நறுக்கிநீயும்
வேமப்பா காய்ச்சிடவே யுப்பாய்நிற்கு
மேல்மருந்து திரிகடுகு பெருங்காயம் இந்தே. 392

இந்துப்பு கல்லுப்பு வெள்ளுள்ளி தானு
மியலான காட்டுச் சீரகமுங் கேளு
முந்தவற்று முப்பதற்குச் சமமாய்சேர்த்து
மூட்டுவாய் தேங்காய் தன்னிற்குள்ளே
பந்தமுற வாறுநா ளூறிநிற்கும்
பதத்துடனே தின்றிடவே வலிகுன்மந்தீரும்
விந்தையாய்க் குடல்புரட்டு வாதத்திற்கு
வீழிவேர் பாக்களவு வெந்நீரிலூட்டே. 393

அட்டக்குன்மத்துக்குக் குடல்புரட்டுக்குப் பூதவயிரவன் குளிகை

ஊட்டுவாய் பசும்பயிறு மாவின்பாலி
லுண்டிடவே பூதவயி ரவத்தைச் சொல்வோம்
நீட்டியே பூத வைரவத்தைச் சொல்வோம்
நேரமிரு சூதமுடன் லோகன்தாரம்
நாட்டியதோர் கெந்திசிலை சிரோத ரஞ்சனம்
நயமாகச் சமபாகம் நிறுத்துக் கொண்டு
ஆட்டுவாய் சிறுநீரிற் சாமமொன்று
அப்பனே குன்றியிடை குளிகை கட்டே. 394

கட்டியதோர் குளிகைக்குச் சுத்தியான
கெந்தி ரெட்டி கனமாகக் கல்வத்திட்டு
கட்டியன்றிக் கால்கடிகை வறுத்து வாங்கு
கருத்தாக வஞ்சுகுன்றி வறுத்தகெந்தி
அட்டியில்லாக் குளிகை யொன்று சவைச்சலுப்பு
அப்பனே திரிகடுகு பெருங்காயந்தான்
சுட்டியாஞ் சிறுநீரிற் றினந் தானாட்டிச்
சுகமாக நெய்யிலே தின்னச்சொல்லே. 395

சொல்லுவே னின்னமொரு குளிகைதானும்
துயர்தீரு முருத்திர வயிரவத்தைக் கேளு
வெல்லுமே சூதமுடன் லோகதாம்பிரம்
வெண்ணாவி யிவைசமனாய் விரைந்துதூக்கி
செல்லுமே தாமரைப்பூ கள்ளிக் கஞ்சா
சித்தரிட மூலிச்சாரே ரண்டம் நொச்சி

அல்லுறவே யொவ்வொரு நாளாட்டி மைந்தா
அளவாக ஒருவுண்டை திரட்டிடாயே. 396

திரட்டியே வாலுழுவைத் தயிலம்வாங்கிச்
சேர்த்தங்கே சாமமொன்று தீயைமூட்டி
புரட்டியே மந்தாக்கினி தன்னில்வைத்துப்
பிரியமுடன் பக்குவஞ் செய்பின்புகேளு
உருட்டுவாய் கடலையெடை யுண்டைசேர்த்து
ஒருகுளிகை தனையெடுத்து யிஞ்சிச்சாற்றில்
மருட்டிநீ யீய்ந்திடவே வலிப்புத்தீரு
மறுபடிநீ அத்திசமூலங் கியாழம் போடே. 397

திசைமூலக் கியாழத்தில் தூவக்கேளு
திப்பிலியின் பொடியிட்டுத் தின்னச்சொல்லி
திசைமூல நசியங்க ளஞ்சாவித்து
செய்வெள்ளை விஷ்ணு கிரந்திவேரும்
திசமூலஞ்சிறுநீரி லாட்டிமைந்தா
திறக்கவே நசியமிடு பின்னங்கேளு
திசமூலங் கழுதைலத்தி மகிழம்வித்து
சேர்சமமா யாட்டிநீ நசியம்வாரே. 398

வார்த்தபின்பு நசியமிட மருந்து சொல்வோ
மகத்தான வில்வவேர் வெள்ளையுள்ளி
நாற்றமுறு பெருங்காயம் நாயின்கஷ்டம்
நன்றாகச் சிறுநீரி லுண்டை சேர்த்து
வேற்றுமை யொன்றில்லாத வில்வசாற்றில்
விழியிலிடும் புகைமருந்தை விள்ளக்கேளு
சேர்த்திடுவா யெட்டிவித்து நாயின் கஷ்டம்
திரமான பெருங்காயம் வசம்பு காணே. 399

வெறிபயித்தியபத்துக்குப் புகை

வசம்புள்ளி சருகுடனே கடுகுதானும்
மயிருடனே கபாலோடு ஆவின்கொம்பு
விஷந்தணியும் நிம்பவிரை தேவதார
மீறாமற் சமபாகம் புகையிற்போடு
பசந்தவெறி பத்துடனே வாயிளைத்தால்
பயித்தியமாய்க் கல்லெறிதல் பித்தமார
முசந்துகுதித் தோடுற்று முன்மத்தந்தானு
மொழிந்துபோங் கெண்டைக்கு உற்பனத்தைக்கேளே. 400

கெண்டைக்கும் மேல் நோக்கு வாயுவுக்கும்

கேளப்பா மேல்நோக்கு வாய்வுக்கெல்லாம்
கிருபையினா லனலாதிச் சூரணந்தான்
நாளப்பா பிரண்டைத் தூள் படியும் நாலு
நலமான சதுரக்கள்ளி பூப்பட்டை நாழி
ஆளப்பா புளித்தோலின் படிதானாலு
அப்பனே யரைப்படியாய் முப்புதானும்
நீளப்பா விவையெல்லாம் தூளாயாட்டி
நேரப்பா வடிகட்டி கரகத்தூட்டே. 401

கரகத்திற் பொடியங்கே வெருகடிதான் றூக்கி
கர்த்தாவை தியானித்து வுண்ணச் சொல்லு
வரவத்துத் தின்னாமல் பத்தியமாய்த் தின்னு
மைந்தனே யுப்பன்றி மற்றொன்றாகா
விரதத்த சன்னிமுத லுன்மத்தம் விகற்பம்
விஷங்க ளொடு குமரகண்டன் காமாலை
ஒருவலுற வத்தமு சல்வல்லி பித்தசோகை
யுண்ணையிலே பறந்துபோ முண்மைபாரே. 402

விஷுத்துக்குக் கலிக்கம்

உண்மையா மென்றுவிரைந் தோடிப்போகு
முருத்திரமாம் விஷத்துக்குக் கலிக்கங்கேளு
வெண்மையுறு மேனித்தோல் விராகன்மூன்று
வெந்ததலை யோடப்பா கழஞ்சு வொன்று
திண்மையுரி தாம்பிரத்தூள் விராகனொன்று
சீர்துரிசு கழஞ்சொன்று துத்தமொன்று
வண்மைபெற புளியிலைச்சார் விட்டு ஆட்டி
மைந்தனே கயிறுபோ லுண்டை கட்டே. 403

கட்டியதோர் குளிகைக்கு வயணங்கேளு
கனசன்னிக் கத்திப்பூப்பழுப்புச் சாற்றில்
மட்டில்லா விஷத்துக்குச் சாரணையில் தீட்டு
மயக்கிவிடும் பேய்க் கெல்லாங் கரிப்பான் சாற்றில்
ஒட்டில்லா யுன்மத்த முலைப்பாலாகு
முறைந்துவிலு முசல்வலிப்புக்குப் பழச்சாறாகும்
மட்டியுறுங் காமாலைக் கிளநீராகு
மப்பனே மருளவத்து தும்பைச்சாறே. 404

சாறுகளிற் சொன்னபடி கண்ணிற்றீட்ட
தப்பாம லவ்வண்ணம் நிவர்த்தியாகும்

வேறுமோ ரஞ்சனத்தின் பெருமைகேளு
மென்கால மிதாகா னென்ற நாம
மேறுபுகழ் குக்கில் துத்தந் துருசு ஏல
மிலவங்கப்பட்டையிவை சமன்றான் றூக்கி
பேருடைய பேய்த்தும்பைச் சாற்றிலாட்டிப்
பிலக்கவே நெடுங்குளிகை பிடித்திடாயே. 405

விஷம் சன்னி மாந்தத்துக்கு

பிடித்ததொரு குளிகையைநீ கண்ணிற்றீற்றப்
பேய்ப்பிரமை வலிப்பெல்லாம் பேதமாகும்
குடித்திடவே யுள்ளுக்கு மருந்துசொல்வோங்
குறைதிரும் வெறிதிருங் கூனுந்திரு
மடித்துடைய வெண்புறா வெச்சந்தானு
மதுக்கார பழமிவைதான் சமனே சேர்த்து
அடித்துமே வெள்ளாட்டுக் கறுத்தவண்ண
மாட்டினிட பாலிலே யரைத்திடாயே. 406

அரைத்ததொரு மருந்தெல்லாந் திரட்டி நீயும்
அப்பனே கழஞ்சியிடை குளிகை சேர்த்து
உரைத்திடுவாய் குளிகையொன்று வெந்நீர்விட்டு
உள்ளுக்குக் கொடுத்திடவு மொழியுமப்பா
கரைத்ததனை நசியமிட்டு அறிவுகெட்டால்
கண்ணிலே திங்களொன்று கலிக்கம்போடு
வரைத்துடைய முலைப்பாலில் போடுபோடு
மைந்தனே மயக்கமறுந் தெளிவுண்டாமே. 407

அறிவுகெட்ட விஷத்தாலுஞ் சத்தியாலும்
ஆங்கார வெறியாலும் விதியினாலும்
பிறிவுகெட்டுப் பிணம்போலே சுரணையற்றால்
போடுவாய் கண்ணிலுங் காதுமூக்கில்
செறியவு நீமுலைப்பாலி விட்டாயானால்
செத்த சவம் பிழைத்தெழுந்து திரும்பிப்பேசு
மறிவேது மில்லையப்பா சத்தியமாகு
மற்றமற்ற வாகடங்களி தற்கொவ்வாதே. 408

சூலை பதினெட்டு புண்ணுக்கும் சகலசூலைக்கும் சூதவித்தை

ஒவ்வாத சூலை மூவாறும் போக
வுரைக்கிறேன் கெந்தகத்தின் தயிலங் கேளு
செவ்வான கெந்தகமோ கழஞ்சுபத்து
சிவந்தபசு நெய்தனிலே சாமமொன்று

சவ்வாது போலாட்டித் திரியிலூட்டி
தலைகீழாய்ப் பிடித்திட வே தயிலம்வீழுங்
கவ்வாது தயிலத்தில் சூதமூன்று
கழஞ்சிவிட்டுச் சாமமொன்று ஆட்டு ஆட்டே. 409

ஆட்டியதோர் தயிலத்தை குப்பிகூட்டி
ஆயிபதம் பூசித்து அருள்தாவென்று
நீட்டியொரு காசிடைதான் தினமுங்கூட்டு
நினைவாகத் தினம்பத்து கொண்டபேர்க்கு
நாட்டில்வளர் சூலையென்ற தனைத்தும் போகும்
நலமான பத்தியம்பால் தயிர்நெய்யாகும்
தீட்டியதோர் நல்லெண்ணெய் முழுகலாகா
செப்புகிறே னின்னமொரு சூதத்தாட்டே 410

சூதமப்பா கழஞ்சிரண்டு சுத்திசெய்து
தூக்கிநீ வெற்றிலையின் சாற்றிலிட்டு
ஏதமற முறித்ததனை வெற்றிலையிற்பொதிந்து
இயலான பச்சரிசி குருவையாகும்
வாதமறும் வெற்றிலைச்சார் படியுமொன்று
வார்த்ததிலே பச்சரிசி யுழக்கரைதானிட்டு
சேதமற மூன்றுபத்து கடிகையங்கே
கிண்டியதை நனையவே வைத்திடாயே. 411

நனைந்ததோ ரரிசி தன்னைச் சுவரப்போட்டு
நலமாக வெடுத்தங்கே பருவங்கேளு
நினைந்த மின்னிமுசுமுசுக்கை வெற்றிலை யிம்மூன்று
நேராக வகையொன்று பிடிதானொன்று
நுனைந்த தனித்தனியாக செருக்குவாட்டு
நுகரவைத்து வாங்கியே யரிசிகூட்டி
புனைந்திடினு மாவானால் சூதம்விட்டு
புரளவே தூளாக விடித்திடாயே. 412

இடித்ததோர் பொடியதனை நிழலுலர்த்தி
யிதமாகப் புதுக்கரகத் திட்டுக்கொண்டு
படித்தரமாய் கழஞ்சுநீ தயிரிலூட்டி
புரக்கவே மூன்றாகப் பிடித்து வுண்ணில்
அடித்திறமா யேழுதினங் கொண்டாலப்பா
அலர்சூலை வெடிசூலை புண்ணுபோகும்
படித்தரமாய்ப் பத்தியத்தை விள்ளக்கேளு
பசுவினிட தயிராகு முண்ணுவுண்ணே. 413

இரச வேக மீறினால்

உண்ணயிலே சூதவெட்டை மீறிற்றானா
 லுதிரத்தி லிளைச்சலுமாய்க் கடுப்புகாணும்
திண்ணமுறத் தயிரிலே வெல்லம் போட்டுத்
 தின்றிடவே பொருந்தியரஞ் செப்பக்கேளு
வண்ணமா யெழுமூன்று தினந்தானப்பா
 மறுபத்திய மியாதேனும் வரைந்து தள்ளு
எண்ணெய் கேளாமணக்கின் றயிலமிட்டு
 இதமாக வீரைந்து முழுகச் சொல்லே. 414

சொல்லுகிறே னின்னமொன்று பொரிமாவாலே
 சூத்திரமா யமுதுப்படி புழுங்கலாகா
சொல்லுவேன் காற்படியை பொரிமாவாக்கிச்
 சூட்டுவாய் பழச்சாறு நனையவார்த்து
சொல்லுவேன் சுவறியபின் கழஞ்சுசூதந்
 தூக்கியே யிடித்தங்கே பழச்சார்விட்டு
சொல்லுவேன் பழச்சாறு விட்டுவிட்டுச்
 சுகமான வெற்றிலைச்சாறு சுவரவூற்றே. 415

ஊற்றுவா யுத்தமமாந் தாளிச்சாறு
 உறவுசெய்து தினமொன்று இடித்துமைந்தா
நேத்தியா யிடித்ததனை வாங்கிக்கொண்டு
 நிழலுலர்த்தி வெறுகடியாய் நேர்ப்புகண்டு
சாற்றுவாய் மூன்றுநாள் நான்குநாள்தான்
 தயவாக விருநேரஞ் சாப்பிட்டாக்கால்
பார்த்துநீ யனுபானுஞ் சொல்லக்கேளு
 பழந்தண்ணீர் பத்தியந்தான் வென்னீர்வாரே. 416

சூலைக்கும் புண்ணுக்கும் இரசப்போக்கு

வென்னீரும் வெள்ளுள்ளி மற்றொன்றாகா
 வீறாகக் கொண்டிடவே விபரங்கேளு
தண்ணீரா மற்றங்கே முடங்கினோருந்
 தானே தானெழுந்திருந்து நடந்துசொல்வார்
வென்னீரா லேரண்டைத் தயிலம்விட்டு
 வாரமொருக்கால் முழுக மைந்தாபாரு
மன்னீரும் வாசனைபோல் தேகமாகும்
 மயக்கமறு மகிழ்ந்தங்கே யுண்ணச்சொல்லே. 417

ரசவேகப் வாயில் கட்டுவைல்

உண்ணயிலே வாயிலெல்லாஞ் சூலைகண்டா
லுரசியங்கே கொப்பளிக்கக் கியாழங் கேளு
எண்ணயிலே வெள்வேலு மெருக்கின் வேருங்
கருவேலுந் துளசி யுடகியாழம் விட்டு
நண்ணயிலே நாலு நாளுமிழ வப்பா
நற்சூலை வரச்சூலை ரண்டுந்தீரும்
மண்ணயிலே யுள்ளுக்குப் புகையைக் கேளு
மப்பனே கருவேலின் பிசினி வாங்கே. 418

நாட்பட்ட புண்ணுக்குக் புகை

பிசினுடனே முருங்கைவேர் எருக்கன் வேரும்
பேரான அழிஞ்சிவேர் சிவனார் வேம்பு
பிசினுடனே யிவையெவல்லாம் உண்மையுண்மை
பிரளவே துளாக்கி யெடுத்துக் கொண்டு
பிசினுடனே தழலிட்டு வெறுகடியைத் தூவ
பெறுநாளைப் புண்ணெல்லா முலர்ந்துபோகும்
பிசினுடனே யிவையஞ்சுஞ் சரியாய்த் தூக்கி
பேசுகிறே னேத்திரநோய்க் கெல்லாங் காணே. 419

கண்ணின் வியாதி தொண்ணூற்றாருக்கும்

காணப்பா திரிகடுகு கடுக்காய் நெல்லி
கடுந்தான்றி பசுவின் பால் கழுதைப்பாலும்
பூணப்பா யதிமதுரம் பீதரோணி
பொன்மெழுகு வெண்காக்கண மிவையும்நேராய்
தோ்ணப்பா முலைப்பாலால் சாமமொன்று
துவள வதையாட்டி நீகுளிகை கட்டி
ஊணப்பா முலைப்பாலி லரைத்துத்திட்ட
வொழிகின்ற வியாதிகளை யுற்றுக்கேளே. 420

உற்றுவளர் திமிர்முதல் படலந்தானு
மொழுகிவிழும் நீர்ப்பில்லம் கூறுகாசம்
அற்றுப்போம் வெள்ளை வாகடத்தின் போக்கு
அப்பனே சுடர்கால வஞ்சனத்தைக் கேளு
பற்றிநின்ற கண்ணோய்க டொண்ணூற்றாறும்
பற்றறுக்கச் சிறுகீரை பொன்னாங்காணி
சுற்றவெள்ளை சாரணைவேர் வெள்ளைக்காக்கணமுஞ்
சேரவே வேரெல்லாம் வாங்கு வாங்கே. 421

வாங்கடா தேற்றன்விரை தலைமண்டையோடு
வளர்கூணங்கின் பல்கோழி மார்பிலத்தி
வாங்கடா வன்முத்து இவைதான் சேர
வரிசையுடன் சமனாக நல்லெண்ணை விட்டு
வாங்கடா கல்வத்தில் மயனம்போலே
மாட்டி நீசிமிளிலே வைத்துக்கொண்டு
வாங்கடா கண்ணிலிடு நெடுநாள் சென்ற
வியாதிபோ மாருந்தம் மாறுந்தானே. 422

கண்மலில் வியாதி தொண்ணூற்றாருக்குப்

மாறுதற் கின்னமொன்று செப்பக்கேளு
மணிக்கொட்டை பாசியிலை துருசு துத்தம்
மீறாமற் சமனிறுத்துச் சிறுநீர்விட்டு
வெண்ணெய் போலாட்டியதைக் குளிகை சேர்த்து
வேறுமொரு வியாதிக்கு சிறுநீர் விட்டு
விரைந்துரைத்துக் கண்ணிலிட வெளிச்சமாகும்
வீறுடைய புழுப்பூவுங் குந்தத்திரு
மிருள் மூடும் புகைச்சலுக்கு விபரங்கேளே. 423

விபரமென்ன முசல்புழுக்கை சுட்டசாம்பல்
வெங்கலத் தாலத்திலே நெய்யைவிட்டு
விபரமுறக் களிம்பாக்கிக் கண்ணில்தீட்ட
விழிமயக்க முழிமயக்கம் புகைச்சல்தீரும்
விபரமுற வெள்ளெழுத்து மாறுதற்கு
விரைந்தொழுக்குப் பசுவின்பால் தினந்தானாறு
விபரமுடன் மாறிப்போம் கண்ணோயென்றால்
விசித்திரமாய் காதிலிட விளம்புறேனே. 424

கண்ணிருவ்ட புகைச்சலுக்குப் பச்சிலை

விளம்புறேன் வலக்கண் ணோயென்றால்
மேனியினிலை கசக்கியே காதிலூற்ற
தளம்பியதோ ரிடைக்கண் ணோயென்றால்
சாற்றுவேன் வலக்காதில் சாறுதன்னை
களங்கமற்ற ரண்டுகண்ணு நொந்ததானால்
காதிரண்டி லொருமிக்கச் கசக்கிவாரு
துளம்பியதோர் சிவப்புமறு நீருமாறுஞ்
சூட்டுறேன் புறவடையைத் துணிந்துகாணே. 425

துணிந்துகேள் நாயுருவி சிவந்தவேரை
தோண்டியே பிடுங்கிவந்து மண்வெட்டிக்காய்ச்சி

கனிந்தபழச் சாறுற்றி வேரையாட்டிக்
கண்ணிலே மத்தித்துப் பூசத்தீரும்
யனிந்துமே பத்தியமோ வில்லையப்பா
பாங்கான யிறைச்சிவகை சேருசேரு
முனிந்துடைய மாலைக்கண் காணாதென்றால்
முக்கியமா யெட்டிவேர் முலைப்பாலாட்டே. 426

முலைப்பாலி லாட்டியங்கே கண்ணில்தீட்ட
மோகமின்றி மாலைக்கண் காணுமைந்தா
இலைப்பாலிற் பழமிளகு நல்லெண்ணெய்க்குளிட்டு
ஈரைந்து தினமெடுத்துக் கொண்டு
நிலைப்பாக எண்ணெய்குத்தி யரைத்து நீட்டு
நேர்ப்பாக மாலைக்கண் விர்த்தியாகும்
மலைக்காம லெட்டுநாள் தீட்டினாக்கால்
மணங்காம லிட்டறுத்து வழிசெவ்வாமே. 427

கண்ணோய்க்குப் பிறவடை

செவ்வாக மாலைக்கண் விர்த்தியாகும்
செப்புகிறேன் அஞ்சனத்தை சிறக்கக்கேளு
செவ்வாகுஞ் சூதமொன்று கெந்திமூன்று
சிறக்க வெள்ளைச் சாரணைவேர் நாலுதூக்கு
செவ்வாக நேர்வாளம் நாலுதூக்கு
செம்பீரச் சாற்றினாற் குழையவாட்டி
செவ்வாகு மான்கொம்பு சிமிளில்வைத்துத்
தேவையென்றால் பழச்சாற்றில் தீட்டிடாயே. 428

வெள்ளெழுத்துக்கு

தீட்டினால் ஜன்னி விஷம் பேயும் நீங்குஞ்
செம்புகிறேன் ஊமைப்போல் உன்மத்தமானால்
காட்டினா லொழிந்திடவே மருந்தில்லாமற்
கடுகவே பிடித்தவரை விலங்குபூட்டி
ஊட்டியே தோருலை யிலிட்டுக் கொழுவைக் காய்ச்சி
யொழுகி விடுவவர் மேலே யண்ட அண்ட
நீட்டினால் வாய்திறந்து பேசுவான்காண்
நிராதரித்துக் கிரிகையைச் செய்திடாயே. 429

உன்மத்துக்குக் கிரிகை யெலிகடிக்கு

செய்திடவே யொழிந்து போமிவற்றுக் கெல்லாஞ்
செப்புறேன் பத்தியங்கள் திறமாயப்பா

நெய்யாகும் பாலாகு மற்றொன்றாகா
நேராக வடிகட்டி முழுகச் சொல்வாய்
எய்யாத வெலிகடிக்கு மருந்துசொல்வோ
மிரங்களிசம் வேர்ப்பட்டை மாவிலிங்கப்பட்டை
மெய்யாகும் வெள்ளாட்டு நீரிலாட்டு
விரவியே குடித்திடவே விஷங்கள் போமே. 430

விஷம்போகும் பூசிடவே யாதளையின் வேரை
வெண்பசுவின் பாலிலே யுள்ளுக் கூட்டு
சவம்போலே சுரணைகெட்டு விஷங்களாகி
தண்ணீர்க்குள் நெய்க்கொட்டான் பழங்கசக்கி
நிசம்போலே வெண்ணெய் தனைவழித்து மைந்தா
நேர்பாக வேதலைக்கு டோரியாடி
வசம்போலே தேய்த்திடவுந் தீர்ந்துபோகு
மருந்துகே ளுள்ளுக்குள் மைந்தா நீயே. 431

மருந்துகேள் முசுமுசுக்கை மூலம்வாங்கி
யரைத்திடுவாய் ஆவின்பால் அரைத்துநன்றாய்
பொருந்தவே பிழிந்திடுவாய் குறுணிச்சாறு
புகழாக வடிகட்டிக் குறுகக்காய்ச்சி
விருந்தாக ஆவின்வெண்ணெய் மேதிவெண்ணெய்
வெண்பொகுட்டி னதிலரண்டி லொன்றுமேதான்
பெருந்தேனிற் படியரைதான் கழுதைப்பால் கேள்
பிசகாம லரைப்படி தான் பிலக்கச் சேரே. 432

வெறி பித்தத்துக்கு மருந்துவாலை

பிலத்ததே ரிஞ்சிச்சா றிரண்டுகால்தான்
பெற்றிடுவாய் பனைவெல்லம் பலமுமூன்று
கலசத்திலுற வார்த்துநீ பாகுசெய்து
கடுக்காயில் சிறிதாக இடித்ததூளும்
நலத்துறவே காற்படித்தூ ளிட்டுகிண்டி
நலமாக நாற்கழஞ்சு வுண்ணச் சொல்லு
புலத்தியனே பக்கமொன்று வுண்டபேர்க்குப்
பொறிகலக்கம் வெறிமயக்கம் போகும்பாரே. 433

பாரப்பா துவாலையிட மருந்துகேளு
பாங்கான ஆதளையு முத்தெருத்தின் செவியும்
நேரப்பா விவையிரண்டு முரலிலிட்டு
நெடுநாளைக் காடிவிட்டு நெகிழவாட்டி
வாரப்பா சிரசுமுதற் பாதமட்டும்
வற்றவற்றத் தடவியே வரிசையாக

சேரப்பா வொன்றரை நாட்சென்றமோரிற்
றிரமாகத் துவாலையிடு தெளிந்துபோமே. 434

தெளியாத வெறிபித்த விஷமடக்கந்
தீர்ந்திடவு முள்ளுக்குத் தின்னக்கேளு
எளிதாக விஞ்சிச்சார் கரண்டிரண்டு
யிதற்குரெட்டி கழுதைப்பாலிரண்டுஞ் சேர்த்து
அழியாத சர்க்கரையுங் கழஞ்சிரண்டு
அப்பனே தினம்பத்து வுண்ணச்சொல்லு
வழியாக மாறிவிடுந் துவாலையேது
மைந்தனே மகத்தான மருந்துதானே. 435

தானென்ற வறிவுகெட்டு மயங்கினோர்க்கு
சாப்பிடவே சோறொன்று சமைக்கக்கேளு
தானென்ற பசுவின்பால் தூணிவாங்கி
தழலிலிட் டடுப்பேற்றிக் குறுணியாக்கி
தானென்ற குன்றிச்சார் நாழிவிட்டு
தனிமுகூறின் முட்டையிலே புரியமிட்டு
தானென்ற பனவெல்ல மூன்றுபத்து
தாக்கிட்டு வைத்தபின்பு சாற்றக்கேளே. 436

சாற்றக்கேள் பேய்வாழை பழந்தானப்பா
தயவாக நாற்பதங்கே யுறித்துச்சேர்த்து
சாற்றக்கேள் சர்க்கரையும் பலமிரண்டு
சம்பாநெல் லரிசியிலே படியிரண்டு
சாற்றக்கேள் நெல்தனிலே சேருவொன்று
சட்டமாய்க் கட்டியே கைபாகந்தான்
சாற்றக்கேளி வையெல்லாங் கிண்டிக்கிண்டி
சமைத்தங்கே மூன்றுநாள் தாக்கச் சொல்லே. 437

பிரமை பிறகடத்துக்கு கரையும்

தாக்கச்சொல் லிராப்பகலு மாறுநேரஞ்
சாப்பிடவே யறிவுமயல் தானேதீரும்
தாக்கவே மற்றொன்று மாகாதப்பா
சனந்தீரும் விஷந்தீரும் சம்பிரதாயம்
தாக்கவே பிற்கடந்தான் றீரக்கேளு
தனிக்கோவை முத்தத்தண்டு முடக்கொத்தான்தண்டு
தாக்கவே சமனாக விடித்தவித்து
தனிச்சாறு வுழக்கங்கே பிழிந்திடாயே. 438

சாராய வெறிக்கு

பிழிந்ததோர் கியாழத்திற் காடிநேராய்ப்
புகட்டியதில் வெல்லமிட்டுக் கொடுக்கச்சொல்லு
அழிந்துவிடும் பிறகடந்தா னலறியோடும்
அப்பனே சாராய வெறிக்குக்கேளு
சளிந்தொழுகும் சாராயம் விட்டுமைந்தா
சமைத்ததிலே நெய்யிட்டுச் சாப்பிட்டாக்கால்
குளிர்ந்துசடம் விழுமளவும் லாகிரியில்லை
கூறாக எத்தனைதான் கொண்டபோதே. 439

பெருவயிறு கரைய

கொண்டெழுந்த பெருவயிறு கரைந்துபோகக்
கூறுகிறேன் மருந்தொன்று குடிலம்விட்டு
அண்டர்மகிழ் மேனியிலை காஞ்சோரியிலையும்
ஆடுதின்னாப் பாளையிலை யிவையெல்லாந்தான்
கண்டிதமாய்ச் சாதிக் காயளவரைத்து
கரைத்திடுவாய் மூன்றுபடி பழச்சார் தன்னில்
விண்டுநிறத் துருசு கெந்தி லிங்க மொக்க
மீறாம லரைக் கழஞ்சு வகைக்கு சேரே. 440

வகைசேர்த்து அடுப்பேற்றி மயனமாக்கி
மைந்தனே யிரண்டுதின மாறவைத்து
வகையாகக் குன்றியிடை யருந்தினாக்கால்
மகத்தான பெருவயிறு வற்றிப்போகும்
வகைகேளு அந்திக்குக் கியாழங்கேளு
மைந்தனே காட்டுமல்லி சுரைபழுத்தல்
வகையான கரிப்பானும் சமூலம்வாங்கி
வரிகடுக்காய் முப்பதுடன் பாதிரியின்சருகே. 441

சருகுடனே மிளகுழக்கு கட்டிப்போட்டுத்
தனிச்சலந் தானாலுபடி தயவாய்விட்டு
செருகுடைய வடுப்பேற்றி யெட்டொன்றாக
சித்திரமாக வம்மியிலே ழொன்றாக்கி
அருகந்த கியாழத்திற் கலக்கிநீயும்
அடவாகக் கொடுத்திடுவாய் பட்சமொன்று
கருக்கின்ற பெருவயிறு வொழிஞ்சி போகக்
கடுக்காய் பத்துப் பொடியாக்கி கியாழத்தூட்டு. 442

நீராமை கவுசிக்கு

கியாழத்திற் பொடியிட்ட ரைப்படி தானியுங்
கறுத்த வெள்ளாட்டி னுடநீரும்விட்டு
வசாயத்தில் மூன்று நாளாறவைத்து
மைந்தனே பத்துமுறை யிப்படியேயூட்டு
புசாயத்த பெருவயிறு தணிந்து மாறும்
பூட்டுகிறே நீராமை கௌசிக்கெல்லாம்
விசாயத்தில் துருசினால் நடக்கக்கேளு
விராகனோ யிரண்டுபத்து துருசுதூக்கே. 443

தூக்கினதோர் துருசுதனைச் சுத்திசெய்து
சுருட்டுவா யேரண்டத் திலையேழப்பா
காக்கவே வெள்ளுள்ளிக் கவசங்கட்டி
தான்றிரும்ப விலைகொண்டு பொதிந்துகட்டி
தேக்கமுட னுமிக்காந்தற் குள்ளே வைத்து
திறமாக மறுநாள் நீயெடுத்துவைத்து
ஆக்கமுறுந் தேங்காயில் வெருகடியுந் திருகி
யதனுடனே வெள்ளுள்ளி யரைத்துச் சேரே. 444

நீராமை கவுசிக்கு துருசுபற்ப வராகவித்தை

வெள்ளுள்ளி துருசுபற்பங் கால்வராகன்
வேதிச்சு யெட்டுநாள் விழுங்கத்தீரும்
எள்ளவே பத்தியங்கள் சாமைக்கஞ்சி
வாயடுக்கால் கொப்பளிக்க வெண்ணீரல்லால்
எள்ளளவும் பத்தியங்கள் பிசகினாக்கால்
என்மேலே குறையில்லை யிடுக்கமெய்தும்
வள்ளலே யின்னமொன்று வராகவித்தை
மணிக்குடலிற் பெருங்காயம் பொரிக்காரந்தானே. 445

காரமொன்று காயம்ரண்டு யிந்துநாலு
காயொன்று நாரத்துக் கள்ளிப்பால்கேள்
வீரமுதற் கழஞ்சிரண்டு மிளகுரண்டு
வெள்ளுள்ளிப் பருப்பங்கே பலமுமொன்று
கோரமுறு முப்புளுக்குச் சேரவொன்றாய்க்
குழையவெந்து ஆட்டியதில் வகையவித்து
ஆரவே பொடித்திரண்டு மூக்குச் சேர்த்து
ஆன தூதுளங்காய் போலுண்ணச் சொல்லே. 446

உண்ணுவது மண்டலந்தான் பத்தியம் கேளு
வுரைத்திடவே மிளநீரு றவாமப்பா

நண்ணயிலே கியாழமொன்று நாட்டக்கேளு
நலமான கல்நார்தான் கழஞ்சுரண்டு
நண்ணயிலே கல்மதந்தான் காசுதூக்கு
கரியான சிறுகீரை வேரைமாட்டி
வண்ணமுறப் பாக்களவு அரசம்பட்டை
வரிவெள்ள ரிவிரையும் வராகனொன்றே. 447

ஒன்றாகக் கூட்டியே வாங்கி வைத்து
உத்தமனே யரசம்பட்டைக் கியாழம் வைத்து
நன்றாகக் காலத்தில் கியாழம் வைத்து
நாட்டவே யரைத்திருந்த மருந்து தானும்
தின்றிடவே நீகொடுக்கில் பெருவயிறு கவுசி
திறமாக ரோகமெல்லாந் தீர்ந்து போகும்
நின்றிடவே காலையந்தி யிருவேளை யுண்ணு
நிசமாகும் படுபருவுக் கியம்பு றேனே. 448

படுவன் பருவுக்கு

படுப்பருக்க ளொழிந்திடவே மருந்து கேளு
பண்பான வவுரிவேர் குடப்பாலை வேரும்
தொடுத்துண்ண மூன்று நாளிற்றீர்ந்து போகுஞ்
சொல்லுகிறே னிவை மூன்றும் பாலிலாட்டி
தடுத்திடவே கைபாகம் பிசகிடாமல்
சார்பாக குருவின்மொழி தப்ப வேண்டாம்
அடுப்பில் வைத்த தரிசியிட்டுச் சமைத்து வுண்ணில்
ஆச்சரியம் படுபருக்கள் தணிந்து போமே. 449

போவதற்குக் குன்றியிலை யிலுப்பைப் பட்டை
புகழான செருப்படியு மூன்று மாட்டி
பாவகமா யிலுப்பைநெய்யி லிட்டுமைந்தா
பண்பாகப் புண்ணிலிடப் பாறியோட்டும்
சாவதில்லை யிவைக்கெல்லாம் படு தாமரைக்குக்கேளு
சாதகமா யைங்கோர வேரின்பட்டை
காவதிக மதுக்காரை வேரின் வித்து
கழஞ்சிரண்டு பழச்சாற்றிற் கரைய ஆட்டே. 450

படர் தாமரை

ஆட்டியே பாக்களவாய் மூன்று கட்டி
யப்பனே யுள்ளுக்கு மேலும் பூசு
வாட்டியே யுதிர்ந்துவிடு மின்ன மொன்று
வளரெருக்கு வேர்ப்பட்டை கம்பின்பட்டை

நாட்டியதோர் தகரைவிரை சேரக்கூட்டி
நாழிப்பால் தன்னிலிட்டுக் காய்ச்சி யாற்றி
தாட்டியே யரைத் தருந்த மேலும்பூச
தனித்தனியே தீருமடா சாற்றக் கேளே. 451

மலட்டு வலிக்கு

சாற்றுகிறேன் மலட்டுவலிக்கு மருந்து கேளு
சாதகமா யெண்ணெயிலே நுணாயிலைச்சா றூற்றி
தேற்றங்கே கொடுத்திடவே நிவர்த்தியாகுஞ்
செப்பக்கேள் திரிகடுகு தூளாயாட்டி
மாற்றமில்லாக் காச்சிவிரை யோம மிந்து
வகைநேராய் வறுத்திறுத்து முன்பொடியுங் கூட்டி
ஊற்றுவாய் நல்லெண்ணெய் விட்டுருட்டி
யுண்ணவே மலட்டுவலி யொழிந்து போமே. 452

பவுத்திரத்திற்கு

ஒழியாத பவுத்திரங்க ளொழிய வென்றால்
உரைக்கிறேன் மேனியப்பா சமூலம் வாங்கி
நெளியாமல் நிழலுலர்த்தா யுலர்த்தி யாட்டி
நேத்தியாய் வடிகட்டி வெருகடி தான்வாங்கி
களியாத வெண்ணெயிலே குழப்பித் தின்னக்
கண்களித்துப் புண்ணுலருங் கடினமானால்
அளியாமல் மண்டலந்தா னுண்ணச் சொல்லு
அப்பனே நீர்ப்பாச்ச லாறுந்தானே. 453

ஆறுமப்பா யிம்மருந்தால் நிசமாய்ச் சொன்னேன்
ஆருக்குஞ் சொல்லாதே யாத்தாள் சொன்னாள்
மீறாமற் கொஞ்சநாள் வியாதி யென்றால்
விரையுடனே யிருபதுநாள் கொள்ளச் சொல்லு
வேறுபடும் வியாதியென்றால் மண்டலந் தானூட்டு
விளம்பினதோர் மருந்தெல்லா முண்மை யுண்மை
வேறுமொரு பதார்த்தங்க ளருந்த வேண்டாம்
வீறுடைய நெய் பாலாம் விரைந்து பாரே. 454

பாரிச வாய்வுக்கு

விரைந்து வரும் பாரிச வாய்வுக் கப்பா
வெள்ளுள்ளிப் பருப்பங்கே சிரங்கை ரண்டு
விரைந்து முளையெடுத் ததனை யோட்டி விட்டு
விரவிநீ பொன்னிறம் போல் வெதுப்பி வாங்கி

விரைந்துடனே விளக்கெண்ணை கழஞ்சிரண்டு
விட்டப்பா பனைவெல்லங் கட்டியொன்று
விரைந்தொக்கத் துடுப்பினால் பிரளக்கிண்டி
வெதுவெதுக்க மூன்று நாளுண்ணச் சொலலே. 455

தாகத்துக்கு

சொல்லுகிறே னுடம்புலர்த்தித் தாகமானால்
சூட்டுவாய் கற்றர்ழை மணியும் நாழி
செல்லவே சண்பகப் பூ லவங்கப் பட்டை
திறமான நல்ல வெல்லஞ் சேர்த்து வுண்ணில்
அல்லலறு மிழத்தல்போந் தாகந்தீரும்
அப்பனே வெகுதாக மடங்கக் கேளு
வெல்லுமே நெருஞ்சிக்காய் பச்சை யோலை
வில்வத்தின் பழச்சதையும் நெற்பொறியும் வாங்கே. 456

கரப்பன் சிலந்திக்கு

நெற்பொரியுஞ் சீரகமு மேலந்தானும்
நேராக வகைக்கங்கே விராகன் றூக்கி
வற்பெரிய கிழிகட்டிப் பாண்டத்தி லிட்டு
மாந்தளிருங் கூடவிட்டுச் சலமும்விட்டு
சொற்பெறவே யருந்திடுகிற்றாகந் தீருஞ்
சொல்லுகிறேன் கரப்பனொடு சிலந்திக் கெல்லாம்
நற்பெரிய நன்னாரி சிறுகுரிஞ்சான்
நன்மூலம் நிலவேம்பு நாட்டக் கேளே. 457

நாட்டவே யந்தரத் தாமரையின் வேரும்
நலமான நெல்லி முள்ளி யீசுரமூலி
கூட்டுவாய் கொழிஞ்சிவேர் பருத்தி வேருங்
கூரான பேய்ப்பீர்க்கின் சமூலங் கூட்டும்
வாட்ட மணித்தக்காளி வேருங்கூட
வரைந்திடித்து வெள்ளாட்டு நீரைவார்த்து
நீட்டியே பிசைந்ததனை வடிதான்கட்டி
நிம்பநெய் நல்லெண்ணெய் தேங்காய் நெய்யே. 458

நெய்யுடனே புங்கெண்ணெய் நாலும் நேராய்
நீ கலந்து சாரணை நெகிழ வார்த்து
மெய்யாக வடித்திருத்துக் குடிக்கச் சொல்லு
மேலுக்கும் பூசிடவே விரணந் தீரும்
கொய்யவெந்நீர் விட்டுக் குளித்து வரச்சொல்ல
குணமுள்ள தாகவே யிருக்கும் பாரு

எய்யாத சடைக் கிரந்தி யொழிவதற்கு
இயம்புகிறேன் மருந்துவகை யியம்புறேனே. 459

குக்கில் நெய்

இயம்பியதோர் குக்கில்நெய் தானப்பா
யீரிரண்டு கழஞ்சி யொடுகுக்கில் தானும்
நயம்பெறவே வேப்பிலைச்சார் விட்டவித்து
நாட்டடா யிருகழஞ்சு நெல்லிக்கெந்தி
நயம்பெறவே செய்பாகம் தவறிடாமல்
நாட்டடா மருந்தையப்பா நவிலக் கேளு
வியம்பெறவே யாட்டி நீ வழித்துக் கொண்டு
வாரடா நெய்நாழி தாளிக் குள்ளே. 460

தாளிக்குள் மருந்திட்டுக் கலக்கிக் காய்ச்சி
தயவாக வடித்திருத்துக் கடுகுகூட்டி
வாளிப்பாய் காசெட தானிரண்டு தூக்கி
மகிழ்ந்துண்ணத் தினமஞ்சு மைந்தா கேளு
சாளித்த சடை கரப்பன் தீர்ந்துபோகுந்
தரியாத விருமலுக்குப் புகையைக் கேளு
பூளித்த பொன்தாரஞ் சுத்திசெய்து
பொம்பரக்கு மவ்வண்ண மாகுந்தானே. 461

அவ்வண்ண முருக்கியே பாவட்டங் கம்பா
லப்பனே சாதித்து வுண்டை செய்து
அவ்வண்ணம் புளியந்தோல் கரத்திலிட்டு
அனலிட்டுத் தழலாக்கி யவர்முன் வைத்து
அவ்வண்ண மண்டலந்தா னுண்ணும்போது
அப்பனே வியாதியெல்லாந் தீருந்தீரும்
அவ்வண்ண மிருமல்போம் பக்கமொன்று
அப்படியே புகைபிடிக்க வுண்டா காதே. 462

இருமலுக்கு புகை

அண்டாது யின்னமொன்று தாரத்தோட
அழகான பொற்கொன்றைப் பட்டைதானு
முண்டாத அவரையிலை நீர்விட்டாட்டி
முலாவெள்ளைச் சீலையிலே தடவித்தீற்று
தண்டாத நோயுள்ளோன் மோருஞ்சோறுஞ்
ச்சாப்பிட்டுப் புகைகொளுத்திக் குடிக்கச் சொல்லு
மிண்டாது யிருமல் போமின்ன மொன்று
வெள்ளியதோர் சீலையிலே பிரண்டைச் சாறே. 463

பிரண்டைச் சார்விட்டு நன்றாய்ப் பிரட்டிக்கொண்டு
பின்புகேள் தேங்காய் தான்குழைய ஆட்டி
பிரண்டைச் சாறது வட்டியேதுணியில் தேய்த்துப்
பேதமின்றி யுலர்த்தியே மறுநாட்கேளு
பிரண்டையது மேனிச்சாற் பிரளத் தேய்த்துப்
பொன்னி னரிதார மதிற் பிலக்கத்தேய்த்து
பிரண்டிடா துலர்த்தியே திரியாய்க் கட்டிப்
பிடித்துநீ மோருஞ்சோறுண்ணச் சொல்லே. 464

உண்டபின்பு நல்லெண்ணெய்க் குள்ளே மைந்தா
வுறவெடுத்துத் திரிநனைத்து வுதறிப்போட்டு
உண்டிடவே திரிகொளுத்தி யவித்து நீயு
மூறிவரும் புகையெல்லா முண்டாயானால்
மூண்டுவிடு மிருமலெல்லாம் பயந்தேயோடு
மொருமூன்று புகையும் வெகுவுசிதமாகு
மூண்டுவிடு நோயெல்லா மற்பமாகு
முரைக்கிறேன் மாத்திரைதா னுரைக் கிறேனே. 465

காலாந்தவைரவன் மாத்திரை

உரைக்கிறேன் மாத்திரை பேரப்பா கேளு
உயிர்க்கருள் காலாந்த வைரவன் தானென்பார்
உரைக்கிறேன் வெண்காரம் சூதம் நாபி
உற்றலிங்கம் நேர்வாளம் திரிகடுகு தானும்
உரைக்கிறே னிவையெல்லாஞ் சமனாய்த்தூக்கி
உற்றபழச் சாறிஞ்சிச் சாறுங்கூட்டி
உரைக்கிறே னிச்சாறிரண்டுஞ் சேர்த்து
ஒருசாம மாட்டியே யுண்டைசெய்யே. 466

உண்டைகுன்றி யிடைகட்டி நிழலுலர்த்தி
யூட்டுவாய் சீதசுர மொழிய வென்றால்
சண்டையறும் வேர்க்கொம்பு கியாழமத்தால்
தக்கருவா யிஞ்சியுட சாற்றிலாதல்
பண்டை சுறுந்தாபசுர மொழியவென்றால்
பழச்சா றிஞ்சிச்சாறும் பதமாய்ச் சேர்த்து
தொண்டையுறக் குள்கையிட்டு யருந்த நல்குந்
துடரத்தி சுரத்துக்கு முலைப்பால் கூட்டே. 467

கூட்டையிலே பத்தியங்கேள் காலத்தாலே
குமையவே பால்கஞ்சி யந்திநேரம்
வாட்டமின்றிச் சோறுடனே முருங்கைச் சாற்றை
மைந்தனே மாலைக்குக் கியாழங் கேளு

மூட்டையிலே செந்தொட்டி பேராமுட்டி
முள்ளிவேர் பற்பாடகஞ் சீந்திற்றண்டு
நீட்டவே முத்தக்காசு இவைகள் சேர
நேர்ந்த சமபாக மதாய் நிறுத்திடித்து
ஊட்டவே யெட்டொன்றாய்க் கியாழங்காய்ச்சி
யுண்ணச்சொல் சன்னிக்கு வுரைக்கிறேன். 468

சன்னிக்கு நசியம்

உரைக்கிறேன் சன்னிக்கு நசியஞ் சொல்வோ
முற்பனமாய் தேத்தின் காய்ப் பிஞ்சுநன்றாய்
அரைக்கக்கேள் வெண்சீலை யதன்மே லூட்டி யாற்றி
யடைவாகச் சன்னிவந்து அசதியானால்
விரையவந்து சீலையிலே கொஞ்சங்கீறி
மென்முலைப் பாலதனை விட்டு கசக்கிமுக்கில்
புரையேறாதே பிழியில் வாந்தியாகும்
பொருமலொடு நெஞ்சுவலி போகுங்காணே. 469

சன்னிக்குத் தயிலம்

காணப்பா முக்காலும் விஷநீர் வீழும்
காணாமல் விழுந்தோடுஞ் சன்னி யெல்லாம்
பூணப்பா யெண்ணெய் முதலியம்பக் கேளு
புகழவே வேப்பந்தோல் சாறுழக்கு வாங்கி
தோனப்பா பிரமிச்சாற் துளசிச்சாறுஞ்
சுகமான திராய்ச்சாறும் வகைக்குழக்கு
ஆணப்பா யிலவேரும் பலமுங்காலா
யறிற்றூக்கு முசுறுட்டைப் பலமுங்காலே. 470

காலப்பா வெளிச்சமாம் பிசினுங் கால்காண்
கலந்துமிக விரைந்தாட்டி வழித்து நீயும்
காலப்பா வேப்பெண்ணெய் படியும் விட்டு
காச்சியே காசெடை தானுண்ணச்சன்னி
காலப்பா கிழிந்துவிடும் நவத்துவராங்
கதுப்பெல்லாங் குளிர்ந்திடவே களங்காதீரும்
காலப்பா சுரம் வந்த வுடனேதீரக்
காட்டுகிறேன் பற்பத்தின் பெருமைக் கேளே. 471

பிரளய காலாந்த வைரவன்

பேருரைக்க மைந்தனே கேளுகேளு
பிரளைய காலாந்த வைரவன்தானப்பா

பார்புகழ் மரிதாரங் கட்டியொன்று
 பண்பாகப் பூசினிக்காய்த் தண்ணீர்க்குள்ளே
பேர்நோக்கித் தோளாந்த மெரித்துவாங்கிப்
 பிரட்டுவாய் சுண்ணநீர் கொண்டுபின்பு
ஆரவே தோளாந்த மெரித்துக்கொண்டு
 அந்திடைக்குச் சுத்திசெய்த நாபிதூக்கே. 472

தூக்கியே பிரண்டைச்சார் தன்னாலாட்டிச்
 சுருளவதைக் குகையிலிட்டு செம்மண்செய்து
தாக்குவா யுலையிலிட்டுப் பழுக்கவூதித்
 தழலாறி யெடுத்துநீ வைத்துக்கொண்டு
நேக்கவே சுக்கதனை தூளாயாட்டிச்
 சிறப்பாகத் திப்பியுந் தூளாயாட்டி
பார்க்கவே சுரம்வந்தாற் பொடியிரண்டில்
 பணவிடையும் நன்னாலு பண்பாய்த் தூக்கே. 473

பண்பாக முன்பொடியும் நாலுங்கூட்டி
 பதமாக மத்தித்து பணந்தான் கால்நீ
எண்பதற்கு வெற்றியிலையிற் கொடுக்கும்போது
 உடனேவிடும் விடாவிட்டலுரைக்கக் கேளு
கண்பார்த்து அரைப்பணந்தான் வெற்றிலையிலூட்டு
 காட்டுமுன்னே சுரந்தணியுங் காட்டவேண்டாம்
நண்பாகச் சுரங்களுக்குப் பண்டிதலாஞ் சிங்கி
 நாட்டமா யென்பதைநீ நாட்டக்கேளே. 474

பண்புதலாஞ்சி குளிகை சுரங்களுக்கு

நாட்டமுறுங் கடுக்காய்தான் பத்துவாங்கி
 நால்வராகன ஞ்சப்பா லிங்கமொன்று
காட்டவே சாத்திரவேதி யொன்றுக்கு
 நாபியொன்று தான் சேரக்கூட்டி
ஆட்டியே தூளாக்கி வைத்துக் கொண்டு
 அப்பனே பணவிடை தானெடுத்துக் கொண்டு
நீட்டுவா யனுபான மிளகுநீர் தன்னில்
 நினைவாகத் தயிர்வெல்லங் கச்சாயத் தூட்டே. 475

கச்சாய பேய்வாழை பழமுமாகுங்
 கனசுரங்கள் கலைந்துபோம் பத்தியங்கேளு
கச்சாய மோருஞ் சோறுண்ணச் சொல்லு
 காட்டாதே யாருக்கு மிந்தநூலை

கச்சாயஞ் சுரங்களுக்குக் குளிகை சொல்வோங்
    கனசூதம் வெண்கார மிளகுதானும்
கச்சாயந் திப்பிலியு மற்றம் வித்தும்
    களங்க மின்றிச்சரி தூக்குக் கல்வத்தூட்டே. 476

ஊட்டியே மத்தஞ்சாறு விட்டுநீயும்
    உறவாக யேழரைப்பு சாமமொன்று
ஆட்டியே குன்னியிடை குளிகைகட்டி
    யாறியபின் னெருக்கம்வேர் கியாழத்தூட்ட
மூட்டியே செவ்வியத்தூள் விராகனொன்று
    மொன்றிட்டுக் குளிகையொன்று முழுங்கநல்கி
நீட்டவே வாதசுரஞ் சன்னிமூர்ச்சை
    நிலையாத குளிர்ந்த சுரமனைத்தும் போமே. 477

அர்த்தனாரீ சுரம்

போமப்பா குளிகை யொன்று தயிலத்தூட்டப்
    பொடியாகுஞ் சுரங்களெல்லாம் பத்தியந்தான் சொல்வேன்
ஆமப்பா தயிருஞ்சோறுண்ணச் சொல்லு
    அர்த்தனாரீ சுரத்தை யறையக் கேளு
வேமப்பா நாபிகெந்தி வெண்காரஞ் சூத
    மீறாமற் கரிதூக்கி நொச்சிச் சாற்றால்
சாமப்பா சாமமொன்றாட்டி வாங்கி
    தயவாக குகையிலிட்டு சீலைசெய்யே. 478

சீலையது மண்செய்து சட்டிக்குளிட்டுச்
    சிறப்பாக்க கீழிலு முப்புபோட்டு
சாலவே மேலுமந்த வுப்பையிட்டுச்
    சட்டி கொண்டு கவிழ்த்ததைத் தைக்கமூடி
ஆலையடுப் பேற்றியே கமலவன்னி
    யாட்டுவாய் மூன்று பத்துக் கடிகையப்பா
காலையிலே செஞ்கழுநீர்க் கிழங்குச் சாற்றால்
    கடுகவரை மறுநாளில் நொச்சிச் சாறே. 479

நொச்சிச்சாறு விட்டாட்டி மூன்று நாளில்
    நேகவரைப் பாகற்சாறு விட்டு மைந்தா
அச்சமற வுலர்த்தியே தூளதாக்கி
    அப்பனே குழியிலே யிடித்துக் கொண்டு
உச்சிதமாய் முன்சொன்ன சாறும்வாங்கி
    ஒவ்வொரு பணவெடை தானுண்ணச் சொல்லு
நச்சியிடுஞ் சுரந்தீரும் வயணங்கேளு
    நான்குபுற மொருபுறத்தில் நாட்டக்கேளே. 480

நாட்டப்பா மருந்திட்ட சாற்றை வாங்கி
நாசி யொன்றில் நசியமிடச் சுரத்தைக் கேளு
மீட்டப்பா மொருபுறத்தி லடிக்குங் கண்டாய்
மீளவந்த நாசியிலே நசியமூற்றி
காட்டுமுன்னே யிருபுறமுந் தணிந்துபோகுங்
சுருக்கிவிடும் விஷபாகக் கர்மம் போக
கூட்டுமுன்னே ரெண்ணைக்கு யோகந்தானுங்
கூறக்கேள் புலத்தியனே கொள்கநீயே. 481

விஷபாகத்துக் கெண்ணெய்

கொள்கடா விளக்கெண்ணெய் படியும்நாழி
கூறமுறம் பெருவாயன் பாலுழக்கு
கொள்கியதோ ரீருள்ளிச்சாறு தானுங்
கூட்டமா யரைப்படியுங் குறையாதப்பா
கொள்குவாய் காணாக் கிலையுமிக்க
கொட்டங் கரந்தையிலை சின்னிபத்திரி
கொள்கியதோர் காற்றெட்டி நாயின்பத்திரி
கொத்தோடே கற்பூரவள்ளி தானே. 482

வள்ளியொடு துளசி விஷ்ணு கிரந்தி தானும்
வ:ளர் சங்கக்குப்பி யொடு பருத்தி பத்திரி
கொள்ளியெனு மருதிலையங் கொற்றான் சங்கு
கோழியவரை யிலையும் பிரமி மேனி
வில்ளியெனும் வாதமடக்கித் தானும்
வேளையிலை யிவைசாறு வகைக்குழக்கு
தெள்ளவே சிற்றவரைக் கிழங்கு தானுஞ்
சிறுகுறட்டை யப்பை கிழங்கு தானே. 483

கிழங்குடனே நன்னாரி வனத் தேத்தான் வேருங்
கிருபையுருஞ் சிறுகிளா பெருங்கிளா வேர்
களங்கமில்லாப் பாதிரிவேர் முன்னை வேருங்
களச்சியிவை வகைக்கு நீயிரண்டு தூக்கி
வழங்கவே கார்கோலி னரத்தை மஞ்சள்
விழாமரிசி யிலவங்கப் பூதவிருட்சம்
புழங்காத ஆயிலத்தோல் பெருமரத்தின் பட்டை
பொலிவாகக் கழஞ்சைந்து வகைக்குத்தூக்கே. 484

கழஞ்சாகக் கூட்டியே யாட்டி வாங்கிக்
கலவடா முன்மருந்தின் சாற்றினோடே.

விளஞ்சிடமே யடுப்பேற்றி மூன்றுநாள்தான்
வெதுப்பியே கொதிப்பித்து நாலாநாளில்
சளந்திர விநாயகர்க்குப் பூசை செய்து
தாய்பதத்தை மறக்காமல் வடித்து மைந்தா
வுளங்குளிரக் காசிடைதா னிரண்டு தூக்கி
யுண்டுவர மேலுக்கும் பூசலாமே. 485

வங்க பற்பம்

பூசிடவே விஷபாகம் பாண்டுதீரும்
பொறுமலரும் சோகையறும் வீக்கந்தூக்கம்
மாசியறும் வங்கபற்பந் தன்னைக்கேளு
மைந்தனே பதினெட்டு குட்டந் தீரும்
வாசியுறும் வங்கத்தை யுருக்கிச்சாய்த்து
மலரவே யிறகுபோல் தட்டிவெட்டி
பாசியுறும் நொச்சியிலை துலாந்தான் வாங்கி
பண்பாக வுலர்த்தியதைத் தூளாயாட்டே. 486

ஆட்டிநீ பரப்பியே சீலைக்குள்ளே
யதன்மேலே வெள்ளை வங்கத்தகட்டை வைத்து
நீட்டியே ருலைத்தூலை மேலுந்தூவி
நேர்ப்பாகப் பாயிலே சுருட்டிக் கொண்டு
மூட்டியே யிருதலையுந் தீயை வைத்து
முடங்காமற் றினமொன்று யெரித்து நீயும்
நாட்டியதோர் தகடெல்லா மெடுத்துக்கேளு
நன்றாக வேகாத தகட்டைதள்ளே. 487

தள்ளிவிட்டு வெந்ததெல்லா மெடுத்துக்கேளு
தயவாகச் சிமிளிலே யடைத்துக் கொண்டு
தெள்ளிய தோரனுபானங் கார்கோல் வித்து
திறமான வாடுதின்னாப் பாளை வித்து
துள்ளியே யிவைசமனாய்த் தூளாயாட்டிச்
சூரணஞ் செய்வெல்ல மிதிற்கூட்டி மைந்தா
அள்ளியிடு வெருகடிதான் வெண்ணெய் நெய்யி
லாகாத குட்டம் பதினெட்டும் போமே. 488

போவதற்கு வங்கபற்பம் பணந்தான் றூக்கி
பூட்டடா வெண்ணெயிலே வெட்டைக் கெல்லாம்
காவதற்குச் சயரோகஞ் சுவாசகாசங்
கடுவிளைப்பு யீளைக்குத் தேனிலூட்டு
பாவதற்கு யெலிப் புழுக்கை முகட்டைத்தோடு
பைங்கோழிக் கட்ட மிவை சுட்டசாம்பல்

வேவதற்கு காசிடை தானாலுதூக்கி
விரவிநீ பணவிடைநற் பற்பந்தானே. 489

பற்பமொடு வெள்ளரிக்காய் வெந்ததண்ணீர்
பாங்கான வெள்ளாட்டுப் பாலிலாதல்
பற்பமிடு மிளகுநீரா லிவற்றி லாட்டப்
படரான கல்லடைப்பு சதையடைப்பு
பற்பமிட்டு அழிந்துபோங் கிரிச்சினங்க ளெல்லாம்
பாய்ந்தொழுகுஞ் சலக்கழிச்சல் பாகமாக
பற்பமிடு காந்தசெந்தூரங் கூட்டிப்
பரிந்தேனி லுண்டிடவே பரிகாரமாமே. 490

சூலைக் குடோரி

பரிகாரம் வெள்ளரிக்காய் வெதுப்புத் தண்ணீர்
பழக்காயின் விரையுடனே யாட்டிநீயும்
பரிகாரம் பற்பமிடு கிரிச்சினங்க ளாறும்
பற்றறுக்குங் கல்தெறிக்கும் பகரக்கேளு
பரிகார முட்டையோடு எலிப்புழுக்கை
பகர்காரம் வெள்ளையெச்சம் பதமாய்ச்சேரே
பரிகாரம் வெண்காரம் பொரித்துக்கொண்டு
பாச்சடா காசிடைநீ யாட்டுப்பாலே. 491

பாலிலே பொடியிட்டுப் பற்பமிட்டு
பருகவே மேகமென்ற தனைத்தும்போகும்
காலிலே கையிலே சூலையானால்
காட்டுகிறேன் சூலைக் குடோரிதன்னை
சூலிலே உரைசூதந் தாரங் காரஞ்
சுகெந்தி திரிபலையுந் திரிகடுகு வாளம்
சாலிலே வளர்கரிப்பான் சாற்றில்நீயுஞ்
சாமம் ரண்டு ஆட்டித் தயவாய் வாங்கே. 492

வாங்கியே குன்றியிடை குளிகைகட்டி
மாட்டுவாய் மிளகு தண்ணி ரிஞ்சிச் சாற்றில்
தாங்கியே வெவ்வேறு குளிகை யூட்டச்
சாற்றுகிறேன் சூலையெட்டுஞ் சாடிப்போகும்
நீங்கியே குன்மம்போ மகவை போகும்
நேராத நரிச்சூலை நிவர்த்தியாகும்
பாங்கியே இக்குளிகை சூலைக்கெல்லாம்
பாடுகிறேன் ரதாரம பாணந்தானே 493

இரசூரம பாஷாணம் துத்த செந்தூரம்

காணப்பா குன்மங்கள் அதிசாரமான
கிராணி முதல் பல்வகைக்கும் களங்கம்போலத்
தோணப்பா துத்தத்தின் செந்தூரந் தான்
சூட்டுகிறேன் துத்தமொடு காந்தந் தாரம்
வணப்பா வெண்காரம் நிமிளைதானும்
ஒவ்வொன்றுக் கொவ்வொன்று குழஞ்சுகூட்டி
பூணப்பா கெந்திரண்டு பலகரையு மைந்து
பொருந்தவே பழச்சாற்றா லாட்டி வாங்கே. 494

வாங்கிநீ குகைச்சேர்த்துச் சிறுபுடத்தைப் போடு
மைந்தனே செந்தூரமாகி நிற்கும்
வாங்கியே காசளவு சீனிக்குள்ளே
மாட்டடா செந்தூரம் பணந்தான்தூக்கி
வாங்கியே வயிற்றுவரை கிராணி போகும்
வறள் குட்டம் சலக்கழிச்சல் மாண்டுபோகும்
வாங்கியே சாதிக்காய் பொடியுலூட்டு
மாந்தமாய்க் கழிகிற மயக்கம் போமே. 495

இரச கற்பூரம்

மயக்கமறுஞ் செந்தொட்டி வேரைவாங்கி
மைந்தனே தோலுரித்து தூளாயாட்டி
மயக்கமறுஞ் செந்தூரம் வயிற்றிலீய
வந்த கிராணியெல்லாம் வாங்கும் பாரு
மயக்கமறு மிரத கற்பூரஞ் சொல்வோம்
வியாதியெல்லாந் தீர்ந்துபோம் வரிசைகேளு
மயக்கமற வுப்புளுக்குச் செங்கல்தூளும்
வரிசைபெற வழித்தெடுத்து வைத்திடாயே. 496

வைத்ததோர் இருவகையுந் தூளாயாட்டி
மைந்தனே சட்டிக்குள் பாதி நீயும்
வைத்திடுவாய் அதிற்குகையைச் சூதமப்பா
வாரடா கழஞ்சு பத்து மாற்றமன்றி
வைத்தங்கே குகைவாயில் பொடியுமிட்டு
மறுசட்டி கொண்டிட்டு வாயைமூடி
வைத்துநீ யேழுசீலை மண்ணும் பூசி
மாயி பதம் பூசித்து அடுப்பி லேற்றே. 497

அடுப்பேற்றிக் கமலவன்னி தினந்தா னொன்று
அதன்பிறகு க்காடாக்கினி யுந்தான் மூன்று

கடுப்ப முடனாலு நாள் சென்றபின்பு
கன்றினிட சாணியந்தக் கட்டுமண்ணும்
நடுப்போலே கட்டிநீ தண்ணீ ரூற்றி
நன்றாகச் சுவறிப்பின் சீலைகொண்டு
வடுப்பாகா தேவாங்கிப் பின்னுங்கேளு
மறுபடியும் நீர்விட்டு எரித்திடாயே. 498

எரித்தாறி யெடுத்துப்பார் சட்டிமேலே
ஏறிநிற்குங் கற்பூரம் எடுத்துவைத்து
அரித்திடும் நாய்ச் சூலை மண்டை சூலை
அப்பனே நாசிப்புண் தொண்டைப் புண்ணும்
பரித்திடுமே நாசிநீரி கண்ணில் பாரும்
பாங்கான நீரிலே கொள்ளத்திரும்
பொரித்திடவே யிடையேது பணத்திற்பாதி
பூட்டடா சூலைமுதற் புண்ணும்போமே. 499

குரு முன்விற்கவும்

புண்போகுங் குன்மத்துக்கு அனுபானஞ் சொல்வோம்
பொடி செய்வாய் திரிகடுகு மணந்தான் மூன்று
பண்பாகக் கற்பூர மரைப்பணந்தான் தேனில்
பாச்சடா குன்மமெல்லாம் பறந்துபோகும்
கண்பாராச் சூலைக்கு ளெள்ளுவாய்ப் பிசின்
கடுஞ்சுக்கு காயமாம் வெள்ளுள்ளி யாதல்
உண்பதற்குக் கொடுத்திடவே நிவர்த்தியாகு
முறைக்கிறேன் கிராணிக்கு யுண்மை கேளே. 500

இரச பற்பம்

உண்மைபெறச் சாதிக்காய்த் தூளிலிட்டு
ஒடுங்காத கடினமாம் வாய்வுக்கெல்லாம்
வண்மையுடன் சீரகக் கியாழத்தி லூட்டு
வருத்தமறு மிரதபற்பம் வைக்கக்கேளு
வெண்மையுறுஞ் சூதமொன்று கெந்தியொன்று
மீறாமற் றூளாக்கி வாங்கிக் கொண்டு
கண்மையுறு மேரண்டத் தயிலத்துள்ளி
காட்டியே மத்தித்துக் கலரவையே. 501

கலந்ததொரு சூதத்தைத் தேன்புரட்டி
கபடாக வுருட்டியே கருத்தாய் மைந்தா
குலர்ந்துசெங்கல் குளிகை பிடித்துக் குடைந்துஅங்கே
கூரான யெருக்குப் பொன்னாவரையின் பழுப்பு

பிலக்கவே மிளகு மிவை நேராயாட்டிப்
பேணியே யென்மகனே யெடுத்துக் கொண்டு
பிலக்கவே செங்கல்லுக் குள்ளேபூசி
புகட்டடா களங்கமென்ற சூதம் கேளே. 502

கேளடா களங்கம் வைத்து மருந்தால் வாயைக்
கெட்டியா யடைத்து மறுசெங்கலாலே
சூளடா வடைத்து நன்றாய்ச் சீலைசெய்து
சூட்டடா யெழுசீலை மண்ணுமேலே
ஆளடா குழியொன்று முழத்தில் தோண்டி
யதுநிரம்ப விறகெருவும் போட்டெரித்து
நீளடா குழிநிரம்ப மணலைக் கொட்டு
நினைவாக யெருவடிக்கிப் புடத்தைப் போடே. 503

புடம்போடு பதின்மூன்று வாட்டி மைந்தா
புகழான சூதமங்கே பற்பமாச்சு
கடம்போடு நோய்க்கெல்லாம் பணிவிடைதான் சத்து
காசிடை சீரகமு மதில் தேனுங் குத்தி
உடம்போகவே றுண்ண நெஞ்சுவலி கிராணி
யொழியாத கிராணிக்கு யனுபானந் தானும்
திடம்போடு சாதிக்காய் கிராம்பு பத்திரி தேனுஞ்
சேர்த்திடு வாய்வுக்குச் சீரகத்தைக் கூட்டே. 504

கூட்டி விடு வசைதீர்க்க வென்றால்
கூறுகிறே னெருக்கம்பால் துளியிரண்டு
மூட்டடா செந்தூரம் பணந்தானப்பா
வுத்தமனே பழச்சாறு துளசிநீராம்
நாட்டுமா தளைப்படிநீர் தண்ணீராகும்
நல்லகண்டங் கத்திரிச்சாறு பழச்சாறு நேராய்
ஊட்டுவாய் சயமுதலாய் நெஞ்சக்கட்டு வுற்ற
நீர்ப்பாய்ச்சலிவை அனைத்தும் போமே. 505

குருமுன் நிற்கவும் பண்டிதன்

போமப்பா குருவை நெல்லாறு கழஞ்சிரண்டு
பொதிந்தூட்டுந் துன்மாங்கிஷ மடைப்புத் தீரும்
நாமப்பா யிப்படியே நிச்சமாய்ச் சொன்னேன்
நாலாயிரத்து நானூற்று நாற்பத்தெட்டும்
ஏமப்பா நோயென்ற தெல்லாம் போகும்
என்மகனே யுந்தனுக்கு வுரைத்தோமப்பா
ஆமப்பா வியாதிக்கு மார்பிலாணி
யறிந்தவனே யருள்யோகி பண்டிதனு மாமே. 506

பண்பு தனும் பரிகாரி வயித்தியனெனவும்
  பகருகின்ற மொழியெல்லா மவனுக்காகும்
கண்பு தமாய் முகம்பார்த்து நோவைப்பார்த்து
  காற்றெழுந்த நாடியுட கலக்கம் பார்த்து
முண்டிவரும் மூன்றுக்கும் நவதாது பார்த்து
  முனைக்கண்டு மருந்திட சடுக்கங்கண்டு
அண்டினபின் பொருளாசை மிகுந்திராமல்
  அரிந்து செய்வோ னெழுபிறப்பு மயனாம்பாரே. 507

அரிதார பற்பம்

பாரப்பா யரிதார பற்பந்தன்னை
  பாடுகிறேன் பொன்தாரம் பலமதொன்று
நேரப்பா நற்காந்த மஞ்சாங் கற்பம்
  நீற்றியே யரைப்படியும் நினைவாய் வாங்கி
சேரப்பா சட்டிக்குள் சாம்பலிட்டு
  சிறக்கவே யரிதாரம் பாத்திமேலும்
வாரப்பா சாம்பலிட்டுச் சட்டியால் மூடி
  வடிம்பெல்லாஞ் சீலைசெய்து மண்ணுஞ் செய்யே. 508

சீலைசெய்து அடுப்பேற்றி யொருநாள் மட்டுந்
  தீயாறாதே யெரித்து வங்கபற்பம்
சாலவே பணவிடைநற் றேனிலூட்டு
  சகலபுண்ணுஞ் சூலையோடு வாதம் வாய்வு
வாலைப்பெண் போலவரு சயரோகம்போகு
  மாட்டுதற்குத் திரிகடுகு தேனுமாகும்
காலனாம் நோய்களெல்லா மரிதாரக் கறுப்பு
  கைமுறையாய்ப் புலத்தியனே கண்டிடாயே. 509

கட்டிடா ரிஷியினொடு முனிவர் தேவர்
  கணநாதர் சித்தர்களும் யோகிஞானி
யெரண்டிடார் பலநூலும் பலமுகமாய்ப் பாடி
  யூரிலே யலைந்திடவும் பித்தரெல்லாம்
கண்டிடாக் கற்பங்கள முதமுண்ணார்
  கருவி புறக்கருவிகளுங் காணார்காணார்
பண்டிடார் செககண்டி மறைத்தடித்தார்
  பார்த்தறிந்தோன் மெய்ஞ்ஞானி பார்த்திடாயே. 510

பார்த்திடவே ரண்டுபலந் தாரம்வாங்கிப்
  பாங்காகவே நறுக்கிப் பண்பாய் மைந்தா
சேர்த்திடவே சாரணையைச் சமூலமாட்டிச்
  செப்பரிய சட்டிக்குள் முக்காலிட்டு

வார்த்திடவே சட்டிமேல் தாரம் வைத்து
மறுபடிபின் சாரணையை வைத்துமூடி
நேர்த்திடவே சில்லிட்டுச் சீலைசெய்து
நினைவாக மூடியேழு மண்ணுஞ் செய்யே. 511

மூடிநீ தீயெரிப்பாய் சாமம்நாலு
முதிரவது வாறியபின் னிறக்கிவைத்து
நீடிநீ சட்டிக்குள் பற்றித்தீய்ந்து
நின்றதெல்லாங் களைத்து மற்றதெல்லாம் பற்ற
மூடிநீ கல்வத்தில் தூளாயாட்டி
யுற்ற சிறுகுழலிலே அடைத்துவைத்து
நாடிநீ பதினெட்டுக் குட்டந்தீர்க்க
நல்வீரப் பெருக்குடனே கிராம்பு சேரே. 512

சேரப்பா சமபாகந் தயிலம்வாங்கிச்
சிறப்பாகப் பணவெடைதான் தயிலத்துள்ளே
ஆரப்பா பற்பத்திற் பணத்திற் பாதி
அளித்திடவே குட்டமொடு புண்கள் நோயாம்
பேரப்பா வொழிந்துவிடும் தேனுங்கூட்டு
பிலத்தூட்டு பட்சமொன்று பிரிந்துபோகும்
நேரப்பா வொழிந்துவிடு மிவைக்கெல்லாம் பத்தியங்கேளு
நெய்யாகும் பாலாகும் பழமுமாமே. 513

பழமாகும் வெள்ளாட்டி னிறைச்சியாகும்
பருமாத்த வெந்நீரும் பருவம் வேணும்
சளந்திரு மிரத செந்தூரஞ் சொல்வோம்
சகலசங்க நோய்க் கெல்லாஞ் சஞ்சீவியாகும்
விளந்தீருங் கெந்தியொன்று தாரமொன்று
மிக்க நவ்வற் பட்டையொடு அரசம்பட்டை
அளந்தீரும் பருத்தியிலை பாகலிலை சேர்
அப்பான சரியிடையாய்ச் சேரு சேரே. 514

இரச பற்பம்

சேர்த்ததனை மயனம் போலா ட்டிவாங்கிச்
செப்புகிறேன் புதுச்சட்டிக் குள்ளே நீயு
மாத்தமுர்த மூன்றுபடி யுப்புமிட்டு
மயனமென்ற மருந்ததற்குள் நடுவே வைத்து
வார்த்திடுவாய் சூதமதிற் பலந்தா னொன்று
மறுபடியும் நீமருந்தாலே குழியைமூடி
சாத்தியே சில்லிட்டு சீலைசெய்து
தணலூட்டி பதின்மூன்று கடிகைதானே. 515

பதின்மூன்று கடிகைநீ யெரித்துவாங்கு
பதத்தோட செந்தூர மருணன் போலாம்
விதிநூறுங் குழலிலே யடைத்துக்கொண்டு
மிஞ்சியதோர் சட்டிக்குள் வெல்லமிட்டு
மதிநாறும் பிரட்டியந்த வெல்லந் தன்னை
மாட்டுவாய்ப் பருத்திவிரைப் பிரமாணத்தில்
கதிநாறு பதினெட்டும் சூலை தீரும்
கருப்புட்டிப் பணவிடையில் வெல்லமூட்டே. 516

வெல்லத்தி லூட்டிடவே பக்கசூலை
மேல்சூலை கால்சூலை கண்டசூலை
வெல்லத்தி லூட்டிவே தசையில்சூலை
வீக்கமொடு புண்பிளவை முழந்தாள்சூலை
வெல்லத்தை யூட்டிடவே சத்துநோயும்
மொய்க் குடைச்ச லெலும்புருக்கி விரணம் போகும்
வெல்லத்தி லூட்டிடிவே நோய்களெல்லாம்
வீரடங்கும் பத்தியங்கள் முருங்கைத் தண்டே. 517

தண்டுடனே துவரையா மற்றொன்றாக
தண்ணீர் தான் வெந்நீராந் தாழ்ச்சியின்றி
மிரண்டு புரிநோக்கெல்லாஞ் சத்தஞ் சூதம்
வெள்ளையாஞ் செய்கிற விபரங்கேளு
மொண்டு வாரிரண்டு பலச் சூதங்கல்லில்
மூவிலை மின்னைச்சாறு முழங்கவிட்டு
கண்டிதமாய்க் கடிகைதா னூறமத்தி
கனக்கவதை மூன்றுண்டை கட்டுகட்டே. 518

கட்டினதைச் சட்டிநடு வைத்துநீயுங்
கனலூட்டு நாற்கடிகை பின்புகேளு
தட்டியே சுரையெல்லாஞ் கிண்டிக் கிண்டித்
தான் வறுப்பாய் நாற்கடிகை தப்பாதப்பா
துட்டியன்றிச் சூட்டடா கல்வத்திட்டுச்
சுருளவே நாற்கடிகை தூளாயாட்டி
கொட்டியிடு குழலிலே பதனம் பண்ணி
கொள்ளடா வனுபானங் கூறுகிறேன். 519

பரங்கிப்பட்டை ரசாயனம்

கூறக்கேள் பணவிடைநீ பற்பந்தீர்த்து
குளிர்ந்திருந்த வெல்லத்தில் குணத்தைக் கேளு
மீறக்கேள் பெருஞ்சூலை பக்கசூலை
விலநோயும் பழுவெலும்பு வீக்கந் தூக்கம்

ஏறக்கேள் குன்மம் போம வத்தைசூலை
எட்டு வகைச் சூலையெல்லா மிதமாம்பாரு
பாறக்கேள் பட்டையிலே ரசாயனத்தைச் சொல்வோம்
பட்டையஞ்சு பலம்வாங்க வெள்ளைப்பாகே. 520

பட்டைதனைத் தூளாக்கி யெடுத்துக்கொண்டு
பகரோம மதிவிடையம் குராசானி யோமம்
கட்டையெனுஞ் சாதிக்காய் சாதிபத்திரி
கிராம்பு சுக்கு திரிபலை நன்மிளகு சேர்த்து
தட்டை பண்ணி வகைக்கு நீ பலமுங் கால்தான்
தளராட்டிப் பாண்டத்தில் வழிந்து நீயும்
இட்டமுடன் பட்டைத்தூள் கூடச்சேர்த்து
இவையெல்லாஞ் சுயவாவின் பாலிதமாயூற்றே. 521

இதங்கேளு பசுவினெய் யோர்படியும் விட்டு
இளங்கியே குழம்பாக்கி அடுப்பிலேற்றி
இதங்கேளு கமலவன்னி கடிகையொன்று
வெந்திடவும் விடாமலே கிண்டிக்கிண்டி
பதங்கேளு மயனம் போல் பக்குவத்தைப்
பார்த்துப் பற்றாம் விளக்கி நன்றாய் மைந்தா கேளு
மதங்கேளு ஆறுபலச் சீனிதூக்கி
மறுபடியு மகப்பையால் சீனிகிண்டே. 522

சீனியிட்டுக் கிண்டியொரு கலசத்திட்டுத்
தினமூன்று சென்றபின்பு தான்றிக்காய் போல்
சீனியிட்டு வைத்திருந்த மருந்தை வாங்கித்
திரட்டிடு வாயிரு வேளை தின்றபோது
சீனியிட்டு மண்டலந்தா னருந்தினாக் கால்
தீருகிற நோய் கேளு கிராணி சூலை
சீனியிட்டுப் பறங்கிப்புண் வெட்டங்குட்டை
சிரசில்வருஞ் சூலைமுதற் கரப்பன் போமே. 523

சூலைபோங் கபாலத்திற் குட்டம் போகுந்
துயர் விளைக்கும் நாவதனிற் சூலை போகும்
சாலைபோம் வெடிசூலை நெஞ்சு சூலை
தட்டிமிதித் தொடித்தாற் போல் சரீரசூலை
சீலம்போங் கழல்வாதந் தந்தவாதம்
தீரும் தீயெரிக்கும் விலாவெலும்பு வீக்கஞ்சோகை
காலைபோ முடச்சூலை பக்கச்சூலை கரப்பன்
முதலனைத்துமே கழன்று போமே. 524

குருமுன்னிற்கவும்

போகின்ற வியாதிக்குப் பத்தியத்தைச் சொல்வோம்
புலத்தியனே கண்மணியே ஞானமூர்த்தி
வாவதற்குச் சரீரங்கள் பிலமறிந்து வத்தின்
முன்பித்த வெட்டை வாதவெட்டையானால்
பாவதற்குப் புளியுப்பை மாறச் சொல்லிப்
பருங்கோழி முருங்கைக்காய் துவரையாம்
ஆவதற்கு முசலுடும்பு கீரைத்தண்டு
அப்பனே சிறுகீரை பாங்கு கேளே. 525

பாங்குகேள் மிளகு மஞ்சள் வெந்தய மீருள்ளி
பரிவான வெள்ளுள்ளி சீரகங் கருவேம்பு
பாங்குகேள் பெருங்காயம் பத்தியத்துக் காகும்
பனைவெல்லம் நல்லவெல்ல மிரண்டுமாகும்
பாங்கு கேளிப்படியே சாப்பிட்டாக்கால்
பற்றற்று வல்வினையு மாறிப்போகும்
பாங்குகேள் வாதவுடல் தூலகாசம்
பத்தியஞ் சித்துப்பிட்டுப் பார்க்கச் சொல்லே. 526

காமாலைக்கு தசமுக வுதயாக்கினி செந்தூரம்

பாரப்பா லோகமென்ற வுருக்கு தன்னைப்
பாடுகிறேன் காமாலை பாண்டுதீர
கீரப்பா பேதிகண்ட பேர்கட் கெல்லாந்
திசமுக யுதயாக்கினி செந்தூர மென்பார்
சேரப்பா சூதமொன்று கெந்திரண்டு
சிறப்பான காந்தமது பலமும் நாலு
நேரப்பா வுருக்குத்தூள் பலமும் நாலு
நெகிழாட்டுக் கற்றாழைச் சாறுவார்த்தே. 527

கற்றாழஞ் சாற்றினால் கடிகைநாலு
களிபோலே ஆட்டியே வில்லை கட்டி
விற்றாழச் சட்டியிலே யாலிலையைப் பரப்பி
மேல்வைத்து வில்லைதனை யிலையால் மூடி
கொத்தான சீலைசெய்து மண்ணுஞ் செய்து
கொடியதோ ரடுப்பேற்றித் தீயைமூட்டி
முத்தாழ மூன்றுபத்து கடிகை யங்கே
மூட்டிநீ பார்ப்பளலில் செந்தூரமாமே. 528

ஆகியதோர் செந்தூர தூளாயாட்டி
யடைத்திடுவாய் குழாயிலே அன்பாய் மைந்தா

பாகியதோர் சுக்குத்தூள் விராகனொன்றில்
பாய்ச்சடா செந்தூரம் பணந்தான் மூன்று
வாகியதோர் நெய்தேனி லுண்ணச் சொல்லு
வரியதொரு பெருவயிறு காமாலை சோகை
ஏகியதோர் பாண்டுபித்தம் விஷபாகந் தானும்
விந்தனத்தில் வீழ்த்திய போலெரியுந் தானே. 529

லோக செந்தூரம்

தானென்ற யுதயாக்கினி திசமுக செந்தூரஞ்
சாற்றுகிறேன் அரப்பொடியு மரசு கெந்திகாந்தம்
தேனென்ற வகையொன்று கழஞ்சிரண்டு
சிதறாமற் கற்றாழஞ் சாற்றாலாட்டு
மானென்ற கலசத்தி லிட்டுவைத்து
வாய்மூடிப் பார்த்திருக்க வேகும்பாரு
கானென்ற சாற்றாலே ஆறவிட்டுப்
பின்புகராட்டி மூன்றுதரம் வேகவையே. 530

கலந்தோர் மருந்தங்கே யாறினாக்கால்
கல்லிட்டு ஆர்க்கவே தூளாயாட்டி
அலர்ந்ததோ ரனுபானம் வாய்வுக்கானால்
அப்பனே திரிகடுகு பொடியையச் செய்து
குலர்ந்த தொரு பற்பத்தில் பணவிடைதான்
கூட்டியே பொடியிரண்டு காசிடையிற் சேர்த்து
வலர்ந்த தொரு வுட்கொள்ளத் தேனிற்சேறு
வாய்வு வருஞ் சன்னிக்கு வரிசை கேளே. 531

வரிசைபெறச் செந்தூரம் பணவெடைதான் ரண்டு
வாங்கிநீ வெள்ளுள்ளித் தயிலத்தூட்டு
வரிசைபெறப் பிரமேகந் தீரவென்றால்
மருதோன்றிச் சாற்றிலூட்டு வண்மையாக
பரிசைபெற எரிகுன்மம் போகவென்றால்
பருஞ்சீந்திற் றண்டுடனே பரிவாயூட்டு
உரிசைபெற வாதங்கள்தீர வென்றால்
உற்றநொச்சிக் கொடிவேலி கொழுஞ்சி வேளைதானே. 532

வேளையில் முருங்கைத்தோல் சாற்றிலாதல்
விரைந்திடவே வாதம்போ மிகுதியாகில்
நாளையிலே பெருங்காயந் தன்னிலாட்டு
நல்லமஞ்சள் காமாலை நாசமாக
தூளையிலைப் பூவரிசிச் சீரகமும் நொய்த்
தூளாயாட்டிப் பாலிலே யுண்ணப்போகும்

வேளையிலே அந்திசந்தி கொண்டபோது
வீறிட்டு அடங்கி நோய் பிடியுங் காக்கே. 533

பிரிவுக்குக் கோடா சூரிக் குளிகை

பிடித்ததொரு காக்கையிட வாயிற்கேளு
பெருக்கவே யுப்பிட்டு விடத்திரையின் விறகால்
அடித்ததோ ரீசலை வறகுத் தன்னால்
அடிக்கியே திரியெரித்துச் சாம்பலாக்கி
அடித்ததோர் சாம்பல் வேறுப்பு வேறாய்
ரண்டையுந்தான் வீட்டின் மேல் தூவக்கேளு
குடித்ததோ ரெண்ணெய்தனைக் கொப்பளித்தாற் போலக்
கூட்டமெல்லாம் வேவ்வேறே பிரிந்துபோமே. 534

கூட்டமெனு நோயறவே கோடாசூரிக்
குளிகைதனைச் சூட்டுகிறேன் கூர்ந்துகேளு
ஈட்டமெனும் நாபிரசங் காந்தங் கெந்தி
இயலான அரிதாரஞ் செவ்வாலங்கொட்டை
நாட்டமெனுந் திப்பிலி யாந்திரிபலையு முள்ளி
நலமாக வகையொன்று கழஞ்சி யொன்று
காட்டமெனுஞ் செம்புதூ ளீராறாகுங்
கழஞ்சப்பா அக்கார காரமொன்றே. 535

ஒன்றாகும் நவச்சாரம் நீர்முள்ளி விரைதா
ளுரை நினையப்பனைக்கிழங்கு ஆக்கக்கூட்டி
நன்றாக னாளொன்றுக் கரிப்பான் சாற்றில்
நலமாக விடாமலே கடிகையொன்று
அன்றாட மெட்டுநாள ரைத்து நீயும்
அப்பனே யுளுந்துபோல் குளிகைகட்டி
குன்றாகும் வியாதிக்கு வுறுதிகண்டு
கொடுத்துவர ஆள்பலமுங் குறித்துப் பார்த்தே. 536

பார்த்து செய் பிலவதிகப் பாண்டு போகப்
பழச்சாற்றி லிரண்டுண்டை பதமாயுண்டு
சேர்த்துசெய் செறியாமைக் குணத்துக் கென்றால்
செப்பரிய பசுவின்நெய் கிராணியானால்
சேர்த்துசெயச் சுக்குநீர் தன்னிலூட்டுச்
செகமான மோராகு முள்ளங்கி நீராகும்
கார்த்துசெய் விரோசிக்க யேரண்டெண்ணெய்
கட்டுமேலங் கழற்றவென்றால் வெல்லத்தூட்டே. 537

ஊட்டுவாய் பழச்சாற்றில் விஷத்துக் கென்றால்
உட்கொண்டு மேலுக்குந் துவாலைபோடு

நாட்டவே நெல்லுமுளைச் சாற்றிலுண்ண
நாசமாம் வினையனைத்தும் நன்றாய்க் கேளு
பூட்டிடா நீர்ப்பிளவை மேல்வெளுப்பு
புகழான லேபனத்துக் கெல்லாமேதான்
நீட்டடா முத்தக்கா சிடித்தநீரில்
நெஞ்சான கிராணிக்கு நேரே கேளே. 538

நேரான வசீரணமுங் கிராணிசூலை
நிலையாத கடுஞ்சூலைக் கெல்லாமப்பா
வாரான முருங்கைத் தோல் சாற்றிலூட்டு
மிகுந்த செறியாமைக்குத் தயிரிலூட்டு
வாரான சன்னிக்கு மத்தஞ்சாறு
மைந்தனே யுள்ளுக்கு மேலும்பூசி
சீரான மூச்சடைப்பு சுவாசகாசந்
தீரவே வெள்ளாட்டுப் பாலிலூட்டே. 539

ஊட்டுநீ பிரமேக முஷ்ணந்தீர
வுறவாக நொச்சிச் சாறூட்டி யூட்டு
நாட்டுநீ கண்புகைச்சல் போகவென்றால்
நலமான பழச்சாற்றில் நெற்றியிலே தேய்ப்பாய்
நீட்டுநீ வாயுடலெரிவு போகவென்றால்
நெல்லிக்காய்ச் சாற்றிலே நினைவாயூட்டு
கூட்டுநீ தண்ணீரிலே பித்தம் போகுங்
கூரான கழுநீரி லுஷ்ணம் போமே. 540

போகுமடா வாய்வாதம் நடுக்குவாதம்
புகட்டுநீ சாதிக்காய் பொடியிலப்பா
ஆகுமடா வுடல்வீக்கஞ் சிறுநீரிற் றீரும்
அப்பனே விஷகடியுங் கடிவிஷமு மிக்க
வாகுமடா வஞ்சனைக்குச் சுக்குநீரில்
வலிகடுப்புத் தீரவென்றால் வசம்புத்தூளில்
ஏகுமடா வாதமறு முள்ளிச் சாற்றில்
இயலான வனுபானங் கோடிதானே. 541

வாய்வுக்குத் தைலம்

கோடியென்ற வாய்வுக்குத் தயிலஞ் சொல்வேன்
கூர்ந்துகேள் புலத்தியனே குறுக்குத்திட்டம்
தேடிநீ நல்லுவாய் வேரும் நொச்சி
வெருளுஞ்சி சிற்றாமணக்கு வேர் வகைக்குக் கேளு
கேடிலாப் பலமொன்று யிடித்து வாங்கிக்
[illegible] சலம்பத்துப் படியும்விட்டு

நாடிநீ எட்டொன்றாய்க் குறுக்கிவாங்கி
நாட்டுவாய் சிற்றாமணக் கெண்ணெய் படியுமொன்றே. 542

ஒன்றான கள்ளிப்பால் படிதானொன்று
உத்தமனே வெள்ளுள்ளிப் பலமிரண்டு
நன்றாக கோசலந்தான் படியுமொன்று
நலமான திரிபலையும் பலமுமூன்று
குன்றாம லாட்டியந்த தயிலத்திட்டுக்
குறுக்கிவந்த பதமறிந்து வடித்துக் கொண்டு
நின்றாகு மீசனுக்குப் பூசைசெய்து
நினைவோடே காசெடைதா னுண்ணச் சொல்லே. 543

செந்தூர ஆனந்தவைரவன்

உண்டவுடன் வாயுவென்ற தனைத்து மோடு
மொழியாத வாயுவென்றால் கோடாசூரி
உண்டையிட்டு வுண்ணச்சொல் தீருந்திரு
முத்தமனே யானந்த வைரவனைக் கேளு
உண்டாகும் வியாதிகளிற் சுரங்கள் கூட்டில்
உசிதமடா விபரமுட னுற்றுக்கேளும்
உண்டாகு மிதன்பேரு செந்தூரக் குளிகை
யுற்பனத்தை யாருக்கு முரைக்கொணாதே. 544

உரையாத சூதமொரு பலமுநதூக்கு
உற்றதோர் செந்தூரப் பலமுமொன்று
நிரையாத கெந்தமும் பலமுமொன்று
நேரான யப்பிரேகம் பலமு மொன்று
கரையாத நாபியுமோ பலமு மொன்று
காணப்பா பலமூன்று செவ்வாலங் கொட்டை
வரையாத யிவைசேர நாகவல்லிச் சாற்றில்
மயனம் போலாட்டி நீவழித்திடாயே. 545

வழித்ததோர் மருந்துக்கு விபரங்கேளு
மைந்தனே வெற்றிலை யரைத்துவாங்கி
வழித்திடுவாய் விரற்கனத்தில் குகைக்குள்ளே
மறுபடியு மறுத்தந்தக் குகைக்குள்வைத்து
வழித்தரைத்த வெற்றிலையுங் குகைமேற் பூசி
வாகாகச் சீலைசெய்து மண்ணுஞ் செய்து
எடுத்து கெசபுடமொன்று போடுபோடு
வளருணன் போலிருக்கும் வரிசைகேளே. 546

கேளப்பா செந்தூர மெல்லாம் வாங்கிச்
கிருபை புரிசெவ்வாலங் கொட்டையோடு

வாளப்பா நாபியிவை பலமும் ரண்டு
மாட்டுநீ வெற்றிலைச்சார் விட்டுநன்றாய்
நாளப்பா வொன்றறைத்து வழித்து நீயும்
நற்குன்றிப் பிரமாண முண்டை கட்டி
மீளப்பா சுக்கிந்து சீத்திர மூலம்
மீறாமற் பொடிசெய்து வெருகடி தான்றூக்கே. 547

தூக்கியதோர் பொடியிலொரு குளிகையிட்டுச்
சுடுசலத்தில் சர்க்கரையில் தன்னிலூட்டு
தாக்கியதோர் நாள்மூன்றில் சுரமெல்லாந் தீருந்
தடைபட்ட சுரசூலை கிராணி பாண்டு
தேக்கிய தோரிவ் வகைக்குங் குன்மத்துக்குஞ்
செலுத்தினா லனைத்தும் போம் பத்தியங்கேளு
ஆக்கியதோர் சோற்றுக்குப் பாலாமற்றொன்
றாகாது புளியுடலி லடுத்திடாதே. 548

இரசாயன வைரவன்

அடுத்த தோரசாயன வைரவத்தைச் சொல்வேன்
அப்பனே மச்சகேந்திரா வறிந்து கொள்ளு
தொடுத்ததொரு நோய்க்கெல்லாஞ் சாம்பிரதாயந்
தொடுமுன்னே நோயெல்லாந் தூளாய்ப் போகும்
கடுத்ததொரு சூதம் ரண்டு வசம்பு ரண்டு
கழஞ்சப்பா சுக்கிரண்டு மிளகிரண்டு
எடுத்ததோ ரிந்திரண்டு வாளம்ரண்டு
இயலான திரிபலையுங் கழஞ்சிரண்டே. 549

இரண்டாகு முருத்திராட்ச மிவைக்குநேரா
யிட்டிடுவாய் வெள்ளுள்ளிப் பருப்புதானும்
இரண்டாகும் பாண்டத்தி லிட்டுக் கிண்டி
யீரமதற் குள்ளியிட தயிலங் கொண்டு
இரண்டாகுஞ் சாமமொன்று மத்திபின்பு
யெருக்கன்பால் வார்த்துமொரு சாமமத்தி
இரண்டாகுஞ் சாமமொன்று வெள்ளாட்டுப் பாலி
லிட்டிளக்கி மத்தி கெண்டைமீன் பித்து வாங்கே. 550

வாங்கியதோர் பித்துக்குள் சாமமொன்று
மத்தித்து ஆறியபின் எடுத்து மைந்தா
பாங்கியதோர் குன்றியிடை குளிகைகட்டிப்
பதறாமல் அந்தந்த வியாதி பார்த்து
தாங்கியதோர் கரிப்பானீருள்ளி நீரிற்கலந்
தீருமிஞ்சிச் சாறிவை யிலூட்ட

தேங்கியதோர் முயல்மூர்ச்சை சிலேற்பனத்தின்
திறமான மூர்ச்சை இவை அனைத்தும் போமே. 551

சிலைபாணம்

போமப்பா தலைவலியுஞ் சன்னி மூர்ச்சை
புகழான காலாதி வேதனையையா
ஆமப்பா மூக்குநீர்ப் பாய்ச்சல் தானும்
அரோசி முதற்பறந்தோடு மப்பாற் கேளு
வேமப்பா சுரமெல்லா மொழிந்து நிற்கு
மென்சிலை பாணமென்ற குளிகை சொல்வோம்
நாமப்பா சிலையொன்று துத்தமொன்று
நலமாகச் சுத்திசெய்து யெடுத்திடாயே. 552

எடுத்திடா மோர்காய்ச்சித் தெளித்துக்கொண்டு
இதமாகச் சாமமொன்று ஆட்டிவாங்கி
தொடுத்திடாய் மிளகிடைக்குக் குளிகை கட்டிச்
சுரங்களுக்குப் பசுவின்மோர்க் குள்ளேயூட்டு
விடுத்திடாச் சுரமெல்லாம் விட்டுப் போகும்
மீறியதோர் சிலேற்பனத்தின் சுரத்துக் கெல்லாம்
கொடுத்திடாய் சுரகாச குடோரிமாத்திரை
கூறுவேன் மருந்து வகை கூறுவேனே. 553

சுரகாசத்துக்குத் தாளகக் குளிகை

கூறுவே னரிதார மிரதஞ் சுக்கு
கூர்மையுறும் வெண்காரந் திப்பிலி தானு
மீறுமே சமபாகங் கரிப்பான் சாற்றில்
வெண்ணெய்போல் சாமமொன்று ஆட்டிவாங்கி
ஊறுமே நொச்சியிலைச் சாற்றில் சாமமொன்று
ஊராட்டிப் பாவட்டங் காய்போற் கட்டி
தேறுமே யிஞ்சிநீர் தேனிற் சேர்த்து
திடமாக வுண்டை யொன்று கொடுத்திடாயே. 554

கொடுத்திடவே சுரகாசஞ் சுவாசகாசங்
குத்திருமல் கெட்டிருமல் குறுகுறுப்பு
விடுத்திடவே சரம்பாய்ந்தாற் போலேயோடும்
வீறடங்கச் சுத்தியுட மருந்து சொல்வேன்
கொடுத்திடவே நாபிக்குக் கீரைச்சாற்றில்
சூட்டுவாய் தினமொன்று பழச்சாறு கொண்டு
அடுத்திடவே நாளொன்று சிலைதான் சுற்றி
யப்பனே தாளகத்தின் சுத்திகேளே. 555

தாளகத்தை யரந்தோல கியாழத்திலிட்டுத்
தயவாக மறுதினத்தி லெடுத்துக் கொண்டு
மீளகத்தி லுயிரெல்லாம் நோயைத் தள்ளி
விடாத சுரமனைத்தும் விபரங்கேளு
தாளகத்தை வலுப்பிக்குங் கற்பூராதி
காயத்திரி மாத்திரையின் கட்டுதானும்
கீழகற்று கற்பூர மிரத மிக்க
கிருபையுயர் சாதிக்காய் சமனாயாட்டே. 556

சுரத்துக்கு உண்டை

ஆட்டியதோர் தூளிடைக்கு ரெட்டிவாளம்
அப்பனே சேர்த்ததனைக் குமரிச் சாற்றால்
தீட்டியதோர் சாமம்நீ அரைத்து வாங்கிச்
சிறுவுளுந்துப் பிரமாண முண்டைகட்டி
நாட்டியதோர் சர்க்கரையி லீய்ந்தாயானால்
நலமான யெட்டுவகைச் சுரமும்போகும்
நீட்டியதோ ருடலறிந்து கொடுத்தாயானால்
நின்றுபோங் கடிகையொரு மூன்றுமூன்றே. 557

வனதி கெசாங்குச ரசம்

மூன்று நாழிகைக்குள்ளே சுரங்கள் நிற்கு
முறையாகப் பத்தியங்க ளிச்சா பத்தியம்
மூன்று நாழிகை வனதி கெசாங்கு
ரசத்தை யுரைக்கிறேன் ரசந்துத்தம் நாபி நாகம்
தூன்று ஞாள்மடைத் தாரம் வாளங் கெந்தி
சொர்னம் லோகமி ரண்டுஞ் சமனாய் சேர்த்து
தான்றுநாளுத்தமத் தாளிச்சாற்றில்
தயவாகவே முகிரகார மாட்டே. 558

ஆட்டடா மத்தஞ்சா றுமணித்தக்காளி
அடவாக முன்போலே அரைத்து ஆற்றி
நீட்டியே பொரிகார மாட்டி வாங்க
நினைவாகக் குகைத்தடவிப் பின்பு
ஊட்டியே யுண்டை தனைக் குகைக்குளிட்டு
வுறவுளேர் வெண்கார மரைத்து மேலு
மூட்டியே தெரியாம லெழுசீலை
முறையாகச் சுற்றிநீ மண்ணுஞ் சேரே. 559

மண்செய்து பாண்டத்தில் நடுவேதானு
மைந்தனே தமரிட்டு வோடுபோட்டு

திண்செய்து அதன்மேலே மணலைக்கேளு
திறமாக நாலுவிரற் கடையு மிட்டு
பண்செய்த குகைதனை மணல்மேல் வைத்துப்
பாங்காக மேலுமந்தப் பாண்டத்துள்ளே
தண்செய்த மணலதற்கு முக்காலிட்டுத்
தயவாக மேற்சட்டி கவிழ்த்து மூடே. 560

மூடியே யெண்சாமங் கமலவன்னி
மூட்டி நன்றா யாறியபின் கல்வத்திட்டு
நாட்டியே கணேசர்க்குப் பூசைசெய்து
நலமாகத் தூளாக்கிச் சிமிளில் வைத்து
நீட்டியே நோயறிந்து குன்றியிடை யூட்டு
நிலைத்துநின்ற விருவகையாம் விஷங்கள் தீரும்
வீட்டியே யனுபானம் வெற்றியிலையிற் பொதிந்து
மென்று தின்னச் சொல்லங்கே விபரங்காணே. 561

நீராமை கவுசி மகோதரத்துக்கு உண்டை

காணப்பா சலக்கழிச்சல் குட்டரோகங்
காயாத சுவாச மகோரதத்துக் கெல்லாம்
பூணப்பா சினியிலே யுண்ணச் சொல்லு
புகழாக வயிற்றுவலி வியாதிக்கேதான்
ஊணப்பா காட்டாமணக்கு நீரிலூட்ட
வுற்ற வெள்ளைச் சாரணைநீர் சுரத்தைத் தள்ளும்
தோணப்பா திரிகடுகு பொடியிலூட்டு
சுகஜன்னி முதலான தெல்லாம் போமே. 562

போமப்பா யிஞ்சிச் சாற்றுள்ளே யுண்ணப்
பொதுவான திரிதோஷம் போகும் போகும்
வேமப்பா சூலைக்குப் பெருங்காயத் தூட்டு
மேலுமினி யனுபானம் வினையமாக
தாமப்பா செய்திடவே பிணிகளெல்லாம் போகுந்
தணங்காமற் பத்தியமா யிருக்கச் சொல்லு
ஆமப்பா யஷ்டகுன்மம் நீராமை கவுசி
யப்பனே மகோதரமும் தீரக்கேளே. 563

கேளப்பா மகோதரத்துக் குண்டை தன்னைக்
கெட்டியாய்ச் சொல்லுகிறே னிருப்புச்சல்லி
நாளப்பா செம்பு துத்தம் நாகமூன்றும்
நலமாக வெவ்வேறே சல்லியாக்கி
நீளப்பா வகையொன்று கழஞ்சி யொன்று
நேராக யிந்துப்பு நிமிளை கெந்தி

வாளப்பா மனோசிலையுங் கெவுரி தானு
மாறாம லொவ்வொன்று கழஞ்சி தூக்கே. 564

தூக்கியே பொடிசெய்து வைத்துக்கொண்டு
சொல்லுகிற நயத்தகட்டை யெருக்கம்பாலில்
தாக்குவா யாழாக்குக் குள்ளேநீயுந்
தயவாக மூன்றுதின மூறிப்பின்பு
ஆக்கியதோர் முன்தகட்டுப் பொடியுங்கூட
வமைத்ததற்குள் யெருக்கம்பால் சிறுகவிட்டு
வீக்கியே பழச்சாறும் அரைக்கால் விட்டு
விரவியொரு கரகத்தி லடைத்திடாயே. 565

அடைத்ததோர் மருந்ததனை ரவியில் வைத்து
அன்றாடங் கிண்டிவரத் தினந்தானேழு
புடைத்த தோரவி பட்டு வெந்து நீறிப்
பொன்மெழுகு போலிருக்கு மொன்பதாநாள்
உடைத்ததோ ருண்டைக்காயைப் போலு
முருட்டி நீயுலர வைத்துக் குழலிலிட்டு
படைத்ததோர் வியாதிக்கு அனுபானங்கள்
பகருவேன் மைந்தாகேள் கண்டிடாயே. 566

கண்டிடாய் வியாதி கண்டு அனுபானஞ் சேர்த்துக்
காட்டினால் தீருகிற வியாதிகேளு
மண்டிடாய் மகோதரமுஞ் சலக்கோவை யகவை
மதியழிக்கு நீர்நமைவு கசிவு பாண்டு
வண்டாய வலிகுன்மந் தெறிகுன்மந்தானும்
மகத்தான சத்திகுன்மம் வெப்புப்பார்வை
தெண்டிடாய் கடிகுன்ம மேறுங்குன்மந்
திரிகுன்மம் விஷபாசஞ் சோமம் போமே. 567

சிலோதாரை யுண்டை

போமென்ற கிரிச்சினங்க ளாறும்போகப்
பூட்டுகிறேன் சிலோதாரை யுண்டைதன்னை
வேமென்ற நாபி கெந்தி சூத மிந்து
மென்கவுரி பெருங்காயஞ் சவர்க்காரந் துருசு
ஆமென்ற நேர்வாளம் நஞ்சு போக்கி
இவையெல்லாஞ் சமனாகத் தூளாயாட்டி
வேமென்ற வோடாட்டால் பழச்சார் வார்த்து
வெண்ணெய் போலாட்டி. வாங்குவாங்கே. 568

வாங்கியதோர் மருந்ததனை மிளகுபோல
மணியாக்கிக் குழலிலே வைத்துக்கொண்டு

வாங்கியதோர் ரனுபானம் வெல்லம் நெய்யாம்
வளமான பழச்சாறாம் சுருக்கிச் சொன்னேன்
தேங்கியதோர் வியாதி கேள் தூலகாயந்
திறம்பெரிய வயிற்று நோயகவை நோயும்
பாங்கியதோர் பெருவயிறு சென்டை குன்மம்
பறந்தூறும் நீர்க்கோவை தீரும்பாரே. 569

சுராங்கிஷம்

பாரப்பா சுராங்கிஷம் யுரைக்கக் கேளு
பண்பாகப் புறக்கருவும் அகக்கருவும்புறக்கி
பாரப்பா பன்னிரண்டு லட்சம் பாட்டில்
பாடினே னைஞ்ஞூறு மெண்பத்தைஞ்சும்
பாரப்பா நோயெல்லாம் மத்தியோடும்
பண்டிதருக் கிந்நூல் பழைய தங்கம்
பாரப்பா நாலுதிக்கும் போகிசித்தர்
பார்த்திருப்பார் பொருளாசை பாரார்கானே. 570

காணப்பா சூதமொன்று கெந்தியொன்று
கரூமத்தம் விரைமூன்று சுக்குநாலு
ஊணப்பா திப்பிலியும் நாலுதூக்கு
வுரைக்க வதை தூளாயாட்டி யடைத்துக்கொண்டு
பூணப்பா குன்றியிடை பழச்சார் தன்னில்
புகட்டினால் சுரம்போகும் விபரங்கேளு
தோணப்பா பழச்சாற்றி லிஞ்சிச்சாற்றில்
துவளவரை வெவ்வேறே சாமம் ரண்டே. 571

ரெண்டாகுஞ் சாமமரை கடலைபோலே
யென்மகனே யிடித்துலர்த்தி வைத்துக்கொண்டு
ரெண்டாகுஞ் சுடுவெந்நீர் தன்னிலூட்ட
வெண்சுரமுந் திரிசுரமுஞ் சன்னிபின்னு
முண்டாகும் விஷகரமுஞ் சன்னிதோஷந் தானு
முற்றமுறை தின்சுரமு மொழிந்து போகும்
அண்டாது சுரமெல்லா மெய்விட்டோடும்
அறைகிறேன் துத்தரசத் தாண்மைபாரே. 572

துத்த ரசப்

ஆண்மை யென்ற துத்தமொன்று துருசுவொன்று
அரிதாரந் தானொன்று சூதமொன்று
வாண்மையென்ற கெந்தியொன்று சிலைதானொன்று!
மைந்தனே யிவைசேரத் தூளாயாட்டி

தாண்மையென்ற சட்டிக் குளிட்டுப் பின்பு
சாரணை யிலைச் சாறு படிகால்விட்டு
கேண்மையென்ற வெண்கலக் கிண்ணியாலே
கெர்ச்சிக்க மூடியே சீலை செய்யே. 573

சீலைசெய்து மண்செய்து மண்ணுமிட்டு
தீபாக் கினியாலே சாமமொன்று
சாலைசெய் தாரியபின் கல்வத்தி லிட்டுத்
தக்காளிச் சாறு வகை யிரண்டுஞ் சேர்த்து
சேலை செய்து மயனம் போல் வழிந்து நீயுஞ்
சிறுபயறுப் பிரமாண முண்டை சேர்த்து
காலைசெய்த தனுபானம் பூரஞ் சூடன்
கஸ்தூரி சிறக்கவதிற் கலந்து ஆட்டே. 574

குளிர் காய்ச்சலுக்குப் பாஷாண வுண்டை

ஊட்டினால் மாறல்போம் முறைக்காச்சல் போகும்
உத்தமனே தேனி லிடச்சுர மெல்லாம் போகும்
ஆட்டினா லண்ட ரண்டங் குலுக்கியாடும்
அறுபத்து நான்கு சுரமனைத்து மோடும்
காட்டினார் சீதசுரம் பறந்துவோடக்
கட்டடா பாஷாண வுண்டை மார்க்கம்
நாட்டினார் கெவுரியொன்று வெள்ளை யொன்று
நலமாகச் சுண்ணாம்புக் குள்ளே வையே. 575

வைத்துநீ பொதிந்தவளை விளங்காய் போல
வஸ்திரத்திற் பொதிந்து சுத்திச் சுட்டு நன்றாய்
மொய்த்துநீ கரிபோக்கிப் பாஷாண மெல்லாம்
முறையோடே யெடுத்து மைந்தா சூதமொன்று
வைத்துநீ முறிய தனைமத்தஞ் சாற்றில்
மைந்தனே சேரவகை சாமமொன்று
எய்த்துநீ பின்பதனில் வாளமொன்று
மியலான திப்பிலிதா னொன்று கூட்டே. 576

கூட்டியே மைபோலே யாட்டிக்கொண்டு
கூறுகிறேன் சிறுபயிறு போலேகாட்டி
நாட்டியே யுலர்ந்தபின்பு குளிர்க்காய்ச்சல் தனக்கு
நலமாக வொரு வுண்டை வெந்நீரி லூட்டு
நீட்டியே முலைப்பாலி லுண்டை யூட்ட
நெறியில்லாச் சுரமெல்லாம் நெகிழ்தமாகும்
பூட்டியே பத்தியங்கேள் பாலுஞ்சோறும்
பூர்த்தியா யுண்டுவரப் பொறுக்குந்தானே. 577

பறங்கிச் சூலைக்கு மூலிகைப் பிரயோகம்

ானென்ற பறங்கிமுதற் சூலைபோகச்
சாதகமாய் மூலிகையிற் சாற்றக்கேளு
வேனென்ற பேய்ப்புடோல் கொடிவேலி வேரும்
வெள்ளாட்டுப் பாலினா லாட்டி வாங்கி
தேனென்ற சிறுமுள்ளி போலுருட்டி
தினமூன்றி லாவின்பா லுண்ணப் போகும்
வானென்ற வெள்ளாட்டுப் பாலுமாடி
மைந்தனே பாலுஞ் சோறுண்ணக் கேளே. 578

மண்டை சூலைக்கு

கேளப்பா மருந்துண்ட மூன்று நாளும்
கெடியான சலத்திலே யிருக்கச் சொல்லு
வாளப்பா புளியுப்பை மாற்ற வேணும்
வாங்காத சூலைக்கி வயணங் கேளு
தானப்பா விலையொன்று சம்பிரதாயம்
சாதகமாய்ச் சொல்லுகிறேன் சமர்த்தாய் கேளு
நாளப்பா யிரத மொரு பணந்தான் தூக்கி
நலமான கெவுரியொரு பணந்தான் தூக்கி
நீளப்பா கடுக்காயு மெட்டு வாங்கு
நேரான யொதிப்பட்டை கழஞ்சி யஞ்சே. 579

அஞ்சான வள்ளித்தோல் கழஞ்சிகால் தான்
அப்பனே யிவைசேரத் தூளாயாட்டி
தஞ்சான வெல்லமதில் நேராய்க் கூட்டிச்
சாதகமா யுரலிலிட்டுத் தூளாயாட்டி
மிஞ்சாமல் நாழிகைதான் முப்பதானால்
மேவியெல்லாம் வாரியே சுண்டைக்காய்போல்
கஞ்சான குளிகை கட்டி நிழலு லர்த்தி
கரகத்தில் வைத்தங்கே மூடுமூடே. 580

மூடியதோர் குளிகையிலே யஞ்சு வாங்கி
முறையாக மூன்றுநாள் பதனஞ்சூட்டு
நாடியதோர் புளியுப்பைத் தவிர்க்கச் சொல்லு
நயமான வயிற்றிலே தக்கித்தானால்
நீடினதோர் நெய்பாலும் வெல்லங் கூட்டி
நேரான பருத்தியிலைச் சாறுங்கூட
ஊடினதோ ருள்ளுக்குக் கொடுக்கத்திரு
முற்ற மண்டைச் சூலைக்கிங் குரைக்கிறேனே. 581

உரைக்கிறேன் துளசியிலை கரிப்பான் மேனி
யுயர்தாளி யிலைக் காட்டுக் கொழிஞ்சி தானும்
நிறைக்கிறே னிவையெல்லா நிழலுலர்த்தி
நேராகத் தூளாக விடித்துப் பின்பு
துரைக்கிறேன் சூதமொன்று கழஞ்சிவாங்கி
சொல்லுகிறேன் வெற்றிலையால் முறித்துக்கொண்டு
உரைக்கிறேன் பொடியுடனே கூடச்சேர்த்து
மைந்தனே பகல்முழுது மிடித்திடாயே. 582

இடித்ததொரு மருந்ததனை வடிதான் கட்டி
யியல்பாகப் புதுக்கலசத் திட்டுக் கொண்டு
மடித்ததொரு பொடியிலே வெருகடிதான் தூக்கி
வாகாகச் சலம்விட்டுக் குழைத்துருட்டி
பொடித்ததொரு குளிகை மூன்றாக வுண்ணப்
போகுமப்பா தலைச்சூலை புண்கள் தானுங்
கடித்ததொரு பணியதிக மாயிற்றென்றால்
கலந்துண்ண வனுபானங் கட்டக்கேளே. 583

கட்டான பூசனிக்காய் கியாழமாதல்
கடுவீழிச் சாறதால் பகலிலாதல்
மட்டான வெல்லமிட்டுக் கொள்ளத் தீரும்
மண்டைநோய் சூலைமுதற் கரப்பான் போகும்
தி.ட்டான சன்னிக்கு கியாழம் சொல்வோம்
சிறுவழுதலையின் வேர் கழஞ்சி நாலு
தொட்டான சுக்கிரண்டு சீந்திரண்டு
துவளவிடுத் திருநாழி நீரில் போடே. 584

சன்னி கியாழம்

போட்டதனை யெட்டொன்றாய்க் குறுக்கிக் கொள்ளப்
புகழான சன்னி யெல்லா முறிந்து போகும்
நாட்டமுட னிருமலுக்குக் கியாழஞ் சொல்வோம்
நலமான முத்தங்காய் கழஞ்சுநாலு
நீட்டதனைப் பேய்ப்புடலுங் கழஞ்சு நாலு
பேரான பற்படகங் கழஞ்சுநாலு
மூட்டதனைச் சீந்திரண்டு சுக்கிரண்டு
முன்போலே யிருநாழி நீரிற்போடே. 585

நீரிலிட்டு எட்டொன்றாய்க் குறுக்கி வாங்கி
நேராகக் காசளவு நாக்குதாடி

நீரிலிட்டுக் கொண்டவுடன் பேதியாகும்
நீரான மோருண்ணப் பேதிநிற்கும்
நீரிலிட்டா வாய்வு முதலிருமல் போகும்
நேரான வேர்க்கொம்புந் திப்பிலியுங் கூட
நீரிலிடக் கரிப்பானுஞ் சமூலம் வாங்கி
நேரான சங்கம்வேர் தோடை வேரே. 586

தோடையுடன் தேள்கொடுக்கி சிறுதேக்கு தானும்
செப்பமுட னிருநாழி நீரில்போட்டு
ஏடையுட னெட்டொன்றாய்க் குறுக்கி வாங்கி
யிடுபொடியுந் திப்பிலியு மூலமாட்டி
ஆடையுடன் கியாழத்தைக் கொண்டபோது
அலத்திருமல் விட்டோடு மப்பாகேளு
சாடையுடன் சேர்த்தமேற் கியாழஞ்சொல்வேன்
சாதக மாயிலவங்க மேலந் தானே. 587

தானென்ற செஞ்சந்தனம் பூலாவிருட்சம்
சாதகமாய்ப் பூலாவேர் நீர்த்தாளி வித்து
மானென்ற விவையெல்லாஞ் சமன்தூளாட்டி
மைந்தனே யாழாக்கு அளந்துகொண்டு
வூனென்ற ஆவினெய் யுமாழாக்குங் கூட்டி
யுறவுசெய்து சத்தெடுத்து உண்டபோது
தேனென்ற குழம்பெடுத்து நக்கினாக்கால்
தீராத விருமலெல்லாந் தீருந்தானே. 588

திருமே கிரிச்சினங்க ளாறு மென்றால்
செப்புகிறேன் கியாழத்தைத் திறமாய்க் கேளு
தாருமே காணாச்சாறு கொடுப்பைச் சாறு
சாதகமாய் வெந்த சாறாக வாங்கி
தேருமே யிவை யிரண்டுஞ் சமனாய்க் கூட்டித்
திறமாகக் கால்படி நீருண்ணச் சொல்லு
தூருமே கல்தெரிக்கும் சலதாரையாகுந்
தூர்த்திடா தசையடைப்புக் கியம்பு வேனே. 589

தசை யடைப்புக்கு

இயம்பு வேனிந்நீரில் காரஞ் சேர்க்க
விசைவான தசைதெரிக்கு மின்னங்கேளு
இயம்புவேன் கட்டிரத்த முறிந்து வீழு
மிறங்குகின்ற நீர்த்தாரைக் கிடருந்திரு
மியம்புவேன் கியாழமொன்று சிறுதேக்கு மிளகு
எரிசங்கம் வேர் சுக்கு கரிப்பான் பத்திரி
இயம்புவேன் கோடைவேர் கொம்மட்டி வேரு
மிவையொன்றுக் கிருகழஞ்சி யிருநாழி நீரே. 590

நீரதனை யுழக்காக்கிக் குறுக்கிக் கொள்ள
ரெத்தடைப்புச் சலவடைப்பு நீரடைப்புத்தீரும்
வாரதனைக் கிரிச்சினங் களாறுந்திரு
மற்றொருத்தர்க் கிந்நூலை வழங்கிடாதே
போரதனைச் செய்யாதே வாயாடாதே
பொய்சொல்லிப் புலையாடித் திரிந்திடாதே
சீரதனை யறியாரைச் சேர்ந்திடாதே
சீஷவர்க்க மறிந்து கொண்டு தீட்சைசொல்லு
பேரதனை யறிந்து வாகடத்தைக் காட்டு
பிதற்றினால் வாய்மேலே போடு போடே. 591

போட்டவுடன் வணங்கினால் கருவைச் சொல்லு
பொய்க்குறி சொல் பண்டிதரைப் போலாகாது
நீட்டமுடன் துணிந்தவர்கள் போலவப்பா
நெறிநிற்கப் பாவமில்லை யில்லாவிட்டால்
நாட்டமுடன் பலபழிகள் சுமதியாகும்
நலமறிந்து சொல்வதற்குத் தோஷமில்லை
கூட்டவுட னொன்றான் பெண்ணைப்போலே
கூடுமப்பா சீஷவர்க்கங் கூடுந்தானே. 592

இரச சூலைக்கு

கூடிநின்ற சரீரத்தில் ரசசூலை முறிக்கக்
கூடுகிற சுரைக் குடுக்கைக் கரியை வாங்கி
நீடிநின்ற பழமோரில் கரைத்துக் கொள்ள
நீங்காத ரசங்கழன்று நீராய்ப் போகும்
நாடிநின்ற ரத்தபித்தம் போகவென்றால்
நற்குன்றி வெட்பூலா மருக்காரை வேரும்
ஓடிநின்ற மொசுமொசுக்கை சிறுகிளாவேறு
முப்பிலி வேருடன் திருநாப் பாலைவேரே. 593

சுராங்குசம்

பாலையுடன் மிளகு கடு கொன்றாய்க் கூட்டிப்
பரிவாக வாட்டுநெய்யி லெண்ணைய் விட்டு
ஆலையுட னடுப்பேற்றி யெரித்து வாங்கு
அப்ப னேரத்தபித்த மனைத்தும் போகு
மாலையுடன் சுராங்குசத்தைச் சொல்லக்கேளு
வளர்சூதம் விழிகஞ்சா வசுவாசி நேராய்
சோலையுடன் தூதளையின் சாற்றாலாட்டித்
துவரைபோல் குளிகைகட்டி வைத்திடாயே. 594

வைத்ததொரு குளிகை யொன்று யிஞ்சிச் சாற்றில்
மைந்தனே குளிர்மாறல் வெண்சுரம் போம்
வைத்ததொரு கிரிச்சனத்துக் கின்னஞ் சொல்வேன்
மண்ணில் வளர்பூநாக மெலுமிச்சங் காயளவு
வைத்ததொரு பாலிலே கரைத்துக் கொள்ள
மகத்தான கல்லடைப்புத் தெறித்துப் போகும்
வைத்ததொரு முசுட்டையிலை பாக்கள வரைத்து
மருவியதோ ரெண்ணெயிலே கொடுத்திடாயே. 595

கிரிச்சனங் கட்கு

கொடுத்திடவே நீரடைப்புத் தீருங் கண்டாய்
கூறுகிறேன் கொள்ளுச் சார்வாங்கி கொண்டு
கொடுத்திடவே அரிசியிட்டுக் கஞ்சிகாய்ச்சிக்
கொடுத்தவுடன் நீர்சிறுப்புக் குணமாய்க் காணும்
கொடுத்திடவே மாவிலிங்க வடவேரொன்று
கூறான நெரிஞ்சிவேர் பேராமுட்டி வேரும்
கொடுத்திடவே சிறுபூளை வேருங்கூட
கூட்டியொன்றாய் நீரிலிட்டெட் டொன்றாய்க் காய்ச்சே. 596

காய்ச்சி வடித்து ண்டிடவே பாறைமுதல் நழுவும்
கல்தெறிப்பு நீர்க்கடுப்புக் கரையவென்றால்
காய்ச்சி வடித்திருந்த பழங்கஞ்சிக்குள்ளே
கடுநெல்லி முள்ளி யொருபலந் தானிட்டுக்
காய்ச்சு நறுந்தாழையிட விழுதுச் சாறும்
கலந்தரைத்து யெட்டுநாள் உண்ணக்கேளு
காய்ச்சலறும் நீர்க்கடுப்பு மடைப்புதீரும்
கடும்புழுகு பணவிடைதான் தூக்குதூக்கே. 597

தூக்கியிள வெந்நீரில் போட்டு கொள்ளத்
துளிவிழுதல் பொசித்தூறல் துறந்து போகும்
தாக்கியே யிருமலமு மடைத்ததானாற்
சாற்றுகிறேனி ருமலத்தின் தாரைதன்னை
தேக்கியே திருக்கள்ளிப் பாலாழாக்கு
சிற்றாமணக கெண்ணெ யாழாக்கப்பா
தேக்கியே ஆவின்நெய்தான் படியாழாக்கு
சோராமல் பாண்டத்தி லூற்று வூற்றே. 598

ஊற்றியே நிலைப்பனைவேர் வெள்ளையுள்ளி
யுத்தமான பெருங்காய மஞ்சளோடு
நேத்தியே யொவ்வொன்று அரைப் பலமாயாட்டி
லேகித்துப் பதமாக வடித்து நீயும்

மாற்றியே ரண்டுகாசிடை தானக்க
வப்பனே மலதாரை திறக்கும் பின்னும்
போற்றியே பால்கஞ்சி கொள்ள வேணும்
பொழுது புகில் பருப்பிட்டுக் கஞ்சிவையே. 599

நீரடைப்புக்கு

கஞ்சிகொள்ள நீரடைப்பு வெளியாய்ப் போகும்
காட்டாதே யிந்நூலைக் கள்ளர் கையில்
அஞ்சியே நடப்பவர் போல் கிரகிக்கு மட்டு
மடிதொழுவார் நூல்கிட்டி லகந்தை செய்வார்
மிஞ்சியே யெழுநரகி லுடையோரப்பா
வெறும் வீணரவர்க் கொன்றும் விள்ள வேண்டாம்
பஞ்சியே போவென்று தள்ளிவிட்டுப்
பாரப்பா பராபரத்தைப் பற்றிப்பாரே. 600

பாரப்பா விப்படியே கஞ்சிகொண்டு
பத்திரமாய் மறுநாளைக் கன்னமுண்ணில்
நேரப்பா நீரோடு மின்னமொன்று
நிகழ்த்துவே நீருள்ளி யிந்துவோடு
தாரப்பா பழம்புளியும் சமனாய்க் கூட்டிச்
சாதகமா யறுதிங்கள் சென்றகாடி
வாறப்பா கலக்கிநீ யுண்ணச் சொல்லு
மருவியதோர் பத்தியத்தை வழங்குவேனே 601

வழங்கியதோர் பச்சரிசி பயறுஞ் சமனாய்
மைந்தனே பால்கஞ்சி குடிக்கச் சொல்லு
விளங்கியதோர் வெண்சாவல் குடலீரலடைத்து
வெண்பசுவின் பாலிலே கொள்ளப் போகும்
புழங்கியதோர் வாய்பேசா துண்மை வேணும்
பூட்டக்கேள் நறுந்தாளிச் சாறுவாங்கி
அழகியதோர் குறுவைநெல் லரிசிகூட்டி
யாட்டியே வெல்லமொடு ஆட்டுநெய்யே. 602

கல்லடைப்புக்கு

நெய்விட்டுக் கிளறியே தின்னும் போது
நேராகக் கல்லடைப்பு வீக்கநீங்கும்
நெய்விட்டுப் பலகரையின் சாம்பல் வாங்கி
நிம்பச்சார் குழப்பி யுண்ணில் நீர்தாரையாகும்
நெய்விட்டும் ஆவின்பால் சங்கங்குப்பி
நேராக வுண்டிடவே சிறுப்பு வாங்கும்

நெய்விட்டு ஆட்டுத்தாம் பொட்டிதன்னை
நேரான தண்டிலே பொதியப் போடே. 603

வல்லாரைச் சூரணம்

போட்டங்கே கழுத்தளவு சலத்தில் நிற்கப்
போகாத கல்லடைப்பு புழுங்கி வீழும்
நீட்டக்கேள் புனல் முருங்கை நன்னாரி வேரும்
நேரான ஆவாரை வேர முக்குறாவேர்
நாட்டக்கே ளுத்தம தாளிவேரும்
நலமாக வாட்டியே விளக்கெண்ணெய் குத்தி
பூட்டக்கேள் குழப்பி நக்க வீக்கந் தூக்கம்
பொருமலொடு கல்லடைப்பு புகழ்ந்து போமே. 604

போமப்பா ஜாவாலி மனோசிலையும் நேராய்ப்
புகழ்மேனிச் சாற்றி லுண்ணப் பொழியுநீர் தான்
வாமப்பா சின்னிச்சார் நாவல்பட்டை
வளமாக வதின்கொட்டைப் பருப்புங்கூட
வேமப்பா சமபாக மரைத்து வாங்கி
வெள்ளாட்டின் பாலிலே யுண்ணப் போகும்
ஆமப்பா வல்லாரைச் சூரணங் கேளு
அப்பனே மேகமென்ற தனைத்தும் போமே. 605

அனைத்தும் போம் வல்லாரைச் சமூலம்வாங்கி
அப்பனே நிழ லுலர்த்திச் சூரணித்து
அனைத்தும் போம் நெய்யிலுண்ண மேகமெல்லா
மாச்சரியம் நிலக்குமிழ் வேரிடத்து நின்றாய்
. அனைத்தும் போம் நீரிலிட் டெட்டொன்றாய்க் கொள்ள
அடைந்திருந்த கல்லு விழுமப்பா கேளு
அனைத்தும் போம் நாய்ப்பாகல் நத்தைச் சூரி
யடைவு கருஞ் சீரகமுஞ் சலத்திற் கூட்டே. 606

கூட்டியே யெட்டொன்றாய்க் கொள்ளக் கேளு
கூட்டோடே கல்தெறித்துக் குமுறி வீழும்
நாட்டியே மூன்று தினமுண்ணத் தீரும்
நலமான கொடுப்பைசார் நொச்சிச்சாறு
மூட்டியே வகைக்குழக்குக் கலந்து கொள்ள
உடன்திருங் கல்லடைப்பு சதையடைப்பு
நீட்டியே பிரமேக மிரண்டு பத்துபோக
நிகழ்த்துகிறேன் மகாமேக குடோரி தானே. 607

மகா மேகக் குடோரி

தானென்ற காரீய மிலுப்பை நெய்யில்
தனித்தனி யேழுதர முருக்கிச் சாய்க்கத்
தானென்ற கண்டங்கத்திரியின் சாற்றில்
சாதகமா யெடுத்த தனைச் சட்டியிட்டுத்
தானென்ற நாயுருவி சிவந்ததாக
சட்டிக்குளிட்டுநீ வறுக்கும் போது
தானென்ற கரண்டி கொண்டு கிண்டிக்கிண்டி
சரசமாய்ச் செந்தூரமான பின்பு
தானென்ற செந்தூரங் குழலிலிட்டு
சாப்பிட்டால் மேகாதி குடோரி தானே. 608

குடோரி யென்ற செந்தூர பற்பந் தன்னைக்
கூறக்கேள் பணமூன்று நெய்யில் கொள்ள
குடோரி யென்ற சுக்கிலத்தில் மேகம்போகும்
கூறான தேனிலிடச் சலமேகம் போம்
குடோரி யென்ற கீழ்க்காயில் சாற்றிலூட்ட
கொத்தோடே சுரோணித மேகந்தீரும்
குடோரி யென்ற ரத்த மேகத்தைப் போக்கும்
குறுவாழைத் தண்டுநீர் தன்னிலூட்டே. 609

ஊட்டடா சிறுபூளைச் சாற்றில் நீயு
முத்தமனே கல்லெரிப்புத் தீருந்தீரும்
நாட்டடா விஞ்சிச் சாறு சீதசுரம் போகும்
நலமான மேனிச்சாறு தன்னிலூட்ட
வாட்டடா வறுசன்னி வாதம்போகு
மைந்தனே வெற்றிலைச் சாறுகிராம்புகூட்டி
நீட்டடா பித்தசுரம் வெருவி யோடும்
நேருற்ற தாபசுரந் தனக்குக் கேளே. 610

கேளப்பா இளநீரைச் செதுக்கி வந்து
கெடியாக நீரிலிடு பித்தசுரம் போகும்
வாளப்பா பழச்சாற்றி லூட்டு வூட்டு
வாகாக நீரிழிவு போகவென்றால்
வேளப்பா வபினியொடு விளாம்பிசினும் நேராய்
விரவுவாய் தேனிலே பொடிதான் ரண்டு
நாளப்பா வேழுதின முண்ணத் தீரும்
நலமான கிரிச்சினங்கள் போகத் தானே. 611

கிரிச்சினங்கள் போக வென்றால் முசுட்டை வித்து
கெடியாக நெருஞ்சி வித்தாவரை வித்து

கிரிச்சினங்கள் போகவே வகைக் குழக்குக்
கெடியாக விளாம்பிசினும் கழஞ்சியெட்டு
கிரிச்சினங்கள் போகவே யபினிநாலு
கேளப்பா யுலர்த்தி நன்றாய்த் தூளாயாட்டி
கிரிச்சினங்கள் போகவே வெருகடிதான் தேனில்
கெடியாகச் செந்தூரம் பொன்பிடிதான் போடே. 612

நீரிழிவுக் கெண்ணெய்

போட்டிடு வாயட்ட தினம் நீரிழிவு தீரும்
புகழான நீரிழிவுக் கெண்ணெய் கேளு
நாட்டிடுவாய் சூதமொரு கழஞ்சி பத்து
நலமான கெந்தகமுங் கழஞ்சி பத்து
ஆட்டிடுவாய் வெற்றிலையை யிதற்கிரட்டி
யப்பனே பேழைபோற் குகைதான் கட்டி
நீட்டிடுவாய் குகைக்குள்ளே கெந்தி சூதம்
நேராக வைத்துநீ மூடுமூடே. 613

மூட்டியே குகைகட்டி வெற்றிலையை யிட்டு
முழங்கவே யிருநூறு பாத்தி கட்டி
நாட்டியே பொதிந்து கட்டியதின் மேல்கேளு
நலமான வாழையிலை யிருநூறு பொதிந்து
நீட்டியே பிளவை கட்டு சுத்தி வைத்து
நெருக்கிநார் கட்டியொரு குழிகெல்லி நீயும்
ஊட்டியே குழிக்குள்ளே புளிப்புறோணி
யுத்தமனே ஈரஞ்சு மரக்கால் கொட்டே. 614

கொட்டியே அதின்மேலே இலைபொதிய வைத்து
குவித்திடா யதின் மேலேசிராப் புரோணி
கொட்டியே அனலிட்டு வெந்து நிற்கும்
குவியநீ தெரியாமல் மண்ணைமூடி
கொட்டியே மூன்று தினங்கழித்த பின்பு
கூட்டடா மருந்தெடுத்துக் கல்வத்திட்டு
கொட்டியே தூளாக்கி குழலிலிட்டு
கூறக்கேள் செந்தூரங் குணத்தைக் கேளே. 615

குணங்கேளு மறுமேகம் பித்தமேகம்
கூறான வாயுவுடன் கொடிய மேகம்
சினங்கேளு வுண்ட வுடனிறந்து போகும்
செய்ய வுறு கிரிச்சினந்தான் தீரக்கேளு
மணங்கேளு மத்திதோ லாவாரந் தோலு
மைந்தனே வொதிய மரம்பட்டை தானும்
சணங்கேளு சமமாக முலர்த்தி நீயும்
தரிக்க நன்றாய் பொடியாக்கித் தேனிற் கொள்ளே. 616

நீரிறங்க

கொள்ளக்கேள் கிரிச்சினங்கள் போகும் போகும்
கூனமன்றி நீரிறங்கக் கேளு கேளு
விள்ளக்கேள் மாம்பட்டை யாவரையின் பட்டை
வெள்வேல் தோல் வேப்பந் தோலிவை தானேராய்
அள்ளக் கேளிடித்து வொருபாண்டத் திட்டு
அப்பனே சலம்விட்டு வூறவைத்து
துள்ளக்கேள் குறுக்கின முழக்கருந்த
துயர்தீரும் மோகதி சூரணத்தைப் பாரே. 617

மேகாதி சூரணம்

பாரப்பா முந்திரிகை பேரீச்சம் பழமும்
பருநெல்லி யதிமதுர மேலங் கல்நார்
நேரப்பா திப்பிலியுஞ் சிறுபூளை வேரும்
நேரான சந்தனமுங் கொத்தமல்லி
வேரப்பா வெள்ளரியின் வித்துங்கூட்ட
மீறாமல் சமபாகஞ் சூரணித்து
வாரப்பா வெருகடிதான் கழுநீரிற் கொள்ள
மைந்தனே கடுப்பெரிவு கிரிச்சினங்கள் தீரும்
ஆரப்பா வறிந்து செய்வார் சித்தர் முத்த
ரப்பனே மற்றோர்க்குத் தெரிந்திடாதே. 618

வங்க பற்பம்

தெரிந்திடவே குன்மங்கள் சிதறியோடச்
செப்புவேன் வங்கபற்பந் திறமாய்க் கேளு
அரிந்திடாய்த் தகடு கொண்டு வங்கந்தன்னை
அப்பனே சட்டியொன்றி லரைவாசி யுப்பை
சொரிந்திடாய் அதன்மேலே தகடுவைத்து
சோரவந்தச் சட்டி ரம்ப வுப்புமிட்டு
வருந்திடா மேல்சட்டி கவிழ்த்துமூடி
மைந்தனே நாற்சாம மெரித்திடாயே. 619

எரித்தாறி யெடுத்துப் பார் வங்கபற்ப
மென்மகனே ரண்டுபணந் தன்னை வாங்கி
யெரிந்தாறாச் சர்க்கரையில் குழப்பி யுண்ண
எட்டுவகை குன்மங்க ளெல்லாம் தீரும்
மெரிந்தாறு நோய்க் கெல்லா மிப்படியே யிட்டு
இட்டுவா வங்கபற்ப மின்னங் கேளு
எரிந்தாறு நோயனைத்து முசித மிந்த
வியல்பு கேளதில் கண்ணி பிடுங்கிடாயே. 620

பிடுங்கியொரு சட்டியிலே கழுவிக் கொண்டு
பேராகத் தாழிக்குள் பாதியிட்டு
நெடுங்கியே யிரண்டுபலம் வங்கம் வைத்து
நேராக வதின்மேலு மதில் கண்ணியிட்டு
நடுங்கியதோர் சட்டியினாற் கவிழ்த்துமூடி
ராப்பகலா யெண்சாம முத்தீயிட்டு
மருங்கியே யாறவிட் டெடுத்துப் பாரு
மைந்தனே வங்கமது பற்பமாமே. 621

ஆமப்பா பற்பத்தில் பணந்தானொன்று
ஆவினெய்யிற் கொண்டிடவே தீருநோய்கேள்
ஓமப்பா வெலும்புருக்கி வெள்ளைவீழ்த
லூடல்காந்தல் கடுப்பு கிரிச்சினங்கள் தீரும்
வேமப்பா சலக்கழிச்சல் காமாலை பாண்டு
வெகுகனலில் பஞ்சுபோல் வேகும் வேகும்
நாமப்பா மருந்தெல்லா முள்ளபடி சொன்னோம்
நாதாக்களிக் கருவை மறைத்திட்டாரே. 622

அப்பிரக செந்தூரம்

மறைபோற்று மப்பிரக செந்தூரத்தை
வயணமாய்ச் சொல்லுகிறேன் மச்சகேந்திரா
நிறைபோற்று மப்பிரக மிடித்து வாங்கி
நேரப்பா பாண்டத்தி லிட்டு நீயும்
நறைபோலுங் கலசத்தி லரசு அத்தி
நலமான ஆலம்பட்டை யிவைகள் நேராய்
குறைபோக்கி யிடித்துநீ சலமும் விட்டுக்
குமட்டியே கழுவியதை யூறவையே. 623

ஊறியதோர் நீர்பிழிந்து அப்பிரகமாட்டி
யுத்தமனே யெருக்கிலையைப் பாத்தி நன்றாய்
மீறியதோர் அடைவைத்து வுலர்ந்தபின்பு
வீதியிலே யெருக்கவித்து அடையை வைத்து
மாறிய தோரடை மேலே யெருவுங்கொட்டி
மைந்தனே வற்காலிப் புடத்தைப் போடு
தேறிய தோரப்படியே யிருபத்தொன்று
தரத்திலே யப்பிரகஞ் செந்தூரமாமே. 624

செந்தூர மெடுத்து நீஜலத்திற் போட
சீக்கிரத்தில் தளர்ந்து போமிதந்திடாது
செந்தூரம் பணவிடைதான் தேனிற் கொள்ள
கீராக நீரிமிவு தீருந்தீரும்

செந்தூர முண்டிடவே கிரிச்சினங்கள்
செப்பரிய க்ஷயந்தீருங் குன்மந்தீரும்
செந்தூர முண்டிட நோயெல்லாந் தீரும்
சிவசிவா அப்பிரகந் தெளிந்த பேர்க்கே. 625

பிரமேகத்துக்கு

போக்கான பிரமேக மொழியக் கேளு
பூட்டுவே னீருள்ளி பழச்சார் வெல்லம்
தாக்கான சமபாகம் பனியில் வைத்து
தான்பிழிந்து சாப்பிடவே தணிந்து போகும்
தேக்கான வப்பிரக மின்னஞ் சொல்வேன்
திருமாலி னப்பிரக மெடுத்து வந்து
வாக்கான வெள்ளாட்டு நீரில் வெந்து
மைந்தனே மறுபடியு மாட்டக் கேளே. 626

மாட்டக்கேள் சுண்ணாம்பு தண்ணீர்க் குள்ளே
வாகான கோனீரி லவித்துக் கொண்டு
நாட்டக்கேள் சலம் விட்டுக் கழுவிப் போட்டு
நன்றாக விதழி தழா யெடுத்துக் கொண்டு
பூட்டப்பா புதுசீலைக் குள்ளே வைத்து
புகழாகப் பருநெல்லுங் கூடக்கூட்டி
மூட்டக்கேள் கிழிகட்டி சட்டியிட்டு
முத்துப்போல் தெளிக்காட்டி மட்டால்வாரே. 627

வார்த்து நன்றாய் பிசைந்திட வப்பிரகம் கரைந்து
மண்டிபோல் கீழ்நிற்குந் தெளிந்துநிறுத்து
வார்த்து நன்றா யுலர்ந்த பின்பு ஆலம்பாலும்
வளராலம் விழுது மதின் மிகிழுங்கூட
வார்த்து நன்றாய் மயனம் போலாட்டிவாங்கி
மைந்தனே யின்னமுங்கேள் நினைவாய் நீதான்
வார்த்து நன்றாயா விலையில் பழுப்பு வாங்கி
மடக்கொன்றில் மருந்தப்பி மடக்கால்மூடே. 628

மூடியே சீலைசெய்து மண்ணுஞ்செய்து
முசியாதே கஜபுடத்தில் போட்டுவாங்கு
நாடியே மூன்றுதர மிரட்டையிலை யிட்டு
நயமாக ஆறுதர மிப்படியே போடு
நீடியே் கற்றாழைச் சாற்றாலாட்டி
நேராக மூன்று தினம்புடத்தைப் போடு
தேடியே யோரிலைத் தாமரையின் சாற்றால்
சிறக்கவே மூன்று தரம் புடத்தைப் போடே. 629

போட்டதொரு வப்பிரக மெடுத்துப் பின்னும்
போர வெள்ளை ஆட்டுநீர் தன்னிலிட்டு
மூட்டதொரு கையாலே பிசைந்து நீயு
முழங்கவே கொடுப்பைதனைச் சமூலம் வாங்கி
கூட்டதொரு குறுக்கரிந்து சட்டியிலிட்டுக்
குறையின்றி முச்சாம் மெரிக்க பற்பம்
தீட்டதொரு நாவல் தோலத்தித் தோலும்
சிறப்பான வரசந் தோலத்தித் தோலே. 630

தோல்சமனாய் பொருக்கெல்லாஞ் சீவிப்போட்டுத்
துண்டு துண்டாய் நறுக்கியே சன்னமாட்டி
தோல்சமனாய் நாற்குறுணி நீரில்போட்டுச்
சுழலவே யாறியபின் னாலொன்றாக்கிச்
தோல்சமனாய் வெந்தசலம் அப்பிரகத் தூற்றித்
தூளாட்டி வில்லைகட்டி யுலரவைத்து
தோல்சமனாய் கஜபுடந்தான் போடு போடு
சோறுபோல் கோலரக்குக் கியாழம் வையே. 631

கோலரக்குக் கியாழத்தால் புடந்தான் பத்து
குமட்டியே வெந்தபின்பு சீனிவாழை
போலரக்குப் பழந்தேன் பால் நெய்யஞ்சும் நேராய்
புகட்டியதிற் செந்தூரம் பிசைந்து வைத்து
காலரக்குச் சட்டியிட்டு அடுப்பிலேற்றி
கனகம்போல் பதம்வந்தா லாற்றி வைத்து
பாலரக்கு பலமேது சலந்தான் வற்றி
பழமெலாங் காணாமல் நெய்பதமாந் தானே. 632

நெய்பதமாய் நிற்கையில் செந்தூரமாகும்
நேராக வாறிப்பின் வைத்துநீயும்
மெய்ப்பதமா யனுபானஞ் சுரத்துக் கெல்லாம்
மீறாமல் சீனியிலே யரைமாவூட்டு
செய்பதமாய் தாபசுரம் போகவென்றால்
செப்புகிறேன் சுக்குத்தூள் பணந்தான் வாங்கி
கைபதமாய்ச் செந்தூர மரைமாவூட்டு
கடுஞ்சுரங்கள் ஜன்னிக்கு முருங்கைத் தோலே. 633

முருங்கைத்தோல் கியாழத்தா லரைமா வூட்டு
மூர்ச்சையறுந் தோஷ சுரமனைத்துந் தீரும்
முருங்கைத்தோல் பத்தியங்கேள் வெள்ளாட் டுப்பாலில்
மொழிகுறு நொய்யிட்டங்கே கஞ்சிகாய்ச்சி
முருங்கைத்தோல் பனைவெல்லம் கழஞ்சியிட்டு
மொலுமொலென வேர்க்கவே கொடுக்கச்சொல்லு

முருங்கைத்தோ லுதரத்தில் வியாதிக்கெல்லாம்
மூன்றுநாள் தேனிலே குன்றியூட்டே. 634

ஊட்டு வாயிரண்டுமாச் செந்தூரம்வாங்கி
வுய்த்த நொச்சிச் சாற்றிலிடு அட்டகுன்மம் போகும்
நாட்டுவா யுதரத்திற் கட்டிபோக
நறுநெய்யைச் சேர்த்துநீ யுண்ணச் சொல்லு
நீட்டுவாய் நீரிழிவு போகவென்றால்
நிறுத்தொரு மாச்செந்தூரம் தேனிலிட்டு
மாட்டுவாய் காயாசுவாசம் போக
மைந்தனே செந்தூரம் காணிபோடே. 635

காணியிடு நெய்யிலே க்ஷயரோகம் போம்
காய சுவாசம் போம் வறட்சிபோகும்
கோணியுடு வலி குன்மம் போகவென்றால்
கொட்டடா முருங்கைத் தோல் சாற்றினுள்ளே
யூணியிடு சத்தி குன்மம் நீங்வென்றா
லுத்தமனே சுக்கு வெந்தசலத்தி னுள்ளே
பேணியிடு செந்தூர மிருமா நீயும்
பேரான ரசபற்பம் உட்டுகூட்டே. 636

கூட்டையிலே பேதிமெத்த வுண்டாச் சென்றால்
கூறுவேன் காந்த செந்தூரத்தோடு
ஊட்டையிலே சூத செந்தூரந் தானு
மோரொன்று பணந்துக்கு மப்பிரக மரையா
நீட்டையிலே அஷ்டகுன்மம் பறந்து போகும்
நேராகப் பத்தியத்தை நீகேளப்பா
நாட்டையிலே பிரமகுலத் துதித்தோராகில்
நலமான துவரைதுது ளங்காயாமே. 637

லோக செந்தூரம்

ஆமப்பா மாங்கிசந்தான் தின்றபேர்க்கு
ஆட்டுவற்றல் முசல்கறியும் நீர்மோராகும்
வேமப்பா வுடம்பு மெத்த மெலிந்திருந்தால்
வெண்ணெய் தின்னச் சொல்லுவாய் வேறுகேளு
சாமப்பா சலக்கழிச்ச லனைத்தும் போகச்
சாற்றுகிறேன் லோகமுதற் செந்தூரந்தன்னை
நாமப்பா கண்டபடி சுருக்கங்கேளு
நல்லபழச் சாற்றிலே பொடியை போடே. 638

போட்டதனைக் கழுவியே ரவியிற் போட்டு
புகழாக வுலர்ந்த பின்பு நாவல்பட்டை

யாட்டதனைப் பிழிந்திந்த அரைபொடியிற் சேர்த்து
அப்பனே சுவ்றுமட்டும் ரவியிற் போட்டு
நாட்டதனை மூன்றுதர மிப்படியே செய்ய
நலமான செந்தூர மாகும்பாரு
கூட்டதனை யாவரையின் விரைத்தூளாட்டி
கோதன்றிச் சிலவடி கொண்டிடாயே. 639

வடிகொண்ட தூளதனில் விராகன் மூன்று
மகத்தான செந்தூரம் பணந்தான் மூன்று
வடிகொண்ட தேனினொடு கியாழத்தூட்டு
மைந்தனே கியாழத்தின் மருந்தைக்கேளு
வடிகொண்ட கழல்பணியும் வெள்ளுள்ளிக் கடுக்காய்
வசம்பு கோடலுடனே சுக்கோடோறும்
வடிகொண்ட வெட்டொன்றாய்க் கொள்ளச் சொல்லு
மைந்தனே சூரண கியாழங் கேளே. 640

கேளப்பா சலக்கழிச்சல் அனைத்தும் போகும்
கெடியான கடலிறஞ்சிப் பட்டை தானும்
நாளப்பா பலமூன்றே முக்காலாகும்
நலமான ஆவரைத்தோல் மூன்றேமுக்கால்
நீளப்பா பலமஞ்சு கருங்காலி பட்டை
நேரஞ்சு பலங்கட்டுக் கொடிசமூலந்
தாளப்பா கடுக்காய்தான் பலம் நாலாகுந்
தாணிக்காய் பதினஞ்சு தகர்த்துவாங்கே. 641

தகர்த்திடுவா யிரண்டரைதான் பலந்தானப்பா
சாதிக்கா யிவைசேரத் தூளாயாட்டி
தகர்த்திடுவ யிருநாழி ஜலத்திற் காய்ச்சி
சார்வாக வெட்டொன்றாய் குறுக்கிநன்றாய்
தகர்த்திடு வாயிரண்டு குத்துச் சூரணத்தை
சாப்பிடவே யிருநேர மசனமேலே
தகர்த்திடுமே சலக்கழிச்சல் மாறுமாறுந்
தலைமுழுகத் தயிலமொன்று சாற்றக்கேளே. 642

மதுராதி தயிலம்

சாற்றக்கேள் மதுராதி தயிலமொன்று
தபோதனர் களாராய்ந்து சாபந்தீர்த்துச்
சாற்றக்கேள் சிறுகீரை பொன்னாங்காணி
தளிராவாரை யிலையுந் தாமரையின் யிலையுஞ்
சாற்றக்கேள் முடத்தாழை விழுதுங்கூட
சமபாக மிடித்ததனை பதக்குநீரில்

சாற்றக்கேள் நாலொன்றாய்க் குறுக்கி வாங்கி
தயிர்போலப் பிழிந்து வைத்து பின்னுங்கேளே. 643

கேளப்பா வெட்டிவேர் பலமஞ்சாகும்
கெடியாகு மிலாமிச்சம் பலமஞ்சாகும்
நாளப்பா சந்தனமும் பலமுமஞ்சாம்
நலமான ரெண்டுபலம் செங்கழுநீர்மூலம்
தாளப்பா விவையெல்லாஞ் செவ்விளநீர் விட்டுச்
சாதகமா மயனம் போலாட்டி வாங்கு
நீளப்பா முக்குறுணி சலத்திற் சேர்த்து
நெருப்பெரித்து யெட்டொன்றாய்க் குறுக்கிவாங்கே. 644

வாங்கியே முந்திவைத்த கியாழத் தூட்டி
மைந்தனே மேல்மருந்தை மாட்டக்கேளு
பாங்கியே யிலவங்க மேலங் கோட்டம்
பருமதுரம் செண்பகப்பூ சாதிபத்திரி
தாக்கியே மஞ்சிட்டி நாகங் கல்னார்
சாதிக்கா சடாமாஞ்சி கிராம்பு சீர
மோங்கியே மாஞ்சிகையுங் கூகைநீரு
முத்தமனே வகையொன்று கழஞ்சி யொன்றே. 645

ஒன்றாக மருந்தெல்லா மாட்டிவாங்கி
யுருகவே முன்வைத்த கியாழத்தூட்டி
நன்றாக நல்லெண்ணெய் படியும்விட்டு
நாயகற்குப் பூசைசெய்து வடித்துப்பின்பு
குன்றாகுங் கற்பூரம் புழுகு சட்டம்
கோரோசனை யிரண்டு பணவிடைதான் சேர்த்து
பொன்றாகுந் தயிலமிட்டு சீயக்காய்தேய்த்துப்
புகழாக முழுகிவரப் புதுமை கேளே. 646

பதுமையென்ற மேகங்க ளிரண்டு பத்தும்
பொறிவிழுந்த கருமருந்து போலவேகும்
பதுமையென்ற வுருவம்போல் வாகடங்கள்
பண்டிதர் களறியாமல் பழியைக் கொண்டார்
கதுமையென்ற தொழிலெல்லாஞ் சூத்திரத்தில் சொன்னேன்
கண்கெட்ட குருடருக்குங் காணலாகும்
கொதுமையென்ற நாகபூபதியைக் கேளு
கோடானு கோடிபிணி தீருந்தானே. 647

நாக பூபதி

தானென்ற தாம்பிர பலந்தான் ரெண்டு
தகடுவெகு லேசாகத் தட்டிவாங்கி

தானென்ற புளியிலைச் சாறுக்குள் போட்டு
சாதகமாய் கொதிப்பித்து யெடுத்துக்கொண்டு
தானென்ற கெந்திரண்டு பலந்தான் வாங்கி
சாதகமா யெருக்கம்பால் விட்டுஆட்டு
தானென்ற தகட்டிலிரு புறமும் பூசி
தாள வெயிலு லர்த்தியே திரும்ப வாங்கே. 648

வாங்கியே தகடுதன்னை சிறுசட்டிக்குள்
மாட்டியொரு சட்டிமேல் கொண்டு மூடி
தாங்கியந்த சட்டிக்குள் சீலைசெய்து
சாதகமாய் மண்செய்து யிருசாம மட்டும்
தேங்கியந்த வெருவடுக்கிச் சட்டிவைத்து
திரும்பவொரு முழவுயர மெருவடுக்கி
பாங்கியந்த வனலூட்டி யெறித்து ஆறில்
பார்மகனே செந்தூர பற்பமாமே. 649

பற்பமெத்த தாம்பிரத்தை தூளாயாட்டி
பாச்சடா சமபாகம் சூதங்கெந்தி
அற்பமொன்று நினையாதே செருப்படி சாறுவிட்டு
ஆட்டியே குகையிலிட்டு மண்ணுஞ் செய்து
சிற்பமென்று முன்போலப் புடத்தைப் போடு
சிவசிவா யாறவிட்டெடுத்துப் பின்பு
சொற்ப மென்றோ ரெட்டிலொன்று நாவிகூட்டி
சேராமல் நாலிலொன்று மிளகுகூட்டே. 650

மிளகிட்டுக் கொடிவேலி மூலம்வாங்கி
முலரவே கியாழத்தி லாட்டு ஆட்டு
இளகிட்டு யிருஜாமங் கழிந்தபின்பு
யிதமாக குன்றியிடை குளிகைகட்டி
மிளகிட்டு குகையிட்டு நெல்லுக்குள் வைத்து
வொருதிங்கள் சென்றுமே வாங்கி மைந்தா
புளகிட்ட நோய்க்கெல்லா மனுபானந்தன்னைப்
பாடுகிறோம் பண்டிதரே பார்த்திடீரே. 651

பார்த்திடவே திப்பிலித்தூள் பணந்தானொன்று
பாச்சடா பூபதியா முண்மை வொன்று
சேர்த்திடவே பதின்மூன்று சன்னிபோகும்
சேரிதற்கு யிஞ்சிச்சார் திறமாநீயும்
கார்த்திடவே கொடிவேலி கியாழத்தூட்டு
கடுஞ்சுறுக்குப் பதினெட்டு சூலைபோகும்
வேர்த்திடவே திரிகடுகு தன்னிலூட்டு
கொடுத்தவுடன் சுரமனைத்துங் கூசிப்போமே. 652

கூசிப்போ மஷ்டகுன்மந் தேனிலூட்டு
குலாவியதோர் சயரோகங் கூப்பிட்டோடும்
பேசிப்போம் பவுத்திரமும் கரப்பான் புண்ணும்
பிரளவருங் குத்துமுதல் பிலக்கெட்டோடு
மாசிப்போ மூண்டுநின்ற வியாதியெல்லா
மடியுடனே பேர்ந்துபோ மப்பாகேளு
வாசிப்போ மென்று நினைவாயிற் றென்றால்
மைந்தனே யிந்தநூல் வாசிப்பாயே. 653

கெந்தக தயிலம்

வாசிக்குங் கெந்தகத்தின் தயிலம் வாங்க
வகைகேளு புலத்தியனே மச்சகேந்திரா
நேசிக்குங் கெந்தமொரு பலந்தான் மூன்று
நிருவிகற்ப சூதமஞ்சு லிங்க மூன்று
ஆசிக்குங் கெவுரி நீமூன்று தூக்கு
அரிதார மூன்று சிலைதான் மூன்று
பூசிக்கு மாயிமுதல் நிருவாணிக்கும்
புகழாக வாமத்திற் பூசிப்பாயே. 654

பூசித்து மஞ்சளிலே தயிலம்வாங்கி
புகட்டிநீ மருந்தெல்லா மயனம் போலே
பூசித்து யெட்டு நாளாட்டி வாங்கு
புகழான பரணியிலே யாட்டி மைந்தா
பூசித்துப் பரணிக்குள் பலப்பக் கல்லால்
பொருந்த நீயடைத்தங்கே சந்துவாய்க்கு
பூசித்துக் கற்சுண்ணச் சோறுங்கூட
பொங்கி நின்ற வுமிக்கரியு மாட்டிவாங்கே. 655

வாங்கியதோர் மருந்ததனைச் சிலையிலூட்டு
வாகாகச் சந்து வாயடைத்துச் சுற்றி
வாங்கியதோர் மண்செய்து கச்சுமட்டும்
வாகாகக் குழிவெட்டிப் பாதிமட்டும்
வாங்கியதோ ராட்டெருவை யதிலே கொட்டி
மணல்கொட்டி நெற்குழிபோல் வளைத்து பின்னும்
வாங்கியதோர் பரணிதனை யதன்மேல் வைத்து
மைந்தனே யாறுதிங்க ளாட்டியங்கே. 656

ஆறுதிங்களான பின்பு திறந்து பாாக்க
வப்பனே நீலநிறத் தயிலமாகும்
வேறுவினை வொன்றுமில்லை தயிலங்கொள்ள
வேதாந்தத் தாயெனக்கு விரித்துச் சொன்னாள்

மாறுவித மணல்படாத் தயிலமாச்சு
மகத்தான தயிலமது மரணமில்லை
வேறுவிதம் வியாதிகட்கு வனுபானந்தா
னென்மகனே மஞ்சள்சா றிடித்திடாயே. 657

மஞ்சள் சாறதிலூட்டு மகோதரங்கள் தீரும்
வளர்நிம்பச் சாற்றிலிடக் குலைநோவு தீரும்
மிஞ்சாமல் வெருகம்வேர் தயிலம் வாங்கி
வேதித்துக் கொடுத்திடவே குன்மந்தீரும்
அஞ்சாமல் சீனியிலே கொள்ளக் கொள்ள
அப்பனே தாதுவெல்லா மமிர்தமூறும்
துஞ்சாமல் சாதிக்காய் பத்திரியின் தூளின்
துளியிரண்டு தேவிட்டுத் தயிலமூட்டே. 658

ஊட்டியுண்ணத் தாதுவெல்லாம் பொறுத்துநிற்கு
முத்தமனே கொடி வேலித் தயிலத்தூட்டி
கூட்டியுண்ணக் கடிவிஷங்கள் தீருந்தீரும்
கொண்ட சனஞ் செரியாட்டால் கடுகிலூட்டி
வாட்டிவிடும் பித்தமெலாந் தீரமென்றால்
மைந்தனே வெறுநீசத் தண்ணீராகும்
வீட்டில் வளர்சிறுகீரை வெந்ததண்ணீர்
வேதித்து கொடுத்திட மேகம் போமே. 659

மேகம்போ மித்தயிலங் குடவனிலே யூட்ட
மேவிநின்ற களிம்பற்றுச் சொர்னமாகும்
மேகம்போ லோகங்கள் பொன்னுமாகும்
வெள்ளி வங்க மிரும்பு செம்பு பொன்னுமாகும்
மேகம் போமிக்கருவை வெளிவிடாதே
வேதையாங் காயசித்தி நோயுந்தீரும்
மேகம்போஞ் சூதசெந்தூரங் கேளு
விபரமுடன் புலத்தியனே விரும்பிநீயே. 660

சூத செந்தூரம்

விரும்பிக்கேள் சூதமொன்று கெந்திரண்டு
மீறாமல் கருந்துளசி நீராலாட்டி
விரும்பிக்கே ளிரண்டுதினம் குப்பிக்கேற்றி
விபரமுடன் சீலைமண் தானேழுஞ்செய்து
விரும்பிக்கேள் குப்பியிட வாய்க்குத்தானும்
வெண்ணுப்பு பச்சைமண்ணு முப்புங்கூட்டி
விரும்பியே யாட்டியதை விரல் போல் தீர்த்து
மேல்வாய்க்கு ளழுத்திநன்றாய் வைத்திடாயே. 661

வைத்திட்ட யடிகனத்த பாண்டத்தூடு
மைந்தனே தமரிட்டு மணலைகொட்டி
வைத்திட்டு விரல்கனந்தா னாலதாக
வாகாக வதின்மேல் குப்பிவைத்து
வைத்திட்ட குப்பிக்குக் கழுத்துமட்டும்
மணல்சொரிந்து சூட்டடுப்பில் வைத்துநீயும்
வைத்திட்ட மந்தாக்கினி தன்னைமூட்டி
மைந்தனே யிரண்டுபத்து சாம மாட்டே. 662

மாட்டடா காடாக்கினி பத்துசாமம்
வளமாகச் செந்தூர மாகும்பாரு
நீட்டடா ஆறியபின் னிறக்கிப்பாரு
நிறமிந்திர கோபம்போல் சிவப்புமாகும்
மாட்டடா வித்தயில மிறக்கும் போது
மாயிக்குப் பூசைநன்றாய் வைத்துநீயும்
மூட்டடா வனுபானத் துறையோ டொக்க
வொவ்வொன்றாய் சொல்லுகிறோ மூணிக்கேளே. 663

கேளப்பா பொரிமாவில் செந்தூரம் பணந்தான்
கெடியாக வுண்டிடவே சத்திசுரம் போகும்
நாளப்பா வுள்காய்ச்சல் போகவென்றால்
நலமாக முன்பொடி யிலூட்டு விட்டு
தாளப்பா சர்க்கரையில் தாபசுரம் போகும்
சயகாசந் தீரவென்றா லிஞ்சிச் சாற்றில்
வாளப்பா சாத்தியமாஞ் சுரங்களெல்லா
மாறவென்றால் நொச்சிச் சாறுக்குள்ளே யூட்டே. 664

ஊட்டுவாய் வயிற்றிலே சீதம்வீழி
லுத்தரிக சாம்பலிலே யூட்டுமைந்தா
நீட்டுவா யஷ்டகுன்மம் போகவென்றால்
நேரான கொடிவேலிக் கியாழத்தூட்டு
மூட்டுவாய் சன்னிவகை யொழியவென்றால்
முத்தங்காய் கியாழத்தி லூட்டுஊட்டு
நாட்டுவாய் திரிதோஷ மொழிய வென்றால்
நலமான திசாரமூலக் கியாழத்தூட்டே. 665

கியாழமிட்டு அரோசி சுரமொழிய வென்றால்
கடுஞ்சுக்கு நெல்லுமியை சமன் வறுத்து
கியாழமிட்டு இவையிரண்டு கூட்டியூட்டு
கண்கொண்ட பவுத்திரங்கள் போகவென்றால்
கியாழமிட்டு அமுக்கிறாக் கிழங்குவெந்து
கன்னிகட்குக் கெற்ப விப்புருதியானால்

கியாழமிட்டுத் தோடைநீர் தன்னில்நீயும்
கரியானு மிளகு நன்றாயரைத் திடாயே. 666

அரைத்ததொரு மருந்ததனைச் செந்தூரஞ் சேர்த்து
அருந்திடவே பாண்டுவகை யஞ்சுந்தீரும்
இரைத்ததொரு பதினெட்டுக் குட்டம் போக
வேரண்டத் தயிலத்தி லூட்டுவூட்ட
நிரைத்ததொரு அருமூலம் போகவென்றால்
நேர்கருணைச் சாறதனி லுண்ணப் போகும்
பரைத்ததொரு பத்திரண்டு மேகம் போக
பருத்திவிரைத் தயிலத்தில் பாச்சு பாச்சே. 667

பாச்சப்பா காதிரண்டுங் கேளாதென்றால்
பன்றிமுன்னைப் புங்கெண்ணெய் கொண்டுஆட்டிப்
பாச்சப்பா காதுகளிலடைத்து க்காற்று
படாமலே பஞ்சுகொண்டு வடைத்துநன்றாய்
பாச்சப்பா வீட்டிலே மஞ்சி யோரம்
பாங்காக மூன்றுநா ளிருக்கக் கேட்கும்
பாச்சப்பா வயித்தியங் ளின்னமுண்டு
பார்த்தெல்லாம் சுருக்கியிதில் பாடினேனே. 668

செயகுலாந்தகன்

பாடுகிறேன் சிலேற்பனந்தான் தொண்ணூற்றாறும்
பற்றறுக்கச் செயகுலாந் தகனைக் கேளு
போடுகிறேன் கடைசியிலே மைந்தாகேளு
புகழுகிறேன் கடுஞ்சுறுக்குப் புகழ்ந்துகாணும்
நாடுகிறே னரிதாரம் பலமதொன்று
நலமான சலாசத்துப் பலமதொன்று
நீடுகிறேன் செம்பருத்திச் சாற்றில்நீயும்
நேராக மூன்றுநாளா ட்டிவாங்கே. 669

வாங்கியதைக் குகையிலிட்டு மண்ணுஞ்செய்து
மண்கனத்த சிறுதாழி கொண்டுவந்து
வாங்கியே தமரிட்டு மணலைக் கொட்டி
மைந்தனே மணல்மேலே குகையை வைத்து
வாங்கியே மணல்கொட்டி சட்டிமூடி
வாகான வடுப்பிலே வைத்துநன்றாய்
வாங்கியே யேழுதினம் தீபவன்னி
மாட்டியே யாறவிட் டிறக்கிப்பாரே. 670

பார்க்கையிலே தேவிக்கு பூசைசெய்து
பார்க்களவிலே யிந்திர கோபம் போலாம்

சேர்க்கையிலே பணவிடைதா நாகவல்லி சாற்றில்
செலுத்தினால் சயகாசந் தீரும்தீரும்
வார்க்கையிலே தோடைச்சாருள்ளே யூட்டு
மகத்தான வுளமாந்தை யெட்டுந்தீரும்
தீர்த்திடவே சிலேற்பன வாதமானால்
தென்னமட்டைச் சாற்றிலிடு தீர்ந்துபோமே. 671

போமப்பா காய சுவாச மானாற்கேளு
பொற்கடுக்காய்த் தூளிலிடு பொடியாய்ப் போகும்
வேமப்பா சயகாசம் போகவென்றால்
வெல்லமுடன் தேன்கூட்டிக் கொடுத்துவர நீ
ஆமப்பா சுரகாசந் தனக்குநீ
கேளருமையாய் கரிசாலச் சாற்றிலூட்டு
சாமப்பா விவற்றாலே யெண்பத்தாறு
சயமெல்லா மொழிந்துபோம் சாற்றக்கேளே. 672

சாற்றுகிறேன் வாந்திவிக்கல் போகவென்றால்
தயவாக வெண்ணெயிலே குழப்பியூட்டுச்
சாற்றுகிறேன் செங்கழுநீர்ச் சாற்றிலூட்டு
சர்வசுர மனைத்தும்போஞ் சாத்தியமாகும்
சாற்றுகிறேன் சுகிர்தத்துக் குள்ளுமாகச்
சார்வாக தீவினைக்குப் பிரகாசமாகச்
சாற்றுகிறேன் னிப்படித்தா னிருந்தபேர்க்கு
சகலசித்து மாடிடவே தாய்சொல்வாளே. 673

சொல்லுகிறேன் தனித்திருந்த சரீரத்துள்ள
துடக்கெல்லா மகற்றி·நன்றாய்ச் சித்திசெய்து
மல்லுகிறேன் நாற்கலையும் விடாமல்கட்டி
மகத்தான பரவெளியை விழியால்நோக்கி
வெல்லுகிறே னிர்க்குணத்தி லிருந்துகொண்டு
மேலான ஆதிபிதா மென்தாள் போற்றி
கொல்லுகிறே னென்று அதுசமயம்விட்டு
கொத்தோடே திரோதாயி மாய்கைதள்ளே. 674

தள்ளிவிட்டுப் பதியிலே யிருந்துகொண்டு
சங்கற்ப விகற்பமெல்லாந் தகர்த்தேயோட்டி
தள்ளிவிட்டு சண்டாளர் நேசந்தன்னை
சாதகமாய் சுவாமிபதந் தன்னையேற்று
தள்ளிவிட்டு அசாத்தியமாய் நோயுள்ளோர்க்குச்
சற்குணமாய் புகழ்ந்தாக்கால் சாத்தியமாகும்
தள்ளிவிட்டுச் சாத்தியமாம் நோயுள்ளோர்க்கு
சண்டாளக் கோபம்வரில் நோய்தீராதே. 675

தீராத தெய்வீக மருந்தையீந்து
திருட்டுமனப் பாவியென்றால் செனனத்தோடு
தீராது போவதுவே பெரியோர் செய்கை
செனனமென்ற பெருங்கடல்தான் தெளிந்தபேர்க்கு
தீராது செய் யோகியானாற் கேளு
தெப்பம்விட்டுக் கரைகடப்பா னாறு கடல் தன்னை
தீராத மூவினையுந் துடர்ச்சியாகித்
திரிகைபோற் சக்கரம்போல் திரிவார்காணே. 676

திரிந்திட்ட னண்டரண்ட பதங்கள் தோறும்
செப்பினதோர் சாஸ்திரங்கள் கோடாகோடி
திரிந்திட்ட ரிஷிகள்முதல் சித்தர் தேவர்
சிருட்டித்த நூல்களெல்லாந் திடமாய்ப் பார்த்து
திரிந்திட்ட சாஸ்திரமும் சூத்திரமும் நிகண்டும்
திறந்து முதல் பலதொகையுந் தெரிந்து பார்த்தேன்
திரிந்திட்ட பண்டிதங்களிதற் கொவ்வாது
சிவனுக்கு சஞ்சீவி யிந்நூல் பாரே. 677

பிளவைக்கு

பாரப்பா புடைத்தெழுந்த பிளவையோடு
பலவீக்கஞ் சிலந்திக்குப் படுவனுக்கு
சீரப்பா சிறுகோட்டைப் பருப்பு வாங்கி
சிறந்தமுலைப் பால்நூறு திறமாயாட்டி
வாரப்பா வேரண்டம் விச்சூற்றுந் தயிலம்
வளமாக முலைப்பாலுங் கூடச்சேர்த்து
பேரப்பா சரரித்து சினமுகம்விட்டு
போடடா சற்றொக்கப் போடுபோடே. 678

போடப்பா வந்திசந்தி காலந்தோறும்
போற்றிடவே வற்றிப்போம் நீர்கொண்டு தானால்
போடப்பா வனுதினமும் போடப்போட
வுகைகளில்லை வீக்கத்தை மேலேயேற்றும்
போடப்பா புழுத்துடையும் விரணமாறும்
புண்வாயில் சீலைதனை யூட்டிப்போடு
போடப்பா காரங்கள் வைத்துபின்பு
புரைபுண்க ளாறியே விழலாய்ப் போச்சே. 679

அஞ்செண்ணைத்தயிலம்

விழலாச்சு சன்னிக் கஞ்செண்ணெய்த் தயிலம்
விளம்புகிறேன் புங்கயெண்ணெய் வேப்பயெண்ணெய்

அழலாகு மெள்ளெண்ணெ யிலுப்பை யெண்ணெய்
யாமணக்கி ணெண்ணெயி வையஞ்சுமப்பா
தழலாக வொன்றாக்கி மருந்தைச் சேர்க்க
சாத்தக்கேள் ரசங்கெந்தி தாளகமும் சிலையு
முழகாக லிங்கமொரு வகைக்கு மிருகழஞ்சி
யொக்கவே பழங்காடி யூட்டியாட்டே. 680

ஆட்டியே பழஞ்சீலை தன்னிலூட்டி
யதிற்கிசைந்த குறுங்கோல் திரிபந்தமாக்கி
நீட்டியே யெண்ணெய் குத்தித்தீக்கொளுத்தி
நினைவோடே யெண்ணெய்களை வார்க்கும்போது
வூட்டிமை யில்லாமை யந்தமருந்துடனே தயிலம்
விடவிடவே மூன்றுதிரம் விட்டிறங்கும்
ஈட்டிவைத்த தயிலமது கைகால்களிற்
காசினிடை தேய்க்கச் சன்னிகளுஞ் சீதம்போமே. 681

சீதமொடு சன்னிபதி மூன்றுவாதம்
திகையாத வுளைச்சலொடு திமிரல் வாங்கும்
போதமில்லை சன்னியொடு சயித்தியங்கள் தீரும்
பிணியுள்ளோர்க் கிதுநன்று பேணிவைக்கும்
நீதமுள்ள சஞ்சீவி நோய்க்கு மார்பாணி
நீங்காத பிணிநீங்கும் நித்தியங் காணும்
வேதமுறை கண்டுசொன்னேன் சிறுசந்தனாதி
விசேஷமட வைப்பதற்கு மேகவெட்டை போமே. 682

மேகவெட்டை நீரிழிவு காசக்கூறு
மிச்சுமித்தம் நெஞ்செரிப்பு வாய்வு நீரேற்றம்
போகமதிற் றாதுநட்டம் வாதபித்தம்
பிரதமை பிரண்டெழுந்த தொந்திப்புப்பேர் பெரியகுன்ம
மாகமெல்லா முதறிவிடு மிருமலோடு
அதிசாரங் குடல்வாத மிகுதிவாத
மேகமாய்க் குத்தெடுக்கு முளைச்சலொடு வீக்க
மெடுத்து பவஞ்சூலை குட்ட மின்னம் வகையறியே. 683

அறிவதுதான் சோகைபித்தம் காமாலை பாண்டு
அரோசியொடு சிரோபாரம் அக்கினியின் மந்தங்
குறிகுணங்கள் விகற்பமுள்ள பீனிசங்கள் சுரங்கள்
கூரறிய நேத்திர நோய் க்ஷயங்கள் பலவொழிய
நெறியுடனே பாடுகிறேன் சிறுசந்தனாதி
நேர்த்தியாகுஞ் சூத்திரத்தி லறிந்து செய்ய
பிரியாத ரோகங்க ளனைத்தும் விழுந்தோடும்
பிலத்த விருபத்தொன்று மேகம் போய்விடுமே. 684

சிறுசந்தனாதி

போய்விடுமே கியாழ கற்ப மருந்துவகை சொல்லப்
புலத்தியனே மச்சேந்திரா கேளுகேளு
நேயமுடன் சந்தனமோர் பலமுங்கூட்டு
நேரதற்கு வெட்டிவேர் நிறுத்திடிப்பாய்
வீயமுடன் சலம்பதக்கு விடு நாலொன்றாய்
வேகவைத்த பின்பு வேருடகியாழம்
மாயமுள்ள வில்வவேர் நீர்வள்ளிக்கிழங்கு
அப்பனே நன்னாரி சீந்தி முத்தக்காசே. 685

முத்தக்கா சல்லி கொட்டி நெய்தல் தாமரையின் மூலம்
நிலப்பனைக் கிழங்கு விலாமிச்சம் வேரும்
வித்ததொரு குறுந்தொட்டி வேராலம் விழுதுமேற்
பொன்னாங்காணி வேரா வரையின் பட்டை
இத்தொக்க வகைக்கு நாலரைப் பதமாக
விடித்ததற்குள் சலமு மறுதூணியிட்டு
சுத்தொக்கக் காய்ச்சியது யெட்டொன்றாக்கி
சுகமாக முன்வைத்த கியாழத்திற் கூட்டே. 686

கூட்டியபின் சாறுவகை சொல்லக்கேளு .
கூரறிய முடக்கொத்தான் வீழியொடு தான்றி
நாட்டிநீ நொச்சியொடு முருக்கிலை கற்றாழை
நயமாம் பொன்னாங்காணி நீர்வள்ளிக் கிழங்கு
மாட்டிவகைக் காறுபடி யிளநீரவ்வண்ண
மப்பனே தாழியொன்றி லடுப்பேற்றிக் காய்ச்சு
வீட்டிமையில் லாமலது யெட்டொன்றாக்கி
வேடுகட்டி வடிகட்டி விநாயகனைப் பணியே. 687

பணிந்துவொரு தாழிக்கு மஞ்சள் காப்பு கட்டி
பாங்கான கியாழங்கள் சாறுகளும் விட்டு
துணிந்ததிலே நல்லெண்ணெய் யாறுபடி விட்டு
சொல்லரிய வாவின்பாலில் வண்ணஞ் சேர்த்து
அணிந்ததிலே கற்கவகை யுரைக்கிறேன் பார்
அகிற்கெந்தஞ் செஞ்சந்தன மல்லாற்கேளு
கனிந்ததொரு சாதிக்காய் சாதிபத்திரி கிராம்பு
கச்சோல மேல மிலவங்கங் காணே. 688

காணப்பா வங்கபத்திரி சித்தரத்தை
கடுங்கார மஞ்சிட்டி வங்காளபச்சை
பூணப்பா பேரீச்ச முந்திரிகைப் பழமும்
புழுக்கைவேர் சட ாமாஞ்சி பூலாவின் கிழங்கு

பேணப்பா செவ்வள்ளிக் கொடி தேவதாரம்
பேரீத்த சிறுசண்பகமுந் தாளிசபத்திரி
நாணப்பா கிளியூறல் குறாசானி யோமம்
நன்மதுரஞ் சிறுநாகப் பூவுஞ்சேரே. 689

சேரடா சாத்திரவேதி யிருகழஞ்சி
சேரவே தூளாக்கி யிளநீரிலாட்டி
வாரடா இளநீரில் குழப்பி யொன்றாய்
வளமாகத் தாழிக்குள் கலக்கி யடுப்பேற்றி
பாரடா கமலவன்னி தீபவன்னி யாலும்
பற்றாமல் சிறுகொதியும் நாலுதினம் வைத்து
நீரடா குறுக்கி விடு மிளகுபதங் கண்டு
நினைவோடே வடிக்கும் போதப்பா கேளே. 690

கேளப்பா சாம்பிராணி கோஷ்டம் வகைக்காறு
கெடியான அவின் கழஞ்சி நாலரையுங் கூட்டி
நீளப்பா குங்குமப்பூ கோரோசினை யோடு
நீள்வெள்ளி லோத்திரமும் வகைக்கு முக்கழஞ்சி
தூளப்பா வாட்டியதை யோலைப்பூப் பாரத்தி
தூவி வடி கூட்டுடனே கலரத்துள்ளே
நாளப்பா கஸ்தூரி பச்சைகற்பூரம்
நற்புழுகு சட்டமிவை வகைக்கு முக்கழஞ்சே. 691

வகைமூன்றுங் கட்டியது விட்டு நன்றாய்
வடித்திருக்கும் தயிலம் வார்த் தாறவைத்து
பகையாமல் தேவிக்குங் கணபதிக்குங்
பாங்காகப் பூசித்துத் தானியபுடம் வைத்து
திகையாமல் நாலுநாட் கொருக்கால் மூழ்கு
சீயக்கா யரப்பிட்டு வெந்நீரும் விடுவாய்
நகையாத படியன்று மோர்தயிர் பால் புளிப்பு
நல்லிறைச்சி கைப்ப கற்ற நலமாகும் பாரே. 692

பாரப்பா மற்றாநாள் கூட்டு வகைகூட்டு
பத்தியங்க ளசடில்லை பறக்குமடா நோய்க
ளாரப்பா விதின் பெருமை யறிந்தமட்டுஞ் சொன்னோம்
ஆருக்கும் சொல்லாமே ஆச்சரியந்தன்னை
நேரப்பா வுள்ளவர்க்குச் சொன்னாலும் நன்று
நினைவுகெட்ட மாந்தரிடம் சொல்ல வேண்டாம்
காரப்பா பரையுடைய தியானங் கைக்கொண்டு
கர்த்தாவை யுள்ளவைத்தால் பலிக்குமிந்த நூலே. 693

சுகபேதி செந்தூரக் குழம்பு

இந்துப்பு நேர்வாளம் வகைக்கு மிருகழஞ்சி
யேரண்டஞ் சிறுமுத்துப் பருப்பு மிதினிரட்டி

சிந்தையில்லாச் சாதிலிங்கம் காரமொவ்வொர் கழஞ்சி
திருக்கறவே சுத்திசெய்து கல்வத்தி லரைக்க
சுந்திரமாயிருசாம மரைத்துக் குழம்பதனைத்
தனிச்சிமிழி லிட்டடைத்து தாக்க நீகேளு
முந்தவொரு குன்றியிடை யிஞ்சிச்சார் தனில்
மிளகுடைய கியாழத்தில் பனைவெல்லத்தி லருந்தே. 694

அருந்தியரை நாழிகைக்கு வெந்நீர்கொள்ள
வபானத்தி லுள்ள மலமனைத்தும் போகும்
வருந்தியே யாசனத்தை வெந்நீரில் சுத்தி
வயிறெடுப்ப தெந்தமட்டும் விட்டுநீபார்த்து
திருந்தியதோ ராயாச மினித் தாங்காதென்றால்
சிறந்த குளுந் தண்ணீரால் சுத்தியது செய்து
பொருந்திய தோரன்னப்பால் குளிரப்பண்ணி
புரைதீர வுப்பிட்டு கஞ்சி கொள்ளே. 695

கஞ்சிக்கொள்ளக் குளிர்ந்தசலத் தாலேபேதி
கட்டிவிடும் பேதியின்னங் காணவென்றால்
தஞ்சமா வார்த்த கஞ்சியுப்பிடாமல்
தன் சூடாய்க் கொண்டிடவே பேதியாகு
மிஞ்சிக்கும் வெகுபேதி முளகு பனைவெல்ல
மெந்தமட்டும் பேதியாமியல் புண்டாகும்
பஞ்சையாய்ப் பாடவில்லை யுண்மையாகும்
பதியினின்று செய்வதற்குப் பலிதமாமே. 696

பேதிக்கு வாய்வுபத்திரன்

ஆமப்பா பேதிக்கு வாய்வுபத்திர
னறைகிறேன் புலத்தியனே மச்சகேந்திரா
நாமப்பா திரிகடுகு கடுகுரோணி
நலமான தெசாபுரம் வாய்விளங்கம் வகைக்கு
வோமப்பா விருகழஞ்சு நேர்வாளஞ்
சுத்தியுற்ற முளைகளைந்த பருப்புக் கழஞ்சுபத்து
வேமப்பா விருகழஞ்சி யூனாச்சாற்றில்
விரைந்து யிருசாமமரையுண்டை கட்டே. 697

கட்டியதோர் குளிகையினை நிழலுலர்த்திக்
கற்கொம்புச் சிமிழிலே கடுகவைத்து
முட்டியதோர் வாய்வுமலங் கட்டுவாங்க
முற்றியதோ ரிஞ்சி தட்டிப் பிழிந்தசாற்றில்
அட்டியில்லா தொருபோது குன்றி ரெண்டிடைதா
னரைத்துநீ கொடுத்திடவே யாமமுதல் நீங்கும்
வெட்டியல்ல பனைவெல்லந் தனிலருந்த
வெந்நீருங் கொண்டிடவே விரோசன மாம்பாரே. 698

சுகபேதி கியாழம்

யாரப்பா சுகபேதி கியாழந்தன்னை
பாடுகிறேன் பிரமியிலை கடுக்காய் நாலு
யாரப்பா களிப்பாக்கு மூன்று சுக்கிரண்டு
பழிப்பற்ற வித்தொன்று கழிஞ்சியது வெல்லாம்
யாரப்பா கியாழம் ஒருபடி சலத்திற் போட்டு
பரிவாக வெட்டொன்றாய்க் குறுக்கிக் கொள்ளு
யாரப்பா பேதியுண்டா மின்னமதி லொன்று
பகருகிறேன் கற்பமொன்று பகருவேனே. 699

பகருகிறேன் பிரமியிலை நீங்கினாலும்
பண்பான முன்போலே கழஞ்சாய் சேர்த்து
பகருகிறேன் இஞ்சி தட்டிப் பிழிந்த சாற்றில்
பாங்காகத் தெளிவிலே நால்வகையு மிறுத்து
பகருகிறேன் கலக்கி நீ யறிந்தினாக்கால்
பழமலமும் வாயுவெல்லாம் பறக்குங்கண்டாய்
பகருகிறேன் கனபேதி கண்டாலப்பா
பாகமாய் மோரன்னம் பண்ணிப்பாரே. 700

வச்சிர கபாடம்

பாரப்பா திறப்பதற்கு வகையைச் சொன்னோம்
பாடுகிறே னடைப்பதற்குப் பண்பாய் மைந்தா
நேரப்பா வச்சிர கபாடங் கேளு
நெடுநாளை மூலரத்தங் கிராணிய திசாரம்
வேரப்பா மூளைமூலம் வயிறுளைச்சல் கடுப்பு
வீறடங்கச் சாதிக்காய் சாதிபத்திரி கிராம்பு
சீரப்பா வால்மிளகு யேலமுடன் சுக்கு
திறமாக வகைக்கு விரு கழஞ்சி கூட்டே. 701

கூட்டடா வெட்பாலை சீரகந்தானிரண்டு
கோரோசனை கோதில்லா விடை யதிமதுரம்
நாட்டடா வெந்தயமும் வகைக்கு நாற்கழஞ்சி
நலமான வபின்மருந்து கழஞ்சியரையோடு
வாட்டடா சிறுவருப்பு வெதுப்பி வாங்கி
மைந்தனே வெந்தயமோர் பலங்கியாழ
மாட்டடா கியாழம் விட்டு மருந்தை நன்றா
யாட்டியதை யடையாகத் தட்டுவாயே. 702

தட்டியதோ ரடைக்கு மொரு சட்டிவைத்து
தணல்மூட்டி யடையதனை தானே போட்டு
விட்டினிய கியாழத்தைச் சுறுக்குப் போட்டு
வெந்தந்தக் கியாழத்தா லரைத்துப்பின்பு

அட்டியில்லா தாறுதரஞ் சுறுக்குக் காட்டி
யரைத்திடவே கபாட மருந்தாகுமப்பா
திட்டித்த வயணிம்போற் சொன்னபடி கேட்கும்
திறமாக வின்னமொரு கபாடஞ் செய்யே. 703

செய்துதான் சாதிக்கா யைங் கழஞ்சி
சிறந்ததொரு பத்திரியு முக்கழஞ்சி
செய்துதான் கிராம்புமொரு நாற்கழஞ்சி
பெருமரத்து பட்டைத்தூ ளறுகழஞ்சி
செய்துதான் குறோசானி யெழுகழஞ்சி
யியம்பியதோர் வெட்பாலை ஐங்கழஞ்சி
உய்வதற்குக் கசகசா ஊமத்தின் வித்து
மொவ்வொன்று முக்கழஞ்சி யுரைத்துப் போடே. 704

போடப்பா சடைக்கஞ்சா புடமேழு திர்ந்த
பொடியுமொரு பதின்கழஞ்சு பொலிவாய்க் கூட்டி
யாடப்பா வபின் மருந்து கழஞ்சி கூட்டி
அப்பனே யூமத்தஞ் சாற்றாலாட்டி
சூடப்பா கண்டைக்கா குளிகையளவு கட்டி
சுகமாக நிழலுலர்த்தி சுண்டவைத்து
நாடப்பா வயிறுளைச்சல் கடுப்பு வேதி
நளுக்கு வயிற்றிரைச்சல் யுரைத்துப் போடே. 705

போமப்பா வாறுவகை கிராணி யதிசாரம்
போவதற்கு வனுபானம் புகலக் கேளு
வாயுவறு முத்தக்கா சிறு கழஞ்சி தட்டி
மைந்தனே கியாழமது யெட்டொன்றாக்கி
வீயமுட னோருண்டை யரைத்து தட்டி
விடிவேறு மப்படியே மூன்றுதின மருந்து
நேயமுட னிளவெந்நீர் தேன் முலைப்பால் தன்னில்
நின்றுவிடு மின்ன வகை நிகழ்த்துவோமே. 706

ஓமமது வடித்திருத்து தேனிற்சேர்த்து
வொருபோது கொடுத்திடுவே யோட்டம் நிற்கும்
சாமமிரு நான்கினுக்கு மெடுத்த பேர்க்குச்
சாந்தமா யனுபானம் சாற்றக்கேளு
வேமமெனு மரம்பைப் பூடவியல் சாற்றி
யிருபோது தேன் கலந்து விட்டாயாகில்
போமிந்தக் கிராணி யதியசாரம் வயிற்றிரைச்சல்
பொல்லாத கழிச்சல் ரத்தக் கடுப்புபோமே. 707

கபாட லேகியம்

வாறின்னம் பேதிக்குக் கபாட லேகியத்தை
வழுத்துறேன் புலத்தியனே மச்சமுனி ஐயா
பேருபட பெருமரத்துப் பட்டை சாரணைவேர்
பிரண்டை வேரிலந்தை பட்டை கொடிவேலி வேரும்
வேறுபட வழுக்கிறா மரக்கிழங்கு நடலை
வேர்க்கிழங்கு வகைக்கு மொரு பலந்தூளாக்கி
கூறுபொடி வடிகட்டி கடைமருந்தை
கூறுகிறேன் நன்றாகக் கூறக் கேளே. 708

கூறினதோர் மிளகு சுக்கு அதிவிடைய மோமம்
குறாசானி சாதிக்காய் பத்திரி கிராம்பு
தேறினதோர் வெட்பாலை யரிசி பலங்கால்தான்
சிறந்த வபின் மருந்துமொரு கழஞ்சியவை வெதுப்பி
யாறினதோர் பொடித்துவடி கொண்டிரண்டுபடியு
மன்பாக விஞ்சிச் சாறரைத்துப் படியுமிறுத்து
ஆறினதோர் தெளிவதனிற் பனைவெல்லம் பலமூன்று
அடைத்ததிலே பாகாகக் காய்ச் சுமதுச்சிதமே. 709

உச்சிதமாய்ச் சேரவிழும் பருவமதிற் பொடிதான்
ஒழுகவே தூவியதிற் கிளறிப் பின்பு
வெச்சிடும் பருவத்தில் தேனு நறுநெய்யும்
விடுவகைக்கு மாகாணி விரைந்து கிண்டி
வச்சிடுவாய் புதுக்கரந் தன்னில் மைந்தா
வகையறிந்து யந்திசந்தி மூன்றுதின மருந்து
எச்சுகுடல் பொருமல் மலப்பற்றமு முண்டாக்கு
மேற்பதுவும் பொரிகஞ்சி இயல்பாம் பாரே. 710

கபாட சூரணம்

பாருமொரு கபாட சூரணத்தை மைந்தா
பண்பாகச் சொல்கிறோம் பரிந்து கேளு
தீருகிற வியாதி யதிகிராணி சாரம்
தெளியாத வயிற்றுளைச்சல் சலக்கழிச்ச லிரைச்சல்
நேருகிற குடல் பொருமல் தாபமொடு சோபம்
நிற்பதற்கு மருந்துவகை நீ தானொன்றாய்
சீறுகிற கடைக் கஞ்சா புட மெழு தீர்ந்த
சிறந்ததொரு சாதிக்காய் சாதிபத்திரி கிராம்பே. 711

சேரான யதிவிடையம் குறாசானி யோமம்
பொடித்த தூள் பெருமரத்துப் பட்டை முத்தக்காசு
வேரான சுக்குடன் மாதளம் பழத்தி னோடு
வெட்பாலை யரிசி சமன் கழஞ்சி கூட்டி
காறான வபின் மருந்து கழஞ் சொன்றேயாகக்
கடைமருந்து வெதுப்பியதைத் தூள தாக்கி
நேராக கலந்து சூரணமிதப்பா
நினைவறிந்து செய்ய வதினின்று போமே. 712

நின்றுபோம் சூரணந்தான் வெருகடியைச் சேர்த்து
நினைவோடே இருபோது கொள்வாயாகில்
தின்றுவிடும் நோயை இன்ன மனுபானங்கேள்
தேன் நல்ல பனைவெல்லம் சேர்த்த ருந்தத்தீரும்
வென்றியுள்ள தின்னமொரு சூரணந்தான்
விளம்புவேன் சாதிக்காய் பத்திரி கிராம்பு
இன்றினிய குறாசானி வெட்பாலை யிஞ்சி
இயல்பான பெருமரத்துப் பட்டைத்தூள் கூட்டே. 713

கூட்டடா மலைதாங்கி வேர்முத்தக்காசு
கொடியதொரு வால்மிளகு அக்கிராகாரம்
நீட்டடா சடாமஞ்சி சுக்கு வதிமதுரம்
நினைவாக வகை யதனுக் கிருகழஞ்சு
பூட்டடா வபின் மருந்து அரைக்கழஞ்சி வெதுப்பி
பொடிசெய்து வெருகடிதான் தேனிலே பொசிக்க
மூட்டடா வந்திசந்தி கியாழத்தில் செலுத்த
மோசமில்லை கியாழவகை மொழிகிறேனே. 714

மொழிகிறேன் மலைதாங்கி வேர்முத்தக்காசு
முக்கியமாம் பெருமரத்துப் பட்டை சுக்குமிளகு
தெளிவாக வகைக்கு மொரு கழஞ்சி கூட்டிச்
செலமிரண்டு படிவிட்டுக் கிராம்பு பதினைந்து
வழியாக முடிச்சிட்டு எட்டொன்றாக
வற்றவைத்து வதில்பாதி கிராம்பரைத்துக் கலக்கி
நெளியாம லந்தி சந்தி மேற்பொடியும் போட்டு
நீமூன்று தினங் கொடுக்க நெய் சொல்லக்கேளே. 715

கபா நெய்

சொல்வோ நாமிருள்ளி யிருகழஞ்சி
துணுக்காக நொறுக்கி யொரு சட்டியிலிட்டு
வல்வாயன் மணிப்பிரண்டைச் சாற் குறுக்கிட்டு
வறுப்பதுதான் பொன்னிறமாய் வறும்போதப்பா

பலவித நெய்யாகாது பசுவி நெய்தான்விட்டு
பதமறிந்து இறக்கிரண்டு காசிடை தானூட்ட
கொல்வமென்று வந்த வெமதூதரையும் வெல்லும்
கொடியதொரு நெய்யை யின்னம் கூறக்கேளே. 716

கூறவே னாயுருவி யூமத்தங் கொழுந்து
கொட்டைப் பாக்களவரைத்து வெவ்வேறே வைத்து
ஈறில்லா வீருள்ளி நொறுக்கி யிருகழஞ்சி ரண்டு
வகைமுன் மருந்து மெருமை வெண்ணெயுழக்கு
மாறில்லா வெந்திறக்கிப் பதத்தில் வடித்திறக்கி
மருந்து நெய்யு மருந்திடவே வளமாமப்பா
தேறிநன்றாய்த் தேறாது தெளியவின்னம்
செப்புவேன் மைந்தா நீ தெளிந்து கொள்ளே. 717

தெளிந்துகொள்ள வின்னமொரு வகையைக் கேளு
திறமான மிளகு மிரு கழஞ்சியப்பா
கலிந்திடவே நுணுக்கிய தூள் நல்ல வெல்லஞ்
சேர்த்துக் கடுகவே வெருகடிதான் காலைசந்தி
யொழிந்து மொழியாத தற்கின்ன மொன்று சொல்வோ
முத்தமனே மிளகு நறுநெய்யு மாட்டி
நெளிந்திருக்கும் பேதிக்குங் கபாடஞ் சேர்த்து
நீயருந்து கியாழங்கள் நிகழ்த்து வேனே. 718

அருளாதி கியாழம்

நிகழ்த்துவே னருளாதி கியாழந்தன்னை
நெடுநாளை மாதளம் பழஞ்சாங்கமோடு
செகத்திலுள்ள பனைவேரு மருங்காலி வேரும்
சிறந்ததொரு நீர்ப்பூலா வறுகம்வேரும்
உகத்த வால்மிளகு மகிழ் மாம்பட்டைபலா
வேரோங்கு பெருமரப்பட்டை சிற்றேரண்ட வேரும்
அகத்திய முத்தக்காசு மிலவு கருவேலமதின் பிசினும்
வெட்பாலை யரிசியு மோரிடையே. 719

ஓரிடையாய்க் கோட்டமது வகைக்கு முக்கழஞ்சி
யொன்றாக விடித்துத் தூள் மூன்று கூறிட்டு
நீருமிரு நாழியினி லொரு கூறிட்டு
நீட்டியதிற் கிழிகட்டிப் போட வகை சொல்வோம்
பேர்பெரிய சாதிக்காய் கிராம்பு சீரகமும்
பேரான வதிவிடையம் குறாசானி யோமம்
சாரமும் னாறுகிழி கட்டிரண்டு கிழியுந்
தண்ணீரு மெட்டொன்றாய் தாக்க வரைத்திடுமே. 720

அரைத்த மருந்துப் போதிற் கியாழத்திற் கலக்கி
யருந்திடுவாய் மூன்று தினமடங்குமப்பா
திரைத்த வயிற்றிரைச்சல் ரத்தக் கடுப்புடன்
சீயிவைகள் தீருதற்கு நேரிலந்தை யாவரைவேர்ப்பட்டை
நரித்தலை போலிருந்த விட்ணுகிரந்தி மிளகுடனே
நாட்டு வாயிருநாழி தண்ணீர் விட்டுக்
கரைத்திடவே சாதிக்காய் கிராம்பு சீரகமுங்
கருத்துடனே கிழியாறு கட்டிரண்டுபோடே. 721

போட்டகிழி கியாழத்தை யெட்டொன்றாக்கிப்
புனிதமாயிருபோது கிழியரைத்துக் கொடுக்க
சாட்டையில்லா பம்பரம் போலாட்டி வரும்போது
சாதகமா யின்னவகை சாற்றக்கேளு
வோட்டமெல்லாந் தவிர்ப்பதற்கு விளாம்பழத்தினோடு
முற்பனஞ் சேர் மாதளையினோடுங் கூட்டு
வாட்டமில்லாப் புழுக்கைவே ரறுகரும்வேரும்
மறுவில்லா வில்வவேர் முத்தக்காசாமே. 722

ஆமடா வெட்பாலையரிசி நாயுருவி
யதிவிடையமிளகு சமனொக்க நறுக்கியிட்டு
நாமடா சலமு மிருநாழி யெட்டொன்றாக்கி
நறுந்தேனுங் காசிடைதா னந்திசந்திசேர்த்து
வோமடா சாதிக்காய் பத்திரி கிராம்பு
வோங்கு மதிவிடையமுடன் குறாசானியோமம்
போமடா வெதுப்பிய தூள் மேல் பொடியுந்தூவி
பொல்லாத வயிற்றுளைச்சல் கடுப்புப் போய்விடுமே. 723

போய்விடுமே வயிற்று ரத்தங் கடுப்புளைச்சல் தனக்குப்
புகழான வாவரையி லஞ்சுவகை கூட்டு
மாயவல்லி மோட்டுப்பூ கிராம்பு சாதிக்காய்
மகத்தான தூளுமது வகைகள் சமனாக
வீயமுடன் மோர்சட்டி வேடுகட்டி யவித்து
விரைத்தரைத்து எருமை மோர் தயிரி லூட்டு
நியமாய் நின்று போமின்னம் விசித்திரமாய்
நிகழ்த்துவது வுற்பனமாய் நீயறிந்து செய்யே. 724

செய்யடா யின்னமொரு கியாழங்கேளு
சிற்றரத்தை மலைதாங்கி வேர் பூநாகம்
மெய்யடா பெருமரத்துப் பட்டை சமன் கூட்டி
மேல்மருந்து கிராம்பு பத்து கிழிகட்டிப்போடு
வையடா விரு நாழி யெட்டொன்றாக்கி
மைந்தனே கிழியரைத்து கலக்கி யந்திசந்தி

கொய்யடா மூன்று தினங் கொடுத்து நீயும்
குடல்படுவன் பிளவை புடைத்தெழுந்த நோய்க்குழம்பே. 725

புண்களுக்குக் குழம்பு

குழம்புபலப் புண்களுக்குச் சிலந்திக்கெல்லாம்
கூறுவேன் சிறுகொட்டைப் பருப்பாழாக்கு
இளம்பிள்ளை முலைப்பாலி லாட்டி வாங்கி
யிறக்கடா முலைப்பாலு மேரண்டத் தயிலம்
வளம்பெறவே மத்திச்சு சிரட்டை யொன்றில்
வைத்தெந்த வீக்கமொடு பிளவைக் கெல்லாந்
தளமுனையாய் முகம்போட்டுப் பக்கத்துக் கனத்திற்
றடவியே விதனம்விடும் தோன்றுதல் பெறுமே. 726

வற்றாமல் நீர்கொண்டு பரந்து கனத் திருந்தால்
வளையமாய்க் குழம்பதனைப் பூசு பூசு
வற்றாம லெழும்பியே யுடையுமப்பா
மறுபடியுஞ் சலமாகக் கழன்று போகும்
வற்றாத குழம்பதனைச் சீலையூட்டி
வாய்மேலே போட்ட பின்பு வளையப் பூசு
வற்றாத சிலந்தி பருப்படுவன் வீக்கம்
வன்பிளவை புடைத்த தெல்லாம் வளமாய்ச் செய்யே. 727

சவ்வீரக்குழம்பு

செய்யடா சவ்வீரக் குழம்பு தன்னைத்
திறமாக வோர் கழஞ்சு சிந்திடாமல்
பையடா நுணுக்கியபின் னாவின் வெண்ணெய்
படிகால் தண்ணீர் வாங்கி பண்பாய் கூட்டி
நெயடா விருசாம மொன்றா யாட்டி
நலமான பரணியிலே யடைத்து வைத்து
வையடா பிளவை முதல் மார்பிலாணி
மகத்தான புண்பொடிகளா றுந்தானே. 728

ஆறுந் தானிக் குழம்பி லெல்லாம் போகு
மப்பனே பழங்காடி புளியிலை வெந்து
கூறாக வந்திசந்தி காடியாற் கழுவிக்
கூட்டுவாய் சீலைகொண்டு அந்நீர் மாற்றி
வேறுபடி யிளச்சீலை களிம்பை யூட்டி
விரைந்துநீ போடு புண்களாறுமட்டுந்
தாறுமாறாய்ப் புரையும் புண்ணுமாறித்
தழும்பு கருத்தலர்ந்து விடுந் தண்மைபாரே. 729

தண்மையாய்ச் சொல்லி விட்டோ மடக்கம் விட்டு
சாத்திரத்தை யொருவருக்குங் காட்ட வேண்டாம்
உண்மையாய்ப் பட்சத்தோர்க் குரைக்க நன்று
வுத்தமியாள் தெசதீட்சைக் குள்ளே சொக்கி
வண்மையாய்க் கபடற்ற பேர்க்கு மைந்தா
வகைபிரித்துக் காட்டினால் மகிமையுண்டு
பண்மையா யிந்நூலைப் பார்க்கப் பார்க்கப்
பண்டித சிரோமணியாம் பாருபாரே. 730

கவுரி சிந்தாமணி செந்தூரம்

பாரப்பா கவுரி சிந்தாமணி செந்தூரம்
பாடுவேன் ரசகெந்தி வெண்கார மூன்று
சீரப்பா வகைக்கு மொரு பலந்தானாக
செய்கின்ற சுத்தியிலே தெளிந்து பின்பு
வாரப்பா கல்வத்தி லிட்டு ஆட்டி
வயணமென்ன வெண்காரத் தாலே மாளும்
நேரப்பா வரைப்பொடி போல்கறுத் திருக்கும்
நேத்தியாய்ப் பொடியதனைக் கிழிபோற் கட்டே. 731

கிழிபோலக் கட்டியதால் வண்ணமப்பா
கெட்டியா மிரட்டிலே கொட்டைப் பாக்காய்
வழிபோலக் கிழிகளெல்லாம் வெவ்வேறாக
வரிசைபெறக் கட்டியயொரு தாழி தன்னில்
ஒழிவான மணல்கொட்டி முக்கால் மாட்டு
வொவ்வொன்று குழிமணலி லூன்றிப் பின்பு
தெளிவாக மணல் நிரம்ப விட்டுமப்பால்
சிறப்பாக வுலைமூடிக் கொண்டு மூட்டே. 732

மூட்டடா வரிசை பெறச் சாணளவு குழியு
முருகவே யெருவடுக்கி மேல்தாழி கவிழ்த்துப்
போட்டடா வெருவடுக்கிக் கசபுடத்தை நன்றாய்
பொலிவாகக் கணேசனுக்குப் பூசைதனை நடத்தி
நாட்டடா வக்கினியை மூட்ட வொரு நாளும்
நயமாக மறுநாளு மாறிய பின்னப்பா
சூட்டடா தேவிமுதல் வடுகனை நன்றாகத்
தொழுவதற்குப் பூசைவிதி தொடங்குவாயே. 733

தொடங்குவாய் பலவகையும் நன்றாகச் செய்து
துதித்திந்தப் புடம்பிரித்துச் சூட்டி நீ பார்
அடங்கினதோர் செந்தூரம் புலாம்பழம் போல் கறுத்து
அப்பனே யிருக்கு மதற் கையமில்லை
மடங்காதே மறுபடியும் புடம் போடாதே

மகத்தான நோயெல்லாம் வாங்கும் வாங்கும்
புடங்காணப் போகாது வனுபானந் தன்னைப்
பூட்டுவேன் வகையாகப் பூட்டுவேனே. 734

பூட்டடா திரிகடுகு வெதுப்பித் தூளில்
புகட்டடா வெருகடியில் தேனுங்கூட்டி
பூட்டடா பணவெடை செந்தூர மந்தி
பிலத்ததற்கு மண்டலந்தான் பேணிப்பாரு
பூட்டடா சூலைபதி னெட்டுமல்லால்
பொல்லாத வாயு விருபத்தாறு மகலும்
பூட்டடா பதினாறு குன்ம முளமாந்தை
பொல்லாத சுரங்களெலி கடியும் போமே. 735

போமப்பா மந்தார காசமோ டீளை
பொருமியதோ ரிருமல் க்ஷயம் காயாசுவாசம்
போமப்பா சுரமாந்தை மூல மரையாப்பு
பொறுமாறு காமாலை யோனிச் சூலை
போமப்பா வாண்சூலை யண்டவாதம்
பொல்லாத துடைவாழை விப்புருதி பத்தும்
போமப்பா நாச்சூலை பக்கசூலை
பொறி சுற்றிவருங் கண்டமாலையும் போமே. 736

போய்விடும் கறப்பன் புண் கடிவிப்புருதி
புகைந்திருமு மீளை விப்புருதிகூட
போய்விடுமே கூட விப்புருதிதானும்
பூட்டுகிறே னனுபானம் புகழ்ந்து கேளு
போய்விடுமே செந்தூரம் பணவிடையி னோடும்
புணிக்க முறுஞ் சாதிக்காய் பத்திரி கிராம்பு
போய்விடும் யதிவிடையம் வெதுப்பிய தூளப்பா
போக்குடனே வெருகடியிற் றேனுங்கூட்டே. 737

கூட்டியே வதிசாரம் பன்னிரண்டு வகையும்
கூறரிய கடுப்பு முதல் கூறுகிறாய்
நீட்டியே செய்கின்ற கிராணி வகை யாறும்
நின்றுபோ மின்னமொரு பணவிடை செந்தூரம்
காட்டிலே வளர்கருணைக் கிழங்குவர்த்திப் பொடியும்
கடுஞ்சுருக்குத் திப்பிலியின் பொடியுங் கூட்டி
மூட்டியே வெருகடியிற் றேனுஞ் சேர்த்துண்ண
மூலவகை யொன்பதுவும் பவுத்திரமும் போமே. 738

போமப்பா பவுத்திரங்கள் நீறாயெல்லாம்
பூட்டுவேன் செந்தூரம் பணவிடை யிலின்னம்

ஆமப்பா ஆவரையின் தயிலத்தி லூட்டு
மப்பனே சதையடையப்பன் பதினெட்டு வகையும்
வேம்ப்பா நீரிழிவு மிருபதோடு
மென்மேலு முள்ளுருக்கிப் பன்னிரண்டுங்கூட
நாமப்பா வின்னங்கேள் மூத்திரமடைப்பு
நடுக்கெடுக்கு மூத்திரப் பிரனையுந் தானாறே. 739

ஆறாக வருமேக மிருபத்தொன்று
மத்திசுர மெட்டுவகை யுஷ்ணமாறும்
நீறாகுஞ் செந்தூரம் பணவிடையி னோடும்
நேத்திபெற யழிஞ்சி விரைத் தயிலத்திலூட்ட
பேரான வயிற்று நோயறு பதுடன் வாய்வு
புரண்டு குத்திடு முப்பத்திரண்டும்
சூரான விப்புருதி யெல்லாந் தீரும்
கூறுவே னின்ன மனுபானங் கேளே. 740

கேளப்பா செந்தூரம் பணவிடையி லின்னம்
கொடியான வெருக்கிலையின் பழுப்பிலையை வாட்டி
நாளப்பா வொருசேரை தண்ணியிலே யூட்டே
நலமான வயிறெடுக்கு மோருஞ் சோறுண்ணு
கேளப்பா வொன்றுமில்லை யொன்றைவிட்டு ஒருநாள்
கொண்டிடவே விஷபாகஞ் சோகை காமாலை
நீளப்பா சோபமொடு பத்தியமும் பாண்டு
நீர்கோவை யகுவை யொடு சுரமும் போய்விடும். 741

சுரம்போகு மிந்தச் செந்தூரத் தாலே
சொல்லரிது வனுபானஞ் சூட்டக் கேளு
அறம்போலே நோயறுக்கு மப்பா சொன்னோ
மாச்சரியமாச்சரியம் பத்தியத்தைக் கேளு
பராபரைக் குமரனுரைத்தபடி நான் சொன்னேன்
பத்தியந்தான் வெள்ளாட்டு பாலுங் கொள்ளு
திறம்படுத்தி விட்டப்பா சிற்றுப்பு கரிகள்
சீறாட்டு கண்ட முதல் தேடலாமே. 742

ஏலாதி தயிலம்

தேடரிய ஏலாதி தயிலந் தன்னை
செப்புவேன் ரோகங்க ளனைத்தும் போக
மூடரிய வாலரசு வத்திநீர் வஞ்சி
முதுகொன்றை மருதிலழி சிதல்லத்தி கோவை
போடரிய வமுக்கிறாத் தலைசுருளி வேம்பு
பேய்புடலை விலாமிச்சு பேர் பெரிய புரிசு

நீடரிய வெட்டி முத்தக்காசு வகைக்கி வகை
நிறை பத்துப்பலம் வேரும்பட்டைத் தண்டுந் தூக்கே. 743

தூக்கியொன்றா யிடித்ததற்கு சலந்தான் பத்து மரக்கால்
சோர்வின்றி மிடாவிலே கியாழம் போடே
தாக்கியே தீ எரித்து நாலொன்றாய் குறுக்கி
சங்கைபெற நெல்லிக்காய் சாறு படி ஒன்று வாங்கி
நல்லாவின் பால்படி தான் மூன்று
அப்பனே நல்லெண்ணை படியிரண்டு
யோக்கியமாய் கற்கத்து மருந்து கேளு
வுத்தமனே யேலமொடு லவுங்கஞ் சேரே. 744

சேர்தகரங் கச்சோல மடவிகச் சோலம்
சிறுநாவல் பூவுடன் செங்கழுநீர் கோட்டம்
பேர்பெரிய தாளிசபத்திரி கல்மதமும்
பெருங்குரும்பை லிங்கமுஞ் சடாமாஞ்சில் குக்கில்
பார்புகழும் சதகுப்பை பொன்மெழுகு மஞ்சள்
பழந்தாரம் சாதிக்காய் புன்னைகொட்டை
சீரழிஞ்சில் வேர் செண்பகவேருட நன்னாரி
சிறந்த குங்குமப் பூவுடனே குதிரை செவியே. 745

செவியதிம்துரம் வால்மிளகு மிருசந்தம்
சிற்றரத்தையின் பூரல் சீரகந் தற்கோலம்
கவிய கருஞ்சீரகமும் கல்னார் பச்சை
கடல்நுரைப்பு மிருமஞ்சள் கடுகுரோணி
நெவியழிந்து வாய்விளங்கம் வகையொன்றுக்கு
நேராக விருகழஞ்சி யாவின்பாலுந்
தவியாம லெடுத்துரைத் தெண்ணை தனிலிட்டு
தயவாக நாள்மூன்று சிறுகொதியுஞ் செய்யே. 746

செய்தபின்பு நாலாநாள் பதத்திலே வடிக்க
செப்புவேன் முன்மருந்திற் குங்கும கற்பூரம்
செய்ததொரு கோரோசனை புழுகுசட்டம்
திருக்கின்றி தட்டிநீ போட்டு வடித்திடவே
செய்து நல்ல கணபதிக்கு தேவி வடுகனுக்கும்
சிறப்பாக பூசித்து சிந்தைகளி கூரச்
செய்து வண்டு கட்டி வைத்து எட்டு நாட்கப்பால்
சிறப்புடனே முழுகும் வகை செப்புவேனே. 747

செப்புவேன் சீயக்கா யரைப்பு மிட்டுச்
சீராக வெந்நீராந் திடமாயப்பா
ஒப்புகிறேன் நாலுநாட்கொருக்கால் பின்பு
வோரெட்டு நாட்டொருக்கால் முழுகச் சொல்லு

தப்பில்லா முழுக்கன்று பால் தயிர் மோருப்பு
தவிர்ப்பதுவு மற்றா நாள் தாழிவிலாதருந்து
வைப்பில்லா தடக்கம் விட்டு சொல்லி விட்டேன்
மைந்தனே வியாதிபோம் வகையைக் கேளே. 748

வகைகேளு க்ஷயரோகம் காயாசுவாசம்
மண்டையிலே வருஞ்சூலை பீனிசங்க ளொழியும்
பகையான வுளமாந்தைச் சுரமாந்தை காந்தல்
பண்புள்ள கால்கை யெரிவுகளுந் தீரும்
சிகையிரும லீளையுட னத்தி தாகம்
சிரோக நயமனதில் வரும்பில்ல நீரும்
சிகையாத மேகவகை பயித்திய மிரண்டுந்
தீராத வினைதீரத் திறத்தைப் பாரே. 749

அஷ்ட சூரணம்

பாரப்பா அஷ்ட சூரணத்தைச் சொல்வேன்
பருத்திவிரை கழஞ்சியுட பருப்புங் கூட்டி
சீரப்பா வெங்காயம் பத்திரி கிராம்பூ
தேடரிய வளைய விந்து கல்லுப்பிட்டு
சேரப்பா கருவேம்பு வகைக்கு முக்கழஞ்சி
சிறந்த திரிகடுகுடனே சீரகமும் ரண்டு
நேரப்பா வோம மிலவுங்க பத்திரி
நிறைவகைக்கு வொருபலந்தான் தூக்குதூக்கே. 750

தூக்கியே மருந்தெல்லாம்வெதுப்பி தூளாக்கி
சூரணமா மதற்கு வனுபானம் சொல்வேன்
தாக்குவது வுஷ்ணத்தின் வாய்வதாகில்
தனித்த யிளவெந்நீரில் வெருகடி தான்கொள்ளு
போக்கு வெருகடி பொடியை சோற்றிற்றூவி
புரட்டியதில் நெய்விட்டு பிடி கவளமஞ்சு
நீக்கில்லா துண்ட பின்பு மறுகளிகள்கூட்ட
நின்றுவிடு முஷ்ணமாம் வாய்வு தானே. 751

வாயுவெனும் வலதுபுறத் தணுகிய பக்க
வாயுமெனு மூலமாம் வாய்வுகளுக்கப்பா
நேயமுத்தக் காசறு கழஞ்சி தட்டி
நீருமிரு நாழிதன்னை யெட்டொன்றாய்க் குறுக்கி
வீரமுட னந்திசந்தி வெருகடி சூரணந்தான்
விரும்பிநீ கொண்டுவர வினையொழியும் பாரு
ஆயமாய் பித்தவெட்டை வாய்வுவெனிற் பச்சை
யமுதுபடி கழுநீரி லந்திசந்தி யருந்தே. 752

ஏலாதி சூரணம்

அருந்துவது மண்டலந்தா னோய்கள் பிலமானா
லற்ப சொற்ப னோய்களுக்கு அதிற்பாதி கொள்ளு
மிருந்து மிளி யேலாதி சூரணந்தானப்பா
செப்புவேன் புலத்தியனே மச்சமுனி கேளு
மருந்தினால் பிணி தீர வயித்தியத்தைச் செய்யும்
வகையேல மிலவங்க மஞ்சள திமதுரம்
பொருந்து திரிகடு குடனே திப்பிலியின்மூலம்
புகழ் செவியஞ் சிற்றரத்தை சந்தனத்தின் பொடியே. 753

சந்தனமுஞ் சாதிக்காய் பத்திரி கிராம்பு
தகரமுடன் வால்மிளகு திரிகை பேரீத்து
பத்தமுள்ள வேரிமலர்த்தாது கொத்தமல்லி
பருநெல்லி நெற்பொரி மாபருத்தி விரைப்பருப்பு
மந்தமுள்ள மாதளை விளாவில்வத் தோடு
அப்பனே நிலப்பனை வேரமுக்கிரா நன்னாரி
கந்தமுத்தக் காசுடனே சிந்தி தயிர் கூட்டி
கண்ட கண்ட துகையிதுக்குக் கழஞ்சி யொன்றாயெடுமே. 754

எடுத்து வகை மருந்ததுக்கு நேர்சமன் சீனி
யியல்பாக மருந்துலர்த்தி யிடித்துத் தூள் கலந்து
வடித்துநீ புறுக்கரந் தன்னிலிட்டு
மைந்தனே யுண்டுவா வனுபானங்கேளு
தடித்த முலைப்பாலாகு மதுவுமாகும்
சம்பழத்தின் சாறாகும் சாற்றக்கேளு
கடித்தவாய் துடைத்தாற்போல் வியாதிகளை நீர்க்க
கைமுறையாய்ச் சொல்லுகிறே னின்னங்கேளே. 755

இன்னங்கேள் மாதளையின் பழச்சாறாகு
மிதினாலே நோயொழிவு மெரிவுடனே யிரத்தஞ்
சன்னையாய் வருகின்ற தாபமொடு சோபம்
சாத்திய வித்தந் தலை நோயத்தி சுரம் வாய்வு
பண்ணு விஷசுரமாக மீளையோ டிருமல்
பலசுரமு முப்பிசமும் செஞ்செரிப்பும் பறக்கும்
நன்னயஞ் சேரசுவ கெந்தி சூரணத்தை
நாட்டுவேன் புலத்தியனே நயந்து கேளே. 756

அசுவகெந்தி சூரணம்

கேளப்பா அமுக்கிராவேர் பலமு மூன்று
கெடியான சுக்கேலம் கூகை நீறும்
கேளப்பா வகை ஒன்றுக் கொன்றரையாம் பலந்தான்
கிராம்பு சிறுநாகப்பூ கிளாப்பலந் தானிரண்டு

கேளப்பா திப்பிலியோ பலந்தானெட்டு
கிருபைபெற மிளகு நால் பலமுங் கூட்டு
கேளப்பா விதையெல்லாமிடித்த தூளைக்
கெட்டியாய் வடிகட்டி சீனியிட்டுக் கிண்டே. 757

சீனியிட்டு நாற்பலமுங் கலந்து சூரணந்தான்
செப்புவே னனுபானந் தேனிஞ்சிச் சாற்றில்
சீனியிட்டுக் கிண்டியது வெண்ணை முத்தக்காசில்
செலுத்துவது வெருகடி தான் தினமும் ரெண்டுபோது
சீனியிட்டுக் கிண்டியே மச்சமுனி ஐயா
தெளிவான புலத்தியனே ஞானசீலா
சீனியிட்டுக் கிண்டியது மண்டலந் தானருந்த
தீருகிற நோய்கேளு மந்த முதல் வாய்வே. 758

வாயுவறும் வலிதீரும் ரோகிதீரும்
வாதபித்த சிலேத்துமத்தின் வகையுந் தீரும்
மாயுகின்ற வுப்பிசமும் நெஞ்செரிப்பு பித்த
மரிகுரலும் வாந்திக்ஷயு மீளையோடிருமல்
நேயமுடனுண்டு வர நின்று போமப்பா
நில்லாத நோய் கிறாணிகுன்மம் நின்றிடுமே
சீயிரத்த கிறாணி குன்மம் குக்குட சூரணத்தைச்
செப்புவேன் கருங்கோழி திறமான தொன்றே. 759

குக்குட சூரணம்

திறமான கோழியொன்று கால்தலையுந் தள்ளி
சித்திரமாய் வயிற்றிலுள்ள பாண்டத்தைப் போக்கி
உறவாக மேல்மருந்து கூட்ட வகை கேளு
வுத்தமனே திரிகடுகு வெள்ளிப் பருப்பு
நிறையாக வகையொன்று கழஞ்சியுமே பத்து
நேயமுள்ள வளையவிந்து கல்லுப்பு நேராய்
குறையாம லையஞ்சு கழற்சி தன்னைக்
கூட்டுகிறே னின்னவகை கூறுவேனே. 760

கூரான பருத்திவிரை பருப்பு கொள்ளு
குமிறிவரு கடுகு கருவேப்பிலையின் பொடியும்
நிராகப் பொடித்த பொடிவகைக் காழாக்கு
நீள்விடய மதுர மக்கிரா காரம்
பேரான வோம மிரண்டு சீரகமும் ரண்டு
பெருங்காயம் வாய்விளங்க மஞ்சளோ டேலம்
வேறாய் நீ விலவுங்கப்பட்டை பத்திரி
விளாவரிசி வெட்பாலை செவியத்தோடு விரவே. 761

விரவு சீனக்காரம் குக்குல் சவுக்காரம்
வெந்தயம் சிற்றரத்தை யொடு தாளிசபத்திரியும்
கருங்காயின் பட்டையொடு வெண்காரமப்பா
கணக்காக வகையொன்று கழஞ்சு மூன்று
புறவில்லாச் சாதிக்காய் பத்திரி கிராம்பு
போட்டா வபின்கூட அவ்விரண்டு கழஞ்சு
திறமாக விவையெல்லாம் வடித்துத் தூளாய்ச்
செலுத்துடா குக்குடத்தில் வைத்துத்தையே. 762

தைத்துஒரு தாழிக்குள் தண்ணீர்விட் டமிழ்த்தித்
தயவாகக் கவிழ் சட்டி தன்னால் மூடி
வைத்திதற்கு நாலஞ்சுசீலை மண்ணுஞ் செய்து
வளமாக லடுப்பேற்றி தீமூட்டி யெரிக்கில்
எய்த்துநீர் குறுக்கி வற்றி யடிப்பற்றாம
லெடுத்து தறி மருந்துதசை யேகமாய்ப் புரட்டிப்
பொய்த்திடா தத்திதனை இறக்கிய பின்னப்பா
புத்தோடு வைத்திட்டிப் போட்டு வறுபொடியே. 763

பொடி வறுத்தல் கறுகாமல் புடமாகத் தானே
பொடித்து வடிகட்டினது குக்கிட சூரணமாம்
விடிவேறு அந்திசந்தி வெறுகடிதான் பொடியை
விரும்பிநீ மண்டலங் கொள் வியாதி யெல்லாம்
படியாகப் பறக்குமே யஷ்ட குன்மம் வாய்வு
பதினெட்டுக் கிராணிவகை யதிசாரமோடு
முடியாத வயிற்றெரிச்சல் நீரிரத்த
மூலமொடு வுப்புசங்கள் விஷாபாண்டு போமே. 764

பறங்கிப் பட்டைச் சூரணம்

போமப்பா கரப்பனொடு கிரந்தி சூலை
புண்பொடிகள் சிரங்கு வெட்டை குட்டம் போக
நாமப்பா பட்டையிலே சூரணஞ் சொல்வோம்
நல்ல வுரு வாடினதாய்ப் புதுசாய் வாங்கி
யாமப்பா பறங்கியென்ற பட்டையஞ்சு பலந்தா
னப்பனே தூக்கியபின் னமுக்குறா சங்கு
வேமப்பா சிறுபிரப்பங் கிழங்கு கொன்றைப் பட்டை
வெற்றிபுரிச் சாரணைவேர் கொடிவேலி வேரே. 765

வேராக வகைக்கு வொரு பலமதாக
வெட்டியே காயவைத்துத் தூளாக வாட்டி
சீராகத் தாழியொன்று பால்படி நால்விட்டுத்
திறமாக வேடுகட்டுப் பொடிவகைகள் கலந்து

பேராகப் பொடியை வைத்துக் கவிழ்சட்டி மூடிப்
பிட்ட வித்தாற் போலவித்துப் பின்பு வதை வாங்கி
நேராக மேல்மருந்து கொத்தமல்லி மதுரம்
நெறியான வோம மிரண்ட திவிடையம் நீட்டே. 766

நீட்டடா வால்மிளகு வெந்தயஞ் சிற்றரத்தை
நேர்த்தியா மக்கிராகார திப்பிலியுங்
கூட்டடா சாதிக்காய் பத்திரி கிராம்பு
கூறான சீரகங்கள் ரண்டு திரிகடுகும்
பூட்டடா வகையொன்று கழஞ்சியது மூன்று
புரளவே காயவைத்துத் தூளாக வாட்டி
மூட்டடா முன்பொடியுங் கூடச் சேர்த்து
முறையோடே அதிற்பாதி சீனி கலந்திடுமே. 767

கலந்த பட்டைச் சூரணந்தான் வெருகடிப் பிரமாணங்
காலையந்தி மண்டலமே கருதிக் கொள்ள
மலர்ந்த விரணங் கரப்பானோடு சூலை
மகாவாரம் வெட்டையொடு அக்கினியின் மந்தம்
புலந்த வதிசாரமென்று கிராணி யுப்பிசங்கள்
பொல்லாத வயிற்றிரைச்சல் புண்பொடியுந் தீரும்
மலாந்த முகம் போலிருக்கும் வச்சிரதேசு
மாக்கிவைக்கும் பட்டையிட வாண்மை தானே. 768

பதங்கம்

ஆண்மை சொல்வோம் பறங்கிப்பட்டை யிடபதங்க
மப்பனே லேகுரு வாடினதைப் பார்த்து
ஆண்மையுறும் ஆறுபலம் பட்டை தன்னை
யழகாகப் பாக்குபோல் வெட்டி நீயும்
ஆண்மையுடன் சங்கங் குப்பிச் சாற்றி
லதைப் புரட்டி மூன்றுதரங் காயவைத்து
ஆண்மையோடு பாதத்திலிட்டு வைத்து
அடுக்காய் பதங்கவகை யறையக் கேளே. 769

கேளப்பா சங்கம்வே ரமுக்கிறா வேருங்
கெடியான சிறுபிரப்பம் கிழங்கு மைந்தா
கேளப்பா கொடிவேலி மூலமோடு
கிளாக் கொன்றைப் பட்டையெருக் கிலைவேர் கூட்டு
கேளப்பா சாரணைவேர் கருஞ்சூரை வேரும்
கேடில்லா நாய்கோட்டான் பட்டை சிவன்வேம்பு
கேளப்பா வெள்ளருகுவகை பலந்தானஞ்சு
கிருபையுட னொறுக்கியோர் பாண்டத்திலூட்டே. 770

பாண்டத்தி லூட்டியபின் சொல்லக்கேளு
பண்பு புளியம் பொருக்கோர் பாண்டத்திலிட்டு
தாண்டவே தமர்களிட்டுப் பாணி மேலே
சங்கை பெற மருந்தடைத்த பாண்டத்தையேற்றி
பூண்டிடவே சந்துக்குச் சீலைமண் செய்து
புகழாக ரவிமுகத்தி லுலர்த்திக் கொண்டு
தோண்டவே மறுபடியுஞ் சீலைமண் செய்து
துலங்கவே ரவியில் வைத்துச் சீலை செய்யே. 771

செய்தந்த கலசமேற் பட்டையிட்ட கலசந்
திறமாக கவிழ்த்தியே சீலைமண் செய்து
வெய்தந்த வடுப்பின்கீழ் விலாவிலே துறுத்தி
வேர்க்கவே தமரிட்டுத் தீயைப் போட்டு
வைதந்த வூரெல்லா மந்திசந்தி சாமம்
வகையாக வொன்பதுநாள் மடியாம லூத
நைந்த பொருக்கு மருந்தெல்லாம் வெந்து
நலமாக மேலேறிச் சாரும் பாரே. 772

சாருமே பட்டையிலே யெல்லாம் வெந்து
சஞ்சீவி யாகவே பதங்க மேறும்
பாருமே பதங்கமப்பா தூளாக வாட்டி
பருவமாய் வடிகொண்டு பாங்கான பின்பு
சேருமே பட்டைத்தூள் சீனிசமனாகச்
சேர்த்தியபின் வெங்காரஞ் சுத்திசெய்து
நேருமே யனலிட்டு பொறியிலொரு கூறு
நீட்டடா வொன்றாகக் கலந்து மினிகொள்ளே. 773

கொள்ளையிலே யந்திசந்தி மண்டலந் தானப்பா
கூட்டோடே கரப்பனொடு கிரந்தி முதல் போகும்
கொள்ளையிலே வெட்டை முதல் குட்டம் போகும்
குரலதிக மிருமலோ டீளைபோகும்
கொள்ளையிலே மேகங்கள் சூலையெல்லாம் போகும்
கூறரிய கிராணிமுத லதிசாரம் போகும்
கொள்ளையிலே க்ஷயகாசம் காந்தலெரி வடங்குங்
கூப்பிட்டு வோடுமென்று கூறினோமே. 774

கூறினோ மிதுக்கிசைந்த வைப்பு அப்பா
கொஞ்சமல்ல சஞ்சீவி கூறக் கேளு
தேருமே கர்ப்பூரங் கெந்தக மாஞ்சீனி
செப்பரிது செப்பரிது தேகம் பொன்னா
நாறினதோர் நெல்லிக்காய் கெந்தகத் தூளப்பா
நல்ல சரக்கா யைம்பதடா பலந்தான் தூக்கு

வேறினதோர் வைப்பதற்குப் பாடுமெத்த
என்மகனே லவணவகை யின்னங்கேளே. 775

கேளப்பா லவணவகை யிந்துடனே வளையல்
கெடியான பாரையுப்பு சவுட்டுப்பு நாலு
கேளப்பா வகையொன்று பலந்தான் பத்து
கிருபையுள்ள கறியுப்பு ரண்டிடையாம் நூறு
கேளப்பா விவையொன்றாய் தாழியிட்டு நீர்விட்டு
கெட்டியாய்க் காச்சடா குட்டமாறும்
கேளப்பா நீரற்றால் வெள்ளையா முப்புக்
கிண்டியதை யெடுத்து வைத்துக் கேளின்மை வகையே. 776

வகையாக வுப்பெல்லாம் மாறுகூறிட்டு
வகையொன்றிற் கெந்தகமூங் கூடக் கூட்டிப்
பகையாமல் சாட்டம்மி நாலஞ்சு தன்னில்
பதியவே யாறுமட்டும் பண்பாக வரைத்து
திகையாமல் மிடாநூலிற் சலமுமிரு தூணி
தீமூட்டிக் கொதிகண்டு திட்டெனவே யிறக்கி
நகையாம லரைத்துபொடி நாவிலே சேர்த்து
நாட்டடா கவிழ்சட்டி நாலுக்குமடைவே. 777

அடைவாக நாளொன்று திறவாமல் சிறந்து
அப்பனே நல்லபச்சை கற்பூரமாகத்
திடப்பாளைக் குரவ்விரண்டு கழஞ்சி
சிக்கிரமாய்ப் போட்ட பின்பு திரும்பவதை மூடிப்
பிடமாக வொருநாளு மப்படியே வைத்துப்
பின்மூன்றா நாள்தான் தெளிவெல்லாங் களைந்து
விடவேகமாய்ப் பெரிய தாழிதனிற் சேர்த்து
வெய்யிலேலேலே காயவைக்கத் தெளிவு வற்றிடுமே. 778

தெளிவ கற்றி மண்டி நின்ற தவ்வளவும் வட்டாய்
சேர்ந்திருக்கும் வெளிர்பட்டுக் கமர்பிளந்து சிதறுங்
களிப் பகற்றி யிப்படியே யாறுதரம் வைக்கக்
களிம்பற்றுச் சத்தெல்லாங் கனகம் போலா
மளிவற்ற கற்பூரம் கெந்தக மாஞ்சீனி
யடையடா குழலிலே வனுபானஞ் சொல்லக் கேள்
ஒளிவற்ற மாந்தர்க்கும் மருந்தப்பா
வோகோ வாச்சரியமுண்ணு பணமூன்றே. 779

மூன்றுபணத் தூக்கமுடன் வங்காளச் சீனி
மும்மூன்று பணவிடைதான் முடுக்காகக் கூட்டு
வென்றதொரு வெங்கார மணியாக வாங்கும்
என் மகனே யெருவைச் சாணந்தான் சுற்றி

தோன்றவே பின்கழுவி யனலிற் சுற்றிப் பொறித்துத்
தூளாக்கி ரண்டு பணந் தூக்கஞ் சேர்த்து
என்றதொரு மூன்றுவகை மருந்தோடப்பா
வியல்பாசப் பட்டையெனும் பதங்கம் நாலே. 780

நாலு பணத் தூக்கமடா பறங்கியிடபதங்கம்
நலமாகக் கலந்தொன்றாய்ச் சரித்துச் சேர்த்து
மேலு மந்திசந்தி யுண்ணு மண்டலந்தானப்பா
வியாதிவகை கண்டவுடன் வெகுண்டேயோடும்
மாலுமயன் தேடரிய ஆத்தாள் தான்விந்து
மகத்துவத்தை யொருவரால் காண்பதுவுமரிது
நூல்களி லிந்தமுறை வைப்பார்களில்லை
நொறுக்குமடா நோய்க்கு மார்பணி தானே. 781

ஆணியென்ற கரப்பனொடு குட்டங்கள் போகும்
அஷ்டகுன்மம் வெட்டையோர் பயித்திரண்டு தீரும்
ஊணிநின்ற கிரந்திமுதல் காய்ச்சல் சூலை
யொடுங்காத தாபமொடு சோபந்தீரும்
பேணிநின்ற தாது நட்டம் பொருமலுஞ் சீரத்தம்
பாடுவுள்ளுருக்கி யீளைகளு மிருமல்
நாணியே பயந்தோடும் பத்தியத்தைக் கேளு
நல்லாவின் பால்கூட நலமாம் பாரே. 782

பால்கூட்டு மந்திசந்தி மண்டலந் தானப்பா
பரிமாற்றம் வெந்நீர்தான் மற்றொன்று மாகா
சாலவே மண்டலத்துக் கப்பாலு முப்பே
சாந்தமாய்ச் சுத்திசெய்து கூட்டுகூட்டு
சீலமுடன் தூதுவளை யிலைக்காய் பூவாகும்
திறமான முருங்கைப்பூ பிஞ்சுமாகும்
ஞாலமெல்லாம் புகழ் பொன்னாங் காணிமுளை தண்டு
நறுநொய்யாந் துவரையொடு சிறுபயிறுமாமே. 783

சிறுபயிறு சிறுகீரை யவரைப் பிஞ்சாகுந்
தெட்டுமீன் முயல் காடைகவுதாரி உள்ளான்
பேருடைய வூர்க்கருவி விரால்மீன் கண்டம்
வெள்ளாட்டுக் கண்டமு மாம் வேறொன்று மாகா
அறுதிரண்டு மண்டலத்துக்கப்பால் பின்பு
அழகான தலைமுழுகு மெண்ணெய் சொல்வோ
முறுதியுடன் முக்கூட்டு எண்ணை தலைமுழுகு
வுசிதமடா சிகைக்கா யரைப்பு வெந்நீரே. 784

வார்த்தெண்ணெய் முழுக்கன்று கோழிச் சாறப்பா
வளமாகக் கறிவைத்து கூட்டு கூட்டு

வார்த்தெண்ணெய் நாலுநாட் கொருக்கால் வேணும்
மைந்தனே முழுகுமுறை கோழிச்சாறும்
வார்த்தெண்ணெய் முழுக்கன்று பால்தயிர் மோர்புளியும்
மாற்றடா மற்றாநாள் வாமிபுறம் வேண்டாம்
வார்த்தெண்ணெய் மற்றிரண்டு கடந்தாலேது
மயக்கமிலை யுடல் காந்தி பொன்னாமாற்றே. 785

ஏரண்ட வெண்ணெய்

மாற்றமிலா வேரண்ட வெண்ணெ யொன்று
மைந்தனே கிரந்தியொடு கரப்பன் போகச்
சாற்றுவேன் வித்தூற்றுந் தயிலமோர் படிதான்
சங்கங்குப்பிச் சாறுடனே கழற்சியிலைச் சாறு
நேத்தியாஞ் செம்பூவி னெருஞ்சிச் சாறு
நேர்சிறுகாஞ் சொறிச்சாறு முருக்கிலையின் சாறு
வேற்றுமை யொன்றில்லாத முருக்கிலைச் சாறல்லால்
வோரிப்பா லத்தி நீருள்ளிச்சாறே. 786

சாறுகள் தான்வகை யொன்று படிகாலாகும்
சங்கைசிறு செருப்படிச்சாறு ழக்கரையுங் கூட்டு
வீறுடைய நெல்லிக்காய் கெந்தகம் தாளக
மேலான பறங்கியிட பட்டைதானும்
தேறியதோர் கடுக்காயும் நிலாவகைவேரும்
செந்தொட்டி வேர் சித்திரமூல மொடுவசம்பு
பேறுபடக் கரும்சீரகம் வகையோர் கழஞ்சி
பிசகாமல் சாருகளி லாட்டியதைக் கலக்கே. 787

கலக்கியே யெண்ணெயொடு சாறுகளும் கற்கம்
கலக்கியொரு தாழியிலே காப்பதனைப் புனைந்து
மலக்கமில்லா வடுப்பேற்றி தீயெரித்துக்காய்ச்சி
வடிக்கிறது பதங்கண்டு கடுகுடனேவாங்கி
துலக்கவே கடுகுடனே ஐங்கழஞ்சி சீனி
தோன்றவே போட்டதையும் கிண்டி வண்டுகட்டி
சொல்லக்கேள் மூன்றுநா ளாறியபின் னப்பா
தோன்ற வஞ்சுதின முண்டால் சுகமாம் பாரே: 788

சுகமாக நாட்கொன்று கழஞ்சு மூன்று
சுத்தமாய்க் கொண்டாக்கால் சொல்லக்கேளு
யுகமூழிக் காலத்துங் கரப்பானு மில்லை
யொன்று மாகாது மறுபத்தியங்கள் கடந்தால்
ஜெகமேழும் புகழவே சங்கம் வேர்பாத்தி
சீர்பெறவே வாரியுப்பை வெந்து வைத்துக் கூட்டு

இகமேழுங் காண்பதுபோ லேரண்டத் தெண்ணெய்
எப்போது மொன்றைவிட் டொருநாளாய் முழுகே. 789

ஒன்றைவிட் டொருநாளாய் பத்து முழுக்கப்பா
வொருமுழுக்கு நாட்கொருக்கால் மூழ்கு
நின்ற பெருங்கிரந்தியொடு கரப்பன் புண்ணே
நின்றபெரும் புண்பொடிகள் கால்கை முரடொழியும்
வென்றியுள்ள வீக்கம்போம் நன்றாகுமப்பா
வீறுகளு மறுமுழுக்கில் விலக்கு கறிபுளியை
தின்றிடா தொழிப்பது தான் கரப்பானுள்ள பண்டம்
தேடரிய வுளுந்து பன்றி மரைபாகல் சிக்கே. 790

சிக்கான பூசனிக்கா யாறுதிங்களாக
சிறப்பாகப் பின்பு இவை தேடரு மெள்ளுளுந்து
முக்காலுஞ் சொல்லி விட்டோம் பத்தியங்கள் பருவம்
மோசமில்லை வியாதிகளு நாசமப்பா
எக்காலு மொழியு மென்றெண்ண வேண்டா
மெண்ணையுண்டு முழுகையிலே யெல்லாநோய் போகும்
கக்காதே யொருவருக்கும் நூல்காட்டாதே
கனிகண்டு பிரயோகங் கழறுவாயே. 791

பிரளி பலகலைகள்

வாய்க்கடங்காப் பிரளிபல கலைகளுக்கே யெண்ணை
வகையாகச் சொல்லுகிறோ மைந்தா கேளு
நோய்க்கடங்கா வேரண்டத் தயிலமடா நாழி
நுணுக்கமுட னவுரிவேர்த் தோல் தானப்பா
வீக்கடங்கா திருகழஞ்சு மஞ்சளுடன் கடுகு
வெந்தயமும் வெள்ளுள்ளி சீரக மிரண்டோமம்
பேச்சடங்கா மிளகு கடுக்காய் ரோகணி வசம்பு
பெருங்காயம் வகையொன்று கழஞ்சி ரண்டே. 792

நவ்விரண்டு கழஞ்சாக விடித்துத் தூளாய்
நயம்பெறவே யெண்ணையோடு போட்டுக்காய்ச்சு
செவ்வித மாய்ச் சிவந்துவரும் பதத்திறக்கித்
திறத்துடனே கற்கத்தி னெண்ணை கடுகொன்றாய்
வவ்விய மில்லாமலே வழித்து வைத்து
வாறியபின் மூன்றுநாள் பிள்ளைகளுக்கப்பா
தவ்வியே கரண்டியொன்று தினந்தா னேற்று
சாந்தம் பின்னாகி யினிகுளுமை கொளுந்தானே. 793

தானென்ற குளுமையென்ன சித்திரப்பாடை
தனிமதுரஞ் சீரகமுந் தன்னிலாட்டி

மானென்ற பிள்ளைகளுக் கவ்வண்ண மருந்து
மாந்தமொடு கிராணிகளை பிரளியெட்டு மொழியும்
தேனென்ற பத்தியந்தா னுப்பு முதலாக
சிற்றுப்பு குளுமை முதல் செலுத்தவுடல் தெளியும்
வேனென்ற வெண்ணைக்கு குணங்கள் நன்று
விரும்பியதை வைத்துண்ண விகற்ப மில்லைபாரே. 794

கண்டாத்திரி லேகியம்

பாரப்பா கண்டாத்திரி லேகியத்தைப்
பாடுகிறேன் புலத்தியனே பண்பாய்க் கேளு
நாமப்பா வில்லாமல் விளைந்த விஞ்சி
நலமாகத் தோல் போக்கி வில்லைபோல் நறுக்கி
நேரப்பா பதினைந்து பலந்தானீயும்
நிறுத்தங்கே நறுநெய்யில் சிவக்கவே வறுத்து
சீரப்பா பொடிசெய்து சீலைவடிகொண்டு
சித்திரமேல் மருந்தப்பா செப்புவேனே. 795

அப்பாகேள் திரிகடுகு சிற்றரத்தை
செவ்வி யதிமதுரம் சிறுதேக்கு வாய்விளங்க மேல
மொப்பான திரிபலையுங் கொத்துமல்லி
யோங்கி வளர்சிரகந் தாளிசப் பத்திரி
தப்பாத இலவங்கப் பட்டை பத்திரி
தனிநெல்லுப் பொரியுமிவை வகைக்கு முக்கழஞ்சி
இப்பாரிற் சாதிக்காய் பத்திரி கிராம்பு
வியல்பான வதிவிடையம் வகைக்கிரண்டு கழஞ்சே. 796

கழஞ்சாக மருந்தெல்லாம் நறுக்கியே நொறுக்கிக்
காயவைத்துத் தூளாக்கிப் பொடியை வடிகட்டி
தழஞ்சியாய்ச் சீனியொரு பலந்தான் கூட்டித்
தனியிஞ்சிப் பொடிகலந்து சாற்றக்கேளு
வழஞ்சியாய் நல்லவெல்ல மஞ்சுபலம் பாகமாய்
வரும்பருவம் பொடிதூவி வாகாக் கிண்டி
உழஞ்சியமாய் நறுநெய் தேன் வகைக்காழாக்கு
வூரவைத்துக் கிண்டிடவே லேகியமாமுண்ணே. 797

உண்ணப்பா வந்திசந்தி கொட்டைப் பாக்கவ்வளவு
வொருமண்டல மருந்த வோடும் நோய்கேள்
மண்ணப்பா புகைச்சலோ டிருமல் பித்தம்
வர்த்தனையு நெஞ்செரிப்பு வாந்திதிரு
முண்ணப்பா மூவகையாந் தொந்திப் போங்கார
முழங்கு வயிறிரைக்கிறது மூலமெனும் வகையும்

கண்ணப்பா குரல்கட்டு தலைநோவு குன்மம்
குடுவறட்சி மலசலக்கட் டுடனே போய்விடுமே. 798

போய்விடுவே யுட்சுரமுந் தாபசுரம் போகும்
பொருமலொடு வயிற்றுளைச்சல் சீதரத்தந் தீரும்
போய்விடும் வாய்வுட னக்கினியின் மந்தம்
பொல்லாத வுதரவெப்பு மபான வாய்வும்
போய்விடுமே கிராணியது மதிசாரக் கழிச்சல்
போய்விடு மின்னமொரு புதுமைகேளு
போய்விடுமே பத்தியங்க ளுப்புமிகைப்பா
புகழ் துவரை நெய் பாலாம் பூட்டக்கேளே. 799

பூட்டடா வழுதலையின் பிஞ்சினோடு
பூகாய் பத்திரியாகுந் தூதுவளையப்பா
நாட்டக்கேள் புளி கைப்புமோர் புளியுந் தள்ளு
நச்சுவிடு வாய்வான பதார்த்தந்தள்ளு
ஆட்டிறைச்சி மீன்வகை களுலர்ந்ததாய்க் கொள்ளு
மப்பனே மற்றொன்று மாகாது சொன்னேன்
தீட்டுமுன்னே பாய்ந்துவிடும் நோய்களோடு நீ
தீராதவினை தீரு மிது பரம்பரையே. 800

கெந்த தாளிநெய்

பரம்பரையாய் வருகின்ற கெந்ததாளி
பறந்தோட நெய்யைநான் பகரக்கேளு
அரம்போலே யறுத்துவிடும் புண்ணை யாற்று
மாச்சரிய நெய்யினிட வாண்மையப்பா
வரம்பெறவே நறும்நெய்யும் பலங்காலல்லா
லுத்தமனே நறுந்தாளி மணத்தக்காளி
திறம்பெறவே யீருள்ளி புளியாரை கூடச்
சிறுகீரைச் சாறுவகை காலாழாக்கே. 801

காலாழாக் கெனுஞ்சாறு நெய்யுஞ் சேர்த்துக்
கடைமருந்து மேல மதிமதுரங் கூட்டு
சீலமுடன் சாதிக்காய் கிராம்பு தேனுஞ்
சீரகமு மாசக்காய் கூகைநீறும்
ஞாலமெல்லாம் புகழ் சீனிக் கற்கண்டோடு
நலஞ் சிறந்த முந்திரிகைப் பழமுங் தால்கழஞ்சி
நூலமாய்த் தூளாக்கி நெய்யிலிட்டுக் காய்ச்சிச்
சோர்வன்றிப் பதத்திலே வடித்திடாயே. 802

வடித்திருத்து ஆற்றிநெய் யையந்திசந்தி
வாகாகக் காசிடைதாஙனுண்டாயானால்

வெடித்திருந்த புண்மூலா தாரந்தொட்டு
    வெந்துநீராய் வாய்தனில் நாற்றம்போகும்
கடித்திருந்த நீர்த்தாரை மூலாதாரம்
    கண்டவாய்த் தொண்டை நோய்க்குள் புண்ணாறு
மடித்துவிடு முட்சூடு காந்த லெரிதாக
    மனைத்தும் போம் கைப்புளிப்பதனை யகற்றிடுமே. 803

சூசிகா சூரணம்

அகற்றிடும் சூசிகா சூரணத்தைக் கேளு
    அப்பனே மொசுமொசுக்கை பொன்னாங்காணி
செகத்திலுள்ள பொடுதலையுஞ் சமூலம் நிழலுலர்த்தி
    திறமாகவே வறுத்துத் தூளாக விடித்து
தகர்த்த பொடிவகை கூட்டிச்சமன் வகைக்கிப்படிகால்
    தனிப்பருத்தி விதைப்பருப்பு மவ்வண்ணங்கூட்டி
விகற்பமில்லாச் சிறுபயற்றின் பொடியதுவு முழக்கு
    வீறடக்குஞ் சீரகம் வெள்ளாட்டு நீர் நனையே. 804

நனையடா சீரகத்தை வெள்ளாட்டு நீரில்
    நாளொன்றுக் கிருபொழுது மூன்று தினமப்பா
வினையமுறக் காயவைத்துத் தூளாக்கி பொடிதான்
    விருப்பமுடன் காற்பொடியா யவ்வீதம்விரவி
யனையவிது வொன்றாகக் கலந்து சூரணமா
    யனுபானம் பச்சரிசிக் கழுநீரி லருந்து
தினையளவு பத்தியங்கள் கடவாதப்பா
    தினம்பத்து வந்திசந்தி திறமாயுண்ணே. 805

உண்ணடா வின்னமுண் டனுபானங் கேளு
    உற்றமுத்தக்காசு யாத்திலந்தி சந்தி
உண்ணடா தினம்பத்து பின்பு இளவெந்நீ
    ரூட்டடா அவ்வண்ண மந்திசந்தி
உண்ணடா புளியாத பசுமோரி லுண்ணு
    வுத்தமனே பத்துநாளுட் டிரவுபகலும்
உண்ணடா பத்தியந்தான் வெள்ளாட்டுப்பாலா
    முப்புமுத லொழிந்துவிடு மண்டலந்தா னரையே. 806

மண்டலந் தானரைக் கப்பா சுத்தி செய்தவுப்பு
    வளர் பொன்னாங்காணி யிலைக்கரியுங் கூட்டு
கண்டதெல்லாந் தின்னாதே புளியு மோருங்
    கறிபாப்பா சிறுபயிறு மிளகு சீரகமாம்
திண்டாடித் திரியாதே வனுபோகந்தள்ளு
    தெளிந்துவிடு மறுபத்தியந் தீருமட்டு மிதுவாம்
அண்டாது பிணிநோய்க ளொழிவது தான்மெத்த
    அறைகிறேன் புலத்தியனே அறைகிறேனே. 807

அறைகிறேன் சுக்கில சுரோணிதமாய் வாய்வு
வபானத் திருந்தேறி மேல்நோக்கும் வாய்வு
குறையாத கிராணி குன்மம் வயிற்றி ரைச்சல்
கூறரிய சீயிரத்தந் திரண் டுருண்ட வாய்வு
கறைகாணாக் கருக்கெடுக்கும் சூசிகா வாய்வும்
கடுகிவலிகொண் டிழுப்பு கண்பக்க வாய்வும்
நிறையாக நின்றுவிடும் கெர்ப்ப முண்டாக்கும்
நிகழ்மத்துப் போல் திரண்ட குன்மமும் நின்றுபோமே. 808

சுரராம பாணம்

நின்று போகாத சுரமாற லெல்லாம்
நெடுநாளை விடாச்சுரமும் வியாதி தனையொழிய
வின்றுதான் சுரராம பாணவுண்டை
யென்மகனே புலத்தியனே யப்பாகேளே
வென்றுதிருஞ் சூதமொடு வெள்ளைப்பாஷாண
மிவைரண்டு வராகன்ரண்டு சமனாய்ச்சேர்த்து
பொன்றுதலில்லாதபடி சுத்திகளுஞ் செய்து
பொடியாகக் கல்வத்தில் புரள வரைத்திடவே. 809

அரைத்திடவே பாகயிலைச் சாறுகொண்டு
அந்திசந்தி மிருசாம மரைத்தபின்பு
திரைத்திடவே யிப்படிதான் மூன்றுதின மாட்டி
சிறுபயரின் பிரமாணம் குளிகை தனைத்திரட்டி
விரைத்திடவே நிழலுலர்த்தி யதின் பின்னப்பா
வீறடங்கப் பத்துநாள் தனிப்புடம் வைத்து
உரைத்திடவே சுரங்களுக் கிஞ்சி முலைப்பாலி
லோருண்டை யந்திசந்தி யூட்டு தினமூன்றே. 810

மூன்றுநாள் மாறலுக்கு மூன்றுதின மூட்டு
முறைநாலா மாறலுக்கு நாலுதினமூட்டு
வேன்ற மற்றசுரங்களுக்குக் கண்டுவூட்டு
வென்மகனே தினசுரத்துக் கொன்றொரு நாளூட்டு
தோன்றாதே பறந்தோடும் பத்தியஞ் சிற்றுப்பு
சுடுகஞ்சி வென்னீரா துளங்காயிஞ்சி
யீன்றிவாத மிக்கிரம மிப்படியே செய்தா
லிருவினையு மற்றுவிடுங் குக்குலாதி கொள்ளே. 811

குக்குலாதி வடகம்

குக்குலாதி வடகமப்பா கூறக்கேளு
கூறரிய குக்குலோ கழஞ்சிமூன்று

முக்கியமாய் நல்லதொரு பறங்கிப்பட்டை
முக்கழஞ்சி ரசந்துருசு கூகைநீரும்
தக்கில்லா தொருகழஞ்சி லவங்கப்பட்டை
தானுமொரு கழஞ்சு குங்கிலியங் கழஞ்சி
பிக்கில்லாம் பனைவெல்ல மோர்கழஞ்சிக் கப்பாற்
பிலத்த நாவி கெளரி பாஷாண மூன்றே. 812

மூன்றுவகைக் கொவ்வொன்றுக் கோர்கழஞ்சிகூட்டு
முறையோடே மிதிபாக விலையதனை யப்பா
வென்றதொரு பிடியாகச் சமூலமொடு கியாழ
மிதில்வருந்து மூன்று மொரு கிழிதோளாந்திரமா
யூன்றவதை வேகவைத்தால் சுத்தியாச்சு
வொன்பது வகைமருந்து முரலிற்போட்டு
போன்றபின்பு நொச்சியுட கொழுந்துடன் முக்கழஞ்சி
போட்டத்திலே குளிர்ந்த சலம்விட்டு நன்றாயிடியே. 813

இடித்த மருந்தெல்லா மொன்றாகச் சேர்த்து
யிரதம் விட்டு மாளுமட்டு மிடித்தபின்பு
மடித்திடாக் கறியுப்பு பழம்புளியு மெளிதாய்
வகைக்கொரு கழஞ்சியிட்டு வாட்டுவாட்டே
துடித்திடா துதிரந்த பதமிறுகத்தானே
சூட்டடா குளிர்ந்தசலம் தெளித்திடிக்கச் சேரும்
படித்தரம் விடாமலே தொண்ணூறு கடிகை
பதியவே யிடிப்பதினாற் பாங்காகும் பாரே. 814

பாங்கான பதங்கமப்பா மயில்கழுத்துப் போலாம்
பக்குவத்தில் சுண்டைக்காய் பிராமணத்திலுண்டை
தேங்காமல் குளிகைகட்டி நிழலுலர்த்தி
சிறந்ததொரு புதுக்கலத் திட்டாறினாற் போல்
நீங்காமல் தலைமுழுகி பேதிவாங்கு
நேயமுட னந்திசந்தி மூன்று நாளப்பா
வாங்காம லேழரை நாள் பொசி ரெண்டுண்டை
வாகாகப் பனைவெல்லம் பொதிந்து மருந்தருந்தே. 815

மருந்தருந்தி யேழரை நாட்கப்பா லோர்நாள்
மருந்துவிட்டு வொன்பதாநாள் தலையைமூழ்கி
பொருந்தலால் நல்லெண்ணை யொன்றைவிட் டோர்நாள்
புகழ்பெறவே பதினைஞ்சு முழுக்குக்கப்பா
விருந்தாக நோய்களெல்லாம் பறந்தோடிப்போம்
விபர மரையாப்புடனே பவுத்திர முந்தீரு
மிருந்தெழுந்து பறந்தெழுந்த கரப்பனொடு கிரந்தி
யேறுகின்ற சூலைவகை பதினெட்டும் போமே. 816

சூலை பதினெட்டும் பிளவைகளும் போகும்
சூசிகா வாய்வு முதல் பலவாய்வும் போகும்
வாலையாய்ப் புடைத்தெழுந்த வீக்கமொடு புண்கள்
வயிர்கறடு முறடுகளும் வளர்சூலை கட்டும்
காலைமுட மாக்கியது மேகவகையோடும்
கைச்சூலை வாய்ச்சூலை காசவகை குட்டம்
பாலையிலே படுதீப்போல் நோய்களையும் பறிக்கும்
பத்தியமும் சகலமுமாம் பன்றிமரை யகற்றே. 817

அகற்றுவது செம்மரையு மாடு பன்றியிறைச்சி
யப்பனே பச்சைமீன் பூசினிக்காயுந் தள்ளு
அகற்றிவிடும் பத்தியங்க ளாறுதிங்கள் கடந்தா
லாமடா வெல்லாந்தான் அசடுமொன்றில்லை
அகற்றிவிடும் பத்தியங்களே கமாய்த்தா
னப்போது வீக்கங்கள் பூண்டபோது
அகற்றிவிடு மிதிபாகல் கியாழம் போட்டருந்த
அசடெல்லாந் தீர்ந்துவிடு மழகுதருந் திறமே. 818

அரையாப்புக்கு

திறமான வரையாப்பு தீரவப்பா
செப்புவேன் வேர்க்கொப்பு திப்பிலியோர் பலமாம்
திறமாக மிளகோமம் வகைக்கு முக்கழஞ்சி
சிறந்ததொரு பெருங்காய மிருகழஞ்சியப்பா
திறமாக வெள்ளுள்ளி பருப்பஞ்சுகழஞ்சு
சீர்சிறந்த பனைவெல்ல மிரண்டரையா மஞ்சள்
அறமான சீரக மறுகழஞ்சி யப்பா
வதிலிடவே கரிப்பான் சாறதுவும் பாரே. 819

பாரப்பா கரிய சீரகந் தான்பேறு
படவே முக்கழஞ்சி யிலை யொன்றாகக் கலந்து
ஏரப்பா பித்தகாமாலை யரையாப்புக் கேரண்டத்
தயிலமது மண்டலங்கால் கொள்ளு
சீரப்பா சூரணத்தி லின்ன மனுபானம்
சேர்ந்திடவே நோய்களின்னம் செப்புவேன் கேள்
காரப்பா வெலுமிச்சம் பழச்சாற்றிற் பிரட்டி
காயவைத்து மூன்றுதின மிப்படியே செய்யே. 820

செய்வது தானரைப்பலந் தானப்பா யெல்வாந்
திறமாக வுலர்த்தியே தூளாக்கி வடித்து
உய்வதற்கு யெட்டொன்று சீனிகலந்திட்டு
ஒடுங்காத பித்தக் காமாலைக்கு வூட்டு

வெய்வதுதான் பிரமாணம் வெருகடி தான்கொள்ளு
விருபோது மண்டலமு மனுபானங் கேள்
நைவதில்லை பழச்சாறு தேனிலே யருந்து
நலமான விஞ்சிதேன் தன்னையு மருந்தே. 821

அருந்தினால் தீருகிற நோய்தானப்பா
ஐயனே புலத்தியனே மச்சகேந்திரா
வருந்தி யருந்திட வல்லநன் மாணாக்கா
வகுக்கிலேன் பித்த காமாலை வகையாறும்
பொருந்தவே சொல்லுகிறோம் வெள்ளை மஞ்ச ளிரத்தம்
பொல்லாத நீலமொடு வறட்சியிது வல்லால்
திருந்தாத வூது காமாலையொடு
தீர்ந்துபோம் பத்தியங்கள் சிறுநாரை யுப்பே. 822

தாளிசபத்திரி வடகம்

உப்பில்லாப் பத்தியங்கள் சுறுக்காக வொழியும்
வொழியாத வியாதிகட்கு வுரைக்கிறேன் பார்
ஒப்பில்லாத தாளிசபத்திரியாம் வடக
முத்தமனே வகைகேளு தாளிசபத்திரி
எய்ப்பில்லாக் கழஞ்சியொடு முப்பத்தி யொன்று
இதற்கிசைந்த திரிகடுகு திரிபலையு மேலும்
செப்பினால் சாதிக்காய் பத்திரியுங் கிராம்பு
செவியமொடு யிலவங்கப் பட்டையிலை கூட்டே. 823

கூட்டடா மதுரமொடு வாய்விளங்க மோமம்
குறாசானி சிறுநாகஞ் சீரக மிரண்டரத்தை
கூட்டடா வால்மிளகு மக்கிராகாரம்
கொத்தமல்லி தெசாபுரங் கூகைநீறும்
கூட்டடா சிறுதேக்கு வமுக்கிறா வேரும்
கூறரிய பேரீத்து முந்திரியாம் பழமும்
கூட்டடா வகையொன்று கழஞ்சு யொன்று
குமுறவே காயவைத் திடித்துத் தூளாக்கே. 824

தூளாக்கு தாழிதனி லாவின் பாலப்பா
தோன்றவே ரெண்டுபடி வேடுகட்டி
தூளாக்கி வைத்த பொடிபுட்ட வியில்வைத்து
சூட்டுடனே தேன்வார்த்து வாட்டி யுண்டைகட்டு
தூளாக்கிப் பிரமாணங் கொட்டைப் பாக்களவு
சூட்சமா யுருட்டியது புதுகரகத் திட்டு
தூளாக்கிப் படியந்தி சந்தியி லோருண்டை
சுகமாக நொறுக்கியே மென்றுதிண்ணப் போமே. 825

திண்ணப் போங்காசமொடு க்ஷயங்க ளோடிருமல்
 தீராத யீளையென்னுஞ் சுவாசகாசந்
திண்ணப்போ மந்தார காசம் வறுங் காசஞ்
 சிலேற் பனத்தில் வருந்தொண்ணூற் றாறுரோகங்கள்
திண்ணப்போங் குன்மங்கள் நீர்க்கட்டு வாந்தி
 தேகத்தி லழல்காந்தல் நெஞ்செரிப்பு த்தாகம்
திண்ணப்போஞ் சரவீறு மக்கினியின் மந்தந்
 தெளியாத மூன்றுவகை யிளைப்புந்தீர்ந்திடுமே. 826

தீர்ந்துடுமே யிரத்தபித்தம் வாயினால் கக்கல்
 செய் கிறாணி மூலரத்த மலக்கழிச்சல் போகுந்
தீர்ந்துடுமே பத்தியங்கள் புளிபுகையுங் கைப்புத்
 தீண்டாத மாங்கிசங்கள் பச்சையொன்று மாகா
தீர்ந்திடுமே தாதுநட்டம் மேகவகை கூடச்
 சித்தியாம் வெள்ளாட்டுப் பால்தான் கூட்டத்
தீர்ந்திடுடுமே தாளிசபத்திரியாஞ் சூரணம்
 செப்புவேன் புலத்தியனே செப்புவேனே. 827

தாளிசபத்திரி சூரணம்

செப்புவேன் தாளிசபத்திரி வகைதானப்பா
 திறமாக நாற்பதுவே கழஞ்சிகூட்டு
செப்புவேன் சீனியந்த யிடைக்கிடைதான் கூட்டு
 திரிகடுகு திரிபலையும் சிறந்த விரண்டேலம்
செப்புவேன் சாதிக்காய் பத்திரியுங் கிராம்பு
 சிறுதேக்கு மதிமதுரங் சிறுநாகப்பூவும்
செப்புவே னிலவங்கப் பட்டையும் பத்திரியும்
 செவியமொடு வாய்விளங்கம் சித்தரத்தை கூட்டே. 828

கூட்டடா வால்மிளகு வோமம் ரெண்டு
 கோஷ்டமுடன் கோரோசனை தேசாபுரமக்கிருகாரம்
கூட்டடா கொத்தமல்லி முந்திரிகை பேரீந்து
 செப்பரிய கூகையுட நீறுங்கூட்டு
கூட்டடா நிலப்பனை வேர் அமுக்கிறா முத்தக்கா
 சிலாமிச்சம் வேருடனே வெட்டி வேரப்பா
நாட்டடா தூதி கண்டங்காரியுட வேரும்
 நல்லநெய்தல் கிழங்குடனே நெற்பொரியும் நாட்டே. 829

நாட்டுயிந்த மருந்துவகை நாற்பத்து மப்பா
 நலமாக வகைக்குமொரு கழஞ்சி கூட்டு
கூட்டுயிவை பழுதகற்றி வெய்யில்காய வைத்து
 குமுறவே யிடித்த பொடிவடி கொண்டு சீனி

கூட்டுவொன்றாய் கலந்தபின் புதுக்கரகத்திலிட்டு
கைக்கடங்கா வெருங்கடி தானிரு போதுமுண்ணு
பூட்டுவது தேனிஞ்சிச் சாறாகுமப்பா
புகழவரு மாதளம் பழச்சாற்றில் போமே. 830

போமப்பா காசவகை தொண்ணூற்றாறும்
பொல்லாத காமாலை யாறும் போகும்
போமப்பா சலரூட்சை தாகஞ் சோபம்
பொருமலொடு ஈளை வலியிருமல் போகும்
போமப்பா வாந்தி யரோசிப்பு தானும்
பூண்டகுன்மம் நெஞ்செரிப்பு தேகங் காந்தல்
போமப்பா பித்தவெட்டை தாதுநட்டம்
புகைச்சலொடு கண்மயக்கம் புண்பொடிகள் போமே. 831

புண்பொடிகள் சிரங்குடனே கரப்பான் போகும்
புண்ணாகி வெந்தகெந்த தாளிபோகும்
புண்வெடியாஞ் சூலைகளுங் குட்டம் போகும்
பேர்பெரிய வாயு வெண்பத்தாறு போகும்
புண்பொடியாம் நோய்போகப் பத்தியத்தைக் கேளு
புகழ் துவரை முளைத்தண்டு தூதுவளை சமூலம்
புண்பொடியாம் வெள்ளாட்டுப் பாலிதற்கு
பொல்லாத மாங்கிஷங்கள் புளிகைப்பு வகற்றே. 832

சௌபாக்கிய சுண்டி

அகற்றிவைக்கு நோய்களுக்கு மார்பிலாணி
யரைகிறேன் சவுபாக்கிய சுண்டிதன்னை
அகற்றிவிக்குங் கரிசாலை பொடிதனை சமூல
மழகாகத் திரித்திட்டு நிழலுலர்த்தி
அகற்றிவைக்கும் படியிடித்துத் தூளைவடிகொண்டு
மப்பனே வகையொன்று பொடிபலமு மெட்டு
அகற்றிவிக்குந் திரிகடுகு திரிபலையினோடு
மதிமதுர மோமம்ரண்டு தாளிசபத்திரியே. 833

பத்திரியுஞ் சிற்றரத்தை தெசாபுர மேலம்
பழுதன்றி வகைக்கொரு பலந்தான் கூட்டி
பத்திரியுஞ் சாதிக்காய் கிராம்புவகை மூன்று
பண்டாக வதிவிடையம் சீரகங்களிரண்டு
பத்தியமாம் வால்மிளகு கொத்தமல்லி
பாங்குடைய வெந்தயமும் வகைக்கரைப் பலந்தான்
பத்திரியாய்க் காயவைத் திடித்து வடிகட்டி
பழைய பொடி யிரண்டுமிதிற் பருவமுடன் விரவே. 834

விரவியதோர் பொடிகளுக்குப் பசுவின்பால் படிநால்
வினையமுறக் குழம்பாக வற்றக்காய்ச்சி
விரவியிடு பொடியதனைப் பாலிலிட்டுக் கிண்டி
வேடுகட்டி நாலுபடி பாலுள்ளாய் விட்டு
விரவிவைத்த மருந்தந்த வேட்டு மேல்வைத்து
விரவடா தேன்படிதான் விட்டுக்கிண்டி
விரவியதோ ரடுப்பேற்றிப் புட்டவித்தாற் போலே
வெந்தபின்பு வாங்கியம்மி யிலாட்டிவிடாயே. 835

ஆட்டியதைச் சுண்டைக்காய் பிராமண முண்டை
யப்பனே கட்டிய பின் நிழலுலர்த்தி
வீட்டிமை யில்லாமலே நோய்பிலமுங் கண்டு
விடிவேறு மந்திக்கும் விரைந்து வொருவுண்டை
நாட்டுநீ நறுந்தேனில் சீனியிஞ்சிச்சாற்றில்
நலஞ்சிறந்த மாதளையின் பழச்சார் தன்னில்
கூட்டுமே யெலுமிச்சம் நாரத்தம் பழச்சாற்றில்
குமுற விளவெந்நீரில் கொண்டிட நன்றாமே. 836

நன்றாகும் வியாதிகளை மென்று தின்னும்
நலங்கொடுக்கும் சூசிகா கிராணி குன்மமோடும்
குன்றாகும் வாய்வுகளு மதிர்ச்சியுப் பிசங்கள்
கூட்டோடே யோடுமடா அகுவைதீரும்
நின்றாடும் பொருமலொடு தாகம் வெதுப்பறோசி
நிலையாத கிராணி மந்த முதலாய்த் தீரும்
சென்றாடும் பலசுரமும் வெகுபேதி கழிச்சல்
தீராதவினை தீர்க்கும் தேக சுகமாமே. 837

ஆமடா நெய்பாலுந் துவரை யோடண்டம்
ஆட்டிறைச்சி உலர்த்தினதும் வழுதலைப் பிஞ்சாகு
மாமடா தூதுவளை சமூல மதுவாகு
மவரைப் பிஞ்சல்லாது முளைத்தண்டு மாகு
மாமடா சிறுகீரை பொன்னாங்காணி
அயிரைமீன் கெளிறு விரலுலர்த்தினதுங் கூட்டு
ஆமடா வுப்புமிளகு நீருள்ளிந்து
வரைவாக வெந்நீரு மருந்தலாமே. 838

சண்டமாருதக் கருக்கு

ஆமடா நீர்ப்பாடு பேய்ப்பாடு மல்லா
லசீரணத்தில் மந்தமொடு மலபேதி மிகுந்தால்
ஆமடா சண்டமாருதக் கருக்கு
அப்பனே தும்பையொடு குப்பைமேனி

ஆமப்பா தைவேளை சமூலமாக
வஞ்சுவகை யொன்று பெரும்பிடியதாக
ஆமப்பா சட்டியிலே தீயிலே கருக்கி
யரைச்சாம் பலானபின்பு கொட்டிச் சட்டிதுடையே. 839

துடைத்த சட்டி திரும்பவுந்தா னடுப்பி லேற்றித்
துடியான வெந்தயமோ முக்கழஞ்சி
உடைத்த குடமடைப்பதுபோல் சிவக்கவறுத்தப்பா
ஒருபடிதான் சலம்விட்டு எட்டொன்றாக்கி
மடைத்தலைப் பாச்சுவதாக வடித்துநீ யருந்து
வயிறடைக்கும் பேதியொடு வாந்தியுப்பிசமும்
படைத்த வயன்போல டைக்குந் தாகம்போக்கும்
பணைப்பில்லா பொரித்தக்கஞ்சி பரிந்துகூட்டே.. 840

மணல் குடிநீர்

பரிந்து செய்யும் தாகமொடு அந்திர தாகம்
பலதாகங் கொண்டாக்கால் பண்பாய் மைந்தா
தெரிந்துவரு மணல்குடிநீர் செப்பக்கேளு
சீனி மணல் கடுகுபோலொன்றேகால் படிதான்
தெரிந்துபோ காதமொரு தாழி பெரிசதிலே
நீட்டடா மணல்கொட்டி சாமம்வறு தீப்போ
லெரிந்ததிலே போட்டரசங் கொழுந்துமப்பா
வழகாகப் பெரும்பி தானறுத்ததிலே போடு
காந்துடனே தீப்பற்றும் பருவங்கண்டு
கண்கொண்ட வெளிப்பருத்தி யோம மிருகழஞ்சே. 841

ஓமமிட்டுப் பொரித்தபின்பு வொருகுடஞ் சலந்தா
னொருமிப்பாய் முகமாறி யுரத்திலே விட்டு
தாமத மில்லாம லடுப்பேற்றி நன்றாய்
தணல் மூட்டி யடுப்பேற்றி யெரிந்துவந்தநீரை
நேமமுடன் நிறுத்தித் தீயைத்தானும்
நின்று போகாதபடி புகைத்து வண்டுகட்டி
யேமமாய்த் தாக்கி வொரு சொம்புநீரை
யெரித்து வடிகட்டியே கொள்வதற்குக் கொடுமே. 842

கொடுத்திடவே மூர்ச்சைப்போந் தாகம்போகும்
கொண்டபின்பு சிறுதாக மெடுத்தால் பின்னு
மடுத்திடவே தாகத்துக் கரைசெம்பு கொடுக்க
அடக்கிவிடும் பரிமாற்றமான தாகமதுவே
படுத்திடா தெழும்பி விடுந்தாக மொடுசோகம்
பறக்குமந்தக் குடிநீரால் மரிவுமிக வுண்டாம்

தடுத்திடாப் படிசொன்னோம் சஞ்சீவிமருந்து
சாற்றின விவ்வுற்பனங்கள் சார்த்தவர்க்கு முறையே. 843

அஷ்டகுன்ம லேகியம்

உரைக்கிறே னட்டகுன்ம லேகியத்தை
யொடுங்காத வாய்வுவலி வயிற்றுநோய்போக
வுரைக்கிறேன் தைவேளை பிரண்டை குப்பைமேனிக்
கொவ்வொன்றுக் கொருபடியாஞ் சாரதனைக் கூட்டு
உரைக்கிறே னிலுப்பையுடன் புண்ணுக்குத் தானு
மோரஞ்சு மீரஞ்சு பலங்குடத்திலூட்டு
உரைக்கிறேன் சாறுவற்றிக் குழம்பான பின்பு
வுண்மையுடன் புடக்கருக்கு மிடித்துத் தூளாக்கே. 844

தூளாட்டி வைத்தபின் பதற்கு மருந்தப்பா
சொல்லக்கேள் திரிகடுகு வோமமோர் பலமாய்
தூளாட்டி ரோகிணியு மன்னபேதி
சுறுக்கான குறாசானிக் காயமுக்கழஞ்சி
தூளாட்டி வறுத்திடித்து மருந்து சேர்த்து
சொற்பெரிய பனைவெல்ல மஞ்சுபலங்கூட்டி
தூளாட்டுமுன் சாறுவற்றினதை யுரலில்
துளிசிதறா தேவழித் தெடுத்துவிடு பொடியைத் தூவே. 845

பொடிதூவிப் பனைவெல்ல முக்கூறட்டு
பூண்டிடவே யிடித்தபின்பு புரளவே யின்மை
பொடிதூவி வெல்லமிட்டு நன்றாக விடித்துப்
பின் பதின்மேல் பனைவெல்லமுந் தூளான
பொடிதூவி யிடித்திடுவாய் சாமமொன்றுக் கப்பால்
புனிதமா மயில்கழுத்தாம் நாகம்போல் தூளாம்
பொடிதூவி மருந்தைச் சூட்டுடனே தான்றிக்காய்
போல் குளிகை கட்டியொரு புதுக்கரகத்திடுமே. 846

புதுக்கரகத் திடுமருந்து மூன்றுநா ளாறிப்
பின்புமொரு குளிகைதன்னை யந்திசந்தி யூட்டு
இதுக்கடங்கா வாயுவில்லை யட்டகுன்மங் கெண்டை
யியல்பில்லா வுப்பிசங்கள் செரியாமை தீரு
மதுக்குடம் போல் பெருவயிறு திரட்சி மலக்கட்டு
வாயுவுட னிரத்தம் வாங்கி விக்குமல்லால்
பதுங்கிநின்ற பலவாய்வுந் திசைகெட்டோடு முண்மை
கைப்பு புளிப்பு மோர் பதார்த்தங்க ளொழியே. 847

நாரத்தங்காய் லேகியம்

ஒழிவதற்கு நாரத்தங்காய் லேகியத்தை
யுரைக்கிறேன் நாரத்தம் பழச்சாறு மிஞ்சி

ஒழிவதற்கு வழுக்குறா சாரணைவேர்ச் சாறு
மொவ்வொன்று பலநாலு வுயர்ந்த நல்லவெல்லம்
ஒழிவதற்குப் பயித்தஞ்சு பலங்கரைத்தசாறு
மொருநான்கு படிகூட்டி வொன்றாய்க்காச்சி
ஒழிவதற்குப் பாகாகப் குறுக்கியப்பா
வுண்மையுடன் கற்கவகை யுரைக்கிறேனே. 848

உரைக்கிறேன் திரிகடுகு ஏல மதிமதுர
முயர் தெசாபுரங் கோட்டஞ் சிற்றரத்தையோ
டுரைக்கிறேன் கொத்தமல்லி தாளிசபத்திரியு
மோகோகோ முந்திரிகைப் பழமுமோர் பலமா
முரைக்கிறே னதிவிடய மக்கிறாகார
முண்மை பெறும் வால்மிளகு சிறுநாகப்பூவு
முரைக்கிறேன் சாதிக்காய் பத்திரி கிராம்பு
ஓங்குதிரி பலையொடு குராசானி ஓமம். 849

ஓமந்தான் கெந்தபொடி கரியசீரகந்தா
னொவ்வொன்றுக் கரைப்பலமா யொக்க வெயில்காய்ச்சி
நேமமா யிடித்து வடிகட்டிச் சூரணத்தை
நேர்த்தியாய்ப் பாகிலே தூவியே கிளறி
சாமமரை பதமாகக் கிண்டிய பின்சீனி
தனையுமே பதினைஞ்சு பலந்தான் தூவி
ஏமமாய்ப் பின்பு தேனிரண்டுபடி விட்டு
இளக்கிய பின்னறுநெய்யோர் படிவிட்டுகிண்டே. 850

கிண்டியதோர் லேகியத்தைப் புதுகலசத் திட்டுக்
கிருபையுடன் வண்டுகட்டி நாலுதினமாறி
மண்டலந் தானந்திசந்தி யருந்தினா லப்பா
வளர்பித்தம் நெஞ்செரிப்பு மரோசியொரு வாந்தி
உண்டுவரத் தாபசுரம் வாந்திபித்தரூட்சை
யுட்சூடு கிறுகிறுப்பு வாய்வு தலைநோவும்
கண்டவுடன் பயந்தோடுமக்கினியு மந்தம்
கழன்று மலநீர்க்கட்டு காந்தலும் போய்விடும். 851

அயனாதி வடகம்

காந்தலும் போம் பத்தியந்தான் புளிகசப்பு மோருங்
கடிந்துவிடு மயனாதி வடகத்தைச் சொல்வோம்
தீர்ந்தவரைப் பொடியஞ்சு பலமொடு காந்தம்
தெளியூசிப் பிடிப்பதிலே மூன்று பலஞ்சேர்ந்து
போந்த கரிப்பான் சாற்றி லரைத்திரண்டு புடந்தான்
போட்டபின் பெலுமிச்சம் பழச்சாற்றி லரைத்து

பாந்தமா யிரண்டுபுடம் போட்டப்பா நல்ல
பெருநாவல் பட்டைச் சாறரைப் பிரண்டு புடமாங்
கோந்த தொரு கியாழவகை மருந்து தன்னைக்
கூறுகிறேன் வகையாகக் கூறுவேனே. 852

கூறுகிறேன் கரிசாலை வெள்ளை நொச்சி
குப்பைமேனி கழற்சியொடு பொடுதலை வெற்றிலையு
மாறில்லா முருக்கிலை யீசங்குகண்டங்
காரிமணிப் பிரண்டை தொண்டையிலை மாவிலங்கு கூட்டு
பேறுபடக் கொடுவேலி அமுக்குறா முக்குறண்டி
பேயத்தேத்தான் பட்டையொடு தலைசுருளிக் கொடியும்
வேறுபடா மலைதாங்கி வேரும் வகைக்கொன்று
விளம்பினோம் பலமஞ்சு தறிபாண்டத் தூட்டே. 853

பாண்டத்து மருந்துக்குச் சலமு மிருதூணி
பாய்ச்சியே காய்ச்சடா நாலொன்றாய்க் குறுக்கி
பாண்டத்தில் வடிகட்டி விடு குறுணியப்பா
பாங்கான வெள்ளாட்டுக் கோமயமுங் குறுணி
பாண்டத்தில் விடு பசுவின் கோமயம் வண்ணம்
பழைய விரும்புக் கிட்டம் நூறுபலம் நொறுக்கி
பாண்டத்தி லிட்டபின்பு பழச்சாறு நாலு
படிவிட்டு அடுப்பேற்றி குறுகினது பாகே. 854

பாகாக விரண்டுபடி யானபின்பு
பாய்ச்சப்பா கற்கவகை தன்னைக்கேளு
வாகான திரிகடுகு திரிபலை சிற்றரத்தை
மரமஞ்சள் கரியசீரகஞ் சிவதையோடு
வேகாத தெசாபுரம் வகைக்கு மொருபலந்தான்
வென்று ஓம மிரண்டுபலம் வெட்பாலை கிராம்பு
தேகாதி சீரகமுந் தாளிசபத்திரியும்
சிறுநாகங் கோட்ட மிலவங்க மிவைசேரே. 855

சேரப்பா வகைக்கு மரைப் பலங்களிவை யெல்லாம்
தெரிக்கவே காயவைத் திடித்து சூரணத்தில்
பாரப்பா முன்வைத்த காந்தஞ் செந்தூரம்
பரவியொன்றாய்க் கியாழநீர் தன்னாலாட்ட
நோப்பா வதனோடு வெள்ளுள்ளிப் பருப்பு
நிறுத்திரண்டு பலங்கூட்டு நீசாதி லிங்கம்
வாரப்பா யரைப்பலந்தான் கூடச்சேரு
மைந்தனே பொரிக்கார மணியும் வகை கேளே. 856

பொரிகார மொருபலஞ் சரணாகத்தில்
　　பிசைந்துதான் கழுவியபின் சுத்திகேளு
வரிதான நவச்சாரஞ் சீனக்கார
　　மப்பனே வெடியுப்பு கல்லுப்போர் பலமும்
விரிவான பெருங்காய மரைப்பலமுங் கூட்டு
　　விளைந்த நெற்றுத் தேங்காய்தான் மூன்றுடைத்துக் கீறி
பரிவாக விவையெல்லாம் கியாழநீர் கொண்டு
　　பண்பாக வவ்விரண்டு சாம மரைத்திடுமே. 857

அரைத்த தொரு மருந்ததனை துட்டுக் காசளவு
　　அப்பனே வில்லை எனக் குளிகை கட்டி
நிரைத்திட்டு வடகமதை நிழலுலர்த்தி
　　நிலையாத வியாதிகட்கு மண்டலந் தானருந்து
துரத்திவிடுந் தேனிஞ்சிச் சாறு மனுபானம்
　　சூட்ட நொச்சிச் சாறல்லால் வெள்ளுள்ளித் தயிலம்
விரைத்ததொரு சாரணைவேர் வேப்பந்தோல் தயிலம்
　　வெவ்வேறே யுண்டுவர வியாதி யொழிந்திடுமே. 858

ஒழிந்துவிடும் வியாதிக்கு வகையைக் கேளு
　　உள்ளான கோவையொடு பிறநீர்க் கோவை
ஒழிந்திடுமே பெருவயிறு நீராமை கவுசியோடுமே
　　காமாலை விஷபாண்டு குன்மம்
ஒழிந்துவிடும குவையொடு மகோதரம் பீலிகை
　　யொழியாத வெப்புடனே பாண்டெட்டு வகையும்
ஒழிந்துவிடும் புளி கைப்பு மோர் புகையுமாற்று
　　முப்பாகு மாங்கிசங்கள் வாய்வான தொழியே. 859

குன்மத்துக்கு

வாய்வான வலிகுன்மம் கிருமிகளும் போக
　　மருந்துகளுஞ் செப்புகிறேன் மச்சகேந்திரா
வாய்வான தாறுமடத் திரிகடுகு மிந்து
　　வளர்காய மோமமொடு கடுகுரோணி
வாய்வான வவ்விரண்டு சீரகமுஞ் சமனாய்
　　வகையொன்று கழஞ்சி மூன்றாகச் சேர்த்து
வயாவான தறவிடித்துக் குளிரந்த சலத்தாட்டு
　　மயனம் போலிரு சாமமான பின்பு வழியே. 860

வழித்ததொரு மருந்தையொரு கழற்சிக் காயுண்டை
　　வாகாகக் கட்டியே நிழலுலர்த்தி
நெழிந்திடா வாதகுன்மம் மொழிவதற்கு
　　நிட்டடா குளிகை யொன்று குடிநீரிலூட்ட

அழித்துவிடும் வாதமடக்கி நொச்சிவேறா
மப்பனே யவ்விரண்டு பலமுங்கூட்டு
பழித்திடாச் சாரணைவேர் பலமுங் காலாம்
பதியவே யிருநாழி நீரில்போடே. 861

போட்ட நீர் தாக்கியதில் குளிகை சேர்த்து
பூட்டவே வாதகுன்மம் பிரண்டே யோடும்
நாட்டமுடன் பித்தகுன்மம் போகவப்பா
நல்மிளகு சாரணைவேர் சீரகமு மூன்று
சூட்டவே யவ்விரண்டு கழஞ்சி தட்டி
துலக்கமுட னிரு நாழி நீரிலிட்டு
ஆட்டவே யெட்டொன்றாய்க் குறுக்கிநீரி
லதில் குளிகை சேர்த்துண்ணவடா தோடுந்தானே. 862

இரத்த பித்த குன்மத்துக்கு

ஓடவே ரத்தபித்த குன்மத்துக்கு
முரைக்கிறே னனுபான முண்மையாக
நாடென்னும் பருத்தியிட பிஞ்சிடித்துப் பிழிந்து
நன்னீரி லொருகுளிகை நயந்தேயூட்ட
சாடிடுமே யின்னமொரு அனுபானங் கேள்
சஞ்சீவி மாதளம் பழத்தோடு கட்டி
யோடுமொரு படிசலத்தை யெட்டொன்றாய் குறுக்கிப்
பூட்டியிட விட்டோடும் பின்புவகை கேளே. 863

பித்த சிலேத்துமத்துக்கு

கேளப்பா பித்த சிலேத்துமத்தில் வருங்குன்மம்
கெதிகெட்டு ஓடவே கேளு கேளு
நாளப்பா வெட்டுக்கும் வெந்தநீரில்
நயமாக வொருகுளிகை நயந்துரைத்து வுண்ண
தாளப்பா சுத்தசல மோர்படி யெட்டொன்றாய்த்
தாக்கிய பின்குளிகை யொன்றுரைத்துத் தேனும்
வேளப்பா காசிடைதான் விட்டருந்தத் தீரும்
வெப்புக்கு யரைக்கழஞ்சு கடுக்கா யிருகழஞ்சே. 864

இருகழஞ்சி கடுக்காயும் வேப்பீற்கு நன்றா
இஞ்சிச் சாற்றி லரைத்து விளவெந்நீரால்
விருதுடைய வாதமடக்கியும் நொச்சிவேரும்
வெற்றிடரி சாரணைவேர் கியாழத்தி லூட்டல்
உருவாக வுலர்த்தி விடுங்கிருமி களுமாறு
மோவியம் போல் பொன்னாகு மன்மதனுமாகும்

கருவிதனை யொருவருக்கும் காட்டாதேயப்பா
கருத்திறந்து சொல்லிவிட்டேன் கருத்துணர்ந்து பாரே. 865

பீனிசங்களுக்கு

திறந்து சொன்னோம் புலத்தியனே மச்சகேந்திரா
தீராத பீனிசங்கள் செம்பித்தமோடு
பறந்தோடும் படித்தயிலம் பாகமாய்க் கேளு
பண்புடைய விலுப்பை வேர முக்கிறாவேரு
மறம்பெரிய வில்லவேர் முத்தக்காசு
மப்பனே யெலுமிச்சம் நிலப்பனையின் கிழங்கு
கறங்குவிய வேங்கையிட சிராசியும்நாரி
காட்டில் வளர் பசளியிட கிழங்குங் கூட்டே. 866

கூட்டடா நீர்வள்ளிக் கிழங்கு குறுந்தொட்டி
கூறரிய பூமிசர்க்கரைக் கிழங்கு மல்லால்
பூட்டடா சிறுதேக்குச் செண்பகமோ டப்பா
புகழாக வகையொன்றுக் கோர்பலமாய் நொறுக்கி
நீட்டடா நொச்சி கஞ்சா நெல்லி நாகவல்லி
நெருப்பேற்றி யெட்டொன்றாய்க் குறுக்கிப்பின்பு
மூட்டடா நொச்சி கஞ்சா நெல்லி நாகவல்லி
முக்கிய நல்லெண்ணெ யாவின்பால் படியஞ்சு சேரே. 867

சேரான பால் தயிலந் தன்னிலே தான்
திரட்டுதற்குக் கற்கவகை செப்பக்கேளு
பேர்மதுர மிலவங்க மேல மஞ்சள்
பெருகுமிரு சீரகமும் நன்னாரி கோஷ்டம்
சாரமுள்ள சாதிக்காய் பத்திரி கிராம்பு
சந்தனஞ் செஞ்சந்தனமு மகிலுங்கூட
தீருபெரு மஞ்சிட்டி செவ்வள்ளிக் கொடியும்
செண்பகப் பூச் சிறுதேக்கு தேவதாரந்தானே. 868

தானென்ற பொன்மெழுகு நெல்லி வெட்டிவேரும்
சதகுப்பை கல்மதங் கல்னார் பூலாக்கிழங்கும்
வேனென்ற வகைதனக்குக் கழஞ்சியஞ்சு
வெய்யலிலே காயவைத் திடித்துப்பின்பு
கோவேன்ற வாவின்பா லாட்டிவாங்கி
குழம்பாகப் பாலிலே கலக்கிவிட்டு
தேனென்ற மொழியாளைப் பூசித்தேதான்
சிறப்பாகச் சாப்பிட்டு வொன்றாச் சேரே. 869

சேரடா கியாழ கற்கம் பாலெண்ணெ யெல்லாம்
தியானித்துத் தீமூட்டி யடுப்பிலேற்றி

பாரடா மூன்றுநாள் சிறுகொதியுமிட்டுப்
பதறாமல் நாலாநாள் பதத்திலே வடித்து
சீரடா வபின்மருந்து நாற்கழஞ்சி
தெளிந்த பச்சைக் கற்பூர மிருகழஞ்சு பூட்டு
வாரடா வெண்ணெய் தனைச்சூட்டுடனே கலசம்
வளம்பெறவே தயிலத்தை விட்டாறிக் கட்டே. 870

கட்டடா குளிர்ந்தபின்பு தானியபுடமாகக்
கண்டு நெல்லிற் பத்துநாள் கிடந்தபின்பு
முட்டடா தலைமுழுக்கு நாலுநாட்கொருக்கால்
முழுகிவிடு செவிநாசிதனில் தயிலம் நிறுத்தி
விட்டடா சீயக்கா யரைப்பு வெந்நீர் கொண்டு
மேன்மையாம் புலத்தியனே மச்சகேந்திரா
மெட்டான பதமாக வாறவைத்து
விளாவாமல் முழுகுமன்று விலக்குமது கேளே. 871

கேளப்பா முழுக்கன்று மோர் புளிபால் தயிரும்
கிறுகிறுத்த புகைக் கசப்பயறு பலகாரம்
கேளப்பா விறைச்சியொடு கனிவகைகளாக
கிரமமுள்ள பத்தியங்கள் சொல்லிவிட்டேன்
கேளப்பா தீருகிற நோய்தா னொன்றைக்
கேடில்லைத் தயிலத்தால் கிருபைமெத்த
கேளப்பா வதின்பெருமை பீனிசங்கள் வகையைக்
கிளத்துவேன் மைந்தாநீ கேளுகேளே. 872

கேளடா நீர்ப்போகி விரத்தமொடு சிராயும்
கிறுகிறுப்பாய் பருத்தி விரைபோல் தெறிக்குமெல்லாம்
கேளடா வறட்சி யொடு பீனிசங்களெல்லாம்
திசைகெட்டு வோடுமே செங்கண்ணோயும்
கேளடா செம்பித்த மேகவகை கரப்பன்
குடிலமாய் வரும்வாய்வு கபாலவாய்வும்
பாளடா ஒருதலைநோய் சிரகுநோயுடனே
பஞ்சிலிட்ட தீப்பொரியாஞ் செந்தூர முண்ணே. 873

பத்தியம்

செந்தூரங் குளிகைவகை பலவகை மாத்திரைக்குஞ்
செப்புவேன் பத்தியத்தைத் திறமாய்க் கேளு
விந்தப்பா சுத்திசெய்த வுப்புமாகு
மிசைந்ததொரு துவரையிடு பருப்புமாகும்
பந்துசெறி யாவின்பால் நெய்யுமாகும்
பலகறிதான் முருங்கையிலைப் பிஞ்சுமாகும்

கொந்தலவுந் தூதுவளை சமூலமாகும்
    கொடிவழுதலைப் பிஞ்சுங் கூட்டலாமே. 874

ஆமப்பா சிறுகீரை முளைத்தண்டாகு
    மப்பனே யண்டமொடு சுறாமீனாகும்
ஆமப்பா முசலுடும்பு வெள்ளாட்டுக் கண்ட
    மழகான விரால் மீனு முலர்ந்ததாகும்
ஆமப்பா வெள்ளாட்டுப் பாலுமாகு
    மாற்சரிய மிளகுடனே கருவேப்பாகும்
ஆமப்பா வெள்ளுள்ளி சீரக மாகு
    மப்பனே மற்றொன்று மடுக்கெண்ணாதே. 875

ஒண்ணாது பரிமாற்றம் வெந்நீர்கண்டா
    லோகோகோ பத்தியங்களுரைத்து விட்டோம்
பண்ணாகும் பத்தியத்தின் படிநின்றார்க்குப்
    பாழான தீவினைகளி ல்லையில்லை
நண்ணாக மண்டலந்தான் மருந்தருந்து
    நாடாது பிணியனைத்து மகன்றே யோடு
மெண்ணாதே விசாரங்கள் பண்ணிடாதே
    என்மக்காள் முத்தியும் வந்தெய்துங் காணே. 876

தருணசுர கியாழம்

காணப்பா தருணசுர கியாழங்கேளு
    கைகண்ட பேராமுட்டி வேர்க்கொம்புஞ் சமனாய்
காணப்பா கட்டியிரு நாழிநீரில்
    கியாழமது யெட்டொன்றாய்க் குறுக்கிப்பின்பு
காணப்பா வந்திசந்தி மூன்றுநாள் கொள்ள
    கள்ளமெலாந் தீருமந் திருட்சை போகும்
காணப்பா முழுக்கன்று மந்தசுரம் வந்தால்
    கியாழமிடு தாம்பிர செந்தூரங் கேளே. 877

தாம்பிர செந்தூரம்

கேளப்பா தாம்பிரத்தைச் செந்தூரமாக்க
    கெடியான மருந்துவகை பிரித்துச் சொல்வோம்
நாளப்பா சூதமொடு மனோசிலையுங் கெந்தி
    நலமான வரிதாரம் நாவிலிங்கம்
வேளப்பா நேர்வாள மக்கிராகார
    மேலான நிருவிஷமும் வெங்காரந்தானும்
நீளப்பா காரீயமுருக்கிச் செம்பு
    நேராக வகைக்கிரண்டு பலந்தான் தூக்கே. 878

தூக்கியே தாம்பிரத்தை உருக்கியதனைத்
தூளாக ராவியே மருந்தோடொக்கத்
தாக்கியே கற்றாழஞ் சாறுகொண்டு
சாதக்மா யிருசாரம் தளர வாட்டி
தேக்கியே யடைகட்டிக் காயவைத்து
செயமாகப் புது சட்டிக்குள்ளே வைத்து
தோக்கியே மறுசட்டிக் கொண்டு மூடி
துடியாக விளிம்பெல்லாஞ் சீலைசெய்யே. 879

சீலை செய்து மண்பூசி வாலுகையிலேற்றி
தேவிக்குப் பூசித்து திடமாய் நின்று
வாலையே யம்பரையே கருணை வாழ்வே
மகத்தான பெரியோர்கள் மனமேயென்று
காலையிலே யெரித்திடுவாய் முந்தி தானங்
கருவாக வெரித்துவை மைந்தா நீயும்
மாலையிலே கணபதிக்குப் பூசை செய்து
மறுகாலைச் செந்தூர மகத்தாம் பாரே. 880

மகத்தான செந்தூரந் தூளாயாட்டி
மைந்தனே குழலிலே வாங்கி வைத்து
அகத்தான வியாதிகட்குக் கொடுக்க மைந்தா
வனுபானஞ் சொல்லுகிறே னப்பா கேளு
சுகந்தான திரிகடுகு வலுத்து ஆட்டித்
தூளிலே வெருகடிதான் தேனிலூட்ட
உகத்தாகச் செந்தூரம் பணந்தான் றூக்கி
யுண்டிடவே தீருகிற நோயைக் கேளே. 881

நோயேது அஷ்டகுன்மம் செரியாமையோடு
நுகர்ந்து வருஞ்சூலை சுர மகோதரம் வெறுப்பு
நோய் போகுங் காமாலை கிரந்தி குஷ்டம்
நோக்கினதோர் வெடிசூலை வண்டு கடிதானும்
நோய்போகும் பெரும்பாடு ரத்தகாசம்
நுணுக்கத்தில் நுணுக்கமாந் தாம்பிரமப்பா
நோய்போகு முட்கருவை யறிந்தாயானால்
நொடிக்குள்ளே வியாதிகளை யுண்ணும் பாரே. 882

தங்கபற்ப செந்தூரம்

பாரப்பா தங்கபற்ப செந்தூரத்தைப்
பாடுகிறேன் தங்கமது பலந்தானொன்று
நேரப்பா யுருக்கியதைத் தகடாய்த் தட்டி
நினைவாகச் சமபாதி ரந்தான் பத்து

பாரப்பா திரும்பவதை லேசாய் தட்டி
மாட்டியே நொறுக்கி நீ வைத்துக்கொண்டு
காரப்பா மூசையிலே மருந்தைச் சொல்வோங்
கம்பந் துராயரைத்துக் குகைக்குப் பூசே. 883

பூசியந்த விலையரைத்துக் குகைக்குள் வைத்து
பொற்பொடியை யதற்குள்ளே போடு நன்றாய்த்
தேசியே யிலைமருந்து வதற்குள் மூடிச்
சீலைசெய்து மண்செய்து சிறக்க மைந்தா
பேசியே முந்திமுந்திப் புடந்தானப்பா
பெருங்கோழி புடம்போடு பலக்க நீயும்
ஆசியே யிப்படிதா னைந்து புடம்போடு
மரகரா தங்கபற்ப மாகும் பாரே. 884

ஆகியதோர் தங்கபற்பம் செந்தூரத்தை
யப்பனே சாப்பிடவே யனுபானத்தை
தேகியதோர் வியாதிகண்டு சேர்த்தாயானால்
தீருகிற வியாதி யினிச் செப்பக்கேளு
பாகியதோர் சிலேற்பனந்தான் தொண்ணூற்றாறும்
பறங்கிவகை பதினாறும் பத்திரண்டு மேகம்
போகியதோர் குட்ட மெலும் புருக்கி சோகை
போகுமே யுண்டதும் போகுந்தானே. 885

சூத கற்பூரம்

தானென்ற சூதகற்பூரந் தன்னைச்
சாதகமாய்ச் சொல்லுகிறேன் சார்ந்து கேளு
தேனென்ற சூதமொரு பலந்தான் ரண்டு
திறமாக பச்சை மஞ்சள் சாற்றாலாட்டி
வானென்ற சாமம்ரண்டு ஆட்டிவாங்கி
மறுபடியு முலர்ந்த மஞ்சள் கியாழங் கொண்டு
மானென்ற விருசாம மாட்டிவாங்கி
மைந்தனே மஞ்சளிலைக் குள்வையே. 886

வைத்ததொரு சூதகத்தை யிலையால் மூடி
வாகாக நூல்சுற்றிச் சட்டிக்குள்ளே
வைத்ததொரு சாறுவிட்டு வேடு சட்டி
மருவியதோர் பிட்டுப்போல வித்து வாங்கி
வைத்ததொரு புட்டெடுத்து மஞ்சள் சாற்றால்
மாட்டடா வொரு சாமம் பழச்சார் கொண்டு
வைத்ததொரு சாமம் நீ யாட்டிப் பின்பு
மறுபடியும் மழிஞ்சிவேர் சாற்றாலாட்டே. 887

ஆட்டியே யொரு சாம மெடுத்துக்கொண்டு
அப்பனே சீனமதிற் பலந்தான் ரண்டு
கூட்டியே மஞ்சள் சாரதனால் நீயுங்
குமுறவே அரைத்ததனைக் குப்பிக்கேற்றி
நீட்டியே யெழுசீலை மண்ணும் பூசி
நினைவாகக் குப்பிவாய் வளப்புக் கல்லால்
மூட்டியே பொதித்ததனை யடை மண்கட்டி
யுலர தாழிக்குள் மணலைக் கொட்டே. 888

மணலையிடு நாலுவிரல் கனத்தால் நீயும்
மைந்தனே குப்பிவைத்து மறுபடியு நீதான்
மணலையிடு தாழியிட கழுத்து மட்டும்
மாட்டடா காடாக்கினி மதித்து நன்றாய்
மணலையிடு பனிரண்டு சாமம் நீயு
மடியாம லெரித்தாறி வாங்கி வைத்து
மணலையிடு குப்பிதனை யுடைத்துப் பாரு
மல்லிகைப்பூ போலிருக்குங் கற்பூரந்தானே. 889

கற்பூர முண்பதற்கு வனுபானங் கேள்
சுலரவே திரிகடுகு வெதுப்பி யாட்டி
கற்பூரம் பணவிடை தானொன்று தூக்கி
கருத்துடனே வெருகடி தான் பொடியுங் கூடக்
கற்பூரந் தேனிலே குழைத்துக் கொள்ள
காட்டாக விருபதுநா ளுண்டு காண
கற்பூர மட்ட குன்மம் பத்தெட்டு வாதம்
கடிதான மகோதரங்கள் துலைந்து போமே. 890

துலைந்துபோம் பதினாலு கிரந்தி குட்டம்
சொறி சிரங்கு பதகரியுந் தாமரைகள் நாலும்
துலைந்துபோம் வடிகறப்பன் சன்னிதோஷம்
சூசிகா வாயுவொடு சிலேற்பன காசம்
துலைந்துபோம் புலத்தியனே மச்சேந்திரா
சுகமிருந்த மெய்ஞ்ஞான குண விநோதா
துலைந்துபோம் நேத்திரத்தில் தோன்று ரோகம்
தொண்ணூற் றாறுவகையுந் தூரப்போமே. 891

மண்டுக செந்தூரம்

போகுமப்பா வியாதியெல்லா மண்டூகத்தை
பொசித்திடவே செந்தூரப் போக்கைக் கேளு
பாகுமப்பா நந்தத்திற் புராதனக் கிட்டம்
பார்த்தெடுத்துக் கொண்டு வுலையிலூதி

ஆகுமப்பா கோமயத்திற் றோய்த்து தோய்த்து
அஞ்சாறு தரமெடுத்து அசரவூதி
சாகுமப்பா கல்லுரலுக்குள்ளே போட்டு
சாதகமாய் கட்ட பாரை தன்னாலாட்டே. 892

ஆட்டியதோர் தூளெடுத்துக் கல்வத்திட்டு
அப்பனே கரிப்பான் சார் குமரிச்சாறு
ஆட்டியதோ ரிருசாம மரைத்து வாங்கி
யுத்தமனே வில்லை செய்து வோட்டில் வைத்து
மாட்டியதோர் மேலோடு கொண்டு மூடி
மண் செய்து வுலர வைத்து மைந்தா நீயும்
ரூட்டியதோர் எருவடுக்கி முழந்தான் மட்டும்
முதிரவே யோடுதனை யதன் மேல் வையே. 893

வைத்ததொரு வோட்டில் மேல் கச்சு கட்டும்
வாகாக வெருவடுக்கி யடைவுக் கெல்லா
மெய்ததொரு பொடியெருவை நிரம்ப கொட்டி
யியல்பாக புடம்போடு முப்பதப்பா
அவித்ததொரு புடந்தோறுங் கரிப்பான் சாற்றா
லரைத்து நீ போட்டிடுவா யடைவாய் மைந்தா
மொய்த்த தொரு புடமங்கே முப்பதானால்
முருக்கம்பூப் போலாக செந்தூரம் பாரே. 894

பாரப்பா செந்தூரப் பணந்தான் தூக்கிப்
பஞ்சதாரை யிலொரு வெருகடியுங் கூட்டி
நேரப்பா குஞ்சரத்தி னறுகம் வேரும்
நீ பொடித்து வெருகடியில் பாதி சேர்த்து
ஆரப்பா வாவினெய்யில் குழப்பிக் கொண்டு
அடைவாகப் பத்து நாளருந்தினாக்கால்
வாரப்பா நரம்பெல்லா மமிர்தமூறி
வர்த்திக்குந் தாதுவெகு வாகும் பாரே. 895

வெகுவாகுஞ் செந்தூரம் பணந்தான் தூக்கி
மென்பொடி தான் திரிகடுகு வெதுப்பியாட்டி
வெகுவாகுந் தேனிலே குழப்பிக் கொண்டு
வெருகடிப் பிரமாண மிருநேர முண்ண
வெகுவாகு மண்டலந்தான் தின்ற பேர்க்கு
வெல்லுகிற வியாதிகளை விபரங்கேளு
மெகுவாகு மெரிகுன் மத்தின் குன்மம்
மிஞ்சி வளர்பித்த குன்ம மற்றுப்போமே. 896

போகுமே யட்டகுன்ம மகவை வெப்பு
பொரியாமை யெரியாமை ஆனந்தவாய்வும்
வேகுமே சுரபாண்டு பித்த பாண்டு
வீக்கமதில் வருஞ் சூலை வீரணந்தீரு
மாகுமே சீரகத்தை வெதுப்பியாட்டி
யப்பனே பணவிடைதா னாலு தூக்கி
தாகுமே சீனியதில் வெருகடியுங்கூட்டி
சாப்பிடவே மண்டலத்தில் விபரங்கேளே. 897

கேளப்பா வாதம்போம் பித்தம் போகும்
கெடியாகச் செந்தூரத்திப் பிலாதி
சூளப்பா சூரணத்தில் வெருகடிக் குள்ளே
சுகமான தேன்விட்டு மண்டலந் தானுண்ண
நீளப்பா வறட்சி போஞ் சிலேற்பன ரோகம்
நீண்ட வகை தொண்ணூற்றாறும் போகும்
வாளப்பா காமாலை பாண்டு ரோகம்
வண்டு கடி யெலிகடியும் மகோதரமும் போமே. 898

காரீயச் செந்தூரம்

போமப்பா மேகங்க ளிருபத்தொன்றும்
போவதற்கு செந்தூரம் புகலக் கேளு
காமப்பா காரீயம் பலந்தானஞ்சு
கலரவே யுருக்கியதைச் சட்டிக்குள்ளே
ஆமப்பா ஆவரைத்தோ லரும்பு போட்டு
மவை வகைக்கு ரண்டுபல மரிந்து போட்டு
வோமப்பா ஒரு சாமம் வறுத்தாயானால்
வெள்ளையாய்த் திரும்புவதைக் கிண்டு கிண்டே. 899

கிண்டலால் மயில் கழுத்து நிறம் போலாகுங்
கெடியாகத் திரும்பவது மஞ்சள் போலாம்
கிண்டி வரச் செந்தூர மருணன் போலாம்
கேள் மகனே குழாயிலே யடைத்துக் கொண்டு
கிண்டியதோ ராவரையைச் சமூலம் வாங்கிக்
கேழதன் மேல் புல்லுருவி விளாம்பிசின் பொடித்துக்
கிண்டியே கதலித் தோல் பழந்தானாதல்
கிடைச்ச தொன்றில் சர்க்கரையுங் கூட்டு கூட்டே. 900

கூட்டியதோர் மருந்திலே வராகனாலு
கூடவதில் செந்தூரம் வராகனொன்று
நீட்டியதோர் தினமாறு வுண்ணச் சொல்லு
நீரிழிவும் பிரமேகம் நிவர்த்தியாகும்

மாட்டியதோ ரவரையைத் தயிலம் வாங்கி
மைந்தனே செந்தூர முண்ணச் சொல்லு
ஆட்டியதோர் மேகங்க ளிருபத்தொன்று
மதிர் சூலை பிளவையவை யடங்கும்பாரே. 901

அப்பிரக செந்தூரம்

பாரப்பா பிரமேகங் கழிச்சல் போகப்
பாடுகிறே னப்பிரக செந்தூரத்தை
யாரப்பா விதன் பெருமை காணவல்லா
ரப்பிரகமே தென்றால் சத்திநாதம்
போரப்பா ரோகங்க ளிதனைக் கண்டாற்
பொரிவிட்ட பஞ்சு போல் பொசுங்கிப் போகும்
மேரப்பா காயசித்திக் காதியாதி
மேகமென்ற விருபதுந்தான் விழலாங் காணே. 902

காணநின்ற வப்பிரகங் கிருஷ்ணவர்ணங்
கனக்கவொரு பலம்பத்துத் தூளாயாட்டி
பூணநின்ற கல்லத்தி யாலரசு
புகழான அத்தியிவை நாலுந்தோலுந்
தோணநன்றா யிடித்ததனைத் தண்ணீர் வார்த்துத்
துவைத்த வகை யிரண்டு தின மூறவைத்து
ஊணநின்ற வூறல் கொண்டு வப்பிரேக
முத்தமனே யிருசாமங் கல்வத்தாட்டே. 903

ஆட்டியே யெருக்கிலையில் வாங்கி வைத்து
அப்பனே பாத்தியதை எருக்கந் தோலால்
மூட்டியே பொதிந்து நீ யெருவடிக்கி
முதிரவே வற்கலி புடந்தான் போடு
நீட்டியே யூறுகின்ற தண்ணீர் விட்டு
நினைவாக விப்படியே புடந்தோறுந்தான்
நாட்டியே புடமேது விருபத்தொன்று
நயமாகப் போட்டு வரச் செந்தூரமாமே. 904

ஆமப்பா செந்தூரங் காவிபோல
வாகுமடா வெடுத்ததனை யடைத்துக் கொண்டு
ஓமப்பா செந்தூரஞ் சலத்திற் போட்டா
லுள்ளடங்கு மிதக்காது வுறுதிமெத்த
போமப்பா வெகுதூரம் தொட்டதெல்லாம்
பொன்னாகு மிதிற் சூதம் புகுந்ததானால்

நாமப்பா விதில் சித்தி யனேகம் பெற்றோம்
நாதக்கள் பலமுகமாய்ப் பார்ப்பார்தானே. 905

தானென்ற செந்தூரம் வராகன் தூக்கித்
தனித்தே தானிருபது நாள் சாப்பிட்டாக்கால்
ஊனென்ற மேகங்க ளிருபத்தொன்று
மோடிப் போந் தூலவுட விறுக்கிக் கட்டு
மானென்ற க்ஷயரோகந் தொண்ணூற்றாறும்
வாடை பட்டால் நிமிஷத்தில் மாண்டு போகும்
தேனென்ற மொழியுடையா ளெந்த நாளுந்
தேகத்தை நீங்கள் காண் சிறந்துவுண்ணே. 906

இரச செந்தூரம்

உண்ணுகிற சலக்கழிச்ச லனைத்தும் நன்றா
யொழியுகிற செந்தூர முரைக்கக் கேளு
உண்ணுகிற சூதமொரு பலந்தான் பத்து
உத்தமனே சுத்திசெய்து யூட்டக் கேளு
உண்ணுகிற சுத்தி சொல்வேன் மஞ்சள் செங்கல்
ஓட்டடையின் தூளுடனே யுகந்து செய்து
உண்ணுகிற வெங்காரம் பலந்தான் முற்ற
வுற்ற நெல்லிக் கெந்தியொரு பலந்தான் மூன்றே. 907

மூன்றாக விது ரண்டும் பொடிதான் செய்து
முதிரவே கலசமொன்று சிறிதாய் வாங்கி
மூன்றான கலசத்தில் பொடி பாதியிட்டு
முறையாக வதின் பிறகு சூதம் விட்டு
மூன்றான கால்படி தான் குமரிப்பூவும்
முன்னிட்டுப் பின்பு நீ பொடியு மிட்டு
மூன்றாகு முருவிதனைச் சமூல மாட்டி
முன்மருந்து மடைமருந்து மூடுமூடே. 908

மூடியே யோடு வைத்துச் சீலை செய்து
முறையோடே யிப்படியே மூன்று சீலை
நாடியே செய்த பின்பு யானைக் குள்ளே
நலமாகக் குறுணி மணல் நடுவே கொட்டி
நீடியே கலசத்தைப் பானைக்குள் வைத்து
நினைவாகச் சீலை செய்து மண்ணுஞ்செய்து
வூடியே தொண்ணூறு கடிகை நீதா
னுற மூட்டு செந்தூர முருக்கம் பூவே. 909

முருக்கம்பூப் போலிருக்கும் செந்தூரத்தில்
மூன்று பணந் தூக்கமதில் நிறுத்திக் கொண்டு
பொறுக்கவே தேனிலே மண்டலந் தானுண்ணு
பேரான சலக்கழிச்ச லனைத்தும் போகும்
முருக்கவே யெலும் புருக்கி கிரிச்சனங்க ளாறு
மூட்டின தோபிரமேகஞ் சுவாச காசம்
சுருக்கவே கிராணிபோம் பெரும்பாடு போகும்
துயர்திரும் சுகமாகக் கொள்ளச் சொல்லே. 910

சொல்லக் கேள் ரசபற்ப செந்தூரத்தைச்
சூட்டுகிறேன் புலத்தியனே சுருக்கமாகச்
சொல்லக் கேள் சூதமொரு பலந்தான் தூக்குச்
சுகமான கெந்தகந்தான் பலந்தான் தூக்கு
சொல்லக் கேளுருவியுப்பு பலம் கால் சேர்த்து
துவளவே யிவை மூன்றுந் தூளாயாட்டிச்
சொல்லக் கேள் தாம்பிரத்தாற் சிமி பூண்டாக்கிச்
சூட்டுகிற மருந்து வகை தொகுத்துக் கேளே. 911

கேளப்பா யிந்துப்பு கழஞ்சி தூக்கிக்
கெந்தகந்தான் பொடியுடனே சேர்த்து நீயும்
வாளப்பா சிமிளுக்குள் பொடியைத் தூவி
மைந்தனே சூதகத்தை நடுவே வைத்து
நிளப்பா முன்பொடியை மேலுமிட்டு
நினைவாக மூடியதைக் கம்பிகொண்டு கட்டி
கோளப்பா சீலைசெய்து மண்ணுஞ் செய்து
குக்கிடத்தின் புடம்போடு செந்தூரமாமே. 912

ஆமப்பா செந்தூரம் பணந்தான் தூக்கி
யாவரையின் விதைப் பொடியில் விளாம்பிசினுங்கூட்டி
நாமப்பா தேனிலே குழைத்துக் கொண்டு
நலமாக வெட்டு நாள் தின்றாயானாற்
போமப்பா சலக்கழிச்ச லெலும்புருக்கிச்
சூலைபுண்போகு மின்னமொரு செந்தூரம் பாரு
வேமப்பா வியாதிகள் தான் பருத்தி வேர்த்தோல்
விபரமுட னுரித்துநீ நனையப் போடே. 913

போட்டே தானூறியபின் மறுநாள் வாங்கிப்
புகழாகப் பிசைந்து மந்தத் தண்ணிர் வார்த்து
நாட்டேதான் கெந்தி பத்துச் சூதம்பத்து
நலமான வரிதாரங் கழஞ்சியஞ்சு
நிட்டேதான் நாற்கழஞ்சி கெவுரிதூக்கு
நேராக வொருசாம மாட்டி நீயும்

மூட்டே தான் குமரிச்சாறு கொண்டு சாம
முலர்பதத்திற் றூளாக்கிக் குப்பிக்கேற்றே. 914

ஏற்றியே சீலை மண்தா னேழுசெய்து
இயல்பாக வுலர்ந்தபின்பு தாழிக்குள்ளே
மாற்றியே மண்ணாலு விரல்கனமிட்டு
மைந்தனே குப்பி வைத்து வாய் மூடாமல்
சாற்றியே குப்பிவாய் திறந்து வைத்துச்
சாதகமாய் கழுத்துமட்டு மணலுங்கொட்டிப்
போற்றியே நாற்சாம மெரித்து நன்றாய்ப்
பொங்கினால் சலாகை கொண்டு கிண்டியாற்றே. 915

ஆற்றியே நாழிகைதான் முப்பதானா
லப்பனே குழிக்குள்ளே தண்ணீர்விட்டு
ஆற்றியே குப்பிதனைக் குழிக்குள் வைத்து
வாறியபின் தூளாக்கி யதனோடொக்க
வாற்றியே முன்போல கெந்தி வீர
மரிதார மாகநிறை யாகத் தானே
ஆற்றியே குப்பிக்குள் முக்கால்வாசி
யமைத்து நீ மூன்றுதரஞ் செந்தூரமாக்கே. 916

ஆக்கியதோர் செந்தூரம் பணந்தான் தூக்கி
யனுபான மறிந்தே தான் வியாதிக்கெல்லாந்
தாக்கியதோ ரஞ்சு நாளுண்ணவேதான்
சகலசங்க நோயெல்லாம் சாடிப்போகும்
பாக்கியமே செய்தவர்க் கிந்தநூல்தான்
பாலியென்றாலாகாது பத்திவேணும்
தேக்கியதோர் செந்தூர மின்னஞ் சொல்வோம்
செயரசப் பிரளையமென்ற செந்தூரந்தானே. 917

செயரசப் பிரளயம்

தானென்ற சூதமது பலந்தான் மூன்று
சாதகமாய் கெந்தியொரு பலமிரண்டேகால்
தேனென்ற செம்முள்ளிச் சாறுவார்த்துத்
திறமாக நாளொன்று திரளவாட்டி.
மானென்ற தக்காளி மணத்தக்காளி
மைந்தனே சாறுவிட்டு தினந்தானொன்று
கோனென்ற செருப்படிச் சார் தினந்தானொன்று
குறையாமல் மாதளஞ்சார் தினந்தானொன்றே. 918

ஒன்றான மூன்றுதின மாதளஞ்சா
ருத்தமனே மூன்று தினஞ் செம்பருத்தம்பூச்சாறு

ஒன்றாக வுலர்த்தியதைத் தூளாயாட்டி
யுறவாகக் குப்பிக்கு ளேழு சீலைசெய்து
ஒன்றாக வாறிய பின் மருந்து தன்னை
யுற்பனமாய் குப்பி முக்கால் வாசியிட்டு
ஒன்றாகக் குப்பிவாய் வலப்பக் கல்லா
லுறமூடிக் கவிசிக்க மருந்து கேளே. 919

கேளப்பா கடுக்காயுங் குளவி மண்ணுங்
கொடியான விந்துப்புக் கோலரக்கு
நாளப்பா பழங்கிட்டக் கருவேலம்பிசினும்
நலமான பொன்மெழுகு வெள்ளைக்கல்லு
வாளப்பா விவையெல்லாம் செங்கரு வாலாட்டி
யப்பனே சுண்ணமுடன் வெல்லங் கூட்டி
நீளப்பா முன்கரு வாலாட்டிப் பின்பு
நேராகப் பழச்சாறு விட்டே யாட்டே. 920

ஆட்டியதோர் மருந்ததுவும் பிசுன் போலாகு
மப்பனே குப்பி வாயடைத்துக் கட்டி
நீட்டியே யோட்டடுப்புக் குள்ளே தாழி
நீ வைத்து நாற்குறுணி மணலுங்கொட்டி
நாட்டியே தாழிமுக்கால் மணலுமிட்டு
நலமாகக் குப்பிதனை நடுவே வைத்து
மூட்டியே மூடாமல் நால்விரல் தான் தெரிய
முசியாமா லடுப்பேற்றித் தியானஞ் செய்யே. 921

தியானமென்ன ப்ரபூசை கணேசன் பூசை
தெட்சிணா மூர்த்தி பதங்கேத்திர பாலன்
தியானமென்ன சித்தருக்கும் பெரியோர்க்கெல்லாஞ்
சிறப்பாகப் பூசை செய்து தீயைமூட்டி
தியானமென்ன முத்தீயும் வேழுசாமம்
தியிட்டு யாறியபின் செப்பக் கேளு
தியானமென்ன செந்தூரம் பொங்கிற்றானால்
சிலாகை கொண்டு குப்பிவாய்க் கிண்டுகிண்டே. 922

கிண்டியே கற்றாழஞ் சோறு கொண்டு
கிழிகட்டி வாய் தன்னி லொத்தியொத்தி
மண்டியே பகுதிகட்குச் சோறு போடு
மைந்தனே குப்பிதனை யடைத்துப் பாரு
பிண்டியே யொன்றுமில்லை முருக்கம்பூப் போல
பேரான செந்தூர மிருக்கும் பாரு
கண்டியே யிதின்பேர்கள் நோய்களெல்லாங்
காலனாந் திரிபுர தாண்டவனாங் காணே. 923

காணப்பா செந்தூரங் கொள்ளவே தான்
காட்டுகிறே னனுபானங் களங்கம் விட்டு
ஊணப்பா திரிகடுகு வெதுப்பி தூளா
யொரு வெருகடி தூக்கித் தேனுங்கூட்டிப்
பூணப்பா செந்தூரம் பணந்தான் சேர்த்துப்
புகழாக விருபது நாளிரண்டு நேரந்
தோணப்பா வுண்டுவர எடுத்துக் கொள்ளுந்
சுகமாகுந் தேனில் கொள் சுருதி தானே. 924

சுருதியொத்த செந்தூர முண்டபேர்க்குச்
சொல்லுகிறோஞ் சுகமாகும் நோய்களெல்லா
மிருதியொத்த வாதமொரு பக்கச் சூலை
மேலான காமாலை பதினென் வாய்வும்
பரிதியொத்த பவுத்திரமு மீளை பாண்டு
பாரமொடு கிரிச்சனமுங் கிரந்திதானும்
நிருதியொத்து ஓடிப்போ மின்னங் கேளு
நேராக வெள்ளுள்ளித் தயிலம் வாங்கே. 925

வாங்கியே பணவிடை செந்தூர மிட்டு
மைந்தனே யெட்டுநா ளுண்டபோது
வாங்கியே பதின்மூன்று சன்னிபோகும்
வாகாகப் பூநாகம் முகுறு முட்டை
வாங்கியே முலைப்பாலில் குழைத்து வூட்ட
மரணசன்னி விரணசன்னி தோஷம் போகும்
வாங்கியே திரிகடுகு மிஞ்சிச்சாறு
மைந்தனே தேன்கூட்டி நாளெட்டுட்டே. 926

ஊட்டவே க்ஷயம் போகு மக்கினியின் மந்த
முளமாந்தை சுரமாந்தை யோடிப்போகும்
நீட்டவே கூவிளச் சாறதனுக் குள்ளே
நேராகப் பணவிடைதான் செந்தூரம் போடு
பூட்டவே பிள்ளைபெற்ற சீக்கட்டும் போம்
புகழான தசையடைப்பு மேகம் போகும்
மூட்டவே நெய்யிலிடு முருங்கைத்தோல் சாற்றி
லூட்டிவரச் சொறிபோகு முள்ளதாமே. 927

போகுமே சர்வாங்க வாதந்தானும்
பேராகப் பணவிடை செந்தூரம் வாங்கி
போதுமப்பா யிண்டஞ்சா றதனிற் கொள்ளப்
பொடியாகுந் தோஷமென்ற தனைத்தும் போகும்
போகுமப்பா பணவிடைதான் வாகைச் சாற்றில்
பூட்டவே மணிக்கட்டு வாதந்தீரும்

போகுமப்பா பணவிடைதா னப்பிரேகம்
புகழான காந்தமொரு பணந்தான் தூக்கே. 928

தூக்கியே யாவரையி னரசிவாங்கிச்
சுழல்வதை விளாவங்கப் பொற்கடாக சிங்கி
தாக்கியே விட்டரைத்துத் தேத்தான் வித்து
சமபாகம் கூட்டியே தயிர்தான் மேதி
தேக்கியே நீர்வடித்து இருநேரந் தான்
திறமாக விரண்டு பணவிடை தான் கொண்டு
தேக்கியே சலக்கழிச்சல் தான் கண்டன்
துரோடே பறந்து போம் சுகமாங்காணே. 929

காணப்பா பணவிடைதான் செந்தூரந் தூக்கி
கனக்கவே நீர்முள்ளிச் சாற்றிலூட்டு
பூணப்பா சுரதோஷ மெல்லாம் போகும்
புகழாக வின்னமொரு செந்தூரங்கேள்
வாணப்பா நோய்க்கெல்லாங் காலனாகு
மாச்சரிய மதின்பேர்க ளப்பாநீயும்
காணப்பா காட்டில் முழக் கம்பு வெட்டு
சண்டமாருத மென்ற செந்தூரந் தானே. 930

சண்டமாருதச் செந்தூரம்

தானென்ற சூதமொரு பலந்தான் மூன்று
சாதகமாய் கெந்தியொரு பலந்தான் மூன்று
தானென்ற சூதத்தைச் செங்கல்தூளில்
தவறாமல் சுத்தி செய்து மஞ்சள் தூளில்
தானென்ற கொடுவேலி வேருங்கூட்டிச்
சாரணையின் தண்ணீரில் பிறகுமத்தி
தானென்ற பசுவின்பால் வாழைத்தண்டு
தண்ணீருங் கூடவிட்டுக் கரகமொன்றே. 931

கரகத்தைச் சுத்திசெய்து தூபதீபங்
காட்டியே கரகவாய்க் கம்பிளியால்கட்டிக்
கரகத்தைக் குழிக்குள்ளே வாய்தெரியப் புதைத்துக்
கலராமல் வண்டுமேல் கெந்தகத்தை வைத்துக்
கரகத்தை யுலைமூடிக் கொண்டு மூடிக்
கலரவே மண்ணிட்டுத் தீயைமூட்டிக்
கரகத்தில் கெந்தகந் தானுருகி வீழும்
காண்மக்காள் கெந்தகந்தான் சுத்தியாச்சே. 932

ஆச்சப்பா கெந்தகமு மிரதஞ் சேர்த்து
வாட்டுநீ குமரிச்சார் கொண்டுநன்றாய்

நீச்சப்பா குதம்பை சார் பிறகு வாட்டு
நிலையாக மூன்றுதின மரசம்பட்டை
யேச்சப்பா கடுக்காயும் நறுக்கித் தட்டி
யிதமாக வூறவைத்துத் திரும்பவாட்டு
போச்சப்பா நாலுதினஞ் செம்முள்ளிச்சார்
போதவிடை மயனம்போ லாட்டிவாங்கே. 933

வாங்கியதோர் மருந்துக்கு விபரங்கேளு
மைந்தனே யிரண்டு குப்பி கெங்கைக் குப்பித்
தாங்கியதோ ரதைப்பொதியக் கவசங்கேளு
சாதகமாய்க் கருமணலும் வெள்ளைக்கல்லும்
தேங்கியதோ ருமிக்கரியும் புத்தோடப்பா
திறமான கடுக்காயு மிவைதானொக்க
காங்கியதோர் கல்வத்தில் கலரவாட்டிக்
கசியாமற் சீலையிலே தடவிடாயே. 934

மூடியே வாய் தனக்கு அடைமண் தானு
முலரவே கடுக்காய் களிப்பாக்குப்பு
நீடியே களிமண்ணுங் கருங்கற் சிட்டம்
நிலையான கருவேலம் பிசினுங்கூட
நாடியே பொன்மெழுகு வெள்ளைக்கல்லு
நயமாகச் செங்கரு வாலரைத்துக்கட்டு
பாடியே பழச்சாறும் விட்டரைத்துப்
பக்குவமாய்க் குப்பிவாய் வழித்துக் காட்டே. 935

காட்டியே சூட்டுப்புக் குள்ளே பின்னும்
கனத்ததொரு தாழிதனைப் புதைத்து வைத்து
நாட்டியே நால்விரல்கள் மண்ணும் விட்டு
நயமாகக் குப்பியதன் மேலே வைத்து
கேட்டியே கழுத்துமட்டு மண்ணுங் கொட்டிக்
கெடியான வாய்தெரிய வளைத்து மக்கா
ளாட்டியே தொன்றுமில்லை தீயைமூட்டி
யப்பனே தீபாக்கினியாய்ச் சாமமாட்டே. 936

ஆட்டப்பா கமலவன்னி யிரண்டுசாம
மதின்பிறகு காடாக்கினி யிருபத்தொன்று
நீட்டப்பா சாமமங்கே யெரித்து வாங்கி
நினைவாகப் பார்த்துவரப் பொங்கிற்றானால்
மூட்டப்பா கற்றாழஞ் சோறுகொண்டு
முறைமுறையாப் பொட்டணங் கொண்டொற்றி யொற்றி
பூட்டப்பா குப்பிக்கு மோசம் வந்தால்
புகழாக மறுகுப்பி பூட்டுபூட்டே. 937

பூட்டப்பா கெந்தந்தா னாலுமப்பா
    பொரிபட்டாற் போலேற்று மருந்தைப் பாய்ச்சு
நாட்டப்பா நாலாநாள் வயிரவற்குப் பூசை
    நயமாகச் செய்தே தானுடைத்துப் பாரு
வாட்டப்பா செந்தூர முருக்கம் பூப்போல
    அருணநிற மொன்றே தானறையலாகும்
மூட்டப்பா செந்தூரஞ் சர்வ நோய்க்கு
    வுத்தமனே யாடுகண்ட வேங்கையாமே. 938

செந்தூரத்திற் கனுபானம்

ஆமப்பா விபரங்கேள் நோய்கட்கெல்லா
    மனுபானஞ் சொல்லுகிறோ மன்பாய்க்கேளு
ஓமப்பா வெந்நூற்குள் பண்டிதத்தைச் சொல்வே
    னுத்தமனே யிரண்டு லட்ச மதுக்குட் சூத்திரம்
நாமப்பா வுள்ளபடி பாடிப்போட்டோம்
    நாலுவித வாகடமும் விபரம் பார்த்து
சோமப்பால் கொண்டதினால் நன்றாய்க் கண்டோம்
    துரோகிகட்குச் சூத்திரத்தைச் சொல்லொண்ணாதே. 939

ஒண்ணாதே தென்றாக்கால் பலித்திடாது
    வுத்தமர்க்கு வுறப்பலிக்கு மக்களுண்மை
யொண்ணாதே யனுபானந் திரிகடுகு பொடியு
    லொரு பணந்தான் செந்தூரந் தேனுங்கூட
ஒண்ணாதே மண்டலந்தான் தின்னத் தின்ன
    ஒழியாத மகாவாதம் க்ஷயமுந்தீரு
ஒண்ணாதே வாயுவுடன் சூலைபோகு
    முத்தமனே யட்ட குன்ம மொழியும் பாரே. 940

பாரப்பா செந்தூரம் பணந்தான் தூக்கிப்
    பட்டையிட பொடியுமொரு கழஞ்சுமூன்று
நேரப்பா முக்கழஞ்சு திப்பிலியின் பொடியும்
    நிறையாகத் தேனிலே மண்டலந்தான் தின்னப்
போரப்பா கிராணியென்ற தாறுந்தீரும்
    பிளவையறுந் தீராப்புண் பித்தம்போகு
மாரப்பா விதின் பெருமை சொல்லவல்லா
    ராதி விந்து நாதமென்ற செந்தூரங்காணே. 941

காணப்பா பிண்டஞ்சார் சோரை வாங்கி
    கியாழஞ் செய்து செந்தூரம் பணந்தான் தூக்கிப்
பூணப்பா விருபது நாள் கொள்ளக் கொள்ளப்
    புகைச்சலோடு உளமாந்தை சுரமாந்தை தீரு

மூணப்பா ஈளைமுதல் சுவாச காசம்
உத்தமனே யரிகுரலு நெரிகுரலுந் தீரும்
வேணப்பா குருவைமா வெருகடியுந் தேனும்
விரவியே செந்தூரம் பணவிடைதான் போடே. 942

செந்தூர மஞ்சுநாள் கொண்டாயானால்
சிதறினதோ ரெலும்பெல்லா மூறுமூறும்
வந்தூரம் பதகரியு முடம்பு நோவும்
வாதபித்த சிலேற்பனமு மார்க்கங்கேளு
வெந்தூறும் வெந்நீரில் செந்தூரமிட்டு
வேகவைத்து மூன்றுநாள் குளிக்கத் தீரும்
முந்நூறு முகவாத சன்னிக்கே தான்
முட்டையிலே செந்தூரங் குழைத்துப் பூசே. 943

பூசியதோர் செந்தூரப் பணந்தான் வாங்கிப்
புகழாக வெள்ளுள்ளித் தயிலத்திட்டு
மூசியதோர் மூன்றுதின முண்ண வுண்ண
முப்பத்து மூன்று சன்னிதோஷந் தீரும்
பேசியதோர் செந்தூரம் தினந்தா னஞ்சு
பேய்க் குமட்டிச் சாற்றிலே பிலக்கவூட்டு
கேசியதோ ரறுசூலை வாய்வு குத்து
கெர்ப்ப விப்புருதி போங் கெட்டிதானே. 944

கெட்டி கெர்ப்ப விப்புருதி குடல்விப்புருதி
கேள் மடுவாய் விப்புருதியுந் தீருந்தீரும்
அட்டியெனுஞ் செந்தூரந்தேட் கொடுக்குச்சாறு
மப்பனே யெருக்கம்பால் கலந்து பூசக்
கொட்டியதோர் சிலவிடமும் நல்ல பாம்பு
கொத்தினால் காஞ்சுரைத் தோல் தூளதனைக் கேள்
துட்டியதோர் காசிரண்டு செந்தூரம் பணந்தான்
தூக்கியே வெந்நீரில் தின்னச் சொல்லே. 945

சொல்லப்பா நல்ல விஷமெல்லாம் போகும்
சுகமாக ஆவரையின் தயிலம் வாங்கி
நில்லப்பா செந்தூரம் பணவெடையின் வீதம்
நிசமாகத் தின்று வரச் சலக்கழிச்சல் போம்
நல்லப்பா சீரகமும் வராகனிடை வெண்ணெய்
நாட்டியிடு செந்தூரம் பணந்தானொன்று
வெல்லப்பா வாயுவருஞ் சூலைபோகு
மெண்பதாம் வாதம்போ மின்னங்கேளே. 946

கேளப்பா செந்தூரம் பணந்தா னொன்று
கெடியான வேளைச்சா ரதனுக்குள்ளே

நாளப்பா விருபது நாளுண்ணப் போகும்
நலமான வுடம் புலர்த்தி சூத நீரிற்
கேளப்பா விட்டேகும் பணந்தான் வீதங்
கொண்டுவர ஆவினீர் வெள்ளாட்டு நீரிற்
பாளப்பா வறியாமல் மதிமயக்கம்
பயித்தியமும் பிரமை முதல் பாழ்த்துப்போமே. 947

போகுமப்பா வெருகடி முத்தக்காசு தூளில்
பூட்டப்பா செந்தூரம் பணந்தானொன்று
தாகுமப்பா நோயெல்லா நிவர்த்தியாகுந்
தாது மைந்தா வெகுவாகுஞ் சரீரங் கெட்டி
யாகுமப்பா முகமிலங்கு மழகுண்டாகு
மப்பனே யிருபதுநாள் கொள்ளு கொள்ளு
பாகுமப்பா பழச்சாற்றில் பணவிடைதான் கொள்ளு
பறக்குமப்பா பதித்தெட்டுச் சுரமும் பாரே. 948

பாரப்பா பணவிடைதான் செந்தூரந் தூக்கிப்
பாய்ச்சடா புளியிலைச்சார் சேரைவாங்கி
நேரப்பா வுண்டிடவுங் காமாலை சோகை
நிவர்த்தியாம் நிகண்டாகு மிந்தநூல் தான்
ஆரப்பா வயித்தியத்தைக் கரைகண்டார்க
ளாச்சரியந் தன்வந்திரியவரே கண்டார்
பேரப்பா புரட்டென்ற சொல்லாகாது
பிரகிருதி தாதுநிலை யறியார் தானே. 949

சர்வகுண ரசம்

தானென்ற சர்வகுண ரசத்தைச் சொல்வேன்
சயபஞ்சாட் சரவமுதமாஞ் செந்தூரப் பேர்
தானென்ற விரண்டுபேர் வந்ததேது
சார்பிக்குஞ் சர்வகுண மென்றதாலே
தானென்ற விபரங்கேள் மக்காள் நீங்கள்
சாதகமாய் ரசமூன்று பலந்தான் தூக்கு
தானென்ற கெந்தியதிற் பாதிதூக்கி
சாரதற்கு மேனியிட சாறு வாங்கே. 950

வாங்கியே யொருசாம மாறவைத்து
மைந்தனே கொடுப்பைச் சாறந்த வண்ணம்
வாங்கியே குதம்பைச் சார் செம்முள்ளிச் சார்
வாகாக விதுகளிலே யெட்டு சாமம்
வாங்கியே நன்றாக வாட்டி நீயும்
வாகான குப்பியிலே பொடித்துச் சேர்த்து

வாங்கியே யரைக்குப்பி யானபின்பு
வலப்பக்கல் கொண்டடைத்துக் காடாக்கினி மூட்டே. 951

காடாக்கினி யிரண்டுபத்து சாமமூட்டு
கழிந்தபின்பு தினமொன்று வாறப்போட்டு
சேடாக்கினியைக் கொண்டே தான் பூசை பண்ணித்
தேவியென்னு மவளை நன்றாய்த் தெளிந்து கொண்டு
வாடாக்கினிச் செந்தூர முடைத்துப் பாரு
அருணநிறம் போலிருக்கு மப்பாகேளு
தீடாக்கினிச் செந்தூரம் பணந்தான் தூக்கித்
தேனோடு திரிகடுகு தூளுங் கூட்டே. 952

கூட்டியே யெட்டுநா ளூட்டு மைந்தா
குன்மம்போஞ் சூலைபோங் குளிர்ந்த தேகம்
தீட்டியே திப்பிலித்தூள் தேனும்கூட்டித்
தின்றுவிடி லகுவாகுந் தானும்
நீட்டியே செந்தூரம் பணவிடை தானப்பா
நீயுண்ணு ஆனைபெற்ற பலமுமுண்டு
வாட்டியே யிருபது நாளிரண்டு நேர
மருளுண்டா நாற்றம்போ மாண்மைபாரே. 953

நாற்றம்போ மேனியெல்லாஞ் செங்கழு நீ நாறும்
நவநாத சித்தர் வந்து பத்தி கேட்பார்
மாற்றம்போ மாயென்ற தனைத்தும் நீறாம்
வாசனையே கர்ப்பூர நித்தம் வீசும்
மாற்றம் போம் பலகருவு விடையத்துள்ள
வாண்மை போம் செந்தூரம் வேதையாகும்
மாற்ற பேரிது வெல்லாங் கைகண்ட வித்தை
பணவிடைதான் செந்தூரம் வாங்கிக் கொள்ளே. 954

வாங்கியதோர் செந்தூரங் கோழி வெந்த
மகாவலியிற் சாற்றுடனே திங்களொன்று கொள்ளத்
தாங்கியதோர் கிராணியென்ற தறுவகையுந் தீரும்
சாதகமாய் கிராணியென்ற தெல்லாம் போகும்
நீங்கிய தோர் பணவிடைதா னஞ்சுவுப்பில்
நிசமதாய் வெருகடிதான் பொடித்து வாங்கித்
தேங்கியதோர் தேனிலே குழைத்துக் கொள்ளச்
சேதிக எட்ட குன்மந் தீர்ந்து போமே. 955

போகுமே வதிசாரம் வாய்வு தானும்
பொருமிய தோரிரச்சல் ரத்தக் கழிச்சல்தானும்
போகுமே யக்கினிதம் பித்த வாய்வு
புகலான நெஞ்செரிப்புக் புளிச்சேப்ப மந்தம்

போகுமே செந்தூரம் பணவிடை தான் தூக்கில்
புதுப் பழச்சார் கொதித் தண்ணீர் புகட்டியொன்றாய்
போகுமே தானந்த நீர்க்கடுப்பும்
பொசிந் தொழுகு மூட்டின மாமேகம் போமே. 956

மேகம்போம் பணவிடைதான் கஞ்சா சாற்றில்
வேதித்தாறு நாள் கொள்ளு கொள்ளு
தாகம் போம் மூலமூளை சீதம் ரத்தம்
தன்னோடே கடுப்பென்ற தெல்லாந் நீரும்
போகம் போம் செந்தூரம் பண விடைதான் வாங்கி
பெருங்காய மூன்று பண விடையுந்தேனில்
சோகம்போ மிருபது நாள் தின்னத் தின்னச்
சுழன்று வரும் பொரியாமை செரியாமை போமே. 957

ஆமைபோ மெரிகுன்மம் வலிகுன் மஞ்சத்தி
யட்ட குன்மம் வாய் நீரும் மசந்து தள்ளும்
பாமையொரு செந்தூர மழிஞ்சிச் சாற்றில்
பரிந்திடவே நாற்பது நாள் பதினெண் குட்டம்
தேமைபோம் வெடி சூலையறு குறையா நோவுந்
தீராத புண் சொரியுங் கடிவிடமும் போகும்
தீமைபோம் செந்தூரம் பணவிடைதான் வீதம்
செப்புவே னனுபானம் செப்புவேனே. 958

செப்புவேன் பூநாக மரைத்து நன்றாய்ச்
சிறுமிச்சங்கள் வுதினந்தான் பத்து
செப்புவேன் தின்று விடில் பித்தகாசஞ்
சேர்ந்து விழும் பதினெட்டுஞ் சுழன்று முன்னே
கொப்புறேன் செந்தூரம் பணவிடை தானீயுங்
கூட்டியே சீதேவிச் செங்கழு நீர்ச் சாற்றில்
ஒப்புறே னிருபது நாள் கொள்ளக் கொள்ள
வுத்தமனே வாதபித்த சிலேற்பனமும் போமே. 959

சிவநாராயண செந்தூரம்

சிலேற்பனம் போம் சூலை பவுத்திரமும் பிளவை
தீராத வாந்தியொடு விடமும் போகும்
சிலேற்பனம் போமின்ன செந்தூரப் பேர்
செப்பக் கேள் கிருட்டிண அப்பிரகமாஞ் சத்தை
சிலேற்பனம் போ மகாமேக ராமபாணஞ்
சிவநாராயண செந்தூரமென்பார்
சிலேற்பனம் போம் சிவனிட்ட பேரொன்றாகுஞ்
சித்தரிட்ட பேரப்பா செந்தூரந் தானே. 960

செந்தூரம் ரசம் பலங்கே ளறுபதப்பா
சிறப்பான கெந்தகமோ செப்பக் கேளு
பந்தூறும் பதினைஞ்சு பலந்தானப்பா
பாய்ச்சு அரிதாரமதி பலந்தானெட்டு
வந்தூறுஞ் சுத்தி செய்த மனோசிலையைக் கூட்டு
மருவிய தோர் லிங்கமந்தப் படியே கூட்டு
சந்தூர மீது ரண்டுந் தாரவிடைசேரு
சாதகமா யெருக்கம்பால் கொண்டு ஆட்டே. 961

ஆட்டுவது தும்பைச் சார் செருப்படிச்சா
றப்பனே மாதளையுஞ் செம்முள்ளிச் சார்
மாட்டுவது சாமமொன்று வாட்டி நீயும்
அப்பனே மாதளம்பூ முருக்கம் பூச்சார்
மாட்டுவது இருசாமமாட்டி வாங்கி
அடைவாகத் தூளாக்கிக் குப்பிக்கேற்றி
யாட்டுவது முன்போலே யெரித்துவா நீ
யப்பனே முருக்கம்பூப் போலேயாமே. 962

முருக்கம்பூ போலிருக்கும் செந்தூரத்தை
முன்சொன்ன முறமையோடே வைத்துவா நீ
பெருக்கம்பூப் போலிருக்கும் வாசனையப் பாலே
பேசவே யிது அட்டத்திசையும் வீசுஞ்
சுருக்கம் போலே யிருக்குஞ் செந்தூரத்தைச்
சூட்டுகிற முறை சொல்வோம் சுருதியாக
யெருக்கம்பூப் போலிருக்கும் வியாதியுள்ளோ
ரென்றாக்கால் தின்று விடுந்திண்ணந்தானே. 963

தானென்ற செந்தூரம் பணவிடைதான் வீதம்
சாப்பிடவே வனுபானஞ் சாற்றக் கேளு
தானென்ற தூதுவளை யாடாதோடை
தனிக் கண்டங் கத்திரியும் புட்டவித்து
நானென்ற திரிகடுகு வறுத்த தூளுந்
தனித்தேனும் ரேசித்துத் தினந்தான் பத்து
தானென்ற இருநேரங் கொள்ளக் கேளு
சாதகமாய் ரோகங்கள் சாற்றுகிறேனே. 964

சாற்றுறே னீளைமுதல் மந்தாரகாசஞ்
சரமாந்தை சுரமாந்தை யுளமாந்தை சுவாச
மேற்றுரே னெலிகடியும் சிலேற்பனஞ் சன்னி
யிவை தீரு மனுபான மின்னங்கேளு
மாற்றுறேன் திப்பிலியை வறுத்துத் தூளாய்
வாங்கியே காசிடைதான் தேனுங் கூட்டி

மாற்றுறேன் செந்தூரம் பணவிடைதான் வீத
மண்டலந்தா னிருநேர மருந்தக் கேளே. 965

கேளப்பா சூலைபுண்கள் குஷ்டரோகம்
கிளர் பதினெண் குறைநோவு வண்டுகஃடி விஷமும்
நாளப்பா கபால வெட்டை கபால சூலை
நயமாகச் சில விஷங்கள் சொறி கரப்பன்
நீளப்பா கால்கரடு நெஞ்சுக்குத்து
நேராக பீனிசமு மண்டைச் சூலை
தூளப்பா கன்னோசி செவியோசி வாய்வு
சுகமாகுந் தேகந்தான் சொல்லக் கேளே. 966

கேட்கவே சரீரமெல்லாம் பரிமளங்கள் வீசும்
சிவப்பொன்றால் சொர்ன நிறந் தெளிந்து காணும்
கேட்கவே தாது தன்னி லமுத மூறுங்
கிருபையுட நரம்பெல்லா முறுக்க மேறுங்
கேட்கவே கண்சிவக்கும் ஒளிதான் வீசுங்
கிளம்பி நின் தந்தமெல்லா மிறுகிக் கொள்ளுங்
கேட்கவே நரை போகுந் திரையும் போகும்
கெடியான குன்மமெல்லாங் கிளர்ந்து போமே. 967

போமப்பா வெள்ளுள்ளித் தயிலம் சேர்த்து
புகட்டப்பா செந்தூரம் பணந்தான் தூக்கி
யோமப்பா மூன்று நாளாறு நேர
முண்டாக்கால் சன்னி பதின்மூன்று போகுந்
தாமப்பா திரிதோஷம் முடங்கல் சூலை
தளர்வாதங் குடல்வாத முதிர்வாதம் போம்
வேமப்பா கலர்வாத மற்புதமாம் வாதம்
வெந்துபோங் கன்னோசி கரப்பன் காணே. 968

காணப்பா யின்னமொரு வனுபானத்தைக்
காணுள்ளி சுக்கோம மிளகு நேரா
யூணப்பா யிதை வெதுப்பித் தூளாயாட்டி
முருங்கைத் தோல் நீருடனே லோகஞ் சேர்த்து
ஊணப்பா விருநேர மண்டலந்தானுண்ண
ஒழியுகிற வியாதிகளை யுற்றுக் கேளு
வேணப்பா முகவாதஞ் சன்னி வாத
மென்வாதம் பக்கவாத மோடு வாதம் பாரே. 969

வாதமென்ற வெண்பதுக்கு மடைப்பு போகு
மகத்தான செந்தூரம் பணந்தான் வீதஞ்
சீதமென்ற நிலைவாகைச் சாற்றினுள்ளே
தினம் பத்துத் தான் கொடுக்கச் செயலைக் கேளு

தேக மென்ற கெற்ப விப்பிருதி போகும்
கெடியான கல்லுவிப்புருதி கூடக்
காதமென்ற வாதமிள மாந்தை சுரமாந்தை
கடியபக்க வாய்வு மண்டவாய்வும் போமே. 970

வாயுவுறுங் குடல்வாதம் பதினெண் சூலை
மகத்தான செந்தூரத்தாலே போகும்
வாயுவுறு மங்கமென்ற செந்தூரப் போக்கை
வகைவகையாய்ச் சொல்லுகிறேன் மைந்தா கேளு
வாயுவுறு வங்க முண்டால் தங்கமாகுங்
வாக்கடங்கா மனதடங்கா வங்க வித்தை
வாயுவுறும் வங்கமல்லோ வாதிகளை யேச்சு
மகத்துவமாஞ் சஞ்சீவியாகும் வாறே. 971

வாறான வங்கமப்பா பலந்தான் பத்து
மைந்தனே சுத்தி செய்து மாட்டக் கேளு
வீறான வெடியுப்பு பலந்தானொன்று
விபரமுடன் சட்டிக்குள் வங்கம் வைத்து
தாறான வெடியுப்புக் கூடவிட்டு
சாதகமாய் வறுத்திடவுந் தவிடுபோலாம்
பேரான ஆவரைவேர் வட்டத்துத்தி
பெருவேருந் தறித்திடவே சிவக்கு மட்டே. 972

சிவப்பேது முருக்கம்பூப் போலேயாகும்
தேவிக்கும் வயிரவற்கும் சிறப்புச் செய்து
உவப்பேது செந்தூர மெடுத்துக் கொண்டு
ஊட்டுகிற வனுபான முறைமை கேளு
தவப்பேறு சீரகமுஞ் சீனி கூட்டுச்
சமபாகஞ் செந்தூரம் பணந்தான் வீதம்
நவப்பேது வெண்ணையிலே குழைத்துக் கொண்டு
நயமாக விருபது நாளுண்ணச் சொல்லே. 973

உண்டவுடன் கிரிச்சனம் போந்தசையடைப்பு போகு
மூட்டினம் போங் கல்லடைப்பு வழலை தீருங்
கண்டவுடன் மூர்ச்சைபோ மெலும்புருக்கிக்
காணாத வுள்ளுருக்கிப் பன்னிரண்டு வகையும்
கொண்டவுடன் முகயெரிவு தாகமூர்ச்சை
குடலெரிவு காலெரிவு கையெரிவு மிக்க
கொண்டவுடன் சுக்கில சுரோணி தமும் போகும்
கோபமில்லை யின்னமிதில் சூட்டக் கேளே. 974

கேள்மகனே புலத்தியனே மச்சகேந்திரா
கெட்டியாய்ச் சொல்லுகிறேன் வங்கப் போக்கை

யாள்மகனே யிஞ்சிச் சார் தெளிவு வாங்கி
யரைப் பணந்தான் வீதந்தின மூன்று கொள்ள
ஆள் மகனே சுரதோஷ மெண்பதுந் தான் மீளு
மடுத்துக் கேளஷ்ட சூரணமுஞ் சேர்த்து
தோள் மகனே செந்தூரங்காந்தம் வங்கம்
தூக்கிரண்டு மொரு பணந்தான் தேனும்கூட்டே. 975

கூட்டியே பத்து நாள் தின்னத் தின்ன
கூறுகிறே னாலுவகைக் கிராணி யதிசாரம்
தீட்டியே யதிசார மாறு நீங்குந்
திறமான பிள்ளை பெற்ற சீக்கட்டுங்கூட
நாட்டியே சீக்கிறாணி முலமுளையப்பு
நலமான கிழங்கென்ற கணங்கள் போகு
முட்டியே காந்தமொடு லோகவங்க
முத்தமனே விடைபாக முரைக்கிறேனே. 976

உரை செய்த காந்தமொடு லோகம் ரெண்டு
உத்தமனே யிரண்டு பண வீதந்தூக்கு
வரையதே வங்கமரைப் பணந்தான் தூக்கு
மைந்தா கேள் திரிகடுகு தேனுங்கூட்டி
நிறையேது முப்பதுநாள் தின்னக் கேளு
நீரப்பா பாண்டு காமாலை சோகை
நிரையேது நீர்பித்தம் வீக்கமோடு
நேராக விஷபாக மனைத்தும் போமே. 977

போமப்பா பயித்தியமும் பாண்டு சோகை
பொருமலோடு மேவிளைப்பு வுப்பிசமு மீளை
வேமப்பா விஷபாத மெலிகடியுங் காச
மென்மாந்தை காசமொடு காயசுவாசம்
நீமப்பா வுளமாந்தை சுரமாந்தைக்
காநீர்க்காசம் பீனிசமு நீறாய்ப் போகும்
நாமப்பா விதுவெல்லாம் நன்றாய்க் கண்டோம்
நாட்டிலுள்ள பெரியோர்கள் நடத்தையாமே. 978

வங்க செந்தூரம்

நடத்தையா மின்னமொரு வங்கம் சொல்வேன்
நயமாகக் காரீயம் பலந்தானஞ்சு
நிடத்தையாய்க் கோமயத்தில் பத்திரண்டு வாட்டி
நீயுருக்கிச் சாய்த்திடுவாய் களங்கம் போகும்
துடத்தையாய்ச் சட்டிக்குள் வங்கம்வைத்துத்
துப்புரவாய்ச் சிறுகீரை கற்றாழை வேருந்

திடத்தையா மிருவேரும் நொறுக்கி வாங்கிச்
செப்புகிறேன் வெடியுப்புப் பலந்தானஞ்சே. 979

அஞ்சுடனே வேர்வகையுங் கூடவிட்டு
அப்பனே மூன்றுதினங் கிண்டுகிண்டு
துஞ்சுடனே வங்கமது செந்தூரமாகும்
சோதிநிறம் போலிருக்கும் சூட்டக் கேளு
வுஞ்சிடவே சலம்விட்டுக் கழுவி நன்றா
யுலரவே கழுவியதை யெடுத்துக்கொண்டு
பஞ்சுடனே பாரம் வைத்தாப் போலே மக்காள்
பஞ்சிடவே யரைப் பணந்தான் செந்தூரங்கேளே. 980

கேளப்பா தேனிலிருபது நாளுண்ணக்
கெடியாக வஷ்ட குன்ம மெட்டும் போகும்
நீளப்பா பதினெட்டு குஷ்டந்தீரும்
நிலையாத சூலை நோவு செவ்வண்டு கடியும்
நாளப்பா கருவண்டு செய்யானும் விஷமும்
நாகமாகச் சொறிகுஷ்டம் பாலகுஷ்டம்
வாளப்பா பிள்ளைபெற்ற சீக்கட்டுங் கிராணி
வயிற்றுவலி வெப்பு முதலெல்லாம் போமே. 981

வாதரச வங்கம்

போகுமப்பா நோய்களெல்லாந் தூள்தூளாகப்
பூட்டுகிறேன் வாதரச வங்கந் தன்னை
யாகுமப்பா காரீயம் பலந்தானஞ்சு
வப்பனே கோமயத்தி லுருக்கிச் சாய்த்து
பாருமப்பா பத்துவிசை யுருக்கிச் சாய்த்து
பண்பான புதுசட்டிக் குள்ளேயிட்டு
வேகுமப்பா வெடியுப்பு பலந்தான் ரெண்டு
விரவிநீ வறுத்திட்டு பின்பு கேளே. 982

கேள்மகனே புலத்தியனே மச்சகேந்திரா
கெடியான வரசந்தோல் சிவந்த பட்டை
கேள்மகனே நீ சிறுகவதை நறுக்கியிட்டு
கெட்டியாய் வறுத்திடுவாய் சிவக்கு மட்டுங்
கேள்மகனே செந்தூரம் சீலையிலே கட்டி
கெடியாக வொத்தி யொத்தி யுப்பும் போக்கி
கேள்நீதானிதன் பெருமையே தென்றாக்கால்
கெடிவாத ரசவங்க செந்தூரமே. 983

ஆமப்பா செந்தூர முண்ணுதற்கு
அனுபானஞ் செந்தூர மரைப் பணந்தான் கூட்டி

ஓமப்பா வாவரையைச் சமூலம் வாங்கி
யுலர்த்தி நன்றாய் சூரணத்தை யிதினோடொக்க
வேமப்பா சீந்தியுட சக்கரையுஞ் சேர்த்து
மேலான சீனியொடு தேனுங் கூட்டிப்
போமப்பா விருநேரம் நாற்பது நாளுண்ணப்
போகுமப்பா மேகமென்ற நீரிழிவு தானே. 984

நீரிழிவு மதுமேகங் காளைமேகம்
நிலையான அத்தியொடு சுரோணித மாமேகம்
நீரிழிவு கல்லடைப்பு கிரிச்சினமாம் பாளை
நிலையாத பிறமேக மித்திரகண்டி
நீரிழிவு தசையடைப்பு சோமரோகம்
நேரில்லாக் கடுப்புமுத லுஷ்ண ரோகம்
நீரிழிவு முள்ளுருக்கி யெலும்புருக்கி யெரிவு
நீர்ப்பாளை மூத்திர கண்டியுள் ளுருக்கித்தானே. 985

தானென்ற யுழைலையொடு தாகஞ்சோபம்
சாதகமா யுட்சுரமு முடம் பெரிவு நோவும்
வாவென்ற புழுவெரிப்புப் பழுபாகச் சுரமு
மணியுதரக் கொதிப்பு மிவையெல்லாங் கேளு
கானென்ற தீயிலிட்ட திரணம் போலே
காட்டுமுன்னே பற்பமாங் காணு மக்காள்
ஊனென்ற வயிற்றுடனே ரசசெந்தூர
முத்தமனே காந்த செந்தூரங் காணே. 986

காணப்பா லோகமிடை பாகங்கேளு
கணக்காக மூன்று பணந்தூக்கித் தூக்கிப்
பூணப்பா ரசகெந்தி சூரணமுஞ் சேர்த்துப்
புகழாகத் தேனிலே நாற்பது நாளுண்ண
ஊணப்பா ஈளைபோ மெலிகடியும் போகு
முத்தமனே வுளமாந்தை சுரமாந்தை தானும்
வீணப்பா சிலேற்பனந்தான் தொண்ணூற்றாறு
விழலாகு வங்கமென்ற செந்தூரம் பாரே. 987

காரிய செந்தூரம்

பாரப்பா நாகசித்திக் காரீய செந்தூரம்
பாடுகிறேன் காரீயம் பலந்தான் பத்து
நேரப்பா தூக்கியதை யெடுத்துக் கொண்டு
நிலையாகக் கோசலமும் கோமயமு மோருஞ்
சேரப்பா வொன்றாக்கி வதுக்குள் வங்கம்
சிறக்கவே சாய்த்திடு நீ பத்துரெண்டு வாட்டி

போரப்பா புது சட்டிக்குள்ளே போட்டுப்
 புரட்டியே யிரண்டு வெடியுப்பை யிட்டே. 988

உப்பேது அதுவுமரைப் படிதானப்பா
 யூட்டுவாய் சிவந்த நாயுருவி கொண்டு
கொப்பேது துண்டுதுண்டாய் நறுக்கியிட்டு
 குமுறாமல் சிறுகவிட்டுச் சிவக்குமட்டுந்
தட்பேது முருக்கம்பூப் போலேயாகும்
 சாதகமாய் தேவியுட வாமபூசை
எப்போதுஞ் செய்துவர முறைவிடாம
 லென்மகனே வனுபானம் மியம்புறேனே. 989

இயம்பக்கேள் கூகை நீர் சீரகம் வெங்கார
 மேலமொடு கஸ்தூரி மஞ்சள் சுக்கு
இயம்புகிறேன் வாய்விளங்க மலையின் வேப்பம்
 பிசினுடனே கருவேலம் பிசினுமப்பா
மியம்புறேன் மாம்பிசினு மிவைக்குச் சமன்தா
 னென்மக்கா ளொருபலந்தா னிறுத்துக் கொண்டு
இயம்பிறே னாவரையின் விரை தானப்பா
 எண்ணஞ்சு நாற்பது பலமுந் தூக்கே. 990

தூக்கப்பா முருங்கைவிரை சமுத்திரா பழமுஞ்
 சூட்டுகிறேன் சீந்தியுட கிழங்குகூட
தூக்கப்பா நிலைப்பனையின் கிழங்கு தானும்
 துகையேது ஒவ்வொன்று பலந்தான் பத்து
தூக்கப்பா வபினியொரு பலந்தானஞ்சு
 சுகமான கூவிளத் தந்தவண்ணந்
தூக்கப்பா தாமரைவித் தந்தவண்ணம்
 சொல்லுகிறேன் பிராயம் வித்தவ் வணங்காணே. 991

காணவே யிதுவெல்லாந் தேங்காய்ப் பாலால்
 காலாலே யாட்டியதைத் தூளாய் வாங்கி
பூணவே வெருகடி தானிந்தத் தூளில்
 புகழாக வெருகடிதான் பின்னுங் கேளு
தோணவே பலம்பத்துச் சீந்தியுட வுப்புத்
 தூக்கியிடு முன்சேர்ந்த சூரணத்தில் கூட
ஊணவே வெருகடியில் சீனிசேர்த்து
 உண்மை யிலே குளுமை கண்டால் தேனுங் கூட்டே. 992

தேன்கூட்டு சூடானால் வெண்ணை கூட்டு
 திரமாக விருநேர மண்டலந் தானுண்ணத்
தேன்கூட்டு நீரிழிவு பதினாறு வகையுந்
 தீராத சுக்கிலமா மூத்திரப்பாளை

தேன்கூட்டு ரத்த கண்டி சோகை கிராணி
சிக்கியெழு கொதிப்பு சிதறிப் போகும்
தேன்கூட்டு மேகமென்ற தனைத்தும் போகுஞ்
செந்தூர மறிந்தாக்கால் சிறுமை போமே. 993

நாகச் செந்தூரம்

சிறுமை யென்ன வங்கம் விட்டு நாகம் தன்னைச்
செந்தூரஞ் செய்யுகிற திறத்தைக் கேளு
சிறுமையொடு சீறாமல் புகைந்திடாமல்
சீருடனே யிலுப்பை நெய்யி லுருக்கிச் சாய்த்து
சிறுமையென்ன திரும்பவதை யெண்ணெய் தேய்த்துச்
சிறப்பாக விலுப்பை நெய்யிலிட்டுருக்கிச்
சிறுமை யென்ன வெள்ளாட்டுப் பாலிலப்பா
திரமாகப் பத்திரண்டு தரந்தான் சாயே. 994

சாய்த்த பின்பு திரும்பவதை சட்டியிலிட்டுச்
சாதகமாய் வெடியுப்பு சமனதாகச்
சேய்த்த ரெண்டு மிரண்டு படி பொடித்துக்கொண்டு
சிறுகவதைத் தூவியே வறுப்பாயப்பா
தேய்த்த பின்பு சிவந்த நாயுருவி கொண்டு
சுறுக்காக நொறுக்கியிட்டு வறுக்க நன்றாய்
வாய்த்த பின்பு செந்தூரமாகும் பாரு
பாளைப்பூப் போலிருக்கும் பக்குவங் காணே. 995

பாளைபோல் சிவந்திருக்குஞ் செந்தூரத்தைப்
பாச்சுதற்கு வனுபானம் பரிந்துகேளு
கோளைப்பூத் திரிகடுகு வறுத்த தூளில்
கூட்டுநீ தேனோடே கும்பிக் கொண்டு
ஏளைப்பூச் செந்தூரம் பணந்தான் வாங்கி
என்மக்கா ளிருநேர நாற்பது நாளுண்ண
யீளைப்பூச் சிலேற்பனமு மந்தகாச
மீளைமுதலெலி கடியுஞ் சுவாசம் போமே. 996

போமப்பா சுரகாசம் சுவாசகாசம்
புகழான வரிகுரலும் நெஞ்சு நோயும்
வேமப்பா பிறமேக தந்திமேகம்
வெடிசூலை கடிவிஷமும் வெப்புப் பாவை
ஓமப்பா விவை தீரு மிந்திரகண்டி
யுத்தமனே கல்லடைப்பன் நீர்ச்சிறுப்பு
வாமப்பா நாகத்தா லெல்லாந் தீரு
மைந்தனே யாவரையைத் தயிலம் வாங்கே. 997

ஐயிலத்தோர் பணந்தான் செந்தூரமிட்டு
சாப்பிடவே நாற்பது நாள் சலக்கழிச்ச லீளை
யயிலுற்ற வெலும்புருக்கி கிருச்சினங்களாறு
படர்மேக முள்ளுருக்கிக் கபால சூலை
மயிலுற்ற முறைமை போல் வெளியைக் கண்டால்
மாண்டுபோ மின்னமொரு வரிசைகேளு
கயிலுற்ற சித்திர மூலத்தூளில்
காட்டு நீ வெருகடியில் தேனிற் சேர்த்தே. 998

சேர்ந்ததொரு செந்தூரம் பணவிடை தான் தினமுந்
திரமாக விருநேர நாற்பது நாளுண்ண
சேர்ந்ததொரு செந்தூர மஷ்ட குன்மஞ்
செய்யாமல் தாபமோ டீளை வாய்வு
சேர்த்ததொரு யிவை கேளு மின்னஞ் சொல்வேன்
திரமான பேய் பீர்க்கின் தயிலத்தூட்டு
சேர்ந்ததொரு செந்தூர மரைப் பணந் தானிட்டுத்
திரமாகத் தண்டி லேபனந்தான் பண்ணே. 999

லேபிச்சு புணர்ந்திடவே கெற்ப சூலை
யநராகக் கெற்ப முண்ணும் புழுவுஞ்சாகும்
லேபிச்சு புணர்ந்திடவே கெற்பரோகம்
நிவர்த்தியா மிப்படியே மூன்று நாள்தான்
லேபிச்சு மூலமுளை கழன்று போகும்
நிலையாத பவுத்திரம் கிழங்கு வீழும்
லேபிச்சு தடவவே மக்காள் நிலைகெடுமே
மூலமுளை பவுத்திரமுந் தானே. 1000

பூரண சந்திரோதயம்

தானென்ற நாகமிதில் வேதையாகும்
சாதகமாம் பூரணசந்திரனைக் கேளு
வானென்ற சூதமொடு கெந்திசீன
மகத்தான வெங்காரம் நாவி சங்கு
வேனென்ற மனோசிலையும் பவளப்புத்து
மீறாமல் சமபாகம் கல்வத்திட்டு
பானென்ற பசளைச் சாற்றி லொரு நாளாட்டிப்
பக்குவமாய் குமரிச்சார் மறுநாளாட்டே. 1001

ஆட்டியே வில்லை தட்டி கரகத்திட்டு
அப்பனே மேல்கரகங் கொண்டு மூடி
நாட்டியே சீலைசெய்து மண்ணுஞ் செய்து
நயமாக வடுப்பேற்றி முத்தீக்கொண்டு

நீட்டியே நாளொன்றும் வறுத்து வாங்கி
நினைவாகத் திரும்பியதைக் கல்வத்திட்டு
மூட்டியே தங்கமொன்று லிங்கமொன்று
முறையோட பொன்னுமொரு கழஞ்சி கூட்டே. 1002

கூட்டியே வெள்ளியொரு கழஞ்சி தானும்
குறையாமல் பவளமு மப்படியே வாங்கி
தீட்டுவாய் ருத்திராட்ச முத்துந்தானும்
திரமான வமுக்கிறா காரத்தோடு
மூட்டுவா வியையெல்லாம் கழஞ்சி யொன்று
முத்தமனே முலைப்பாலால் தினந்தானொன்று
ஆட்டுவாய் மாதளம்பூச் சாறுவிட்டு
அப்படியே துளசிச்சார் தினந்தான் மூன்றே. 1003

மூன்று நாளரைத் துலர்த்திப் பின்பு கேளு
முன்னான சந்திரனைக் கூட விட்டு
மூன்று நாளாட்டியதைச் சிறுவில்லை தட்டி
யுத்தமனே நெல்குழியி னுள்ளே வைத்து
தோன்றுநா ளிருபதங்கே சென்று தானால்
சொக்க சந்திரோதயந்தான் சுறுக்குமெத்த
போன்று நாள் சந்திகட்குந் தோஷத்துக்கும்
பொல்லாத நேய்க்கெல்லாம் பூட்டு விட்டே. 1004

பூட்டப்பா சன்னிபோந் தோஷம் போம்
புகழான நீரிழிவு மீளை போகும்
திட்டப்பா வரோசியம் போம் சூலை போகும்
சிக்கட்டும் கோதரமுங் கவுசி பாண்டு
ஊட்டப்பா முகவாதம் சுழற்றுவாத
முட்டினமு மெலும்புருக்கி யழலைதாக
மூட்டப்பா பறந்து போந் திக்கெட்டு
முறையோடே கொடிய நோய் திரும் பாரே. 1005

குட்டவகை தீர அக்கினி குமாரி

பாரப்பா வங்காரஞ் சஞ்சீவி யென்னும்
பண்புடைய வக்கினி குமாரி யென்னும்
நேரப்பா விதன் பெருமை காணவென்றால்
நெட்டோட்டங் குட்டோட்டம் நோயையுண்ணும்
தூரப்பா கோடிக்கு யொன்று பத்து
சூத்திரத்தில் சேர்த்து வைத்தேன் சுருக்கமெல்லாம்
பாரப்பா யிந்த நூல் நன்றாய்ப் பாரு
போகாத பழவினைக ளெல்லாம் போமே. 1006

தூளாகும் வியாதியெல்லாங் குமாரியாலே
சொல்லுகிறே னரைப்பொடியு முருக்குச் செம்பும்
வீளாகு வெண்கலமு மனோசிலை வெண்கார
மின்னலுறு மரிதாரம் திப்பிலியும் நேராய்
கூளாகும் குமரியுட சாற்றை விட்டுக்
குமுறவே மூன்று நாளாட்டி வாங்கி
சூளாகுஞ் சட்டிதனை வைத்து மைந்தா
சுகமாக மேல்சட்டி கொண்டு மூடே. 1007

மூடியே சீலைசெய்து மண்ணுஞ் செய்து
முறையோட வடுப்பேற்றி மூன்று நாள் தான்
நீடியே தீயெரிக்கச் செந்தூரமாகும்
நேரா்க வெடுத்ததனை வைத்துக் கொண்டு
ஊடியே நாவியொரு பலந்தான் வெட்டி
யுத்தமனே கோமயத்தி லூறப் போட்டு
நாடியே நாவிதனை யெடுத்து மைந்தா
நாட்டுகிற மருந்து வகை நயந்து கேளே. 1008

கேளப்பா திப்பிலியு மதனின் மூலம்
கெடியாக விரண்டுபல மதனைத் தூக்கு
நீளப்பா வெள்ளுள்ளி தயிலங் கொண்டு
நீயாட்டு செந்தூரங் கூட விட்டு
நாளப்பா பணவிடையாய் குளிகை கட்டி
நலமாக நிழலிலே யுலர்த்திக் கொண்டு
கேளப்பா குளிகையொன்று; வெள்ளுள்ளிச் சாற்றில்
கொண்டவுடன் சன்னி பதின்மூன்று போமே. 1009

போகுமப்பா விலிங்கம் சாற்றில் வாங்கிப்
புகழாக வரைப் பணந்தான் செந்தூரஞ் சேர்த்து
வாகுமப்பா யெட்டு நாள் கொள்ளவே தான்
வாதமென்ற வெண்பதும் போம் பதினெண்சூலை
வேகுமப்பா குஷ்டமொடு வாயு தானும்
வெந்து போம் வண்டுகடி செவ்வண்டு கடியும்
பாகுமப்பா கடிவிஷங்கள் கபால குஷ்டம்
பரவி நின்ற சிரங்கு படர் தாமரைதான் கேளே. 1010

கேளப்பா வெண்குஷ்டஞ் செங்குஷ்டம் கருங்குஷ்டம்
கெடியான மேல் புள்ளித் தாமரைகள் கூட
கேளப்பா யிவையெல்லாங் கொடுந் தீபஜ்துங்
கொம்மட்டிக் காய் சாற்றில் குமரிசேர்த்து

நாளப்பா வொன்று விட்டுமொரு நாள் வீதம்
நாற்பது நாலுநாள் நயமாக் கொள்ளில்
வேளப்பா வுதிரத்தி லுழந்த ரோகம்
வேமப்பா வாயுவெல்லாம் விழலாம் பாரே. 1011

விழலாகும் விப்புருதி யகுவை வீக்க
மேலான மகோதரமுங் கெற்ப சூலை
விழலாகும் பீலிகையும் பதினெண் குஷ்டம்
விம்மிவரும் பெருவயிறு மேல் வயிறு வீக்கம்
விழலாகும் நீராமை பதினாலு பாண்டு
வீறுகொண்ட கெண்டைமுத லடிவயிறு வீக்கம்
விழலாகு மக்கினி குமாரியென்றால்
வேடிக்கை மெத்தவுண்டு விரிக்கிலேனே. 1012

விஜய நாராயண பாணம்

விரிக்கிலே னக்கினி குமாரிக் கின்னம்
விஜய நாராயண பாணமென்றும்
பரிக்கிலே னக்கினி குமாரி யென்றும்
பாடினார் வல்லோர்கள் பரப்பில்மெத்த
தரிக்கிலேன் பலநூலை யெந்நூல் நன்றாய்
தரித்தாக்கல் சகலசித்துந் தானே எய்துஞ்
செரிக்கிலேன் தபோதனர்க்கு லபிக்குந் தெய்வம்
திருந்திய தோரதுக் கெல்லாஞ் செப்புறேனே. 1013

செப்புகிறேன் சூதமொன்று நாதமொன்று
செகமறியாக் கெந்தியொன்று சிலைதானொன்று
செப்புகிறேன் செம்பொன்று லிங்கமொன்று
சேர்சமனாய் வகையொன்று பலந்தான் பத்து
செப்புறேன் பெருங்காயம் பலந்தானஞ்சு
சிறந்த வெள்ளையுள்ளி யொருபலந்தான் தூக்கு
செப்புறேன் குமரிச்சார் விட்டுஓர்நாள்
திரளவே மயனம் போலாட்டு ஆட்டே. 1014

ஆட்டப்பா நாளொன்று சாமமொன்று
அப்பனே மூன்றுநா ளாட்டிவாங்கி
நீட்டப்பா குப்பியிலே யடைத்து மைந்தா
நிலையாக வளப்பகல் கொண்டுகட்டி
மூட்டப்பா வோட்டடுப்பில் குப்பிதனை வைத்து
முத்தியு மூன்றுநா ளெரித்துநன்றா
யூட்டப்பா வடுகனுக்கு நிருவாணிக்கு
மூடியே யாறவைத் தெடுத்துக் கொள்ளே. 1015

எடுத்ததொரு செந்தூரத் துடனே கேளு
யென்மக்காள் திப்பிலியும் சாதிபத்திரி
கடுத்ததொரு திப்பிலியின் மூலந்தானும்
கடுகு ரோகணி யிவைதான் பலங்கால்வீதம்
மடுத்ததொரு வெண்கருவால் சாமமாட்டி
மைந்தனே மிளகுபோல் குளிகைகட்டி
தொடுத்ததோர் அனுபான முள்ளிச்சாற்றிற்
கூட்டியுண்ணில் சன்னிபதின் மூன்றுபோமே. 1016

போகுமப்பா திரிகடுகு வறுத்த துள்தான்
புகழாக வெருகடியில் தேனுஞ் சேர்த்து
வேகுமப்பா குளிகை யொன்று நாளும்பத்து
விரவி யுண்ணில் பத்தெட்டு வாதமொக்க
சாகுமப்பா சயரோக முஷ்ணரோகம்
சலக்கட்டு குறைநோவு குஷ்டநோவு
மேகுமப்பா விஷகடியுஞ் சூலைமூர்ச்சை
யிவையெல்லாந் தீர்ந்துபோம் யின்னங்கேளே. 1017

சடாட்சர குமாரி

இன்னமொரு அக்கினி குமாரி சொல்வோ
மிதின்பேர்கள் சடாட்சர குமாரியாகும்
சொன்னதொரு மால்விஜய வேல்கை கொண்ட
சுப்பிரமணிய மென்று சொல்லுவார்கள்
வென்னதொரு அரைப்பொடியுங் கெந்தி காந்தம்
வெண்கார மிலிங்கமொடு பலந்தான்பத்து
வண்ணதொரு வகைவீதஞ் சேர்த்துக்கொண்டு
மாட்டடா கற்றாழஞ் சாறுவார்த்தே. 1018

சாறுகொண்டு நாற்சாம மயனம் போலே
சாதகமா யாட்டியே பொடித்துக்கொண்டு
ஆறுகொண்ட கலசத்தில் நடுப்பொடியை வைத்து
அரைத்திடுவாய் தாம்பிரக் கிண்ணியாலே
வீறுகொண்ட ரவியில்வைக்கப் புகைந்துவேகு
மீட்டுமிதை முன்சாற்றால் நாலுசாமம்
பேறுகொண்டு ஆட்டுநன்றாய் பொடித்து முன்போல்
பிசகாமல் தாலத்தின் நடுவே வையே. 1019

வைத்துநீ யிப்பிடிநீ மூன்றுவாட்டி
வைக்க வெந்து செந்தூரமாகும் பாரு
மெய்த்ததொரு செந்தூரம் பணந்தான் வீதம்
வேதித்து திரிகடுகு தேனுமொக்க

எய்த்ததொரு மண்டலந்தா னுண்ணும்போது
 எண்பதென்ற வாதமொரு வாயுச்சூலை
மொய்த்ததோ ரட்டகுன்மம் சன்னிவாதம்
 முன்வாதங் கணல்வாத மூர்ச்சை போமே. 1020

மூர்ச்சை போம் பித்தமறுஞ் சிலேற்பனமும் போகும்
 முசல் வலியுங் குதிரைவலி குமராகண்டவலியு
மூர்ச்சைபோ மேகமறுங் கவுசிதிரும்
 முன்னடைப்பு நெஞ்சடைப்பு மொழியிற்சூலை
மூர்ச்சையோ டிவையெல்லாந் தீருந்தீரும்
 மோசமில்லை குமாரிக்கு முடுக்குமெத்த
மூர்ச்சையறுங் குமாரிவிட்டு பூபதியைச் சொல்வோம்
 முறையோடே பாடிவிட்டேன் முறையைக் கேளே. 1021

கேளப்பா அரப்பொடியும் வங்கபற்பம்
 கெடியான திராப்பொடியும் வெண்கலத்தின் பொடியும்
வாளப்பா வெண்காரம் பச்சை நாபி
 மகத்தான சவுக்காரஞ் சத்திச்சார
மாளப்பா யெவச்சாரங் காந்தபற்ப
 மப்பனே பித்தளையு முறுக்கு லோகஞ்
சூளப்பா வகையொன்று பலந்தானொன்று
 தூக்கடா கெந்தகமும் பலந்தானாறே. 1022

ஆறாகு மிவை யெல்லாங் குமரிச்சாற்றா
 லப்பனே நாள்மூன்று ஆட்டிநீயும்
வேறாகப் பொடியாக்கிக் குப்பிக்கேற்றி
 விபரமுட னெழுசீலை மண்ணுஞ் செய்து
கூறாக வளப்பக்கல் லடைமண் செய்து
 குமுறவே முத்தீயு மூன்றுநாள் தான்
தேறாக வெரித்து வர நாலாநாளில்
 செந்தூரம் வாங்கையிலே பூசைசெய்யே. 1023

விஷ்ணு ராஜபூபதி

பூசைசெய்யு மிதின்பேர்கள் விஷ்ணுராஜ
 பூபதியென்றே வேதம் புகலு முண்மை
ஆசைசெய்யும் நோயதற்கு மசகமாகு
 மாட்டுதற்கு மருந்துவகை நாவியோடு
மாசைசெய்யும் திப்பிலியு மதனின் மூலம்
 வகையிரண்டு பலம்நாலு தூக்கிக்கொண்டு
கோசைசெய்யுங் கோமயத்தைக் கியாழம் வைத்துக்
 கூட்டியே நன்றாக ஆட்டு ஆட்டே.. 1024

ஆட்டியதோர் செந்தூர முளுந்துபோலே
அப்பனே யுண்டை செய்து நிழலுலர்த்தி
நாட்டியதோர் வெள்ளுள்ளித் தயிலத்துள்ளே
நயந்திடுவாய் சன்னிபதி னெட்டும் போகும்
நீட்டியதோர் குளிகை யொன்று இஞ்சிச்சாற்றில்
நீயூட்டுத் தனுவாதம் பிரளிகுத்து
மூட்டியதோர் குதிரைவலி கடுப்பு பாண்டு
முத்தோஷம் மூர்ச்சையொடு முழுதுங்கேளே. 1025

ஈசுர பூபதி

கேளப்பா நவகண்டி மூர்ச்சை தானுங்
கெடியான தோஷமொடு சன்னிதானும்
நீளப்பா பறந்தோடு மின்னமொன்று
நீகேளு புலத்தியனே மச்சகேந்திரா
ஏளப்பா வென்றுடனே நோயைச்சாடு
மீசுர பூபதியென் றிதற்குநாமங்
கேளப்பா நோய்க்கெல்லாங் கடுங்கோளாகும்
கூட்டிதனை வரிசை சொல்வேன் கூர்ந்துகாணே. 1026

காணப்பா சூதமொன்று கெந்தியொன்று
காந்தமொரு நாகபற்ப முருக்குச் செம்பு
பூணப்பா அரப்பொடியும் பித்தளையின் பொடியும்
புகழாக வெண்கலத்தின் பொடியுங் கூட்டி
ஊணப்பா வரிதாரஞ் சிலை யுந்துத்த
முத்தமனே சுண்ணாம்பு மன்பதாக
வேணப்பா செங்கோட்டை கற்பொடியும் நேராய்
மேலான குமரிச்சார் தன்னாலாட்டே. 1027

ஆட்டப்பா சாமமொன்று கள்ளிப்பாலா
லப்பனே வொருசாம மரைத்து நன்றாய்
பூட்டப்பா பொடியாக்கிக் குப்பிக்கேற்றிப்
புகழாக முன்போலே மூன்றுதீயும்
மூட்டப்பா மூன்றுநாள் தீயெரித்து
முறையோடே பூபதியை வாங்கிக்கெண்டு
ஊட்டப்பா நாவியொன்று திப்பிலியின்மூல
மோரிடையாய் கோசலத்தி லூறப்போடே. 1028

போட்டதனை யெடுத்தே தான் கல்வத்திட்டு
பூபதியுங் கூடவிட்டு உள்ளிச் சாற்றால்
ஆட்டதனை யொருசாமம் வாங்கிக் கொண்டு
அப்பனே குன்றியிடை குளிகைகட்டி

ஊட்டதனை யனுபானம் முன்போலப்பா
ஒருகுளிகை சன்னிமுதற் பிரகிருதி பிரமை
மூட்டதனை வாதம்போம் சயரோகம்போ
மூலமொடு மகோதரங்கள் கவுசி போமே. 1029

வடபாண பூபதி

போகுமப்பா வடபாண பூபதி தானொன்று
புகலுகிறேன் வடபான பூபதிதான் பேரு
ஆகுமப்பா சூதமொன்று கெந்தி யொன்று
அப்பனே காந்த மொன்று லிங்கமொன்று
வேகுமப்பா சிலையொன்று தாளகமு மொன்று
வெண்கார நாகபற்பம் வங்கபற்பந்
தாகுமப்பா வரைப்பொடி யும்தாம்பிர லோகம்
சாதகமாம் பித்தளையும் வெண்கலமுஞ் சங்கே. 1030

சங்கோடு நேர்வாளந் திப்பிலியு நேராய்
சாதகமாய் வகையொன்று பலந்தா னொன்று
சங்கோடு கெவிரியிதில் பலங்கால் கூட்டி
சமரசமாய் கற்றாழஞ் சோற்றாலாட்டி
சங்கோடு சாமமொன்று வெள்ளாட்டுப் பாலால்
சாமமொன்று எருக்கம்பால் சாமமொன்று
சங்கோடு கள்ளிப்பால் சாமமொன்று
தளராட்டிப் பொடியாக்கிக் குப்பிக்கேற்றே. 1031

ஏற்றியதை மூன்றுதினந் தீயைமூட்டி
யெடுத்தாறி நாலாநாள் யெடுத்துக் கொண்டு
மாற்றியதில் நாவியொடு திப்பிலியின் மூலம்
வகையொன்று பலமொன்று மூன்றுந்தூக்கி
யேற்றியே யெருக்கிலையின் பழுப்புச்சாற்றா
லியல்பாகச் சாமமொன்று ஆட்டிவாங்கி
பாற்றியே குன்றியிடை குளிகைசெய்து
பாச்சடா வனுபானந் துளசிச்சாரே. 1032

சாறுகொண்டு குளிகையிட சன்னிபோகுந்
தளர்வாதஞ் சிலேற்பனமாஞ் சன்னிமூர்ச்சை
வீறுகொண்ட முசல்வலியுங் குமரகண்டன்
வெளிக்குத்து முட்குத்துந் தனிவலியும் வீச்சும்
மாறுகொண்ட சுழல்வாதம் முகவாதஞ் சன்னி
மகோதரமும் பீலிகையு மருவைவெப்பும்
வேறுகொண்டு மறைந்தோடும் பூபதியைக் கண்டால்
மேலான பூபதியின் விபரந்தானே. 1033

இரச கற்பூரம்

தானென்ற கற்பூர மொன்று சொல்வேன்
சாதகமாய் சூதம்ரெண்டு பலந்தான் தூக்கி
வாரனென்ற சட்டிக்குள் மூன்றுபடி யுப்பை
வளமாக பொடித்திட்டு நடுவேகேளு
தேனென்ற செங்கல்தூள் கால்படி தானிட்டு
திரமாகக் குளித்ததிலே சூதம்விட்டு
ஏனென்ற மறுசட்டி கவிழ்த்துமுடி
இயல்பாக வெழுசீலை மண்ணுஞ் செய்யே. 1034

மண்செய்து தொண்ணூறு கடிகையப்பா
வாகாக முத்தீயு மெரித்து மைந்தா
மண்செய்த மேல்சட்டிக் குள்ளே கேளு
வாகாக உரைத்திருக்கும் வெள்ளை மெத்த
மண்செய்த நற்பூரங் குழாயில் வைத்து
வாகாக பணவிடைதான் தூக்கிக்கொண்டு
மண்செய்து பனைவெல்லம் நல்லவெல்லம்
வாகாக வாட்டிவர வளப்பங் கேளே. 1035

கேளப்பா தீருகிற வியாதி கேளு
கிரந்தி பதினாறு முதலட்ட குன்மம்
வாளப்பா தமரோக மாறுசூலை
மகத்தான குஷ்டமொடு குறைநோய் தானும்
பாளப்பா பறக்குமே கற்பூர முண்டால்
பத்தியந்தான் புளிகைப்பு பதார்த்தந் தள்ளு
நீளப்பா நேத்திரத்தின் வியாதிக் கெல்லாம்
நீகேளு வகைமருந்து நினைவாய்தானே. 1036

நேத்திரவியாதி 96க்கு மாத்திரை

தானென்ற இந்துப்பு பீதரோணி
சாதகமாந் திப்பிலியுஞ் சமனாய் சேர்த்து
கோனென்ற நந்தியா வட்டப் பூச்சார்
குமுற விட்டு இருவாம மாட்டிவாங்கி
தானென்ற கயிறுபோல் குறுக நீட்டிக்
காற்றாட நிழலிலே யுலர்த்திக் கொண்டு
ஊனென்ற கண்ணோய்கள் தொண்ணூற்றாறு
மொழிவாதற்கு முலைப்பாலி லுரைத்துப் போடே. 1037

போடுதற்கு நேத்திரத்தில் நோய்கட் கெல்லாம்
பூட்டுகிற கனக ரத்தினாதி தன்னை

ஆடுதற்கு இதுவென்றால் கண்ணோ யெல்லா
மாச்சரிய மொழிந்துபோம் விபரங்கேளு
நீடுதற்கு நீலமொரு கெம்பு வச்சிரம்
நேரான மரகதமும் புஷ்பராகம்
கோடுதற்கு கோமேதகம் பவளம் முத்துக்
கொடிய வயிடூரியத்தோ டொன்ப தாச்சே. 1038

ஆச்சப்பா இரத்தினங்க ளொன்பதாகு
மப்பனே லோகங்க ளொன்பதையுங் கேளு
வாச்சப்பா தங்கமொடு வெள்ளி செம்பு
மைந்தனே பித்தளையுந் துத்தநாகம்
ஓச்சப்பா வெள்ளீயங் காரீயங் கஞ்
சமுத்தனே யொன்பதையு மொக்கக்கூட்டு
நீச்சப்பா துரிசியொடு துத்தஞ் சங்கு
நீலாஞ்சனம் பீதாஞ்சனமும் பாரே. 1039

பாரப்பா கடல்நுரையும் பீதரோகணியும்
பரிவான மஞ்சளொடு கடுகுரோணி
நேரப்பா திப்பிலியுங் கோஷ்டந்தானும்
நேரான நிறைபுங்கம் விரையினோடு
காரப்பா வண்டமொடு மாண்மையோடு
கபாலோடு மிந்துப்பு கற்பூரந்தானும்
தாரப்பா சந்தனமுஞ் செம்பஞ்சுங் கடுக்காய்
தாமரை கிழங்குடனே நெல்லிக்காய் காணே. 1040

காணப்பா மருந்துவகை நாற்பத்தஞ்சுங்
கானென்று குறையாமல் நிறுத்துவாங்கு
காணப்பா கல்வத்தி லிட்டுநீயு
முத்தமனே பழச்சாற்றா லொருநாளாட்டி
பூணப்பா கொடுப்பைச்சார் மறுநாளாட்டி
புகழாக மூன்றுநாள் சிறுகீரைச்சார்
தோணப்பா நாலாநாள் கரிப்பான் சாறுஞ்
சுகமாக வஞ்சாநாள் பொடுதலையின் சாறே. 1041

சாறுகே ளாறாநாள் பிச்சிப்பூச் சாறுந்
சாதகமா யேழாநாள் மல்லிகைப்பூச் சாறும்
வாறுகே ளெட்டாநாள் சண்பகப்பூ சாறு
மைந்தனே யொன்பதாநாள் நந்திப்பூச் சாறு
வீறுகேள் பத்தாநா ளல்லிப்பூச் சாறு
மேலான பதினொருநாள் முலைப்பாலப்பா
வேறுகே ளஉரத்ததனை கயிறுபோலே
விபருமுட னுருட்டியே நிழலில்வையே. 1042

வைத்ததொரு கயிறெடுத்து நேத்திர ரோக
மைந்தனே தொண்ணூற்றாறோ டாறுந்தீர
நைத்ததொரு வனுபானம் பார்த்து நன்றாய்
நயமாகத் தீட்டிடவே யருந்ததியைக் காணும்
மொய்த்ததொரு சூத்திரத்திற் சொன்ன மருந்தெல்லாம்
மொழிகுற்றம் வாய்குற்றம் மோசமில்லை
எய்த்ததோ ரேழுவகைச் சாறுகொண்டு
இடிகனக ரத்தினத்தை யெல்லாம் போமே. 1043

போகுமப்பா பத்தியங்கேள் கிராந்திப்பண்டம்
புளியாகா கைப்பாகா துவர்ப்புமாகா
ஆகுமப்பா வுப்புடனே பால்நெய் யாகு
மப்பொது யருந்ததியி னளவு காணும்
ஏகுமப்பா குத்தங்கள் கரைவதற்கு
இயம்புகிறேன் சூதமொன்று காரீயம் ரெண்டு
வேகுமப்பா காரீயம் ரெட்டி துத்த
மிதற்கிரட்டி தாம்பிரமு மின்னங்கேளே. 1044

கேளப்பா தாம்பிர மிரட்டி சங்குங்
கெடியாக விதுவெல்லாம் பழச்சார் கொண்டு
நாளப்பா மூன்றுதின மாட்டிவாங்கி
நலமாகக் குளிகைகட்டி நிழலுலர்த்தி
வேளப்பா பழச்சாற்றா லுரைத்துத் தீட்ட
விரணம் போங் குந்தம்போம் வெளியுமாகும்
நீளப்பா கறுக்குமெத்த ஒளியைக் காணும்
நேத்திரத்தின் நோய்க்கெல்லாம் நிலைத்துபாரே. 1045

நிலைத்துப்பார் மேதிவெண்ணெய் பலந்தானொன்று
நேர்சீனங் கால்பலந்தான் பீதரோணி
நிலைத்துப்பா ரரைப்பலந்தான் தூக்கிக் கொண்டு
நீ வெண்ணை யன்றியிந்த மருந்து மூன்றும்
நிலைத்துப்பார் தூளாக்கிக் கல்வத்திலிட்டு
நீட்டுவாய் வெண்ணைதனைக் கூட்டியிட்டு
நிலைத்துபார் சாமமொன் றாட்டிவாங்கி
நிசமான வெண்கல சத்தூரில் வையே. 1046

வைத்ததொரு மருந்துதனை செம்புகொண்டு
மயனம் போலிரு சாம மாட்டிவாங்கி
மெய்த்ததொரு தாம்பிரத்தின் சிமிளுக்குள்ளே
முறையாக வமைத்தேதான் மூடிப்போட்டு
எய்த்ததொரு நேத்திரத்தி நோய்கட்கெல்லா
மென்மகனே விருகடுகு பிரமாணந்தான்

மைத்ததொரு கண்ணிலிடு தீரும் நோயை
மைந்தனே வகை யாகக் கேளுகேளே. 1047

கேளப்பா நேத்திரத்தின் வாய்வுதானுங்
கெடியான விழிசலக்கன் மாலைக்கண்ணுஞ்
சூளப்பா கண்ணோயும் வலிகண்தானுஞ்
சுத்துக்கண் குலைந்தகண் பிறந்தகண்ணும்
வாளப்பா முழிகுருடு நீர்ப்புல்லம் பூவும்
வளமான குந்தமுத லனைத்துந் தீரும்
வேளப்பா நேத்திரநோய் தொண்ணூற்றாறு
வெல்வதற்கு வெண்ணை யொன்று விள்ளுறேனே. 1048

விள்ளுறேன் பசுவின்வெண்ணை பலந்தானொன்று
விபரமுடன் புதுப்பாண்டத் துள்ளேபோட்டு
விள்ளுகிறேன் குளுந்தசலம் நிரம்பவிட்டு
மென்மேலு மிப்படியே நித்தநித்தம்
விள்ளுறே னொருதிங்கள் மறந்திடாமல்
விட்டுவர வெண்ணையது கல் போலாகும்
விள்ளுறேன் திரும்பவதைக் கல்வத்திட்டு
மேல்பீத றோகணியு மிடைகால் சேரே. 1049

சேர்த்தேதான் செம்பதனால் பழச்சார்குத்தி
திரமாக விருசாமங் களிம்பு சேர்த்து
பார்த்தேதான் கடுகிடைதான் கண்ணில் தீட்டப்
பறக்குமடா தொண்ணூற்றார் பாருபாரு
போர்த்தேதான் னாறுதிங்கள் மண்டலந்தானொன்று
போட்டிருந்த வெண்ணையுமாம் போக்குக் கெல்லாம்
காத்தேதான் குருப்பிறகே கசடுநீக்கி
காத்திருக்கில் கருணையினால் கடாட்சிப்பாரே. 1050

காசக்குடோரி

கடாட்சமுள்ள காசக்குடோரி யொன்று
காட்டுகிறேன் புலத்தியனே கண்டுபாரு
கடாட்சமுள்ள தங்கமொன்று வெள்ளியொன்று
கடும்புயி லிளகமொன்று பீதரோணி
கடாட்சமொடு சமனிடையாய் நிறுத்துக் கொண்டு
கனக்கவே நாலுவகை பாலும்விட்டு
கடாட்சமுறுங் கயறுபோல் திரட்டிநீயுங்
காரிகையா முலைப்பாலி லுரைத்துப் போடே. 1051

போட்டவுடனே நேத்திரநோ யனைத்தும் போகும்
பூட்டுகிறே னின்னமொரு குளிகைதன்னை

நாட்டவே யரிதாரஞ் சங்கு சுக்கு
நலம்பெரிய நல்மிளகு பீதறோணி
நீட்டவே திப்பிலியு மதுரந்தேனும்
நேரான புங்கம் விரை சிலைதான் துத்தம்
மூட்டவே யிவைசமனாய் நிறுத்துக்கொண்டு
முக்கியமுள்ள நந்திபூச் சாற்றாலாட்டே. 1052

ஆட்டியதைக் கயறுகட்டி வைத்துக்கொண்டு
அப்பனே முலைப்பாலி லுரைத்துக் கொண்டு
மாட்டியதை நேத்திரநோய்க் கெல்லாம் போட
வாகாகத் தொண்ணூற்றோ டாறும் போகும்
மூட்டியதில் திட்டாந்த மூலிகையிரண்டு
முத்தெருக்கஞ் செவியதனைக் காரிநாளில்
நாட்டியதில் சாப்பிட்டு பராபரைக்கும் பூசை
நயமாகச் செய்து வேரறாமல் வாங்கே. 1053

மூலிகைப் பிரயோகம்

வாங்கப்பா அருக்கனாள் பிடுங்கிவந்து
மைந்தனே யந்தயிலைச் சாற்றிலாட்டி
வாங்கப்பா கண்ணிலிடு குருடர்க் கெல்லாம்
வானிலுறு மருந்ததியை மருவிக்காண் பார்
வாங்கப்பா பிறவிடைக்கு மருந்து சொல்வோ
மகத்தான நேத்திரநோய்க் கெல்லாமாகும்
வாங்கப்பா கடுக்காயுங் காசுக்கட்டி
மயில்துத்தம் பொன்மெழுகு சீனந்தானே. 1054

தானென்ற மதுரமொடு பிளிசுபாக்குச்
சாதகமாய்ச் சரியாக தூக்கிவாங்கி
கோனென்ற தூளாட்டி யிதனோடொக்கக்
கூட்டுகிற மருந்துதனைக் கூர்ந்துகேளு
கானென்ற தேற்றின்விரை யபினியோடு
கடியதொரு கொடுக்காயின் புளியுநேராய்
தேனென்ற பழச்சாற்றா லாட்டிவாங்கி
திரும்பவதைத் தூளுடனே சேருசேரே. 1055

சேர்த்திரண்டு மொன்றாக்கிப் பழச்சார்விட்டு
திரளவே பிசைந்துகொண்டு கரத்தில் நெய்யை
வார்த்துநன்றாய் பிரட்டியே மருந்தைத்தானும்
மைந்தனே ரெண்டுவிரல் கனத்தில் நீயும்
பார்த்ததொரு விறல் நீளங் கயறு கட்டி
பாங்காக நிழலுலர்த்திப் பழச்சாறதால்

கார்த்துநின்ற காடியதாலூறுஞ் சாற்றால்
கருவேலங் கியாழத்தி லரைத்திடாயே. 1056

அரைத்ததொரு மருந்ததனைக் கொதிக்கவைத்து
வப்பனே பிறவடைத்தான் போடுபோடு
நிரைத்ததொரு நேத்திரநோய்க் கெல்லாமாகும்
நேராகவின்ன மொருவழி யைக் கேளு
விரைத்த திரிகடுகுடனே வேளைவேரும்
வெருவெந்நீர் விட்டரைத்துக் கயறுகட்டி
கரைத்ததொரு வெந்நீரில் கலக்கிக் கொண்டு
கட்டாகப் பஞ்சியிலே துவைத்திடாயே. 1057

துவைத்ததொரு மருந்ததனை நாசிரண்டில்
சுறுக்காக நசியமிடு துன்பம்போகும்
வைத்ததொரு மூலிகையி லுசிதமொன்று
வாய்திறந்து சொல்லுகிறேன் மைந்தாகேளு
வைத்ததொரு வெள்ளை யாவரையின் வேரை
வாகாக சனிக்கிழமை காப்புகட்டி
வைத்ததொரு பராபரையைத் தியானஞ் செய்து
வாகாக அருக்கனாள் மூலம்வாங்கே. 1058

வாங்கியதோர் வேருடைய யிலைச்சார் கொண்டு
வளமாக யுரைத்தேதான் கண்ணில்தீட்ட
ஏங்கியதோர் பீளைபோம் நேத்திர ரோகம்
மெலிவாகி யிளைத்தோடு மீசன்வித்தை
தாங்கியதோர் சித்தர்களும் ரிஷிகள்தேவர்
சத்திமுதல் வயித்தியத்தைச் சாற்றினார்கள்
பாங்கியதோர் சூத்திரத்தைப் பார்க்கப் பார்க்கப்
பண்டிதத்தில் சிரோமணியாம் பாருபாரே. 1059

கெற்பக்கோள்

பாரப்பா பெண்களுக்குக் கெற்பக்கோளின்
பக்குவத்தைச் சொல்லுகிறேன் பண்பாய்கேளு
ஆரப்பா வாண்மலடே யாகுமாரு
மப்பனே பெண்மலடு யாருமில்லை
நேரப்பா த்வசிருந்து பிள்ளையில்லா
நேர்மையென்ன வாறுவகைச் சூலையுண்டு
வேரப்பா தேவதையா லேழாங் கர்மம்
விபரமுடன் சொல்லுகிறேன் வித்தையெல்லாம்
பேரப்பா வாசான்தான் வகையாய்ச் சொல்லப்
புலத்தியனே யுங்களுக்குப் புகலுகிறேன். 1060

புகலுகிறேன் முதல்தரந்தான் மலடியென்றால்
பெண்ணுக்குக் கருக்குழிதான் வழக்கமற்று
அகலுகிறேன் அகலாத பாசிபற்றி
யடைத்திருந்தால் விந்துவங்கே யணுகாதப்பா
நெகிழுகிறேன் மறுபடிதான் கருக்குழிவாய்வு
நிறைந்திருந்தால் விந்துவங்கே நேர்ந்திடா
தகலுகிறேன் பின்னுமந்தக் கருக்குழியில் மைந்தா
தசைவளர்ந்தால் விந்துவங்கே தான்செல்லாதே. 1061

செல்லாது நாலுவகை சொல்லக்கேளு
ஸ்திரீகளுக்குக் கருக்குழியில் கிருமி மொய்த்தால்
செல்லாது அஞ்சவா தப்பா நீகேள்
செறித்தங்கே சோரைநிறைத் திருந்தாலுந்தான்
செல்லாது ஆறாவதப்பா சொல்வோம்
திரண்டு தசை மதத்திருக்கில் விந்துதானுஞ்
செல்லாது விவையாறும் வியாதியாகும்
செப்பக்கேள் விரோத மேழாகுங் காணே. 1062

காணப்பா விதின்விபரம் விரித்துக் சொல்வோம்
கன்னியர்க்குப் புணர்வேளை தலைதா நொந்தால்
கோணப்பா கருக்குழயில் பாசிபற்றிக்
குறையாது நிறைந்திருக்கும் சாந்தி கேளு
பேணப்பா கோழியுட பித்துவாங்கி
புகழாகப் பருத்திவிரை பருப்புமாட்டி
தோணப்பா வவள்குளித்த அன்றுதொட்டு
சொல்லுகிறேன் மூன்றுநாள் நீதான் கேளே. 1063

கேளப்பா விம்மருந்தை யோனிக்குள் தேய்த்து
கெடியாகப் புருஷனையும் புணரச்சொல்லு
நாளப்பா மூன்றுதின மிப்படியே செய்யில்
நலமாகப் பாசமறும் பிள்ளையுண்டா
மாளப்பா புணர்வேளை யுடம்பு நொந்தா
லப்பனே வாய்வு நிறைந் திருக்குதென்று
வாளப்பா பெருங்காயம் நல்லெண்ணெய் ரெண்டும்
வார்த்தரைத்து யோனிக்குள் பூசச்சொல்லே. 1064

பூசியே மூன்றுதினம் புணர்ந்தானாகில்
பிள்ளையுண்டா மூன்றாவ தப்பாகேளு
கூசியே புணர்வேளை மாதுக்கங்கே
குத்துடனே நெஞ்சுவலி கூடிற்றானால்
தாசியே யோனியெல்லா மூடிக்கொண்டு
தசைவளர்ந் திருக்குதென்று திப்பிலிகற்பூரம்

வாசியே கோழியிட பித்துஞ் சேர்த்து
மாட்டியதை யோனிக்குள் தடவச்சொல்லே. 1065

தடவியே மூன்றுதினம் புணர்ந்தானாகில்
தப்பாது புத்திரனும் நாலாங்கட்சி
அடாவியே புணர்வேளை முதுகுநொந்தா
லப்பனே புழுநிறைந் திருக்குதென்று
விடவியே யிந்துப்பு மரிதாரங் காயம்
வெந்நீரில் மூன்றுபணந் தூக்கிமாட்டி
படவியே மூன்றுநாள் யோனிக்குள் பூசி
படுத்திடவே புத்திரருண்டு பாயம்தானே. 1066

தானென்ற அஞ்சவா தப்பாகேளு
தழுவையிலே கெண்டைக்கால் நொந்தாலப்பா
வானென்ற சோரையங்கே கருக்குழியைமூடி
மருக்கு தென்றறிந்து மைந்தா கேளு
பானென்ற கடுக்காயும் பஞ்சதாரை
பச்சையாய்ப் புழுகுடனே யாட்டிவாங்கி
மானன்று முழுகின மூன்றுநாளு
மங்கைக்கு முள்ளுக்குக் கொடுத்திடாயே. 1067

கொடுத்திடவே புத்திரருண்டால் குறைவோவில்லை
கூறக்கேளி ன்னமொரு மருந்துகூட்டு
நடத்திடவே குங்குமப்பு வதிமதுரந்தானும்
நற்சிரகத்துடனே மூன்றுங் கூட்டு
படுத்திடவே யோனிக்குள் தடவிநன்றாய்
பாயலின் மேல்புணரயிலே பிள்ளையுண்டாம்
எடுத்திடவே வாறாவ தப்பாகேளு
ஏப்பமிட்டால் புணர்வேளை மதத்துதென்னே. 1068

மதத்துமெத்த கொழுத்திருக்கு தென்றேயெண்ணி
வாகான சவுக்காரங் கடுக்காய்சாரந்
தநத்துமிவை சமபாக மரைத்துக் கொண்டு
தடவியே புணரப்பா மூன்று நாளும்
பிதற்றமத்துப் பிள்ளையுண்டா மேழாங்காட்சிப்
பேயாலும் பிதிராலும் பெருத்த கோளாஞ்
சுகத்துமினிச் சாந்தியொன்று சூட்சமாகச்
சொல்லுகிறேன் நன்றாகக் கேளுகேளே. 1069

கேளப்பா சூரையிலை மாதளை யினிலையுங்
கெடியான கஸ்தூரி மஞ்ச ளிவைநாலும்
நாளப்பா வரைத்து நன்றாய்ப் பாதமுதல் கழுத்தும்
நயமாக மேல் நோக்கித் தடவச்சொல்லி

வேளப்பா புருஷனைத்தான் திரும்ப நோக்கி
விபரமுடன் கீழ்நோக்கிப் பார்க்கச்சொல்லு
வாளப்பா மருந்தெல்லா மெடுத்துக் கொண்டு
மாவிலையிற் பொதித்ததனை வாங்கிக்கொள்ளே. 1070

வாங்கியதோர் மருந்ததனை யவன்முன்காட்டி
வாசலிலே பிதைப்பித்து மற்றுமந்த
பாங்கிதனைக் குளிப்பித்துக் பிடவைநல்கி
பண்பான அகிலுடனே சாம்பிராணி போட்டு
தேங்கியதோர் தேகமெல்லாம் புகைந்து நன்றாய்
தினமொன்றில் முன்றுதிரம் புதைத்த போதில்
ஏங்கியே தேவதையும் பூதப் பிரேத
மேவலொடு பிசாசுயிவை யெல்லாம் போமே. 1071

போகுமப்பா மருந்துவகை யோனிக்குள்ளே
பூசுகிற விபரமதை பூட்டக் கேளு
ஆகுமப்பா வகையொன்று பணவிடைதா னஞ்சு
ஆண்பிள்ளைக் காணாக்கால் பணவிடைதா னொன்று
ஏகுமப்பா வியாதிமுதல் விரோதமெல்லா
மென்மக்காள் சஞ்சலங்க ளில்லையில்லை
மாகுமப்பா மடியில்லை பிள்ளையுண்டாம்
பாடினேன் கெற்பத்தின் கோளைத்தானே. 1072

தானென்ற பத்தியத்தைச் சூத்திரத்தில் சொல்வோஞ்
சாதகமாய் சட்டியதோ ருப்புமாவாகும்
வானென்ற புளியரைச் சீக்காய் கொழுந்து
மைந்தனே புளியாரை நெல்லிக் காயுற்
தேனென்ற வெள்ளாடுமுச லாமையாகும்
திறமாக ஊர்க்குருவி காடை மானாம்
பானென்ற மரையாகும் சுறாமீனாகும்
பண்பான கெளுத்தியொடு மிளகுமாகுமே. 1073

ஆகுமப்பா சர்க்கரை தேன் சிறுகீரையாகு
மாவின்பால் நெய்யாகும் சிறுபயறுமாகும்
ஆகுமப்பா துவரையொடு பொன்னாங்காணி
யவரையொடு தூதுவளைச் சமூலமாகும்
ஆமப்பா தித்தித்த தெல்லாமாகு
மாகாகா புளியுப்பு கைப்புமாகு
ஆகுமப்பா பழவகை களெல்லாமாகும்
ஆத்தாளைப் பூசித்து மதுவுமாமே. 1074

மதுவாகுங் குளுத்த சலங்கிட்டாகாது
மைந்தனே கொதித்தண்ணீர் வெந்நீராகும்

சதுவாகும் வேதத்தைக் கண்டு சொன்னேன்
சத்தியமா மிந்நூலைச் சார்ந்து பாரு
அதுவாகு மிதுவாகு மென வெண்ணி யெண்ணி
அலைந் தலைந்து திரியாமலருளை நோக்கிப்
பொதுவாகு நினைவு கொண்டிருப்பாராகில்
புத்திசித்தி முத்தி முதல் புனிதமாமே. 1075

சுரம் வருநாள்

ஆமப்பா சுரதோஷத் தான்மையெல்லா
மறைத்திட்டேன் முன்னே தானடக்கமாக
தூமப்பா நட்சத்திர மவத்தை நேரு
முற்ற நாள் நீகேளு மச்சகேந்திரா
வேமப்பா அசுவதினாள் வந்த சுரந்தானும்
விட்டுப்போ மெட்டாநாள் பரணியானால்
போமப்பா வந்த சுரங் கொல்லாதாகில்
பொறுக்குமடா கியானமதிலே கார்த்திகை நாள் கேளே. 1076

கேளப்பா கார்த்திகைக்கு வந்த சுரந்தானுங்
கெடியான வெட்டாநாள் விடாதேபோனால்
நாளப்பா மூவேழு தினத்தில் கொல்லும்
நயமான ரோகணிநாள் சுரத்தைச் சொல்வோம்
நீளப்பா யெட்டா னாளிருபத் தெட்டில்
நின்றுபோ மிருகசீரிஷ சுரத்தைச் சொல்லுவோம்
ஆளப்பா பத்தாநாள் விட்டு வாங்கு
மாச்சரியமா திரைநாள் சுரத்தைச் சொல்லே. 1077

சொல்லடா வஞ்சாநாள் கொல்லுங் கொல்லுந்
துஞ்சாரேல் திங்களொரு ஏழுஏழு
சொல்லடா புணர்வசுநான் வந்தரூட்சைத்
தீர்ந்துபோம் பதினாறா னாளில் தானும்
யல்லடா பூசநாள் வந்தரூட்சை
போகுமே நாளிரண்டில் போகாதாகில்
வெள்ளடா வெட்டானால் விட்டுப்போகும்
வீரான ஆயிலிய சுரந்தான் பாரே. 1078

பாரப்பா வேழா நாளு யிரையுண்ணும்
பாடுகிறேன் மகத்து நாள் சுரத்தையுந்தா
நேரப்பா பத்தாநாள் நிவர்த்தியாகும்
நீங்காதே பதின்மூன்றில் நின்றுபோகும்
சிரப்பா பூரநாள் வந்தரூட்சை
தீர்ந்து போம் பந்தாநாள் பதினோர் நாளில்

வேரப்பா உத்திரநாள் வந்தரூட்சை
வென்று கொல்லும் பதினோரா நாளில் தானே. 1079

தானென்ற பதினொன்றில் கொல்லாதாகில்
சாதகமாய் மூன்றுதிங்கள் செல்லுஞ் செல்லும்
தானென்ற அந்தநாள் தோன்று ரூட்சை
சாந்தமா மெட்டாநாள் பத்தா நாளில்
தானென்ற சித்திரை நாள் வந்தரூட்சை
சாந்தமா மூன்றா நாள் தானே கொல்லும்
தானென்ற சோதிநாள் கொடுத்த ரூட்சை
சண்ணுமடா வல்லவென்றால் விடடுப்போமே. 1080

போகுமப்பா விசாகநாள் விந்தரூட்சை
பொன்றுவிக்கு மெட்டாநாள் பொன்றாராகில்
வேகுமப்பா திங்களொன்றில் மடித்து போவார்
மேலான வனுஷநாள் சுரத்தைக் கேளு
தாகுமப்பா அஞ்சாநாள் சாவாராவார்
சாத்துகிறேன் கேட்டை நாள் சுரத்தை மைந்தா
ஓமப்பா வொன்பதிலே யுயிரையுண்ணு
முத்தமனே மூலநாள் சுரத்தைக் காணே. 1081

காணப்பா நவதினத்தில் விடாதே போனால்
கண்டுகொள்ளும் பதினோராநாளில் தீரும்
பூணப்பா பூராடநாளில் ரூட்சை
பொருத்துப்போம் நாளெட்டில் மாசமொன்றில்
பேணப்பா உத்திராட நாளில் ரூட்சையே
பேதகமாம் பன்னிரண்டு தினந்தான் செல்லில்
வீணப்பா விடாதாகில் மாசமேழில்
விட்டுப்போம் விட்டநாள் சுரத்தைக்கேளே. 1082

கேளப்பா நாளெட்டில் விட்டு வாங்கும்
கெட்டியாய் விட்டில்லை யிறக்குமானால்
தாளப்பா சதையனாள் சுரந்தான் தோன்றிற்
சநிபிடிக்கும் பந்தாநாள் தவிர்ந்தாற் சாவாங்
கேளப்பா பூரட்டாதி சுரத்தை கேளு
செப்புகிறே நாளாறில் கொல்லுங் கொல்லும்
நாளப்பா உத்திரட்டாதி தோன்று ரூட்சை
நாளெட்டிலுயிர் பரித்து நண்ணுந் தானே. 1083

வார பலா பலன்

தானென்ற எட்டாநாள் கொல்லாதாகில்
சாதகமாய்ப் பத்தாநாள் சாந்தமாகும்

மானென்ற ரேவதி நாள் வந்த ரூட்சை
மாள்விக்கு மெட்டாநாள் மாளாதாகில்
தேனென்ற பத்தா நாள் தெளிந்து போகும்
செப்புகிறேன் சுரரூட்சை சேதியின்னம்
ஊனென்ற ஆதிரை நாள் சோமவார
முத்தமனே சுரந்தோன்றி லுயிர்போம்பாரே. 1084

பாரப்பா திருவோண மருகன் வாரம்
பகை நாளில் சுரம் வருகில் மரண மாகுந்
தீரப்பா சனிவாரங் கார்த்திகை நாள் ரூட்சை
சிறந்தாக்கால் கொன்று விடுந் திண்ணமாக
வேரப்பா விசாக நாள் வெள்ளி வாரம்
விடாது சுரமுயிர் பறிக்குந் திண்ணந் திண்ணம்
நேரப்பா ரேவதி நாள் புதன் வாரத்தில்
நேர்ந்த சுரங் கொன்று விடும் நிசமாய்க் காணே. 1085

காணப்பா செவ்வாயுஞ் சித்திரை நாள் சேரில்
கடினமப்பா மறலியூர் காண்பாரையா
பூணப்பா திரியவத்தைக் குணத்தைச் சொல்வேன்
புகழாக வாதசுரங் கருத்துக் காணும்
ஊணப்பா சரசுரத்து மிடிருமுண்ணா
முத்தமனே நாவறண்டு உடம்பு துள்ளி
வீணப்பா வுள்ளங்கால் செவி மார்புச்சி
வெதும்பாமல் குளுந்திருந்தா லவத்தை யஞ்சே. 1086

அஞ்சா நாள் மரணமாம் பித்தசுர அவத்தை
யரைகிறேன் புலத்தயனே மச்சகேந்திரா
பிஞ்சாமல் வாய்வாதல் மலசலங்கட்டிப்
பிணியிருக்கு முகம் பார்த்தால் பிசாசு போலாம்
பஞ்சான வுடல் வெளுத்துத் தலையுரித்தி
பார்ப்பகமாய்த் தான் பார்த்து மேலே நோக்கி
துஞ்சாத வேருவைதான் முகத்திற் காணில்
துஞ்சுவா ராறா நாள் சுருக்காய்த் தானே. 1087

சுருக்காகச் சிலேற்பனத்தி னவத்தை தன்னைச்
சொல்லுகிறேன் ரோசித்துச் செறித்திடாமல்
குருக்காகு முணர்வற்று ஊக்கமற்று
கூறுகிறே னுதரத்தில் மலசலங்கட்டி.
பருக்கா காகுந் தாகமொடு சோகந்தானும்
பற்றியே பஞ்சடைந்து பார்வை குன்றி
இருக்காக வேழரை நாள் தன்னில் வாழ்வா
றியம்புவேன் திரி நாடி தொந்தந் தானே. 1088

திரிநாடி தொந்தம்

தொந்தமென்ற வாதந்தான் பித்தத்தேறி
சுற்றாயே கீழ்நோக்கி வாங்குமாகில்
தொந்தமென்ற பித்தமது பித்தத் தேறி
சுருக்காக மேல்நோக்கி வாங்குமாகில்
தொந்தமென்ற உயிர்மீளும் வாதபித்தம்
சுழன்று தான் சிலேற்பனத்திற் றோன்று மாகில்
தொந்தமென்ற மருந்தேது தடுப்பாரின்று
துஞ்சுவார் பட்சத்தில் துஞ்சுவாரே. 1089

வேறு

வாரப்பா இவைகளெல்லாம் வகைவகை விபரஞ்சொன்னேன்
ஊரப்பா நோய்களெல்லா முறைத்திடனுறுதி யாகப்
பாரப்பா விந்த நூலைப் பண்டிதம் வேண்டித் தானால்
சேரப்பா விரிந்து நன்றாய்ச் சேர்த்திடில் சித்தமாமே. 1090

வேறு

ஆகுமடா நோய்வருங்கா ரணந் தானப்பா
னறிவுள்ளோர் தனைப் பழித்து அகந்தைகூறி
மாகுமடா சாத்திரங்கள் தன்னைப்பாரார்
பரிவாகத் தர்மத்தைச் சிந்தியார்கள்
போகுமடா கோத்திரங்கள் தன்னைக்காரார்
புத்திய சற்குருவினுக்கு இன்பஞ்செய்யார்
வாகுமடா பாத்திரங்கள் அறிந்து நன்றாய்
மைந்தனே யீயாத மட்டைதானே. 1091

தானென்ற பாவிகள்தான் மெத்தவுண்டு
சத்தியமுஞ் சாத்தியமு மெத்தவுண்டு
பானென்ற ஆயிபதம் பூசைசெய்வார்
பழிப்பார்கள் நிந்தைசெய்வார் பெரியோர்தன்னை
ஊனென்ற சையோகங் கொலைகள் செய்வா
ருற்றதொரு சித்திரைதான் பொய்யே யென்பார்
கோனென்ற வாதவித்தை பொய்யேயென்பார்
குருவரியார் மிலேச்சர்கள்தான் கொன்றார்காணே. 1092

கொஞ்சமென்ன குருநிந்தை யுறவுநிந்தை
குருக்கொடுக்கு முன்னேதான் குறுக்கே வாங்கல்
வஞ்சமுற்ற பொய்பேசி புரட்டுப் பேசி
வயிறுதனைப் பிழைப்பதற்குப் பெண்டீர்பிள்ளை

பஞ்சமற வுண்டுடுத்திச் சாட்சிசொல்லிப்
பலிகொடுப்பார் தனைத்தடுத்துப் பட்சபாதம்
தஞ்சமென்று அடைந்தாரைத் தற்காக்காமல்
தள்ளுவார் கெதிகெட்ட சண்டிமாடே. 1093

மாடுதானென்று சொன்னால் சகிக்கமாட்டான்
வார்த்தையிலே பசப்பியவர் மயக்கங்கொள்வார்
காடுகள்தான் தேடியே நடந்துமாய்வார்
கழுதைகள் தான் சிலருண்டு காணும்பின்பு
ஆடுவார் பாடுவார் விரதமென்பா
ரங்கங்கே வகைமாறி யசதி செய்வார்
ஓடுதான் கரகத் தேந்தி தேகியென்பா
ருண்மைதனை யறிந்தவர் போலுரை சொல்வானே. 1094

சொல்லுவேன் கற்பனைக ளனேகமாகச்
சூத்திரந் தானிவர்க்கெல்லாம் நோயேயாகும்
வெல்லுவான் கூற்றனிட தூரிதன்னை
வெல்லாமல் போனார்கள் பாசத்தோர்கள்
கொல்லுவா னுயிர்களைத் தான் கூறுகொண்டு
கோடான கோடிசென்ம நரகில்வீழ
அல்லுவா னாய்போலே கடிப்பான் மட்டை
யம்பரத்தைக் காணாத அழிவினோரே. 1095

அழிவின்றி நோயன்றிப் பாவமன்றி
யாசானை நிழல்போலே யடுத்துக்காத்து
கழிவின்றி நாற்கலையுங் காத்தடக்கிக்
கால்கள் ரண்டும் நடுநிறுத்திக் கலையொன்றாக
வெளிவன்றி தத்துவத்தை வெளியாய்க்கண்டு
வென்றுகொண்டு திரோபவத்தின் வீறுங்கண்டு
பழிவென்றிப் பராபரத்தைப் பார்க்கப்பார்க்க
பலித்திடுங்காண் ஞானவித்தை பலிக்குங் காணே. 1096

காணப்பா முந்திமுந்தி வாலை பூசை
கனிவித்துத் தசதீட்சை கருவுங்கண்டு
பூணப்பா சிதம்பரமும் பூசைசெய்து
பொலிவான நிருவாணி போற்றிநின்று
ஊணப்பா பஞ்சத்தி யட்டசத்தி
யுத்தமியாள் தீட்சைவிதிக் குள்ளேசொக்கி
வீணப்பா வாணவத்தை விகற்பஞ் செய்து
வென்றவனே யத்துவித யோகிதானே. 1097

ஞானோபதேசம்

தானென்ற வத்துவித விபரங்கேளு
　　சாதகமாய்ச் சொல்லுகிறேன் சாரமாகப்
பானென்ற பாசம்விட்டு நின்றாயானால்
　　பலிக்குந்தான் ஞானநெறி பண்பாய்ப் பின்னும்
தேனென்ற பதியில்நிற்க யோகமாகுஞ்
　　சிந்தையற்று நிற்கிறதே நிருவிகற்பம்
ஊனென்ற வறிவறிதல் நிகாரமாகு
　　முத்தமனே நாசமற்றால் நிர்க்குணந்தான் பாரே. 1098

பாரப்பா விவ்வண்ண மறிந்தாயானால்
　　பலிக்குமப்பா ஞானநெறி பண்பாய்ப் பின்னும்
பாரப்பா எந்நூலை பார்த்தால் நோய்கள்
　　பாழாகும் நல்வினை தீவினைகள் ரண்டும்
ஆரப்பா காசமற்ற சுண்ணைப் போலே
　　யறியலா மாத்துமா வென்றதாகு
நேரப்பா விவையறிந்தா லாசானாகு
　　நெறியில்லான் குருவல்ல நிர்மூடனாகும்
பேரப்பா வுலகத்தி லாசானென்று
　　பேரிட்டுப் பிழைப்பதற்குப் பொய்சொல்வானே. 1099

சொன்னாக்கால் வருமோடா சித்திமுத்தி
　　துன்மார்க்க ரொருகோடி சுடுவார்வாதஞ்
சொன்னாக்கால் வருமோடா குருக்கைகாட்ட
　　கறுக்காகப் பலித்திடுங் காண் வித்தையெல்லாம்
சொன்னாக்கால் வருமோடா சண்டாளர்க்குத்
　　துறையேது நிறையேது சுகந்தானேது
சொன்னாக்கால் வருமடா சூட்சமெல்லாந்
　　தொடர்ந்துன்னை விட்டகுறை தூக்குங்காணே. 1100

தூக்குவது ஆரையென்றா லறிவுள்ளோரைச்
　　சோர்வன்றிச் சத்தியமாய் சொக்கினோரை
தூக்குவது ஆரையென்றால் பராபரத்திற் பற்றி
　　சூட்டிநின்ற நல்லோரைத் தூக்குந்தூக்குந்
தூக்குவது ஆரையென்றால் பொய்சொல்லாத
　　சுருதிகளை சடத்தோடே தூக்குங்காணே. 1101

காணப்பா குருவான பெரியோர் தன்னைக்
　　கைகுவித்து தெண்டனிட்டுக் கருத்தொன்றாகி
பூணப்பா கோபமென்ற முனையைத் தள்ளிப்
　　புகழான பெரியோர் கட் குதவிசெய்து
வீணப்பா பெண்டாசை பிள்ளையாசை
　　விளைந்தாலும் தவறாமல் மேலேநோக்கி

தோணப்பா தோணுமட்டு மிருந்தோராகிற்
சொல்லேது பொருளேது பூரியாமே. 1102

வேறு – பூரிகா தயிலம்

பூரிகா தயிலந் தன்னை புலத்தியா புகலக்கேளு
வீரிய ஆயில்பட்டை விளம்பினோம் பலந்தானூறு
காரியங்கண்டங்கத்திரி கறிமுள்ளி நொச்சியோடு
சீரியவமுக்குறாவுஞ் சித்திர மூலங்கூட்டே. 1103

கூட்டுபர்திரி நன்னாரி கூவிளஞ் சிந்துதூதி
நாட்டுசாரணை யிலாமிச்சு நல்லசிற்றாமணக்கு
பூட்டுமுப்புரமெரித்தான் புகல்வேம்பு மெரிக்கினோடு
நீட்டு சிற்றாமுட்டி வேர் நிலக்குமிழ் முடக்கொற்றானோடு. 1104

மானென்ற சிறுகாஞ்சோரி சத்திசாரணை காற்றோட்டி
மானென்ற மல்லிரண்டு மலைதாங்கி யிலுப்பைப் பூவும்
கானென்ற பேராமுட்டிக் காகில மலாக்காய்கெந்தம்
வேனென்ற வாதந்தன்னை மடக்கிவேர் நறுக்குமூலம். 1105

மூலம்வேர்க் கொம்பு செவ்விய மூலஞ் செங்கழுநீர் கூட்டு
சாலவே வகைகள் வேருந் தனிவகை பலந்தான் பத்து
தூலமாய் நொறுக்கிப் பாண்டத் தூட்டறு தூணிநீரில்
காலமே யனலு மூட்டிக் கியாழமு மெட்டொன்றாக்கே. 1106

ஆக்கியே கியாழந் தன்னை யடைவுடன் வடிதான் கட்ட
நீக்கிலாச் சிற்றரத்தை நாற்பது பலம் நிறுத்துத்
தாக்கடா நொறுக்கித் தூணி நீர்தனில் கியாழத்தாட்டி
போக்குட னெட்டொன்றாக வடித்துப்பின் புகட்டக்கேளே. 1107

கேளப்பா வாய்நெல்லோடு கேடிலா துளுந்துகாணுங்
கேளப்பா வகைக்கு எட்டுபடி தூணிநீரிட்டு
கேளப்பா வெந்தண்ணீர் கிருபையாய்க் குருணிசேர்த்து
கேளப்பா விவைகளெல்லாங் கெட்டியாய்க் குறுக்கிடாயே. 1108

குறுக்கிய கியாழ மூன்றுங் கூறுடன் தாழி சேர்த்து
அறிக்கையால் காப்பு கட்டி யாடகத் தயிலம்விட்டு
மறுக்கிலா வெள்ளாட்டுப்பால் வாகுடன் தூணிசேர்த்து
பெருக்கவே யனலை மூட்டிப் பின்பு கற்பங்கள் சேரே. 1109

வேறு

சேரடா செவ்வியமுடன் திப்பிலி சிற்றரத்தை
செஞ்சாந்த மகில் கெந்தி திப்பிலியின் மூலம்
சேரடா குறுந்தொட்டி வேர்த்தோல் நன்னாரி
தெசாபுரம் தேவதாரமொடு குக்கில்

சேரடா மலைதாங்கிவேர் புழுக்கை வேருஞ்
சிறந்த சுக்கிலாமிச்சு சடாமஞ்சி மதுரம்
சேரடா நல்லகெந்தி லவங்கப்பட்டை
சீரான மஞ்சிட்டி நிலாவகை வேரே. 1110

வேரடா தோடைவேர் வங்காளப்பச்சை
மிளகுடன் கஸ்தூரி மஞ்சட விகச்சோலம்
பாரடா வகைக்குமொரு பலந்தூளாக்கிப்
பண்புறவே வெள்ளாட்டுப் பாலிலாட்டி
சீராட கறுத்தாட்டுப் பாலிலே கலக்கிச்
சிறப்புடனே தாழிக்கு காப்பதனை புனைந்து
வாரடா யெண்ணெயொடு கியாழ கற்கமெல்லாம்
வளமாக விட்டதிற்பின் விநாயகனைப் பணியே. 1111

பணிந் தடுப்பில் தீட்டித் தாழிதனை யேற்றிப்
பதறாமல் சிறுகொதியு மூன்றுதினம் வைத்து
துணிந்தந்த நாலாநாள் பதத்திலே வடிக்கச்
சொல்லக்கேள் குங்குமங் கஸ்தூரி கற்பூர
மணிந்த வகைமூன்றுக்கும் வகைநாலு கழஞ்சு
மப்பனே பொடித்திட்டுத் தயிலமதை வடிப்பாய்
தணிததந்தத் தயிலமோர் கலசத்திட்டுத்
தானியப் புடம்பத்துநாள் தங்கினபின் பாரே. 1112

பார்புகழுந் தயிலத்தை நாலுநாட் கொருக்கால்
பண்புடனே தலைக்கிட்டு மேலுமதைப் பூசி
ஆரவே செவிநாசி தயிலத்தை நிறுத்தி
யப்பனே சிகைக்கா யரைப்பிடு வெந்நீராஞ்
சீர்பெறவே வெந்நீர்க்கு வேப்பிரை கொம்பரக்கு
செங்கத் தாரிப்பட்டை சொம்புக் காறிழக்கு
வாரமுடன் கிழிகட்டி வெந்நீர் போட்டு
மறுகியபின் னெடுத்தாற்றி முழுகிவர வளமே. 1113

வளமான நோய்போவ தேதென்றாற் சொல்வேன்
வாதமென்ற வெண்பதுவு மருண்டேயோடும்
சளமான தோஷங்கள் சன்னிவாதம்
தசைவாத முகவாதம் சன்னிவிஷவாத
முளவுநரித் தலைவாத மண்டைவாத
முள்ளடங்கி நின்றதொரு அத்திவாதம்
பழகுபக்க வாதமொடு வற்புதமாம் வாத
பலகோடி குமரகண்டன் முகவலிப்பு பறக்கும். 1114

பறக்குமடா தோஷகுணம் சன்னி பதின்மூன்றும்
பணைத்த தெல்லா மொழிதற்குப் பாகங்கேளு

திறக்கவொரு காசிடைதான் தயிலந்தன்னைத்
திமிரிட்டு முறுக்குகையால் தேய்ப்பாயாகில்
இறக்கிவிடுஞ் சன்னிமுத லெல்லாமப்பா
விதன்பெருமை யிவ்வளவென்றெ ண்ணவேண்டா
மறக்கொடு கையகற்றிவிடும் பத்தியங்கள் வேணு
மசுவகெந்தி பலாச்சுத மாந்தயிலங் கேளே. 1115

அசுவகெந்தி தயிலம்

கேளடா வழுக்கிறாவேர் பலமும்பத்து
கிளா சிற்றாமுட்டி பேராமுட்டி வேரும்
வாளடா நிலப்பனைவேர் நீர்வள்ளிக் கிழங்கு
மைந்தனே நன்னாரி பொன்னாங்காணி
கோளடா விலாமிச்சு முத்தக்காசி
கூறினோம் வகையொன்று பலந்தான்மூன்று
சூளடா நொறுக்கியவைத் தூளாயாட்டி
தூணிரண்டு பாண்டத்திற் கியாழம் போட்டே. 1116

போட்டபின் யெட்டொன்றாய்க் குறுக்கியப்பால்
புகலுறோம் வகை கேளு புலத்தியாநீ
நாட்டமுட னகில்கெந்தம் புழுக்கை வேரும்
நல்லகெந்தங் கொம்பரக்கு வகைக்கிரண்டு பலந்தான்
ஆட்டடா தூளாக்கி ஜலம்பதக்கு விட்டு
அக்கினியை மூட்டியதை யெட்டொன்றாய்க் குறுக்கி
நீட்டடா இன்னம்வகை கியாழத்திற்கு
நிகழ்த்துகிறோ மிலுப்பைப்பூ குளப்பாலை வேரே. 1117

வேர்நாணல் மால்கிழங்கு தாமரையின் வளையம்
வெருகங்குடனே பெருங்கோரைக் கிழங்கு
வேர்பூமி சர்க்கரையின் கிழங்க கல்லாலப்பா
வெட்டிவேர் சீந்தியுடன் செங்கழுநீர் கிழங்கு
ஓர்வகை பலமிரண்டு நொறுக்கியே கியாழம்
தூணிநீர் தாழியெட் டொன்றாய் குறுக்கே. 1118

குறுக்கியினி மூன்றுவகைக் கியாழம் வடிகட்டிக்
கூட்டடா தாழிஒன்றில் காப்பணிந்து சேர்த்து
முறுக்கடா சாறுவகை மொசுமொசுக்கை கொடுப்பை
முடக்கொத்தான் காத்தொட்டி கரிப்பான் சாறு
இறுக்கியிட கற்றாழை கீழ்க்காய் நெல்லி
இயல்பான நீர்வள்ளி நெல்லிக்காய் சாறும்
தறுக்கடா கூற்றனிட குதம்பைச் சாறும்
வகைக்குமொருபடிதான் கூடச்சேரே. 1119

சேரடா தயிர்தண்ணீர் படியுமொன்று
திறமான வாவின்பால் படியவ்வண்ணம்
சேரடா நல்லெண்ணெய் படிதான் ரண்டு
செப்புறேன் கற்கவகை திரிகடுகு மதுரம்
சேரடா திரிபலையுங் கிராம்பு சிறுநாகஞ்
சிற்றரத்தைச் சீரகமு முத்தக்காசுஞ்
சேரடா கடல்நுரையுங் கச்சோலந்தானும்
செவ்வெள்ளிக் கொடி தேவதாரம் வெட்டிவேரே. 1120

வெட்டிவே ரிலாமிச்சு அமுக்கிறா நன்னாரி
வெட்பாலை யரிசியொடு கோஷ்ட மிலவங்கம்
பட்டையொடு பத்திரியு மடவி கச்சோலம்
பச்சையொடு மரமஞ்சள் கடுகுரோகணியும்
தட்டில்லாக் குறுந்தொட்டி வேர்மஞ்சிட்டி
தகரமொடு சடாமாஞ்சில் செண்பக நாற்கெந்த
முட்டிலா தருளேல மிந்தவகை கூட
முதலகில் செஞ் சந்தமொடு செங்கழுநீர் வாரே. 1121

வேர்முதலாய் வகையொன்று கழஞ்சிரண்டு
வெய்யலிலே காயவைத்துத் தூளாயாட்டிச்
சீர்பெறவே யாவின்பா லரைத்துச் சேர்த்துச்
சிறப்புடனே தாழிக்குள் கலந்துபின்னும்
சாரமுட னடுப்பேற்றித் தீயைமூட்டிச்
சாமமொன்று எரித்திடுவாய் மூன்றுநாளும்
வாரமுட நாலாநாள் வற்றக் காய்ச்சி
வடிக்கும் போதப்பனே வகையைக் கேளே. 1122

வகைகேளு குங்குமங் கஸ்தூரி கற்பூரம்
வாகான புழுகு சட்டங்கோ ரோசனை யினோடு
திகையாமல் வகையொன்று கழஞ்சி யொன்று
திறக்கவே பொடித்திட்டு தயலத்தை வடித்துப்
பகையாமல் கணேசனையும் பூசைசெய்து
பத்துநாள் தானியபுடம் புதைத்து வைத்து
நகையாத படிநாலு நாட்கொருக்கால் முழுக
நலஞ் சிறந்த சிகைக்கா யரைப்பு வெந்நீர் நலமே. 1123

நலம்பிறக்கு மிப்படியே முழுகினாக்கால்
நாடாது பிணியனைத்து நடுங்கி யோடும்
பலன்பிறக்கப் பத்தியத்தைச் சொல்லக் கேளு
பால் தயிர் மோர் புளி கைப்புப் பச்சை மாங்கிசங்கள்
அலம்பல் செய்யும் புகையிலையு மந்தமுள தகற்று
அகன்றுவிடு மறுநாளி லானதெல்லா மருந்து

புலம்படவே போம் நோய்க ளேதே தென்றால்
புலத்தியனே யத்திசுர வெட்டை போமே. 1124

போமப்பா மூன்றுவகை பனைப்பொடு
தொந்திப்பும் பிண்டெழுந்த சுரதோஷவாய்வு நீரிரத்தம்
போமப்பா வறட்சியொடு விருமல் தாகம்
பித்த வர்த்தனை யோடு தலைநோய் பீனிசமும்
போமப்பா வுடல் காந்தல் பீனிசங்கள் கபங்கள்
பொல்லாத விஷபாகம் போம் விக்கலடங்கிப்
போமப்பா தாமரையின் மணிப் பருப்பு மஞ்சு
புகழ் குளவி கூட்டு மண்ணுமந்த விடைதானே. 1125

இடைசமனாய் வெந்நீரி லாட்டியே கலக்கி
யென்மகனே விக்கலுக்குக் கொடுக்க நிற்கும்
விடைய வின்னங் கற்கட சிங்கி சடாமாஞ்சி
மேன்மைபெற சிறுதேக்கு திரிகடுகு கூட்டு
அடையடையா அவித்திருக்கும் பூசினியின் பருப்பை
யளவு சமனாகவே தூளாட்டிப் பின்பு
தடையரவே சர்க்கரையி லருந்தத் தீரும்
தாக்குதற்குக் குடிநீரைச் சாற்றக் கேளே. 1126

சாற்றக்கேள் சிறுநாகஞ் சித்தரமூலம்
சண்பகமும் வளையலுப்புச் சுக்குங்கூட்டி
வேற்றுமையில் லாதுசம னாகவேநறுக்கி
விடிரண்டு படிசலமு மெட்டொன்றாய்க் குறுக்கி
நாற்றிசையுங் கீர்த்திபெற வந்தி சந்தி யருந்த
நாள் மூன்றில் விக்கல் நிற்கும் நன்றாய்க் கேளு
நேர்த்தியொடு கியாழங்கொள் கார்த்திகை நிலையும்
நீதிசிறு வழுதலைவேர் சிற்றரத்தை நீட்டே. 1127

நீட்டடா கொடுவேலி வேர்சமனாய் நொறுக்கி
நீரிரண்டு படிவிட்டு எட்டொன்றாய்க் குறுக்கி
நாட்டடா வந்திசந்தி மூன்றுநா ளருந்த
நலமாகும் விக்கலுக்குத் தூபங்கேளு
கூட்டடா தோடாயிலை குங்கிலியம் சிலையும்
கொம்பரக்கு மயிலிறகு மகிலாவி னெய்யும்
பூட்டடா சமன்கூட்டிப் பொடிச்சையுந் தூபம்
புகைத்திடவே விக்கல் நிற்கும் பின்புகேளே. 1128

பின்புகேள் விக்கலுக்குத் திரிபுகை யையப்பா
புகலுகிறோம் கொம்பரக்கு மஞ்சள் சடாமாஞ்சு
மன்பு மனோசிலை தேவதார மகில்சட்டை
வமுக்கிறா வேர் சமனா மணக்கிலைபின் சாற்றி

லின்ப முடனே யரைத்துத் துணியிற் சேர்த்து
இயலாகத் திரிபிடித் துலர்த்திக் கொண்டு
முன்பு திரிபுகை யேற்ற விக்கல் தீரும்
முரணவந்தத் தளம்போட வகையைக் கேளே. 1129

வகைகேளு மேரண்ட மவிச் சூத்து தயில
மங்கையர்கள் முலைப்பாலு மாவினெய்யுங் கலந்து
பகையாமல் சாரித்துத் தலைமயிரின் கரியும்
பருந்தோகை மயிலிற்கும் சுட்ட கரிகூட்ட
நகையாம லேகிச்சு நாடிமுதல் நாடி
நற்சீலைப் பாளத்தில் தளம்போடு நன்றாய்
திகையாதே விக்கல் விழுந்தோடுங் கண்டாய்
சீர்கண்டு இவ்வண்ணஞ் சிறப்புச் செய்யே. 1130

ஏரண்டச் சலவை யெண்ணெய்

சிறந்துசெய்யு மேரண்டச் சலவை யெண்ணெய்
செப்புகிறேன் சூட்டுக்குச் சல சூத்திரமாகத்
துறந்து சொல்லா றவித்தூற்று மேரண்டத் தெண்ணெய்
சோர்வன்றிப் படியொன்று ஆவின்பால் நாழி
மறந்திடா முலைப்பாலு முழுக்கக் கூட்டி
மைந்தனே யிளநீரும் புகழ்பழச்சாறும்
குறைந்திடா திருநாழி துளசி நெல்லி
கொடுப்பை யொடு மொசுமொசுக்கை சீந்திச்சாறே. 1131

சாறு முடக்கொத்தான் கற்றாழஞ் சாறும்
சதாவேரி கரிசாலை கர்ப்பூரவள்ளி
மாறுபடா சிறுகீரை கருப்பஞ் சாறு
வகையொன்றுக் கரைபடிதான் வளமாய் சேர்த்து
வேறுமினிக் கற்கவகை நிலப்பனை நன்னாரி
வெட்டிவேரிலாமிச்சு முத்தக் காசு
கூறரிய வமுக்கிறா வல்லி கொட்டி நெய்தல்
கோட்டமொடு திரிகடுகு திரிபலையுங் கூட்டே. 1132

கூட்டு தாமரை வளையஞ் சிற்றரத்தை யேலம்
கொடிமதுர மிலவுங்கம் பட்டைபத்தி
நாட்டு மிருசீரகமு முந்திரி பேரீத்து
நற்கெந்தஞ் சாதிக்காய்த் திரிகிராம்பு
தீட்டு வெந்தயஞ் சீனி கற்கண்டு மாசிக்காய்த்
திறக்கவகைக் கொருகழஞ்சி துளாயாட்டி
பூட்டு புகழிள நீர்த்தண்ணீர் விட்டரைத்துப்
புகழ்ச்சாறு பால்கற்க யெண்ணையுடன் கலக்கே. 1133

எண்ணெயுடன் புகட்டியோர் தாழிசேர்த்து
யியல்பாகக் காப்பணிந்து சிறுகொதிவுமிட்டுப்
பெண்ணையிடப் பாகம் வைத்தோர்தனைத் தியானித்துப்
பூசித்து மூன்றுநாள் பதத்தில் வடிகட்டி
நிண்ணய மாயொரு கலசத் திட்டுப் பின்பு
நீர்க்குறுணி தாழியொன்றில் விட்டதிலே வைத்துப்
புண்ணியந்தாள் செய்வதர்க்கு நேர்ப்புடன் மண்டலந்தான்
பேறுபட ளைத்துபின்பு பூட்டக்கேளே. 1134

பூட்டக்கே ளந்திசந்தி யொருகரண்டி
புகட்டுவாய் பலநாளிற் புனிதமாகும்
நீட்டக்கேள் மேகவெட்டை யத்திச்சூடு
நேரான கண்பிரளி வரட்சிதாகம்
கூட்டான சோபீதத வர்த்தனை யோடிவையும்
கூறாக வரண்ட வுடல் பூரித்துப் பருக்கு
மாட்டான சலவை யெண்ணை செய்யு மாண்மை
யப்பனே சொல்லி விட்டோ மிச்சா பத்தியமே. 1135

சுரக்கியாழம்

பத்தியமாஞ் சுரங்களுக்குக் கியாழங்கேளு
பண்புசெறி காஞ்சொறிவேர் முத்தக்காசு
வெற்றிசிறு வழுதலைவேர் சீந்தி பற்படாகம்
வேர்க்கொம்பு பேய்ப்புடலும் வெவ்வேறாகச்
சித்திபெற வகையொன்று கழஞ்சுமூன்று
திறமாக விடித்தவது முக்கூறிட்டு
எத்திசையும் புகழிரண்டு படிசல மெட்டொன்றா
யிறக்கித் தேன் கழஞ்சி யிட்டருந்த வியல்பே. 1136

இயல்பான பலசுரங்க ளெல்லாம் போகு
மின்னவகைச் சுரங்களுக்கு மியம்பக் கேளு
இயல்பான நன்னாரி முத்தக் காசு
விலாமிச்சுத் திரிகடுகு கொத்தமல்லி
இயல்பான செந்தொட்டி வேர் பற்படாக
மென்மகனே புடோல் வகைக்கு மிருகழஞ்சி யிடித்து
வியல்பாக மூன்று கூறிட்டதற்குச் சலந்தா
னிருநாழி யிருவகையு மெட்டொன்றாய் குறுக்கே. 1137

குறுக்கியது வந்திசந்தி தேன்கலந்து
பின்னும் கூறரிய திப்பிலியும் வெதுப்பித் தூளிட்டு
விறுக்கியே மூன்றுநா ளருந்துசுர மெல்லாம்
விடுபட்டே யோடிவிடு மின்னம் வகைகேளு
மறுக்கியே வருருட்சை கியாழமப்பா
வளர்சீந்தி தோடையிலை வேருங்கூட்டி

தறுக்கியே முத்தக்காசு தூது கண்டங்காரி
யஞ்சீவி செவ்வியமுந் திரிகடுகு கூட்டே. 1138

கூட்டு பேராமுட்டிப் பற்படாகம்
கொத்தமல்லி பேய்ப்புடல் திப்பிலியின் மூலம்
வாட்டமற வகையொன்று கழஞ்சிரண்டு
மசியவே யிடித்தவையு முக்கூறிட்டு
திட்டுவா யிருநாழி சலமெட் டொன்றாய்த்
திருந்தவைத் துயர்ந்திடவே தேன்விட்டப்பா
பூட்டுடையா சுரங்களெல்லாம் போகும் போகும்
புகலுகிறே னின்னவகை புகலுவேனே. 1139

பலசுரக் கியாழம்

புகலுகிறே னின்னமொரு பலசுரக்கியாழம்
பேய்ப்புடல் தோடையிலை செம்முள்ளி வேரும்
புகலுவேன் முப்புரத்தை யெரித்தான் வேரும்
புனிதமுறும் வேர்க்கொம்பு வகைக்கு நாற்கழஞ்சு
புகலுவே னிடித்ததுவும் முக்கூறிட்டுப்
புட்டடா கூறுக்கு இருநாழி நீர்தான்
புகலுவே னெட்டொன்றாய் குறுக்கி யந்திசந்தி
பொடித்தூவித் திப்பிலி தேன் விட்டருந்த போமே. 1140

அருந்தப்பா மின்னமொரு கியாழங்கேளு
அப்பனே திப்பிலியுஞ் சீந்திரண்டும்
பொருந்தவே நாற்கழஞ்சி தட்டிப்பின்பு
பொலிவாகச் சலமும் ரெண்டு படியும்விட்டு
விருந்தாக யெட்டொன்றாய்க் குறுக்கிப் பின்பு
வீறடங்க விருபோதுந் தேன்கலந்து வுண்ணு
மருந்தாலே சுரந்தீரு மப்பா கேளு
வாத சிலேற்பன சுரத்தின் வகையைத் தானே. 1141

தானென்ற தலைதாங்கி தூது கண்டங்காரி
சாதகமாய் நன்னாரி சிறுகாஞ்சோறி
மானென்ற தோடை சிறு வழுதலை யின் வேரு
மகத்தான திப்பிலி வேர்க் கொம்பு மல்லால்
கோனென்ற பேய்ப்புடலோர் வகைக் கிருகழஞ்சி
குமுற விடித்ததை மூன்று கூறாகச்செய்து
தேனென்றதொரு கூறுக் கிருநாழி நீரும்
திட்டெனவே யெட்டொன்றாய்க் குறுக்கித்தின மூன்றே. 1142

மூன்று நாளந்தி சந்தி தேன்கலந்து கொள்ள
முக்கியஞ்சேர் மேல்பொடிக்கு வகையைக் கேளு
மூன்றுநாள் திரிகடுகு வெதுப்பித் தூவு
முரணந் தீரின்ன மேற் பொடியைச் சொல்வோம்

மூன்றுடனே யிலவங்கப் பட்டையோடு திரம்
மிளகினிய சிற்றரத்தைத் திப்பிலியுஞ் சமனாய்
மூன்றாக வெதுப்பிய தூள் போட்டருந்து
முத்தோவி சுரத்துக்கு முறையைக் கேளே. 1143

முறைகேளு தூதுகண்டங் காரிநில வேம்பு
முத்தக்காசு கொத்தமல்லி சிற்றரத்தைச்செவிய
முறைகேளு சீந்தி சிறுகாஞ்சொரி நன்னாரி
முள்ளிவேர்த் தோடையிலை விஷ்ணுகாந்தி
முறைகேளு திரிகடுகு திரிபலை பேய்ப்புடலு
முதுகோஷ்டஞ் சன்ன இலவுங்கமு முக்கழஞ்சி
முறைகேளு வகைவகைக்குச் சமனாக விடித்து
முக்கூறி லொருகூறி லிருநாழி நீரே. 1144

சீதவ வாத சுரத்துக்கு

நீர்விட்டு எட்டொன்றாய்க் குறுக்கிப் பின்பு
நீட்டடா வந்திசந்தி திப்பிலி மேற்பொடியும்
பார்புகழ் தேனுமொரு காசிடைதான் இட்டுப்
பண்பாகக் கொடுத்திடவே பற்றிப்போகும்
சீர்சீத வாதசுரம் போகாதப்பா
செப்புகிறேன் சிந்றாமுட்டி வேர்க்கொம்பு மிளகு
பேரான கொத்தமல்லி பேராமுட்டி வேரும்
பிரியமுடன் வகையொன்று கழஞ்சி மூன்றே. 1145

கழஞ்சியா யெடுத்திடித்து முக்கூறிட்டு
கருத்தாக வொருகூறுக் கிருநாழி நீரும்
வழஞ்சியா யெட்டொன்றாய் வற்றவைத்து
வாகாகத் தேன்கலந்து மூன்று நாளருந்து
தெளிந்துபோ மிராச்சுரத்துக் கின்னமப்பா
செப்புகிறே னிலுப்பைப்பூ முந்திரிகைப்பழமும்
தழஞ்சியாம் பெருங்குமிழ்வேர் மதுரம் நாரி
தாமரையின் வளையமொடு இருவேலி வேரே. 1146

இருவேலி வேரோடு முத்தக்காசு
யியல்பான வேர்க்கொம்பு சிறுகாஞ்சோரி
வருநெல்லிப் பருப்புடனே வகைக்கு முக்கழஞ்சி
மசியவே யிடித்ததையும் முக்கூறிட்டுப்
பருவமா யொருகூறுக் கிருநாழி நீரும்
பண்பாக வெட்டொன்றாய்ப் [illegible]கமாக்கி
ஒருநாளுக் கிருபோது கலந்தே[illegible]
வொழிந்துவிடும் வாதசுர மொடுக்கங் கேளே. 1147

வாத சுரக்கியாழம்

ஓடுங்காத வாதசுரக் கியாழமப்பா
உரைக்கிறேன் குறுந்தொட்டி நொச்சி முத்தக்காசு
கொடுங்கூத்தன் தூதுகண்டங் காரி பற்படாகங்
கூறிய நிலவேம்பு வாதத்தை மடக்கி
நெடுஞ்சிறிய நெருஞ்சில் வேர் தோடைவேரீர்க்கில்
நெல்லீர்க்கு வேப்பீர்க்கு மாவிலையினீர்க்கு
இடும்பான திரிகடுகு நாரத்தை யீர்க்கி
லிவைசேர வகையொன்று கழஞ்சு மூன்றே. 1148

வகையொன்று கழஞ்சுமூன்றாக நீயிடித்து
வாகாக மூன்றிலொன்றுக் கிருநாழிநீரும்
நகையாம லெட்டொன்றாய்க் குறுக்கிப்பின்பு
நாட்டடா வோர் திப்பிலியுங் கூட்டு
பகையாம லந்திசந்தி தேன்கலந்தூட்டப்
பறந்தோடும் வாதசுரம் பழஞ்சுரங்கள் போகத்
திகையாமற் கியாழமொன்று செப்புகிறேனப்பா
திரிபலையுஞ் செவ்வியமு முத்தக்காசே. 1149

முத்தக்காசரத்தை கொத்தமல்லி சித்திர
மூல மொகுமொகுக்கை வெங்கார மக்கிர காரஞ்
சிற்றாமுட்டி பேராமுட்டி தோடை வேரிலையுஞ்
செம்முள்ளி நெருஞ்சியோடு தொட்டி வேரும்
வெற்றி பெரும் அமுக்கிறா மலைதாங்கி வில்வம்
வெட்டிவே ரிலாமிச்சு கரிசாலை புடோலும்
எத்திசையும் புகழ் தூது கண்டங்காரி
யிலுப்பைபூச் சிறுபூளை நீர்முள்ளி வேரே. 1150

முள்ளிவேர் நன்னாரி கற்றாழைச் சாறு
முன்னைவேர் பெருங்குமிழ் வேர் முப்புரங்க ளெரித்தான்
கள்ளமில்லா நிலவேம்பு விஷ்ணுகாந்தி
கற்கண்டு கிராம்பு சிறுதேக்கினோடு
தெள்ளு கோஷ்டம் பேரீச்சு முந்திரிகை மதுரம்
தெசாபுரம் சந்தனத்தின் பொடி தேவதாரம்
விள்ளு கடுகு ரோகணி பற்படாக மிலவங்கம்
வீழியிடப்பட்டை தாமரைவளையஞ் சேரே. 1151

சேரடா வகையொன்று கழஞ்சியொன்று
திறமாக விடித்ததூள் பதின்கூறிட்டு
வாரடா கூறொன்றுக் கிருநாழி நீருங்
வைச்சு எட்டொன்றா யந்திசந்தி யாகப்

பாரடா திப்பிலிதூள் தூவித் தேன்விட்டுப்
பருவமா யஞ்சுதின மருந்தினாக்கால்
சீரடா சகலசுரம் விட்டு வாங்கும்
சித்திரமாயின்ன மொரு கியாழங் கேளே. 1152

விஷு பாக சுரத்திற்கு

இன்னமொரு கியாழங்கேள் விஷபாக சுரத்துக்
கியம்புகிறே னீறுள்ளி சிறுபூளை வேரும்
பின்னமில்லா விலாமிச்ச மமுக்கிறா நன்னாரி
பெருங்குமிழ் வேர் சீந்தியொடு முன்னை பாதிரியும்
சன்ன இலவங்கமொடு வீழி குறுந்தொட்டி
தாமரையின் வளையமொடு நெரிஞ்சி முத்தக்காசு
நன்னயஞ்சேர் கறிமுள்ளி சிறுகாஞ்சோரி
நல்ல சிற்றாமணக்கின் வேர் கற்றாழஞ்சருகே. 1153

சருகுடனே மலைதாங்கிப் பற்படாகஞ்
சாரணைவேர் தோடைவேர் கூவிளமலரோடு
மருவுசிற்றா மல்லிவேர் பேராமல்லி வாதத்தை
மடக்கிவேர் திரிகடுகு செவ்வியம்
பெருகு திப்பிலி மூலம் சிற்றரத்தை கோட்டம்
பேர்பெரிய சிறுதேக்கு தெசாபுரமேல்
முருவாக வகையொன்று கழஞ்சிரண்டு
மொன்றாக விடித்ததூள் முக்கூறாக்கே. 1154

ஆக்கியதோ ரொருகூறுக் கிருநாழி நீரு
மப்பனே யெட்டொன்றாய்க் குறுக்கிவாங்கி
தேக்கியதோர் பொரிகாரங் கழஞ்சிமூன்று
திறமாகச் சுத்திசெய்து பொரித்துக் கொண்டு
நீக்கியே யந்திசந்தி பொரிகாரந்தூவி
நினைவோடே மூன்றுநா ளருந்தினாக்கால்
பாக்கியங்கள் செய்தவர்க்கிந்த நூலின்படியே
பத்தியாய்க் கொண்டுவரப் பறக்கும் விஷபாகம். 1155

ஏலாதி மாத்திரை

பாகமாக யேலாதி மாத்துரை தன்னைப்
பாடுகிறேன் புலத்தியனே பண்பாய்க் கேளு
ஏகமாக மிலவங்கம் வால்மிளகு இசைந்த
திரிகடுகுடனே சன்ன இலவங்கம்
வேகமுள்ள சிற்றரத்தை திப்பிலியின் மூலம்
வெட்டிவே ரிலாமிச்சு செவ்விய மதிவிடையம்
தாகம்விடு மதிமதுரஞ் சீரகங் களிரண்டுந்
தாளிசப் பத்திரி கடுகு ரோகணியுஞ் சேரே. 1156

சேரப்பா திரிபலையுங் குறாசானி யோமம்
தெசாபுர மக்கிராகாரம் முத்தக்காசு
சேரப்பா சாதிக்காய் பத்திரி கிராம்பு
சிறுநாகங் குங்குமப்பூக் கற்கட கசிங்கி
சேரப்பா வமுக்கிறா நன்னாரி கொத்துமல்லி
சீனி கற்கண்டு முந்திரிகை பேரீச்சு
சேரப்பா மாதுளையினோடு பொரிகாரஞ்
சிலை கெவுரிதாரம் விசுவாசுரசங் கெந்தம். 1157

கெந்தமடா மலாக்காயுங் கூகைநீறுங்
கெடியான கோரோசனை கஸ்தூரிபுழுகும்
பந்தமுள்ள சாதிலிங்கம் சாம்பிராணி காந்தம்
பகராத வமிர்த சர்க்கரையுங் கூட்டு
இந்தவகைக் கொருகழஞ்சு சுத்த வகைப்படியே
எடுத்தப்பின்பு செந்தூரம் சேரும் வகைக்கேளு
முந்தரச செந்தூரங் காந்தமப்பிரக
முறையோடே தாம்பிரமும் வங்க செந்தூரம். 1158

செந்தூர மிந்தவகைக் கொருகழஞ்சு
சேரடா விவையெல்லாங் கல்வத்திட்டு
பந்தூரு மிரண்டுநா ளிஞ்சிச் சாற்றில்
பண்பான மாதளம்பூச் சாற்றி லிரண்டு நாள்
வெந்தூரு மாதளம்பழச் சாற்றிலாட்டு
விதறாம லிரண்டு நாளான பின்பு
விந்தூரும் பனிநீரி லிரண்டுதின மரைத்து
மேலான குளிகைசிறு பயறளவு கட்டே. 1159

கட்டியதோர் குளிகைதன்னை நிழலுலர்த்திக்
கலைக்கொம்புச் சிமிழிலே யடைக்கு முன்னே
தட்டிலா தானியபுட மண்டலந் தானப்பா
தாழ்வில்லா திருந்தபின்பு தானெடுத்து
அட்டியில்லா தனுபான மப்படி நோய்கண்டு
அருந்தினால் பிணிபலவு மாண்டதையா
திட்டித்தாற் போல் கேட்கும் பூரணகற்பிணியின்
சீத்திரம் சுவாசமுடன் சன்னிக்குள்ளே. 1160

சன்னிசுரம் சுவாசத்திற்கு

சன்னிசுரம் சுவாச மேலேப்ப மொடுதணியச்
சாற்றுகிறேன் முலைப்பாலில் தரித்துண்டை யொன்று
உன்னியே யிருபோது மூன்றுதினஞ் செலுத்த
ஒடுமடா தலைமுத லனைவருக்கு மூட்டு

பின்னிநின்ற தொந்திப்புச் சுரதோஷம் தீரப்
பிசகாமல் மிளகுடைய கியாழ மிஞ்சிச்சாற்றி
லிந்நிலத்துத் தோடையிலை மிளகியாழத்தி
விட்டருந்தத் திட்டெனவே நிற்குமின்னங் கேளே. 1161

சன்னி பதின்மூன்றுக்கும்

இன்னங்கேள் சன்னிபதின் மூன்றுக்கு மப்பா
இஞ்சியொடு சிற்றரத்தை முலைப்பால் வேப்பந்தோல்
இன்னங்கேள் முருங்கைத்தோல் வெள்ளுள்ளித் தயிலம்
இதற்கிசைய புட்டவியல் பூநாகத்திட்டால்
இன்னங்கேள் சன்னிபல சுரங்கள் தோஷ
மென்மகனே விட்டோடு மியல்பாம் பாரு
இன்னங்கேள் க்ஷயரோகந் தீரவென்றால்
இயல்பான புட்டவியல் தேனு மேற் பொடியே. 1162

மேற்பொடிகேள் திப்பிலிச் சிற்றரத்தை தன்னை
வெருகடி தூளுடன் குளிகை வெதுப்பி லொன்றுசேர்த்து
மேற்பொடி யிப்படியே தானருந்தி னாக்கால்
விட்டோடும் க்ஷயரோக மிருமலெல்லாம்
மேற்பொடியே பின்னு மறுபானஞ் சொல்வோம்
வீறான கிராணியதி சாரந்தீர
மேற்பொடியாஞ் சாதிக்காய் பத்திரி கிராம்பு
வெட்பாலை குறாசானி யக்கிராகாரம். 1163

காரமுடன் பெருமரத்துப் பட்டையடா மாஞ்சி
கருஞ்சீரகம் வால்மிளகு மலைதாங்கி
பாரமுள்ள முத்தக்காய் மாதளத்தின் தோடு
பாங்கான வதிடையம் வெதுப்பித் தூளாய்
ஈரமுள்ள முத்தக்காசு பெருமரத்துப் பட்டை
யினியமலை தாங்கிவேர் சிற்றரத்தை சமனாய்
சீரக நறுக்கி யிருநாழி நீரில்
திறமாகக் கிராம்பு பத்து முடிந்து போடே. 1164

முடிச்சிட்டுக் கிராம்புடனே யெட்டொன்றாக்கி
மூல மதிசாரம் வயிற்றுளைச்சலுக்குப்
படிச்சிட்ட வந்திசந்தி கிராம்பரைத்துக் கலக்கிப்
பதியவே குளிகையிட்டு சமன்பொடிதான் சேர்த்து
குடிச்சவுடன் நாலைந்து தினத்தில் நிற்கும்
குன்மமெனும் வாய்வுக்குக் கூறக் கேளே. 1165

குன்ம வாய்வுக்கு

கூறக்கேள் சாரணைவேர்க்கு வேப்பலகு
கொடியதொரு கியாழத்திற் குளிகைநீட்டி

கூறக்கேள் வியாதிகண்டு வனுபானத் தூட்ட
கொடுபிணிக ளணுகாது குளிகை வெகுபோக்கு
கூறக்கேள் மூலமொடு கிராணி வாய்வுக்கு
கொஞ்சமொரு லேகியத்தைக் கூட்டடாநீ
கூறக்கேள் பழம்புளியுங் கூகைநீறும்
குறைவில்லா வெள்ளுள்ளிப் பருப்புங் கூட்டே. 1166

பருப்புடனே வகைக்கு ஒருபலந் தானப்பா
பண்பான காரெள்ளுப்படி முக்காலும்
விருப்புடனே வெல்ல நாற்பலமுங் கூட்டி
விரைந்திடிக்க விருசாமம் லேகியமா மேலும்
தரும்புவன மந்திசந்தி தான்றிக் காயளவு
தானருந்த மூலமென்ற கிராணி வாய்வு
மிரும்பிருந்து குடைந் திரையும் கழிச்சல் ரெத்தஞ்சீதம்
ஏப்பமொடு பொருமல் வலியெல்லாம் போமே. 1167

வேறு

பேய்ப்புடல் கடுக்காய் நெல்லி பேரியதோ ராடாதோடை
தூய்ப்புள்ள கண்டங்காரி மரமஞ்சள் கடுகுசெம்முள்ளி
தாய்ச்சுக் கோடிசைந்த வேலிப்பருத்தி திப்பிலிதானப்பா
வாய்ப்புடன் வகைக்கு மூன்று கழஞ்சுதா னிழைத்துப்போடே. 1168

போடுமுக் கூறுசெய்து பொலிவுட னொருகூறுக்கு
நாடியே யிரு நாழிநீர் நலம்பெறக் கடுகு ரோகிணி
போடியா தொருகழஞ்சு மூன்றாக்கி முடிஞ்சுபோட்டு
வாடாதே யெட்டொன்றாக்கி வடித்த தந்தி சந்தி கொள்ளே. 1169

கொள்ளவே பனிசுரங்கள் கூறிய மல பந்தங்கள்
தள்ளவே கியாழஞ் சொன்னோம் தனி விஷசுரங் கனப்பு
மெள்ளவே மூர்ச்சை வேர்வை குளிர்நளிர் கண்டதற்கு
எள்ளலாய்க் கியாழந்தன்னை யியம்புவே னெளியசுக்கே. 1170

வேறு – மலபந்த முதலானதுகளுக்கு

சுக்கு செவ்வியங் கொத்தமல்லி துழயாங் கொண்டு பரங்கி புடோல்
சுக்குந் திப்பிலி யப்பீலி மூலங் கண்டாங் காரியிலவங்கம்
மிக்கியேல மதிமதுரம் மிகுந்தசீந்தி பற்படகம்
பக்கநாரிக் கொடிதூவி முத்தக்காசு பரிந்தெடுமே. 1171

எடுமேயாடா தோடையிலை யிலாமிச் சிருவேலிருகழஞ்சி
படுமே யிடித்துப் பொடியாக்கிப் பண்பாய் மூன்று கூறுமிட்டு
இடுவாய் கூறுக்கிருநாழி நீருமுழக்காய் வற்றிவரும்
கெடுவாயென்றே விட்டோடும் கியாழமொன் றின்னங்கேளே. 1172

வேறு

இன்னங்கேள் முத்தோஷ விஷசுரக் கழிச்ச
லியல்பில்லாக் கக்கலொடுப் பளிர்குளிர் தீர்
நன்னயஞ்சேர் கொடிப்பூ விநாரி முத்தக்காசு
நல்லதரி பலையோடு வீழிப்பட்டை
மின்னியதோ ரிருவேலி யிலாமிச்சம் வேறு
மிகுந்த தாமரைவளைய மிவைபத்துந் தான்
சொன்னவேர் வகைக்கு முக்கழஞ்சி கூட்டித்
தூளாக விடித்து மூக்கூறு செய்யே. 1173

செய்யடா வொரு கூறுக் கிருநாழி நீருஞ்
சிறக்கவே விட்டதை யெட்டொன்றாய் குறுக்கி
வையடா யிருபோது மூன்று தினமருந்து
மகத்தான குளிர்சுரங்கள் மாறல் விஷபாகம்
மெய்யடா வத்தசுரங் குறுவேர் வைதாகம்
விகடசுர மித்தனையும் போகும்
பொய்யடா வொன்றுமிலை விஷபாக மொழிய
பூட்டுகிறேன் கியாழமொன்று மலைதாங்கி வேரே. 1174

விஷ சுரத்திற்கு

மலைதாங்கி திரிகடுகு புங்கம்பட்டை
வகையஞ்சு கொன்றை வராகன் பட்டை
நிலையாக வெட்டியதை யிடித்து கூறாய்
நேராக மூன்றாக்கி யொரு கூறுக்குச்
சலமு மிரு நாழிதனை யெட்டொன்றாக்கி
தசமூன்றாறு பொழுதுண்ணத் தீரும்
பலசுரங்க ளழியுமே சுரமும்போகும்
டண்டுற்ற நடுக்கல் சுரம்பறக்குங் கொத்தமல்லி. 1175

கொத்தமல்லி திரிகடுகு பேராமுட்டி
கோலத்தோ லியும் வகைக்குமொரு கழஞ்சிகூட்டி
பத்தவே யறைத்து வொருநாழி நீரிற்
பரிவுடனே கலக்கியதை யெட்டொன்றாக்கி
வெற்றிபெற வொவ்வொரு போதருந்த வந்து
வீறடங்கி நடுக்கலன்ற வெப்பந்திரும்
சத்தியமாய் மிளகு கியாழந்தானுண்ணத்
தானடுக்கல் லிரதிரும் சத்தியமா ஞ்சுக்கே. 1176

வேறு

சுக்கோடு கொத்தமல்லி துலங்க தேசபுர மூன்று
மொக்கத் தட்டி யொருபடி நீ ருடனே யெட்டொன்றாய்க்குருக்கி

மிக்க வந்தியம்ப மது விரைந்து வூணுங்கழிந்த பின்பு
சிக்க கியாழமொரு போதா திவசந்தோறுங் கொண்டிடுமே. 1177

கொண்டு வரவே விஷமழியும் குருவேர்வையும் போம் பசியெடுக்கும்
பண்டேவந்த வுள்சுரமும் பரக்குமே துணையாது
விண்டார் வெறு வெந்தயஞ் சிக்க வெதும்பி மிளகிட்டொரு படிநீ
ருண்டாம் படிக்கி யெட்டொன்றா யுண்ணு மிரவிலிப்படியே. 1178

இப்படி யஞ்சுநா ளிரவிற் கொண்டிட
வெப்பொடு உள்சுர மாந்தம் வேர்வையுங்
குப்பெனக் குதித்திடுங் குடல்குளிர்ந் திடுஞ்
செப்பினோ மினிச்சுர மாந்தை சுக்கொடே. 1179

சுக்கு நறுக்கு மூலமொடு துலக்கு மொசுமொசுக்கை வேரிவைகள்
ஒக்கவைத்தோர் கழஞ்சிகட்டி யொருபோத ருந்தவோர் படிநீர்
தக்கதாழக்கெனக் குறுக்கு தாகப் பஞ்சதாரை யிட்டு
வொக்கக் குடுக்கக் நெஞ்சிருமல் வேறாஞ் சுரமாந்தையும் போமே. 1180

பேய்ப்புடல் பாடகம் பேராமுட்டி மிளகு சுக்கு
வாய்வுள்ள விஷ்ணுகாந்தி மகிழ்ந்த நாரத்தப்பட்டை
காய்ப்புடன் வகைக்கோ மூன்று கழஞ்சியை யிடித்துக் கூராய்த்
தாக்கியே முதற்குறுக் குருத்தின மிருநாழி நீரே. 1181

நீரிரு நாழிக்கே தானொரு கூறு நேயத்தோடு
வீரமா யெட்டொன்றாக்கி விரும்பித் தேன் கலந்தருந்த
சீராப்புச் சுகமுந் தரும் தீனது விரைந்தேயேறும்
பாரமாந்தலை நோய் போக்கும் பகர் சீந்திக் கியாழங் கேளே. 1182

(வேறு) சிலேற்பன சுரத்திற்கு

சீந்தி முத்தக்காசு ரெட்டி பேய்புடல் பாகஞ்சுக்கு
திரமாக வதிற்பாதி சோதித் திடித்து கூறாய்ப்
பாந்தாமலொரு கூருக்கிரு நாழிநீரும்
பண்பாக யெட்டொன்றாய் குறுக்கியதை வாங்கி
காந்தமாய் தேன்கலந்து மூன்று தினமறுந்து
தகர்ந்து சிலேற்பன சுரந்தான் தணியுமப்பா
காந்தவெரித்தாறாப் புண் கிரந்திக் கெல்லாம்
களிம்பொன்று சொல்லுகிறோங் கண்டுபாரே. 1183

களிம்பு

கண்டுபார் களிம்புக்கு வகையைக் கேளு
கடுயிரதந் துத்தமொடு காசுக்கட்டி
பண்டிலுள்ள வெள்ளைக் குங்கிலியம் நேராய்
பதியவே ரசமான கல்வத்திட்டு

விண்டவதில் கற்சுண்ணம் நெல்லிக் காயளவு
வேதிச்சு ரைத்தாவின் வெண்ணெ யதின்ரெட்டி
கொண்டுமே விருசாமம் நன்றாயாட்டி
கூறாகச் சிமிளிலே யடைத்திடாயே. 1184

அடைத்திட்ட களிம்பதனை புண்பொடி கட்கிட்டு
அப்பனே பழங்காடி புளியிலையும் வெந்து
புடைத்திட்ட புண்கழுவி களிம்புபோட
போகாத கிரந்தியொடு சூலைபுண்கள்
படைத்திட்ட திவையெல்லாம் பறந்தேயோடும்
பழைய புண்கள் கருத்தழும்பு பதின்கோடி யறுமே. 1185

கொடித்தூவி வேரிழைச் சுக்கிழியாய்கட்டி
கோவின் பால் வெள்ளாட்டுப்பால் சரிநீர்விட்டு
அடுப்பிலே வேகவைத்து நீர்வற்றும் போது
அப்பனே கிழிப்பித்து; வப்பால் கொள்ள
இடுக்கிலே பட்டயெலி போல விஷமழிவு
மிசைத்த மலக்கட்டு சலம் விஷபாக மெல்லாந்
தடித்திடாதே போகுஞ் சுரவீறில்லைச்
சாதகமாம் வேறுசுரம் சாற்றுறேனே. 1186

வேறு

கோரைக்கிழங்கு கொடித்தூவி கோஷ்டஞ் செவ்வியங் கொத்தமல்லி
வீரமுடைய தூதுவளை விஷ்ணுகாந்தி யிலாமிச்சு
சாரமுடைய வதிமதுரந் தனித்தசுக்கு விலவங்கம்
பாரப்புடோல் முள்ளிவேர் பற்படாகம் பகரேலம். 1187

ஏலந் திப்பிலி திப்பிலிமூல மிசைந்த கண்டங்கத்திரியும்
ஞாலத்தாடாதோடையிலை நன்னாரிவேர் சீந்திலொடு
சீலத்துடனே யிருகழஞ்சி லேரவிருபத் தொன்றிடித்து
காலத்துடன் முக்கூர்செய்து காயப்போட்டுக் கொள்வீரே. 1188

கொள்வீரே அஞ்சுக் கிருநாழி நீர்விட்டொன்றாக்கியதை
யுள்ளே குடிக்க மூன்றுதினத் தோடுஞ் சுரம்வீறற்றுவிடுங்
கள்ளந்தீருங் கசடு மறுங் காலகால மருந்திவர
தள்ளிப் போக விருந்தாடு மயக்கந் தவிர்க்குமா மயிலே. 1189

மயிலே ஜன்னி தோஷமுதல் வாதபித்தஞ் சிலேற்பனமும்
குயில்போ லிரைச்சல் மலபந்தங் கூறுஞ்சலக் கட்டிவை யெல்லாம்
பயிலாய்த் தீரும் விஷபாகம் பண்பாய்க் காட்டுச் சீரகந்தான்
ஒயிலாய் மூன்று கழஞ்சிதன்னை யொவ்வோர் கழஞ்சி நீரிலிடே. 1190

இடுவாய் சலந்தா னிரண்டுபடி யெட்டெர்ன்றாக்கி யந்திசந்தி
விடுவாய் மூன்றுதினத் தாலே விஷமு மழியுஞ் சுரமும்போம்
கெடுவாயின்ன நற்சுரையி லேடில்லாம லுலர்ந்ததண்டு
படுவாய் மூன்று துண்டு யிருநாழி நீரில் வற்றவையே. 1191

வேறு

வற்றவைப்பா யெட்டொன்றாய்
மறுத்து மந்திசந்தி யுண்ணும்
மற்றே பெரும் விஷமாக
மறையைக் கேளு மின்னவகைப்
பற்றச்சூறைதான் தழைபச்சை
யரிந்து கழுநீர் படியொன்றில்
வெற்றிபெற வேகவைத்து மிளகுமுள்ளி தட்டியிட்டு
சித்தியாகத் தேனுடனே சேர்த்து அருந்தத் தீர்ந்திடுமே. 1192

தீர்ந்திடுமே விஷபாகம் வீக்கஞ் சோபம்
சிக்கு மலக்கட்டு நீர் தெளிந்து போகும்
தீர்ந்திடுமே வேர்க்கொம்பு ஓமம் வெள்ளுள்ளி
சீரகங்கள் மூன்றுடனே கிராம்பு சேரும்
தீர்ந்திடுமே யிலவங்கங் கடுகுரோணி
திகையாமல் வகைக்கொரு கழஞ்சியொன்று
தீர்ந்திடுமே யிவையிடித்து முக்கூறிட்டுத்
திறமாகக் கூறொன்றுக் கிருநாழிநீரே. 1193

நீரோடு முடிச்சிடவே மருந்தைக் கேளே
நிறைக்கிறேன் சாதிக்காய் பத்திரி கிராம்பு
பேரான தும்ராஷ்டம் வகைக்கு கால்கழஞ்சு
பிசகாம லறுகூறு முடிச்சுமிட்டு
சீராக வனல் மூட்டி யெட்டொன்றாக்கி
தினமொன்றுக் கிருபோது முடிச்சரைத்து கொள்ளு
நேராக விப்படியே முன்றுதின மருந்த
நின்றுபோம் பிணியனைத்தும் நிலைகெட்டோடும். 1194

வேறு

ஓடிடும் விஷசுர மொட்டியதனைச்சுரம்
பாடிய வுட்சுரம் பணைப்புத் தோன்றுதல்
கூடிய மலசலக்கட்டு கொண்டதுஞ்
சாடிடுஞ் சவ்வீரவைப் புக்கல்லுப் போடே. 1195

வேறு – வீரவைப்பு

கல்லுப்பி வெடியுப்புச் சீனாக்காரங்
கட்டியதோர் நவச்சார மன்னபேதி
வெல்ல வல்லமையில் துத்தம் ரசமோடேழும்
விளம்புதல் சவ்வீர வைப்புச் செயநீராக

கெங்காசலக் குப்பிக் கேற்கநலம்
பெற வேழுசிலை மண்ணுஞ் செய்து
சொல்ல வரிதான சிவன் சத்தி பூசை
தொழில் முடித்து மண்பாண்டக் குப்பி வையே. 1196

வைத்து மண்குப்பிக்கு மட்டாகவிட்டு
வாகாக மூத்தீயு மாறாமலே தான்
பத்திரமாய் மூன்றுதின மெரித்து பின்பு
பாங்குடனே பூசைவிதிப் படி நடத்தி
மற்றாநாள் குப்பி யெடுத்தாற் பதங்கமேறி
வாதியென்ற வீரமெனும் வகுப்பார் பாரீர்
சத்தின் கீழ்பிடியது செந்தூரமாகும்
சரத்தை யவிர்ச்சார் விட்டரைக்கலாமே. 1197

அரைத்து வைத்த செந்தூரம் வில்லையாக
அடைபிடித்து வுலரவைத்து அப்பால்நல்ல
புறையறவே வராகபுடம் போட்டுப்பின்பு
புடம்பிரித்துச் செந்தூரம் தனைவாங்கி
நிரைநிரையாய் நொச்சியிலைச் சாற்றிலோர்நாள்
நேரான யிஞ்சி முலைப்பாலி லோர் நாள்
வரையாது மூன்றுதின மரைத்துப்பின்பு
மாத்திரையுங் கடலைப் பிரமாணம் செய்யே. 1198

செய்து வைத்த மாத்திரையை நிழலுலர்த்தி
சேர்த்திடுவாய் சிமிளி லது சென்றுகால
முய்வதுக்கு நறுநெய்தேன் தனிலோ ருண்டை
யுண்ணு மிருபோது வரைமண்டலத்தில்
நய்யும்விஷ மகோதரமுங் குன்மம்
நற்காச சுவாசமொடு காசக்கூறும்
பையகன்று பிறிந்து தட்டுக்கெட்டுப்
பழவினையும் பறந்தோடும் படிசொன்னோமே. 1199

பத்தியம்

சொன்னோம் நாம்பத்தியத்து வகையைக்கேளு
சுத்திசெய்த வுப்பதனைச் சுகமாய்க் கூட்டு
சொன்னோம்நாம் வெள்ளாட்டுப் பால்நெய் கூட்டு
துவரையுடன் வழுதலங்காய்ப் பிஞ்சுகூட்டு
சொன்னோம் நாமுருங்கையிலைச் சாறுகூட்டு
துடுக்காக மற்றொன்று மாகாதப்பா
சொன்னோம்நாம் கிரந்தி யொடு கரப்பான் போகக்
கூட்டுகிறேன் வகையாகச் சீனமெனும் புகையே. 1200

வேறு - சீனப்புகை

சீனப் புகைக்கு வகை கேளாய்
சிறந்த ஜாதிலிங்கம் கடுகு
மூனமில்லா கெந்தகமு
மொவ்வோரி டையாய்ச் சமன்கூட்டி
ஆன பச்சை புகையிலைச் சா
றதனில் நன்றா யரைத்தபின்பு
ஈனமில்லா தே கடலைப்
பிரமாணமா யுலர்த்திடவே. 1201

உலர்ந்த மருந்தை யெடுத்து வைத்து
வோட்டில் புளியஞ் சிராய்த்தணலில்
மலந்தே புகைக்கப் புண்மட்டு
மட்டாய்க் கவிர மூடியபின்
செலங்குமிழிக் குந்திரை வாங்கிச்
சேர்த்து வந்த பின்னந்தி
புலர்ந்த போதும் புகையெடுத்துப்
போக்கா றேழு பொழுதினுக்கே. 1202

ஏழுபொழு திலின்ன மொரு
புகைக்கு வகைகேளே தென்னில்
வாழுஞ் சாதிலிங்கமுடன்
திராவகங் கெந்தி கடுகுடனே
ஆழுங்காசிக் கட்டி யிவை
யைந்துஞ் சமனாய் வீறொடுங்க
நிழப்புகைச் சாங்கான் குழலில்
நினைவேழ் போது வாங்கிவிடே. 1203

போதேழினுக் கோரின்ன மிந்தப்
புகைதான் பிடிக்கப் புளியந்தணல்
பாத கேச பரியந்தம் புகை
பற்ற மருந்தை பரப்பியபின்
மாதே சூழக் கவுசி சளையாய்
வளைந்து வேர்வை பொங்கியது
சூதாய்த் திரையை வாங்கியது
துவரப்படியே சூட்டிடுமே. 1204

லிங்கப் புகை

இடுமே யின்னமொரு புகைதா
னேழு போது செய்யும் வகை
கடுகாஞ் ஜாதிலிங்கம் மனோ
சிலையாங் காசுகட்டி கெந்தி

விடுவாந் துத்த மரிதாரம்
வகையோர் சமனாய்ப் புகையிலை சாற்றில்
தடமார்புடையா யரைத்து லர்த்தித்
தானே வைக்கத் தக்கதுவே. 1205

தக்க புகைக்குத் தான் புளியந்
தணலில் மருந்தைப் பரப்பியபின்
பக்கம் புகைகள் சிதறாமல்
பாங்காய்க் கவிய மூட்டியது
கக்கும் புகையால் வேர்வை யெல்லாம்
கடுகத்திரையை வாங்கி விடு
மொக்கத் தவறு மிப்படிநீ
யேழு போது முறச்செய்யே. 1206

செய்தபின்பு யெழுபோது
திரமாய் விட்டுச் சீரகன்று
பையக்குழிநீர் தனிலிருந்தப்
பாலுமூன்று தினங்கடந்தால்
வையம் புகழும் விளக் கெண்ணெய்
வார்த்து தேய்க்க வுசிலாப்பு
மெய்யாயிது வொன்றரை வருட
மிணங்க முழுகி வருவீரே. 1207

வீரமாறு மட்டுமந்த
விளக்கெண் ணையைத்தான் முழுகி
வாரந்தீருங் கரப்பன் புண்
கிரந்தி சேட்டை வியாதியறுங்
காரச் சுறுக்கு மற்றுவிடுங்
கறிகள் பலவு மாகாது
கூறத் துடனே வுப்புமுதற்
கோடா திருக்கச் சொன்னோமே. 1208

சொன்னோ மரைமண்டலங் கடந்தால்
சுத்திசெய்த வுப்பாகும்
மின்னே யவரைப்பிஞ்சு சிறுகீரை
முளைத்தண்டதை விரும்பி
இன்னதன்றி வேறொன்று
மிணங்கா தொருமண்டலங் கடந்தால்
பின்னைப் பற்றி செம்மரை
பிலாக்கா யுளுந்து மாகாதே. 1209

ஆகாதன்ன மறையக்கே
ளவரை துவரை கரும்பயறு

வாகாம்பாகல் கொம்மட்டி
மாங்காய் தேங்காய் பூசினி மீ
னேகா திருக்கி லாறுதிங்க
ளெல்லா நோயும் பறந்தோடும்
சாகாதிருக்க வெள்ளாட்டுக்
கறியை யுலர்த்தித்தான் கூட்டே. 1210

ரசம் புகை

கூட்டுஞ் சரக்கு ரசப்புகைக்குக்
கொடிய யிரதம் பாஷாணம்
கூட்டுங் கெந்தி தாளகமுந்
துத்த மிவைகள் சமனாக
ஆட்டுப் பச்சை புகையிலைச்சா
ரதனில லரைத்து திரியாக்கி
பூட்டு புளியந்தணல் நெருப்பில்
திரியை யொன்றாய் முழுகாட்டே. 1211

காட்டா யேழுதிரிப் புகையைக்
கட்டாகக் கவுசினையும்
பூட்டாய் புகையால் வேர்வைகொண்டு
புகழுந்திரியைப் பிரித்துவிட்டால்
பாட்டால் துயரந்தாள் தணியும்
பகலு மிரவும் பத்தியமாய்
கூட்டாய் வெள்ளாட்டுப் பாலன்ன
முப்பிலாதே கொண்டிடுமே. 1212

கொண்டபுங்கங் காயளவு
மறுபடியே யாறக்குற்ற மன்றி
யுண்ட பொசிப்புஞ் சமிச்சக் காலுடன்
கையுடனே குளிநீரில்
மண்டமூங்கிய திலிருக்க
வைத்தாற் கடிகையிரண்டரையே
அண்டர் துதிக்க வேழுதினம்
வெந்நீராட வடையாமே. 1213

அடைவா மின்னமொரு பாக
மந்தப் புகைக்கு மிடாத்தண்ணீர்
யிடவே யிரவிவெயிற் காந்தி
பட்டநீரைப் பனிவிழுமுன்
திடமாயேழு மிட்டனன்னீர்
சேரத்தலையிற் சொரிவாரால்
கடலே புகலாய்ப் புகலவிருங்
கரசற்சய புண்ணுங் காணாதே. 1214

காணாதே போய்விடுங் கிரந்தி
கடுகி யெழுந்த புண்முதலாய்
வீணே செத்து வேறுமற்று
மேனிபழுக்காய் நிறமாகும்
ஆணாய் பெண்ணாய் பிறந்தோர்க்கு
மாமேழு விளக்கெண்ணெய்
நாணாதொன்றை விட்டொரு நாள்
நாடி முழுகலாமே. 1215

நலமாமின்னம் புகைக்கு நல்ல
முறை கேள டுக்கும் புகையேறி
பலநாளளவு மாறியபின்
பாங்காய் முழுகும் விளக்கெண்ணெய்
விலகா தொன்றை விட்டொரு நாள்
வீறுமடங்கி யொடுங்கிவிடும்
திலத நுதற்கண் சிவனருளிச்
செய்தார் சிட்சை செய்வீரே. 1216

சூலைக்குப் புகை

செய்யுஞ் சூலை கட்டுக்குந்
தீரும் புகை தான் செப்புகிறேன்
ஐயப்படாமல் நல்லகெந்தி
அதனைக் குன்று மணியாகக்
கையக் கறுத்தக் காரலுள்ள
பழுக்கக்காய் கத்திரிக்காய் பிளந்து
வையம்புகழ் கெந்திமணி
வகையாய்ப் பிளந்து வைப்பீரே. 1217

வைப்பீர் மண்பாண்டந் தனிலே
வைக்க வழுக்கி நீர்விட்டு
ஒப்பா யதின் மேற்கத்திரிக்கா
யொன்றோ டொன்று சேராமல்
தப்பாமல் நாம் பரப்பியபின்
சட்டி கவிழ்த்து தான்மூடிக்
குப்பாயேழு சீலைமண்ணுங்
கூறார்பூசி யடுப்பேற்றே. 1218

ஏற்றியடுப்பில் வெந்தபின்பு
இயல்பாய் புகைகள் கொள்ளுமட்டுஞ்
சாற்றுந் திரையைக் கவுசின்னயாய்ச்
சணத்தி லிறக்க வேறுபுகை
மாற்ற மேற்சட்டியைத் துளைக்க
வருமேபுகை களடிக்கொற்றச்

சீற்றமெனவே புகைகள் வருஞ்
சேரவிடா மல்திகைத் திடுமே. 1219

தினத்தே யேழு புகையிந்தப்படி
செய்வீர் சூலை பதினெட்டும்
பகைக்க கரடுமுறடாகப்
பற்றும் விரண முளைப்புண்கள்
தகைக்க ஓடிப் போய்விடுங்கா
ணல்ல சிட்சை யிதுவன்றி
மிகைக்கச் சொன்னோம் புகைவிட்டால்
விளக்கெண் ணெய்தான் முழுக்கரிதாம். 1220

அரிதாரப்புகை

அரிதாரத் தின்தகட் டைத்
தாழைகாய் காறல் கத்திரிக்காய்
தெரிய விரண்டாய்ப் பிளவுசெய்து
செய்யுங் கிரிசைப் படிபரப்பிப்
பெரிய தாழி யொன்றினிலே
பெருக வைச் சலத் திலமுக்கி
விரிவாய்த் தண்ணீர் விட்டபின்பு
வென்றுந் தகட்டைக் காயவையே. 1221

ஏவத்து மேலே சட்டிகொண்டு
வழங்கக் கவிழ்த்திச் சீலைமண்செய்
யொய்த்தே யடுப்பி லேற்றியனல்
மூட்டியொரு சாமங் கிடந்தால்
சற்றே நிம்ப லில்லாமற்
றானே திரையை க்கவுசினைசெய்
பத்தாய் வேறு புகைக்கு மில்லி
பலவா யிட்டும் பாச்சிடுமே. 1222

பாச்சும் புகையால் வேர்வைதனைப்
பாசத் தடராப் படிதுவர்த்து
மூச்சு விடவே திரைப்பிரித்து
மூன்று மிப்படி செய்வீரே
வாச்சு ததனாற் புகையைவிட்டு
மறுபத் தியம் விளக் கெண்ணெய்
தேய்த்துக் குளிப்பீ ரொன்றை விட்டு
சீராட்டுப் பால் தனைக்கூட்டே. 1223

கூட்டா தொன்றைக் கூட்டியதை
கோடா கோடி குணமுண்டாம்
நீட்டி நிமிர்ந்து வுடம்பசந்து
நேரே குத்துக் குடை யுண்டாய்

மூட்டிக் கால்கை தனைமுடக்கி
முழுதும் வீக்கம் பெரிதாகி
ஆட்டி விட்ட பம்பரம்போ
லலைவீர் வீணமது காணே. 1224

காணப் பட்ட சூலைமுதல்
கைகால் குடைச்சல் கறடுகட்டும்
வேண வீக்க மதிமயக்கம்
வீறு விரணமுள் ளதற்கு
மாணி படவே சிக்கினார்
வேம் பதனால் தயில மொன்றிறக்கும்
பூணநன் றுதயில மொன்று
போடுவே சேரிலத்தி யெடே. 1225

லத்தி யெடுத்தே யதில் தயிலம்
நலமாய் வாங்கி யிம்மூன்றும்
பத்தி யுடனே பிரட்டிவர
பருவத் துடனே பிரட்டிவர
முத்துந் தயில முடற்கொள்
முடங்கிக் கிடந்த கால்கைகள்
செத்தே யிருந்த யுடல் வீக்கஞ்
சேரத் தெளியுஞ் சிகிச்சையிதே. 1226

துவாலை போட

இதுபோல் வேறு மனுபானம்
இன்னஞ் சொல்வோ முவாய்ப்பட்டை
சதியவிடித்துப் பழங்காடி
தன்னில் வெந்து விடுமிந்த
விதியால் வந்த வியாதிகளும்
விட்டே யோடு மிரணங்கள்
புதுசா யாவரை யிலையிடித்துப்
போடு நடவா லையுச்சி முதல். 1227

உச்சி முதலாய்ப் பாதம்வரை
யுடம்பி லுறவே துவாலையிட்டு
அச்சந்த விருனுக் குடலே
யழமா யிளவெந்நீர் குளிக்கத்
துச்சந் தீரு மூன்றுதினந்
துவாலை யெடுத்துப் போட்டிடுவீர்
கச்சு முலை யாயிது வன்றிக்
கட்டும் புகையைக் கழற்றக்கேள். 1228

கேளாய் நண்டு தேங்காயுங்
கெடியா யிடித்துச் சாறு கொள்ளு

நாள்மு ணுக்கு மந்திசந்தி
நன்றா யருந்த மதின்பின்பு
ஆளுமா வின்பால் நண்டுச்
சாறு மருந்திய தன்வேலும்
தாழ்வில் லாமல்நல் லெண்ணெய்
தனிலே நண்டுச் சாறருந்தே. 1229

அருந்திப் படியே வெவ்வேறா
யடுத்து வடித்துக் கொண்டவுடன்
நெரிந்து முறிந்து போய்விடுங்கா
ணிற்கும் கறடு மற்றுவிடும்
பொருந்தும் வினையும் போய்விடுமே
புண்கள் தனக்கு வுபனியங் கேள்
திருந்த வாவின் பால் தனில்
சித்திர கத்தி வெந்து கட்டே. 1230

செங்கொட்டை யெண்ணை

கட்டு மருந்திதிற் கடுப்பெரிப்புக்
காந்தல் தணியுங் கண் பொருந்து
மிட்ட முவாயினிலைகாடி
யிசைய வெந்து வுபனியஞ் செய்
திட்ட முடனே புளி யிலையைக்
காடி சேர்த்து வேக வைத்து
சட்ட முடனே புண் கழுவித்
தப்பா திலையைத் தான்கட்டே. 1231

கட்டாய் சூலைகரப் பன்புண்
கடிய கிரந்தி சிரங்குக்கு
தொட்ட லதனால் விட்டோடச்
சொன்னோம் புகை வேது பணியங்கள்
மட்டா யசடு வையாமல்
வகுத்தோ மின்னம் வகை சொல்லக் கேள்
குட்டா யோடச் சேங்கொட்டை
கூண்டு மெண்ணை கொடுத்திடுமே. 1232

வேறு

சேங்கொட்டை யிருகூறு நல்லகெந்தி
தெளிவுள்ள தகட்டாரி தாரம்கொடு
பாங்குடனே படுபாதி கூட்டி நன்றாய்ப்
பரிவு பொடியுடன் காச்சத் தயிலமாகும்
நீங்காத யொருமிடாத் தண்ணீர் தன்னில்நீ
தயிலம் விட் டு வைத்துப் பத்துநேரம்

வாங்குவாய்நீ ரெண்ணை போலெடுத்து
ரவியில் வைத்தெடுத்துப் புண்ணிலிட்டுக் குளிக்க வாங்கும். 1233

சலக்கழிச்சலுக்கு

வாங்காத சலக்கழிச்சல் மாற்றுவிக்கு
மகத்தான தயிலமொன்று வகையாய் கேளு
பாங்கான யேல மிலவங்க மதிமதுரம்
பழந்தேவ தாரமொடு செங்கழுநீர் கோஷ்டம்
நீங்காத சாஸ்திரமாம் வேதி மரமஞ்சள்
நீண்ட சிறுசெண்பகமுஞ் சிறுநாகப்பூவும்
தேங்காத சதகுப்பை வெந்தயங் கச்சோலம்
திரையாமல் வகையொன்று கழஞ்சியாறே. 1234

ஆறாக்கிச் சிறுதேக்கு செவ்வியத் தொல் கிராம்பு
அரத்தையொடு வாய்விளங்கம் வகைக்கு மஞ்சுகழஞ்சு
வீறான சிற்றரத்தை திப்பிலியும் நல்ல
விளாவரிசி யிவைமுன்று வகைக்கு முக்கழஞ்சு
சீறான செஞ்சந்தனம் கடுகுறோகிணியுஞ்
சிறந்த கொத்தமல்லியிவை வகைக்கு நாற்கழஞ்சு
பேறான நெல்லி பத்திப் புழுக்கைவேர் பத்துபேர்
பெரிய சாதிக்காய் பதின் கழஞ்சும் போடே. 1235

போட்டடா சந்தனந்தான் பலமொன்றரைத்து
பொன்முசுட்டை வேர்சிட்டா முற்றி வட்டதுத்தி
போட்டடா நீர்ப்பூலா வேரால் விழுதும்
புகழல்லி நீர்வள்ளி நிலைப்னையின் கிழங்கு
போட்டடா ஆவரையின் பட்டையோடு
பொன்னாங்காணி ளரிகொல்லாங் கோவை
போட்டடா முடக்கொத்தான் சீரகஞ் செங்கழுநீர்
பொற்சிந்தி யிலாமிச்ச வகைக்கு யெழுகழஞ்சே. 1236

கழஞ்சான யிவையெல்லாம் நொறுக்கிக்கொண்டு
கற்றாழஞ் சாற்றினா லோரரைப் பரைத்து
விழைஞ்சதொரு தாழைவிழுதுச் சாற்றி லரைத்து
விரைந்து குமரிச்சாறு மோர்படியும் விட்டு
கழஞ்சியா யாவின்பால் படிமூன்று சேர்த்து
தாக்கடா நல்லெண்ணை யாறுபடி யதிலே
வழஞ்சியமா யோர்தாழிக் காப்புக் கட்டி
வாகாகக் கற்கம் பாலெண்ணைவாரே. 1237

வார்த்தொன்றாய் கலக்கி யடுப்பேற்றித் தீயு
மட்டாக் யெரியவே விநாயகனைப் பணிந்து

நேத்திரமாய் மூன்றுநாள் சிறுகொதியு மிட்டு
நினைவோடே நாலாநாள் வற்றக்காய்ச்சிப்
பார்த்தந்தப் பதங்கண்டு மெழுகுபதங்களில்
பதறாமலே வடித்தும் பக்குவத்திற்
சாற்றினேன் குங்குமப்பூ பச்சை கற்பூரம்
சாதி கோரோசனை கஸ்தூரி புனுகு சட்டம் போடே. 1238

சட்டமடா புனுகுசட்டம் வகைக்கு முக்கழஞ்சு
தனித்தனியே பொடித்தொன்றாய் கலந்து போட்டு
சிட்டடா யறுபத்து நாலு சித்துந்
தெரியவல்ல மாணாக்கா மச்சகேந்திரா
விட்டிடுவாய் தயிலமது வடிந்தபின்பு
வேறெயொரு கலசத்தில் தயிலம் வாங்கி
கட்டடா தானியபுடந் தினந்தான் பத்துங்
கடந்தபின்பு தயிலமதை கழுத்துக் கீழ்த்தேயே. 1239

கழுத்துக்கீழ்த் தேய்த்த பின்பு தலைக்குமந்தத் தயிலங்
கசியாமல் தேய்த்தபின்பு சீயக்கார யரைப்பாம்
பழுத்துவிடும் வெய்யலிலே முழுகாமல் வெந்நீர்
பாங்குடனே நாலுநாட் கொருமுழுக்கு
கொழுத்திறைச்சி பால்தயிர் மோர் புளிகைப்புமல்லால்
குளிர்ந்தசலம் புகையிலையும் கூட்டலாகா
அழுத்திவிடு மவின்றுட்டு மறுநாளேது
அகடில்லை வேண்டியது மருத்துவாயே. 1240

சிலேற்பன தயிலம்

வாய்ப்பான தயிலமொன் றின்னஞ்சொல்வோ
மைந்தனே வகைகேளு யேலங் குந்திரிக்கம்
வாய்ப்பான கச்சோல மடவிக்ச் சொல்
மருவு சடாமாஞ்சில் கோஷ்டம் நறும்பிசின் சந்தனமும்
வாய்ப்பான சாதிக்காய் பழந்தேவதாரம்
வங்காரப் பச்சையகில் தன்னி நாயகமும்
மாய்பான கருங்காவி லவங்கம் பட்டை
'மகாமதுரம் வெந்தய் மிலாமிச்சம் வேறே. 1241

வேர் முதலாய் வகையொன்று கழஞ்சியொன்று
வித்தேச மில்லாம லிடித்தரைத்து
சாரமுடன் சலமிரண்டு படியிற் சேர்த்து
தயவாக நல்லெண்ணை படிதான் விட்டு
வீறமுட னடுப்பேற்றித் தீயைமூட்டி
விநாயகனைப் பூசித்து யொருநாள் விட்டுச்

சீரான பதம் பார்த்து மெழுகு பதந்தன்னில்
சித்திரமாய் புழுகுசட்டம் கற்பூரஞ் சேறே. 1242

சேரடா குங்குமப்பூ கஸ்தூரி விவைகள்
சிறக்கவொரு வராகனிடை பொடித்துப் போட்டு
வாரடா தயிலத்தை வடித்துப் பின்பு
வைத்திடுவாய் தானியபுடம் பார்த்து நாள்தான்
சீரடா நாலுநாட் கொரு முழுக்கு முழுகச்
சீயக்கா யரப்பு வெந்நீர் சிக்கான தகற்று
போரடா பால்தயிர் மோர் புளிகசப்புமல்லாமல்
புகையிலையு மாங்கிஷங்கள் பொல்லாது தள்ளே. 1243

தள்ளிவிட்டு மறுநாள் தான்கூட்டுவ துகூட்டு
தடையல்ல நீரிழிவு மேகமுதல் வெட்டை
தள்ளிவிடுங் கபாலநீர்ப் பீனிசங்க ளாறுந்
தணலாக யெலும்புரிக்கி மூத்திரமன்றி
தள்ளிவிடு மிந்திரகண்டி கல்லடைப்பன் சிறுப்புத்
தாகமொடு பித்தவரை யூஷ்டின முந்தணியுந்
தள்ளி விடுஞ்சி லேற்பன நீர்மண்டை பீனிசங்கள்
தனியத்தி மூர்ச்சைக்குத் தயிலங்கேளே. 1244

ர ர்ச்சைக்குத் தயிலம்

தயிலங் கேளிலுப்பைப் பூவிலாமிச்சோடு
தனிவேங்கைச் சிராயுடனே யமுக்கிறா நன்னாரி
மயிலான நிலப்பனை வேர் முத்தக்காசு
பங்கயமாம் வளையமொடு நீர் வள்ளிக்கிழங்கு
ஒயிலான குறுந்தொட்டி பூமிசர்க்கரையி
னுடன் கிழங்கு வகையொன்று பலமதஞ்சு
அயிலாக தறித்திட்டுப் பாண்டத்திட்டு
அடையாமல் சலமஞ்சு மரக்கா லூட்டே. 1245

ஊட்டியே யடுப்பேற்றித் தீயைமூட்டி
யோடுங் கலையெட் டொன்றாய்க் குறுக்கிப் பின்பு
நீட்டியே நல்லெண்ணை படியுமஞ்சி
நேரான ஆவின் பாலவ்வண்ணஞ் சேர்த்து
மூட்டுவாய் கற்கவகை யேல மிலவங்கம்
முதுமதுரஞ் சீரகங் களிரண்டு மரமஞ்சள்
கூட்டுவாய் கெந்த மகிலுடன் செஞ்சந்தனஞ் சிட்டி
கூர் சாதிக்கா பத்திரி கிராம்பு சதகுப்பை. 1246

சதகுப்பை கோஷ்டமொடு செவ்வள்ளிக் கொடியும்
சார்வான தேவதாரம் வெட்டி நெல்லிப் பருப்பும்

விதமாக வகையொன்று கழஞ்சியஞ்சு
வெயிலிலே காயவைத்து யிடித்தாட்டு பாலில்
விதப்பல் செய்யாவே கலக்கி யெண்ணை சேர்த்து
வேகவைத்து மறுநாளில் வடிக்கும்போது
பதமெழுகு பதங்கண்டு பச்சைகற்பூரம்
பாங்கான வபினுமுக் கழஞ்சிட்டு வடியே. 1247

வடித்திடுவாய் விநாயகனைப் பூசைசெய்து
வைத்திடுவாய் தெட்டமுகப் பாபடித்தர மாசெய்து
கடித்தவாய் துடைத்தாப் போல் கலமுக்கன்று
பத்தியத்தை தாகவண்டுகட்டித் தானியபுடமாக்கி
முடித்திதனை நைவேதனமும் செய்தபின்பு
முறையாக நாலுநாட் கொருக்கால் முமொன்றிலிட்டுக்
கனிவாகச் சீவக்கா யரப்பு வெந்நீர்கொண்டு
பருவமாய் முடவே பத்துநாள் கழிந்துக் கேளே. 1248

பத்தியங்கள் பால்தயிர் மோர் புளி கசப்புமல்லால்
பாரடா புகையிலையும் பச்சை மாங்கிஷங்கள்
சத்தியமாய் விட்டுவிடு மறுநாளைக்காகும்
சாத்துகிறோம் நோய்ப்போகும் வயணந்தன்னை
முத்தியநீர்ப் பீனிச மோர்ப் பீனிசஞ்சீழ்
ரெத்தகம்னாங்கிவேர் சீராய்பருத்தி விரை போலும் விமுதல
இத்தனையோர் செம்பித்த செங்காநோயு
மிதிற்பிறந்த மேகமொடு யெல்லாம் போமே. 1249

விஷமுஷ்டித் தயிலம்

போமப்பா வொருதலைநோய் கபாலவாய்வும்
பித்தமஞ்சி சிரநோவு மண்டைவரு கரப்பன்
போமப்பா யித்தயிலந் தானே சொன்னேன்
பொல்லா விஷமுஷ்டித் தயிலஞ் சொல்வோம்
போமப்பா சன்னி சயித்தியத்துடனே வாதம்
புரிசத்தி வாயு தோஷ மசதி மூர்ச்சை
போமப்பா மதிமயக்கம் முயல்கண் முகவாதம்
பிறவீச்சு முள்வீச்சு தனுவாதமுடக்கம்
போமப்பா குதிவாத பச்சைவாதம்
போக்கில்லா திமிர்வாத மெண்பதுவும் போமே. 1250

வாதமென்ற யெண்பதுக்குந் தயிலங்கூட்டு
வகையிலுப்பை புன்னை யங்குமயில வேம்பினோடு
நீதமுள்ள நல்லெண்ணை விளக்கெண்ணை யல்லால்
நினைவுடனே மயில் நோய்க்கு வயணங்கேளு

பாதமொடு சிறகுலர்த்தி வைத்திருந்த தெடுத்துப்
பால்வெள்ளை தனில் நொறுக்கிப் போட்டுக்காசு
ஈதன்றி மயில்கறியில் வெள்ளாட்டின் பாலிதின்
வெந்துப்புரைநீ குத்திக்கடைந் திடாயே. 1251

கடைந்திட்ட வெண்ணைதனை யுருக்கிநெய்கூட்டு
கசடற்ற முசுறுமுட்டைக் குஞ்சு கூட்டி
அடைத்திட்ட தொருபடியில் வெந்நீர் விட்டு
அப்பனே பிழிந்திட்ட வஸ்துங்கூட்டு
குடைந்திட்ட பூநாகத் தயிலம் வாங்கி
குரையாம லோர்படிதான் சலத்திற்போட்டு
உடைந்திட்ட மண்ணக்கன் கக்கிப்பின்பு
வோர்கலசத்திட்டு வட்டத் தோடு போடே. 1252

ஓடுபோடது நடுவே துவாரமிட்டு
வோவியம் போல் சீலைமண் செய்யொரு சாணாழப்
போடுவட்டக் குழிக்குள்ளே சட்டிவைத்துப்
பின்பு மந்தக் கலசத்தைக் கவிழ்த்துமூடி
நாடிசந்து வாயதற்குச் சீலைமண்ணுஞ் செய்து
நாட்டெருவுங் கொட்டெருவுமடுக்கித் தீயைமூட்டு
பாடில்லா திறக்கிவிடுத் தயிலங் கண்டாய்
பாங்காக வகைக்கொன்றுக் கரைப்படியும் பதியே. 1253

பதிவான கொடிக்கள்ளி யொருக்குதிரக்கள்ளி
பரிவான யிலைக்கள்ளி திருகுகள்ளிப் பாலும்
பதிவான திவ்விவைகள் வாட்டியே பிழியும்
படிவகைக்கு மறையந்தப் பால்களு மவ்வண்ணம்
பதிவான குழலாதண்டை யிலைச்சாறும்
பாச்சடா அவ்வண்ணம் பருந்தாழி யொன்றில்
பதிவான சந்தவகைச் சாறும் பாலெண்ணை
பதறாமல் கலந்துவிடு பலசரக்குக் கூட்டே. 1254

பரசரக்குப் பெருங்காயம் வசம்பு மரமஞ்சள்
படரான சதகுப்பை சன்னி நாயகமும்
வலையதிகங் கஸ்தூரி சிரகங்கள் மூன்றும்
வீபேமம் பூநாக மயிலெச்சம் விரைந்து
மலையாமல் வகையொன்று கழஞ்சியாறு
மறுபடிநீ வெள்ளிப் பருப்பு மஞ்சுபலந்தா
னிலையாகச் சாறு கொண்டு யிவைக ளாட்டி
நேயமுடன் தீமூட்டி யெறித்திடாயே. 1255

எரித்திட்டுப் பதத்திலே வடித்துக் கொண்டு
என் மக்காள் கணேசனுட பூசைசெய்து

அரித்திட்ட தயிலத்தைப் பதனஞ்செய்து
அப்பனே வியாதிகண்டு தொட்டுப் போடு
விரித்திட்ட சன்னிமுதல் தோஷம் போகும்
மேலான வாதவகை யெண்பதோடுந்
தெரித்திட்ட செவிநாசி நசியஞ் செய்யுந்
தீருதற்கு வுள்ளுக்கோர் காசுசூட்டே. 1256

சூட்டக்கேள் குளிர்நளிர் விஷதோஷசுரத்தைச்
சொல்லுகிறோமுள் வேர்க்குந் தாகமாகும்
சூட்டங்கே ளிடுப்பசைந்து தலையு நோகும்
சூடெழும்பிக் குளிர்ந்த பின்பு குளிர்சுர முண்டாகும்
சூட்டக்கேள் வாந்தியோடு மலசலமுங் கட்டும்
துயரமாய் நாவரண்டு சோகமாகும்
சூட்டக்கேள் சதியுண்டார் கியாழந்தன்னைச்
சூட்டுகிறேன் வகைகேளுஞ் சீந்திகூட்டே. 1257

சீந்தி முத்தக்காசு பற்பாடகத்தோடு
சிறந்த கொடிதூவி வெட்டி யிலாமிச்சம்வேர்
ஆர்ந்த கொத்தமல்லி சுக்கு நிலவேம்போடு
அதுவகைக்கு யிருகழஞ்சி யளவாய் கூட்டுப்
பாந்தமற விடித்துமுக் கூறுசெய்து
பண்புடனே யொருகூறுக் கிருநாழிநீர்தான்
சாந்தகமாய் விட்டு யெட்டொன்றாக காச்சி
தானருந்து தேன்கலந்து மிருபோ திப்படியே. 1258

இப்படியே மூன்றுதினங் கொண்டாயாகி
லெடுத்தசுரம் குளிர்நடுக்கு விஷபாகம் போகும்
வெப்படா திருத்திவிடும் வாய்நீர் போகும்
நெய்நீரும் வாந்தியும் போம் வீறும்போக்கும்
தப்பா தசையுடனே புளிப்பு மோறுந்
தள்ளிவிடு ஆறுதினந் தாண்டு
மப்படியே கொண்டு நின்ற பேருக்கெல்லா
மழிசுரமு மாறலுடன றைகின்றோமே. 1259

அறைகிறேன் பித்தவெட்டை காசற்கூறு
மதிற்பிறந்த பலரோம சதி வாந்தி
மறையாத பெருமேக மிருமலீளை
மதிமயக்கங் காந்தாலும் மெரிவுதாகம்
முறையான நெஞ்சறிப்பு வயிற்றிரைச்ச லுஷ்ணம்
கால்கைகள் காந்தல் போக
வொரு நெய்யைச் சொல்லக் கேளு
நிமிஷத்தில் நிற்பதற்குத் தேற்றாம்வித்தே 1260

(வேறு) தேற்றாங் கொட்டைநெய்

தேத்தாம் விரை கால்படி தன்னைத்
தேய்த்துக் கழுவி யுலரவைத்து
நேத்திப் பசுவின் பாலதனில்
நினைக்க மூன்று தினமூறப்
பார்த்து வதனை யிருகூராய்
வெட்டிப் பால்விட் டாடியபின்
சேர்த்துத் திரட்டி யதனளவு
பசுவின் நெய்யும் சேர்த்திடுமே. 1261

சேர்த்தபின்பு நெய்ச்சட்டி
அதனிற் போட்டு அடுப்பேற்றி
போர்த்திடாதே தீமூட்டி
யெரிக்கிற் கடுகு பொன்னிறமாங்
கூற்றுப் பார்த்துக் கடைமருந்து
கூறக்கேள் சீரகமேல
மேத்த வது தானிரு களஞ்சு
மின்ன மியம்ப வகைநீகேளீர்.' 1262

கேளு சாதிக் காய்பத்ரி
கிராம்பு சிறுநாகப் பூவும்
நீளு தாளிச பத்திரியும்
நீதி யுடைய வதிமதுரம்
வாளுங் கருஞ் சீரக மேல
மிலவங்கப் பட்டை சதகுப்பை
மீளும் திரிகடு குடனஞ்சு
விராக னிடைக்கூட் டிடுமே. 1263

கூட்டு மீரேழ் மருந்துக் குங்
குறுக்கக்கருக்கி நிழலுலர்த்தி
நாட்ட முடனே விடித்துப்
பொடியாக் கியதையும் வடிகட்டி
வாட்ட மில்லா நெய்சட்டியில்
மகிழ்ந்தே நெய்யில் பொடிகளுடன்
கூட்டாய் மூன்று பலஞ்சீனி
கலந்து பொடி போல் தூவிடுமே. 1264

தூவிக்கிண்டி வெதுப்புடனே
துணிவா யிறக்கி வண்டுகட்டி
ஆவிக் கேற்ற தினம்பார்த்து
அப்பா கொட்டை பாக்களவு

மேவி யிருபோ தெண்ணஞ்சு
　　தினமும் விளம்பிக் கொள்வீரேல்
கோபித் திருந்த பித்தவெட்டை
　　கும்பிட் டோடு ங்கண்டாயே. 1265

கண்டா யத்திகுர வெட்டை
　　கால்கை யெரிப்புக் காந்தலொடு
பண்டே யெழுந்த சூடு முதற்
　　பணைத்த விருமல் புகைச்ச லொடு
துண்டாய் வந்த க்ஷயரோகந்
　　தொட்ட வியாதி யத்தனையும்
வண்டார் குழலாய் பயந்தோடும்
　　வச்சிர தேக மாக்கிடுமே. 1266

வேறு

ஆய்க்கிய யிந்த நெய்க்கும்
　　மசடில்லைச் சத்தியங்கள்
நீக்கிடு புளிகசப்பு
　　நிறுத்தினால் மெத்தநன்று
போக்கிலே கொள்வீராகில்
　　பொறுப்பது வெகுநாள் சொல்லும்
சீக்கிரம் நிவர்த்தியாகச்
　　செய்தகாந்த லெரிவைக் கேளே. 1267

வேறு

காந்த லெரிவா யெடுத்ததற்குக்
　　கியாழ மொன்று கழற்றுகிறேன்
சேர்ந்த மிளகு மறுகம் வேர்
　　சீராய்ச் சமனாய் தாக்கியதைப்
பாந்த மகாநீ ஓர்படி
　　விட்டே யெட்டொன்றாக்கிய பின்
வார்ந்து வடித்த வெண்ணை
　　யிட்டொய்க் கொள்ள வாங்கிடுமே. 1268

வேறு

வாங்கிட யின்ன மொன்று
　　பகருகிறோம் கியாழந்தன்னைப்
பாங்குடன் பத்தியான
　　பேர்க்கெல்லாம் பலிக்குமப்பா
தீங்கு சேர் மாந்தர்க்காகச்
　　செய்திடத் திறமாகாது
சாங்கமாய் செய்ததெல்லாம்
　　தவமுள தேகத்தோர்க்கே. 1269

வேறு

தேகங் காந்தல் நெஞ்சரித்தல் தீரக்கியாழம் செப்பக்கேள்
வேகமுடைய மிளகுவல்ல வேரினா வயிரமிழைத்ததுவும்
பாகஞ் சமனாய்தாக்கு ரெட்டிப் பாங்காய் கொத்தமல்லியிடு
ஏகமாக விருநாழி நீரிலெட்டெட் டொன்றாக்கே. 1270

வேறு

ஆக்கிய கியாழந்தன்னை யந்திசந்திக்கு வைத்து
நீக்கிடு பாதிதன்னை நீவடிகட்டிபின்பு
தாக்கிட துலைபால்பாதி சாரித்து தளிச்சிரகம்
வாக்குடன் வசிக்கநியும் வறுத்ததை பொடிசெய்வாயே. 1271

பொடிவடி கொண்டு ரெண்டு பணவிடை பொடிமேல் போட்டுக்
குடியது மூன்றுபோதில் குணங் காந்தலெரிவு நிற்கும்
துடியுட ைழல் நீர்விட்டுச் சொஸ்தமா யிருக்கச் செய்யும்
படியுள்ளோர் தமக்கு பித்தம் பணைத்தது வாந்தி கேளே. 1272

வேறு

வாந்தி யரோசி பித்தமதில்
வாய்நீ ரூரல் நெஞ்செரிப்புச்
சாந்தியாகக் கியாழ மொன்று
சாற்றக் கேளு தணிவதற்குப்
பாந்தமாய் வில்வவே ரிழைத்துப்
பகருங் கொத்த மல்லி
நேர்ந்த நெல்லுப் பொரிமதுரம்
நெல்லியு டன்முந் திரிப்பழமு
மாந்த சீனி கற்கண்டு
மடைவால் வோர்கழஞ் சொன்றே. 1273

வச்சிர வல்லி சூரணம்

ஒன்றாய் நறுக்கிப் படியொன்றி
லொடுக்கி யெட்டோன் றாக்கியதை
அன்றாட மூன்று தின
மந்தி சந்தி கொள்வீரால்
சென்றா ரென்றே விட்டகன்று
திருப்பிப் பாரா தொளித் தோடு
மென்றே கியாழ மொழிப்படியே
யிணங்கச் செய்வீ ரியல்பாயே. 1274

இயல்பாம் வச்சிரவல்லி யென்ற
திதுகா ணினிய சூரணங்கள்
மயலா காத சதுரப்பிரண்டை
மணிமுந் தினது சமூலமெல்லா

மொயிலாம் வில்லை போல் நொறுக்கி
யுரலில் துவத்து வுலரவைத்துப்
பயிலா யிடித்து தூதுவளை
பருவத் துடனே வைத்திடுமே. 1275

வைத்த பின்பு மேல் மருந்து
வகையை கேளு திரிகடுகு
எய்த்த திரிமால் கல்லுப்பு
மிசைந்த செவ்வியஞ் சிற்றரத்தை
மொத்தா ரேல மிலவுங்க
முதிர்ந்த கெந்தத் திப்பிலி மூலம்
சித்தா ரென்று சீரகமுஞ்
சீன முடனக் கிறாகாரம். 1276

கார மான யிந்துப்பு
கிராம்பு சாதிக் காய்கத்திரி
வீர முடைய வமுக்கிறாவும்
வகைக்கு நாற் கழஞ்சு
சார முடைய கடுகுரோணி
கனியும் வெண்காரம்
பேராம் வகைக்கு மிருகழஞ்சி
யொடு நவாச் சாரங் கல்மதமே. 1277

வேறு

கல்மதம் சாரம் ரெண்டு வகைக்கொரு கழஞ்சுகூட்டு
பல்வித மருந்து கழஞ்சி பார்த்து வகை யதனில் பாதி
வெல்வது வச்சுரவல்லி பொடிசேரவ் வண்ணஞ் சீனி
செல்வது மூன்று மொன்றாய்த் திரட்டு சூரணந்தான் திண்ணே. 1278

திண்ணடா வந்திசந்தி வெருகடி தேனிலேதான்
பண்ணடா குன்மவாய்வுப் பித்தமுந் தீரும்.
பிண்ணடா கபால வாயு வுடனே வெண்கோழை தானும்
விண்ணடா காசக்கூறு வெகுண்டு விட்டோடும் பித்தம். 1279

பித்தமா முஷ்ண ரோகம் வெருகிய வெட்டைக் கெல்லாம்
தித்தியாய் வெண்ணை நெய்பால் மோர்தனைச் செலுத்துவீரால்
வெத்தியாய் நிவிர்த்தியாகும் வேறொன்று மில்லையப்பா
சத்தியம் புளிக சப்பு தள்ளடா சுகமதாவே. 1280

தமனகாதே சுரநெய்

சுகமதா மன காமீசுர சூரணத்தைச் சொல்வோம்
ஜெகம்புக ழமிர்த சர்க்கரை சீர்பத்துக் கழஞ்சிகூட்டி
இகம்பரவமுக்கிராதே ரெழில் கண்டங்காரி தூதி
திகையவே முத்தக்காசு நிலப்பனை பகர்ந்திட்டாரே. 1281

பகர்ந்தது வில்வவேரும் பாதிரிப் பொன்னாங்காணி
சுகந்த நகரி நத்தச்சூரி வேர் சிறுநெருஞ்சி
யுகந்த கீழ்க்காய் நெல்லி யொடு சிறுகீரை வேரும்
புகழ்ந்த மாதுளம் வேர் வெட்டி விலாமிச்சம் வேரும் போடே. 1282

போடம்மான் பச்சரிசி ழவேரும் பெரிய ஆவரைப்வேர்ப்பட்டை
தேடிய வத்திபட்டை சிறந்த கோரக்கர் மூலி
கூடியவித்துச் சாதிக்காய் பத்திரி கூகைநீரும்
பாடிலசிறும்புமேல் முந்திரி பழங்கற்கண்டே. 1283

கண்ட சித்திரத்தைக் கல்நார் கல்மதங் கொத்தமல்லி
விண்டதாளி சபத்திரி மிஎ.கு திப்பிலி சுக்கோடு
பண்டதி மதுரமொன்று பகர்ந்தனர் கழஞ்சு மூன்று
வண்டலார் குழலாய் மற்ற வகையினி துரைக்க லுற்றோம். 1284

உற்ற சீரகந்தான் ரெண்டு குரசானி ஓமம்நெல்லி
சிற்றி லவுங்கம் பத்திரி சிறுநாகப் பூவதல்லால்
கொற்றவ தேவதாரம் விளாவாடு கோஷ்டந் தக்கோலம்
முற்று கத்தூரி மஞ்சள் கெந்தத் திப்பிலியின் மூலம். 1285

மூலம் வாள்மிளகு தெசாபுரத் தோடுசெகச்சோழஞ்
சீலமா மன்னபேதி சிறந்த மாதுளத்தினோடு
கோலமா மக்கிறாகாரங் கூறிய வாய் விளங்கம்
வால்கோடு மகரம் பூவும் வகைக்கிரு கழஞ்சுதாமே. 1286

ஆமொரு கழஞ்சு விதம்விட்டு குங்குமப்பூ வல்லால்
கோவெருதுடைய கோரோசினை யொடு கூறினோம் பின்
நாமநாறுங் கஸ்தூரி நல்ல நெற்பொழியுங் கூட்டிப்
பூமிநாடன் பருத்திப் பருப்பொடு தழஞ்சிப் பொடியே. 1287

பொடி செய்வ தெட்டெட்டுக்குப் போற்ற நூற்றெழுபத்தெட்டு
வெடி வெயிற் காயவைத்து மெல்லிதா யிடித்துச் சோம்பாய்
வடிசெய்து யிதிற்பாதி வங்காளச் சீனி போட்டு
படியவே புதுப்பாண்டத்திற் பதனஞ்செய் பண்பாய்த்தானே. 1288

தானென்ற மேகவட்டை தனித்தாது நட்டமானால்
தேனென்று நெய்பால் மாதுளம் பழச்சாற்றில் தின்னப்
போன வீரிய விருத்திப் புருடர்க்குப் பொங்கி வாழும்
ஞான தேசிகன் போற் காயஞ்சுப் பிரமாக நண்ணும். 1289

நண்ணுவீர் நாற்பத்தெட்டு நாள்பாதி யருந்துவீரால்
புண்ணிய புருடனாவான் பூமகள் விரும்பிவாழ்வாள்
திண்ணமாய்ப்பிலனுண் [illegible]ருந் தினந்தோறும் பால்கொள்வீர்
அண்ணலா ரருளினாலே யடிந்துசெய் யதினாலாமே. 1290

அறிந்து செய்வாத சீத வனுகிடி லிஞ்சிச் சாற்றில்
செறிந்திடு வெருகடிநீ தின்றுவா பத்துப்போது
பிறித்திடுங் குடைச்சல் நீங்கிப் பின்னிய முடக்குந்தீரும்
முறிந்திடா தனுபானத்தில் முத்துநீ யருந்து வாயே. 1291

அருந்திய நாள்மட்டுக்கு மப்புரம் விடுதிவிட்டால்
திருந்தியே வாதசீயும் பித்தங்கள் சேரொட்டாது
பொருந்திடு பிணிகட் கெல்லாம் புகலிடங் கெதிகெட்டோடும்
வருந்தியே யுண்ண வாந்தி மலப்பந்த வாய்வு போமே. 1292

வாய்வோடு முந்நூற்றாறும் வாதங்க ளென்பத் தொட்டும்
பாய்கின்ற குன்மமெட்டும் பலமேகமிருபத் தொன்றும்
நோய் மூல கிராணிபாண்டு விஷபாகம் நொறுக்கும் பின்னும்
சீய்ரத்தங் குளிர்சுரங்கள் தீரும்நோய் நிருமூலமே. 1293

வேறு அதிவிடய சூரணம்

மூலக் கிராணிக் கதிவிடைய
முகில் சூரணத்தின் வகைகேளாய்
சீலத் திடையம் பெருங்காயம்
சிறுநாகப்பூ திப்பிலியுஞ்
சால நிறைந்த சரதிபல
திரிசமன் முக்கழஞ்சு சாதிக்காய்
தூல சூட்ச னமங்கழஞ்சு
தூய திப்பிலி நாற்கழஞ்சே. 1294

கழஞ்சி செட்டுவேர்க் கொம்பு
கடுகு வெள்ளுள்ளி யப்படியே
கழஞ்சி பத்து நாய் கடுகு
கருத்தாய்ப் போங்க ளங்கமற
கழஞ்சி பத்துத் திப்பிலியு
மூலமொடு கட்டாக விரு
கழஞ்சிய பினுங் கூட்டிடுவாய்
கனிவாய் வெதுப்பித் தூளாட்டே. 1295

ஆட்டி யதற்கு ளஞ்சுபலம்
சீனிகலந்து புதுக்கக்கத்
தாட்டியது தான் சூரணத்தை
யப்பா வந்திசந்தியோடு
ஆட்டியதுவும் வெருகடிதான
ருந்த வனுபானத்தின் வகை
ஆட்டி முத்தக் கியாழத்திலு
மருந்தே னிஞ்சிச் சாருமே. 1296

ஆமே கிராணி யாறுவகை
யசடு தீரு மனுபானம்
ஆமே சுக்கு கடுகெள்ளு
அப்பா திப்பிலி சமனாக
ஆமே வெதுப் பித்தூளாட்டி
யதிலே பாதி சூரணமும். 1297

ஒழித்த தற்கு யின்ன மொன்று
வூட்ட வகைகேள் பெருந்துமடை
வழியா நொச்சில் கருவேம்பி னீர்க்கில்
முருங்கை யீர்க்கிலை யோடு
நெழியாய் கொழிஞ்சி சாரணை வேர்
நிதி முத்தக் காசு சுக்கு
வெழியாய் நல்ல மலைதாங்கி
வேருஞ் சமனா யிடித் திடுமே. 1298

இடித்ததை முக்கூறிட்டு
யியலொரு கூறுக்குத் தான்
படித்தரமாக வப்பாச்சிரு
நாழி தினக்
குடிப்பதற் கெட்டொன்றாக்கிக்
கொல்லுவதுக் கொன்று கேளும்
முடிப்பது கிழிமருந்து
மிளகு திப்பிலியுஞ் சுக்கே. 1299

சுக்கு வெள்ளுள்ளி யோமம்
சூட்ட திவிடை வசம்பு
திக்கிலா ரெண்டோ டேத்தித்
தாழ்வில்லாக் கிழியுங்கட்டி
பக்குவத்துடன் தானந்தக்
கியாழத்திற்பாச்சி பின்பு
தொக்கடா வந்திசந்தி
துணிந்து தானணிந்து கொள்ளே. 1300

வேறு

கொள்ளவே மூன்றுதினத் துடனே மூலங்
கூட்டோடே விழுந்து போங் குறைதானில்லை
விள்ளுறே னின்னமொரு கியாழந்தன்னை
வேப்பீர்க்கில் கருவேம்பி னீர்க்கில்சுக்கு
விள்ளுறேன் வெள்ளுள்ளி திப்பிலியோடு
விராகந்தா னினமருந்து வகைக்கு மூன்று
உள்ளுவே னொள்ளிதாய் கிழிப்போல் கட்டி
யொருநாளைக் கிருநாழி நீரையூட்டே. 1301

ஊட்டியதை யெட்டொன்றாக் குறுக்கிப் பொட்டணத்தை
யொருநாளைக் கிருபோது அரைத்ததையுங் கலக்கி
யூட்டியதில் மூன்று தினம் மூலம் வேரோடு
மோடுங் காணின்ன மொருகியாழங் கேளு
ஊட்டியதில் வெள்ளுள்ளி கருவேம்பினீர்க்கு
வோகோ கோசுக்கு வேம்பீர்க்கில் திப்பிலியு
மூட்டியது சமனாகத் தட்டியே கியாழ
மொப்பாகச் சலமிரண்டு படிதான் சேரே. 1302

சேரடா யிப்படியே மூன்று நாளப்பா
தினந்தோறு மெட்டொன்றாய் குறுக்கி வாங்கி
வாரடா விருபோது மருந்தினாக்கால்
மாசக் கலமூலம் வேர்மடிந்து போகும்
பாரடா பத்தியங்கள் புளிகசப்பு மாற்று
ஆச்சரியங் கியாழங்க ளோடவில்லை
பாரடா வேணதுண்டு சுருக்கிச் சொன்னோம்
பண்பான சிவதை சூரணந்தான் பாரே. 1303

சிவதை சூரணம்

பாரப்பா சிவதை சூரணத்தைத் தானும்
பாடினோம் சிவதை யொரு பலந்தான் கூட்டு
பாரப்பா திரிபலையுங் கொத்தமல்லி ரோகிணி
பகர் தெசாபுர மிந்து செவ்விய முத்தக்காசு
பாரப்பா திரிகடுகு சீரகங்கள் ரெண்டும்
பண்பாகச் சிறுநாகப்பூ வன்னபேதி
பாரப்பா விலாமிச்சு வகைக்கு முக்கழஞ்சு
பழந்தேவ தார மிலவுங்க பத்திரியே. 1304

பத்திரியுங் கோஷ்டமொடு நல்லகெந்தம்
பரிவான பொரிகாரங் கஸ்தூரி மஞ்சள்
முத்திரிகா சடமாஞ்சி வாய் விளங்க
முறையாக வகைக்கொன்று கொன்றரையாங்கழஞ்சு
இத்தனையா நாலேழு மருந்துலர்த்தி பிடித்து
யென் மகனே வடிகட்டி சீனி யந்திடைக்கு
அத்தனையு மொன்றாய்க் கலந்து சூரணித்து
அருந்துவாய் வெருகடிதா னபான வாயுவுக்கே. 1305

வாயுவென்னப் பட்டதுக்குத் தேனிஞ்சிச் சாற்றில்
வளமாக யொருபோது கொள்ளத் தீரும்
தேயமுதல் கலக்கியது பழமலம் நீர்க்கட்டுந்
திறந்துவிடு மல்லாது தேக சொஸ்த முண்டாம்

நேயமுள்ள பேர்க்காகு மலக்கட்டில்லை
நினைவு கெட்ட மாந்தருக்குச் செய்ய வேண்டாம்
மாயமுள்ள மருந்தெல்லா மடக்கம் விட்டுச் சொன்னோ
மப்பனே வொப்பில்லை யனேக நோய் பறக்கும் பாரே. 1306

வேறு

பறந்திடும் பத்து நாட்குள் பழமலங் கழியும் வாய்வு
மிறந்திடு முஷ்ணம் போக்க மிருமலு மீளை நீங்கும்
சிறந்திடு தினவும் வாங்கும் நிரைந்ததை யுண்டு வந்தால்
நீள் பிணியண் டொட்டாதே. 1307

வேறு

ஒட்டாத ஈளையோ டிருமல் விக்கலோடிடவே
திப்பிலி வெந்தயம் நெல்லிப் பருப்பு
சட்டாத சிற்றரத்தை நெய்பொரி சர்க்கரையுஞ்
சமனாக வகையொன்று கழஞ்சி யாறு
முட்டாகக் காய வைத்துத் தூளாயாட்டி
முறையோடே வடிகட்டிக் கொண்டு நெய்யில் விரவி
கட்டாக வந்தி சந்தி கொட்டைப் பாக்களவு
கடங்கழறத் தின்று வரில் கள்ளம் போமே. 130S

கள்ளம் போம் களகளத்த யிரும லீளை
கபங்களொடு சயக்கூறு விக்கல் போகும்
கள்ளம்போ மின்னமொன்று விக்கலுக்கு
கனிந்த தொரு விளாம் பழத்தின் விரையைப் போக்கி
கள்ளமில்லா முலைப்பாலில் சாரித்தப் பால்கடிய
நல்ல திப்பிலியை வறுத்துக் கொண்டு
கள்ளமறத் தூளாக்கி வடித்துயிந்து
கால்கழஞ்சி மமுக்கிறாவேர் சுட்டறியே. 1309

கரியான திலையொக்க வொன்றாச் சேர்த்து
கறந்தகொம்புத் தேனிலே கலந்து கொண்டு
விரிவான யந்திசந்தி கொள்ளக் கொள்ள
விக்கலெல்லாம் பறந்தோடு மிளைப்பு மீளை
பிரிவான விருமலொடு வரட்சி தாகம்
பேரான தோஷமுதல் பிரிந்து போகும்
தெரியாத வகையெல்லாம் சொல்லி விட்டோம்
சிறந்த மகா வில்வாதிலேகிய மாநிலத்தே. 1310

மகா வில்வாதி லேகியம்

மாநிலத்தில் வில்வாதி லேகியத்தை
வகையாகச் சொல்லுகிறோம் வரிசையாகக்
கானகத்தி லில்லாத வில்வவேர் தான்
கனத்த பிரயோகத்துக்கஞ்சு துலாம் நொறுக்கித்

தானென்ற பாண்டத்தி லஞ்சு கல நீரும்
சாதகமா யடுப்பேற்றி யெட்டொன்றாக்கிக்
கோனென்ற வடிகட்டி தாழி சேர்த்து
கூறாக வஞ்சு துலாம் பொடியைப் போடே. 1311

போட்டபின்பு சர்க்கரைதா னுருகிற்றானால்
பிறகுமதை வடிகட்டித் தாழிசேர்த்து
நாட்டமுட னிஞ்சிச்சார் நெல்லிச்சாறும்
நலமாக வகைக்கு மொரு தூணி சேர்த்து
வீட்டிமை யில்லாத கடை மருந்தைச் சொல்வோம்
வெதுப்பான வெய்யிலிலே காயவைத்துத்
தீட்டடா தனிமிளகுப் பொடியு மொரு குறுணி
திப்பிலியுஞ் செவ்வியமொடு தூளாறுபடியே. 1312

படியல்லால் பலமாகச் சுக்குப் பத்தஞ்சு
சூபலாமாடு யேல மிலவங் கஞ் சிறுநாகம்
கொடிய தாளிசபத்திரி சிற்றரத்தை மதுரங்
கோட் டமொடு பேரரத்தை யக்கிறாகாரம்
துடியாக வகையொன்று பலந்தானஞ்சு
சொன்னதின் பின் சாதிக்காய் பத்திரி கிராம்பு
பொடியாக வகையொன்றுக் கீரஞ்சு பலந்தான்
பொடியாக்கி மருந்தெல்லாம் வடிகட்டிப் போடே. 1313

வடிகட்டி பொடியெல்லாம் கூடச் சேர்த்து
வளம்பெறக் கியாழமொடு பாகு சாறல்லால்
நெடியதொரு கருப்பம்பால் கொம்மட்டி மாதளையாம்
நேத்திபெறு பழச்சாறு வகைக்கு மஞ்சுபடிதான்
முடிவாக முன்சாறும் கூடக் கூட்டி
முறையோடே வடுப்பேற்றிப் பாகுகாச்சி
அடிமுடியா யிருக்கின்ற கணேசனைப் பூசித்து
அக்குழம்புப் பாகிலே மருந்து மமைத்திடுமே. 1314

மருந்தான பொடிப்பாகில் தூவித்தூவி
வளமாக கைவிடாமக் கிண்டி கிண்டி
பொருந்தவே கிளறியபின் நெய் படியிரண்டரையும்
பொலிவுடனே விட்டிளக்கித் தேனும் வண்ணம்
திருந்தவே விட்டிளக்கி லேகியமாய் கண்டாய்
தின்னவே யிருபோது கொட்டைப் பாக்களவும்
அருந்துவது மண்டலந்தானணுகாது நோய்கள்
சைடில்லை நோய்க்கு மார்பாணி யெனலாமே. 1315

ஆமப்பா தீராத நோயுங்கட்டு
மதினாலே யொழிகின்ற வியாதி கேளு
வேமப்பா குன்ம முதற் குஷ்டம் போகும்
வெட்டை போம் சதியோட ரோசியம் போம்
போமப்பா க்ஷயகாச மிருமலீளை
புகைச்சலொடு நெஞ்செரிப்பு பித்தசோகை
நாமப்பா காமாலை தொந்திப் போடு
நலங்கொடுக்கு மதிசாரம் நாடா தோடும். 1316

ஓடுகிற வயிறிறைச்சல் ரத்தக் கடுப்பு
முளமாந்தை தலைநோயு சுரமாந்தைதீரும்
சாடுகின்ற வெரியுங் காந்தல் தீரும்
தாகம்போம் நீரேற்ற முப்பிசமுந் தீரும்
வாடாத புலத்தியனே ஞானசிலா
வளமான சிவயோகி மச்சகேந்திரா
நாடுகின்ற நோயெல்லாம் விட்டோடிப் போமே
நல்லபிர யோகமடா பத்தியமும் நலமே. 1317

பத்திய முப்பு நெய் பால்துவரை பருப்பாம்
பழுதகற்றும் வழுதலங்காய் முருங்கைப் பிஞ்சாகும்
சத்தியெனு முளைத்தண்டு மவரைப்பிஞ்சாந்
தனிநெல்லி யண்டமொடு விரால் தேளி சுறாமீன்
வெத்திபுரி வெள்ளாடு காடை முசலுடும்பு
மீன்வகைகளிது வெல்லா முலர்த்தியே கூட்டு
மத்தியிலே விடாமல் நீமண்டலந்தான் கொண்டால்
மகாநோயுந் தீருமந்த மகிமை நீயறியே. 1318

வில்வாதி லேகியம்

மகிமைக்கு வில்வாதி லேகியத்தை
வகையாகச் சொல்கிறேன் மைந்தாகேளு
மகிமையுள்ள வில்வ வேரஞ்சு பலந்தான்
வாகாக நொறுக்கியே யிருதூணி நீரில்
மகிமையுள்ள பாண்டத்தி லிட்டுத் தீமூட்டி
வளம்பெறவே நாலொன்றாய்க் குறுக்கி வடிகட்டி
மகிமையுள்ள சர்க்கரைதா னீராறு பலத்தை
வற்றிநின்ற கியாழத்தில் மாட்டுவாயே. 1319

மாட்டுவாய் போட்டதிலே தகர்ந்து காச்சி
வற்றியது குழம்பாகிப் பாகாய் நிற்கும்
மாட்டுவாய் மிளகுபொடி செவ்வியத் திப்பிலியும்
வளமான மகாராஜ யோகதிரா

மாட்டுவாய் மலமச்ச கெந்தி புத்ரா
வகையொன்று படி காலாய் வகுக்கக் கேளு
மாட்டுவாயே லமிலவங்க மிஞ்சி
மகத்தான சிறுநாகம் தாளிசபத்திரியே. 1320

பத்திரியோடி வைக்கெல்லாம் வகைக் கொரு பலந்தான்
பகர்ஜாதி பத்திரி கிராம்பு பல மரையா
மித்தனையுங் காயவைத்து தூளாயாட்டி
யியல்பான சாறுபாகிது பருவங் குழம்பாய்
வத்திவரும் நேரத்திலே கடைமருந்து தூளை
வடிகட்டி தூவியதை வாகுடனே கிளறு
வெத்தியாய் லேகிய மாமதிலே நெய் தேன் விட்டு
ஆழாக்கு விரவியதை கிண்டே. 1321

கிண்டியது லேகியந்தா னுண்ணக் கேளு
கேடில்லை கொட்டைப் பாக்களவு அந்திசந்தி
கிண்டிய லேகிய மருந்த வாயுற்று வலிகுன்மம்
கிண்கிணித்த விருமலோ டீளைகாசம்
கிண்டிய லேகியத்தினால் நெஞ்செரிப்பு வாய்வு
கிராணி யதிசார மொடு பித்த காமாலை
கிண்டிய லேகியத்தினால் தேக காந்தல்
கிளர்தாகஞ் சோபமொடு வாதந் தொந்திப்போ. 1322

தொந்திப் பலரோக முஷ்ணரோகம்
சோகமொடு விஷபாண்டு சுரங்களுப் பிசங்கள்
தொந்தித்த வயிறுளைச்சல் தோஷம் வாந்தி
தொடர்ச்சியாய் வருமிரத்த பித்தரோகந்
தொந்தித்த நீரேற்றம் வீக்க மலக்கட்டு
தொலையாத தலைவலி துயரந்தீரும்
தொந்திப்பால் லேகியந்தான் மண்டலந்தான் கொள்ளு
சூட்டுறேன் குண்டலாதி லேகியந்தானே. 1323

(வேறு) குண்டலாதி லேகியம்

குண்டலாதி லேகியத்தைக் கூறக்கேளு குவலயத்தில்
மண்டு சங்கம் வேர் நூறுபலமும் செவியமதிற் பாதி
கண்டங் காரியும் அவ்வண்ணங் கடுந்திப்பிலி மூலம்
பண்ட முத்தக்காசு வில்வம் சித்திரமூலம் பகர்ந்தோமே. 1324

பகர்ந்தோம் சீந்திநிலைப் பனைவேர் பலனாம் வெட்டி விலாமிச்சு
பகர்ந்தோம் சிற்றாமுட்டிக் கொட்டி க் கிழங்கு மமுக்கிறா வேர்
பகர்ந்தோம் வகைக்கு நாலஞ்சு பலமுங் கூட்டியிடித்த தூள்
பகர்ந்தோம் பாண்டந் தனிற்பத்து மரக்கால் பாணி சேர்ந்திடுமே. 1325

பாணிசேர்த்துத் தீமூட்டிப் பருவத்துடனே யெட்டொன்றாய்
பாணி குறுக்கிக் கற்கவகை பகர்வோந் திப்பிலி பலமிரண்டு
பாணிக்கிசைய கூகை நீறு பலந்தானாலு நாகப்பூ
பாணிக்கிசைய சீரகங்களிரண்டு வகையும் பலம் மூன்றே. 1326

மூன்றா மேல மிலவங்க முத்தக்காசு சிறுதேக்கு
மூன்றாம் கற்கடக சிங்கியொடு மூலம் சாத்திப் பெருங்காயம்
மூன்றாம் வகைக்கிரண்டு பல மிளகு பொடிதா னரைப்படியே
மூன்றாஞ் சுக்கும் பொடியரையா முழுது மிடித்துத் தூள்வடியே. 1327

வடித்த தூளொன்றாக்கி வைத்த கியாழங் குழம்பதிலே
கடித்தாப் போலே பொடிதூவிக்களரக் கிண்டி வற்றவைச்சு
பிடித்த பிடியாய் நறு நெய்யோர்படியும் விட்டுக் கிண்டியபின்
தடித்த நறுந்தேன் படியொன்று தான் விட்டிளக்கிட லேகியமே. 1328

வேறு

லேகியமோர் புதுக்கரகத் திட்டுவைத்து
    என் மகனே வியாதிகண்டு அந்திசந்தி
லேகியமோர் மண்டலந்தா னுண்ணு வுண்ணு
    மியல்பான வியாதிபோம் வகையைக் கேளு
லேகியந்தான் சிலேற்பனங்க ளெல்லாந்தீரும்
    மிடர்படுத்தும் வாயுவென்ற தெல்லாந்தீரும்
லேகியத்தா லிருமல்போம் குண்டவாய்வு
    மெட்டுவகைக் குன்மங்கள் பலவுந்தீரும். 1329

தீராதவிக்கலொடு வெங்காரங்கள்
    திறமான பீனிசங்க ளுதரவேதனைகள்
தீராத சுர தோஷஞ் ஜன்னியோடு
    தேகத்தி லேங்கல் குத்துகுடை வுளைச்சல் தீரும்
தீராத வுப்பிசங்கள் நீரேற்றம் வீக்கஞ்
    செய்யா மலக்கினி யின்மந்தஞ் சீதபித்தந்
தீராத னெஞ்செரிப்பு வாந்தி சூடு
    தெளியாத பலநோவுந் தெளியுந்தானே. 1330

தெளியாத ரோகங்கள் பலவுந்தீரும்
    செப்பினேன் பத்தியத்தை திறமாய்க் கேளு
தெளியாத புளிகசப்பு புகையிலை மாங்கிஷங்கள்
    சீரான கடல் சம்பைப் பாகல் பூசனிக்காய்
தெளியாத பாவக்காய்ப் புண்சுரை சோம்பு
    தீண்டாதே விலக்கிவிடும் சேர்ந்தருந்தக் கேளு
தெளிவான நெய்பாலு மிளகுழம்பு
    செங்கீரை முளைத்தண்டு வழுதலையுமாமே. 1331

ஆமப்பா கொடுப்பையோ டவரைபிஞ்சு
மப்பனே வெள்ளாட்டுக் கண்டமாகும்
ஆமப்பா கடல் சம்பை தேளுமாகு
மந்நேரங் குளச்சம்பை யுலர்ந்ததாகும்
ஆமப்பா முருக்கையிலை பிஞ்சுமாகு
மரைக்கீரை தழை யறுத்துத் தளர்ந்ததாகும்
ஆமப்பா பசுவின்மோர் புளியதாகு
மாச்சபயஞ் சுவாசகுடோரி சூரணத்தைக் கேளு. 1332

சுவாசகுடோரி சூரணம்

சூரணமாஞ் சுவாசமென்ற குடோரி தன்னைச்
சூட்டுகிறேன் திரிகடுகு சிற்றரத்தை
சூரணமாம் வக்ராகாரம் வால்மிளகு
சொல்லரிய தேசாபுரம் பொரிகாரஞ்சமனாம்
சூரணமாந் தாளிசபத்திரி ரெட்டி கூட்டி
சூரிய புடத்தி னிலுலர்த்தி தூளாயாட்டி
சூரணமாய் வடிகட்டி கலந்து புதுக்கரகத்
தூட்டுவாய னுபானஞ் சொல்லக் கேளே. 1333

சொல்லக்கேள னுபானந் தேனிஞ்சிச் சாற்றிற்
சுகமான நறுநெய்யுங் கூட்டிப்பாரு
சொல்லக்கேள் தீருகிற தென்னவென்றால்
சுவாசமென்ற தொண்ணூற்றாறும் போகும்
சொல்லக்கேள் ஈளையொடு யிருமல் காசம்
சூடதிக வெட்டைமுதல் தூளாய் போகும்
சொல்லக்கே ளிதற்கொத்த செந்தூரம் புகுந்தால்
தொல்வினைகள் விழுந்தோடும் சுருதிதானே. 1334

குமரித் தயிலம்

சுருதிவெட்டை சூட்டுக்கு செப்பக் கேளு
சுகமான குமரியென்னுந் தயிலந் தன்னை
சுருதி வெட்டிவேர் முத்தக்காசு தானும்
தொகைவ்வகைக் கிரண்டு பலந்தோணப் போட்டு
சுருதி கொற்றி முடக்கொற்றா னமுக்கிறாவேர்
துடியான சிற்றாமுட்டி யிலாமிச்சி நாரி
சுருதி தாமரைவளையஞ் சீரா செங்கழுநீர்
துணுக்காக நொறுக்கி மூன்றுவகை பலமே. 1335

வகையொன்று பலமூன்று வீதஞ்சேர்த்து
மைந்தனே யிடித்துத் தூள் பாண்டத்திட்டு
தொகையாக தூணி நீர்விட் டடுப்பிலேற்றித்
தோன்றவது நாலொன்றாய் குறுக்கி தாங்கி

பகையாமச் சாறுவகை கரிசாலைச் சார்
பாங்கான சிறுகீரைச் சாறுங்கூட்டு
மிகையாது கொடுப்பாய் மொசு மொசுக்கைச் சாறு
மேற்குமரி நெல்லிக்காய் சாறே. 1336

சேரடா நீர்வள்ளிக் கிழங்குசாறு
சிறந்த நல்லிள நீர்தான் திறமாயப்பா
சேரடா படிதானும் வகைக்கு நாலு
சேரவிட்டு நாலொன்றாய் குறுக்கி வாங்கி
சேரடா முன்வைத்த கியாழத்தோடு
திரட்டுவா யாவின்பால் படிதானாலு
சேரடா தாழியொன்றில் காப்புக் கட்டித்
திருத்தி யெண்ணெய் படிநாலு விட்டுச் செய்யே. 1337

செய்யடா விநாயகனைப் பூசை செய்து
திறமாக மேல்மருந்து செப்பக் கேளு
செய்யடா நெல்லிமுள்ளி மதுரமேலம்
சிறந்த சிறுநாகப்பூ தேவதாரஞ்
செய்யடா மாஞ்சிட்டி மரமஞ்சள்
செண்பகப்பூம் புழுக்கைவேர் செவ்வள்ளிக் கொடியும்
செய்யடா நற்கெந்தஞ் செஞ்சந்தனம்
சித்திபெறுஞ் சகஸ்திரமாம் வேதைபோடே.. 1338

போடடா விலவங்கப் பட்டை பத்திரியும்
புகழ்பூலாக் கிழங்கு கோட்டம் கிராம்பு சாதிக்காய்
போடடா புகழ்வேகை மூன்று கழஞ்சி
புரளவே பிடித்தாட்டு யிள நீராலே
போடடா கலக்கி யெண்ணெய் கியாழத்தோடு
பொலிவான சாறு பாலுடன் தாழிக்குள்ளே
போடடா வடுப்பேற்றி தீயைமூட்டி
புரையற்று மூணு நாள் சிறுகொதியும் பூட்டு. 1339

பூட்டியபின் னாலாநாள் பதங்கடுக்கில் நீரும்
பொசியாமல் வற்றுபத மெழுகிலே தான்
நீட்டியே சட்டி முன்னங் குங்குமங் கத்தூரி
நிசபுழுகு சட்டமொடு கோரோசனையும் வகைக்கு
நேட்டியே வகையொன்று கழஞ்சி ரண்டு
நறுக்கியிட்டு வடித்திடுவாய் தயிலந் தன்னைப்
போட்டில்லை வண்டுகடி தானிய புடம் வைத்துப்
போக்குடனே நால்நாளைக் கொருக்கால் முழுகே. 1340

முழுகடா சீயக்கா யரைப்பு வெந்நீர்
முழுக்கன்று பால்தயிர் மோர் புளிக்கசப்பு மகற்று
முழுகடா முறையோடே மற்றாநாள் கூட்டு
மோகமில்லை குமரியென்னும் தயிலத்துக்கு
முழுகடா பித்த வெட்டை தலை கண்ணோவு
முரடான வுட்சூடு காந்தல் தீரும்
முழுகடா தேகமொரு காந்தி காணும்
மூக்கினீர் கிறுப்பு மலபந்தம் போமே. 1341

அரக்கெண்ணை

பத்தமுட னரக்கெண்ணை பித்த வெட்டை சுரங்கள்
பகையான சயித்திய நீர்மூன்று வகைப் பிணைப்பும்
கொத்துடனே போவதற்குக் கொம்பரக்கோர் படிதான்
கூறாகப் பொட்டணமாய் கட்டிப் பின்பு
சித்தமுடன் சலங்குறுணி தனில் தோளந்திரமாய்த்
தீமூட்டியெரித்து நாலொன்றாய் வாங்கி
வைத்தவுடன் குறுந்தொட்டி வமுக்கிறாவேர்
வகையொன்று பலமஞ்சு நொறுக்கிடாயே. 1342

நொறுக்கியே சலங்குறுணி தன்னிற்போட்டு
நேராக வேகவைத்து நாலொன்றாக்கி
முறுக்கியே யிவ்வகைகள் பிழிந்த கியாழங்கள்
மூட்டுவாய் தயிர் தண்ணீர்ப் படியிரண்டு
மறுக்கியே பசுவின் பால்படியும் நாலு
வாகான பழங்காடி படியிரண்டு
தறுக்கில்லா நல்லெண்ணை படியும் நாலு
தாழியொன்று காப்பிட்டு சாற்றக் கேளே. 1343

சாற்றக்கேள் விநாயகனைப் பூசை செய்து
சதாசிவனைத் தியானித்துக் கற்கந்தன்னை
சாற்றக்கே னமுக்குறா குறுந்தொட்டி வேரும்
சதகுப்பை பொன்மெழுகு தேவதாரம்
சாற்றக்கே ளிலாமிச்சம் புழுக்கைவேர்
நன்னாரி தக்கோலம் கோஷ்டமொடு முத்தக்காசே. 1344

முத்தக்கா சதிமதுரஞ் செவ்வள்ளிக் கொடியும்
முறையாக வகையொன்று கழஞ்சி நாலு
சுத்தெக்கக் கியாழம் வைத்து யிடித்த தூள் தன்னைச்
சுகமாகக் கியாழந் தயிர் தண்ணீரா லாட்டிக்
கொத்தக் கலக்கியே யொன்றாய்ச் சேர்த்துக்
கொடுந்தீயை மூட்டாமலொழுகு தீயெரித்து
வற்றக் காச்சாமலே மூன்று நாள் கழித்து
மற்றுநாலா நாளில் வடிக்கும் பதம்பாரே. 1345

பதம்பாரு மெழுகுபதம் கண்டு நீயும்
பருவத்தே புழுகு சட்டங் கோரோசினையும் போடு
விதம்பாரு வகையொன்று கழஞ்சி ரண்டு
மெலிசாய் பொடிச்சிட்டு வடிப்பாயப்பா
மிதம்பாரு குளிர்விட்டு வண்டு கட்டிவைத்து
மீறாமல் தானிய புடம்பத்து நாள் கழித்து
பதம்பாரு நாலு நாட்கொருக்கால் மூழ்க
வாகான சீயக்கா யரைப்பு வெந்நீரே. 1346

மந்தார காசத்தயிலம்

வெந்நீரும் விளாவாமல் முழுக்கன்று தயிர்பால்
வீறான புளிகசப்புப் புகையிலையு மாற்றுத்
தந்நீர்மை நோய்களெல்லாம் விட்டே யோடுஞ்
சாற்றினேன் மந்தார காசத்தின் தயிலம்
பன்னீர்போல் தெளிவதற்குக் கியாழந் தன்னைப்
பாடுகிறேன் புலத்தியனே பகரக்கேளு
நன்னாரி குறுந்தொட்டி பொன்னாங்காணி
நல்லவட்டத் துத்திவேர் சீந்தித் தண்டே. 1347

சீந்தியொடு முடக்கொத்தான் சீரார் செங்கழுநீர்
சிறந்தநலம் பனைக்கிழங்கு நீர்வள்ளிக் கிழங்கு
போந்த அல்லி தாமரைவேர் வெட்டியிலாமிச்சுப்
புகழாலம் விழுது மாதளம் பட்டையோடு
சாந்தமலை தாங்கி வேர் நீர்ப்பூலா வேருந்
தறித்திடுவாய் வகையொன்று பலந்தான் மூன்று
சேர்த்திடி சுக்லமயங்குறுணி தண்ணீர்
தீட்டுவாய் மிடாவி லிட்டுத் தீயை மூட்டே. 1348

தீமூட்டி யெட்டொன்றாய் குறுக்கி வாங்கி
சீலைவடி கொண்டு பின்பு செப்பக் கேளு
நேயமுடன் கடைமருந்து கற்கஞ் சேர்க்க
நிகழ்த்துகிறோ மேல மிலவுங்க மதி மதுரம்
மாயமுறுவாய் மரமஞ்சள் சகஸ்திரவேதி
வாய்விளங் கச்சோலம் கோஷ்டம் சிறுநாகம்
நாயமுள்ள சதகுப்பை வெந்தயஞ் சாதிக்காய்
நல்ல சிறுதேக் கரத்தை செவியங்கூட்டே. 1349

செவியமொடு செண்பகப் பூத் தேவதாரம்
திகைத்தது தான் வகைக்கொன்று கழஞ்சி மூன்று
குவியவே நெல்லிமுள்ளி கெந்தங் கஸ்தூரிமஞ்சள்
கூரிய புழுக்கைவேர் சாதிபத்திரியும்
செவியமுறுங் கோதும்பை கிராம்பு நாற்கழஞ்சி
செஞ்சந்தங் கொத்தமல்லி திப்பிலி சிற்றரத்தை

கவியவரு கடுரோகணி விளாவரிசி தானும்
கழஞ்சிரண்டு வகையொன்று காயவைத்து யிடியே. 1350

இடிபொடியைத் தாழை விழுதுச் சாற்றிலாட்டி
இயல்பாகச் சாறுபடி யொன்று விட்டு
வடிவான குமரியுட சாறு மரைப்பொடியும்
வளமான நல்லெண்ணை படிமூன்று கலந்து
முடிவான கியாழ முன்பு வைத்ததிலே சேர்த்து
முகுர்த்தத்தில் மஞ்சளில் காப்புக் கட்டி
படியாகக் கணேசனையும் பூசை செய்து
பரிவுடனே யடுப்பேற்றித் தீயை மூட்டே. 1351

மூட்டியே யெரித்திட்டு மூன்று நாட்கப்பால்
மெழுகு பதந் தன்னிலே வடிக்கும்போது
நீட்டியே புழுகுடனே பச்சைக் கற்பூர
நிறமாங் கோரோசனையும் வகைக்கு மிருகழஞ்சி
மாட்டியே பொடித்திட்டு வடித்திடுவாய் தயிலம்
வண்டுகட்டி தானிய புடம்வைத் தெடுத்துக் கொண்டு
மூட்டியே நாலுநாட் கொருமுழுக்கு முழுகு
முறையோடே சீயக்காயரைப்பு வெந்நீர் வாரே. 1352

வார்த்தெண்ணை முழுக்கன்று மோர் தயிர்பா
லிறைச்சி மருவுகலும்புளி கசப்பு புகையிலை மாற்று
வார்த்தெண்ணை முழுகிவேரில் போம் நோய் கேளு
மைந்தனே மந்தார காசமொடு யேங்கல்
வார்த்தெண்ணை முழுகையி லிரும லீளை
மகத்தான பக்க மந்தார காசம்
வார்த்தெண்ணை முழுகையிலே கபாலநீர்ப் பாய்ச்சல்
வாதமொடு பொருமல் குறுவேர்வை போமே. 1353

குறுவேர்வை நெஞ்சிருமல் நெஞ்செரிப்பு
கூறரிய வரோசி பித்தந் தலைநோய் கண்வலியுங்
கிறுகிறுப்பு முறிந்தொடுங்கி யிவைகளெல்லாம் தான்
கேளடா வுப்புடனே துவரை வழுதலங்காய்
மறுவில்லா முளைத்தண்டு நறுநெய் பாலாம்
மற்றொன்று மாகாது வாத ராட்சதனே. 1354

வாதராட்சதக் குளிகை

வாதராட்சதக் குளிகை தன்னைக் கேளு
வகையாக யுரைக்கிறேன் மருந்து நீகேள்

பேதமுற வளர்சூதம் பெரியலோகம்
பிலமுடைய காந்தமொடு செந்தூரங்கள்
நீதமுடன் வங்கையொன்று ஈலந்தானொன்று
நேர்வாள மனோசிலையும் ரசகெந்தியோடு
வேதமுறை நாவலிங்கம் வெண்காரந்தானும்
விராகனஞ்சு வகையாகச் சுத்திசெய்யே. 1355

சுத்திசெய்த மருந்துடனே செந்தூரங்கூட்டி
சுருதிபெற நொச்சியிலைச் சாற்றிலாட்டி
சுத்திபெறத் தூளாக்கி கெங்காசலத்தின்குப்பி
தோன்றவே சீலை மண்ணேழுத்திரஞ் செய்து
சுத்திபெற வேயடைச்சு மண்ணுஞ் செய்து
சூட்சமாயோட்டி லடுப்பொன்று போடு
சுத்தியாய் தாழியொன்றில் நாலுவிரல் மண்ணும்
சொரிந்து குப்பிவைத்த பின்பு மணல் கமுத்து மட்டே. 1356

கமுத்துமட்டு மணல் கொட்டி தீயைமூட்டி
கமல வன்னியொருசாமங் காடாக்கினியும் பின்பு
பழுத்த விழுபதி னொன்றி சாமமாட்டி
பார்ப்பளவில் செந்தூரமாகித் தப்பா
மழுத்தரித்தார் பதந்தொழுது வனுபானத்தில்
வியாதி கண்டுமருந்துகொடு வகையேதென்னில்
இழுத்துவிடுந் திரிகடுகு வலுத்த தூளி
லினித் தேனுடன் கலந்தூட்டு வாயே. 1357

ஊட்டுவாய் பணவிடை செந்தூரங் கூட்டி
யொருநாளைக் கிருபோதா யொடுங்கஊட்டு
மூட்டுவாய் சத்திகுன்ம முதலஷ்ட குன்மம்
முழுங்கு பதினெட்டுவகை குன்மம் போகும்
நாட்டுவாய் வாதவகை யெண்பத்தஞ்சு
நலங்கொடுக்கும் பல சூலை வாய்வுக்கெல்லாம்
நீட்டுவாய் சுரசன்னி தோஷத்திற்கு
நெஞ்சிறியி முருங்கைத்தோல் முலைப்பால் சேரே. 1358

சேரடா பூநாகம் வெள்ளுள்ளித் தயிலம்
சேரதிலே பணவிடைதான் செந்தூரத்தருந்தப்
பாரடா விழுந்தோடும் பலபல நோயகன்று
பாங்கான வனுபானம் பரிந்திட்டாக்கால்
வேரடா அற்றுவிடும் வியாதிக்கெல்லாம்
விரணமுதற் புண்பொடிகளிவைகள் தீரச்
சீரடா திரிகடுகுத்தூள் தேனிலூட்ட
சிலேற்பனந் தொண்ணூற்றாறும் சிரங்கும் போமே. 1359

வேறு

சிறங்கு சொறிவுவெடிப்புறங்கி தீராப் பறங்கி யெரிப்பறங்கி
தரங்கம் போன்ற வனல் சூலை சன்னிவாத மண்டைநோய்
அரங்கம் போன்ற பீனிசமு மானதொண்டைப் புத்தரையாப்பும்
பிறங்காயோனி லிங்கப்புத் தெல்லாப்புத்தும் போமிதற்கே. 1360

இதுக்கே குஷ்டம் பதினெட்டு மிரங்குங் களநோய் துடைவாழை
இது கண்பிளவை கிரந்தியுடனாறாப் பவுத்திரம் பலவாய்வு
முதுக்கண் செவிநோய் செவிப்புத்து மூலரோகம் விப்புருதி
கதுக்காய் குறைநோய் விஷகடியும் காணாதோடுங் கண்டறியே. 1361

அசுவாதி சூரணம்

அறிவாலறிவா யசுவாத சூரணந்தன் னையறையக் கேள்
பிறிவாய் வந்த பலரோகம் போகும்படிக்கு வமுக்கிறாவேர்
குறியாயிடித்து வடிகட்டி கூட்டு மருந்து திரிகடுகு
நெறியாஞ் சாதிக்காய் பத்திரி நீத மதுரங் கிராம்பாமே. 1362

ஆமே கடுகுரோகணி யஞ்சம பாகங் குரசானி
ஆமே வகைக்கு முக்கழஞ்சி யனலில் வெதுப்பி தூளாக்கி
ஆமே யிருபத்தைங் கழஞ்சு மதிக சீனியிவை யொக்க
ஆமே ரெட்டி யமுக்கிறாவேர்ப் பொடியுஞ் சூரணமாச்சே. 1363

வேறு

சூரண மாச்சதனில் வெறுகடிதான் நெய்யில்
துடர்ந்து யிருபோது மண்டலந்தானுண்ண
காரணமாய் வரண்டு வற்றியிருந்த தேகம்
கனத்த வுடல் பூரித்துப் பருக்குமப்பா
பூரணமாய் தூலித்துப் பூரித் தோர்க்கு
பூட்டடா தேனிலே மண்டலந்தான் வற்றும்
வாரணமாய் பித்தமொடு பாண்டு தீர
வாழ்மேதை புளியாத மோரிலூட்டே. 1364

ஊட்டடா யெலிகடிக்கும் பசுவு நீரி
லொடுங்காத சித்து விஷந் தேட்கு வேப்பெண்ணை
பூட்டடா விளக்கெண்ணை மேலும் பூசு
பொல்லாத யீளையொடு சோகை தீர
மூட்டடா வெள்ளாட்டு நீரிலேதான்
மிகுந்த பெரும்பாட்டுக்கு யெள்ளெண்ணை வெல்லம்
நீட்டடா விரியனுக்கு வெந்நீரிலூட்டி
நிகழவே பூசிவிட நின்றுபோமே. 1365

நின்றுபோம் தலையிளைத் திருந்தாலப்பா
நேராவின் பாலிலே யூட்டுவூட்டே
நின்றுபோம் ஷட்குன்மம் வாய்வு மரோசிக்கு
நீட்டடா கச்சல் பழச்சாற்றிலே தான்
நின்றுபோஞ் சூலைகளுக்கமுரியிலே யூட்டு
நில்லாத சோகை காமாலை போக
நின்றுபோம் நிம்பத்தின் சாற்றிலுண்ண
நிலைகெட்டுப் பிள்ளையிலா தவர்க்குக் கேளே. 1366

பிள்ளையில்லா தவர்க்குமப்பா பிரமியிலைச் சாற்றில்
பிசகாமல் நல்லெண்ணெய் பாகலிலைச் சாறும்
தள்ளாத மிளகுடனே கூட்டியுண்ண
சந்ததிதா னுண்டாகுந் தாட்சியில்லை
கள்ளமுள்ள கைமசக்குக் காய் வெண்ணை தன்னில்
கனகமெழு கோட்ருந்து கனிவுண்டாகும்
தெள்ளிய நற்காய மொடு திப்பிலிச் சாற்றிலருந்த
தெரிவையர்க்கு மாதவிடை சிறக்குந்தானே. 1367

குஷ்டத்திற்கு

தானென்ற குஷ்டமெல்லாந் தீருதற்கு
தனித்த வேப்பெண்ணை தனிற் சாரித்துண்ணு
தானென்ற செய்யான் தான் கடிவிஷங்கள் தீரச்
சலியாதே வெள்ளாட்டு நீரிலூட்டி
தானென்ற மேற்பூச்சு விப்பிருதி தீரச்
சாற்றினேன் வெள்ளுள்ளி வசம்பு வெந்நீரிலிருந்து
தானென்ற மேற்றடவி விரியன் கடிதீர
தனிப்பசுவின் பாலுண்டு மேலுந்தடவே. 1368

மேலேறு வாய்வுக்கு வயிற்று நோவுக்கு
வெற்றிலையிற் பொதித்துண்டு வெந்நீருங்கொள்ளு
கால்கை முகவெரிவுக்குஞ் சிரங்கும் போகக்
கறுத்தாட்டு நீரிலுண்டு துவாலை போடு
சாலவே வாதத்துக் கோதண்டத் தயிலமதனில்
காச்சியுண்டு மேச்சலிய வதைப்போடு
நீலனென்ன வரும் சன்னிதீர நல்லெண்ணெய்
நினைவுடனே காச்சியுண்டு மேலும் பூசே. 1369

பூசுவாய் மலங்கக்கு மிருமலுக்கும்
பூட்டடா கொண்டத்தி வருந்தி மேற்பூசு
பூசுவாய் குடைவு கெற்பறோக வாய்வு
மப்பனே யிஞ்சிச் சாறதனிற் கொள்ளு

நேசமுடன் மேகவெட்டை தாது நஷ்டம்
நின்றதுவுந் தீருதற் காவின் பாலிலருந்து
மாசற்றுக் கசப்புடனே புளிப்புமாற்று
மண்டலந்தா னுண்டவர்க்கு வினையும் போமே. 1370

போமப்பா வாறு திங்க ளுண்ட பேர்க்கு
பிலமெனு மாயு சுவிர்த்திக்கும் நாடுவேன் காண்
நாமப்பா சொல்லிவிட்டோம் காயசித்தியாகும்
நலம்பெறவே பன்னிரண்டு திங்களுண்ட பேர்க்கு
வேமப்பா தேகமது பொன்னிறம் போற் சிவந்து
வேற்றுருவாஞ் சுகத்தி ரசுதி பிலனுண்டாகும்
ஆமப்பா கண்டதெல்லாந் தின்னொணாது
ஆச்சரிய மிதின் பெருமையார் கண்டாரே. 1371

வேறு

கண்டங்காரி தூதுவாளை கடியவாடா தோடையிலை
கண்டவுலர்த்திப் பொடியாக்கி யுறுநாள் நன்றாய் வடிகட்டி
பண்டோர் செய்த முறைப்படியே பகரக்கேளு திரிகடுகு
விண்டார ரத்தைப் பொடியிவைகள் வகைக் காழாக்கு
விளம்பினனே. 1372

விளம்பக் கேளு கொம்புத்தேன் வெதுப்பிச்சட்டி காயவைத்து
குழம்பாய்க் காய்ச்சியதில் பொடிகள் குமுறத் தூவி கிண்டிடவே
தழம்பு சீனியாழாக்குத் தானுந் தூவிக் கிண்டியபின்
நழம்ப நறு நெய் யாழாக்கு நலமாய் விட்டுக் கிண்டிடுவே. 1373

கிண்டியெடுத்த லேகியத்தை
கிரிகையுடனே புதுக்காக
மண்டல மமைத்து மூன்று நாள்
வளமாய் தான்றிக் காயளவு
உண்டேயந்தி சந்தியோடு
ஒரு மண்டலத்திலொழிவது கேள்
கண்டாலோடும் மந்தார காசம்
சுவாச காசமெனும் நோவே. 1374

வேறு

நோவான மகாவாத சன்னிக் கோர் தயிலம்
நோக்கு முன்னே ஒழிந்துவிட செப்பக் கேளு
காவான முள்ளுவிலா முன்னை வேரும்
கழற்சி வேறான துத்திப் பட்டையோடு
பாவான சீந்திவே ரமுக்கிறாவேர்
பற்படகம் நிலவேம்பு யெட்டி வேரும்
கோவான வெட்டி யிலாமிச்சம் வேருங்
கொடிய சிறு குறிஞ்சிவேர் மலைதாங்கி வேரே. 1375

மலைதாங்கி தூதிவேர் நஞ்சுண்டான் பட்டை
வாகான முருக்குந்தாம் பட்டையோடு
உலையாத வாவரைவேர் கிளிமூக்கு கிழங்கு
உசிலம் பட்டையொடு கடம்பு நாவல்பட்டை
நிலையான சாரணைவேர் புளியம்பட்டை
செம்பிரண்டை மணிப்பிரண்டை கிழங்குகூட்டி
துலையான பசலைகிழங் கரசம்பட்டை
சுள்ளிவேர் முள்ளடியின் கிழங்கே. 1376

கிழங்குவகை யல்லாது சீந்தி வேரும்
கிலுகிலுப்பை வேரழிஞ்சில் பட்டைவேரு
முழங்கிய கொன்றைப் பட்டை ஆயில்பட்டை
மூதண்ட நரியனார் பொரியரிசி கூட்டி
களங்கமில்லா தெருக்கம் பாலத்தி பட்டை
கருவேலம் பட்டையொடு கருங்காலிபட்டை
விளங்கு பெருவகை பட்டை குமிழம் வேரும்
வில்வவேர் வெள்ளறுகு சிவனார் வேம்பே. 1377

வேம்பினிட பட்டை முக்குறண்டி நெல்லிப்பட்டை
வீறான தோடை வோபுனைமேற் கோவை
மாம்பட்டை புரசினிட பட்டை ரசங்குப்பு
யால்கிழங்கு வேங்கைபட்டை நொச்சி வேரும்
சோம்பில்லாச் சந்தமரம் பட்டையோடு
சுறுக்குடைய சத்திசாரணையின் வேரும்
வீம்புடைய எலுமிச்சு நாரத்தம்வேர்
மிளகு சாரணைவே ரமுக்கிறாவேரே. 1378

வேரான முருங்கைவேர் புன்முருங்கை வேரும்
வெள்ளிலவம் பட்டையொடு லவங்கப்பட்டை
சீரான சங்கம்வேர் சிலந்தியாங் கொடியும்
செண்பகந் தாழையொடு சிற்றாமணக்கம் வேர்
பேரான விளாவின்வேர் பெருகுருஞ்சி வேரும்
புங்கம் வேரதின் பட்டையுவாய் வேருங் கூட்டி
நேரான கொழுஞ்சிவேர் விஷ்ணுகரந்தி
நிலைத்த முத்தக்காசு கண்டங்காரி கூட்டே. 1379

கூட்டடா ஆடுதின்னா பாளை கஞ்சாங்கோரை
கூறரிய மாவாத மடக்கியிட வேரும்
கூட்டடா புலிதொடரி வேரெழி முள்வேருங்
கொடிய கார்த்திகைக் கிழங்கு வகைக்கிரண்டு பலந்தான்
கூட்டடா தறியிட்டு பிடித்த தூளுழக்கு
கொட்டடா நாற்குறுணிசலம் பாண்டத்தே. 1380

பாண்டத்தி லிட்டதையு மடுப்பேற்றி தீயை
பரிவாக யெறியிட் டெட்டொன்றாய் குறுக்கி
பாண்டத்திலிட்ட பின்பு சாறுவகை தன்னை
பகருகிறோங் கரிசாலை குப்பமேனி
பாண்டத்தி லிட்டதல்லால் கறுநொச்சி
பழுதில்லா வெள்ளை நொச்சி மாவிலிங்க விலையும்
பாண்டத்தி லிடுவதற்குப் பெருந்தும்பை கொத்தான்
பகர்வேலிப் பருத்தியிலைப் பொன்னாங்காணி. 1381

காணி பொன்னாவரை யிலையு மெருக்கிலை போற் பழுத்தல்
கடியவிதா யிலை வகைக்கு கால்படியுஞ் சாறு
ஆணியென்றும் வேப்பெண்ணை புன்னையெண்ணை
யழகான நல்லெண்ணை யிலுப்பை யெண்ணை
பேணி வரும் புங்கெண்ணை யிவைகளது சமனாய்
பேறுபட வகைக் குழக்குப் பசுவின் கோமியமப்பா
லூணிய வெள்ளாட்டுப் பால் கோமயமும் வகைக்கு
ஒருபடி தானிடு கற்க முறைக் கின்றேனே. 1382

உரைக்கிறேன் வெள்ளுள்ளி வசம்பு திப்பிலியு
மொப்பரிய காட்டுச் சீரகம தாகும்
விரைக்கிறேன் சன்னி நாயகமுங் கூட்டு
மீறாமல் வகையொன்று கழஞ்சிமூன்று
அரைக்கிறது சாறுகளால் கலக்கியிட்டு
அப்பனே தாழியொன்றில் காப்புகட்டி
நிறைக்கிறேன டுப்பேற்றி தீயை மூட்டி
நினைவாகப் பதத்திலே வடித்து வையே. 1383

வடித்து வைத்த தயிலத்தை வண்டுகட்டி
வளம்பெறவே நாள் சென்று யெடுத்து மைந்தா
குடிக்க வொரு கழஞ்சியிடு மூன்று தினமப்பா
கூறாக நசியமிடு கால்கை மேற்பூசி
நொடிக்கு முன்னே பதிமூன்று சன்னி போகும்
நூற்றிரட்டி யிருபதல்லால் வாதம் போகும்
முடிக்க முகவாத மொடு பட்ச வாத
முயலகனுங் குமரகண்ட னெல்லாம் போமே. 1384

போமப்பா வாதமென்ற தெல்லாம் போகும்
பொல்லாத சன்னியொடு தோஷம் போகும்
நாமப்பா வடக்கமெல்லாம் சொல்லிவிட்டோம்
நன்னூலாஞ் சூத்திரத்தை யடக்கியாடும்
வோமப்பா தொட்ட தெல்லா வியாதி காணில்
மெய்யுள்ளோர்க் குரைப்பதுவே விசேஷமாகு

மாமப்பா மற்றோரை யடுத்திடாதே
அறைகிறேன் நாவரட்சி விக்கல் இருமலுக்கே. 1385

விக்கலுக்கு

மயிலிறகு சுட்டகரி மதுரஞ்சீனி
வடிதேனில் திப்பிலியும் வகையைக் கூட்டி
ஒயிலாகக் கற்கண்டுஞ் செய்வீராகி
லோடிடுமே நாவரட்சி விக்கல் சத்தி
பயிலதாக முன்படல முள்ளோங் காராம்
பகராமற் பகர்ந்ததுவும் பஞ்சாங் கண்டாய்
அயிலாக வின்னமொன்று சொல்லக் கேளு
அப்பனே வதிதாகம் போகவதி நெல்லி. 1386

வேறு

நெல்லி நெற்பொறி சர்க்கரை திப்பிலி
கொல்லி மான் கொம்பு கூட்டி யுரைப்பது
வல்லி மாமுலைப்பாலி லுரைத்திடச்
சொல்லியோடும் விக்கலுஞ் சித்தியே. 1387

வில்வம் நெற்பொறி சர்க்கரை திப்பிலி
கொல்லி மாமலைத் தேனிற் குழைத்திட
வல்ல விக்கலுஞ் சத்தியு மாறிடுந்
தொல்லை யில்லைச் சுகநீடு காலமே. 1388

நீடு மாதளை நெற்பொரி சர்க்கரை
தேடு திப்பிலி தேனிற் குழைத்துண்ண
நாடு விக்க லிருமலும் சத்தியும்
பாடியோட்டும் பகரதி மதுரமே. 1389

வேறு

அதிமதுரஞ் சீரகம் வெங்காரம் கோஷ்ட
மழகான திப்பிலி வங்காளச் சீனி
இதுசமனா யெலுமிச்சம் பழச்சாற்றிலே தா
னியல்பாக வுய்த்திடவே விக்கல்போகு
மதிசார சண்டமாருத லேகியத்தை
மப்பனே மருந்திடு வரட்சி யிருமலுக்குப்
புதுசாக சண்டமாருத லேகியத்தை
புகலுகிறேன் புலத்தியனே கண்டங்காரி. 1390

மந்தார காசக் குழம்பு

கடந்தே யிருமல் மந்தார காச முதலாய்ப் போவதற்கு
வடர்ந்த குழம்பு வொன்றுதனை யறையக் கேளும் புலத்தியரே
துடர்ந்தே கனக மிளகொன்று துய்ய நறுநெய் தண்ணம்
படர்ந்தசீனி யிவைமூன்றும் வகைக்கோர் பலமாய்ப் பாவு செய்யே. 1396

செய்வாயிரண்டு சாமமரை தெளிய வாட்டிப் பிசின்போல
நம்பும் பருவம் புதுக்கரகத் திட்டு நாலாநாள் முதலாய்
வையம் புகழு மந்திசந்தி வாகாய்த் தான்றிக் காயளவு
உய்யும்படிக்கு அருந்தி வரிலொரு மண்டலத்தி லோடிடுமே. 1397

வேறு

ஓடிடும் வியாதி கேட்க வுருதிகேள் தேங்காய்ப் பாலில்
கூறிடும் சிறுபயற்றப் பறுப்பிடு கருத்த பாலால்
நாடிடு மொன்றாய்க் காச்சி நயம் பெற வுப்பும் போட்டு
தேடிடும் படிக்குக் கொள்ள தெளிந்து பஞ்சாகப் போமே. 1398

வேறு – பஞ்சதாரைக் குழம்பு

பஞ்சதாரை நாற்கழஞ்சு
பருத்த சுக்கு முக்கழஞ்சு
இஞ்சி திப்பிலி இருகழஞ்சு
யேலந்தானு மொரு கழஞ்சு
அஞ்சுங் கூட்டிப் பொடிசெய்து
ஆவின்பால் பாலில் கொள்வீராகில்
மிஞ்சு பித்தந் தலைநோவு
வெள்ளோக் காளமுள்ள தெல்லா
மஞ்சிப் பயந்து தானடுங்கி
யடவிக் கோடிப் போய்விடுமே. 1399

வேறு

மலைதாங்கி நன்னாரி முள்ளி வேறு
மகத்தான முள்ளிக்காய் தான்றிக்காயு
மிலையாடா தோடை கொடிதூவி யோடு
இசைந்த தொரு தூதி கண்டங்காரி கூட்டி
யலைவில்லா தொருநாழி நீரிலப்பா
அஷ்டபாகம் வகைக் காற்கழஞ்சு கூட்டி
நிலவரமாய்த் தேனுமொரு கழஞ்சு கூட்டி
நேயமுடன் திப்பிலியும் மேற்பொடியும் போடே... 1400

வேறு

போட்ட கியாழம் பொடிதேனும்
பொருந்த மூன்றும் தினங் கொள்ள
நாட்டமாகப் பின்னி நின்ற
நாடுசெம்பைப் படுங்கண்டாய்
மீட்டு மத்தோடே மிளகுஞ்
சுக்குங் கூட்டிய கியாழத்தில்
வாட்டமின்றிப் பொடிதேனும்
வருந்திக் குடிக்க வளமாமே. 1401

வளமாந் தாது தாக நிற்கு
மலமும் பந்த மயக்க மருஞ்
சளமாய்த் திரந்த தலைநோயும்
சளியென் றேரும் வாய்வுக்குத்
துளையாங் கால்கை மேல்வலியு
மோங்கா ரத்தோ டிருமல்
மறையோர் முனிவோர் நாடிவகை
பகர்ந்தார் வாந்தியிருமலுக்கே. 1402

வேறு – வாந்தி விக்கலுக்கு

வாந்தியு மிருமலு மருந்து வீருக்குஞ்
சேர்ந்திடு மிளகுடன் சுக்குந் திப்பிலி
கூர்ந்திடும் இவைவேர் கொத்தமல்லியும்
சாந்தமாயிவை யஞ்சும் சமன் கொடாக்குமே. 1403

ஆக்கிய மருந்தஞ் சளவுனாழிநீர்
வாக்குட னெட்டொன்றாய் வற்றக் காய்ச்சியபின்
போக்குடன் கொண்டவர் பொலிவும் வீறும்விட்
டேக்கியே பறந்திடு மியல்திரிபலையே. 1404

வேறு

திரிபலை யிருவேலி யிலாமிச்சம் வேர்
சிறந்ததோர் முண்டகத்தின் விளையமொடு
நெரியான வீழி மரப்பட்டையோடு
நிறையொன்றாய் வகைக்கு மிருகழஞ்சு கூட்டி
குறியாக விடித்ததுவு முக்கூறிட்டுக்
கொண்டிடவே யிருநாழி நீரிலிட்டுப்
பிரியாம லொரு கூறு அஷ்டபாகம்
போதிரண்டு கொண்டு வர பிணி நில்லாதே. 1405

நில்லாத விஷபாதச் சுரமும் மாந்தி
நெஞ்செரிப்புக் குளிர் தாகம் வேர்வை கோழை
அல்லாத மலசலங் களமுரியாலு
மப்பனே கண்மயக்கம் சதியோடுற
எல்லாம் விட்டோடு மாஞ்சோகை நீக்கு
மிதுக்குகைக் குற்றம்வரி லேறாதேபோம்
வல்லவர்கள் கண்டறிந்து கொடுக்கத் திரு
மாறலாய் துருசுமும் வாராதன்றே. 1406

வேறு – மாரல் சுரத்துக்கு

மாறல்சுரங்கள் மாற்றுதற்கு வகைகேள் சீந்தி பேய்புடலும்
கூறு முத்தக்காசு வேற்கொம்பு பற்படாக மிவையும்
தேற வகைக்கு வொரு கழஞ்சு சிதறவிடித்துக் கூறுசெய்து
பேறுபடவே யிருநாழி நீரிலொரு கூறதிற் போடே. 1407

போட்டே கியாழம் எட்டொன்றாய்க் குறுக்கிவாங்கிப் போதிரண்டு
நாட்டமுடனே தேன் கழஞ்சு நயமாய் மூன்று நாளருந்த
வாட்டமேது மில்லையந்த மாறல் நாலு மூன்றும் போம்
கூட்டமுடைய பல சுரங்கள் குளிருந்தாகம் வேர்வை போம். 1408

தாகம் வேர்வை மலப்பந்தஞ் சந்தித்திருந்த தொந்தமொடு
வேகம் சோகம் நீரேற்றம் விட்டேயோடும் பத்தியங்கள்
மோக மடக்கும் புளிகசப்பு மோரும் புகையுந் தள்ளிவிடு
மாகந் தெளியனன்னப் பாலப் பாலருந்த சுகமாமே. 1409

திப்பிலாதி சூரணம்

ஆமே யிருமல் சளத்துக்கு மடங்கத் திப்பிலாதியைக்கே
ளாமே சூரணஞ் செய்வதற்கு அப்பா திப்பிலி மூன்றுபல
மாமே ரெண்பல மாஞ் சிற்றரத்தை மிளகு வால்மிளகு
ஆமே யேல மிலவங்கப் பத்திரிப் பட்டை யதிமதுரம். 1410

மதுரந் திரிபலை சாதிக்காய் பத்திரி கிராம்பு வாய்விளங்கஞ்
சதிராம் கொத்தமல்லி குறாசாணி தாளிச பத்திரியும்
மெதிராஞ் செவியஞ் சிறுதேக்கு மிருசீரக முந்திப்பிலியு
நதிராங் கூகை நீருடனே நறுக்குமூலம் நாடிடுமே. 1411

மூல மமுக்கிறா வேரு மூன்று கழஞ்சு வகையொன்று
சீலமுடனே காயவைத்து துத்திரமா யிடித்து வடிகொண்டு
ஞாலம் புகழும் தூதி கண்டாங்காரி கரிசாலை யுமுலர்த்தி
யோல மெனவே யிடித்த பொடி வடிகால்படி யாயு ரைத்தோமே. 1412

உரைத்தோ மிந்தப் பொடிகளெல்லா மொன்றாய்க் கூட்டிய திற்பாதி
உரைத்தோஞ் சீனி கலந்திடவே யோகோ சூரணமான துக்கு
உரைத்தோம் வேனில் வெருகடியா யிருபோதுநா
ளுரைத்தோ மீளை யிருமல் சயமோடு மரோசி வாந்தியுமே. 1413

வேறு

வாந்தியுங் குடல் பிரட்டும் வாய்வும் வயிற்று நோவும்
தீர்ந்திடும் சிலேற்பனங்கள் தெளிவுறு மலசலங்கள்
ஆர்த்திடுங் கட்டுவிட்டு அதிசூடு மிகுந்த பித்தம்
பேர்ந்திடும் நறுநெய் தன்னிற் பேணிநீ கொள்ளுவாயே. 1414

கொள்ளு நல்லனு பானத்திற் கூறினேன் வகையாய்க் கேளு
தெள்ளு மாதுளங் கனியின் சாற்றில் நீ தின்னும்போது
ஒள்ளி தாஞ்சகல நோயும் ஓடிடு பித்தம் போகும்
தள்ளிடில் புளிப்பு கைப்பு மோர்புகை தானுந்தள்ளே. 1415

தள்ளிய கோழை வாந்தி சிலேற்பனந் தகர்ந்து போக
வள்ளலே கியாழமொன்று வகுக்கிறேன் வயணங் கேளு
கள்ளமில்லாத கொத்தமல்லி ஏலங் காணி
நள்ளிரு வேலி மூன்றும் வகையொன்று கழஞ்சு மூன்றே. 1416

கழஞ்சி மூன்றல்லா லின்னங் கூறக்கேள் மதுரஞ்சுக்கு
வழஞ்சிய நல்லகெந்த மிலவங்கப் பட்டை
நாலுமுளங்களி கூரண்டு கழஞ்சி யொக்கப் போடு
தழஞ்சியா யிடித்த தூளை தயவுடன் கூறு போடே. 1417

போடலு முக்கூறிட்டுப் பொலிவுடனோரு கூறுக்கு
நாடிரு நாழிநீரு நலம்பெற வெட்டொன்றாக்கி
தேடு நீயந்தி சந்தி தினமூன்று மருந்தினாக்கால்
பாடியே ஓடுமென்று பத்தியம் புளியுங் கைப்பே. 1418

கைப்பொடு புளிப்பு மாற்றிக் கியாழ நீரருந்திலப்பா
எய்பில்லை யிரும லீளை சிலேற்பன மென்ற வாந்தி
பற்பல வரோசி கூடப் பரந்திடும் பாரிலின்னஞ்
சொற்பமாய் திப்பிலாதி லேகியஞ் சூட்டுகிறேனே. 1419

திப்பிலாதி லேகியம்

சூட்டுலேகியந் தானப்பா தொந்திப்பு க்ஷயங்கள் தீர
நாட்டுப்பிலி கழஞ்சு நாற்பது பத்துஞ் சேரு
கூட்டு சிற்றரத்தை தானுங் கூறுமுப்பது கழஞ்
சீட்டு நற்கொத்தமல்லி பதின்கழஞ்சு மொன்றாய்ச் சேரே. 1420

சேரடா மிளகுசுக்கு செவியந் திப்பிலி யின்மூலம்
சேரடா மதுர நெல்லிச் சீரக மிரண்டோ டேலஞ்
சேரடா நறுக்கு மூலம் சிறுதேக்கு கூகை நீருஞ்
சேரடா வமுக்கிறாவேர் குறாசானி திருந்தக் கூட்டே. 1421

திருந்த வால்மிளகு தாளிச பத்திரி கடுக்காய் சேரு
பொருந்தவே வகைக்கு மஞ்சு கழஞ்செனப் பூட்டு மன்பு
மருந்தின்னம் வகைக்கு மூன்று கழஞ்சது வகையாய்க் கேளு
விருந்தி லவங்கப்பட்டை பத்திரி விளம்பி னோமே. 1422

விளம்பினோம் கிராம்பு சாதிக்காய் பத்திரி இவை தானஞ்சு
வளம்பெறக் காயவைத்து யிடித்த தூள் வடியுட்கட்டி
பளம்பெறக் கண்டங்காரி தூதியுங் கரிசாலைப்பா
குளம்பெற வகைக்குழக்குப் பொடி வடிகொண்டு சேரே. 1423

சேரொரு படிநீருந் தேன் காச்சியே தெளிவு தன்னில்
வார் பலமருந்துத் தூளை வாகுடன் தூவிக்கிண்டி
சீர்கண்டு நறுநெய்யுங் கால்படி விட்டு கிளரும்போது
பார்த்த திப்பிலாதி லேகியம் பாக்குப் பிரமாணஞ் செய்யே. 1424

பிரமாண முண்டை செய்துபின் பொரு போதருந்தப்
பிரமாண மண்டலந்தான் பிசகிலா துண்டாயாகில்
பிரமாணம் வியாதிவாத சிலேற்பனம் பித்தத்தோடு
பிரமாணம் பணைப்புத் தொந்தி பித்த வரட்சி போமே. 1425

போ மலசல பந்தங்கள் பொருமல் நெஞ்செரிப்புத் தாகம்
போ மீளை யிருமல் வாய்வு திரட்சியும் அரோசி போகும்
போம் வலிகுன்மம் வாய்வு வாயூறல் புளித்த வேப்பம்
போமதி சார மக்கினி மாந்தமும் போகுந்தானே. 1426

தானென்ற பத்தியங்கள் தன்னைக் கேள் புளிகசப்பு
தானென்று தயிர்மோரோடு புகையிலை வரம்பாய் தள்ளு
தானென்ற நறுநெய் பாலுந் துவரையு மவரைப் பிஞ்சுந்
தானென்ற முருங்கைச் சாறு வழுதலை முளைத் தண்டாமே. 1427

ஆமிளகுப்பு மஞ்ச ளறைக் கீரைத் தளவு தள்ளி
பாங்கரு வேம்பு வுள்ளி சீரகந்தூதி வற்றல்
ஆஞ்சிறு கீரை பொன்னாங்காணியு மழகாய் கூட்டி
ஆமற்ற தொன்றாகாது அறைகிறே னறைகிறேனே. 1428

வேறு – பீனிசத்திற்கு நசியம்

அரைகிறேன் பீனிசத்து நசியந் தன்னை
யப்பனே யாவெண்ணெயுழக் கழக்கு

அரைகிறேன் குங்குமப்பூ பச்சை கற்பூர மொடு
அபின் மருந்துங் கஸ்தூரி வகைக்கு கால் கழஞ்சி
அறைகிறேன் பொடிச்சிட்டு வேகவைத்துப் பதத்தி
லதை வடித்து ஆறவைத்து மப்பால் கேளு
அறைகிறே னவ்வல் குறுணை வாயிலிட்டு
அதின் பின்பு நாசியிலே நசியஞ் செய்யே. 1429

நசியஞ்செய் யிப்படியே யந்திசந்தி
நாள்மூன்றில் குணங்கண்டால் பின்னுமப்பா
நசியஞ்செய் நாலு நாளாறு நாள்தான்
நாசிநீர் பாச்சலொடு புண்ணுமாரும்
நசியஞ்செய் சூல பீனிசமும் போகும்
நாகரிகமாகு மின்னம் நசியங்கேளு
நசியமொன்று தேங்காய் நெய்யுழக்கு வாங்கி
நலமான குங்குமங் கஸ்தூரி சேரே. 1430

சேரப்பா வெந்து கொண்டு நசியஞ் செய்ய
தீராத பீனிச நீரெல்லாந் தீரும்
ஆரப்பா வரிந்த மட்டும் சொல்லி விட்டோ
மாருக்குஞ் சொல்லாதே யடங்கி யாடு
பாரப்பா விந்த நூல் பார்க்கப் பார்க்கப்
பண்டிதத்தின் திறமெல்லாம் பரிவாய்த் தோணும்
நேரப்பா யுள்ளவர்க்குச் சொல்லு சொல்லு
நெறிகுறிக ளில்லார்க்கு நீ பூட்டாதே. 1431

பூட்டாதே யதைமாறி மருந்திடாதே
பொற்பூவும் வாசனையாய்ப் பூட்டு பூட்டு
மூட்டாதே முறையோடே யேதுஞ் செய்ய
மோட்சத்தி வந்தடையு மோசமில்லை
கூட்டாதே யினமறிந்து கூட்டு கூட்டு
கோடான கோடி பிணி சூலையும் போம்
காட்டாதே எந்த நாளும் பல நோயெல்லாங்
கடைபட்டு வோடிடுமே கன்னரோகம். 1432

வேறு

கன்னரோகங் காதெழுச்சி காணுங் குறியை கருதக் கேள்
முன்னஞ்சூடு கொண்டதின் மேல் மூலங்கடுத்து மேலேறி
அன்ன மொருத்துப் பசி யின்றி யதி நித்திரை சோம்பலுங் கொடிதாய்ப்
பின்னுங்கப் பலவா ய்வாகிப் பீனிசம் கூடப் பிறந்திடுமே. 1433

கூடப்பிறந்த் செவிக்கிரைச்சல் குடையும் குத்துச் சலமோடு
வாடா நீராம் நாசிதனில் வறட்சி யிருமலுண்டாகும்

தேடா தன்னம் விஷம் போலே தியக்க மயக்க முண்டாகும்
நாடா சீதளங் கனத்துடலம் நய்யு மலநீர்க் கட்டிடுமே. 1434

கட்டு கண்ணி லொளி மயங்கும்
கால்கையசைந்து வுளைவுண்டா
முட்டிச் சளி றென்றெனக் குற்று
மூச்சுச் சுவாச மதிகரிக்கும்
வெட்டுப்பட்ட புண்போலே
மேனியெங்கும் விதன முண்டாம்
மட்டுப்படாத செவிரோக
மருந்து வெண்ணை வைப்பீரே. 1435

மருந்து வெண்ணெய

வைப்பீ றுண்ண னெய் தனக்கு
வகை கேள் நறுநெய் மருந்தரத்தை
வெப்பா லரிசி சீரகமும்
விளங்காய் சாதிக்காய் பத்திரி
லுப்பாங் கிராம்பு மதிமதுர
மோம மிரண்டு தாளிசப் பத்திரி
அப்பால் திரிபால் திரிகடுகு
மிளகு கொத்தமல்லி வகை. 1436

வகையோ ரிடையா யதினிடை
நற்சீனி கூட்டி மருந்து தனைத்
திகைய வெதுப்பிப் பொடியாக்கிச்
சீனி கலந்து நெய் நாழி
பகையில் லாதே வெந்திறக்கித்
தேனு மளாவிப் பத்துடனே
நகையா திறக்கி யுண்டு வர
நசியம் செய்யவு நலமே. 1437

ஆமே செவிக்குள் வருரோக
மடங்கா நறுநெய் வேப்பெண்ணெய்
மாமால் துயின்ற கடல் நுரையும்
வசம்பு வெள்ளுள்ளி வால் மிளகு
தாமாதுடல் போல் நாற்சோதி
நற்சீரகம் பூசிக் கூடும்
போமே வெந்து விட்டடைக்கும்
புனித மாகும் காதெழுச்சி. 1438

சகலரோ கந்தனக்கு மெண்ணெய்
தானே லாதி தயிலத்தைப்

பறந்த வியாதி யேனென்றால்
பழைய சுரமும் வகை தோஷம்
நிறைந்த சன்னி பதின்மூன்றும்
நெடுமூச் சோடு நெஞ்செரிப்பும்
பிறந்த விக்கல் பித்த சிலேற்பன
தோஷ சுரமும் பிரிந்தோடும்
சிறந்த மல மூத்திர நிகழுந்
தெளிந்தே விழியுஞ் சிறந்திடுமே. 1444

இடும்பை செய்வா றேதென்னி
லீரேழு நாள் வீறொடுகும்
படுபா டனேகம் கைகடந்த
பருவமெனவே மலைவுண்டாம்
நெடுநாள் மலமுங் கட்டி விடும்
நிகழ்கடு குரோக ணிகடுக்காய்
திடமா யிந்துப் புடனே பேய்ப்
புடலுங் கியாழத் துடனே கூட்டே. 1445

கூட்டிய கியாழ முலைப் பாலுங்
குறுகி யிஞ்சிச் சாறுடனே
ஆட்டிக் கொடுக்க மேற்பொடி
திப்பிலியுங் கோடா சூடியிட்டு
மூட்ட மல பந்தமுங் கழியும்
மூர்ச்சை தெளியுஞ் சன்னியும் போம்
தாட்டாமரைக் கட் புலத்தியனே
சகல தோஷந் தணிந்திடுமே. 1446

வேறு - கற்பமுறை

தணியப்பா வுலைமுகத்தில் துருத்தி கொண்டு
தரமாக வூதிவிடு அழுகு மட்டும்
பணியப்பா வெடுத்ததனை யாற வைத்துப்
பாங்காகப் பின் பொருக்கா லழுகவூது
துணியப்பா யின்பமது குகையில் வைத்து
துலங்கவே பின் பெருக்கால் நன்றாயூது
அணியப் பாகந்தமது தாரப் போல் நிற்கு
மகாகாந்த சத்தருமை தானே. 1447

அருமை யென்ற காந்தத்தையுருகு கையில் வைத்து
அப்பனே மூன்று தரம முகவூது
பெருமை யென்ற காந்தமது ரத்தாய்ப் போனால்
பேச்சேதி சூதமொரு பலத்தைத் தூக்கிக்

கருமை யென்ற காந்தமது சோதித் தேறக்
கருவளையல் வீரொடு காரங் கூட்டி
யுரிமை யென்ற சாரமுடன் பழச் சாற்றாலாட்டி
யுலர்த்துவாய பணம் போலே வில்லை செய்யே. 1448

வில்லை செய்த மருந்தெல்லாஞ் சமனாய்ச் செய்து
மீறியதோர் காந்த சத்து ருக்கும் போது
சொல்லுவேன் சத்துக்குச் சமனாய்த் தாக்கு
துடியாக வொவ்வொன்றிற் கொடுக்க வாங்கும்
அல்லாது சமனாகத் தாக்கிப் பின்பு
அப்பனே யோடு கொண்டு மூடிக்கொண்டு
வல்ல தொரு குகையை மிக நன்றாயூது
மகத்தான காந்தமது வங்கத் தானே. 1449

தானென்ற காந்தமது வீயமாக
சாத்திர மெல்லாம் படித்தே னருமை யென்றே
நானென்ற வாணவத்தால் வெளியிற் போட்டேன்
நாட்டதே கள்ளரென்ற பிள்ளைக் கெல்லாம்
வானென்ற வீயமதைப் பதனம் பண்ணு
வண்மையா யதினுடைய நாகங்கேளு
வேனென்ற வயப்பொடி தான் பலந்தா னஞ்சு
வெள்ளையுடன் தாளகமுஞ் சூதங் கூட்டே. 1250

கூட்டுவாய் கற்கமொடு சாரந்தன்னைக்
குறிப்பாக வகைக்கோர் பலம் வீதங் கூட்டு
மூட்டுவாய் பூரித்து கழஞ்சு ஒன்று
முற்றிய தோர் வெண்கருவி நீராலாட்டு
ஆட்டுவா யிருசாம மரைத்துப் பின்பு
வளமாக வில்லை செய்து ரவியிற் போடு
நாட்டு வாயுலர்ந்த பின்பு குகைக்குள்ளாக
நலமாக வைத்த தனைக் குகைவாய் மூடே. 1451

மூடப்பா வோடு கொண்டு சீலை செய்து
முன்போலே யுருக்கி யெடு வெண்கலமாய் நிற்கும்
தேடப்பா முன்போலே சோதித்தேறு
செகமெல்லாம் இரும்பினிட வீரம் காணார்
ஆடப்பா விதினாட்டுச் சித்தராட்டும்
அரகரா காந்தமது கூடிற்றானால்
வீடப்பா பெலத்து தடா மறலியேது
மிதமிஞ்சு மென்று சொல்லி மறைத்திட்டாரே. 1452

மறைத்திட்டா ரயத்தினொடு காந்தந் தன்னை
மக்களே யவமிருத்துக் கட்டுமென்றி

குறைத்திட்டா ரறுசுவையும் சுழற்று முன்போல்
கொள்வதற்கு மேல் கற்பமென்று கூறி
நிறைத்திட்டே னுலகமெல்லாஞ் சித்தாய்ப் போக
நிலையான தாறுவகை யுறுதி சொன்னேன்
முறைத்திட்டந் தப்பாமல் கற்பமுண்ண
முத்தவே அயமதுவு மொழிந்திட்டேனே. 1453

மொழிந்த தொரு அயக்காந்தம் பலந்தான் ரண்டு
முத்தமிழ் சேர் புலத்தியனே வகையொன்றுக்கு
தெளிந்த தொரு தங்கமது பலந்தான் ரண்டு
சேரவே மூன்று மொன்றா யுருக்கி யாட்டு
குளிர்ந்ததொரு கல்வத்திற் பொடியாய்ச் செய்து
கூறப்பா கண்டிடைக்குச் சவ்வீரத்தை
வழிந்தோடு மச்சதிலே பனியிற் போடு
மாட்டடா தங்கவிடை சூதந்தானே. 1454

சூதமுற வாலையதாய் நாள் மூன்றில் தான்
சுருக்காக நித்திய மொரு சாமமாட்டி
நாதமுற முலைப்பாலிலாட்டு வாட்டு
இராப்பனியிற் போட்டு விடு மூன்று நாள் தான்
வாதமுற வேதையிடும் வாதிக்கல்லோ
வயித்தித்தில் வாலை ரசமாகச் சொன்னேன்
வேதையிதி லொட்டாது ஆசியாதே
வேதைக்குக் குறுவேரை விளம்பக் கேளே. 1455

விளம்புவேன் மாலைரசங் கண்டிடைக் கிரட்டி
மீறியதோர் கெந்தியிடு சிலைபத்தொன்று
வளம்பெறவே பொற்றலையின் சாற்றாலாட்டு
மாவாட்டி ரண்டுநா ளரைத்த பின்பு
உளம்பெலக் கக்குப்பியிலே யுலர் சாத்திவிடு
உத்தமனே வாலுகையிற் றீயைமூட்டு
தளம் பெறவே மூன்று நாள் முத்தீயிட்டுத்
தப்பாது தளமுறச் செந்தூரந் தானே. 1456

செந்தூரம் சிவப்பென்றால் முருக்கம்பூ வொவ்வா
தேகமதுக் கழிவேது வயிரவனைப் பூசி
செந்தூர மெடுத்தடக்கிச் சிவனைப் பூசி
தேவியொடு கணபதிக்குப் பூசை பண்ணு
செந்தூரந் தின்பதிற்குத் தீட்சை முன்னே
செயமாகக் காரியமோ டிலக்கணமுஞ் சொன்னேன்
செந்தூரங் குன்றி யிடை மூதண்டத்தின்
திறமான லேகியத்தில் பொதித்து தின்னே. 1457

திண்ணவே லேகியந்தான் முன்பே செய்வாய்
தீட்சையிரு நீற்றுள்ளே திடமாய்ச் சொன்னேன்
அண்ணலே லேகியத்தை யாருஞ்சொல்லா
ரழகாகக் காசிடை லேகியத்திற் கொள்ளு
உண்ணவே மண்டலங்கொள் வயசு கண்டு
உத்தமனே நோயென்ற தெல்லாம் போகும்
அன்னமொடு பால் சீனி பத்தியந்தா
னப்பனே மற்றொன்று மாகாதென்னே. 1458

ஆகாது என்று சொன்ன தேதென்றாக்கா
லவமிருத்து தட்டுதற்குப் பத்தியம் வேணும்
வாகாகச் செந்தூரம் நோய் கொண்டோர்க்கு
வளமான வனுபான மறிந்து கூட்டி
தாகான மண்டலமே குன்றிவீதம்
சாற்றினோம் நோயெல்லாந் தவறுண்டே போம்
வாகான பத்தியங்கள் காக்க வேண்டா
மத்தியமாம் புகையிலையும் புளியுந்தானே. 1459

தானென்ற ரெண்டும் விட்டுக் கொண்டாற் கேளு
தவறாது சகல வியாதிகளுந் தீரும்
ஊனென்ற வுடம்பெடுத்தாற் சாகாக் கல்வி
யுற்றவனே யிதுக்கல்லோ தளஞ் செந்தூரம்
மானென்ற பெண்கள் வலைக்குள்ளே சிக்கி
மாள்வதற்கோ செந்தூர வைப்பைச் சொன்னேன்
தானென்ற பொய்விட்டு தன்னைக் காணுஞ்
சாதகமாய் லட்சியத்திற் குறியைப் பாரே. 1460

பாரப்பா வாசியினால் யோகமாகும்
பரிவான தீட்சையினாற் சித்தியாகும்
காரப்பா சாபமெல்லாம் நிவர்த்தி செய்து
கற்பத்தில் முதல் கற்பங் காந்தங் கொள்ளு
சேரப்பா சித்தி பெற்ற கெதியினாலே
செந்தூர மெடுத்தாலே தெளிந்து காணும்
பேரப்பா கேட்டுடனே எமதூதர்கள்
பேசாதே யோடுவர் காண் பின்பாராதே. 1461

பாராதே சித்தாந்த மொன்றுமில்லை
பஞ்சகர்த்தாள் சடல வேகும் மட்டுஞ்
சேராதே யென்று சொல்லும் வேதாந்தத்தை
தெரிந்தறிய மாட்டார்கள் சைவ மாடு
கூறாத பூரணமே தெய்வமன்றிக்
கோவிலுக்கு சுவம்பு வந்து பரதாரத்தைச்

சேராதே யிருப்பதென்ன வென்று சொல்லி
செப்பேடா சித்தாந்தத் தெளிவா மாடே. 1462

தெளிவான மனத்தோர்க்கு வாதஞ் சொன்னேன்
திடமற்ற மூடருக்குத் திடமுஞ் சொன்னேன்
தெளிவான மனத்தோர்க்கு வயித்தியஞ் சொன்னேன்
செய்முறைக்குக் கற்பத்தி னெறியுஞ் சொன்னேன்
தெளிவான மனத்தோர்க்கு நூலுஞ் சொன்னேன்
சித்தியுடன் முத்தி பெற யோகஞ் சொன்னேன்
தெளிவான மனத்தோர்க்கு மவுனஞ் சொன்னேன்
தீட்சையொடு பூசை விதி செப்பினேனே. 1463

செப்பினேன் வாதத்தி லட்சங்காப்பு
திறமான வயித்தியத்தில் இரண்டு லட்சம்
செப்பினேன் வாத நூலாயிரந்தான்
தெளிவான ரெண்டு காண்டந் திரதத்தைத் தேர்ந்து
செப்பினேன் சூதந்தா னிரு நூறப்பா
தீட்சை விதியிரு நூறுந் தெளிவாய்ச் சொன்னேன்
செப்பினேன் ஞான மாயிரந்தான் தேர்ந்து
தெளிவான விருநூறுந் திறந்திட்டேனே. 1464

திறந்திட்டேன் வயித்தியத்திற் குறுக்கி லட்சஞ்
செப்பினே னதிற் பாதியதனைத் தேர்ந்து
திறந்திட்டேன் வாதத்தின் சூத்திரம் போற்
றெளிவாக வயித்தியத்திற் சூத்திரஞ் சொன்னேன்
சிறந்திட்டே னிவ் வண்ணமாக மூன்றுஞ்
சிறுபிள்ளைக் கானாலும் வயித்தியந்தான்
திறந்திட்டேன் பூரண சூத்திரந் தானப்பா
செயலிருபத் தோராயிரத் தாறு நூறே. 1465

நூறான விருபத்து வொன்றுங் காட்டி
நுவலு மனுபவத்தினால் நாலு காண்டம்
வீறான திதைக் குறுக்கிச் சூத்திரம் போல்
வெட்டவெளி பூரண சூத்திரத்தைச் சொன்னேன்
கூறான திருநூற்றுப் பதினாறுக்குள்
கொட்டினேன் சரிகையுடன் கிரிகை சொன்னேன்
பேறான யோகமொடு சூரணத்தோடு
பிலத்த சுவாசந் தனிலே பேணிக்காணே. 1466

காணப்பா விட்ட குறை மார்க்கந் தோணும்
கைவிட்ட சூத்திரமாய் வெளியில் போட்டேன்
தோணப்பா கற்பத்தி நேர்மையாவுந்
துடியாக குறுக்கியதை நூறாய்ச் சொன்னேன்

பேணப்பா கற்பக நூலிருநூறுஞ் சொன்னேன்
பிலத்த மாந்திரிகை மைந்நூறுஞ் சொன்னேன்
நூணப்பா யிந்திரமு மயேந்திர ஜாலம்
பூட்டினே னாயிரந்தான் புகழ்ந்து பாரே. 1467

பாரப்பா வடிவெடுத்து கற்பங் கொண்டு
பரிவாக வுண்டு வருங்காலந் தன்னில்
தாரப்பா வாதமொடு பித்தத்தாலே
சனித்த சிலேற்பனத்தாலே தாறுமாறுந்
தூரப்பா பாரமாகக் கற்பங்கொண்டு
சுழற்று நீ யலையாதே நோய்கள் போக
காரப்பா செந்தூர மினங்கள் தோறுங்
கட்டாய் செந்தூரித்து கடக்க வையே. 1468

வையப்பா கற்பங்கள் கொள்ள முன்னே
வகையான லேகியங்கள் சூரணங்கள்
செய்யப்பா கிருங்கள் தயிலமொடு
கெட்டியாய் செய்து கொண்டு கிரமத்தோடே
பொய்யாக வுரைப்பதென்ன புத்தி சொன்னேன்
புலத்தியனே வதுக்குரைத்த பத்தியமப்பா
மெய்யாகு மென்றோர்க்கு பொய்யாய் நிற்கு
விளம்பவென்றால் பொய்யாகும் விளம்பக் கேளே. 1469

கேளப்பா கற்பூர சலாசத்துத் தான்
கெடியாக பலமொன்று பொரிகாரந்தான்
நாளப்பா பலமொன்று ரெண்டுங் கூட்டி
நலமாக பருத்திவேர் அகத்திவேர்த் தோல்
நீளப்பா பாங்காகக் கியாழஞ் செய்து
நிசமாக விட்டுவாட்டு வொருநாள் மட்டு
மாளப்பா வஞ்செருவிற் புடத்தைப் போட்டு
ஆறியெடு கல்வத்தி லாட்டத்தானே. 1470

ஆட்டத்தூ ளாகுமடா வெண்கருவை விட்டு
யரைத்து வில்லை செய்து ரவியுலர்த்திக் கொண்டு
மாட்டவே யஞ்செருவிற் புடத்தை போட்டு
வாகாக வரைத்தரைத்து வஞ்சு தரமானால்
நாட்டவே வெண்பொடியா மதனை யுண்ண
நலமான பெருவயறும் கோரங் குஷ்டம்
ஓட்டப்பா நீர்ச்சிறுப்பு கல்லடைப்பு
மோடுமப்பா வெடியுப்புச் சுண்ண நீரே. 1471

வெடியுப்புப் பலம்பத்து நீறுபத்து
வேகமடா பழச்சாறு சாமமிட்டு

அடியுப்புக் கரண்டியிலே வார்த்து வைத்து
அப்பனே கொதிக்க வைக்க சுண்ணமாகும்
கொடிதப்பா பீங்கானில் நீறதாகுங்
கூறினேன் வயித்தியனு டவுப்பு நீறே
துடியப்பா சலாசத்துத் தனக்கு முன்னே
தோயப்பா தலைநோயுந் தணியுமன்றே. 1472

வேறு – காமரசம்

தணிந்த காமரசந் தன்னைச் சாற்றக்கேளு பெரும்பாடும்
தணிந்தே போகு மெலும்புருக்கி தாது நட்டம் பிரமேகம்
தணிந்தே போகு முஷ்ணங்கள் கசல சுரங்கள் பண்புடனே
தணிந்தே போகும் நீரிழிவு மரோசி காந்தல் வாந்தியுமே. 1473

தூதுவளம்பூ முருக்கம்பூ சொல்லுவகைக்கு நன்னாரி
பாத நெரிஞ்சிலே நிலப்பனையும் வகைக்கோர் பலமாகும்
ஓதுமதுரம் நன்னாரி வொவ்வோ றிரண்டாஞ் சதா வேலிச்
சோதமூன்று பலமுலர்த்திப் பொடித்தூள் வடியுங் கண்டதுவே. 1474

கன்டபசுவின் பால்பதக்கு காச்சிப் பின்னைப் பொடித்தூவிக்
கிண்டித் திரண்டு வரும்போது கிளர் சர்க்கரை தேன் நெய் மூன்றும்
கொண்ட வகைக் கோர்படி விட்டுக் கூட்டித் தான்றிக் காயளவு
வண்டலுண்டு புளிகசப்பு மருந்தார் பெருமை வகை கேளீர். 1475

பெரும்பாடுடனே யெலும்புருக்கி பிறமேகங் களோடிப் போம்
தருக்காதுகளு மிகவுண்டாஞ் சாறுங் கரணமிவை யென்று
வரும் பார்வதிக்கு வெள்விடையோன் மகிழ்ந்தே யருளிச் செய்ததுதா
னீரும் பாருலகி லிதுபெரிதா வெந்த மருந்துஞ் சிறிதாமே. 1476

பாலாபட்ச சூரணம்

ஆமாம் பாலாபட்ச சூரணத்தை யறையக் கேளும் புலத்தியனே
ஆமா முந்திரிபேரீச்ச மக்கிறாகார மதிமதுரம்
ஆமாங் கோஷ்டங் கொத்தமல்லிய முக்கிறாவேர் சடாமாஞ்சி
ஆமா மேலமிலவங்கப் பத்திரிபட்டை யரத்தை யெட்டே. 1477

எட்டாஞ் சாதிக்காய் பத்திரி கிறாம்பு மிரு சீரகமொடு
எட்டாந் திரிபால் திரிகடுகு மினிய தாளிச பத்திரியும்
எட்டாஞ் சிறுநா கப்பூவு மிலாமிச்சம் வேர் வால் மிளகு
எட்டாஞ் செவியம் நன்னாரி கீழக்காய் நெல்லி நெற்பொரியே. 1478

பொறிசிற்ற ரத்தை நல்ல கெந்தம் புகழ்சேர் வெட்டிவேர் தகர
மரிதாரந் திப்பிலி மூலமொடு சமமாக குறாசானி
விரிவா மளிளப் பழத்தோடு மேன்மை பெருதக்கோ லமல்லால்
தெளிதற்கூகை நீறு முத்தக் காசுஞ்சமனாய் சேர் கழஞ்சே. 1479

சேரக் கழஞ்சாய் காயவைத்து யிடித்த தூளை வடிசெய்து
காரமுடைய வங்காளச் சீனிசமனாய்க் கலந்த பின்பு
சாரமுடனே புதுக்கரகந் தன்னி லடக்கி யனுபானம்
நேரமறிந்து தேனிஞ்சிச் சாறும் நறுநெய் கூட்டிடுமே. 1480

இடுமே அந்திசந்தி லொரு கடியா யொருமண் டலமிணங்கக்
கொடுமே யதனாற் குணங்கேளு மருட்டும் வாந்தி நெஞ்செரிப்பு
விடுமே யத்திசுரம் வெட்டைமேகந் தாது நட்டமுதல்
படுமே யிருமல்கணைச் சூடும்பனைப்பும் யாவும் பறந்திடுமே. 1481

வேறு

பறந்திடக் கனை மேலந்த சுரம் போகக் கியாழம் கேளு
திறந்திட்டேன் வற்பூலா வேர் வில்வவேர் சிற்றாமுட்டி
யமைந்திட்டேன் விஷ்ணுகரந்தி நன்னாரி யிவை யோடைந்தும்
குறைத்திடா தொவ்வொன்றுக்குப் பலஞ்சுக்கு மிளகு கூட்டே. 1482

கூட்டடா யிரண்டு மொன்றுக் கரைப் பலந்தானுமாக
நாட்டடா கட்டியஞ்சு கூறிட்டு வொரு கூறுக்கு
மூட்டடா சலமிரண்டு படிவிட்டு யெட்டொன்றாக்கி
ஆட்டடா வந்திசந்தி யரசூடு களையுமாறும். 1483

மாறுமே கலைசுரங்கள் வந்துள்ள பல நோயுந்தான்
வீறுமே யடங்கிப் போகும் வேறொரு குணமுமில்லை
தேறுமே வியாதியெல்லாந் தெளியுமே சிந்தையில்லை
ஆறுமே மருந்தில் நோய்கள ண்டாது வருளுமே. 1484

வேறு – சொர்ணாகருஷ்ணவயிரம்

ஆமப்பா புலத்தியனே சொர்னாகருஷ்ண
வயிரவத்தை யறைகிறே னன்பாய்க் கேளு
ஆமப்பா தங்கம் ரெண்டு காசு தன்னை
யச்சமாய் லேசாகத் தகடு தட்டி
ஆமப்பா சாதிலிங்கம் கழஞ்ச நாலு
மதுவுடனே சவ்வீரம் வெண்கார மணியும்
ஆமப்பா சுத்தி செய்து தகட்டில் வைத்து
அடைவாகப் பொதிந்த பின்பு மறைகிறேனே. 1485

அறைகிறே னொருசட்டிக்குள் க்றசுண்ண
மளந்தொரு படி போட்டதிலே தானும்
குறையாம லொருபடி சாராயம் விட்டு
கூறாம நீற்றியதைக் குகையுஞ்செய்து
நிறையாக சட்டிக்குள்குகை நடுக வைப்பாய்
நீதியாய் தங்கத்தின் தகட்டு பொட்டணத்தை
மறையாமல் பதியவைத்து மேலுஞ் சாராயம்
வழுவாம லரைப்படியும் விட்டிடாயே. 1486

விட்டபின்பு கற்சுண்ண நீறால் மூடி
மேற்சட்டி கவித்து மேசிலை மண் செய்து
சட்டமாய் விநாயகனைப் பூசை செய்து
தாயாரை யர்ச்சித்து அடுப்பிலேற்றி
இட்டமாய் தியானித்து கமலவன்னி
யெரியிடுவா யிருசாமம் செந்தூரமாகு
மஷ்டதிக்கும் வெல்லுமடா சகல நோய்க்கு
மாணியடா யனுபானத் தாட்டு ஆட்டே. 1487

ஆட்டடா கோழிமுட்டைத் தயிலம் வாங்கி
யதிலே தானிரு கழஞ்சு தயிலந்தன்னில்
பூட்டடா செந்தூரம் பணவிடை தானொன்று
போதிரண்டு மண்டலந்தான் பூட்டு பூட்டு
மூட்டடா மவுனமற்ற பிசாசு பேய்கள்
முரணான க்ஷயகாசம் குன்ம நஷ்டம்
நீட்டடா மேகவகை நீரிழிவு சோகை
நில்லாத கிராணியொடு பவுத்திரங்கள் போமே. 1488

போமப்பா பவுத்திரங்கள் கரப்பனோடு கிரந்தி
புண்பொடிக ளரையாப்பு புட்டைத்த விரணம்
போமப்பா விஷபாகம் பாண்டு பெருவயிறு
பொல்லாத பித்த காமாலை யோடு சோகை
போமப்பா மூலமுளை பீனிசம் நீர்பாச்சல்
பொருமலொடு தக்கமல்லா லீளை யிருமலுந்தான்
போமப்பா பலரோகமெல்லாம் போகும்
பிணியறிந்து வனுபானம் பூட்டலாமே. 1489

ஆமப்பா வாகடத்திற் சூததிரத்தை யெல்லா
மறைந்திட்டே னணுவொன்று மடக்கமில்லை
வேமப்பா நொயெல்லாம் படுதிப் பற்றும்
வேறுள்ள நோய்களெல்லாம் விபரமில்லை
சோமப்பா விந்நூல் தொகையே தென்றால்
சொல்லுகிறே னாயிரத்தைந் நூறுஞ் சொல்லும்
நாமப்பா வுள்ளபடி சொல்லி வைத்தோ
நாதாக்கள் கடாட்சத்தால் சூத்திரந்தான் முற்றே. 1490

அகத்திய முனிவரருளிச் செய்த வமித்திய காவியம் - 1500
முற்றுப் பெற்றது.